உதயணன்

சமுத்ர கோஷம்

சமுத்ர கோஷம்

சரித்திர நாவல்

உதயணன்

வைதேகி பதிப்பகம்
பிளாட் H, லட்சுமணன் பிளாட்ஸ்
தில்லை கங்கா நகர், 22வது தெரு,
சென்னை - 600 061.
தொலைபேசி: 2231 1023

நூலின் வரலாறு

நூலின் பெயர்	:	சமுத்ர கோஷம்
நூலின் ஆசிரியர்	:	உதயணன்
நூலின் அடைவு	:	சரித்திர நாவல்
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் திங்கள் 2003
நூல் வெளியீடு	:	வைதேகி பதிப்பகம் பிளாட் H, லட்சுமணன் பிளாட்ஸ் தில்லை கங்கா நகர், 22 வது தெரு சென்னை - 600 061 Ph:22311023
நூல் உரிமை	:	ஆசிரியருக்கு
நூலின் அளவு	:	கிரவுன் 12.5 x 18 செ. மீ.
நூலின் பக்கங்கள்	:	448
எழுத்தின் அளவு	:	11 புள்ளிகள்
பயன்படுத்தப் பட்ட தாள்	:	கிரீம் 'O' 10.2
அட்டைப் பட வடிவமைப்பு	:	டீரிம் ஷாப், 137 ப.எண்.54 2வது மாடி, ஜானி ஜான் கான் ரோடு ராயப்பேட்டை, சென்னை-14. Ph: 28485182
அச்சும், அமைப்பும்	:	மல்டி சிஸ்டம் சர்வீஸ் 79/1, சடையப்பா லேன் சைதாப்பேட்டை, சென்னை - 15. தொலைபேசி: 23813367 /1376
நூல் கட்டுமானம்	:	திருவள்ளுவர் & கோ 32 A, ரெட்டிக்குப்பம் ரோடு மேற்கு மாம்பலம், சென்னை - 33. செல் : 32596338
விலை	:	ரூ. 110/-

அணிந்துரை

Dr. K.V. RAMAN
Head of the Department of History and Archeology (Retd)
Madras University

பல்லவர்களின் ஆட்சி காலம் கலைகளுக்கும் பக்தி இயக்கத்திற்கும் பொற்காலமாகும். காஞ்சி மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு தென்னகத்தையே அவர்கள் சில நூற்றாண்டு காலத்திற்கு ஆண்டார்கள். அவர்களில் மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன், ராஜசிம்மன், இரண்டாம் நந்திவர்மன் மற்றும் மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் பல்லவ ராஜாக்களில் மேன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் காலத்தில் பல்லவர் ஆட்சி பாரதமெல்லாம் பேசப்படும் அரசாட்சியாய் விளங்கியது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை சிறப்புற ஆண்டு, தமிழ் மன்னர்களைக் கூட தங்கள் சிற்றரசர்களாகவோ தங்களுக்கு அடங்கியவர்களாகவோ வைத்திருந்தார்கள் அவர்கள். ஆழ்வார்களும் நாயன்மார்களும் வைணவத்தையும் சைவத்தையும் தமிழகமெல்லாம் பரப்பி தமிழகத்தில் பக்தி அலை வீச அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் இப்பல்லவர்கள்.

இவர்கள் காலத்தில் கற்களும் பாறைகளும் சிலைகளாயின. காலத்தால் அழிக்க முடியாத வண்ண ஓவியங்கள் தோன்றின. நடனங்களும் நாடகங்களும் பொலிவு பெற்றன. கற்கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டன. இப்பல்லவர் ஆட்சி காலத்தில் தான் இப்படி மறக்க முடியாத சுவடுகளை உருவாக்கிய பல்லவர் ஆட்சியில் ராஜசிம்மனின் மகன் பரமேச்சுரவர்மன் வாரிசில்லாமல் இறந்து போனதும் அரியணைக்கு நேர்வாரிசு கிடைக்காமலிருந்த சமயத்தில் பரமேச்சுர வர்மனின் சிற்றப்பனான இரண்யவர்மனின் மக்களில் ஒருவனான பல்லவ மல்லன் என்பவன் பன்னிரண்டு வயதில் பல்லவ அரியணையில் ஏறினான். அவனே இச்சரித்திர நவீனத்தின் நாயகனான இரண்டாம் நந்திவர்மன்.

இவனது கோட்டையில் ‘சமுத்ர கோஷம்’ என்ற பெயருடைய முரசு இருந்ததாக திரு. உதயணன் சுட்டிக் காட்டுகிறார். சமுத்திரமானது பேரொலி செய்வது போன்ற ஒலியை எழுப்பிய காரணத்தால் இந்த முரசு ‘சமுத்ர கோஷம்’ என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இது உண்மை என்பதை திருமங்கையாழ்வார் தனது பெரிய திருமொழி பாசுரத்தில் பரமேச்சுர

விண்ணகரம் என்றழைக்கப்பட்ட இன்றைய காஞ்சி வைகுந்த பெருமாளை மங்களா சாசனம் செய்யும் போது குறிப்பிடுகிறார்.

பிறையுடை வாணுதல் பின்னை திறத்து
முன்னொரு கால்செரு வில்உருமின்
மறையுடை மால்விடை யேழடர்த்தாற்
கிடம்தான் தடஞ்சூழ்ந் தழகாயகச்சி
கறையுடை வாள்மற மன்னர் கெடக்
கடல்போல் முழங்கும் குரல் கடுவாய்
பறையுடைப் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே!

இதுபோன்ற ஒரு சிறப்புப் பேரிகை வேறு எந்த பல்லவ மன்னனிடமும் இல்லை என்று தெரிகிறது. அந்த வகையில் சிறப்பு பெற்றிருந்த காரணத்தால் இதனைத் தமிழ் மன்னர்களது காவல் மரத்திற்கு இணையாக வைத்து நாவலின் தலைப்பாகவும் அமைந்திருக்கிறார் திரு. உதயணன். திருமங்கையாழ்வார் இரண்டாம் நந்திவர்மனின் காலத்தவர். அதே போல் திருஞானசம்மந்தரும் இக்காலத்தவர். இவ்விரு மகான்களையும் தனது நாவலில் காட்டிட வேண்டும் என்பது திரு. உதயணனின் அவா. எனவே அவ்விருவரையும் சீர்காழியில் சந்திக்க வைத்திருப்பது மட்டுமன்றி மத நல்லிணக்கத்தையும்

வெளிப்படுத்தியிருக்கிறார். அக்காலத்தில் முன்னணியில் இருந்த சைவம், வைணவம், சமணம் மற்றும் பௌத்த மதங்களும் பாசுபதம், காபாலிகம் ஆகிய மதங்களும் தங்களுக்குள் வெளிப்படையான பிணக்குகளுடன் இருந்தன என்பது உண்மை. திரு. உதயணன் அதனை அறிந்தாலும் அது குறித்த பூசல்களில் நுழைய முற்படாதது பாராட்டிற்குரியது. இவ்விரு மகான்களின் மூலம் குரு-சிஷ்ய பாவத்தை விளக்கியிருப்பதும் சிலாக்கியமானது.

சரித்திரம் மட்டும் பேசப்படுமானால் சுவையற்று இருக்கும். அது கதையொன்றைச் சேர்த்துக் கொண்டு வெளிப்படுமானால் சுவையைப் பெற்று நிற்கும். சரித்திர நாவல்களின் நோக்கமே இதுதான். மக்களிடம் சரித்திரத் தகவல்கள் சுவையோடும் அளிக்கும் பணியைத்தான் சரித்திர நாவல்கள் செய்கின்றன. அந்த நற்பணியை ‘சமுத்ர கோஷம்’ மூலம் திரு. உதயணன் செய்துள்ளார். அவரது நற்பணிகள் வளரட்டும். ஓங்கட்டும்.

சென்னை 600 004.
06.09.2003.

சமுத்ர கோஷம்

கருத்துரை

-திருமதி ரேவதி பாஸ்கரன்

மதிப்பிற்குரிய உதயணன்
அவர்களுக்கு,

தங்களின் எழுத்துக்களின் வாசிப்பு அனுபவம் எனக்கு நிறைய உண்டு. அதே போல் தங்களுடன் பல நோக்கு கருத்துக்களை பல்வேறு தளங்களில் விவாதித்த அனுபவமும் எனக்கு உண்டு. ஒரு நடுத்தர வர்க்கத்தின் வாழ்நிலையும், ஆன்மீக கருத்தோற்றங்கள் கூடிய எழுத்துக்களுக்கும், எண்ணங்களுக்கும் சொந்தகாரர் நீங்கள் என்பதாக தான் தங்களை பற்றியான உருவகம் எனக்கு இருந்தது.

உண்மையில் சொல்ல வேண்டுமென்றால் சரித்திர நாவல்களின் கரங்களை பிடித்து நான் உலா வந்தது மிக குறைவு ஆனால் உங்கள் எழுத்துக்கள் சரித்திர நாவல் மீது ஒரு ஈர்ப்பை எனக்குள் ஏற்படுத்தி உள்ளது.

இந்நாவலை படித்த பிறகு தான் உதயணன் என்ற என் நண்பர் மிகச்சிறந்த அகழ்வாராட்சி நிபுணர் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அந்த வகையில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து வரலாற்று சம்பவங்களை தங்களின் கற்பனையோடு குழைத்து அருமையான நாவலை படைத்திருக்கிறீர்கள்.

காஞ்சிபுரத்தின் மண்ணின் மைந்தனாக தாங்கள் இருப்பதாலேயே அம்மண்ணின் வரலாற்றை எழுதுவதில் தங்களுக்கு அதிக ஈடுபாடு இருந்திருப்பதை இந் நாவல் மூலம் நான் அறிகிறேன்.

“வரலாறுகள் வெற்றி பெற்றவர்களால் தான் எழுதப் படுகிறது தோற்றவர்களின் வரலாற்றையும் சேர்த்து”

நமது பாடத்திட்டங்கள் நமது வரலாற்று நாயகர்களாக, வீரர்களாக சித்தரிக்க முற்படுபவர்களை தவிர்த்தும் வரலாறுகள் உண்டு என்பதையும் மிக பெரிய சரித்திர நிகழ்வுகள் மறைக்க பட்டிருப்பதும் தங்களை போன்ற வரலாற்று நாவலாசிரியர்களின் எழுத்துக்களில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

அது என்ன ஐயா, போர் முஸ்தீபுகளையும், விளைவுகளையும் இவ்வளவு விஸ்தாரமான விவரங்களுடன் சொல்கிறீர்களே அது மிகவும் அருமை.

“என்ன விளைவுகள் ஏற்படுத்த வேண்டும் என்பதிலிருந்து தான். எப்படி பட்ட போர் முறை கையாளப் பட வேண்டும்” என்பது போன்ற போர் தந்திர முறைகளை உங்களின் இந்த நாவலை படிக்கும் போது தெரிந்து கொண்டேன்.

‘மனித சமூகம் உருவானது முதல் அவன் யாரிடமாவது போரிட்டு கொண்டு தான் இருக்கிறான்.’ போரின் தன்மை அழித்தொழிப்பது என்பதால் தான் நாம் பல அரிய தடயங்களை, பதிவுகளை இழந்தோம், மனிதன் நாகரீகம் பெற்று முன்னேற, முன்னேறதான் அழித்தொழிப்பது என்பதில் இருந்து கைபற்றுதல், மாற்றி அமைத்தல், மறு பயன் பாட்டிற்கு உட்படுத்தல் என்ற நிலைக்கு முன்னேறி இருக்கிறான் என்பதும், புலப்படுகிறது.

இயந்திரங்களுடன் பழகி இயந்திரமாகி போன மனிதன் தன்னை பற்றி அறிந்து கொள்ள நேரமில்லாமல்

அலைந்து கொண்டிருக்கும் வேகமான இந்த சூழ்நிலையில், வரலாற்று சம்பவங்களை வளரும் தலைமுறைக்கு எடுத்து செல்லும் தங்களின் முயற்சி மிக அபரீதமானது. ஒரு வரலாற்று நாவலை மிக பெரும் உழைப்பை செலுத்திப் படைத்திருக்கும் தங்களின் முயற்சியை நான் மிகவும் மெச்சுகிறேன்.

இத்துடன் தங்களுக்கு கிடைத்த தகவல் வாய்ப்புகளை குறித்து ஒரு பட்டியல் வெளியிட்டிருந்தால் இந்த நாவலின் பின்னால் பொதிந்திருக்கும் தங்களின் உழைப்பை என் போன்ற வாசகர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருந்திருக்கும்.

வரலாற்று நாவலாசிரியர்களின் மிகச்சிறந்தோர் பட்டியலிட படும் போது தங்களுக்கு சிறந்ததோர் இடம் அதில் உண்டு என்பதை மறுக்க முடியாது.

அன்புடன்

டதிட்டுரை

[illegible]

[illegible]

ஐனேயைவாயவடுரசநனளுர அரனசயபுூரயீவாய,வாநமணபேடிக புூரயீவாயசநு ளைஅநவடிட நபளையறபசஉயஅயீயளடவேடிபுயஜோ ளுநடிடினேநநசயட டயளயீநஉளெவாநபுயஜோளயினேவாநநுட டயடிள றநசநுட ளைநெசநளையஅடிடுேவாநஜனேயைபுசநபவநஅயீநசடிசள நெவறநநுவோசைனஉநுவேரசலயனேனேநேவாஉநுவேரசலஹறகவநச கூடினேயஅயிஜெ டயவேளைவயினேயளைவடிநெவாநகைளளுட டயெய மளடவறாநறவயன டிகளரினுளுரநவேசநுளைஅநளயசநிடிவமடிறி யளஉகவளவைட உட நயகூளைனனநெஉயரளநறநவடிவாநஅஉவெளயவ வாநவறநசநசரனைஅநவேயசவயனேரியெ நவடிடெ டிளளடிஅவைட ளுஅரயஏளைாரேஉயஅநவடியீடிறநச.

கூயனேளையசஅயஜேஜைாநாநசடிடிகயிடிளந நவையபேடிரளட ல உயஅநவடிவாநவாசடிறனேயரவேட நளளட வயவெறாநடநடிகறநட ளந றாநரோளைசெடிவாநசாநளைவயவெடிஉடிஅநகூளைறயளவாந கூஉவடஅடிளவடட வறநளைவடிகஉயட ளஉாடிட யகளயளுடசநந வெஜஞேளைநவேட டளைவோநயமைரவேயயீநசாஅட கூநஅயீ நளி புயஜோளயீரசயஅவாநளநவயன ளாடிககூயனேளையசஅயஜேஜறநசந ளையீ யவநளைனேஉர யீவரசநகூயனேளையசஅயஜேஜைஅளந க அடபாவாயளநளடினேவாளைவடிசநஅயளிளையரவாடிசளைவசடிசவாந யீடிளவநசளைவுளைசந யளைநயீஜேநளயசளைநளவறளைவாநவாசடிறி யவைநஅயீவநளைவடிளநவாசடினேைஅரெவாநஜைவநஅயீளளவயனே யடிடிசவளைந. கூயனேளையசஅயறேயளயபசநயவசரடநச அநளைஉர டிரளட ளைநட வட டவாநஅஅளையினேளாஉநளளகூட டல றந ளைவாநுட டயவாசடிறினேவேஉவ

‘ளுர அளையபுடிளாயஅயீடிகளயளயீசவடிகவாந ளைநயினே யளஅளினேளையவைடிடிககூயனேளையசஅயஜேஜகூாநரவாடிசாயள வயமநயியைடிகாளைவடிசலயினேளநாந டியீநளவேடியடிளந றளைவாயட வாநபளயீநஉளறாஉாயசநஉரளவடிஅயசலவாசடிரபா

ேடிவஅயேனயவடிசலவோநாளைவடிசஜையட ேடிஎநட.கூாந
ஞநஊசயீைடிேளயேனையட டிபாநயசுநஅந டகை ாடிாயேன
யளெடிசஎைபே.கூாநயரவாடிசளைஎநநஅளவடிாயஎநெநே
ஷீவநசநவநஷீகசவோஷேஎநநய பைவடிகஜய ஷீகூடிசஅலைடிே
டிகய நளவோநளவடிகலைாடிரவடிளெவசஊவஷே வாநகடிறடிக
வாநளாடிறுநளரய ட ஙரவாடிகளாஎநவடிவயபநளவடிகஜநவடிவந ட
ாஜைவடிகஙெஷரவகூாஜசாருயஙயிேேயளவயமநேஜைவடிகஙவடி
வந டாஜைவடிகஙஷீேஎந கடிசஅ்ஞரஅஜயபுூடிளாயஅ்ஜைய
றந உடிஅஷீநபீஜ டிபாநபேயேடிஜேய யஷீெடிடிமகடிகவாந
சநபஞநசளறாடியசநஷேநசநளவநஜைவாநாஜைவடிகலயனே
உரடவரசந

ஊாநடேயேள 600 061. பதிப்பகத்தார்
30.10.2003

முன்னுரை

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பார்புகழ் அரசாட்சி செய்த பல்லவர்களில் மிகச்சிறந்த மன்னர்களாய் ஒளிர்ந்த மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், ராஜசிம்மன் ஆகியோர் வரிசையில் நான்காவதாக இடம் பெறும் இரண்டாம் நந்திவர்மனே இக்கதையின் நாயகன்.

இவன் பல்லவ அரியணைக்கு வந்த விதம் இவனே எதிர்பாராத ஒன்று. இவனைப் பற்றி விரிவாகப் புகழ்ந்துரைக்கும் காசக்குடி செப்பேடுகள் பன்னிரண்டு வயது இருக்கும் போதே இவன் அரியணை ஏறினான் என்று தெரிவிக்கின்றன. அதன் காரணமாகவே இவன் பல்லவ மல்லன் என்று சிறப்புப் பெயர் பெற்றான். பல்லவ வம்சத்தில் வேறு எந்த மன்னனுக்கும் கிடைக்காத பட்டம் இது. இவன் அரியணை ஏறுவதற்கு முன்பும் பின்பும் அமைந்த பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகள் காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் ஆலயத்தில் புடைச் சிற்பங்களாய் இருப்பதை இன்றும் காணலாம்.

நந்திவர்மன் காஞ்சியில் இல்லாத போது சாளுக்கிய விக்கிரமாதித்தன் கோட்டையைப் பிடித்துக் கொண்டான் என்றும் பின்பு நந்திவர்மன் வந்து காஞ்சிக் கோட்டையை மீட்டான் என்றும் மட்டுமே

இவனது வரலாற்றில் காணப்படுகிறது. கோட்டையை காலியாக விட்டு விட்டு நந்திவர்மன் சென்று விட்டான் என்பதும் காலியாக இருந்த கோட்டையைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் கைப்பற்றினான் என்பதும் இரு மன்னர்களின் சிறப்புகளுக்கு உகந்ததாக இல்லை. எனவே அந்த இரு மன்னர்களின் சிறப்புகளுக்கும் மாசு நேராத வண்ணமாய் உருவாக்கப்பட்ட சரித்திர நவீனமே "சமுத்ர கோஷம்".

இக்கதையில் ஒரிருவரைத் தவிர மற்ற அனைவருமே வரலாற்றில் வாழ்ந்த உண்மையான பாத்திரங்கள். இக்கதை நடந்த காலத்தில் வைணவ ஷேத்திரங்கள் தோறும் விஜயம் செய்து அங்கே உறையும் திருமாலை மங்களாசாசனம் செய்த திருமங்கையாழ்வார் வாழ்ந்தவர். அவருக்குச் சிஷ்யனாக இருந்து பரம பாகவதனாக வாழ்ந்தான் பல்லவன் நந்திவர்மன்.

இக்கதை பெரும்பாலும் காஞ்சியைச் சுற்றி நமக்கு மிகவும் பழக்கப்பட்ட இடங்களிலேயே நடைபெறுகிறது. இக்கதையின் நாயகன் நந்திவர்மன் சிறந்த வைணவனாக வாழ்ந்த காரணத்தால் நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தின் பாசுர வரிகளை வைத்தே ஒவ்வொரு அத்தியாயத்தையும் துவக்கியிருக்கிறேன்.

இந்நாவலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த டாக்டர். கே.வி. ராமன் அவர்களுக்கு என் இதயம்

கனிந்த நன்றி. அழகானதும் ஆராய்ச்சி உரையாகவும் அமைந்துள்ள பதிப்புரை வழங்கிய பதிப்பகத்தாருக்கும் என் நன்றி. சிறந்த கருத்துரை வழங்கிய திருமதி ரேவதி பாஸ்கரன் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

சமுத்ர கோஷத்தை நாடெங்கும் ஒலிக்கச் செய்த பெருமை வைதேகி பதிப்பகத்தாரையே சாரும். புத்தகத்தை அழகுற வடிவமைத்த “மல்டி சிஸ்டம் சர்வீஸ்” அன்பர்களுக்கும், அட்டை படத்தை சிறந்த முறையில் வடிவமைத்து தந்த டீரிம் ஷாப் உரிமையாளர் திரு. வேணுகோபால் அவர்களுக்கும் சிறந்த முறையில் நூல் கட்டுமானம் செய்து தந்த திருவள்ளுவர் & கோ உரிமையாளர் திரு. ரகுபதி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றபடி வாசக பெருமக்களுக்கு என் நன்றி என்றுமிருக்கும்.

- உதயணன்

சென்னை-61.
23.11.2003

1. நகர்ப் பிரவேசம்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம் ஒன்றில் கோழியின் கூவலைக் கேட்டு ஊர் விழிப்பதென்பதில்லாமல் ஊர் விழிப்பதைப் பார்த்து விட்டு கோழி கூவும் இடமான காஞ்சி மாநகரத்து மக்கள் வழக்கத்திற்கு மாறான ஒலிகளை அதிகாலை நேரத்தில் கேட்டார்கள்.

ஆலயமணிகளும் அந்த ஆலயங்களில் உறையும் பரம்பொருளைப் போற்றும் வேத ஒலிகளும் எழுந்து ஊர் மக்களை உறக்கத்திலிருந்து எழுப்பிப் பழக்கப்பட்ட அந்த தெய்வீகத் திருநகர் அன்றைய அதிகாலை வேளையிலோ யானையின் பிளிறல்களையும் புரவிகளின் கனைப்புகளையும் வீரர்களின் ஆராவாரக் கூச்சல்களையும் கேட்டுச் சிலிர்த்தது.

மண்ணிலும் புல்லிலும் படிந்திருந்து கதிரவனைக் கண்டதும் பூரிப்பது போல் மலரும் மார்கழி மாதப்பனித்துளி மொட்டுகள் அன்று யானைகளும் குதிரைகளும் போட்ட கூச்சலில் விடிவெள்ளியைக் காணமலேயே அதிர்ந்து மலர்ந்து உலர்ந்தன.

வழக்கத்திற்கு மாறாகவும் இயற்கைக்கு வேறாகவும் உண்டான இக்காட்சிகளையடுத்து காஞ்சியின் கோட்டை வாயிற்கதவுகள் கரகரவென பெருத்த ஓசையுடன் வெகுவேகமாகத் திறந்தன.

ஆதவனின் ஒளிவெள்ளம் அருள் வெள்ளமாய் நுழையும் அவ்வாயில்களில் பனியைத் தோற்கடித்து

படைகள் எழுப்பிய பிழதிப்புயல் முதன்முதலாய் பிரவேசித்தது.

அப்புயலையடுத்து மின்னலைப் போல் வெளிப்பட்ட பெண்புரவியில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் வீற்றிருந்தான்.

அதையடுத்து கார்மேகம் போல் காட்சியளித்த யானையில் அவனது அரசிலோகமாதேவி காணப்பட்டாள்.

அதற்குப் பின்னால் சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன் கரும்புரவியில் வர, அவனுக்குப் பின்னால் காரியஸ்தரும் கடைசியில் புயலுக்குப் பின்னால் வரும் பெருமழையை போல் சாளுக்கியரின் பல்வேறு படைகளும் பிரவேசித்தன.

விரைவில் அப்பிரவேசம் முடிந்ததற்கு அறிகுறியாக முரசுகள் முழங்கியதும் கோட்டைக்கதவுகள் சாத்தப்பட்டன.

சாளுக்கியரது படையெடுப்பைக் காஞ்சி நகர மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள் போலும்.

கொஞ்ச நாட்களாகவே அதுபற்றி ஊரெல்லாம் பேச்சாக இருந்தது.

ஆகவே படைகளின் வரவினால் அவர்கள் வியப்படையவில்லை என்றாலும்-

பல்லவ மன்னனும் பல்லவ மல்லனுமான காஞ்சி நகர் வேந்தன் நந்திவர்மன் காஞ்சியில் இல்லாத நேரம் பார்த்து பகைவர்கள் வந்தவிதம் அவர்களைக் கலக்க மடைய வைத்தது.

பல்லவ மன்னன் காஞ்சியில் இல்லாததற்கும் காரணம் என்ன என்பது மக்களுக்கு ஓரளவு தெரிந்திருந்தாலும்

அதனாலேயே அவர்கள் திருப்திப்பட்டுக் கொண்டு விட முடியவில்லை.

மாறாகச் சாளுக்கியப் படைகளால் இனி என்னென்ன நேருமோ என்ற கவலை பெரிதாய் எழுந்து விழுதாய் வளர்ந்து ஆழப்பதிந்தது.

அதனை அதிகப்படுத்தும் வண்ணம் அன்று பிற்பகலிலேயே கோட்டைக்குள் இருந்த பல்லவ வீரர்கள் சிறையிலடைக்கப்பட்டு கோட்டைக் காவலை சாளுக்கியப் படைகள் மேற்கொண்டன. அன்றிரவுக்குள் நகரின் முக்கியஸ்தர்கள் கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டார்கள்.

நள்ளிரவில் தங்களது வெற்றியை உலகறிய உணர்த்துவது போல் சாளுக்கியர் பேரிகை பெரிதாக முழங்கியது. கோட்டை விதானத்தில் பல்லவரைக் கண்டு சிலிர்த்தெழுந்தது போல் காட்சியளித்த வராகக் கொடியொன்று நள்ளிரவில் விதானத்தில் பெரும் பிசாசு போல் படபடத்தது.

இரவு முழுவதும் வீரர்களின் வெறிச் கூச்சல்கள் கோட்டைச் சுவர்களில் எதிரொலித்தபடி இருந்தன.

⌘

ஆனால் மறுநாள் எந்தவிதமான நடவேடிக்கையும் இருக்கவில்லை. அன்றும் சரி அதற்கடுத்த நாளும் சரி தொடர்ந்தாற் போல் மூன்று நாட்களுக்கு எந்த விதமான நடவேடிக்கையும் இல்லாதது மட்டுமின்றி சாளுக்கியரின் நடமாட்டம் கூட அறவே இருக்கவில்லை.

மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த மக்கள் ஆசுவாசமடைந்தார்கள்.

நான்காம் நாள் காலை சாளுக்கிய மன்னர் நகர் உலா வருவார் என ஊரெங்கும் அறிவிப்பு செய்யப்பட்டது.

அதையடுத்து ஒரு நாழிகை கழிந்த பின்பு சூரியஒளி நன்றாக விரிந்து காலை நேரக்குளிரையும் பனியையும் விரட்டி விட்டிருந்த நிலையில் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டான் விக்கிரமாதித்தன்.

சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத் தகுந்தவனான அவன் வயதிற்கும் அந்தஸ்திற்கும் ஏற்ற தோராணையைப் பெற்றிருந்தான். அவனது நடையும் பார்வையும் அச்சத்திற்கும் அவனுக்கும் வெகுதூரம் என்பதைப் புலப்படுத்தின. அவனது உடலில் இருந்த கழல்கள் அவனுக்கும் வீரத்திற்கும் இருந்த பரிச்சியத்தை வெளிப்படுத்தின. கண்ணிலே வீசிய ஒளி தீட்சண்யமாய் இருந்தது.

அவனுக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த லோகமாதேவி அவனுக்கு ஏற்றவளாய் இருந்தாள். சாளுக்கிய நாட்டில் எதற்குக் குறைவிருந்தாலும் பகட்டிற்கு நிச்சயமாய் இல்லை என்பதை அவனது ஆடை அலங்கார நடையுடைபாவனைகள் தெளிவாக்கின.

விக்கிரமாதித்தனை அப்படியே உருவெடுக்கும் போல் இருந்த அவளது மகன் கீர்த்திவர்மனுக்கு வயது இருபத்தைந்திருக்கலாம். தந்தையிடம் தழைத்திருந்த தோரணைகள் அவனிடமும் இருந்தன என்றாலும் அவனது கண்களில் தீட்சண்யம் இல்லை. சஞ்சலம் இருந்தது. சபலம் இருந்தது.

அரச குடும்பத்தினர் மூவரும் முன்னே வர அவர்களது புரவிகள் பின்னே வர அவைகளுக்குப் பின்னால் இருபது வீரர்கள் பரிவாரங்களாய் வந்தார்கள். அவர்களுடன் காஞ்சி நகர காரியஸ்தரும், அந்தணரும், சிறந்த கல்விமானுமான ஜேஷ்டபாத சோமயாஜி* இருந்தார்.

வீதியில் ஒருபெண் மன்னரை வரவேற்பது போல் கோலமிட்டிருந்தாள். "பெண்ணே, உலா வருவது உங்கள் பல்லவ மன்னன் அல்லவே பின் ஏன் வீதியில் நீரைத் தெளித்துக் கோலமிடுகிறாய்?" என்று அவளைப் பார்த்துக் கேட்டான் மன்னன்.

"ஐயா, திருவுடை மன்னர்கள் திருமாலின் அவதாரம் என்பது சான்றோர் வாக்கு. எனவே எந்த மன்னர் உலா வந்தால் என்ன? உள்ளே உள்ளது இறைவன் தானே?" என்று பணிவோடு கூறினாள் அப்பெண்.

விக்கிரமாதித்தன் எதுவும் பேசவில்லை. தேவியைப் பார்த்தான்.

மேலை ராஜவீதிக்கு வந்தபோது முதியவர் ஒருவர் அவன் கழுத்தில் சந்தனமாலையொன்றை அணிவித்து "மன்னவா, தாங்கள் நீடூழி வாழவேண்டும்" என்று வாழ்த்தினார்.

"பெரியவரே, வாய் நிறைய என்னை வாழ்த்துகிறீரே, நான் பல்லவரின் பகைவன் அல்லவா?" என்று வினவினான் விக்கிரமாதித்தன்.

---

* இவர் நந்திவர்மனால் தானம் பெற்றவர். பெரும் கலைகளிலும் கல்வி ஞானத்திலும் சிறந்தவர் என்று நந்திவர்மனின் காசக்குடி செப்பேடுகள் கூறுகின்றன.

“மன்னவா, காஞ்சியில் பகைவர் எவரும் உலா வருவதில்லை. அப்படியே வந்தாலும் காஞ்சிநகர மக்கள் உபசரிக்கவே செய்வார்கள். நட்பும் பகையும் நடப்புகள். குணங்களல்ல” என்றார் பெரியவர்.

அவரிடமிருந்து விடைப் பெற்றுக் கொண்ட சாளுக்கிய மன்னன் காரியஸ்தரிடம் வினவினான்.

“கல்வியறிவு இல்லாத ஒருவனை நான் பார்க்க வேண்டும் எந்தப் பகுதியில் பார்க்கலாம்.?”

இதைக்கேட்டுப் புன்முறுவல் கொண்டார் சோமயாஜி. “அது முடியாத காரியமாயிற்றே மன்னவா கல்வியில் கரையிலா காஞ்சிமாநகரில் நீங்கள் விரும்பும் மனிதன் இனி பிறந்தால் தான் உண்டு” என்றார்.

பிறகு அவர்கள் பூலோக வைகுண்டமான பரமேச்சுர விண்ணகரத்தை அடைந்தார்கள். ஆலய வாசலில் பூரணகும்ப மரியாதை தரப்பட்டது கருவறையில் வைகுந்த நாதனின் திவ்யதரிசனமும் கிடைத்தது.

உருப்பெற்று ஒரு திங்கள் கூட ஆகாததால் புத்தம் புது போலிவினைச் சிறிதும் இழக்காமல் மண்ணுலகில் இடம் பெற்ற விண்ணகரம் போல் காட்சியளித்த அவ்வாலயத்தில் சம்ரோக்ஷணம் நடந்தது பற்றியும் மன்னன் நந்திவர்மனுக்கு அவ்வாலயம் பேரில் இருக்கும் ஈடுபாடுபற்றியும் விளக்கினார் காரியஸ்தர்.

பிறகு ஆலயத்தின் உட்பிராகாரத்தில் படைக்கப்பட்டிருந்த சிற்பங்களைக் காட்டி அவற்றுக்குச் சம்மந்தப்பட்ட புராண மற்றும் சரித்திர விவரங்களைச் சொல்லிய அவர் நந்திவர்மன் எவ்வாறு பட்டத்திற்கு வந்தான் என்பதையெல்லாம் விளக்கும் சிற்பங்களையும்

சுட்டிக்காட்டிய போது விக்கிரமாதித்தன் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளவில்லை.

இப்படி ஆலயத்தின் சிறப்புகளையும் சிற்பங்களின் நேர்த்திகளையும் சாளுக்கிய மன்னன் அணுஅணுவாக ரசித்து வந்தாலும் அந்த ரசனை இளவரசன் கீர்த்திவர்மனிடத்தில் இல்லை. காஞ்சியின் சிறப்புகளைக் கேட்க நேர்ந்த போது பார்க்கும் துடிப்பு அவனிடத்தும் உண்டானது உண்மைதான் என்றாலும் தந்தையைப் போல் அவற்றில் லயித்துவிடும் அளவிற்கு ஈடுபாடு இருக்கவில்லை அவனிடம். அவன் காஞ்சியில் பார்க்கத் துடித்த விஷயங்கள் வேறுபல நிரம்ப இருந்தன. அவற்றைக் காண்பதில் அனாவசிய தாமதம் ஆகிக் கொண்டிருப்பதாகவே நினைத்த அவன் விக்கிரமாதித்தன் புறப்படுவதற்கு முன்பாகவே தன் புரவியில் ஏறி கடிகையை நோக்கிச் செலுத்தினான்.

காஞ்சியின் மேற்கெல்லையில் இருந்தது கடிகை. அக்காலத்தில் பாரதத்திலேயே மிகச்சிறந்த கலைப்பீடமாக அக்கடிகை மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. காஞ்சி என்றாலே கடிகை என்பது நினைவுக்கு வரும் அளவு மகா வித்யாபீடமாய் திகழ்ந்தது. ஏறக்குறைய காஞ்சிக்குள்ளே அமைக்கப்பட்ட பிரத்தியேகமான கல்விக் கோட்டை போல் இருந்த அக்கனகக் கோட்டை வாசலை அடைந்த கீர்த்திவர்மன் புரவியை விட்டு இறங்கினான்.

கோட்டை வாயிலில் அந்தண மாணாக்கர்கள் இருவர் சுவடிகளைப் படித்த வண்ணம் மர ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். வாசலுக்குள் கீர்த்திவர்மன் நுழைய முற்பட்ட போது தடுத்த அவர்கள் “ஐயா, சற்று பொறுங்கள். ஆசார்யர் பூசையில் இருக்கிறார். முடிந்ததும் அனுமதி பெற்று வருகிறோம் பிறகு உள்ளே செல்லலாம்” என்றார்.

கீர்த்திவர்மனுக்கு கோபம் மூண்டது.

“நான் யார் தெரியுமா?” மூர்க்கமாகக் கேட்டான்.

“தெரியாது”

“சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன்”

“மகிழ்ச்சி” என்றார்கள் மாணாக்கர்கள்.

“தெரிந்து விட்டதல்லவா? வழியை விட்டு விலகுங்கள்” அதட்டினான் கீர்த்திவர்மன்.

“ஐயா, இங்கே யாருக்கும் வித்தியாசம் கிடையாது. விதிமுறைகள் எல்லோருக்கும் பொதுவானவை. சொன்னால் கேளுங்கள்.”

கீர்த்திவர்மன் கேட்கத் தயாராக இல்லை. “காஞ்சியையே கைப்பற்றியாகிவிட்டது. கடிகையில் நுழைவதற்கு நீ யார் தடை செய்ய? விடு வழியை” என்று இரைந்தான்.

“காஞ்சியில் நுழைவது வேறு. கடிகையில் நுழைவது வேறு. வீணாகத் தொல்லை தராதீர்கள்”

“நீங்கள் விலகப் போகிறீர்களா? அல்லது விலகச் செய்யட்டுமா?” என்று மிரட்டிய கீர்த்திவர்மன் தன் புரவியின் பக்கம் திரும்பி ஏதோ சைகை செய்ய அடுத்து நிகழ்ந்தது அதிசயம்.

அதுமட்டுமல்ல. அச்சமயத்தில் அங்கே பிரவேசித்த மனிதர் உதிர்த்த சொற்கள் கீர்த்திவர்மனை வியப்பின் உச்சிக்கே கொண்டு சென்றன.

⌘⌘⌘⌘⌘

2. வாழ்வியல் கோட்டை

ஓங்கி உலகளந்த உத்தமனின் பேர் பாடும் ஓங்குபுகழ் காஞ்சி மாநகரத்துக் கடிகை வாசலில் உள்ளே நுழையத் தடையாக இருந்த மாணாக்கர்களை விரட்டியடிக்கும் எண்ணத்துடன் தன் புரவிக்கு கீர்த்திவர்மன் சைகை காட்டியதும் அப்புரவியும் பேரலையொன்று பெயர்ந்தெழுந்தாற் போல் தன் கால்களைத் தூக்கியபடி மாணாக்கர்களின் மேல் பாய்ந்தது. கடகடவெனச் சிரிக்கவும் செய்தான் சாளுக்கிய இளவல். ஆனால் அச்சிரிப்பு அரை வினாடி கூட நீடிக்கவில்லை. சிரிப்பு நின்றது. கண்கள் விரிந்தன வியப்பால்.

சீறிப் பாய்ந்த புரவியைக் கண்டு மாணாக்கர்கள் தறிகெட்டு ஓடிப் போய் விடுவார்கள் என்று கீர்த்திவர்மன் எதிர்பார்த்ததற்கு மாறாக மாணாக்கர்களில் ஒருவன் புரவியின் முன்னங்கால்களைப் பிடித்து ஒரு சுழற்று சுழற்றவும் மற்றொருவன் வாலைப் பிடித்து பிட்டப் பகுதியில் ஓர் உதை உதைக்கவும் செய்தான். மறுகணம் பெருங்கிளையொன்று முறிந்து விழுந்தாற் போல் அதிர்ந்து விழுந்தது புரவி. அதன் வாயில் நுரை தள்ளியது.

ஏதோ மாயாஜாலம் போல் நிகழ்ந்த அந்நிகழ்ச்சியைக் கண்டு ஏற்பட்ட வியப்பு விளங்குவதற்கு முன் வேறொரு வியப்பும் தலைகாட்டியது. அதற்குக் காரணமான மனிதர் அங்கு பிரவேசித்தார். “அட சருவ நாமப் புரவியா? தலைவனுக்குக் கேடு விளைவிக்கக் கூடியதாயிற்றே?” என்று சொற்களை அவர் எதிர்க்கவும் வாயைப் பிளந்து நின்றான் கீர்த்திவர்மன்.

அவரது சொற்களால் பெருவியப்படைந்த அவன் "நீர் யார்?" என்று வினவினான்.

"அவர் தான் தரணிகொண்ட போசர். கடிகையின் தலைவர். மாணாக்கர்களுக்கு ஆசார்யர். பல்லவ மன்னன் அரியணையில் ஏறுவதற்கு காரணகர்த்தாவாக நின்றவர்"- என்று கூறியபடி அங்கு வந்து சேர்ந்தார் காரியஸ்தர் சோமயாஜி. அவருடன் விக்கிரமாதித்தனும் பரிவாரங்களும் வந்தார்கள்.

கீர்த்திவர்மனின் கேள்விக்கு விடையளித்த நிமிடத்திலேயே அவனது புரவிஅருகே விழுந்துகிடந்ததைக் கண்ட சோமயாஜி, "இதென்ன, நிற்க வேண்டிய புரவி விழுந்து கிடக்கிறது?என்னாயிற்று இங்கே? நீ ஏதாவது தூராக்கிருத முயற்சியில் ஈடுபட்டாயா கீர்த்திவர்மா?" - என்று வினவினான்.

" இவர் உள்ளே நுழைய முயன்றார். ஆசார்யரின் அனுமதி பெற்ற பின் போகலாம் என்றோம். எங்களை அகற்ற புரவியை ஏவினார். வீழ்த்திவிட்டோம்" என்றார்கள் மாணாக்கர்கள்.

"நீங்களென்ன வீரர்களா?" -என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

"ஏன் இருக்கக் கூடாதா?" -

"நீங்கள் அந்தணர்கள். மாணாக்கர்கள்"

"அதனாலென்ன?"

"கையிலே ஓலைச்சுவடி இருக்கிறது". -

"கீர்த்திவர்மா" -என்று குறுக்கிட்ட காரியஸ்தர்

"இங்கே ஏழாயிரவர் பயில்கிறார்கள். இவர்கள் பயில்வது ஏட்டுக்கல்வி மட்டுமல்ல. தொழிற்கல்வியும் கூடத்தான். இவர்களால் வாதாட முடியும். தேவைப்பட்டால் போரிடவும் தெரியும்." என்றார்.

"அதெப்படி" - கேட்டான் கீர்த்திவர்மன் விடாப்பிடியாக.

" இது கலைப்பீடம். இங்கு கற்பிக்கப்படாதது எதுவும் இல்லை."

"இங்கே போர்ப் பயிற்சி அளிக்கப்படுகிறதா?"

"ஆம். போரும் ஒரு கலை" - என்று சொன்ன சோமயாஜி, "கீர்த்திவர்மா,விக்கிரமாதித்தா, இந்தக் கடிகை ஓர் அபூர்வ சிருஷ்டி. இதற்கு இணையான வேறொன்று பாரதத்தில் இல்லை. இது ஒரு தனி உலகம். இங்கே ரிக், யஜுர், சாமம், அதர்ணம் ஆகிய வேதங்களும், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், தந்திரம் ஆகிய உப வேதங்களும் சிக்கை, வியாகரணம், கற்பம், நிருத்தம், சோதிடம், சந்தசு என்னும் வேத அங்கங்களும் மீமாம்சை, தருக்கம், சாங்கியம், வேதாந்தம், யோகம், இதிகாசம், புராணம், அறநூல், நாத்திகம், அருத்தநூல், காமநூல், சிற்பம், அலங்காரம், காப்பியம், தேயமொழி, அமயச்சொல், யவனமதம், ஒப்புரவறம் ஆகிய வித்தைகளும் அவற்றோடு அறுபத்து நான்கு கலைகளும் கற்பிக்கப்படுகின்றன. இக்கலைகளில் அடங்காத அம்சங்களே இல்லை. வாழ்வியலுக்குத் தேவையானஅனைத்தையும் இங்கேயே கற்று தேர்ச்சி பெறலாம். வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை." என்றார்.

"அப்படியானால் இக்கடிகையே ஒரு போர் கோட்டைதானா?" -வினவினான் கீர்த்திவர்மன்.

"போர்க் கோட்டை மட்டுமல்ல. வாழ்வியல் கோட்டை. ஒரு வகையில் காஞ்சியை விட பலமான கோட்டை. அதனால் தான் நீண்ட காலத்திற்கு முன்னர் வாகாடக மன்னன் ஒருவன் காஞ்சியை வென்ற போது காஞ்சியைக் கோட்டையை விட்டு விட்டு கடிகைக் கோட்டையைப் பிடித்துக் கொண்டு பல்லவர்களை மிரட்டினான். பெரும் முயற்சிக்குப் பிறகே - அவனிடமிருந்து இக்கடிகை மீட்கப்பட்டது *".

காரியஸ்தரின் விளக்கத்தைக் கேட்ட பின் கடிகையின் தலைவரை நோக்கிய கீர்த்திவர்மன் "நீங்கள் ஏதோ சொன்னீர்களே என் புரவியைப் பற்றி?" என்று கேட்டான்.

"என்ன சொன்னேன்?"- வினவினார் தரணி கொண்ட போசர்.

" சருவநாமப் புரவி என்றீர்கள். தலைவனுக்குக் கேடு விளைவிக்கக் கூடியது என்றீர்கள்."

"ஆம். சந்தேகமிருந்தால் பார். உன் புரவியின் கபோலங்கள் இரண்டிலும் ஒற்றைச் சுழி இருக்கிறதா என்று"

"இருக்கிறது"

"அத்தகைய புரவிகள் சருவநாமம் எனப்படும் # அவை நல்ல புரவிகளல்ல. அவற்றை ஆள்பவனுக்கு அவற்றால் கேடுகள் தான் விளையும். இது இறந்ததே நல்லது. நீயும் உன் தந்தையைப் போல் சிந்தாமணி வகைப் புரவிகளையே வைத்துக்கொள். அவைதான் தம்தலைவர்களுக்கு பொருளையும் இன்பத்தையும் அளிக்கும். நடந்துள்ள நிகழ்ச்சியே அதற்கு சான்று" -

---

* பக்கம் 54-55 பல்லவர் வரலாறு By இராசமாணிக்கனார்.

பக்கம் 314 சுக்கிரநீதி



வாயடைத்துப் போனான் கீர்த்திவர்மன். அவரது விளக்கங்களைக் கேட்டபின் புரவி சாஸ்திரமும் இங்கே கற்பிக்கப்படும் கல்வியல் ஒன்றாக இருக்க வேண்டும் என்று உணர்ந்து மௌனமாய் இருந்தான். ஒரு சிறு நிகழ்ச்சி தனக்கு எத்தனை விஷயங்களைப் புரியவைத்து விட்டது என்பதை அறிந்து திருப்தியடைந்த அதேசமயம் கேவலம் இரண்டு அந்தண மாணாக்கர்களால் தன் புரவியும் மாண்டு தன் கௌரவமும் பங்கப்பட்டுப்போனதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. ஆறாதவடு ஒன்று ஆழமாய்ப் பதிந்தாற் போலிருந்தது அவனுக்கு.

இதற்கிடையில் விருந்தினர்களை வரவேற்கும் வகையில் “வா, விக்கிரமாதித்தா. வாருங்கள் ராணி. பரமேஸ்வரன் உங்கள் அனைவருக்கும் நல்லாயுளையும் வாழ்வையும் நல்கட்டும். இங்கேயுள்ள விதிகள் கடுமையானவை. இவைகளை நந்திவர்மன் கூட மீற முடியாது. ஆகவே தான் இச்சம்பவம் நடந்துவிட்டது. அதையாரும் பொருட்படுத்த வேண்டாம். உள்ளே வாருங்கள்” என்றழைத்தார் தரணிகொண்ட போசர்.

கடிகையின் தலைவரை ஏறிட்டு நோக்கினான் விக்கிரமாதித்தன். ஏறக்குறைய ஜேஷ்டபாத சோமயாஜியைப் போலவே அதே வயதும் தோற்றமும் கொண்டவராய் காட்சியளித்தார் தரணிகொண்ட போசர். ஜேஷ்டபாதர் தன் அலுவல் காரணமாகத் தலையில் வட்டா அணிந்திருந்தார். கடிகைத் தலைவருக்கு அது அவசியமில்லாதிருந்தது. செழிப்பான குடுமியும் தீர்க்கமான நெற்றியும், நன்குதீட்டப்பட்ட கோபி சந்தனத்திலகமும், உறுதிவாய்ந்த பார்வையும் அவரது அந்தணக்கோலத்திற்குச் சாட்சியாகவும் நெஞ்சுறுதி வாய்ந்த மனிதனுக்குரிய லட்சணமாகவும் அமைந்திருந்தன.

அவரை வணங்கிய விக்கிரமாதித்தன் “நந்திவர்மனையும் தாங்கள் தான் வரவேற்றீர்களாம்.

இன்று என்னையும் வரவேற்கிறீர்கள். வரவேற்கவே இருப்பவரா ஆசார்யர்?" -வினவினான்.

"சங்கல்பம் எப்படி அமைந்து விட்டாலும் இரண்டு சந்தர்ப்பங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது" என்றார் தரணி கொண்ட போசர்.

"என்ன வித்தியாசம் ?" - வினவினான் விக்கிரமாதித்தன்.

"விக்கிரமாதித்தா. சில ஆண்டுகளுக்கு முன்னால் காஞ்சி மாநகர் மிகவும் இக்கெட்டான நிலையைச் சந்தித்தது. மன்னன் பரமேச்சுரவர்மன் திடீரென மாண்டு போனான். அவனது பிள்ளைக்கோ அவன் விட்டுச் சென்ற அரியணையில் அமர்ந்து ஆட்சியைச்செம்மையாக நடத்தும் திறமையோ தகுதியோ இல்லாத விடலைகளாய் இருந்தார்கள். எனவே திறமையும் தகுதியும் உடையவனைத் தேடிப் போனேன். நந்திவர்மன் கிடைத்தான். எதிர்பார்த்த புதையல் கிடைத்து விட்ட திருப்தியில்அவனை வரவேற்றேன் காஞ்சிக்கு. இன்று எதிர்பாராத விதத்தில் உன்னை வரவேற்கிறேன் கடிகைக்கு."

"என் வரவு உமக்குப் பிடிக்கவில்லையா?"

"கடிகைக்கு வரவேற்பதில் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை?" -

"காஞ்சிக்கு வரவேற்பதில் விருப்பமுண்டா?"-

"விக்கிரமாதித்தா. நீயும் பெரும் மன்னன். கருத்துச் சுதந்திரத்தை மதிப்பாய் என்று நம்பிக் கேட்கிறேன். பிறவி வீரனான பல்லவ மன்னனுக்குப் பணி செய்யும் நான் உன்னை முழுமனதுடன் வரவேற்க முடியுமா?"

"அதிருக்கட்டும். நந்திவர்மனைப் பிறவி வீரன் என்கிறீரே? எப்படி?" -

"சாளுக்கியமன்னா, காஞ்சியை ஆள பல்லவ அரச மரபிரனரைத் தேடிச் சென்று இரண்யவர்னைக் கண்டேன். அவனோ அரசாள விரும்பாமல் தன் நான்கு புதல்வர்களான ஸ்ரீமல்லன், இரணமல்லன், சங்கிராமமல்லன், பல்லவ மல்லனான நந்திவர்மன் ஆகியோரை அழைத்து அரசாள யாருக்கு விருப்பம் என்று கேட்ட போது மற்ற மூவர் அரியணையைக் காணவே அஞ்சினார்கள். ஆள்வதற்குத் தயார் என்று முன் வந்தவன் நந்திவர்மன் தான். அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டு.* அவன் அவ்வாறு அந்த வயதில் முன் வந்தது பதவி ஆசையையா காட்டுகிறது? பிறவி வீரனாய் இருந்தாலொழிய இப்படியொரு பாலகன் முன் வர முடியுமா?" -

இதைக் கேட்டுப் புன்முறுவல் செய்தான் விக்கிரமாதித்தன். பின் அவர்கள் கடிகைக்குச் சென்றார்கள். சோமயாஜி விவரித்த கல்வி கடிகைக்குள் ஆங்காங்கே மிகச் சிறப்பாக பயில்விக்கப் படுவதைக் கண்கூடாகக் கண்டார்கள். கீர்த்திவர்மன் சந்தேகப்பட்ட விஷயங்கள் நிவர்த்தி செய்யப்பட்டது போல் அங்கே யானையேற்றம், புரவியேற்றம், அவைகளைத் தன்மையறிந்து பழக்குதல், அவற்றை வைத்து போரிடல், அவைகளைத் தவிர ஆயுதங்களைச் செய்தல், அவற்றைக் கொண்டு போர் செய்தல், மற்போர் முறை ஆகியவற்றில் அந்தண மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதை அனைவரும் காண நேர்ந்தது.

---

* தென்னிந்திய சாசனங்கள் - பகுதி 4 - பக்கம் 10-12

புதியதோர் உலகத்தைக் கண்ட உணர்வுடன் கடிகையைவிட்டு வெளிவந்த விக்கிரமாதித்தன் அன்றைய தினத்தில் கடைசியாகச் செல்ல வேண்டிய இடமான கையிலாநாதன் ஆலயத்திற்குத் தேரில் புறப்பட்ட போது இரவு நேரம் துவங்கியிருந்தது. நகரை இதப் படுத்துவது போல் பனியானது மெல்லிய திரையை வீசியிருந்ததால் சுற்றுப்புறம் சற்றே குளிர்ந்திருந்தது. இந்த சீதோஷ்ண நிலைக்கு மெருகூட்டுவது போல் செங்கழுநீரோடை மலர்களும் சாலாபோகத்துச் சோலை மலர்களும் இப்புறமும் அப்புறமுமாய் மணத்தை வாரி இறைத்ததால் நகரில் நடமாடியவரது நாசிகள் இன்புற்றன. நோக்குமிடமெல்லாம் இறைவனிருப்பது போல் காணுமிடமெல்லாம் ஆலயங்கள் நிறைந்தது காஞ்சிமாநகர் ஆதலாலும், இருக்கும் ஆலயங்களுக்கெல்லாம் செல்வந்தர்கள் அளித்திருந்த தானங்கள் போதாதென்று பல்லவமன்னர்களில் நேரடி கண்காணிப்பில் பராமரிக்கப்பட்டு வந்ததாலும் அங்கே தனியார் இல்லங்களை விடவும் அரசினர் இருப்பிடங்களையும் விடவும் ஆலயங்கள் மிகச் சிறப்பான நிலையில் இருந்ததால் பொழுது சாய்ந்ததுமே பல்வேறு விளக்குகள் அங்கெல்லாம் ஏற்றப்பட்டு பொழுது சாயவில்லையோ என்ற பிரமையைத் தோற்றுவித்திருந்தது. ஒவ்வோர் ஆலயமும் ஒரு தேவருலகம் போல காண்போரைக் கிறங்க வைத்தது. அதே சமயம் அக்கிறக்கம் பவித்திரமானதாகவே இருக்கும் வகையில் அவ்வாலயங்களில் சைவ வைணவ மறையோர்கள் எழுப்பிய பாராயணங்கள் காற்றிலே கலந்து செவிகளில் தேனாக விழுந்தன. இத்தகையதோர் அழகினைப் பெற்றிருந்த ஆலயங்களைக் கண்டு ஆனந்தித்த விக்கிரமாதித்தன் தேவலோகத்திற்கு வந்துவிட்ட பிரமையையே அடைந்தான். அதை உறுதி செய்தது கையிலாயநாதன் ஆலயம்.

காலையிலே கருத்தைக் கவர்ந்த பரமேச்சுர விண்ணகரம் பூலோக வைகுண்டமாகத் தோன்றியதென்றால் தற்போது கண்முன்னே விரிந்த கையிலாயநாதர் ஆலயமோ கையிலாயம் போலவே காட்சியளித்தது. ராஜசிற்பியான ராஜசிம்மனின் கைவண்ணம் காஞ்சிநகர மக்களின் மெய்வண்ணத்துடன் சேர்ந்து ஒப்புயர்வற்ற பேரழகை அங்கே சமைத்திருந்தது.

நந்திதேவருக்கு முன்னால் விரிந்த சிற்பக்களஞ்சியம் விக்கிரமாதித்தனை மட்டுமின்றி லோகமாதேவியையும் ஆட்கொண்டது. சைவ பக்தையான அவளுக்கு அப்போதே அது போன்றதோர் அழகாலயத்தைச் சாளுக்கியர் தலைநகர் வாதாபியில் நிர்மாணிக்க வேண்டும் என்று தோன்றியது. மூவருமே சிற்பங்களால் கவரப்பட்டு முப்புறங்களில் நகர்ந்தார்கள். பரமேச்சுர விண்ணகரத்தில் ரசனை கெட்டு நின்ற கீர்த்திவர்மன் கூட இங்கே மனக்கிளர்ச்சியுற்றான். பெரும் பிரமையுடன் கவனித்து வந்த அவனுக்கு உட்பிராகாரச்சிற்பம் ஒன்று ஈர்த்தது. கண்களை அகலமாக்கிக் கொண்டு கவனித்தான். கருத்தைக் கவர்ந்தச் சிற்பம் கண்களால் அவனை அழைக்கவும் செய்தது.

கீர்த்திவர்மனுக்கு தலையே சுற்றியது.

⌘⌘⌘⌘⌘

3. பிரம்ம ஸ்ரீராஜர்

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய தூபம் கமிழ்ந்து கொண்டிருந்த அக்கையிலாயநாதன் ஆலயத்தில் சிற்ப விசித்திரங்களை ரசித்து வருகையில் அவ்விசித்திரங்களுக்குச் சிகரமாய் அமையும் விதத்தில் புடைச் சிற்பமொன்று கண்களை அசைத்துத் தன்னை அழைத்ததைக் கண்டபோது கீர்த்திவர்மனுக்குத் தலைச் சுற்றவே, தான் காண்பது ஒருவேளை கனவா என்பதைக் கண்டறியும் பொருட்டு ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்து விட்டு கனவில்லை நனவுதான் என்பதை உறுதி செய்து கொண்டு மனக்கிளர்ச்சி மிகுந்தவனாய் அழைத்த அச்சிற்பத்தை நோக்கிய போது சிற்பம் அசைவற்றுக் கிடந்தது. இரண்டு மூன்று முறை அதன் கண்களை உற்றுப் பார்க்கவும் செய்தான். அதன் கண்கள் சலனமற்று இருந்தன. ஒரு கணம் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னைக் கண்டு கண்களை அசைத்தது உண்மையாய் இருக்கையில் தற்போது எப்படி அது பொய்த்தது என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் சிற்பத்தை மீண்டும் நோக்கினான். காமக் கணை தொடுக்கும் காமனின் துணைவியான ரதி தேவியின் சிற்பம் அது. கல்லிலே வடிக்கப் பட்டிருந்தாலும் கலைவண்ணத்தை காட்டும் வகையில் காலத்தால் அழியாத மூலிகைச் சாற்றினால் வண்ணம் தீட்டப்பட்டிருந்தது. சிற்ப நேர்த்தியும் வண்ணச்சேர்க்கையும் அதையோர் ஜீவ சிற்பமாகவே அடித்திருந்தது. ஒரு வேளை தான் தான் ஏமாந்து விட்டோமா என்று எண்ணிக் கொண்ட அவன் திரும்பி நடக்கமுற்பட்ட போது சலங்கையொலி எழுந்தது. தற்போது கீர்த்திவர்மன் வியப்புக்குப்பதில் கோபமே அடைந்தான்.

மீண்டும் சிற்பத்தருகே போக முற்பட்ட போது பரிவார வீரர்கள் இருவர் வந்து - “இளவரசே, தங்களை மன்னர் உடனே அழைக்கிறார்” என்றதும் மனமில்லாமல் அவர்களுடன் சென்றான்.

உள்ளே கருவறையை அடுத்த அர்த்த மண்டபத்தில் நிலவறையொன்று இருந்தது. அதற்குள் விக்கிரமாதித்தனை அழைத்துச் சென்றிருந்தார் காரியஸ்தர் சோமயாஜி. அங்கே சென்ற கீர்த்திவர்மனுக்கு கண்கள் கூசின. நிலவறையில் சற்றே உள்ளடங்கிய கல் அறையொன்றில் முத்தும் மணியும் தங்கமும் வெள்ளியும் பட்டும் பீதாம்பரமுமாய் கணக்கற்ற குவியல்கள் திரண்டு கிடந்தன. கண்களைக் கூச வைக்கும் அந்நிதிக் குவியலைக் கண்டு அவன் வாயைப் பிளந்த போது விக்கிரமாதித்தன் அவனை வினவினான்.

“கீர்த்திவர்மா, நீ இங்கே காணும் செல்வங்கள் பல்லவர்களின் செல்வக்குவியலில் ஒரு பகுதி தான். இது இவ்வாலயத்திற்கு உரியது. என்ன செய்யலாம்?” -

கீர்த்திவர்மன் அவசரமான குரலில். “இங்கிருக்கும் செல்வத்தைக் கொண்டு ஒரு நகரையே ஸ்தாபிக்கலாம் தந்தையே” என்றான்.

“அதிருக்கட்டும். இதை என்ன செய்யலாம் சொல்?” - கேட்டான் விக்கிரமாதித்தன்.

“செய்வதென்ன? நம் தலைநகருக்கு நாளையே ஏற்றி அனுப்பி விட வேண்டியது தான்” -

கீர்த்திவர்மன் இவ்வாறு சொன்னதும் “சரி போகலாம்” என்று கூறி புறப்பட்டான் சாளுக்கிய மன்னன்.

மன்னனின் உள்ளத்தில் உள்ளது இன்னதென்று யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. காரியஸ்தர்

அதைப் பற்றிக் கவலைப்படவில்லை அது அனாவசியம் என்பதால். கீர்த்திவர்மனுக்கு கவலை இல்லைதான். ஏனென்றால் தற்போது அவனது எண்ணமெல்லாம் முத்தைப் பற்றியதாகவோ மணிகளைப் பற்றியதாகவோ இல்லை. கண்ணசைத்து அழைத்த சிற்ப விசித்திரம் பற்றியதாகவே இருந்தது. அதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று விரும்பினான். அதற்கேற்பவே மன்னன் கருவறையில் இறைவழிபாட்டில் சற்றே திளைத்த போது அங்கிருந்து நழுவினான் கீர்த்திவர்மன். புதிர் சிற்பத்தருகே சென்றான். சிற்பம் மட்டும் தான் இருந்தது. முன்போல் சலங்கை ஒலியும் எழவில்லை. அதற்கான தடயம் கூடத் தென்படவில்லை. மிகவும் வெறுத்தவனாய் சிற்பத்திற்கு வெகு அருகே சென்ற போது அச்சிற்பத்தின் கைகளில் ஏதோ வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். அது ஓர் ஓலைச் சுவடி. பெரிதாக எதையும் எதிர்ப்பார்க்காமல் அதையெடுத்தான். அதில் இரண்டு வார்த்தைகள் இருந்தன. கீர்த்திவர்மனுக்கு வெறுப்பு அதிகரித்தது. சம்பந்தமில்லாத அவ்வார்த்தைகளைக் கண்ட அவன் எதையும் ஊகிக்க முடியாதவனாய் சுவடியை அங்கேயே கிழித்தெறிந்து விட்டு அகன்றான். விரைவிலேயே அனைவரும் அரண்மனையை அடைந்தார்கள்.

அன்றிரவு முழுவதும் கீர்த்திவர்மன் சரிவர உறங்கவில்லை. சிற்பப்புதிர் அவனை அலைக்கழித்தது. அதே சமயம் தான் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதால் புரண்டபடியே இரவைக் கழித்தான்.

மறுநாள் பல்லவ அவையில் சாளுக்கிய விக்கிரமாதித்தன் கீர்த்திவர்மனுடன் அமர்ந்தான். அவனுடன் சாளுக்கிய அதிகாரிகளும் பிரபலஸ்தர்களும்

அமர்ந்து கொண்டார்கள். விக்கிரமாதித்தனின் ஆணைப்படி அவைக்கு அழைத்து வரப்பட்டார் பல்லவரின் பேரமைச்சரும் விக்ஞாபதியுமான பிரம்மஸ்ரீராஜர் *.

கைதிபோல் அழைத்து வரப்பட்டாலும் பல்லவப்பேரமைச்சர் கம்பீரத்தை இழக்காதவராகவே உள்ளே பிரவேசித்தார். சீரும் திருப்பொலிவும் பொருந்தியவர் என்றும், பிரகஸ்பதியைப் போன்றவர் என்றும், உருவத்தாலும் நீதியாலும் அழகுடையவர் என்றும், பிரம்மக்ஷத்திரிய குணங்கள் நிரம்பியவர் என்றும், அறிஞர்களில் சிறந்தவர் என்றும் காசக்குடி செப்பேடுகளில் வர்ணிக்கப்பட்ட பேரமைச்சர் பிரம்மஸ்ரீராஜரின் தோற்றம் அக்காலத்துச் சாணக்கியரை நினைவு படுத்துவதாக இருந்தது. காரியஸ்தரான ஜேஸ்டபாதரையும் கடிகைத் தலைவர் தரணிகொண்ட போசரையும் நினைவு படுத்துபவரைப் போல் ஏறக்குறைய அவர்களது பிராயத்தை ஒத்தவராகவே காணப்பட்ட அவர் எளிய கோலத்தில் இருந்தாலும் பார்வையில் வீசிய சீரிய ஒளியினால் பெரும் தோரணையுடனே விளங்கினார். நந்திவர்மனைப் போலவே சிறந்த வைணவ பக்தராதலால் அவரது நெற்றியில் ஸ்ரீசூர்ணக்காப்பு பளிச்சிட்டது. உள்ளே நுழைந்ததும் அவையோர் அனைவரையும் ஒரு முறை நோக்கினார். முகத்தில் எந்த விதமானச் சலனமும் இல்லாமல் விக்கிரமாதித்தனை நோக்கினார்.

அவரது நெஞ்சுரம் விக்கிரமாதித்தனைஅசர வைத்தது. இருப்பினும் அதை அவன் வெளியே காட்டாமல், “பேரமைச்சரே, இங்கே வந்த பின் அனைவரையும் கைது செய்ய ஆணையிட்ட நான் உம்மை மட்டும் கைது செய்யும் படிச் சொல்லவில்லை. ஏன் தெரியுமா?” - என்று கேட்டான்.

---

* இவர் நந்திவர்மனின் விக்ஞாபதியாக (கட்டளையை நிறைவேற்றுபவர்) இருந்ததாக நந்திவர்மன் காலத்து காசக்குடி செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

அவர் பதிலேதும் சொல்லாததால் அவனே கூற முற்பட்டு "உம்மைக் கைது செய்யும் தகுதி எனக்கில்லை என்று நினைத்தேன்"-என்றான்.

"அது உன் பெருந்தன்மையாக இருக்கலாம். ஆனால் காஞ்சி எப்போது உன் வசப்பட்டதோ அப்போதே இங்குள்ள அனைவரும் கைதாகி விட்டதாகத் தான் நினைக்கிறேன்" என்று தெளிவான குரலில் தெரிவித்தார் பேரமைச்சர்.

இதைக் கேட்டுப் புன் முறுவல் கொண்ட விக்கிரமாதித்தன். "ம்! பெருந்தன்மைக்கு இங்கே மதிப்பு கிடையாது போலிருக்கிறது. போகட்டும்" என்று பாசாங்கு காட்டிவிட்டு " ஒரு துளி ரத்தமும் சிந்தாமல் இக்காஞ்சியைக் கைப்பற்றியிருக்கிறேன். அதற்கு என்ன சொல்கிறீர்?" என்று கேட்டான்.

"நீ சொல்வதில் முதல் பகுதி உண்மை" -என்றார் பிரம்ம ஸ்ரீராஜர்.

"அதாவது" -

"காஞ்சியை நீ கைப்பற்றியிருப்பதாகச் சொல்வது சரியில்லை"

"உன் மன்னனின் அரியணையில் அமர்ந்திருக்கிறேனே, இதற்கென்ன அர்த்தம்?"

"திறந்து கிடக்கும் கோட்டையில் நுழைவதும் காலியான அரியணையில் அமர்ந்தும் கைப்பற்றப்பட்டதற்கு அத்தாட்சிகள் அல்ல"

"அப்படியானால் காஞ்சி தானமாக ஈயப்பட்டதா? விக்ஞாபதி! ஷத்திரியர்கள் எதையும் தானமாகப் பெறமாட்டார்கள்"

"சாளுக்கிய மன்னா, நந்திவர்மனும் ஷத்திரியன் தான். பல்லவ மன்னர்கள் மானத்தைத் தானமாகத் தரமாட்டார்கள். ஆகவே தானம் என்ற பேச்சிற்கே இடமில்லை"

"சரி. உங்களை யார் கோட்டை வாசல்களைத் திறக்கச் சொன்னார்கள்? மூடிக்கொண்டு போரிடுவது தானே?"

"விக்கிரமாதித்தா, நாங்கள் போரிடாததற்கு முதல் காரணம் நந்திவர்மன் - பல்லவ மல்லன் காஞ்சியில் இல்லாதது,"

"ஏன், அவனைத்தவிர வேறு யாருக்கும் இங்கே போரிடத்தெரியாதா?

" தெரியும், ஆனால் தெரிந்ததையெல்லாம் அவர்கள் தங்கள் இஷ்டப்படி செய்து விடுவதில்லை"

"நான் இக்காஞ்சியை அழிக்க முற்பட்டால் கை கட்டி நிற்பார்களா?"

"இக்கேள்வியிலியே இரண்டாவது காரணமும் அடங்கிவிட்டது."

"அதாவது" -

"மன்னர் இல்லாத நிலையில் தங்கள் வீரத்தைக் காட்ட முற்பட்டு காஞ்சியின் அழிவை வரவேற்க யாரும் விரும்பவில்லை."

"உங்கள் நிலை எதுவானாலும் இப்போது காஞ்சி அரியணையில் அமர்ந்திருப்பது சாளுக்கிய மன்னன் என்பது உண்மைதானே?"

"விக்கிரமாதித்தா, இங்குள்ள அனைவரது இதயாசனத்திலும் அமர்ந்திருப்பது நந்திவர்மன் தான்."

“அங்கே அமர்ந்து கொண்டு அரசாண்டு விட முடியுமா?”

“அங்கே அமர்ந்தால் தான் அரசாளவே முடியும். அதைச் சாதிக்காமல் எந்த மன்னனும் அரியணையில் நிலைக்க முடியாது.”

“எனக்கு முன்னால் இப்படிப் பேச உமக்கு எவ்வளவு துணிச்சல்?”

“நன்றி”

“எதற்கு?”

“துணிச்சலை அங்கீகரித்ததற்கு”

“இதனால் நீங்கள் மகிழ்ந்து விடுவதற்கில்லை. ஏனென்றால் உமக்கு நான் அளிக்கப்போவது தண்டனை தான்.”

“காஞ்சி உன் வசப்பட்டதே எனக்கொரு தண்டனை தான்”

“அப்படியா? நல்லது. இன்று ஒரு நாள் அவகாசம் தருகிறேன். நாளை இந்நேரத்திற்குள் நீர் காஞ்சியை விட்டு அகன்று விட வேண்டும்.”

“நன்றி விக்கிரமாதித்தா. என் உத்தேசமும் அது தான்.”

“போய் உம் மன்னனோடு சேர்ந்து கொள்ளுங்கள்.” - என்று கூறியதும் அமைச்சர் அகன்றார்.

அடுத்த சில நிமிடங்களில் அங்கு அழைத்து வரப்பட்டார் கோட்டைத் தளபதி.

கோட்டைத் தளபதி சற்றே வயதானவர் தான். நந்திவர்மனைக் கண்டெடுத்து காஞ்சிக்கு அழைத்து வரப்பட்ட போது காஞ்சியிலே அவனை வரவேற்று உபசரித்து அன்று முதற்கொண்டே பல்லவப் படைகளில் பிரதான சேனைத் தலைவராய் பல போர்களில் பங்கேற்று போர்க் களங்களிலேயே வாழ்க்கையின் பெரும் பகுதியை ஒட்டி பிறகுக் கோட்டைத்தளபதி பொறுப்பேற்றிருந்த பல்லவடி அரையரிடம் கறுப்பு நிறம் அனுபவ முத்திரை நன்றாகவே பளிச்சிட்டது.

திடகாத்திரமான தேகமும் முறுக்கிவிடப்பட்ட மீசையும் அவரை கடோத்கஜனைப் போல் அடித்திருந்தன. பேரமைச்சரைப் போல் அல்லாமல் அவர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தார். ஏறக்குறைய வலையில் சிக்கிய வயோதிகச் சிங்கம் போல் காட்சியளித்த அவரது கண்களில் கோபம் கொப்பளித்தது.

“சாளுக்கியரின் பண்பு இதுதானா? சாத்வீக நிலையில் பணியும் தளபதியைக் கூட சங்கிலிகளால் பிணைப்பதும் அச்சங்கிலிப் பிணைப்பை நீக்காமல் குற்றவாளி போல் இழுத்து வருவதும் தான் சாளுக்கியர்கள் வழக்கமா? என்ன குற்றத்திற்காக இந்த தண்டனை?” -என்று முழங்கும் குரலில் கேட்டார் தளபதி.

இருக்கும் நிலையை உணர்ந்தும் கூட துளி அச்சமும் இன்றி அவரப்படி முழங்கியதைக் கண்ட விக்கிரமாதித்தன் “தளபதி யமப்பேர்விழிதான்” என்று சொல்லி கொண்டு, “அவசரப்பட்டு வார்த்தைகளை உதிர்ப்பது தான் தளிபதிகளின் வழக்கமா?” என்று கேட்டு விட்டு “இப்போது தான் பேரமைச்சர் என் பெருந்தன்மையைப் பாராட்டி விட்டுப் போனார். அதற்குள் என் பண்பு பற்றி நீங்கள் குறை சொல்கிறீர்கள்” என்றான்.

“உள்ளதைச் சொல்லி உண்மையைக் கேட்கிறேன். அவ்வளவு தான்” - என்றார் தளபதி மசியாமல்.

“தளபதி, உங்கள் பேரமைச்சர் சிறந்த படிப்பாளி. வயோதிகர். அதோடு மறையவர். ஆண்டவனின் தொண்டர். அவரைக் கைது செய்வதோ அவமதிப்பதோ சரியல்ல” என்றான் விக்கிரமாதித்தன்.

“அப்படியானால் நான் ஒரு...........”

“மீண்டும் அவசரப்படாதீர்கள். அமைச்சருக்கு நீங்கள் எந்த விதத்திலும் குறைந்தவரல்ல. அவருக்கும் உமக்கும் உள்ளது ஒரே ஒரு வித்தியாசம் தான்”

“என்ன அது?”

“உமது பராக்கிரமம். நீர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு ஆலோசனை சொல்கிறவரல்ல. வாளையும் வில்லையும் ஏந்திப் போர் செய்பவர். எதிரிகளை முறியடிக்கும் குணம் உமது ரத்தத்தில் ஊறியிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் நீர் ஓர் ஆபத்தான சிங்கம். மானையும் மயிலையும் அழைத்து வருவது போல் சிங்கத்தை யாரும் அழைத்து வருவதில்லை. அதைச் சங்கிலியால் பிணைத்துத் தான் கொண்டு வருவது வழக்கம். அது பெருமைக்குரிய விஷயமே தவிர கௌரவக் குறைவானதல்ல” என்று விளக்கினான் விக்கிரமாதித்தன்.

“ஐயா. என்னால் ஆபத்து விளைவிக்கப்படும் என்றால் கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டிருக்காது” -என்று தளபதி.

“ஆபத்து எப்படி வரும் யாருக்கு வரும் என்று திட்டமாகச் சொல்லமுடியாது. முன்னெச்சரிக்கை நல்லது.”

விக்கிரமாதித்தனின் விளக்கம் தளபதிக்குப் போதுமானதாக இருந்ததால் அது குறித்து மேலும் பேசாமல்

"என்னை அழைத்த காரணம் என்ன?" என்று வினவினார்.

"உம்மைப் பணிய வைக்கத் தான்" சாதாரணமாகச் சொன்னான் விக்கிரமாதித்தன்.

"பணிய வைக்கவா?"

"ஆம். நான் இங்கே பிரவேசம் செய்து நாட்கள் ஐந்து ஓடிவிட்டாலும் எனக்குப் பணியாமல் இருக்காது நீர் ஒருவர் தான் என்று சொன்னார்கள். உமது உறுமல்தான் அதிகமாக இருக்கிறது என்றார்கள். எனக்கு அது உதவாது."

"பணிவது எனக்குப் பிடிக்காது."

"பணிய வைக்க எங்களிடம் பலமுறைகள் இருக்கின்றன."

"சித்திரவதையைச் சொல்கிறீர்களா?"

"தளபதி, சித்திரவதையைப் பற்றிப் பேசுவது வேறு. அனுபவிப்பது வேறு."

"மன்னன், என் உயிர் நிலையானதல்ல. நிச்சயமாய் போகப் போகும் உயிருக்காகப் பணிவைக் காட்டி தலைக் குனிந்து நிற்பதை விட எந்த முறையில் இருந்தாலும் தலைநிமிர்ந்திருக்க வேண்டும் என்பது தான் என் தீர்மானம்."

"இதைக் கண்ட பிறகுமா?" என்று கேட்ட விக்கிரமாதித்தன் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டினான்.

கண்டார் தளபதி. அவரது தலை தானாகக் கவிழ்ந்தது.

⌘⌘⌘⌘⌘

4.அரையரின் விவரணம்

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்க்கப்பட்டவனான கண்ணபிரான் பாண்டவர்களுக்காகத் தூது சென்றபோது கௌரவர் அவையில் அனைவரும் மரியாதை காட்டிய போதும் வணங்காமுடியா தனது ஆணவமும் பிடிவாதமும் பிரதிபலிக்கும் வகையில் மிடுக்கைக் காட்டிய துரியோதனனை நினைவு படுத்துவது போல் பணிவைக் காட்ட மறுத்து அதற்காக எந்தச் சித்திரவதையும் அடையத் தயாரென உணர்த்தி வீறு கொண்ட சிங்கம் போல் நின்ற பல்லவடி அரையர் விக்கிரமாதித்தன் சுட்டிக் காட்டிய பொருளைக் கண்டதும் தலையைத் தாழ்த்தினார். உடலும் நெஞ்சமும் குறுகின. இதயம் கொதித்தது.

வீராவேசம் பேசியவர் விளங்கிழை போல் அடங்கி நின்றதைக் கண்ட விக்கிரமாதித்தன் புன் முறுவல் கொண்டான்.

“தளபதி” -என்றழைத்த அவன் “இவை என்ன என்பது தெரியுமல்லவா?” கேட்டான்.

“தெரியும்” - என்றார் தளபதி ஏதோ குற்றம் புரிந்தவர் போல்.

“உங்கள் பல்லவ ராஜசின்னங்களான கடுமுக வாத்தியமும் சமுத்திரகோஷமும் தான் இவை. இப்பேரிகைகள் ஒலிக்கப் பட்டால் சமுத்திரமே கோஷ

மிடுவது போல் இருக்கும். * ஆகவே தான் இவற்றுக்கு இப்பெயர். இல்லையா?"

"ஆமாம்"

"அந்த காலத்தில் அரசர்கள் ராஜ்யத்தின் கௌரவச் சின்னமாக 'காவல் மரம்' என்ற ஒன்றை வைத்திருந்தார்கள். எதிரி நாட்டு மன்னன் அதை வெட்டி விட்டாலோ அல்லது அதில் எருதைக் கட்டி விட்டாலோ அது பேரவமானமாகக் கருதப்படும். அது தமிழரது வழக்கம். இங்கே ஏறக்குறைய பல்லவமன்னன் இந்தச் சமுத்திர கோஷத்தை அக்காலத்து காவல் மரத்தை நினைவு படுத்துவது போல் கௌரவச் சின்னமாக வைத்திருந்தான். அவனால் பாதுகாக்கப்பட வேண்டிய இக்கௌரவச் சின்னம் அரசன் இல்லாத போது கோட்டைத்தளபதியான உம்மால் காக்கப்பட்டிருக்க வேண்டும். காத்தீரா? இதைப்பற்றி நீண்ட நாட்களாகவே வாதாபியில் இருந்தபோது கேள்விப்பட்டிருந்தேன். எந்த பல்லவ மன்னனும் உருவாக்காத கௌரவ அடையாளம் ஒன்றை நந்திவர்மன் உருவாக்கப்பட்ட இச்சின்னத்தைக் காக்க வேண்டிய நீர் காக்கவில்லை. கைப்பற்ற விரும்பிய நானோ கைப்பற்றியிருக்கிறேன். இந்த நிலையில் நீர் பணிய மறுப்பது அர்த்தமுள்ள காரியம் தானா? சமுத்திர கோஷத்தைப் பறிகொடுத்ததை விட வேறென்ன பெரிய சித்திரவதையை நீர் அடையமுடியும்?" என்று வார்த்தைகள் ஒவ்வொன்றையும் அம்புபோல் தொடுத்து தளபதியை உற்று நோக்கினான் விக்கிரமாதித்தன்.

---

*'கடுமுகவாதித்ர ஸமுத்திர கோஷாபிதான' - கேந்தூர் சாசனம்

'கடல்போல் முழங்கும் குரங்கடுவாய்ப் பறையுடைப் பல்லவர் கோன்' - பெரிய திருமொழி 2-10-9

என்ன சொல்வது என்று தளபதி விழித்தார். ஆனால் அவர் சொல்ல வேண்டியதை குனிந்த அவரது தலையே உணர்த்தி விட்டதால் உள்ளுக்குள் நகைத்துக் கொண்ட விக்கிரமாதித்தன் கீர்த்திவர்மனிடம் வினவினான்.

“கீர்த்திவர்மா, இந்த முரசுகளை என்ன செய்யலாம்?”

“இங்கே கிழித்தெறிந்து கொளுத்திவிடலாம்” -என்று படபடவென வார்த்தைகளை உதிர்த்தான் கீர்த்திவர்மன். யோசித்து இதைச் சொன்னதாகத் தெரியவில்லை. அதோடு அவனது மனமும் எண்ணமும் பாதி தான் அவையில் இருந்தன. மீதி கையிலாய நாதன் ஆலயச்சிற்பத்திலேயே நின்றிருந்தன.

இந்த நிலையில் சற்றே தெளிவடைந்தார் தளபதி. சமுத்திர கோஷம் பறிபோனதை விட அது தன் கண்களுக்கு முன்னால் கிழிக்கப் படக் கூடிய நிலையை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே மீண்டும் தன் சுபாவத்தைக் காட்ட முற்பட்டு, “சாளுக்கிய மன்னா, இந்த சமுத்திர கோஷத்தைக் கைப்பற்றியதாகச் சொல்லும் நீ இதை அழித்து விட்டு சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் சரித்திரம் அதோடு முடிந்துவிடாது-” என்றார்.

“என்னாகும்?” வினவினான் விக்கிரமாதித்தன் வினயமாக.

“பழிக்கும் பழி என்ற வகையில் பரிகாரம் செய்யப்படும்.”

“அது எதிர்கால சரித்திரம். நாம் இப்போது நிகழ்கால சரித்திரத்தைப் பற்றிப் பேசுவோம்”

“பேசுவதற்கு என்ன இருக்கிறது மன்னா? நடக்கக் கூடாதவைகள் தான் நடந்து விட்டனவே!”

“நடந்து விட்டது தான். ஆனாலும் சில சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன.”

“சந்தேகங்களா?”

“ஆம் தளபதி. நானும் எனது படைகளும் இக்காஞ்சியில் நுழைந்தது உங்களுக்கு வியப்பாக இல்லையா?”

“இல்லை மன்னவா.”

“எப்படி?”

“நீங்களும் எங்களது பெரும்படையும் திடீரென காஞ்சியில் நுழைந்து விடமுடியாது. ஓரளவிற்கு வேண்டுமானால் உங்களது வரவு ரகசியதாக இருந்திருக்கலாம். ஆனால் பல்லவ நாட்டு எல்லைக்குள் நுழைந்தபின் அவ்வாறு இருக்க முடியாது. எல்லோருக்கும் தெரிந்து தான் முன்னேறிவரமுடியும். நீங்கள் காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது எங்களுக்கும் தெரியும். எந்த நேரத்திலும் உங்களை எதிர்பார்த்துக்கொண்டு தான் இருந்தோம்.”

“அரையரே, நாங்கள் படை வீரர்களாக அணிவகுத்து வரவில்லை. எங்கள் படைவீரர்கள் வணிகர்களாகவே பல்லவ நாட்டில் புகுந்தார்கள். ஆயுதங்களை ரகசியமாகச் சேர்த்தார்கள். மெல்ல மெல்ல காஞ்சியில் சமீபத்திற்கு வந்தார்கள். இக்காரியம் சுமார் மூன்று மாதங்களாக நடந்திருக்கிறது. அப்படி இருக்க நீர் எப்படி எங்களை எதிர்ப்பார்த்திருக்க முடியும்?”

“மன்னவா, உங்கள் முயற்சியும் ஊடுறுவலும் முதல் இரண்டு மாதங்களில் எங்களுக்குத் தெரியவில்லையே தவிர மூன்றாவது மாதத்தில் அதுவும் குறிப்பாக உங்கள்

படைகள் வணிகர்கள் வேடத்தில் காஞ்சியை நெருங்கிவிட்டபோது அறிந்து கொண்டோம்”

“எப்படி?”

“என்ன தான் நீங்கள் வணிகர்கள் வேடம் போட்டாலும் உங்களது நடமாட்டம் வணிக வட்டாரங்களில் சந்தேகத்தைத் தராமல் இருந்து விடுமா? வியாபார வட்டாரங்களில் திடீரென வணிகர்களின் எண்ணிக்கை அதிகமாவது இங்குள்ள வணிகர்களுக்குத் தெரியாமல் போய் விடுமா? அதுவும் உங்கள் படைவீரர்கள் விற்க முற்பட்ட பண்டங்கள் பல்லவ நாட்டு எல்லைக்குள் கிடைப்பதில்லை என்று ஒன்றே போதாதா உங்களைக் காட்டிக் கொடுக்க? அதோடு உங்கள் வீரர்கள் வணிகர்களாக மாறினார்களே தவிர இந்நாட்டு மொழியைப் பேசவில்லையே! இப்படித் திடீரென வணிகர்கள் எண்ணிக்கை பெருகுவதும், வெளிநாட்டுப்பண்டங்கள் வருவதும், அவற்றை விற்பவர்கள் பெரும்பாலும் வேற்றுமொழி பேசுவதும் எங்கள் ஒற்றர்படையை விழிப்படைய வைத்து அவர்கள் சாளுக்கிய வியாபாரிகளாக நடித்தார்கள். உண்மைகளைப் புரிந்து கொண்டார்கள்”

“என்ன வென்று?”

“மிகவும் சாமர்த்தியமாக நீங்கள் காஞ்சியை நெருங்குவதைப் புரிந்து கொண்டோம். காஞ்சியில் உள்ள நிலைமையை உங்கள் வீரர்கள் அறிய முற்படுவார்கள். சரியான தருணம் வந்ததும் நீங்கள் வந்து சேர்ந்து கொள்வீர்கள். ஒரே இரவில் வணிகர்கள் அனைவரும் படைவீரர்களாக அணிவகுத்து விடிவதற்குள் கோட்டையை அடைந்து விடலாம். அதற்குப் பிறகு போர் அல்லது முற்றுகை என்று ஈடுபடலாம். இது தான் உங்கள் திட்டம் என்பதைப் புரிந்து கொண்டோம். நிலைமையை நன்றாக அறிந்து கொண்டீர்கள். இக்கோட்டையை எளிதில் பிடித்து விடலாம் என்பதையும்

புரிந்து கொண்டீர்கள். ஆகவே தான் யானைகளையும் புரவிகளையும் கூட மிகச் சொற்பமாக கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. நீங்கள் கொண்டு வந்த யானைகளும் புரவிகளும் கூட வணிகர்களோடு ஆரம்பத்திலேயே கொண்டு வந்ததாகத் தான் இருக்கும். நீங்களும் உங்கள் புதல்வரும் கூட கடந்த ஒரு மாதமாக காஞ்சியின் சமீபத்தில் தான் ரகசியமாக உறைந்திருக்க வேண்டும். ஆகவே தான் ஒரே இரவில் அணிவகுத்து இங்கு நெருங்க முடிந்திருக்கிறது.”

“நாங்கள் உங்கள் எல்லைக்குள் இருப்பதை ஒரு மாதத்திற்கு முன்பே அறிந்து கொண்டு விட்டதாகச் சொன்னீர்களே. நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? நாங்கள் வந்ததுமே கோட்டைக் கதவுகளைத் திறந்ததைப் பார்த்தால் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறதே! தற்காப்புப் போரைக் கூட நடத்த நீங்கள் முயலவில்லை. ஏன்?”

“முடிவு திட்டமாகத் தெரிந்திருக்கும் போது வீண் காரியங்களை மேற்கொள்ளாமல் இருப்பது தான் உத்தமம். நீங்கள் பல்லவ நாட்டில் ஊடுறுவியதை ஒரு மாதத்திற்கு முன்பே அறிந்திருந்தாலும் அப்போதே நாங்கள் எதுவும் செய்ய இயலாத நிலையில் தான் இருந்தோம். ஏனென்றால் அந்த சமயத்தில் பல்லவ நாட்டுத் தென் எல்லையில் பெரும் போர் நடைபெறும் இக்கட்டு உண்டானதால் நந்திவர்மர் அங்கே போக வேண்டியவரானார். தொடக்கப் போர்களில் பாண்டியரிடம் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, பூவலூர், கொடும்பாளூர், பெரியலூர் ஆகிய இடங்களில் பாண்டியன் வெற்றிபெற்றான். * பெரும்

* இந்த இடங்கள் புதுக் கோட்டை மாவட்டத்தில் இருந்த ஊர்களாகத்தெரிகின்றன.

பக்கம் 176 பல்லவர் வரலாறு

சேதம் ஏற்பட்டது. நந்திவர்மர் கலங்கி விடவில்லை. காஞ்சியில் இருந்த அனைத்துப் படைகளையும் திரட்டி வரும் படி கட்டளையிட்டார். காஞ்சிக்கு ஆபத்து வரும் என்று அவர் எதிர்ப்பார்க்கவில்லை. நானும் ஒற்றர்களும் உங்களது ஊடுறுவல் பற்றியும் சொன்னோம். வேறொரு மன்னனாக இருந்திருந்தால் அலறிப் புடைத்துக் கொண்டு காஞ்சிக்கு ஓடி வந்திருப்பான். பல்லவ மல்லர் அசரவில்லை. கண் முன்னே இருக்கும் எதிரியை விட்டுவிட்டு வருங்கால எதிரிக்காக கவலைப்படுவது அர்த்தமற்றது என்றும் காஞ்சியைக் காக்க வைகுந்த நாதன் இருக்கிறான் என்று சொல்லிவிட்டு பாண்டியனை எதிர்க்க புறப்பட்டார் அவரும் அவரது தோழனைப் போன்றவனுமான படைத் தலைவன் உதயசந்திரனும் பெரும் படைகளுமாய் துவக்கிய போர் புத்துயிர் பெற்றிருக்கிறது. நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம், மண்ணைக்குறுச்சி, சூரவழுந்துர் * ஆகிய இடங்களில் பாண்டியனைப் பல்லவமல்லர் புறங்கண்டதாக வெற்றிச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த அரிய சந்தர்ப்பத்தில் தான் தங்களது சாமர்த்தியமான காஞ்சிப் பிரவேசம் நடந்திருக்கிறது."

"அப்படியானால் கோட்டைக் கதவுகளைப் போர் ஏதும் செய்யாமல் திறக்கச் செய்யும் படிக் கூறியதும் நந்திவர்மன் தானா?"

"இல்லை. தங்களை பிரவேசம் பற்றி அவருக்கு இனிமேல் தான் தெரியவேண்டும். கோட்டைக்கதவு திறக்கப்பட்டது மும்மூர்த்திகளின் ஆலோசனைப்படிதான்"

"மும்மூர்த்திகளா?"

---

* பக்கம் 140 ஆழ்வார்கள் காலநிலை

“ஆம். பல்லவப் பேரமைச்சர் பிரம்ம ஸ்ரீராஜர், கடிகைத் தலைவர் தரணிகொண்ட போசர், காரியஸ்தரான ஜேஸ்டபாத சோமயாஜி ஆகியோரை நந்திவர்மன் மும்மூர்த்திகள் என்று தான் அழைப்பார். அச்சான்றோர்களின் கட்டளைப்படிதான் நான் நடந்து கொண்டிருக்கிறேன்.”

விவரணங்களைக் கேட்ட விக்கிரமாதித்தன் பெருமூச்செறிந்தான். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு தளபதியை நோக்கி, “அரையரே, நானிங்கே வந்து விட்டதால் நீர் வெளியேற வேண்டியதாகிவிட்டது. நாளை பொழுது விடிவதற்குள் காஞ்சியை விட்டு நீரும் போய் விட வேண்டும்” என்றான்.

“காஞ்சியை விட்டு அகல்வதா? அதைவிட என் உயிரை அகற்றிவிடு மன்னா” என்றார் சேனாதிபதி.

“அதை நந்திவர்மன் செய்யட்டும். அவனிடம் போய்ச் சேருங்கள்” - என்று கூறிய விக்கிரமாதித்தன் அவையை விட்டு அகன்றான்.

அவை கலைந்ததில் யாருக்கு இல்லையென்றாலும் கீர்த்திவர்மனுக்கு மட்டும் பெரும் சந்தோஷமாக இருக்கிறது. அதுவரையில் ஏதோ விலங்குகளால் பிணைக்கப் பட்டவனைப் போல் அவஸ்தைப் பட்ட அவன் தற்போது விடுதலையடைந்தவனாய் பள்ளியறைக்குச் சென்றான்.

பள்ளியறையில் அவன் படுத்தது பஞ்சணை என்றாலும் முள்ளின் மீது படுத்திருந்தவனைப் போலவே காணப்பட்டான். சிற்பப்புதிர் அவனை வாட்டியெடுத்தது. கவலைப்பட வேண்டிய விஷயங்கள் நிரம்ப இருந்த போது அவன் தேவையில்லாத விஷயத்திற்குக் கவலைப்பட்டான். அவனைப் பொறுத்தவரை அவன் தெரிந்து கொள்ள

விரும்பிய விஷயங்கள் நிரம்ப இருந்தன. பார்க்க விரும்பிய விஷயங்கள் பல இருந்தன. அவற்றைப் பற்றியெல்லாம் காரியஸ்தர் சோமயாஜியிடம் கேட்டு அறிந்து கொள்ள முடியாதவனாய் அவன் இருந்தான். விஷயங்கள் அப்படிப் பட்டவைகளாய் இருந்தன. இதற்கிடையில் கையிலாய நாதன் கோயில் சிற்பத்தருகே கிடந்த ஓலைச் சுவடி பற்றியும் அதிலிருந்த வார்த்தையைப் பற்றியும் அவனது சிந்தனை திரும்பியது. அதைப் பற்றி யாரிடமாவது விசாரித்தால் என்ன என்றெண்ணினான்.

தன் எண்ணம் சரியென்று பட்டதும் அன்று பொழுது சாய்ந்த நேரத்தில் புறப்பட்டான் கீர்த்திவர்மன். தன்னை இளவரசனாகக் காட்டிக் கொள்ளாமலும், பரிவாரங்கள் எதுவும் இல்லாமல் சாதாரணமாகவே யானையொன்றில் புறப்பட்டான். வழியில் இரண்டொருவரை ஓலைச் சுவடியில் இருந்த பெயரைச் சொல்லி வினவினான். அவன் உச்சரித்த பெயரைக் கேட்டதும் அவனை ஏதோ வினோதமான மனிதனைப் பார்ப்பது போல் பார்த்து விட்டு பதிலேதும் சொல்லாமல் போய் விட்டார்கள். வேறு சிலரும் கூட அவனை ஏற இறங்கப் பார்த்து விழியைப் பிதுக்கிய வண்ணம் அகன்றார்கள் பதில் கூறாமல். கீர்த்திவர்மனுக்கு வியப்பும் கோபமும் உண்டாயிற்று.

பரமேச்சுர விண்ணகரத்தை அடைந்தான். ஆலயக்காவலர்களை மூர்க்கமாக விலக்கி விட்டு உள்ளே நுழைந்து “யாரது, கூப்பிடுங்கள் பூசாரியை” என்று இரைந்தான்.

அவனுக்கு முன்னால் வந்து நின்ற காவலாளி ஒருவன் “மன்னிக்க வேண்டும். இது ஆலயம். இங்கு இரைச்சல்களோ அதிகாரமோ கூடாது” என்றான்.

ஏற்கனவே கோபத்தில் இருந்த கீர்த்திவர்மன் காவலாளியின் எச்சரிக்கையைப் பற்றிக் கவலைப்படவில்லை. "டேய், நீ இப்போது பூசாரியைக் கூப்பிடுகிறாயா இல்லையா?" என்று மிரட்டினான்.

"ஐயா, இது விண்ணகரம்" என்றான் காவலாளி.

"அதற்கென்ன?"

"இங்கே பெருமாள் கைங்கரியம் செய்பவர்கள் அர்ச்சகர்களே தவிர பூசாரிகள் அல்ல" என்று சுட்டிக் காட்டினான்.

"எவனாய் இருந்தால் என்ன? கூப்பிடு"

காவலாளி மேற்கொண்டு அவனிடம் விசாரிக்கவில்லை. நெறிமுறைகளை மதிக்காதவனை அந்த இறைவனே பார்த்துக் கொள்ளட்டும் என்று கருதியவனாய் உள்ளே போய் பிரதான அர்ச்சகரை அழைத்து வந்தான்.

அவர் கைங்கரியங்களைப் பூர்த்திசெய்து விட்டுச் சற்றுத் தாமதமாக வரவே அவரைக் கண்டதுமே நிதானத்தை இழந்த கீர்த்திவர்மன். "டேய், நான் யார் தெரியுமா? சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன்" என்றான்.

அர்ச்சகர் நிதானத்தை இழக்கவில்லை. "மிக்க மகிழ்ச்சி" -என்று மட்டும் கூறினார்.

"கூப்பிட்டதும் ஏன் வரவில்லை?" -

"இறைவனுக்குரிய நியமங்களை அரைகுறையாக விட்டு விட்டு வருவதற்கில்லை" -

"நாட்டை ஆளும் மன்னன் கூப்பிட்டாலும் வரமாட்டீரா?"

“ஆலயத்திற்குள் மன்னனாவது மந்திரியாவது! இங்கே எல்லோரும் ஒன்று தான் இளவரசே” -

“உம்மைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன். ஆமாம். தும்பை வனம் எங்கிருக்கிறது.”

“ஏன் அங்கு போகப் போகிறாயா?”

“ஆம்”

“இப்போதா?”

“ஆமாம்”

“வேண்டாம் அரசகுமாரா. வேண்டாம். அங்கே போகாதே”

“ஏன்?”

“அது மிகவும் பயங்கரவனம்.”

“அவ்வளவு தானே.?’

“அங்கே போனவர்கள் திரும்பி வந்ததில்லை”

“காரணம்?”

“அங்கே பேய் உலாவுகிறது”

“பேயா?”

“ஆம். மோகினிப் பேய். அந்தத் தும்பைவனத்து மோகினியிடம் சிக்கியவர்கள் மீண்டதில்லை”

“அதையும் பார்த்து விடுகிறேன்”

“வேண்டாம் கீர்த்திவர்மா வேண்டாம்” - என்று

பதட்டத்தில் இளவரசனின் பெயரை உச்சரித்தார் அர்ச்சகர்.

கீர்த்திவர்மனோ அதைக் காதில் வாங்கவில்லை. இருப்பிடத்தை அறிந்து கொண்டு புறப்பட்டான். தும்பைவனத்தை நோக்கி.

⌘⌘⌘⌘⌘

5.தும்பை வனத்து மோகினி

நின்றிருந்து யோகநீதி நண்ணுவார்கள் சிந்தையுள் சென்றிருந்து தீவினைகள் தீர்த்த தேவ தேவனான திருமால் அமர்ந்த கோலத்தில் திருப்பாடகத்திலும், நின்ற கோலத்தில் திருவூரகத்திலும், கிடந்த கோலத்தில் திருவெஃகாவிலும் வீற்றிருக்கும் இடமான காஞ்சி மாநகரத்தின் தெற்கெல்லையில் இருந்த கையிலாய நாதன் ஆலயத்தில் புதிர் சிற்பத்தருகே கிடந்த ஓலைச் சுவடியில் காணப்பட்ட தும்பை வனம் என்ற பெயரைப் பற்றி வினவியதும் அங்கே மோகினிப்பேய் இருக்கிறதென்றும் போக வேண்டாம் என்று எச்சரித்ததை லட்சியம் செய்யாமல் புறப்பட்ட சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மனைக் கண்ட பரமேச்சுர விண்ணகரத்தின் பிரதான பட்டர் பெருமூச்செறிந்தார் கவலையுடன்.

“தும்பை வனத்தின் விதியே இப்படித் தான். சொன்னால் யாரும் கேட்பதில்லை. கேளாமல் போனவர்கள் நிலை திருப்திகரமாய் இல்லை” - என்று கவலையுடன் வார்த்தைகளை உதிர்த்தார். அங்கே போன ஓரிருவர் பலமாதங்களுக்குப் பிறகு பைத்தியங்களாய்த் திரும்பியதை மக்கள் கண்டிருந்தனர்.

அருகில் நின்றிருந்த காவலாளி வினவினான். “சுவாமி, இவன் ஆலயத்தில் அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டிருக்கிறான். தங்களிடம் கூட அவமரியாதையோடு பேசினான். விட்டு விட்டீர்களே?”

“அதனால் என்னடா முட்டாள்? மோகினி தான் பிடித்துக் கொள்ளப் போகிறதே?” - என்று அலுத்துக் கொண்ட பட்டர் தன் அலுவலைக் கவனிக்கச் சென்றார்.

காவலாளி விழித்தான். "உண்மைதான். மோகினியை எண்ணி யார்தான் பயப்படாமல் இருக்க முடியும்?" என்று முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து அகன்றான்.

இவர்களது எச்சரிக்கையைப் பற்றியோ கவலையைப் பற்றியோ லட்சியம் செய்யாத கீர்த்திவர்மன் தும்பை வனத்தை நோக்கி தன் புரவியைச் செலுத்தினான். "மோகினியாம். பிசாசாம். இவர்களுக்கு வேறு வேலையில்லை" - என்று கூறி சிரித்துக் கொள்ளவும் செய்தான். அவனது சிரிப்பை ஆதரிப்பது போல் வானத்தில் இடியோசையும் எழுந்தது. மேகத் திரள்கள் மேன்மேலும் தழைக்கலாயின. அகால கார்மேகங்களால் வானம் கறுத்து விட, அம்மேகச்சூழலுக்கிடையே வீசிய காற்றில் ஆங்காங்கே ஏற்றப்பட்டிருந்த பந்தங்கள் அவித்து விட்டதால் திடீரென பயங்கரமான இருள் சூழ்ந்து கொண்டது. அந்த இருட்டில் கருப்பு நிறம் கொண்ட யானைமீது இருந்த கீர்த்திவர்மனே கூட ஒரு பிசாசு போலத்தான் காட்சியளித்தான். அவனது பூனைக் கண்கள் இருட்டில் உற்று நோக்கி வழியை அறிந்தன. இதற்கிடையில் மேகத்திரையில் மோகக் கவிதை எழுத வந்தாற் போல் மின்னல்கள் அடிக்கடி பளிச்சிட்டதால் அவனுக்குப் பாதையை அறிந்து கொள்ள வசதியாக இருந்தது. இப்படிப்பட்டதொரு பயங்கரச்சூழலில் வேகவதியாற்றங்கரையில் இருந்த தும்பை வனத்தை நெருங்கவும் மழைத்தூரல்கள் விழவும் சரியாக இருந்தது.

தும்பை மலர்களைத்தாங்கிய மரங்கள் செழித்துக் கிடந்த அக்காட்டில் நுழைந்தபோது இருட்டு இருமடங்காகியது. "பேசாமல் திரும்பி விடலாமா?" என ஒரு கணம் யோசித்த அவன் மனத்தைத் தேற்றிக் கொண்டு முன்னேறிச் சென்றான். மழைவலுத்தது. மின்னல் தெறிப்புகளும் இடியோசைகளும் அதிகமாயின. அதோடு வனவிலங்குகள் ஒன்றிரண்டு ஒலி எழுப்பவும் செய்தன.

அவனது யானை நகர மறுத்ததால் அதை விட்டு இறங்கி அதை நடத்தியபடி சென்றான் கீர்த்திவர்மன். மழை நீரின் தேக்கம் அதிகமாக இருந்த படியால் பெரிதும் சிரமப்பட்டு நடந்தான். அப்போது பெண்ணொருத்தியின் அழுகையொலி எழுந்து மிகப் பயங்கரமாக அக்காட்டுப் பகுதியில் ஊடுறுவியது. அடுத்த கணம் அவனது யானை மிரண்டு போய் ஓடியது. கீர்த்திவர்மன் துணுக்குற்றான். நடுக்காட்டில் நள்ளிரவில், மழை பெய்யும் நிலையில் கேட்ட அந்த அமானுஷ்ய குரல் அவனுக்கு அச்சத்தை அளித்தது. 'ஒரு வேளை பட்டர் சொன்னது உண்மையாக இருக்குமோ?' என்று எண்ணவும் முற்பட்டான். இந்த எண்ணம் உண்டானபின் அவனது நடை பெரிதும் தடுமாறியது. மழையில் உடைகள் முழுவதுமாய் நனைந்து விட்டதால் எங்காவது ஒதுங்க விரும்பினாலும் அதற்கு இடமேதும் தட்டுப்படவில்லை. மேலும் அரை நாழிகை நேரம் அச்சத்துடன் நடந்த போது மண்டபம் ஒன்று கண்ணில் படவே பெரும் சந்தோஷத்துடன் அங்கு சென்றான்.

மண்டபம் பாழடைந்து கிடந்தாலும் ஒழுகாமல் இருந்ததால் நிம்மதியாக அங்கே ஒதுங்கினான் கீர்த்திவர்மன். ஆனால் அவனது நிம்மதி நீடிக்கவில்லை. திடீரென அந்த மண்டபத்தின் பின்னாலிருந்து ஜல்ஜல் என சலங்கை ஒலி எழுந்தது. திரும்பிப் பார்த்தான். வானத்தில் பெரும் இடியோசை எழுந்து பின்னாலேயே மின்னல் கீற்றுகள் தோன்றி மறைந்தன. அந்த வினாடி நேர வெளிச்சத்தில் மண்டபத்தின் மூலையில் வெள்ளை நிறத்தில் ஓர் உருவம் நிற்பதை அவன் கண்கள் கண்டன.

கீர்த்திவர்மனின் நிலை சொல்லும் தரமற்றதாய் இருந்தது. பட்டரிடம் மூர்க்கமாக நடந்து கொண்ட போது வராத நடுக்கம் தற்போது உண்டாகவே எந்த விஷயத்திலும் "பேசுவது வேறு. அனுபவிப்பது வேறு" என்பதை

தற்போதுத்தான் அவன் உணர்ந்தான். வீரமும் சாகசமும் நிறைந்த அரச குலத்தில் பிறந்து போர்க்களங்களில் பிணக்குவியல்களுக்கிடையே போரிட்டு பல்வேறு கோலங்களைக் கண்டிருந்தும் அப்போதெல்லாம் அச்சத்தை அறியாதிருந்த அவனது உடலும் மனமும் தற்போதைய அமானுஷ்ய நிலையில் செய்வதறியாமல் தவித்த அவன் "யார் நீ? யாரது?" என்று பெரும் கிலியுடன் சொற்களை உதிர்த்தான்.

அவனுக்கு பதில் கிடைக்கவில்லை. மாறாக அவன் கண்ட வெள்ளை உருவம் சலங்கை ஒலியுடன் அவனை நோக்கி வரலாயிற்று. "சந்தேகமே இல்லை. இது மோகினி தான். இதனிடம் சிக்கினால் இந்த ஜென்மத்தில் மீள முடியாது" - என்று சொல்லிக் கொண்ட கீர்த்திவர்மன் ஓட முற்பட்டான். ஆனால் அவனால் ஓட முடியவில்லை. ஏனெனில் அவன் ஓட எத்தனித்ததுமே அவன் தலை வழியாகக் கழுத்தில் வந்து விழுந்தது ஒரு கயிறு. அதன் முடிச்சு இறுகி கழுத்தை முறிக்க முற்பட்டது மட்டுமின்றி இழுக்கவும் செய்தது. தன் வாழ்வின் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டதாக நினைத்த கீர்த்திவர்மன் செருகிக் கொண்டே போகும் தன் கண்களை மூடினான். பிறகு மூர்ச்சையடைந்தான்.

⌘

காலைநேரம். ஆங்காங்கே இருந்த தோட்டங்களில் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் பூத்திருந்தன. வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் கன்றுக்கிரங்கி முலை வழியே பால் சோரத் திரியலாயின. கீழ்வானம் வெளுத்து எருமைகள் மேயப்புறப்பட்டன. புள்ளும் சிலம்பின. இவற்றுக்கிடையே புள்ளரையன்

கோயில்களில் வெள்ளை வெளிச்சங்கின் பேரரவங்கள் கேட்டன. இப்படி இன்பச் சுவை தேனாய் ஒலித்த நல்லரவங்களால் துயிலெழுந்தான் கீர்த்திவர்மன். துயில் நீங்கி தெளிவு பிறந்தபின் தான் ஒரு பஞ்சணையில் சுகமாகப் படுத்திருப்பதையும் மஞ்சத்தின் இருபுறங்களிலும் பெண்கள் நின்று கொண்டிருந்ததையும் கண்டான். அவன் கண் விழித்ததைக் கண்டதும் "ஏதாவது தேவையா?" - என்று அப்பெண்கள் வினவினார்கள்.

கீர்த்திவர்மனுக்கு தும்பைவனச் சம்பவம் நினைவுக்கு வந்தது. அங்கே பாழடைந்த மண்டபத்தில் மோகினிப் பேய் தன்னை நெருங்கியதும் தன் கழுத்தில் விழுந்த கயிறு கழுத்தை இறுக்கியதும் நினைவுக்கு வந்தன. தற்போது அதற்குச் சிறிதும் சம்மந்தமில்லாத இடத்தில் தானிருந்ததால் அது பற்றி தெரிந்து கொள்ள முற்பட்டு மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்து கொண்டு "யார் நீங்கள்? நான் எங்கிருக்கிறேன். இங்கு எப்படி வந்தேன்?" என்று வினவினான்.

"முதலில் நீங்கள் முகம் கழுவி காலைக்கடன்களை முடித்துக் கொள்ளுங்கள்" - என்று தெரிவித்தார்கள் அந்த பெண்கள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியும். யார் நீங்கள்?" இரைந்தான் முரட்டுத்தனமாக.

அவர்களோ பதட்டப்படாமல் "பணிப் பெண்கள்" - என்றார்கள்.

"இது என்ன இடம்?" - கேட்டான் கீர்த்திவர்மன்.

" பள்ளியறை"

" இங்கு எப்படி வந்தேன்?"

“ தெரியாது”

“ தெரியாதென்றால்?”

“ தெரியாதென்று தான் அர்த்தம்”

“ நான் யார் தெரியுமா?”

“ தெரியாது”.

“ உங்களுக்குத் தெரிந்த விஷயம் தான் என்ன?”

“ உபசரிப்பது”

“ நல்ல உபசரிப்பு. இருக்கட்டும். வந்து உங்களையெல்லாம் தொலைத்து விடுகிறேன்” என்று கூறி எழுந்த அவனை நீராட வேண்டிய இடத்திற்கும் துணி மணிகளை அணிய வேண்டிய இடத்திற்கும் வழியைச் சொல்லி அனுப்பிவைத்தார்கள் பெண்கள்.

அனைத்தையும் ஒருவாறு முடித்துக் கொண்டு அறைக்கு அவன் திரும்பிவந்த போது சிற்றுண்டி தயாராக இருந்தது. எதையும் பேசாமல் வேண்டிய மட்டும் அருந்திவிட்டு கைகளைக் கழுவி முடித்த போது “ எப்படி இருக்கிறது?பரவாயில்லையா?” என்று அழகிய குரலொன்று குறுக்கிட்டது.

குரல் கொடுத்த திசையை நோக்கிய கீர்த்திவர்மன் அப்படியேஅசந்து போனான். அங்கே நின்றிருந்தாள் ஒருபெண் பெண்ணழகிற்கெல்லாம் ஒரு சிகரம் போல். நிலவொளியில் வார்க்கப்பட்ட தேவமங்கையைப் போல் பளிச்சென்றிருந்தாள் அப்பேரழகி. பருவம் எய்தி ஆண்டுகள் சில கடந்திருந்ததற்கு அடையாளமாகஅவளது உடலழகில்மென்மையும் அலாதியான செழிப்பும் சேர்ந்து பொறாமை படத்தக்க தோற்றத்தைத் தந்திருந்தன. ஆடை பாதி ஆபரணங்கள் பாதி என அவளது அலங்காரம் அமைந்திருந்ததால் அழகானது இப்படித் தான்

பக்குவம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என எண்ண வைத்தது. ஆடைக்கும் ஆபரணத்திற்கும் இடையே ஆங்காங்கே வெளிப்பட்ட மின்னலை நிகர்க்கும் அங்க அழகுகள் இயற்கை அழகை மிஞ்ச யாராலும் முடியாது என்று பறைசாற்றின. அழகுக்கேற்ற அலங்காரமா அல்லது அலங்காரத்திற்கேற்ற அழகா என்று அரிதியிட்டு கூற முடியாது தான். ஆனால் அவளது பேரழகிற்கு ஏற்ற தேன்குரல் அவளிடமிருந்து வெளிப்பட்ட விதம் மறுப்புக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. தேவர்கள் கண்டாலே தடுமாறக் கூடிய அப்பெண்ணைச் சாதாரண மனிதனும் பெண்களிடம் மனதை பறிகொடுப்பதில் மன்னனுமான கீர்த்திவர்மன் சிறிது நேரம் பிரமை பிடித்துக் கிடந்தான்.

அவள் மட்டும் மீண்டும் பேசாமல் இருந்திருந்தால் அவன் இவ்வுலகிற்கு மீண்டிருக்க முடியாது தான். தன்னைக் கண்டு மதிமயங்கி பேச்சற்று நின்று விட்டதைக் கண்ட அவள், “என்ன நிற்கிறீர்கள்? கேட்டது காதில் விழவில்லையா?” என்று வினவினான்.

கீர்த்திவர்மன் மயக்கத்திலிருந்து விடுபட்டு “ யார் நீ? எங்கு வந்தாய்?” - என்று கேட்டதும் சற்றே சிரித்த அவள் “இரண்டுமே நான் கேட்க வேண்டிய கேள்விகள்” - என்றாள்.

“ என்னது? நீ கேட்க வேண்டிய கேள்விகளா? என்ன சொல்கிறாய்?” - குழப்பத்தில் கேட்டான் கீர்த்திவர்மன்.

“ இது என் இடம். இங்கே நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்த நிலையில் கேட்க வேண்டியது நான் தானே?” - என்று இயல்பாகவும் அழகாகவும் வினவினாள் அவள்.

“ அப்படியானால் நான் நேற்று இருந்த இடம்?”

“ இங்கு தான் இருந்தீர்கள்”

“ இங்கா? நேற்றா? நானா? இல்லை. இல்லை. இல்லவே இல்லை.”

“ பார்த்தது நாங்கள். சிகிச்சை செய்தது நாங்கள். நீங்கள் மறுத்தால் பொய்யாகி விடுமா?”

“ சிகிச்சை செய்தீர்களா? எனக்கா?”

“ ஆம். மூன்று நாட்களாக அளிக்கிறோம். உங்கள் உடம்பு ஒரு நிலையில் இல்லை. ஏதேதோ உளறினீர்கள்”

“ உளறினேனா? நானா?”

“ ஆமாம். ஏதோ பேய் என்றீர்கள். மோகினி என்றீர்கள். விட்டு விடு ஓடி விடுகிறேன் என்றீர்கள். ஒன்றுமே புரியவில்லை. மூன்று நாட்களாக இதே தான்”

கீர்த்திவர்மனுக்கு அதை நினைக்கவே திக் கென்றது.

“ ஆமாம். ஆமாம். பேய் தான். அதுவும் மோகினிப் பேய். என் கழுத்தை இறுக்கியது” - என்றான் திகிலுடன்.

“சரி தான். மயக்கம் தெளிந்தபின்பும் உளறல் தானா?”- என்று கேட்டாள் அவள்.

“இல்லை உளறவில்லை. உண்மை. நானே பார்த்தேன்”-

“பார்த்தீர்களா? எதை?”

“பேயை”

“வேறென்ன பார்த்தீர்கள்?”

“அழுகுரல், சலங்கை ஒலி, அப்பப்பா. அதுதான் கழுத்தை இறுக்கிக் கொல்ல முயன்றது.”

“ அப்படியானால் இங்கே எப்படி வந்தீர்கள்?”

“ அது ... அது ..... தெரியவில்லை”

“ எல்லாம் வெறும் கனவு. பேயாவது மோகினியாவது. அதையெல்லாம் விடுங்கள்”

“ அது சரி. உன் பெயர் என்ன?”

சொன்னாள் அவள்.

இரண்டே எட்டில் அவளை அடைந்து அவளது உடலை இறுக்கி “ என்ன சொன்னாய்? இன்னொரு முறை சொல்” என்று பரபரப்புடன் கேட்டான் கீர்த்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘

6. கிழவியும் குமரியும்

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தனான திருமாலின் திருப்பதிகள் ஊரெங்கும் நிறைந்திருந்த காரணத்தால் அத்திருப்பதிகளை எண்ணும் மாத்திரத்திலேயே மக்களின் நெஞ்சம் நிறைந்துவிடும் விந்தையைக் கொண்ட காஞ்சிமாநகரின் தும்பைவனத்தில் மோகினிப் பேயின் பிடியில் சிக்கி மயங்கிப் போன பின் கண்விழித்த சமயத்தில் புதிரின் பிடியில் சிக்கித் தவித்தபடி தன்னை உபசரித்த பெண்ணின் பெயரைக் கேட்டதும் அவன் உச்சரித்த பெயர் அவனை ஒரு கலக்கு கலக்கி விடவே மீண்டும் அவளிடமே வினவினான் அவளது உடலை இறுக்கிய வண்ணம்.

அவள் பதில் சொல்ல முற்பட்ட வேளையில் தோழியர் இருவர் வந்து அழைக்கவே அங்கிருந்து அகன்றாள் அப்பெண்.

கீர்த்திவர்மன் பெரிதும் தவித்தான் பல்வேறு உணர்ச்சிகளால். அங்கிருந்து அகன்ற பேரழகியும் அன்று மாலைவரை தலைகாட்டவில்லை. தலைகாட்டிய தோழிப்பெண் சிலரும் வாயைத் திறக்காததால் பொறுமையை இழந்த அவன் ஒருத்தியைப் பலவந்தமாகப் பிடித்து "மரியாதையாகச் சொல். எங்கே அவள்?" - என்று மூர்க்கமாக வினவினான்.

" பெண்களை இப்படியெல்லாம் பிடிக்காதீர்கள் பிரபு. ஏற்கனவே உங்கள் பிடி பலமாக இருந்து விட்டதால் தான் தலைவியார் படுத்தபடியே இருக்கிறார். விடுங்கள் என்னை" - என்றாள் அவள்.

" முடியாது. முதலில் அவள் இருக்கம் இடத்தைச் சொல்" - அடம் பிடித்தான் கீர்த்திவர்மன்.

" எதற்குத் தேடுகிறீர் அவரை? மீண்டும் காயப்படுத்தவா?" - என்று கேட்டதும் அப்பெண்ணைத் தன் பிடியிலிருந்து விடுவித்த கீர்த்திவர்மன் அவனது கையை கவனித்தான். நடுப்பகுதிக்கன்றிப் போயிருந்ததைக் கண்டான்.

" பார்த்தீர்களா? இப்படித்தான் பெண்களைப் பிடிப்பார்களா? இப்படி பிடித்தீர்களானால் ஒருத்தி கூட உங்கள் அருகில் இருக்கமாட்டாள்" என்று அறிவுறுத்தினாள் அப்பெண்.

" சரி. தவறு தான். உன் தலைவியின் இருப்பிடத்தை மட்டும் சொல்லிவிடு. பக்குவமாகப் பிடிக்கிறேன்"

இதைக் கேட்டு சிரித்த அப்பெண் " ம். எப்படியாவது தொலையுங்கள். அதோ அந்த முதல் கட்டைத் தாண்டினால் படிகள் இருக்கும். அங்கு ஏறி விதானத்து அறைக்குச் செல்லுங்கள். அங்கு தான் இருக்கிறார் தலைவியார்" - என்றாள்.

அதையடுத்து மிகமுக்கியமான வேலையைச் செய்ய புறப்பட்டவனைப் போல் புறப்பட்டு விதானத்தை அடைந்தான். விதானத்து அறையில் இருந்த பஞ்சணையில் படுத்திருந்தாள் அப்பெண். பட்டுப் போர்வையால் உடல் முழுவதையும் மூடிக்கொண்டிருந்தாள் ஆதலால் விஷம குதூகலத்துடன் நெருங்கிய கீர்த்திவர்மன் " இவளை அப்படியே அணைத்தால் என்ன?" என்று யோசித்தான். பிறகு " வேண்டாம், வேண்டாம். ஏற்கனவே என் முரட்டுப் பிடியால் அவஸ்தைப் பட்டிருப்பாள். இந்த நிலையில் மீண்டும் முரட்டுத்தனத்தைக் காட்டக் கூடாது. பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்" என்று தீர்மானித்தவனாய் " அழகி" என்று மெல்ல அழைத்தான். அப்படி அழைத்தால் அது பெண்களை எப்படியும் கவரும் என்று கருதிய அவன் அவ்வாறு அழைத்ததற்காக தனக்குத் தானே மெச்சிக் கொண்டான்.

படுத்திருந்தவள் எழுந்து கொள்ளவில்லை. குறட்டை சத்தம் தான் வந்தது. “பாவம். காயம் பலமாகப் பட்டிருக்கிறது. அயர்ந்து தூங்குகிறாள்” என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு சற்றே துணிந்தவனாய் அவளைத் தொட்டு அசைத்து “கண்மணி” என்றழைத்தான்.

இந்த அழைப்பையடுத்து போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்தவளைக் கண்டதும் கீர்த்திவர்மனுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. எழுந்தவள் அவளைக் கவர்ந்த பேரழகியில்லை. கோரமானதொரு கிழவி. கும்பகர்ண தூக்கம் போட்ட பூதம் பாதியில் எழுந்தது போல் எழுந்த அந்தக் கிழவி அவனைப் பார்த்து “யாரப்பா நீ?” - என்று கழுதைக் குரலில் வினவிய போது அவளை அங்கேயே அடித்துக் கொன்று விடலாம் போலிருந்தது கீர்த்திவர்மனுக்கு. வழி காட்டிய தோழிப் பெண் தன்னிடம் விளையாடி விட்டதாகத் தோன்றவே அவள் மீதும் மகா கோபம் மூண்டது அவனுக்கு.

இதற்கிடையில் அக்கிழவி “ஏன் நிற்கிறாய்? வந்து உட்காரேன்” என்று அழைத்ததும் “கிழப்பிசாசே, பேசாமல் கிட,” என்று ஆத்திரம் அனைத்தையும் வார்த்தையில் கொட்டிய அவன் “எங்கே அவள்?” - என்று கேட்டான்.

அதற்கு கிழவியிடமிருந்து பதில் வரவில்லை. அங்கிருந்து சென்று விட தீர்மானித்து அறை வாசலுக்கு வந்த போது அறைக்குள்ளிருந்து கலகலவென்று சிரிப்பொலி எழுந்தது. திரும்பினான் கீர்த்திவர்மன். அங்கே மஞ்சத்தில் அவனது நெஞ்சத்தைக் கவர்ந்த பேரழகி அமர்ந்திருந்தாள். கிழவியைக் காணோம்.

அதிர்ந்து போன அவன் “கிழவி எங்கே?” என்று கேட்டான் குழப்பத்துடன்.

" ஏன், அவள் தான் வேண்டுமா?" - என்று விஷமத்துடன் கேட்டாள் அவள்.

" இல்லை, இங்கே அவள் இருந்தாள் ... "என்று தடுமாறினான் அவன்.

" தேடிப்பாருங்களேன்" என்றாள் அவள் நமட்டுச் சிரிப்புடன்.

அந்த அறைக்குள் தேடுவதற்கு எதுவும் இல்லாததால் அவன் விழித்தான்.

" அவள் இல்லாமல் போனால் என்ன? வேண்டாதவள் ஒழிந்தாள் என்று விட வேண்டியது தானே?"

" ஆமாம். ஆமாம். அவளைப் பற்றி எனக்கென்ன? ஆனால் அவள் இங்கே இருந்தாள். எப்படி மறைந்தாள்?"என்று கேட்டான் அவன்.

" மாயமாக மறைந்துவிட்டாளோ என்னவோ?"

" பெண்ணே, நான் கிழவியைப் பார்த்தது உண்மை"

" நம்ப வேண்டியது தான்"

" ஏன், உனக்கு நம்பிக்கையில்லையா?"

" இல்லாமல் போகுமா? நீங்கள் தான் பேயையே பார்த்திருக்கிறீர்களே?"

" அது உண்மை"

" இதுவும் உண்மைதான்"

" நான் பொய் சொல்லவில்லை"

“ மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தெரியுமாம். உங்களுக்குப் பேயாகவும் கிழவியாகவுமெல்லாம் தெரிகிறது”.

தன்னை அவள் நகையாடுவது அவனுக்கு கோபத்தை அளித்தது உண்மைதான். ஆனால் அதேசமயம் பேயைக் கண்டதும் கிழவியைக் கண்டதும் உண்மையாக இருந்ததால் அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

அக்குழப்பங்களைப் பிறகு தீர்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்த அவன் பேச்சை மாற்ற முற்பட்டு “ சரி” என்றான் அர்த்தமில்லாமல்.

“ எதுவும் சரியில்லை”- என்றாள் அவள் அவனை மடக்குவது போல்.

உண்மையிலேயே குழம்பிப் போயிருந்த அவன் “சரியில்லையா? எதுவுமா?” என்று கேட்டான் உண்மையிலேயே அவன் புரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் நிரம்ப இருந்ததால்.

“ ஆம் வீரரே, நீ சொல்வது செய்வது எதுவுமே சரியில்லை”

“ எதைச் சொல்கிறாய்?”

“ முதலில் பேயைப் பார்த்ததாகச் சொன்னீர்கள்”

“ ஆமாம்”

“ அதுவும் மோகினிப் பேய் என்றீர்கள். அதனிடம் சிக்கியவர்கள் மீண்டதில்லை. இதிலிருந்தே பேயைப் பற்றிய உங்கள் கூற்று சரியில்லை. இரண்டாவது இந்தச் சிறிய அறையில் ஒளிவதற்கே இடமில்லாத நிலையில் கிழவியைக்

கண்டதாகச் சொன்னீர்கள். அதுவும் சரியில்லை. உங்களைப் பற்றி விவரம் கேட்டால் என்னைப் பற்றிக் கேட்கிறீர்கள். பெயரைச் சொன்னால் இதோ பாருங்கள் - இடையே கன்றிப்போகும் படி முரட்டுத் தனமாகப் பிடிக்கிறீர்கள். அதுதான் போகட்டும். மூன்று நாட்களாக சிகிச்சையளித்து உங்களைக் கண்ணும் கருத்துமாக காத்திருக்கிறேன். வார்த்தைக்குக் கூட ஒரு நன்றி சொல்லவில்லை. இதெல்லாம் சரிதானா?"

" தவறு தான் பெண்ணே. மன்னித்து விடு"என்று சொல்லியபடியே அவன் அவளை நெருங்கியதைக் கண்ட அவள் "அங்கிருந்தே சொன்னால் போதும். அருகில் வரவேண்டியதில்லை" என்றாள்.

அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் போய் அவளது மஞ்சத்தில் ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டு "பயப்படாதே, அப்போது உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். அதனால் தான் அப்படி நடந்துவிட்டது" என்றான்.

" பெண்களுக்கு முன்னால் நீங்கள் உணர்ச்சிவசப்படுவது எங்களுக்கு ஆபத்தில்லையா?"

" ஆமாம். உண்மைதான்"

" இப்போதும் நீங்கள் உணர்ச்சிவசப்படமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?"

" நிச்சயமாக அப்படி எதுவும் ஆகாது பெண்ணே. எதோ உன் இடையைக் காட்டு"

" என்ன?"

" கோபமடையாதே. கன்றிப்போய் விட்டதாகச் சொன்னாயே, அதைப் பார்க்கலாம்"

“ஒன்றும் வேண்டியதில்லை”

“ எனக்கு மனம் கேட்கவில்லையே”- என்று கூறிய கீர்த்திவர்மன் உணர்ச்சி வசப்படுவதைப் பற்றிப் பேசியதை அறவே மறந்து விட்டு அவளை நெருங்கி அவளது மேலாடையை சற்றே ஒதுக்கி அவளது இடையை கவனித்து விட்டு சிறிது நேரத்திற்குப் பிறகு “ அழகான இடை” என்றான்.

“ என்னது?” சீறினாள் அவள்.

“ இல்லை. இல்லை. அழகான இடம்... இல்லை ... அழகான இடை இப்படிக் கன்றிப் போய் விட்டது”- என்றான்.

“ இதைச் சொல்ல இவ்வளவு தடுமாற வேண்டுமா?”

“ என்ன செய்வது பெண்ணே? அப்படித் தான் ஆகி விடுகிறது”

“ எது?”

“ உங்கள் அழகு தான். அதோ பார் அந்தப்பந்தத்தின் ஒளியில் உன் இடை - இடை மட்டுமல்ல எல்லாமே தங்கத் தாமரையைப் போலல்லவா தெரிகின்றன? இதைப் பார்க்கும் எந்த ஆடவனும் தடுமாறாமல் இருக்க முடியுமா?”

“ ஆரம்பித்துவிட்டது வழக்கமான பைத்தியக்காரத்தனம்”

“ எதைச் சொல்கிறாய்?”

“ பெண்களைப் பார்த்ததும் அசடு வழிவது, தடுமாறுவது, அழகை வர்ணிப்பது. இவைகளைத் தான்”

“ இந்த வழக்கங்கள் மாறக் கூடிய பழக்கங்கள் என்ன நினைக்கிறாய்? முனிவர்கள் கூட தவத்தை விட்டு விட்டு நீ சொன்ன இந்தப் பைத்தியக் காரத்தனத்தைத் தானே செய்திருக்கிறார்கள்?”

“ புதியதாக ஒன்றும் தெரியாதா உங்களுக்கு?”

“ ஏன், தேவையாக இருக்கிறதா?”

“ இல்லை, இல்லை, எனக்கு தேவையில்லை”

“ பெண்ணே”

“ என்ன?”

“ எனக்குக் கூட பழைய விஷயங்கள் பிடிப்பதில்லை” என்று கூறி மெல்ல அவளது கரத்தைப் பிடித்தான்.

அவள் மறுக்கும் பாவனையில் கையை அசைத்துப் பார்த்தாள். அவனது பிடி பலமாக இருந்தது.

தொடர்ந்து பேசிய அவன் “ அதோடு புதிய விஷயங்கள் எனக்கு நிறையவே தெரியும்” - என்றான். இப்படிக் கூறிவிட்டு அவனை நெருங்கினான் உட்கார்ந்தபடியே.

“ ஏன் நெளிகிறாய்? பயமாக இருக்கிறதா?” என்று கேட்டு தன் ஒரு கையை அவளது இடையில் செலுத்தினான்.

அவளது உடல் சற்று நடுங்கியது. ஆகவே இடையில் போட்ட கையால் அவளது இடையைச் சற்றே அழுத்திய அவன் “பயப்படாதே. என்னிடம் உனக்கு பயம் வேண்டியதில்லை” - என்றான்.

“ வேண்டாம்”என்றாள் அவள்.

“ எது வேண்டாம்?”

“ இது. இந்த நிலை”

“ இந்த நிலைக்கு என்ன?”

“ இது சரியில்லை”

“ ஏன் யாராவது வருவார்கள் என்று பார்க்கிறாயா? யாராவது தடை செய்வார்கள் என்று நினைக்கிறாயா? இதோ பார் என்னை எவனும் எதுவும் செய்ய முடியாது. நான் யார் தெரியுமா?”

“ யார்?”

“ சாளுக்கிய இளவரசன். கீர்த்திவர்மன்”

“ ம்”

“ இங்கே நடப்பது என் ஆட்சி”

“ இல்லை” என்று ஒரு குரல் குறுக்கிட்டது.

திரும்பினான் கீர்த்திவர்மன். அறைவாசலில் நின்றிருந்தான் ஒரு வாலிபன்.

⌘⌘⌘⌘⌘

7. மோகன மோகினி

உற்று வணங்கித் தொழுமின் என்று வலியுறுத்திச் சொல்லப்பட்ட பாடகத்துள் வீற்றிருந்த கண்ணபிரானின் இரவுநேர பூஜைக்கான மணியோசை காற்றிலே ஊடுருவி மக்களின் ஜீவஸ்வரங்களில் கலந்து மனத்தெம்பை ஊட்ட முற்பட்ட வேளையில் மாளிகையொன்றின் விதான அறையில் மஞ்சத்தில் அமர்ந்திருந்த பேரழகியிடம் தன் பிரதாபங்களைக் கூறி அவளை அடைய முற்பட்ட போது இடையே குறுக்கிட்டு அபசகுணமான வார்த்தையொன்றையும் உதிர்த்த வாலிபனைக் கண்ட கீர்த்திவர்மன் பெரும் கோபத்திற்கு ஆளானான்.

வாசலில் வந்து நின்ற வாலிபன் ஏறக்குறைய கீர்த்திவர்மனை விட சற்றே வயதானவனாய் இருந்தான். அவனது ஆடை அணிகலன்கள் அரசகுமாரனுக்குரியவைகளாய் இருந்தன. அவன் இடையில் வாள் ஒன்றும் நேர்த்தியாகத் தொங்கியது. இவைகளையெல்லாம் ஒரு நொடியில் அலசி முடித்தான் கீர்த்திவர்மன். அடுத்து யாருமே யோசிக்கவோ எதிர்பார்க்கவோ முடியாத சம்பவம் ஒன்று நடந்து விட்டது.

கீர்த்திவர்மன் அவசரக் காரன் என்று பெயரெடுத்தவன். அதை எந்த சமயத்திலும் தவறாமல் காட்டி வருபவன். அதுவும் பெண்கள் விஷயத்தில் அவனது அவசரம் சாளுக்கிய நாட்டில் பிரசித்தமாய் இருந்தது. நாடுவிட்டு நாடு வந்தாலும் இந்த அவசர புத்தி மாற வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லாதிருந்த படியால் மஞ்சத்தின் அருகேயிருந்த மர ஆசனத்தைத் தூக்கி வாலிபனை நோக்கி வீசினான். அது இலக்கு தவறாமலும் வேகமாகவும் வாலிபனின் முகத்தைத் தாக்கி விடவே “ஆ” என்ற ஒலியுடன் வாசலுக்கு வெளியே விழுந்தான் வாலிபன்.

அந்தப் பெண் பதறிப் போய் எழுந்தாள். “ என்ன இப்படி செய்து விட்டீர்களே?” என்று வினவிய வண்ணம் வாசலுக்கு வந்து விழுந்து கிடந்தவனைப் பார்த்தாள். அவனது வலது கண்ணுக்கு மேலே ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கைகளைத் தட்டி இரு பெண்களை வரவழைத்தாள். அவர்கள் வந்ததும் “இவரைக் கொண்டு போய் வைத்தியம் செய்யச் சொல்லுங்கள்” -- என்றாள். அடுத்த சில நிமிடங்களில் காவலாளிகள் சிலர் வந்து வாலிபனை அப்புறப் படுத்தினார்கள்.

“யாரிந்த மடையன்?” வெறுப்புடன் கேட்டான் கீர்த்திவர்மன்.

கோபமடைந்த அவள் “ யாராகவோ தான் இருக்கட்டும். இப்படியா செய்வது?” என்று சீறினாள்.

“ என்ன செய்வது பெண்ணே. பூசை நேரத்தில் கரடி புகுந்தால் அதற்கு இந்த கதிதானே கிடைக்கும்?” சிரித்த படி கேட்டான்.

“ இங்கு நடப்பது பூசையுமல்ல. வந்தது கரடியும் அல்ல” - என்று மீண்டும் சீறினாள்.

“ இன்னொன்றை விட்டு விட்டாயே. நீ அம்பாளுமல்ல நான் பூசாரியுமல்ல, என்ன சரிதானே?” என்று கூறி கடகடவென சிரித்த கீர்த்திவர்மன் எழுந்து போய் கதவை தாளிட்டு விட்டு அவளது கரத்தைப் பற்றினான்.

“ விடுங்கள்”- என்று உதறினாள்.

“ கோபப்படாதே வா” என்று அவளை அனைத்தே அழைத்துச் சென்று பஞ்சணையில் அமர வைத்த அவன் “பெண்ணே நான் ரசிகன்” என்றான் சகஜமாக.

“ என்னது?” கடுகடுப்புடன் கேட்டாள் அவள்.

“ஆமாம். அழகின் ரசிகன் நான். அழகு என்றால் மலை, நதி, கடல் என்பவைகளைச் சொல்ல வில்லை. இவை அனைத்தையும் கொண்ட பெண்ணின் அழகை சொல்கிறேன். ஒரு அழகியைப் பார்த்தால் போதும். மலை, நதி, கடல், மலர், வானம். வானவில் போன்றவைகளையெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. அவளிடமே பார்த்து விடலாம். உதாரணமாக உன்னிடமே”

“போதும்”

“பெண்ணே, நானும் என் தந்தையும் இக்காஞ்சியில் நுழைந்து நாட்கள் பல ஆகியும் என் மனம் விரும்பும் காட்சிகளை நேற்று வரை என்னால் காண முடியவில்லை. செய்ய விரும்பிய விஷயங்களை முடிக்க வாய்ப்பு கிட்டவில்லை. பிரஸ்தாபிக்க விரும்பியவற்றைப் பேசவோ ஆள் கிடைக்க வில்லை. இப்படி விரும்பியதைப் பேசவோ பார்க்கவோ அனுபவிக்கவோ முடியாமல் தவித்த நேரத்தில் தாகம் தீர்க்கவந்த தேவதையைப் போல் நீ வந்திருக்கிறாய். இப்போது தான் காஞ்சிப் பிரவேசத்தின் பயனை நான் காண்கிறேன். இப்போது தான் இக்காஞ்சி எனக்கு இனிக்கிறது. புரிந்து கொண்டாயா?”

அவளோ உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டாள்.

“இப்படி காஞ்சியை இனிக்க வைத்தப் பேரழகியான உன்னை ரசிக்க முற்பட்ட போது ஒருவன் குறுக்கிட்டால் அது சகித்துக் கொள்ளக் கூடிய விஷயமா? என் தந்தையே குறுக்கிட்டிருந்தால் கூட இந்த கதிதான் கிட்டியிருக்கும். நல்ல வேளை என்னிடம் குறுவாள் இல்லை. இருந்திருந்தால் வந்த வாலிபன் இந்நேரம் காஞ்சியைத் துறந்து கைலாயத்திற்குச் சென்றிருப்பான்”

கீர்த்திவர்மனைப் பற்றி அவள் தெரிந்து கொண்டிருந்ததை விட நேரில் அவனைப் பற்றி சற்று அதிகமாகவே புரிந்து கொண்டாள் அப்பெண்.

பூஜை வேளையில் நுழையும் கரடி பற்றி அவன் கூறியதிலிருந்தே அவன் பெண்கள் விஷயத்தில் மூர்க்கன் என்பது தெளிவாகப் புரிந்தது. அதை கீர்த்திவர்மனே தொடர்ந்து பேசியபோது உறுதிப்படுத்தினான்.

" காஞ்சி தற்போது தான் இனிக்கிறது" என்று சொல்லி நிறுத்தி சிறிது மௌனத்தை அனுஷ்டித்த கீர்த்திவர்மன் "பெண்ணே சாளுக்கிய நாட்டில் என்னை எல்லோரும் முரடன் என்பார்கள். குறிப்பாக பெண்கள் எல்லோருமே தவறாமல் தந்து விடும் பட்டம் இது. இந்த பட்டத்தை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று தான் பார்க்கிறேன். ஆனால் முடியவில்லை" என்றான்.

" ஏன்?" என்று கடைக் கண்ணால் அவனைப் பார்த்தபடி கேட்டாள் அவள்.

அவளது அந்தப் பார்வை ஆயிரமாயிரம் அன்புக் கணைகளை அவன் மீது பாய்ச்சியது. கோபம் நீங்கி தாபத்திற்குச் செல்ல அவள் முற்படுவதாக நினைத்த அவன் பெரும் சந்தோஷத்துடன் பேச முற்பட்டு " ஏன் என்றா கேட்கிறாய்? இந்தப் பெண்கள் தான் காரணம். அவர்கள் ஒழுங்காக நடந்து கொண்டால் நான் ஏன் முரடனாகப் போகிறேன்?" என்றான்.

" உங்களிடம் ஒழுங்காக நடந்துக் கொள்ளத்தான் பெண்களையெல்லாம் பிறந்திருக்கிறார்களா என்ன?"

அவளது இக்கேள்வி அவனைப் பெரிதும் ரசிக்கச் செய்தது. " அழகான கேள்வி. அழகான கேள்விகளை அழகிகளால் தான் கேட்க முடியும்" - என்று சிலாகித்து விட்டு "நானோ நாட்டின் இளவரசன். நாளைக்கு மன்னனாகப் போகிறவன். என்னிடம் ஒழுங்காக நடந்து கொள்வதற்கு இப்பெண்களுக்ளு கசப்பென்ன வேண்டியிருக்கிறது?" என்று கேட்டான்.

“ நீங்களென்ன எல்லோரையுமா ராணிகளாகக் கொள்ள போகிறீர்கள் அவர்களுக்கு இனிக்க?”

“ அவர்களை வேண்டுமானால் விடு. உன்னை ராணியாக்கிக் கொள்கிறேன்”

“ நன்றி தெரிவிக்கவே தெரியாத நீங்கள் என்னை ராணியாக்கிக் கொள்கிறீர்களா? அழகுதான்?”

“ ஆமாம் அதென்ன நன்றி என்று ஏதோ சொல்கிறாய்?”

“ உங்களுக்கு முரடர் என்ற பட்டம் போதாது. மறதி மன்னர் என்று பட்டம் கொடுத்திருக்க வேண்டும். எல்லாமே மறந்து போய் விட்டதா? தும்பை வனத்தில் மயங்கிக் கிடந்த உங்களை தூக்கி வந்து சிகிச்சை அளித்த எங்களுக்கு நீங்கள் காட்ட வேண்டியது நன்றி. நீங்களோ முரட்டுத் தனத்தைத் தான் காட்டுகிறீர்கள்”- - என்று கொஞ்சினாள் அவள்.

“ ஆமாம், ஆமாம் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு உன்னை முரட்டுத்தனமாகப் பிடித்து விட்டேன். தோழிகள் கூடச் சொன்னார்கள். ரொம்பவும் அழுத்திவிட்டேனா? ஏதோ உன் தோளைக் காட்டு” என்று கூறி அவளது தோளின் மீது கையை வைத்தான்.

“ போதும் போதும், நீங்கள் ஒன்றும் எனக்கு சிகிச்சை செய்ய வேண்டாம்”

சிணுங்கினாள் அவள்.

“ ஏன்”- -

“ அது சிகிச்சையாய் இருக்காது”

“ வேறு எப்படி இருக்கும்?”

“ இம்சையாக இருக்கும்”

“ ஆனால் கசக்காது”

“ சரி சரி. உங்களுக்கு இதே பேச்சு தானா? அதை விடுங்கள். நீங்கள் எதற்காக தும்பை வனத்துக்கு அதுவும் இரவில் வந்தீர்கள்?”-

அதற்கு பதில் சொல்லாத கீர்த்திவர்மன் “ பெண்ணே, தும்பை வனத்தில் பேய் இருக்கிறதா?” என்று கேட்டான்.

“ இருக்கலாம்”

“ அதென்ன இருக்கலாம் என்கிறாய்?”

“ பிறகென்னவாம்? தும்பை வனத்துக்கும் பேய்க்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அங்கே உள்ள பேய்களைக் கணக்கிடுவதா என் வேலை?”

“ உன் பெயர் தும்பை வனத்து மோகினி என்று சொன்னாய்”

“ அதற்கென்ன?”

“ தும்பைவனத்தில் மோகினிப் பேய் இருப்பதாகப் பலரும் சொன்னார்கள்”

“ அதனால்”

“ அதாவது”

“ என்னைப் பேய் என்கிறீர்களா?”

“ இல்லை. இல்லை ஈடிணையற்ற பேரழகி நீ. உன்னைப் போய் பேய் என்று முட்டாள் கூடச் சொல்ல மாட்டான் ஆனால்..”

“ என்ன ஆனால்”

“ சந்தேகமாக இருக்கிறது”

“ எதில்? நான் பெண்ணா, பேயா என்பதிலா?”

“ அதில்லை மோகினி. உன் பெயரோ தும்பை வனத்து மோகினி என்கிறாய். இந்த தும்பை வனம் என்ற பெயர் எழுதிய சுவடி ஒன்று கையிலாயநாதன் ஆலயத்தில் கிடைத்தது எனக்கு. அங்கே என் கண்களுக்கு பெண்ணாய் தோன்றிய சிற்பம் என்னை ஏமாற்றி விட்டது. இதையெல்லாம் சேர்த்து பார்க்கும் போது- -”

“ என்னை பேய் என்று தீர்மானித்து விட்டீர்களா?” என்று கேட்ட அவள் பஞ்சணையின் கீழேயிருந்து சில பொருட்களை எடுத்து மஞ்சத்தில் போட்டாள்.

அதைக் கண்ட கீர்த்திவர்மன் “ இது இது - -” என்று ஏதோ கேட்க முற்பட்டதும் “ எல்லாம் நீங்கள் பார்த்த கிழவிக்கு உரியவை தான்” என்று கூறி நரைமுடி, முகத்திரை ஆகியவற்றை எடுத்து வீசினாள் அவள்.

“ அப்படியானால்?” என்று ஆரம்பித்த அவன் “ கிழவியாக ஏன் வேடம் போட்டாய்?” - - என்று கேட்டான்.

“ பேயாக வேடம் போட்டது கூட நான் தான்” என்றாள் அவள்.

“ இது உண்மையா” - -

“ நம்புவதும் நம்பாமல் போவதும் உங்கள் இஷ்டம்”

“ சற்று முன் வந்தானே ஒரு வாலிபன். அவன் யார்?”

" உங்களுக்கு உதவக்கூடியவர்"

" எனக்கு உதவக் கூடியவனா? எப்படி? ஏதோ என் ஆட்சி பற்றி சொன்னானே?"- -

" முழுவதும் சொல்வதற்குள் தான் அவரைத் தாக்கி விட்டீர்களே அவர் உங்களுடன் பேச வேண்டிய முக்கிய விஷயம் இருக்கிறது. அதற்காக உங்களை அழைத்தது நான்தான். நீங்கள் பார்த்து வியந்த ஜீவ சிற்பமும் நான்தான். சுவடியை விட்டு விட்டுப் போனதும் நான்தான். அதைப் பார்த்து எப்படியும் நீங்கள் தும்பை வனத்திற்கு வருவீர்கள் என்று எதிர்பார்த்தோம். நீங்களும் வந்தீர்கள்"

" பிறகு எதற்காக பேயாக என்னை பயமுறுத்தினாய்?"

" ஊர் வதந்திகளை கொஞ்சமாவது உண்மையாக்க வேண்டாமா?"- -

" இப்போதுதான் எனக்கு எல்லாம் புரிகிறது "

" இல்லை இளவரசே. புரிய வேண்டியது இனிமேல் தான் நிரம்ப இருக்கிறது"

" என்ன சொல்கிறாய்"

" உங்களிடம் பேசவேண்டியவரை காயப்படுத்தி விட்டீர்கள். அவர் நலம் பெற்று வர இரண்டொரு நாட்கள் ஆகும். ஆகவே சோமவாரத்தில் மீண்டும் தும்பை வனத்திற்கு வாருங்கள். சந்திப்போம்"

" சந்திப்பு அத்தனை முக்கியமா?"

" ஆம்"என்று கூறிய அவள் எழுந்து போய் காய்ச்சிய

பாலைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். ஆசையோடு வாங்கி அருந்தியதும் மயக்கமடைந்தான் கீர்த்திவர்மன்."

கண் விழித்த போது அவன் மாளிகையில் இல்லை. தும்பை வனத்து மண்டபத்தில் கிடந்தான்.

⌘⌘⌘⌘⌘

8. விக்கிரமாதித்தனின் கனவு

வங்கக் கடல் கடைந்த மாதவனைத் தங்கள் மன இருளைப் போக்கத் தகுந்த ஆதவனாய் நம்பி அவனது ஆயிரம் நாமங்களை இடையறாது உச்சரித்து பதினெட்டு திவ்யதேசங்களையும் ஸ்ரீவைகுண்டங்களாகவே அடித்திருந்த காஞ்சி மாநகரில் பேரழகியான தும்பை வனத்து மோகினியிடம் கீர்த்திவர்மன் சிகிச்சைப் பெற்ற மூன்று நாட்களில் அவனைப் பற்றிய நினைவே இல்லாமல் பரவசப்படக்கூடிய பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்து கிடந்தான் சாளுக்கிய விக்கிரமாதித்தன்.

காஞ்சியைக் கைப்பற்ற தான் விரும்பிய விஷயத்தை விடவும் அந்த விருப்பத்திற்காகப் பல மாதங்களாய் செய்த முயற்சிகளை விடவும் அந்த முயற்சியின் வெற்றியாய் பல்லவர் தலைநகரைப் பிடித்ததை விடவும் அதிகமாய் அவனை ஒரு விஷயம் கவர்ந்திருந்தது. அது காஞ்சிக்குள் நுழைந்த பின் நடந்தவைதான்.

படைகளுடன் பல்லவ காஞ்சியில் நுழைந்த பின் மாற்று நாட்டு மன்னர்கள் எதையெல்லாம் செய்வார்களோ அதையெல்லாம் தவறாமல் தான் செய்த போதும் மக்களிடம் உண்டாகக் கூடியது நடவாமல் முற்றிலும் மாறுபட்ட சம்பவங்களே இடைப்பட்டதை உணர்ந்து பெருவியப்படைந்தான் சாளுக்கிய சத்யாச்ரயன்.

மாற்று நாட்டு மன்னன் தலைநகருக்குள் பிரவேசித்து விட்டால் அவனோடும் அவனது படைகளோடும் ஒத்துழைக்காமல் புரட்சி செய்வதும் சூழ்ச்சியில் இறங்குவதும் வழக்கமான விளைவுகளாய் இருக்கம் போது அவையெல்லாம் தலைகாட்டாமல் இருந்தது வியப்பிற்குரிய விஷயமாய்

இருந்ததென்றால் - - -

வீதி உலா வருகையில் கோலமிட்டு வரவேற்றதும் மாலையிட்டு வாழ்த்தியதும் பகைவானையும் மன்னனாகவே கருதி திருவுடை மன்னனும் திருமாலும் ஒன்று என உரைத்ததும் பரவசப்படக்கூடிய விசேஷங்களாக இருந்தது விக்கிரமாதித்தனுக்கு.

இத்தகைய மக்களை அவன் கண்டதில்லை. கேள்விப்பட்டதும் இல்லை.

மக்கள் தான் அப்படியென்றால் அவர்களை நிர்வாகித்தவர்களும் அவனைப் பெரிதும் கவர்ந்தார்கள். அதிலும் கடிகைத் தலைவர் தரணி கொண்ட போசர், பேரமைச்சர் பிரம்ம ஸ்ரீராஜர் காரியஸ்தர் ஜேஷ்டபாத சோமயாஜி ஆகிய மூவரது தோற்றம், பேச்சு, பண்பு, அவர்களது திறமை ஆகிய அனைத்தும் அவனது கண்முன்னே நிழலாடி மும்மூர்த்திகள் என்று இவர்கள் அழைக்கப்படுவது எத்தனைப் பொருத்தமானது என்று பூரிக்கவும் செய்தான்.

இவர்களுக்கிடையில் ஆங்காங்கே காட்சியளித்த பளபளக்கும் ஆலயங்களும் அந்த ஆலயங்களில் காணுமிடமெல்லாம் சாட்சிகளாய் விரவிக் கிடந்த சிற்பச் செல்வங்களும் அவனது இதயத்தை ஊடுறுவி புளங்கிதப் படுத்தின.

மயனும் மயங்கும் தேவ கோட்டையாக காஞ்சி தோன்றியது அவனுக்கு அத்தகைய தேவ கோட்டைக்கு அதிபதியாக நந்திவர்மன் விளங்கியது ஒரு கணம் அவனுக்குப் பொறாமையாகவும் இருந்தது.

அந்த வினாடியே கையிலாய நாதன் ஆலயத்திற்குச் சென்றான் சிற்பிகளுடன். “ நான் இந்த காஞ்சியைக்

கைப்பற்றிய சம்பவத்தை இங்கே பொறியுங்கள்"என்று கட்டளையிட்டான்.

கட்டளை நிறைவேற்றப்பட்டு கல்வெட்டுக் கல் பளபளத்ததைக் கண்ட போது ஏதோ பெரிய சாதனையைச் செய்தது போலவே இருந்தது அவனுக்கு.

அப்போது அருகில் இருந்த காரியஸ்தர் விஷமமான குரலில் கேட்டார்.

" மன்னவா, இந்த கல்வெட்டுகள் அழியாமல் எப்போதும் இருக்கும் என்பது உங்கள் நினைப்பா?"

" விக்கிரமாதித்தன் மெல்ல வினவினான்." " ஏன் இப்படி கேட்கிறீர்?"

" இதைப் பல்லவர் அழிக்க மாட்டார்களா?" கேட்டார் காரியஸ்தர்.

சற்று யோசித்து விட்டு " பல்லவர்கள் என்ன, யாருமே இதை அழிக்க மாட்டார்கள்"என்றான் விக்கிரமாதித்தன்.

" அதெப்படி? யாருமே இங்கு நெருங்க முடியாமல் செய்து விடப் போகிறார்களா?"

" ஆண்டவன் உறையும் ஆலயம் இது. இதை நெருங்க யார் தடைபோடமுடியும்"

" பிறகு"

" அந்தணரே, நேற்று கடிகைக்குப் போன போது ஆசார்யார் ஒன்று சொன்னாரே நினைவிருக்கிறதா?"

" எதைக் குறிப்பிடுகிறீர்கள்"

“ அங்கே உறைபவர்களுக்கு ஊறு விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் கொடிய நரகத்தை அடைவார்கள் என்று சொன்னாரியில்லையா?”

“ அதற்கென்ன?”

“ அங்குள்ளவர்கள் வெற்று மனிதர்கள் அல்லர். மகாஜனவான்கள். ஆகவே அவர்களுக்கு ஊறுவிளைப்பவர்களுக்கு நரகம் கிடைக்கும் என்பது நிச்சயம். நான் நம்புகிறேன்”

“ அதற்கும் இதற்கும்”--

“ என்ன சம்மந்தம் என்று கேட்கிறீரா? சற்று பொறும்” என்ற சொன்ன விக்கிரமாதித்தன் சிற்பியிடம் ஏதோ சொன்னதும் அச்சிற்பி வெற்றிச் செய்தியை பொறித்த கல்வெட்டின் கீழேயே சில வரிகளை மேலும் பொறித்தான்.

பொறித்து முடிந்த பின் “ இப்போது படியும்” - - என்றான் விக்கிரமாதித்தன் காரியஸ்தரிடம். படித்த காரியஸ்தரிடம் பிரமை தட்டியது. அதைக் கவனித்த சாளுக்கிய மன்னன் “ என்ன பேசாமல் நிற்கிறீர்? அங்கே என்ன எழுதியிருக்கிறது?” என்று கேட்டான்.

“ இதை அழிப்பவர்கள் கடிகையில் உள்ள மகாஜனமான்களை அழிப்பவர்கள் அடையக் கூடிய பாவத்தை அடைவார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள் *”

---

* இக்கல்வெட்டை கையிலாய நாதர் ஆலயத்தில் காணலாம். இச்செய்தியைப் பற்றி பட்டயங்களும் தெரிவிக்கின்றன. அதன்படி விக்கிரமாதித்தன் கடிகைக் குரியவர்களை மகாஜனமான் என்று பெருமதிப்புடன் அழைத்தான் என்பதும் தெரிகிறது.

“ இதற்கென்ன சொல்கிறீர்? உலகமே மதிக்கும் இடம் இக்கடிகை. பகைவனும் மதிக்கும் இடம் இக்கலைக் கல்லூரி. கடிகையை மதிப்பவர்கள் இக்கல்வெட்டை மதிப்பார்கள். கடிகையை நம்புபவர்கள் இதை நம்பி காப்பாற்றுவார்கள். போதுமா? அது மட்டுமல்ல காரியஸ்தரே. பல்லவர் செல்வங்கள் இவ்வாலய நிலவறையில் குவிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தோம். அவற்றை வாதாபிக்கு வண்டியேற்றி அனுப்பி விடும் படி சொன்னான் கீர்த்திவர்மன். நானோ அதைத் தொடப் போவதுமில்லை. இருந்தது இருந்தபடியே விட்டு விடப் போகிறேன். அதையும் இக்கல்வெட்டில் பொறிக்கிறேன். பிறகு யார் அழிக்கிறார்கள் என்று பார்ப்போம் ” - -

காரியஸ்தர் பேச வார்த்தையின்றி நின்றார். விக்கிரமாதித்தன் மேலும் பேசமுற்பட்டு “ அந்தண சிரேஷ்டரே, இதையும் கேளுங்கள். மாற்றானின் தலைநகரைப் பிடித்த மன்னனான நான் என்ன செய்ய வேண்டும்? எனது படைகளின் பராமரிப்பு செலவிற்கு புதுப்புது வரிகளை இம்மக்கள் மீது விதிக்க வேண்டும். கடுமையான சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் உருவாக்கி மக்களைச் சுற்றி ஓர் இரும்பு வளையத்தைப் போட வேண்டும். இதுதானே சம்பிரதாயம்? நான் இந்தச் சம்பிரதாயத்தை மாற்றுகிறேன். புதிய வரிகள் எதுவும் விதிக்கப் போவதில்லை. எனது படைகளை நிர்வாகிக்க என் செல்வங்களையே பயன்படுத்துகிறேன். அது மட்டுமல்ல. ஏழைகளுக்கு நாளை முதல் நானே பொன்னும் பொருளும் தானம் செய்கிறேன். மக்களுக்கு அதிக சுதந்திரத்தை வழங்குகிறேன். கடிகையை மேம்படுத்த என்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறேன். இதன் விளைவு என்னாகும் தெரியுமா?” என்று கேட்டான்.

“ தெரியும்” என்றார் காரியஸ்தர்.

“ சொல்லும்”

“ மக்கள் உங்களை தெய்வமாக மதிப்பார்கள். பல்லவ ஆட்சியை விட சாளுக்கிய ஆட்சி சிறந்தது என்று எண்ணத் தொடங்குவார்கள். நந்திவர்மரைப் புறக்கணிக்கவும் வாய்ப்பிருக்கிறது”

காரியஸ்தரின் விளக்கம் விக்கிரமாதித்தனுக்கு பெரும் சந்துஷ்டியை அளித்தது. தற்போது அவன் கனவுலகில் பேசுவது போல் பேசினான்.

“ என்னைக் கௌரவித்த மக்களுக்கு நான் இவ்விதமாக கைம்மாறு செய்வது எனக்கு பெரும் திருப்தியாக இருக்கும். அதோடு உங்கள் மன்னன் இல்லாத போது காஞ்சியைக் கைப்பற்றியது ஒரு உறுத்தலாகவே இருந்தது எனக்கு. அந்த உறுத்தல் இனி எனது செயல்களால் அகன்று விடும். நான் நுழைந்ததை வீரமற்ற செயலாக எண்ணியவர்கள் கூட இக்காரியங்களைக் கண்டபின் என் பிரவேசத்தைப் போற்றவே செய்வார்கள். மொத்தத்தில் சரித்திரம் என்மீது அவதூறு படிய இடமளிக்காது. சிறப்பான இடத்தையே அளிக்கும்”

விக்கிரமாதித்தனின் சொற்களில் உண்மைகள் நிரம்பியிருந்ததால் சாதாரணமாக மனம் தளராத சோமயாஜி கவலையடைந்தார். கொடூரம் நிறைந்த ஓர் எதிரியால் விளையக்கூடிய மாற்றத்தை விட பெரும் மாற்றம் விக்ரமாதித்தனின் சாத்வீக முறைகளால் நிச்சயம் உருவாகும் என்பதைத் தெளிவாக உணர்ந்த அவர் செய்வதறியாமல் திகைத்தார்.

அவருக்கு இதற்கிடையே ஒரு சந்தேகமும் எழுந்தது. அதை சாளுக்கிய மன்னனிடமே கேட்டார்.

“ மன்னவா, இவ்வளவு கருணையைக் காட்டப் போவதாகச் சொல்லும் நீங்கள் பேரமைச்சரையும் கோட்டைத்

தளபதியையும் காஞ்சியை விட்டு வெளியேற்றினீர்களே - அந்த தண்டனை ஏன்?"

" நீரும் தண்டனை என்றா நினைக்கிறீர்? இல்லை காரியஸ்தரே. பேரமைச்சரை வெளியேற்றினேன். ஏன்? போய் அவரது மன்னனோடு சேர்ந்து கொள்ளட்டுமே என்று தான். அமைச்சர் இருக்க வேண்டிய இடம் அரசனுக்குப் பக்கத்தில் தானே? அதே போலத்தான் தளபதியும் விஷயமும். கோட்டை கைமாறிய பின் இங்கே அவரெதற்கு? அவரும் போய் பல்லவமன்னனை அடையட்டும். அவனுடன் உள்ள படைகளோடு சேரட்டும். அது தானே சரி?"

காரியஸ்தரால் மேற்கொண்டு அவன் மீது குறை காண முடியவில்லை.

அதை உறுதி செய்யும் விதத்தில் தான் விக்கிரமாதித்தனும் நடந்து கொள்ள ஆரம்பித்தான்.

தினந்தோறும் மக்களை சந்திப்பதும் ஏழைகளுக்குத் தானம் வழங்குவதும் அவனது வாடிக்கையாயிற்று. சைவ வைணவ ஆலயங்களில் தினந்தோறும் விழாக்களுக்கு ஏற்பாடு செய்தான். கலை நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடந்தன. பல்லவர்கள் சிருஷ்டித்த நடனங்கள் ஆலயங்களில் நடைபெற்றன. கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விக்கிரமாதித்தனும் அவனும் அரசிலோகமாதேவியும் தினமும் ஆலயங்களுக்கு விஜயம் செய்து வழிபாடுகளை நடத்தினார்கள். கடிகைக்காக கட்டளைகள் சிலவற்றை ஏற்படுத்தவும் செய்தான்.

இப்படி நான்கைந்து நாட்கள் காஞ்சி மாநகர் திமிலோகப்பட்டது. விக்கிரமாதித்தனின் கனவு வெற்றிபெறத் துவங்கிவிட்டதை அறிந்த காரியஸ்தர் இனியும் பேசாமல் இருந்தால் காஞ்சியின் முகமே மாறுபட்டு போய்விடும் என்றும் உணர்ந்து எதையாவது மாற்று ஏற்பாடுகளைச் செய்தால் தான்

காஞ்சி பிழைக்கும் என்ற தீர்மானத்துடன் கடிகையின் தலைவரான தரணிகொண்ட போசரை சந்திக்க ஆயத்தமானார்.

⌘

இரவு நேரம் முகிழ்த்து சிறிது நேரம் ஆகிவிட்டிருந்தது. பனிப் போர்வைகள் கொஞ்சம் கொஞ்சமாய் காஞ்சிமாநகரை பார்க்க முற்பட்டன. பனிக்காலமாதலால் இரவு நேரங்களில் நீண்ட நேரமாக கடை திறந்திருக்க முடியாத பலர் தத்தம் கடைகளை மூடத் தொடங்கியதால் ராஜவீதியை அடுத்திருந்த வணிகர் வீதி வழக்கமான ஆரவாரங்களை இழந்து அமைதியை நாடி சென்று கொண்டிருந்தது. மார்கழி மாதத்தில் ஆலயங்கள் ஆராதனைகளை துவக்கி விடுவதும் இரவில் சீக்கிரமாகவே இராக்கால பூஜைகளை முடித்து கதவுகளை மூடுவதும் வழக்கமாதலால் பனிமழை வலுப்பதற்குள் பற்பல ஆலயங்களின் பெரும் கதவுகள் மூடப்பட்டதால் உண்டான ஒலி கூட அத்தெய்வத் திருநகரில் செவிகளுக்கு இன்பமாகவே இருந்தது. மேற்கு வானம் சிவப்பதற்கு முன்பாகவே மதவழிபாடு நிறைவுற்றபடியால் சமணக் காஞ்சியும், பௌத்தகாஞ்சியும் மயான அமைதியைப் பெற்று விட, அதுதான் சரியான சமயம் என்று கருதிய ஆந்தைகளும், கோட்டான்களும் சத்தமின்றி அங்கே குடிபெயர்ந்து அங்கிருந்த கோரா மரங்களில் அமர்ந்து கொண்டு இஷ்டப்படி எழுப்பிய கத்தல்கள் அமைதிக்கிடையே உண்டான அலங்கோலமாய் தோன்றி பயங்கரமாக எதிரொலித்தன. காவலர்கள் ஆங்காங்கே புரவிகளில் உலவி எச்சரிக்கை செய்யும் விதத்தில் சிறு முரசுகளை அடித்ததால் மக்கள் தத்தம் இல்லங்களுக்கு விரைந்தார்கள்.

இப்படி பனிக்கால இடையூறுகளினால் சற்றே மந்தப்பட்ட நிலையில் வணிகர் வீதியில் இருந்த பெருவணிகர் இளஞ்சாத்தனது மாளிகையில் மேல் விதானத்தில் இருந்த

பள்ளியறையில் தும்பை வனத்து மோகினியும் கீர்த்திவர்மனால் தாக்கப்பட்ட வாலிபனும் படுத்துக்கிடந்தார்கள். இருவரது கால்களும் பிணைந்து கிடந்தன.

அப்பிணைப்பு வெறும் உடல் பிணைப்பல்ல இதயப்பிணைப்பின் அடையாளம் தான் என்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் அவர்களது கைகளும், கண்களும், இதழ்களும் தத்தம் விருப்பங்களை சலிப்பின்றி பரிமாறிக் கொண்டிருந்தன. அந்தப் பரிமாறல்களில் வாலிபன் முரட்டுத்தனத்தைக் காட்டினாலும் அது தேவையாக இருந்த காரணத்தால் அதற்கு இணங்கவே செய்தாள் தும்பை வனத்து மோகினி. அவளது இன்பம் பெருமூச்சுகள் பெற்றுக் கொண்டிருந்தன. அவனது சரசம் புதியதல்ல என்றாலும் அதை அவன் வெளிப்படுத்திய விதம் தினந்தோறும் மாறுபட்டுக் கொண்டே இருந்ததால் அவளது இன்ப அவஸ்தையும் வேறுபட்டுக் கொண்டே போயிற்று. அந்த அவஸ்தைகளை மேன்மேலும் அடைய விருப்பம் இருந்தாலும் அந்த வாலிபனின் தலைக்கட்டு ஒரு தடையைப் போல் தோன்றியதால் அவனை விட்டுச் சற்றே விலகிய அவள்

“கிணற்று நீருக்குப் போய் ஏனிப்படி அவசரப்படுகிறீர்கள்?”- - என்று கேட்டாள்.

“கிணற்று நீர் வற்றிவிட்டால் எதுவும் செய்ய முடியாதல்லவா? அதனால் தான்” என்றான் அந்த வாலிபன்.

“என் விஷயத்தில் அப்படியொரு நினைப்பா? உங்களுக்கு?” கேட்டாள் மோகினி.

“ ஆம்”

“ எப்படி?”

" அந்த கீர்த்திவர்மன் உன்னிடம் அதிகமாக நெருங்குகிறான். அதோடு அவனை முரடன் என்று வேறு சொல்கிறாய். முரடனின் நெருக்கம் உன்னை அழித்து விடும். என் சொந்தக் கிணறு வற்றிப் போனால் நான் என்ன செய்வது?"

" இப்படியொரு கவலை இருக்கும் போது இந்த அரசியலில் என்னை ஏன் ஈடுபடுத்தினீர்கள்?"

" வேறு வழி இல்லை. அதோடு இந்த வழி எளிய வழி. அதனால் தான் மோகினி, கீர்த்திவர்மனின் பலம் பெண்களிடம் தான் அழியும் என்று தெரிந்துதான் இந்த வழியைத் தேர்ந்தெடுத்தேன்"

" நான் ஒருத்திதான் பெண்ணா?"

" இல்லை. பெண்களில் நீ ஒருத்திதான் பேரழகி"

" அது தவறாகப் போய் விட்டது"

" எப்படிச் சொல்கிறாய்"

" பேரழகியாய் இருப்பதால் தானே பகடைக் காயாக்குகிறீர்கள்"

" பகடைக் காயாக நகர்த்துகிறேனே தவிர உன்னை வெட்டுக் கொடுக்க மாட்டேன் மோகினி. என் திட்டங்கள் அனைத்தும் தீர ஆலோசித்து தீட்டப்பட்டவை. உன்னைப் பேயாக்கி தும்பை வனத்தில் உலவ விட்டு அச்சத்தால் ஆடிப்போனவர்கள் எத்தனைப் பேரை பைத்தியங்களாக மாற்றியிருக்கிறேன் பார். அதனால்தானே ஊரில் உன் பெயரை கேட்டாலே அலறுகிறார்கள்? இந்த திட்டத்தின் மூலம் முக்கியப் புள்ளிகளை வளைக்க முற்பட்ட வேளையில் யாரும் எதிர்பாராத சாளுக்கிய பிரவேசம் நடந்தது. அதுவும் ஒரு வகையில் நல்லதுக்குத்தான். நம்மவர்களை வளைப்பதை விட

பகைவனை வளைப்பது நல்லது. அதற்கேற்ப கீர்த்திவர்மன் பெண்பித்தனாய் இருப்பது நமக்கு எளிதாகி விட்டது. எனவேதான் உன்னை சிற்பத்தருகே ஜீவ சிற்பமாய் நிற்க வைத்து வலையை விரித்தேன். அதில் சிக்கி விட்டான் கீர்த்திவர்மன். இனி அவன் என் இஷ்டப்படி தான் நடக்க வேண்டும். அநேகமாக அவன் இனி உன்னிடம் அதிகமாக நெருங்க மாட்டான். உன் மீதான ஆசையை விட முக்கிய விஷயத்தை அவனிடம் நான் பேசப்போகிறேன். அந்த அதிர்ச்சி அவனை ஆடவொட்டாமல் செய்து விடும். சரிசரி நேரமாகி விட்டது. நீ தும்பை வனத்துக்குப் போ. அங்கேதானே இன்று வரச் சொல்லியிருக்கிறாய்?"

"ஆமாம்"

" சரி புறப்படு" என்று கூறிய அந்த வாலிபன் திடீரென வெறி பிடித்தவனைப் போல் அவளை இருக்க அணைத்தான்.

அதே நேரத்தில் அப்பள்ளியறையின் சுவற்றில் பெரும் ஓசையொன்று எழுந்தது. அதையடுத்து சுவற்றின் பாறையொன்று நகர்ந்தது. அதற்குப் பின்னாலிருந்து இருட்டிலிருந்து வந்தான் ஒருவன். அவனைக் கண்டதும் இருவருமே அதிர்ச்சி அடைந்தார்கள்.

வந்தவன் கீர்த்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘

9. வாலிபன் வீசிய இடி

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை, தூய பெருநீர் யமுனைத் துறைவனை, ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கை, தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை, மூச்சை இழுத்து விடும் போதெல்லாம் அச்சுதா, அநந்தா, கோவிந்தா என்று உச்சரிப்பிலெல்லாம் அத்திருமாலையே நமஸ்கரிக்கும் அந்தணர்களின் மறையொலிகளால் நித்தமும் மங்களாசாசனம் செய்யப் படும் விண்ணகரங்கள் நிறைந்த காஞ்சிமாநகரின் வணிகர் வீதி மாளிகை விதானத்துப் பள்ளியறையில் திடீரெனத் தோன்றிய கீர்த்திவர்மனைக் கண்ட தும்பை வனத்து மோகினியும் அவனுடன் உறவாடிய வாலிபனும் ஸ்தம்பித்தார்கள் என்றால் அதற்கு காரணம் இருக்கவே செய்தது.

மாளிகைப் பள்ளியறைக்கு வரக்கூடிய வழி ஒன்று மட்டுமே இருக்கையில் அந்த வழியில் வராமல் மோகினிக்கும் வாலிபனுக்கும் மட்டுமே தெரிந்து வைத்திருந்த ரகசிய வழியில் கீர்த்திவர்மனால் எப்படி வரமுடிந்தது என்பது புரியாததே அவர்களது வியப்புக்குக் காரணமாய் அமைந்தது.

அவர்கள் அவ்வாறு ஸ்தம்பித்து நின்றதை கீர்த்திவர்மன் கவனித்து புன்முறுவலும் செய்தான்.

“ கீர்த்திவர்மனை நீங்கள் அரைகுறையாகப் புரிந்து கொண்டு செயலில் இறங்காதீர்கள். அது சரியற்றது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட” என்றான் எச்சரிக்கும் குரலில்.

“ உங்களைச் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்று எப்படி சொல்கிறீர்கள்?” என்று வினவினான் வாலிபன்.

“ புரிந்து கொண்டிருந்தால் இரண்டு காரியங்களைச் செய்திருக்க மாட்டீர்கள்”

“ எவற்றை சொல்கிறீர்கள்”

“ பேசிக் கொண்டே இருக்கும் போது என்னை மயக்கமடைய வைத்தது முதல் முட்டாள் தனம். மயக்கமடைந்த பின் என்னை தும்பை வன பாழ்மண்டபத்திலேயே கிடத்தியது இரண்டாவது முட்டாள் தனம்”.

“ எப்படி?”

“ பேயாக வந்து தும்பை வனத்தில் பயமுறுத்தியது தான் நான் என்று மோகினியே ஒப்புக் கொண்டாள். அப்படி ஒப்புக் கொண்டபின் என்னை மயக்கமடைய வைத்து அந்த மண்டபத்திலேயே கொண்டு போய் விட்டால் அந்த பாழ்மண்டபத்திற்கும் இந்த மாளிகைக்கும் ஏதாவது சம்மந்தம் இருக்கும் என்பதை ஊகிக்க முடியாதா? இப்படியொரு ஊகம் என்னிடம் ஏற்படாது என்று நடந்து கொண்டிருக்கிறீர்களே - இது முட்டாள் தனமில்லாமல் மகா புத்திசாலித்தனமா?”

“ வெறும் ஊகம் உங்களை எப்படி இங்கே கொண்டு வந்தது?”

“ ஊகம் ஆர்வத்தின் வித்து. அந்த ஆர்வம் முயற்சிக்கு வித்து. பாழ்மண்டபத்துக்கும் இந்த மாளிகைக்கு சம்மந்தம் உண்டு என்ற ஊகம் எழுந்தால் அது என்ன மாதிரி சம்மந்தம் என்று அறியும் ஆர்வம் வராதா? அப்படி வந்தால் அது பற்றி அறிய முயலமாட்டேனா? ஏற்கனவே கைலாய நாதர் சிற்பத்தைக் கண்டு தும்பை வனத்திற்கு வந்தவன் நான். அந்த ரீதியில் தான் பாழ்மண்டபத்தை ஆராய்ந்தேன். நிலவறையைக் கண்டு பிடித்தேன். இங்கு வந்து சேர்ந்தேன்.”

கீர்த்திவர்மனின் விவரத்தைக் கேட்டு இருவருமே மௌனமானார்கள்.

கீர்த்திவர்மன் சிறிது நேரம் கழித்த பின் " என் பலவீனம் உலகமறிந்த ஒன்று - வாதாபியில் எல்லோருக்கும் தெரியும். ஆனால் என்னுடைய பலம் என்ன என்பது பலருக்குத் தெரியாது. முக்கியமாக என் தந்தைக்கே தெரியாது"- என்று பீடிகையை போட்டு சற்று நிறுத்தி விட்டு இருவரையும் உற்றுப் பார்த்தான். " பிறகு ஒருவனுக்கு உதவுவதனாலும் சரி கெடுதல் செய்வதானாலும் சரி பலவீனத்தை மட்டும் தெரிந்து கொண்டு ஈடுபடாதீர்கள். பலத்தையும் தெரிந்த கொள்ளுங்கள்" என்றான்.

"நீங்கள் தான் சொல்லுங்கள் உங்கள் பலத்தை," என்று குறுக்கிட்டு கேட்டான் தும்பை வனத்து மேர்கினி. அதைச் சொல்லும் போது அவளது பார்வை அவனைச் சுண்டி இழுத்தது.

அவள் சொன்னதைக் கேட்டு கடகடவெனச்சிரித்து "அவன் என் பலமா? அது போகப் போக உங்களுக்கு புரியும்" -என்று சொல்லி விட்டு வாலிபனை நோக்கி "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"நானும் அரசகுமாரன்தான்" -என்றான் வாலிபன்.

"அது தெரிகிறது. அன்றே தெரிந்து விட்டது- என்ற கீர்த்திவர்மன் உங்கள் பெயர்?" என்று கேட்டான்.

வாலிபன் அதற்கு பதில் சொல்லவில்லை. மாறாக "கீர்த்திவர்மரே, என்னைப் பற்றிய விவரம் இருக்கட்டும். முதலில் அதைவிட முக்கியமான விஷயமிருக்கிறது பேசுவதற்கு. அதைப் பேசத்தான் அன்று வந்தேன். அவசரப்பட்டு விட்டீர்கள்" என்றான்.

அவனது பேச்சு கீர்த்திவர்மனுக்குப் பிடிபடவில்லை.

“முன்பின் தெரியாத நீங்கள் உங்களைப் பற்றிய விவரத்தைச் சொல்லாமல் முக்கிய விஷயம் பற்றிப் பேசுவதாக சொல்கிறீர்கள் இதைக் கேட்க வேண்டிய அவசியம் என்ன?” என்று கேட்டான்.

“விஷயம் உங்கள் வருங்காலத்தைப் பற்றியது. அதில் உங்களுக்கு அவசியம் இல்லையா?” வினவினான் வாலிபன்.

“என் எதிர்காலத்தைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது அதுவும் உங்களிடம்? சொல்லப்போனால் உங்கள் எல்லோரது எதிர்காலமும் என் கையில் அல்லவா இருக்கிறது?”

“இல்லை கீர்த்திவர்மரே!”

“இல்லையா? ஒரு வேளை உங்கள் கையில் இருக்கிறதாக்கும்?” விஷமமாகக் கேட்டான் கீர்த்திவர்மன்.

“கீர்த்திவர்மரே அன்று என்னைத் தாக்குவதற்கு முன்னால் நாம் பேசியது நினைவுக்கு வருகிறதா பாருங்கள். உங்களுடைய ஆட்சி நடப்பதாகச் சொன்னீர்கள். நான் இல்லை என்றேன்.”

“ஆமாம் பைத்தியகாரத்தனமாய்ப் பேசினீர்கள் அதனால் தாக்கினேன்.”

“அதனால் உண்மை பொய்யாகிவிட்டது”

“டேய், நீ என்ன சொல்கிறாய்?” என்று கோபத்தால் மரியாதையைக் கைவிட்டு கேட்டான் கீர்த்திவர்மன்.

வாலிபன் இம்முறை அசரவில்லை. “கீர்த்திவர்மரே, உண்மையைத் தான் சொல்கிறேன். இங்கே உங்கள் ஆட்சி நடைபெறவில்லை.” -என்றான்.

"வேறு யாருடைய ஆட்சி நடைபெறுகிறது? -"

"உங்கள் தந்தையின் ஆட்சி நடைபெறுகிறது."

"டேய், முட்டாள்! இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?"

"அதைப் புரியவைக்கத்தான் வந்தேன் அவசரப்பட்டு விட்டீர்கள்" -

"அப்படியென்ன எனக்கே புரியாத விஷயம் சொல் சீக்கிரம்."

பதிலுக்கு இடியை எடுத்து வீசினான் வாலிபன்.

கீர்த்திவர்மனின் முகம் ஜிவ்வென்று சிவந்தது. கையை வாளுக்கருகே கொண்டு சென்றான். "இது உண்மையா?" என்று கர்ஜித்தான்.

"போய் உங்கள் தந்தையை விசாரித்து விட்டு வாருங்கள். பிறகு பேசுவோம். நமக்கிடையே இனி ரகசியம் இல்லை?" என்று கூறிய வாலிபன் மோகினியை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

⌘

கீர்த்திவர்மனின் மனம் போர்க்களமாயிற்று. வாலிபன் கூறியது மட்டும் உண்மையாக இருந்தால் அனைத்தும் அர்த்தமற்றதாகி விடும் என்று கருதிய அவன் தான் அசட்டையாக இருந்து விட்டோமோ என்று நினைத்தான். தந்தையுடன் இது விஷயமாகப் பேசாமல் விட்டது தான் தற்போதைய விபரீதத்திற்கும் காரணம் என்று அவனுக்குத் தோன்றினாலும் தந்தையிடமிருந்து இப்படியொரு திருப்பத்தைச் சிறிதும் அவன்

எதிர்பார்க்கவில்லை. எனவேதான் அவனது கவனம் அரசியலை விடவும் ஆட்சியை விடவும் வேறுபட்ட அற்ப விஷயங்களில் ஊன்றியது. அது தற்போது விஸ்வரூபம் எடுத்து தனக்கு மிகவும் பாதகமான சூழ்நிலையை உருவாக்க விருந்ததை உணர்ந்த போது ஜீரணிக்க முடியவில்லை.

"எப்படி இந்த ஒரு முடிவிற்கு தந்தை வந்தார்? ஏன் இதைப் பற்றி என்னிடம் பேசவோ தெரிவிக்கவோ இல்லை?" - என்று தனக்குத் தானே வினவிக் கொண்ட போது தனது தந்தை வாதாபிலேயே தனக்கு அரசியலில் அதிக முக்கியத்துவம் தராமலிருந்தும். அரசியலில் ஆலோசனைகளில் தனக்கு அதிக இடம் அளிக்காமலிருந்ததும் அவனது நினைவிற்கு வந்தது. அங்கே முக்கிய ஆலோசனைகளையெல்லாம் அமைச்சரிடமும் சமணத் துறவிகளிடமுமே தன் தந்தை நடத்தி வந்ததையும் எண்ணிப்பார்த்தான்.

அதே சமயம் விக்கிரமாதித்தன் காஞ்சி படையெடுப்புக்கு ஆயுத்தம் செய்த போது கீர்த்திவர்மனை அழைத்து "கீர்த்திவர்மா மிக முக்கியமான வரலாறு படைக்க முற்படுகிறோம். இதில் நமக்கு தோல்வி வரக்கூடாது. ஆகவே இந்த முயற்சியில் உன் பங்கு மிகவும் முக்கியம். மிகுந்த அக்கறையுடன் நீ செயல்பட வேண்டும்" என்று அறிவுறுத்தியிருந்தான். அப்படிச் சொன்னவன் காஞ்சிக்கு வந்த பின் தன்னை ஒரு பொருட்டாகவே கருதாமல் இப்படி ஒரு விபரீத முடிவுக்கு வந்தது அவனைப் பெரிதும் வாட்டியது.

எனவே அது பற்றி தந்தையிடம் நேரிலேயே விசாரித்து விடுவதென்று வணிகர் வீதி மாளிகையை விட்டு அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்றான். தந்தையைச் சந்திக்கும் முன் காரியஸ்தரை சந்தித்து விட்டுப் போகலாம்

என்று தோன்றவே அவரது இல்லத்தை அடைந்தான். ஆனால் காரியஸ்தர் உறங்கிக் கொண்டிருப்பதாக காவலர்கள் கூறிவிடவே எரிச்சலடைந்த அவன் "தூக்கம் என்ன வேண்டியிருக்கிறது இவருக்கு? இளவரசனே தூங்க வில்லை. இவர் தூங்கி விட்டாரா?" "போய் எழுப்புங்கள்" என்று அதட்டினான்.

"இளவரசே நள்ளிரவு நேரம் கடந்து விட்டது ஊரே உறங்கும் நேரம் இது. பேய்கள் மட்டுமே நடமாடும் நேரத்தில் வந்து அவரை எழுப்பச் சொல்கிறீர்களே! காரியஸ்தர் வயதானவர். தொல்லை தராதீர்கள். காலையில் அவரையே வந்து தங்களைச் சந்திக்கச் சொல்கிறோம்" என்று தெரிவித்தார்கள்.

"இப்போது காரியஸ்தர் என்னைச் சந்திக்கவில்லை என்றால் நீங்கள் அனைவரும் யமனைச் சந்திக்கும் படி இருக்கும்" என்றான் கீர்த்திவர்மன் நிர்தாட்சண்யமாக.

"இப்பொழுது மட்டும் என்ன வாழ்கிறது? யமனைத்தான் பார்க்கிறோம்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவர்கள் உள்ளே போய் காரியஸ்தரை எழுப்பி அழைத்து வந்தார்கள்.

"இதன்னடா பீடை? நேர காலமே கிடையாதா இந்த சாளுக்கியனுக்கு?" என்று எரிந்து விழுந்த ஜேஷ்டபாதர் குடுமியை முடிந்து கொண்டு "வரவேண்டும் வரவேண்டும். இளவரசர் என் இல்லத்திற்கு வருவது என் பாக்கியம். வந்து அமருங்கள் ஏதாவது அருந்துகிறீரா?" என்று ஏகமாக உபசரித்தார் வாசலுக்கு வந்து.

கீர்த்திவர்மன் மசியவில்லை. "இதென்ன பேய் மாதிரி வருகிறீர்?" என்று கேட்டான் அவரது அலங்கோலத்தைப் பார்த்து.

“மன்னிக்க வேண்டும் நல்ல தூக்கத்திலிருந்து யார் எழுந்து வந்தாலும் இப்படித்தான் இருக்கும். தங்களுக்குப் பிடிக்க வில்லையென்றால் போய் சரி செய்து கொண்டு வந்து விடுகிறேன்” என்றார் காரியஸ்தர்.

“ஒன்றும் தேவையில்லை. உம்மையென்ன பெண் பார்க்கவா அழைக்கப் போகிறேன்? நான் வந்தது உம்மிடம் முக்கிய விஷயம் ஒன்றைக் கேட்கத்தான்”.

“இப்போது நள்ளிரவாக இருக்கிறது”.

“அதனாலென்ன?”

“இப்போதுதான் நினைவிற்கு வருகிறது. அடடா? இளவரசே, மூன்று நாட்களாக உங்களைக் காணவே இல்லையே, எங்கே இருந்தீர்கள்?”

“டேய் பண்டாரம், இங்கே நான் வந்தது உன் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கல்ல”.

“காரியஸ்தரை மரியாதையின்றிப் பேசுகிறீர்கள். இது சரியல்ல”.

“தப்பாகவே இருக்கட்டும் எனக்குக் கவலையில்லை. கேட்டதற்குப் பதில் சொல். என் தந்தை என்ன சொன்னார்?”

“இளவரசர் எதைக் கேட்கிறார் என்பது புரியவில்லை”.

“இது கூடப்புரியாத நீர் எப்படி காரியஸ்தராக இருக்கிறீர்? நாளையே உம்மை சிறையிலடைக்கிறேன்”.

இதைக் கேட்டு காரியஸ்தர் சிரிக்கவே “ஏன் சிரிக்கிறீர்?” என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

“மகன் சிறையிலிட விரும்புகிறார். தந்தையோ சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்கிறார். அபூர்வச் சேர்க்கை” என்றார் காரியஸ்தர்.

“காரியஸ்தரே” என்று சற்று மரியாதையாகவும் நிதானமாகவும் அழைத்தான் கீர்த்திவர்மன். அவனது குரலில் அசதி தெரிந்தது. வேதனையில் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட அவர் “இளவரசே முதலில் உள்ளே வந்து அமருங்கள். உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்” என்று வினயமாகக் கூறி உள்ளே அழைத்துச் சென்றார்.

அவரது அழைப்பு இதமாக இருக்கவே இல்லத்திற்குள் சென்று அமர்ந்த கீர்த்திவர்மன் “காரியஸ்தரே, என் தந்தை ஏதோ முக்கியதொரு முடிவு எடுத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது என்னவென்று எனக்குத் தெரியவேண்டும். அதற்கு முன் ஒன்றைக் கேட்கிறேன். கடந்த மூன்று நாட்களாக ஏதாவது விசேஷம் நடந்ததா?” என்று கேட்டான்.

காரியஸ்தருக்கு விக்கிரமாதித்தன் தன்னிடம் பேசியதையெல்லாம் சொல்ல விருப்பமில்லை. எனவே “விசேஷம் என்று எனக்குத் தெரிந்த வரை எதுவும் இல்லை” என்று கூறி கைலாதநாதர் கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டைப் பற்றி மட்டும் எடுத்துச் சொன்னார்.

“இது பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?”

“எதைப் பற்றி? கல்வெட்டு பொறித்தது பற்றியா?”

“அதில்லை கைலாதநாதர் ஆலயத்தில் இருந்த செல்வங்களையெல்லாம் தொடாமல் விடப்பட்டது பற்றிக் கேட்கிறேன்.”

“இளவரசே இது உங்கள் மன்னரது கட்டளை. இதில் நான் அபிப்ராயம் எப்படி சொல்ல முடியும்”.

“சொன்னால் என்ன? மன்னரது நடவடிக்கைகளை அமைச்சர்கள் விமர்சிப்பதில்லையா?

“விக்கிரமாதித்தருக்கு நான் அமைச்சன் இல்லை”.

“நான் கேட்கிறேன் உமது அபிப்ராயத்தைச் சொல்லும்”

“மன்னரின் செயல் மாறுபட்ட ஒன்று என்று மட்டும் சொல்ல முடியும் --”.

“இது சாளுக்கியருக்கு நஷ்டமில்லையா?-=”

“இருக்கலாம்”.

“நீர் கீர்த்திவர்மனாய் இருந்தால் என்ன செய்வீர்?”

“நான் ஜேஷ்டபாதனாய் தான் பேசமுடியும். நடக்க முடியும். வேறு யாராகவும் பேசவோ எண்ணவோ விரும்பவில்லை”.

“காரியஸ்தரே!”

“சொல்லுங்கள்”

“பாடுபட்டு தேடிய பணத்தை யாராவது கடலில் வீசியெறிவார்களா?”

“மாட்டார்கள்” - என்ற குரலொன்று அங்கே பிரவேசித்தது.

அதையடுத்து உள்ளே பிரவேசித்தான் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன். அவனுக்குப் பின்னால் நான்கைந்து சமணத்துறவிகள் நின்றிருந்தார்கள்.

⌘⌘⌘⌘⌘

10. விக்கிரமாதித்தன் திட்டம்

பச்சை மா மலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண், ஆகியவற்றைக் கொண்ட அரங்கநாதன் வைகுந்தநாதனாய் நின்றும் இருந்தும் கிடந்தும் காட்சி தந்தருளும் இடமான பரமேச்சுர விண்ணகரத்தின் அர்த்தராத்திரி பூசை முடிந்ததற்கு அறிகுறியாக எழுப்பப்பட்ட திருசன்னத்தின் ஒலி பெருவொலியாய் மட்டுமின்றித் திருவொலியாய் எழுந்து அடங்கிய வேளையில் காஞ்சி நகர காரியஸ்தரிடம் கீர்த்திவர்மன் வினவிய கேள்விக்கு பதிலைச் சொல்லியபடி வந்த சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனை விரிந்த கண்களால் பார்த்தான் கீர்த்திவர்மன்.

தானிருக்கும் இடம் தெரிந்து தந்தை வந்ததைவிட அவர் வந்த அர்த்தராத்திரி நேரமே கீர்த்திவர்மனுக்கு பெரும் வியப்பை அளித்தது.

"தாங்கள் இன்னுமா விழித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் அவர் ஏன் உறங்கவில்லை என்பதை அறிய.

விக்கிரமாதித்தனின் பதிலோ வித்தியாசமாக இருந்தது.

"நான் எப்போதுமே விழித்துக் கொண்டு தான் இருக்கிறேன் கீர்த்திவர்மா"

"புறக்கண்களுக்கு சற்று தூக்கம் தேவை தந்தையே" என்றான் கீர்த்திவர்மன்.

"தந்தைக்கு மட்டும் தானா? மகனுக்குத் தேவையில்லையா?"

"தேவையைச் சுட்டிக் காட்டும் தந்தையே தடை போடும் போது உறக்கம் வருமா?"

"என்ன சொல்கிறாய் கீர்த்திவர்மா? உன் தூக்கத்திற்கு நானா தடை போடுகிறேன்?"

"ஆம் தந்தையே. நிம்மதி கெடும் போது உறக்கம் தடை படுகிறது."

"உன் நிம்மதியை நான் எப்போது கெடுத்தேன்? தினமும் நிம்மதியாகத் தானே நீ கழிக்கிறாய்?"

விக்கிரமாதித்தன் எதைக் குறிப்பிடுகிறான் என்பது கீர்த்திவர்மனுக்குப் புரிந்தது. அதை மறுக்க முற்பட்டு "நீங்கள் நினைக்கும் நிம்மதி வேறு. நான் தேடும் நிம்மதி வேறு. நான் அரசியலைப் பற்றிச் சொல்கிறேன்" என்றான்.

"அரசியலில் நிம்மதியைத் தேடும் கனவு உனக்கு எப்போது வந்தது?" - என்று வினவிய விக்கிரமாதித்தன். "கீர்த்திவர்மா. உன் புறக்கண்களுக்கு உறக்கம் வரவேண்டுமானால் அகக்கண்கள் விழித்திருக்க வேண்டும். அவற்றை நீ உறக்கத்திலேயே ஆழ்ந்திருக்க புறக்கண்களுக்கு உறக்கமேது? உனக்கு நிம்மதி ஏது? உன்னால் எனக்கும் அவை போய் விட்டன? எந்த நிம்மதிக்காக இந்த நேரத்தில் காரியஸ்தரின் இல்லத்திற்கு வந்தாய்? உனக்கென்ன பிரச்சனை? ஓர் அதிகாரியை அகால வேளையில் தொல்லைப் படுத்துவது இளவரசனுக்கு அழகல்ல கீர்த்திவர்மா" என்று உறுதியான குரலில் கேட்டான்.

அப்போது தான் காரியஸ்தருக்கே புரிந்தது மன்னனை வரவேற்காமல் இருந்துவிட்ட விஷயம்.

“மன்னிக்க வேண்டும். வந்ததுமே உரையாடல்களில் இறங்கிவிட்டதால் தங்களை அமரச் சொல்லக் கூட மறந்துவிட்டேன். அகால வேளையும் அரை குறைத் தூக்கமும் குழப்பிவிட்டன. இந்த கோலத்தில் தங்கள் முன் நிற்பதே தவறு. தயவு செய்து வந்து அமருங்கள்” என்று வேண்டிக் கொண்டார்.

“இல்லை காரியஸ்தரே மன்னிப்பு கேட்க வேண்டியது நான் தான். இளவரசன் உங்களை அகால வேளையில் தொல்லைப் படுத்தியதற்காக மன்னியுங்கள். பொது நீதிகளுக்கு அரசவம்சத்தவர்களும் அடங்குவது தான் தர்மம்” - என்று கூறி கீர்த்திவர்மனையும் சமணத்துறவிகளையும் அழைத்துக் கொண்டு சென்றான் விக்கிரமாதித்தன்.

அவனது செயல் சாதாரணமாகத் தோன்றவில்லை காரியஸ்தருக்கு. தான் சொன்னபடி விக்கிரமாதித்தன் ஒவ்வொரு கட்டத்திலும் பெருந்தன்மையைக் காட்டுகிறான் என்பதையே தற்போதைய நிகழ்ச்சி அவருக்கு உணர்த்தியது. ஏற்கனவே அவர் பயந்தபடி விக்கிரமாதித்தனின் செயல்கள் அமைந்ததால் இந்த அறிவாளியைஎப்படித்தான்சமாளிக்கப் போகிறோம் என்று எண்ணினார். மூர்க்கனையும் முட்டாளையும் வீழ்த்துவது போல் அறிவாளிகளை வீழ்த்த முடியாதாகையால் இவனை நத்திவர்மன் எப்படி வீழ்த்தப் போகிறான் என்ற கவலை உண்டாயிற்று அவரிடம்.

⌘

இதே நேரத்தில் அரண்மனையில் விக்கிரமாதித்தனின் அந்தரங்க ஆலோசனை அவையில்

காரியஸ்தரின் இல்லத்திலிருந்து புறப்பட்டவர்கள் போய் அமர்ந்தார்கள். எதுபற்றி தந்தையிடம் விசாரிக்க வேண்டும் என்று கீர்த்திவர்மன் ஆர்வத்துடன் புறப்பட்டிருந்தானோ அந்த ஆர்வமும் வேகமும் அவனிடமே தற்போது இல்லை. விக்கிரமாதித்தன் காரியஸ்தரின் முன்னால் தன்னைக் கடிந்து கொண்டதைப் பார்த்து சற்றே கலங்கி விட்டிருந்த அவன் ஆலோசனையைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிப்பார்த்தான். விக்கிரமாதித்தன் அதை ஏற்கவில்லை.

"அகால வேளையில் காரியஸ்தரின் இல்லத்தில் பேசலாம். அந்தரங்க ஆலோசனை அவையில் கூடாதா? குறுக்கு வழிக்குத்தான் நீ தயாரா?" என்று விக்கிரமாதித்தன் கடிந்து கொள்ளவே பேச்சற்றுப் போனான் கீர்த்திவர்மன்.

அவையில் அமர்ந்திருந்த ஐந்து துறவிகளையும் ஒருமுறை பார்த்தான். அவர்கள் ஐவருமே சாளுக்கிய அரசியலில் மன்னனின் ஆலோசகர்களாக இருந்ததால் கோலம் துறவிக் குரியதாய் இருந்ததாலும் தோரணை சிலாகிக்கக் கூடியதாய் கம்பீரமாய் இருந்தது. காவியும் கமண்டலமும் கொண்ட துறவிகளை அரசியல் ஆலோசகர்களாக தன் தந்தை வைத்துக் கொண்டது ஆரம்பத்திலேயே அவனுக்குப் பிடிக்காத விஷயமாய் தான் இருந்தது. கடுக்காய்களை தேனில் ஊறவைத்த மாதிரி பொறுத்தமற்ற நியமனங்களாகவே அவைகளை எண்ணியிருந்தான் அவன்.

ஆனால் அவனது எண்ணம் பொய்த்தது. அத்துறவிகள் தோற்றம் வேறு திறமை வேறு என்பதை விரைவிலேயே உணர்த்தினார்கள். தங்களுக்குத் தெரியாத விஷயமே இல்லை என்பதை மெய்ப்பித்து வாதாபியில் பிரபலமடைந்திருந்தார்கள். அவர்களைப் பற்றி ஓரிருமுறை காஞ்சியில் கூட பேசப்பட்டன. காஞ்சியைக் கைப்பற்ற

அவர்களால் தீட்டப்பட்ட திட்டம் நிறைவேறக் கூடிய எளிய திட்டமாய் இருந்ததால் அவர்களைப் பெரிதும் மதித்தான் விக்கிரமாதித்தன். கீர்த்திவர்மன் வணிகர் வீதி மாளிகையில் கேள்விப்பட்ட திட்டம் ஒரு வேளை இத்துறவிகளின் அங்கீகாரம் பெற்ற திட்டமாக இருந்தால் எப்படி மாற்றுவது என்று யோசனையாக இருந்தது கீர்த்திவர்மனுக்கு. காரியஸ்தரின் இல்லத்திற்குத் தன் தந்தை அந்தத் துறவிகளோடு வந்ததிலிருந்தே திட்டம் அவர்களுடையதாகத்தான் இருக்கும் என்று கருதினான்.

அவனுக்குள் இருந்த அரச குலத்தவருக்கே உரிய இயற்கையான துணிச்சல் உண்டாயிற்று. எதற்கும் மோதிப் பார்க்கலாம் என்று தீர்மானித்தவனாய் பேசலானான்.

"தந்தையே, கையிலாய நாதர் ஆலயத்தில் தாங்கள் பொறித்த கல்வெட்டு பற்றி கேள்விப் பட்டேன். மிகவும் சந்தோஷம். ஆனால் அங்கிருந்த செல்வங்களைத் தொட வேண்டாம் என்று கட்டளையிட்டு விட்டீர்களாமே! இது எனக்குப் பிடிக்கவில்லை".

"கையிலாய நாதர் கோயிலில் உள்ள செல்வங்களை கவரத் தான் சாளுக்கிய நாட்டிலிருந்து நாம் வந்தோமா?" - கேட்டான் விக்கிரமாதித்தன்.

"அதற்கென்று தனியாக வரவில்லைதான். காஞ்சியைக் கைப்பற்ற வந்தோம். அதைக் கைப்பற்றி விட்ட பின் அங்குள்ள செல்வங்களைக் கவர்வதில் தடை என்ன? படையெடுப்போரின் சம்பிரதாயம் தானே இது?"

"அப்படியா?"

"ஆம் தந்தையே. இதே பல்லவர்கள் என்ன செய்தார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். தங்கள்

பாட்டனார் முதலாம் விக்கிரமாதித்தர் இக்காஞ்சியை வென்றார். சாளுக்கிய சாம்ராஜ்யத்தை விரிவு படுத்த தெற்கே மேலும் முன்னேறினார். அந்த நேரத்தில் பல்லவ ராஜசிம்மன் என்ன செய்தான்? தன் படைகளைத் திரட்டி சாளுக்கிய நாட்டிற்குச் சென்றான். நம் நாட்டைக் கொள்ளையடித்து பெரும் செல்வங்களுடன் மீண்டான்.* இது உங்கள் மனதைப் புண்படுத்தவில்லையா?"

"ராஜசிம்மனின் செயல் என் மனத்தில் ஆழ்ந்த காயத்தை உண்டாக்கியிருக்கிறது கீர்த்திவர்மா. அதில் உனக்குச் சந்தேகம் வேண்டியதில்லை"

"பிறகென்ன தயக்கம்? பல்லவன் செய்ததை சாளுக்கியன் செய்யக் கூடாதா?"

"ஆம் கீர்த்திவர்மா. நான் அப்படித்தான் நினைக்கிறேன்"

"எப்படி?"

" பல்லவர் செய்ததை சாளுக்கியர்கள் செய்யக் கூடாதென்று. ஆம் மகனே. பல்லவர்கள் செய்தது நம்மைப் பொறுத்தவரை தகாத செயல். இந்த ராஜசிம்மன் என்ன, அவனது பாட்டன் நரசிம்மவர்மன் நம் வாதாபியைக் கொளுத்தியது மட்டும் நாம் ஏற்கக் கூடிய செயலா? இல்லை. ஆனால் அவைகளை நானும் செய்தே ஆகவேண்டுமா? பழி செய்தான் என்பதால் நாமும் பழிவாங்குவது நம் வெற்றியாக அமையலாம். ஆனால் சரித்திரமும் சமுதாயமும் மெச்சக் கூடியதாக நிற்குமா? எதிரியின் நாட்டைப் பிடித்ததே கௌரவமான விஷயம் தான். அப்படி நாட்டைப் பிடித்து கொள்ளையிட வேண்டிய

---

* பக்கம் 240 தென்னிந்திய வரலாறு by நீலகண்ட சாஸ்திரி.

அவசியம் என்ன? அதற்கு பதிலாக கொலை கொள்ளை என்று இறங்காமல் தர்ம காரியங்களில் ஈடுபட்டு பெருந்தன்மையைக் காட்டினால் சரித்திரம் நம்மைச் சிறப்பாகப் பேசுமில்லையா? சரித்திரத்தில் இடம் பெறுவதை விட சரித்திரத்தில் சிறப்புப்பெறுவது ஏன்? உனக்கு பிடிக்கவில்லை?”

விக்கிரமாதித்தனின் ஆணித்தரமான பேச்சு கீர்த்திவர்மனை சற்றே மௌனமாக்கியது.

“தந்தையே, நடைமுறை பிரச்சனையைப் பற்றித் தாங்கள் ஆலோசித்தீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. பல்லவர் செல்வத்தைத் தொடக்கூடாதென்கிறீர்கள். அவர்களுக்குத்தான் தர்மம் வேறு செய்யவேண்டும் என்கிறீர்கள். இதையெல்லாம் மேற்கொண்டால் நம் படைகளைப் பராமரிக்க என்ன செய்வது? வாதாபியின் பொக்கிஷத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்கிறீர்களா? ஒருவேளை அதுவும் தீர்ந்துவிட்டால்? வாதாபி மக்களைப் பட்டினிபோட்டு வரிவசூலிக்கலாம் என்கிறீர்களா?” என்று சற்று கிண்டலாகவே கேட்டான் கீர்த்திவர்மன்.

விக்கிரமாதித்தன் அசரவில்லை.

“கீர்த்திவர்மா, சரித்திரத்தில் சிறப்புப் பெறுவதென்பது சாமான்யமான காரியமல்ல. அதற்கான முயற்சி மிகவும் சாமர்த்தியமாகச் செய்யப்படவேண்டும். இல்லையானால் சரித்திரம் நம்மை பார்த்துச் சிரிக்கும். நமது நோக்கமென்னவாக இருந்தது?. காஞ்சியைக் கைப்பற்றி நம் வெற்றியைப் பறைச் சாற்ற வேண்டும் என்பது தானே?. அதை முடித்தாயிற்று. அடுத்த நோக்கம் சரித்திரம் நம்மைப் போற்றும் படி நடந்து கொள்ள வேண்டியது. அதற்காக

என்ன செய்கிறேன்? எதிரிகள் சாதாரணமாகச் செய்யும் காரியங்கள் எதுவும் செய்யாமல் இருப்பதோடு மட்டுமின்றி மக்களுக்குக் கெடுதலும் வெறுப்பும் தரத்தக்க எல்லாக் காரியங்களையும் தவிர்க்கிறேன். மாறாக அவர்களுக்கு விருப்பமும் நல்லதும் தரக்கூடிய செயல்களில் ஈடுபடுகிறேன். இதன் விளைவு மக்களிடையே மிக விரைவில் பிரதிபலிக்கத் தொடங்கிவிடும். அந்த நிலையை உருவாக்குவது தான் நம் வேலை. அது உருவான பின் நாம் எச்சரிக்கையடைந்து ஒதுங்கிவிட வேண்டும். இல்லாது போனால் நாம் எதிர் பார்த்த விளைவு உருமாறி நிறம் மாறி நமக்கு எதிராகக் கிளம்பிவிடும். அந்த நிலை பரிசிலிக்கக் கூடியதாய் அமையுமேயன்றி பாராட்டதக்கதாய் அமையாது" என்று விளக்கினான்.

"தாங்கள் சொல்வது?"

"கீர்த்திவர்மா. நாம் இங்கே நல்லதைச் செய்து விட்ட பின் இங்கே இருக்கவேண்டிய அவசியமில்லை. இருந்தால் தானே பிரச்சனை? அது மட்டுமல்ல தொடர்ந்து நாமிங்கே இருந்தால் நமது உண்மையான நோக்கம் மறைந்து மக்களிடையே நம் ஆதிக்க நோக்கமே பெரிதாகிவிடும். நம் பெயர் சிறப்பான சரித்திரத்தில் எடுபடாது அடிபடும். ஆகவே நாம் விரைவில் சாளுக்கிய நாடு திரும்பிவிடலாம் காஞ்சியை அப்பல்லவர்களிடமே ஒப்படைத்துவிட்டு".

வணிகர் வீதி மாளிகையில் மர்மவாலிபன் கூறிய விஷயம் உறுதியாகிவிட்டதை உணர்ந்த கீர்த்திவர்மன் பெரிதும் திகைத்தான். எதையும் மேற்கொண்டு பேசவில்லை. நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்தான். உறக்கமோ அவனிடம் வருவதாய் இல்லை. அன்று மட்டுமல்ல, அடுத்த இரண்டு நாட்கள் கூட அவனை உறக்கம் ஆதரிக்கவில்லை.

அதே நிலையில் உறக்கத்தால் ஆதரிக்கப்படாத நிலையில் மூன்றாம் நாள் இரவும் தன் மாளிகை மஞ்சத்தில் படுத்துக்கிடந்தான் அவன். கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். நெடு நேரத்திற்குப்பின் கண்களைத்திறந்த போது அவனது கண்களுக்கு அருகில் அழகிய முகமொன்று தெரிந்தது. அவனது உதடுகளை நெருங்கவும் செய்தது.

⌘⌘⌘⌘⌘

11. விஜயஸ்கந்தவர்மன்

புள்ளின் வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக் கிள்ளிக் கிளைந்தானை பரந்தாமனைப் பாட விரும்பி வாயிதழ்களை விரித்தாற் போல் அல்லியரும்புகள் மலர்ந்து தங்கள் வெள்ளை உள்ளங்களை வெளியுலகிற்குக் காட்ட முற்பட்ட இரவு முகிழ்த்த வேளையில் கீர்த்திவர்மனின் தனிமாளிகையில் தூக்கமில்லாமல் தவித்தபடி தன் பஞ்சணையிலேயே கண்மூடிப் படுத்து நீண்ட நேர சிந்தனைக்குப்பின் கண்களைத் திறந்த போது தன் முகத்தை நோக்கி நெருங்கிய அழகிய பெண் முகத்தைக் கண்டதுமே எழ முற்பட்டான் கீர்த்திவர்மன்.

அவனது உதட்டிற்கு வெகு அருகே நெளிந்த அந்த அழகு முகத்தின் உதடுகள் “வேண்டாம்” - என்று வார்த்தைகளை வெளியிட்டன.

அழகு முகத்திற்கு உரியவள் அவனது பஞ்சணையிலேயே அமர்ந்து அவன் மீது சாய்ந்திருந்தாலும். அப்படிச் சாய்ந்ததில் அவளது பட்டுடல் அவனது உடம்பில் பெரும்பாலாக அழுத்த முற்பட்டதாலும், முகத்திற்கு வெகு அருகே அவளது முகம் நெருங்கிவிட்டதால் அவளது குழல் அவனது முகத்தின் இருபுறங்களிலும் விழுந்து உரசி உரசி பிரிந்ததாலும், உரசிய அக்குழல்களின் மணம் நாசியை திணறடித்தாலும், வழுவழுப்பாய் நெளிந்த உதடுகள் தேன் இதழ்களாய் பந்த ஒளியில் பிரகாசித்ததாலும், அவள் வெளியிட்ட வார்த்தை உச்சரிப்பில் அன்பு மட்டுமின்றி

ஆதரவும், காதல் மட்டுமின்றி காமமும் இதமான இழைந்திருந்ததால் கீர்த்திவர்மன் பெரிதும் திண்டாடினான் சில வினாடிகள்.

வாதாபியில் மட்டுமின்றி செல்லும் இடங்களிலெல்லாம் பெண்களின் சரீதத்தை சர்வ சகஜமாகச் சந்தித்திருந்த அவன் இப்பேரழகியின் சாதாரண நெருக்கத்தைச் சமாளிக்க முடியாமல் தத்தளித்தான். இன்பப் பூரிப்பு முழுவதுமாய் அவனிடையே விரவி சொர்க்க நினைப்புகளுக்குக் கூட்டிச் சென்றது.

“மோகினி” - என்று மெல்ல அழைத்தான் அவன்.

அவள் தன்னிலை மாறாமல் “என்ன?” என்பது போல் தலையை அசைத்த போது குழல்கள் பலமாக அவன் கன்னங்களில் உரசி அன்புக் கணைகளாய் குத்தின.

“நீ எங்கு வந்தாய்? எப்படி வந்தாய்?” - என்று கேட்டான் அவள் வந்ததை நம்பமுடியாமல்.

“நான் தான் மோகினியாயிற்றே? வருவதற்கென்ன சிரமம்?” - என்ற அவள் தனது உடலை சற்றே அசைத்தாள். உலகம் அசைவது போல் இருந்தது அவனுக்கு.

“காவல்கள் இருக்குமே?” - சந்தேகத்துடன் கேட்டான் கீர்த்திவர்மன்.

“ஆவலுக்கு முன்னால் காவல் எந்த மூலைக்கு?” - என்று கேட்ட அவள் தன் தலையை மெல்ல அவன் மார்பில் வைத்தாள்.

அவனுக்கு இதயத் துடிப்பு பலமாக இருந்தது. எங்கே நின்று விடுமோ என்று பயமாக இருந்தது. எனவே அவளைத் தன் கைகளால் அழுத்திக் கொண்டான்.

அவளாகவே சற்று புரண்டபோது தான் அவன் தெளிந்தான்.

“மோகினி” - என்று அன்புடன் அழைத்தான்

“என்ன?”

“உன் பெயர் என்ன?”

“அது தான் அழைத்தீர்களே?

“அது உன் உண்மைப் பெயரா?”

“நிலைத்து விட்ட பெயர். அனைவருமே அந்தப் பெயரைத் தான் உச்சரிக்கிறார்கள் நிஜப்பெயரைச் சொன்னால் நம்புவதற்கு எனக்கே கூட கஷ்டமாக இருக்கும்”

“எனக்கும் இந்தப் பெயர் தான் பிடித்திருக்கிறது தெரியுமா?”

“ஏன்?”

“வெறும் பெயர்களால் கவரப்படாத என்னை உன் பெயர் கவர்ந்திழுத்து விட்டதல்லவா? தும்பைவனம் என்ற பெயர் என் தூக்கத்தை கெடுத்தது. தும்பைவனத்து மோகினி என்ற பெயரைச் சொன்னவர்களெல்லாம் என்னை எச்சரித்தார்கள். அதையும் மீறி உன்னைத் தேடி வந்தேன்”

“பேய் என்று தானே?”

“தும்பைவனத்து தனிமையில் அமானுஷ்ய சூழ்நிலையில் நான் பயந்ததும் மயங்கி விழுந்ததும்

உண்மைதான். ஆனால் பேயைப்பற்றி எல்லோரும் எச்சரித்த போதே நான் பெண்ணென்று தான் சந்தேகித்தேன். பெண் என்றவுடன் எனக்கு உன்னைத் தேட வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் புறப்பட்டேன். ஆனால் நான் மயக்கமடைந்து இடம் மாறி கண்விழித்தபின் எனக்கு குழப்பமே மிஞ்சியது. அந்த வகையில் நீ சாமர்த்தியக்காரிதான்" என்று சொன்ன கீர்த்திவர்மன் "மோகினி, உன் சாமர்த்தியம் உன்னைப் போலவே அழகாக இருக்கிறது" என்றான்.

அவள் பதில் சொல்லாமல் அவனது மார்பில் தலையைப் புரட்டினாள்.

அவனே தொடர்ந்து " உன்னை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. நீ அதிஷ்டம் செய்தவள்" என்றான்.

"எப்படி?" என்று கேட்டாள் அவன் மார்பில் விரல்களால் வருடியபடி.

"மோகினி, மஞ்சத்தில் பலர் இடம் பிடிக்கலாம். ஆனால் நெஞ்சத்தில் சிலர் மட்டுமே இடம் பிடிக்க முடியும்"

"அந்த சிலரில் நான் ஒருத்தியா?"

"இரு இரு. அவசரப்படாதே. என் விஷயத்தில் நெஞ்சில் இடம் பிடித்தவர்கள் இதுவரை யாரும் இல்லை. ஏன் தெரியுமா?"

"இடமில்லையா?"

"அதில்லை பெண்ணே. நெஞ்சக் கதவை யாராலும் திறக்க முடியவில்லை. திறந்தால் தானே நுழைய முடியும்?"

"ம்"

"யாராலும் முடியாத அக்காரியத்தைச் சில நாட்களிலேயே சாதித்து நுழைந்து விட்டாய் நீ" என்று சொல்லி அவளை அப்படியே புரட்டி இறுக்க அணைத்தான்.

அவனது கடுமையைத் தாள முடியாத அவள் "ஐயோ விடுங்கள். நான் பெண்ணில்லை. பேய்" - என்றாள் அவள்.

"நீ பேயாகவே இருந்தாலும் சரி. விடமாட்டேன்" என்று கூறி கடகடவென சிரித்த அவன் பெண்கள் விஷயத்தில் தன் பலத்தைக் காட்ட முற்பட்டான்.

பெரிதும் திணறிய அவள் "இளவரசே, சற்று பொறுங்கள். கரடி கரடி ..." என்றாள்.

"கரடியா?" - என்றான் அவன் சற்றே பிடியைத் தளர்த்தி.

"ஆம். கரடி வரும் நேரமாகி விட்டது. சற்று பொறுங்கள். நான் எங்கும் போய்விடமாட்டேன்" என்று அவள் சொன்னதும் திடீரென மரக்கட்டையைப் போலானான் கீர்த்திவர்மன்.

தந்தையின் வார்த்தைகள் சோற்றில் விழுந்த கல்போல் நினைவிற்கு வந்து உறுத்தின. மஞ்சத்திலிருந்து எழுந்து கொண்டு அறையிலேயே இருமுறை உலவி விட்டு "மோகினி, அன்று நீங்கள் சொன்னது உண்மை" என்றான் ஏதோ தத்துவம் பேசுவது போல்.

அவளும் எழுந்து உட்கார்ந்தாள்.

அவளைப் பார்த்துக் கேட்டான் கீர்த்திவர்மன். "மோகினி, உன்னோடு இருந்த அந்த அரசகுமாரன் யார்?" -

என்று கூறியபடி உள்ளே நுழைந்தான் அந்த வாலிப அரசகுமாரன்.

அவனைப் பார்த்ததும் "இனி நீங்கள் உங்களை யாரென்று சொல்லலாம் என்று நினைக்கிறேன்" - என்று கீர்த்திவர்மன் பேச்சைத் துவக்கினான்.

"கீர்த்திவர்மரே, என்னைப் பற்றித் தெரியவேண்டுமானால் பல்லவர் வரலாற்றைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். அப்போது தான் புரியும்." - என்று பீடிகையுடன் பல்லவர் ஆரம்பித்த அந்த வாலிபன்" ராஜசிம்ம பல்லவருக்கு இரண்டு குமாரர்கள். ஒருவர் பரமேச்சுரவர்மர். மற்றொருவர் மகேந்திரவர்மர். ராஜசிம்மரின் மூத்த புதல்வர் என்பதால் அவருக்குப் பின் பல்லவ அரியணையில் ஏறினார் பரமேச்சுரவர்மர். ஆனால் அவர் நீண்ட காலமாக திருமணம் செய்து கொள்ளவில்லை. வாரிசு வேண்டுமே என்று வயதான நிலையில் திருமணம் கொண்டபோது அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் தான் சித்திரமாயன்"என்றான்.

"சித்திரமாயனா? அவனைப் பற்றி கேள்விப்பட்டேன். அவன் எங்கே இருக்கிறான்?" என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

"வைகுண்டத்தில்" -என்று சோகத்துடன் சொன்னான் வாலிபன்.

"அவன் உயிருடன் இல்லையா இப்போது? ஏன்?"

"சொல்கிறேன் கீர்த்திவர்மரே. அரசகுலம் ஒன்று நிர்மூலமாக்கப்பட்ட அநீதியைச் சொல்கிறேன்" என்று பீடிகையை பலமாக்கிக் கொண்டு தொடர்ந்தான் வாலிபன்



“பரமேச்சுரவர்மர் வயதான காலத்தில் மணம் புரிந்து கொண்டாரே தவிர அவரது சகோதரரான மகேந்திரவர்மர் இளவயதிலேயே திருமணம் செய்து கொண்டு பெற்ற இரண்டு புதல்வர்களில் மூத்தவன் நான். என் பெயர் விஜய ஸ்கந்தவர்மன். என் தம்பியின் பெயர் சந்திரவர்மன். பரமேச்சுரவர்மர் மாண்டபோது அவரது மகன் சித்திரமாயனுக்கு வயது பன்னிரண்டு. எனக்கு இருபத்துநான்கு. என் தம்பிக்கு இருபத்து இரண்டு.” -என்று கூறி சற்று நிறுத்தினான் வாலிபனும் பல்லவ அரச குமாரனுமான விஜயஸ்கந்தவர்மன்.

அவன் கோர்வையாகக் கூறிக் கொண்டு வந்ததைப் புரிந்து கொண்ட கீர்த்திவர்மன் கேட்டான்.

“பரமேச்சுரவர்மன் மாண்டதுமே அரசர்குலம் வழக்கப் படி அவனது மகன் சித்திரமாயனுக்கு முடி சூட்டினார்களா?”

“இல்லை. கீர்த்திவர்மரே இல்லை. அநீதி அங்கிருந்துதான் தொடங்கலாயிற்று. சித்திரமாயனுக்கு சிறு வயது என்றும் பொறுப்பில்லாதவன் என்றும் அவனுக்கு அரியணையை மறுத்து விட்டார்கள் பெரியோர்கள் என்று நடமாடும் காஞ்சிபுரக் கயவர்கள், அவனுக்கு அரியணையை மறுத்தது நியாயம் என்று வைத்துக் கொண்டாலும் அடுத்த வாய்ப்பு யாருக்கு அளித்திருக்க வேண்டும்? பரமேச்சுரவர்மரின் சகோதரர் புதல்வர்களான நாங்கள் இருக்கும் போது மூத்த புதல்வன் என்ற வகையில் எனக்கல்லவா தந்திருக்கவேண்டும்? இருபத்து நான்கு வயதான எனக்குத் தானே மரபுப்படி அரியணை சேரவேண்டும்? ஆனால் இந்தப் பெரியோர்கள் என்று பட்டம் சூட்டிக் கொண்டிருந்தவர்கள் என்ன செய்தார்கள்?

எங்கள் இருவரைப் பற்றி எண்ணிப் பார்க்கக் கூட முன் வரவில்லை. காஞ்சியிலேயே நாங்கள் இருந்தும் ஏதோ ஆள்வதற்கு ஆளே இல்லாத மாதிரியும், அரியணை அனாதையாய் இருப்பது போலவும் எண்ணிக்கொண்ட அந்தச் சதிகாரர்கள் ஆள்வதற்கு ஆள்தேடி திக்கெல்லாம் அலைந்து எங்கள் தாயாதி வழியில் வந்த இரண்யவர்மரைத் தேடிப் பிடித்து அழைத்திருக்கிறார்கள். அவர்களது அந்த முயற்சி நியாயத்திற்கு அப்பாற்பட்ட சதிமுயற்சி என்று அறிந்து தானோ என்னவோ அவர் மறுத்தார். ஆனால் சதிகாரர்களின் போலிக் கண்ணீருக்கு முடிவில் பலியான அவர் தன்னால் ஆள முடியாதென்றும் வேண்டுமானால் தன் புதல்வர்களை அணுகலாம் என்று கூறிவிட்டார்கள். பிறகு இச்சதிகாரர்களுக்கு எல்லா வகையிலும் அனுகூலமாக இருக்கக் கூடியவனாகப் பார்த்து நந்திவர்மனைப் பிடித்து வந்தார்கள். சித்திரமாயனைப் போலவே பன்னிரண்டு வயதே நிரம்பிய பாலகனைப் போய் அரியணையில் அமர்த்த அழைத்து வந்தார்கள். இக்கேலிக் கூத்தை எதிர்த்து நந்திவர்மனைத் தடுக்க முற்பட்ட என் தம்பி சந்திரவர்மன் அச்சதிகாரர்களால் கொல்லப்பட்டான். உலகிலேயே கேள்விப்படாத விசித்திரமாய் பாலகனை அரியணையில் அமர்த்தி பட்டாபிஷேகம் என்றும் கூத்து நடைபெற்றது. அதைத் தட்டிக் கேட்டான் சித்திரமாயன். அதோடு நில்லாமல் தீரமாய்ப் போராடினான். சில ஆண்டுகளுக்கு முன் அவனும் கொல்லப்பட்டான். ராஜசிம்மரின் குலத்தைப் பூண்டோடு அழித்து விடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதில் சிக்காமல் தப்பவே நான் பற்பல சிரமங்களையும் வேதனைகளையும் மேற்கொள்ளவேண்டியதாயிற்று. இந்த நிலையில் உங்களது படையெடுப்புப் பற்றி அறிந்தேன்.

என்னை இன்னாரென்று காட்டிக் கொள்ளாமல் உங்கள் ஒற்றர்களிடம் காஞ்சியைப் பற்றிய உளவுகளைச் சொல்லி வந்தேன். சொல்லப் போனால் காஞ்சியில் உங்களது படை நுழைய வேண்டிய நேரத்தைக் குறித்துக் கொடுத்ததே நான் தான். இது விக்கிரமாதித்தருக்குக் கூடத் தெரியாது.''

"உண்மையாகவா?'' என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

"சந்தேகமிருந்தால் உங்கள் ஒற்றர் தலைவர் ராவணனைக் கேட்டுப் பாருங்கள்''

கீர்த்திவர்மனைப் பொறுத்தவரை விஜயஸ்கந்தவர்மன் கூறிய பல்லவ அரியணை பிரச்சனைகளைப் பற்றி எந்த விதமான அனுதாபமும் பிறக்கவில்லை. வாதாபியைக் கொள்ளையிட்டவனான ராஜசிம்மனின் பேரில் அவனுக்கு உண்மையிலேயே பெரும் ஆத்திரமாக இருந்தால் அவனது பேரனான சந்திரவர்மன் இறந்ததும் விஜயஸ்கந்தவர்மன் ஏமாந்து நிற்பதும் அனுதாபத்திற்குப் பதில் ஆனந்தத்தையே அளித்தது.

அதுமட்டுமல்ல. அரியணைப் பெறுவதற்காக விஜயஸ்கந்தவர்மன் செய்த முயற்சிகளையும், சாளுக்கிய ஒற்றர்களுக்கு உளவு கூறியதையும் அவன் மூலமாகவே கேட்டபின் "இவனை விட பெரிய துரோகி வேறுயாரும் இருக்க முடியாது'' என்ற எண்ணமே உண்டாயிற்று கீர்த்திவர்மனுக்கு. இப்படிப்பட்டவன் ஆதாயத்திற்காக எதை வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் செய்யக் கூடுமாதலால் இவனை விட ஆபத்தானவன் காஞ்சியில் வேறு ஒருவனும் இருக்க முடியாது என்பதை உணர்ந்த போது விஜயஸ்கந்தவர்மனை அப்போதே வெட்டிக் கொன்று விட்டால் என்ன என்று தோன்றியது சாளுக்கிய இளவரசனுக்கு.

இருப்பினும் அவனது நோக்கத்தை அறிந்து கொள்ள விரும்பி அவனிடம் வினவினான்.

“நந்திவர்மனுக்கு முன்னால் தலைகாட்டவே பயப்படும் நீங்கள் சாதிக்கப் போவது என்ன?”

“நான் சாதிக்கப் போவது எதுவுமில்லை. பல்லவ அரியணையின் பேரிலான பேராசை எதுவும் எனக்கில்லை. ராஜசிம்மரின் குலத்தைப் பூண்டோடு அழித்த நந்திவர்மனைப் பழிவாங்கினால் போதும். மற்றபடி அங்கே யார் அமர்ந்தாலும் கவலையில்லை. நீங்கள் அங்கே அமர்ந்து ஓர் ஊழியனாக வைத்துக் கொண்டாலும் மகிழ்ச்சி தான்.”

“எதற்கு? என் காலையும் வாரிவிடவா?”என்று உள்ளுக்குள்ளேயே கேட்டுக் கொண்ட கீர்த்திவர்மன் “உங்களை ஊழியனாக வைத்துக் கொள்வது எனக்கும் பிடித்த விஷயம் தான். ஆனால் அதற்குத் தான் வாய்ப்பில்லாமல் போய்விட்டதே?”என்று கேட்டான்.

“எப்படிச் சொல்கிறீர்கள்?”

“நீங்கள் தானே சொன்னீர்கள்?”

“நான் சொன்னேனா?”

“அதற்குள்ளாகவா மறந்து போய் விட்டது? எனது தந்தையின் திட்டத்தைப் பற்றிச் சொன்னது நீங்கள் தானே? அவரும் நானும் புறப்பட்டுப் போய் விட்டபின் உங்களை யாரால் ஊழியராய் வைத்துக் கொள்ளமுடியும்?”

“அதற்குத் திட்டம் இருக்கிறது கீர்த்திவர்மரே”

"பலே! திட்டதுடன் தான் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறீர்களா? என்ன திட்டம்?"-

திட்டத்தை விவரித்த விஜயஸ்கந்தவர்மன் "இது நிச்சயம் வெற்றி பெறும்" -என்றான்.

"ரொம்பவும் கஷ்டம்" -என்று சொல்லியபடி பிரவேசித்தார் ஒருவர்.

அவரைக் கண்டதும் "நீயா? துரோகி"? - என்று கூவியபடி வாளை உருவினான் விஜயஸ்கந்தவர்மன்.

⌘⌘⌘⌘⌘

12. காடக முத்தரையர்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா என்று பரந்தாமனின் திருவடிகளைப் பற்றிப் போற்றுதலால் சேவடிகள் சிவந்து இவை திருவடிகளா அல்லது திருத்தாமரை இதழ்களா என வியக்கவைக்கும் திருப்பாதங்களைத் தன் சிரமேற்கொண்டு பாராயணம் செய்யும் பரமபாகவதனான நந்திவர்மனின் காஞ்சி மாநகரில் கீர்த்திவர்மனின் மாளிகையில் விஜயஸ்கந்தவர்மன் தன் திட்டத்தினை விளக்கி முடித்ததும் பிரவேசித்த புது மனிதன் நடுத்தர வயதைக் கடந்தவனாக இருந்தான்.

எளிய தோற்றத்தவனாய் இருந்தாலும் அவனது அலட்சிய தோரணை "அவன் சாதாரணமானவனல்ல" என்பதைப் புலப்படுத்தியது. மீசை நரைத்திருந்தாலும் நிறைந்திருந்தால் முகத்தின் பாதியை அதுவே மறைத்திருந்தது. இரு காதுகளிலும் பெருங்குண்டலங்கள் இரண்டு தொங்கின. தலைமுடி காடு போல் வளர்ந்திருந்தாலும் தலைப்பாகையினை அணிந்திருந்த காரணத்தால் கம்பீர தோற்றத்தையே அளித்திருந்தது. அவன் நிராயுதபாணியாய் இருந்தான்.

அவனது பேச்சை விட அவனைப் பார்த்ததிலேயே விஜயஸ்கந்தவர்மன் ஆத்திரமடைந்திருக்க வேண்டும். எனவே தான் அவனைக் கண்டதுமே "துரோகி" என்று எச்சரித்து வாளையும் உருவினான் வெட்டிப் போட.

அந்த மனிதன் அசரவில்லை. "என்னை வெட்டுவது இருக்கட்டும். முதலில் உன் தலையைக் காத்துக் கொள். நீ

இங்கு இருப்பது தெரிந்தால் உன்னை வெட்டாமல் யாரும் விடமாட்டார்கள்" -என்றான்அவன் சகஜமாக.

"இங்கே நடப்பது நந்திவர்மனின் ஆட்சியல்ல"என்றான் விஜயஸ்கந்தவர்மன் எதையோ வகையாக வாதாட முற்பட்டது போல்.

"அதற்கென்ன?"

"அவனது ஆட்சியே போய் விட்ட பின் என் தலையை வெட்டும் பிரச்சனை எப்படி வரும்?"

"நந்திவர்மனின் ஆட்சி போய்விட்டது உண்மைதான். அது எப்போது வேண்டுமானாலும் திரும்பலாம் என்பதும் உண்மை. நீங்கள் இருவரும் பேசிய பேச்சுக்களே அதை நிருபிக்கின்றன"

"அதனால்?"

"உன் தலையை வெட்ட வேண்டிய அவசியம் இன்னும் நீங்கவில்லை."

"அதற்கு மீண்டும் நந்திவர்மரின் ஆட்சி வர வேண்டும்"

"தேவையில்லை. அவரது ஆணையை நிறைவேற்ற நகர பிரமுகர்களுக்கு திட்டமான கட்டளையிருக்கிறது. அந்தப் பிரமுகர்களும் விக்கிரமாதித்தனால் நேற்று சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார்கள். அவர்களில் யாருக்காவது நீ இங்கிருப்பது தெரிந்தால் போதும். வேறு எதைப் பற்றியும் யோசிக்க மாட்டார்கள். முதலில் உன் தலையை வாங்கிவிட்டுத் தான் வேறு வேலையை பார்ப்பார்கள்."

"நீங்களும் அவர்களில் ஒருவர் தானே? நீர் மட்டும் ஏன் தலையை வெட்டாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்?"

“அதைத் தான் பேச வந்தேன். வழக்கம் போல் அவசரப்பட்டு வாளை உருவிவிட்டாய்” -என்று கூறிச் சிரித்தான் அந்த மனிதன்.

“நீர் என்ன பேசப் போகிறீர்கள் காடக முத்தரையரே?” -என்று பெயரை உச்சரித்துக் கேட்டான் விஜயஸ்கந்தவர்மன்.

அதுவரை ஏதோ நாடகத்தைப் பார்ப்பவனைப் போல் ஏளனமாய் அமர்ந்திருந்த சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன் “காடக முத்தரையரா? யாரது” -என்று கேட்டான்.

“இவரா? பல்லவ விசுவாசி. காட்டில் திரிந்து கிடந்த நந்திவர்மனைக் காஞ்சிக்கு வரவழைத்து அமர்க்களப்படுத்தியவர்களில் பிரதானமானவர். கடிகைத் தலைவரின் கையாள். காரியஸ்தரின் நண்பர். அமைச்சருக்கு வேண்டியவர். நம்மைப் பொறுத்தவரை துரோகி. இவரது வரவு நல்ல சகுணமே அல்ல” என்று படபடவென்று பேசினான் விஜயஸ்கந்தவர்மன்.

காடக முத்தரையர் கீர்த்திவர்மனை நோக்கினார். “கீர்த்திவர்மா, நான் இவனோடு பேச வரவில்லை. எனவே இவன் பேசுவது பற்றி எனக்கு அக்கறை இல்லை. உன்னோடு தான் பேச வேண்டியிருக்கிறது” என்றார்.

“காடக முத்தரையரே, நீர் அவருடன் பேச வராமல் இருக்கலாம். ஆனால் அவர் கூறியது உண்மைதானே?” என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

“அதிலொன்றும் சந்தேகமே வேண்டியதில்லை. அனைத்தும் உண்மைதான்” என்றார் முத்தரையர்.

“அப்படியானால் உங்களுக்கு என்னிடம் என்ன வேலை? நானிங்கு வந்தது பல்லவர்களை நேசிக்கவோ பல்லவ விசுவாசிகளோடு உறவாடவோ இல்லை.”

“விசுவாசி என்றுமே விசுவாசியாய் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.”

“அப்படியானால் துரோகியாகி விட்டீர்களா?”

“அரசியலில் துரோகி என்ற வார்த்தை அர்த்தமற்றது.”

“உமது செயலுக்கு வேறென்ன பெயர்?”

“அரசியல் என்றே வைத்துக் கொள்ளலாம். இருக்கும் இடம், கிடைக்கும் வாய்ப்பு, வரக்கூடிய விளைவு ஆகியவற்றுக்கு ஏற்ப நம்போன்றவர்கள் இயங்கும் காரியம் தான் அரசியல். அரசியல்வாதியானவானவன் சாதகங்களை எதிர்பார்த்தே வாழ்கிறான். அதற்கான இடமும் வாய்ப்பும் கிடைக்கும் போது அவற்றைப் பயன்படுத்துவது அவனது குணம். அதற்காக அவனது விசுவாசம் இடம் மாறுவதும் இயற்கை. இதுவரை விஜயஸ்கந்தவர்மன் பேசியது நடந்துகொண்டது எல்லாமே இந்த இயற்கை நியதியில் தான்”

“இருக்கலாம். இதையெல்லாம் நீங்கள் இருவரும் வலியவந்து என்னிடம் பேசுவதற்கு அவசியம் என்ன என்பது தான் எனக்குத் தெரியவில்லை. காஞ்சியை நாங்கள் பிடித்து விட்டோம் . ஆண்டு கொண்டிருக்கிறோம். உள்ளபடியே பார்த்தால் என்னால் கொல்லப்பட்டிருக்க வேண்டியவர்கள் நீங்கள். அப்படியிருக்க நீங்கள் வந்து என்னிடம் பயமுறுத்துவது போல் கதையளப்பது ஏன்? இதைக் கேட்டு நான் ஏமாந்து விடுவேன் என்பது உங்கள் எண்ணமா?”

“முதலில் நான் பேசுவதை முழுவதுமாகக் கேட்டு விட்டு கடைசியில் முடிவுக்கு வாருங்கள் . நானிங்கே வரும் போது விக்கிரமாதித்தனின் திட்டத்தைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள். விக்கிரமாதித்தனை வாதாபிக்கு அனுப்பிவிட்டு நீங்கள் மட்டும் இங்கேயே தங்கி காஞ்சியை ஆளலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தான். அது கஷ்டம் என்றபடி நான் குறுக்கிட்டேன். இல்லையா?”

“ஆமாம். என் தந்தையை வாதாபிக்கு அனுப்பிவிட்டு நானிங்கே அரசாளுவதில் என்ன சிரமம் இருக்கிறது?”

“கீர்த்திவர்மரே, நீங்களும் உங்கள் படைகளும் காஞ்சியில் நுழைந்து ஏறக்குறைய இருபது நாட்கள் ஆகப்போகின்றன. இதுவரை இக்காஞ்சி மாநகரத்தில் யாரிடமிருந்தும் எந்த விதமான எதிர்ப்பும் புரட்சியும் உண்டாகவில்லை. அதற்குக் காரணம் உன் தந்தை. அவரது தாராளமும், தர்மமும், பெருந்தன்மையும் பல்லவ மக்களின் கைகளைக் கட்டிவிட்டன. விக்கிரமாதித்தன் நீங்கி விட்டால் இந்தத் தடையும் நீங்கி விடுகிறது.”

“அதெப்படி? என் தந்தை போய் விட்டால் என்ன? அவர் காட்டிய அன்பையும் கருணையையும் என்னால் காட்ட முடியாதா?”

“அன்பையும் கருணையையும் காட்டுவதில் உங்களுக்குச் சிறிதும் விருப்பமில்லை என்பதை காஞ்சி உணர்ந்து கொண்டிருக்கிறது. உங்கள் இயல்புகளைப் பற்றி கடிகைவாசிகள் பேசுகிறார்கள். பரமேச்சுர விண்ணகரம் பேசுகிறது. ஆகவே விக்கிரமாதித்தனைப் போல் நடிக்கலாமே தவிர உங்களால் அவனைப் போல் உண்மையான அன்பையும் பெருந்தன்மையையும் காட்ட முடியாது”

"நடிக்க முடியும் காடக முத்தரையரே, நடிப்பினாலும் மக்களைக் கவரமுடியும்"

"அதிக நாட்களுக்கு நடித்துக் கொண்டிருக்க முடியாது. இயற்கை குணம் போகப் போக நடிப்பை மீறி தலை காட்டவே செய்யும். அதன் விளைவு பயங்கரம்."

"என்ன பயங்கரம்?"

"தங்களை ஆள்கிற மன்னன் நடித்து ஏமாற்றுகிறான் என்பது மக்களுக்குத் தெரிந்து விட்டால் அவர்களது வெறுப்பும் எதிர்ப்பு சக்தியும் மிகவும் பலம் வாய்ந்ததாகி விடும்."

"அந்த பலத்தை முறியடிக்க என் படைகள் இருக்கின்றன."

"நீ கொண்டு வந்துள்ள படைபலம் மிகவும் குறைவு. அதோடு உனக்கு எதிர்ப்பு மக்களிடமிருந்து மட்டும் தோன்றப் போவதில்லை"

"வேறு எங்கிருந்து வரும்?"

"வெளியிலிருந்து"

"ஆம். நந்திவர்மன் என்ன கையைக் கட்டிக் கொண்டா இருப்பான்? விக்கிரமாதித்தன் அகன்றபின் படைதிரட்டிக் கொண்டு வந்து அவன் வெளியிலும் மக்கள் உள்ளேயும் இருந்து எதிர்த்தால் உன் கதி அதோகதிதான்."

"என்னாலும் வாதாபியிலிருந்து படையை வரவழைக்கமுடியும்."

"அதற்குள் இங்கே கதை முடிந்துவிடும். அதோடு ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள். நீ இப்போது

காஞ்சியைப் பிடித்தது வெறும் கூத்து. நந்திவர்மன் இருந்திருந்தால் நீ இப்படி இங்கே பேசிக் கொண்டிருக்க முடியாது. அவன் பல்லவ மன்னன் மட்டுமல்ல. பல்லவமல்லன். அவனைப் போரில் வெல்வது சாதாரண விஷயமல்ல."

"பாண்டியனிடம் அவன் தோற்றதற்கு என்ன பெயர்?"

"போரின் வெற்றி என்பது பாதியில் முடிவு செய்வதல்ல. ஆரம்பத் தோல்விகள் முடிவில் அவனது வெற்றிக்கு வழிவகுத்தன. கடைசியில் தோற்றோடியது பாண்டியனேயன்றி பல்லவன் அல்ல. அதோடு பாண்டியர்கள் முதலில் வெற்றி பெற்றதற்குக் காரணம் நந்திவர்மன் போர்க்களத்திற்குச் சென்றடையாதது தான். அவன் போய்ச் சேர்ந்தபின் நிலைமை தலைகீழாகியது. வெற்றி பெற்ற பாண்டியன் தோற்றான். அந்த நந்திவர்மன் பாண்டியனைத் தோற்கடித்துவிட்டு ஆண்டியாகத் திரியப் போவதில்லை. காஞ்சியை மீட்கத் தவறாமல் வருவான். தவறாமல் மீட்பான். உன் தோல்வி உறுதி."

காடக முத்தரையர் கூறியதில் நிரம்ப உண்மைகள் இருப்பது நன்றாகத் தெரிந்தது கீர்த்திவர்மனுக்கு. அதுமட்டுமல்ல. அவரைப் பற்றிக் கூட நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. விஜயஸ்கந்தவர்மனுக்கும் அவருக்கும் வித்தியாசங்கள் நிறைய இருப்பதையும், அவனை விட முத்தரையர் சற்றே பசையுள்ள ஆசாமி என்பதையும், சாமர்த்தியம் நிறைந்தவர் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்ட கீர்த்திவர்மனுக்கு ஒரு சந்தேகம் மட்டும் தீரக் கூடியதாய் இல்லை.

விஜயஸ்கந்தவர்மன் அரசியல் ஆதாயம் தேடி தன்னிடம் நாடியிருக்கிறான். காடக முத்தரையர் வெளிப்படையாகச் சொல்லவில்லையென்றாலும் அவரது பல்லவ விசுவாசத்தைச் சாளுக்கிய விசுவாசமாக மாற்ற விரும்புவது மட்டும் புரிகிறது. இருப்பினும் இவர்களை எப்படி நம்புவது என்பது தான் அவனுக்கு விளங்கவில்லை ஆகவே அச்சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளமுற்பட்டவனாய் பேசத் தொடங்கி, "காடக முத்தரையரே. நீங்கள் சொன்ன விஷயங்களெல்லாம் உண்மை என்றே வைத்துக் கொள்கிறேன். ஆனால் இவைகளையெல்லாம் சமாளித்து வெற்றி காண வேண்டியது என் கடமைதானே?" -என்று கேட்டான்.

"நிச்சயமாக அது உங்கள் கடமை. உங்கள் பொறுப்பு. அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் ஒரு விஷயம். கடமையை உணர்ந்திருப்பது வேறு. நிறைவேற்றுவது வேறு. நான் கூறிய பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியது நீங்கள் தான். ஆனால் அது முடியுமா என்பது நீங்கள் யோசிக்க வேண்டிய விஷயம். உங்கள் ஒருவரால் நிச்சயமாக அது முடியாது என்பது எனக்குத் தெரியும் ஏன் -உங்களுக்கே தெரியும்."

"அதாவது-"

"கீர்த்திவர்மரே, உங்கள் எண்ணம் நிறைவேற நீங்களும் உங்கள் படைகளும் மட்டும் போதாது. அதற்குப் பல்லவர் தரப்பிலிருந்து சிலரது உதவியும் கிடைத்தாலொழிய நீங்கள் அரசாள முடியாது. நந்திவர்மனை வெல்லவும் முடியாது."

"துரோகத்தனத்தை விசுவாச மாற்றம் என்றும் அரசியல் என்றும் நீங்கள் வேறுவேறு பெயரிட்டுப் கொண்டாலும் நோக்கம் என்னவோ ஒன்று தான். அதாவது ஆதாயம். ஒரு வேளை அந்த ஆதாயம் என்னிடமிருந்து கிடைக்காது போனால் உமது விசுவாசம் மீண்டும் வேறு இடத்திற்கு மாறுமல்லவா?"

"இங்கு தான் ஒரு திருத்தம் தேவையாயிருக்கிறது."

"என்ன இது?"

"நான் விஜயஸ்கந்தவர்மனல்ல"

"அதாவது-"

"என் தலைக்கு விலை பேசப்படவில்லை. நான் சுதந்திரமானவன். பல்லவர்களால் ஒழிக்கப்பட வேண்டியவனாக தீர்மானிக்கப்பட்டிருப்பவனல்ல. என்னால் அங்கேயும் இருக்க முடியும். இங்கேயும் இருக்க முடியும்"

"இதைவிட வேறு ஆபத்து எனக்கென்ன இருக்க முடியும் முத்தரையரே?"

"ஆபத்தாக அமைவதும் ஆதாயமாக அமைவதும் உங்கள் செயல்பாட்டைப் பொறுத்தது'

"சரி. நீங்கள் எதிர்பார்க்கும் ஆதாயம் என்ன?"

"எதுவுமில்லை"

"எதுவுமில்லையா? எதுவுமில்லாமலா என்னை நாடி வந்திருக்கிறீர்கள். அவர்கள் தான் என்னை இங்கே அனுப்பியும் இருக்கிறார்கள்"

"உங்களை நாடி நான் வரவில்லை. என்னைத்தான் நாடியிருக்கிறார்கள். அவர்கள் தான் என்னை இங்கே அனுப்பியும் இருக்கிறார்கள்"

"யார் அவர்கள்?"

சொன்னார் அவர், "இது உண்மையா?" என்று அதிர்ச்சியுடன் கேட்டான் கீர்த்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘

13. பஞ்ச பூதங்கள்

மின்னும் கொடியுமோர் வெண்திங்களும் சூழ் பரிவேடமுமாய் இலங்கும் அரசிலையும் பீதகச் சிற்றாடையொடும் மின்னில் பொலிந்ததோர் கார்மேகம் போல் விரிந்து படிந்திருந்த இதமான பனிப்போர்வைக்குள் முடங்கிக் கிடந்த காஞ்சி மாநகரின் அரண்மனை மாளிகையில் காடக முத்தரையர் உதிர்த்த வார்த்தைகளைக் கேட்ட கீர்த்திவர்மனுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை.

ஏதோ தேனே வந்து வாயில் கொட்டியது போலிருந்தது முத்தரையரின் வார்த்தைகள். அதே சமயம் இது சாத்தியமா என்ற சந்தேகமும் உடனடியாக எழுந்ததால் முத்தரையரிடம் "இது உண்மைதானா?" என்று கேட்டதும் "ஆம். என்னை இங்கே அனுப்பியது பஞ்சபூதங்கள் தான்" என்றார் அவர்.

பஞ்ச பூதங்கள் என்று அவர் குறிப்பிட்டது சாளுக்கிய அரசியலில் பிரதான அங்கம் வகிக்கம் ஐந்து துறவிகளே என்பதையும், பஞ்ச பூதங்கள் என்ற வார்த்தைகள் மிகவும் ரகசியமானதும் அதிகாரப் பூர்வமானதுமான விஷயங்களில் பயன்படுத்துப்படும் வார்த்தைகள் என்பதையும், அந்த ரகசியம் தனக்கும், விக்கிரமாதித்தனுக்கும், அந்த ஐந்து சமணத்துறவிகளுக்கும் மட்டுமே தெரிந்த ஒன்று என்பதையும் உணர்ந்திருந்த காரணத்தால் நம்ப முற்பட்டதோடு மட்டுமின்றி பெரிதும் சந்துஷ்டியை அடைந்தான்.

விக்கிரமாதித்தன் போடும் அரசியல் திட்டங்கள் எல்லாம் இந்த பஞ்சபூதங்களின் ஆலோசனைகளைக் கேட்ட பின்பே முடிவாக்கப்படுவது வழக்கமாதலால்

தற்போது விக்கிரமாதித்தனின் திட்டத்திற்கு நேர்மாறாக விரும்பும் தன்னிடம் காடக முத்தரையரை ஏன் அத்துறவிகள் அனுப்பினார்கள் என்பது புதிராக இருந்தது கீர்த்திவர்மனுக்கு. விக்கிரமாதித்தனின் திட்டம் பிடிக்கவில்லையென்றால் அதை நேருக்கு நேர் சொல்லும் தைரியத்தையும் உரிமையையும் கொண்ட அத்துறவிகள் விக்கிரமாதித்தன் தன்னிடம் திட்டத்தை அறிவித்தபோது மௌனம் சாதித்ததும் புதிராகவே இருந்தது. மொத்தத்தில் புரியாத விஷயங்கள் பல இருந்தாலும் துறவிகள் காடக முத்தரையரை தனக்கு உதவ அனுப்பியிருந்ததில் திருப்தியடைந்த அவன் முத்தரையரிடம் வினவினான்.

“முத்தரையரே, துறவிகள் உங்களை என்னிடம் எவ்வாறு அனுப்பினார்கள்?”

“இது துறவிகளிடம் கேட்க வேண்டிய கேள்வி”

“உங்கள் பேச்சை நான் நம்பலாமா?”

“இதற்கும் துறவிகளிடமே கேட்டுக்கொள்ளலாம்”

“சந்தோஷம் முத்தரையரே”

“இதைக் கூட தெரிவிக்க வேண்டியது அவர்களிடம்தான்”

இதைக் கேட்டு கடகடவெனச் சிரித்த கீர்த்திவர்மன் “நான் இனித் துறவியரைச் சந்திக்கவேண்டுமல்லவா?” என்று கேட்டான்.

“ஆம். திருப்பருத்திக் குன்றத்தில் நாளை இரவு சந்திக்கும் படி ஏற்பாடு” -என்றார் முத்தரையர்.

முத்தரையரும் கீர்த்திவர்மனும் உரையாடல்களில் இறங்கி இருவருமே நெருங்கிக்கொண்டிருந்ததை

அதுவரையில் பார்த்துக் கொண்டிருந்த விஜயஸ்கந்தவர்மனுக்கு இதயம் கொதித்தது. அவ்விருவரது நெருக்கம் தனது மனக்கோட்டைக்கு முன்னால் அரைக்காசு பெறாது என்பதையும் உணர்ந்து கொண்ட அவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து முத்தரையரை மனத்திற்குள் சபித்துக் கொண்டான். போகிறபோக்கில் கீர்த்திவர்மன் தன்னை ஒதுக்கிவிட்டு விட்டால் தன் திட்டம் மட்டுமின்றி தலையும் போய்விடும் என்று கருதிய அவன் அது பற்றி தெரிந்து கொள்ளமுற்பட்டு "கீர்த்திவர்மரே, நானிருப்பதை மறந்து விட்டீர்களா?" என்று கேட்டான்.

கீர்த்திவர்மன் அவனை ஏதோ புழுவைப் பார்ப்பது போல பார்த்தான். பிறகு 'விஜயஸ்கந்தவர்மா, வேண்டாத விஷயங்கள் ஞாபகப்படுத்துவது ஆபத்தானது" -என்றான். அவனது குரலில் பயங்கரம் ஊடுறுவிச் சென்றது.

+அதனால் கிலியும் குழப்பமும் அடைந்த விஜயஸ்கந்தவர்மன் "வேண்டாத விஷயங்களா?" -என்று கேட்டு வாயைப் பிளந்தான்.

"ஆம்" என்றான் கீர்த்திவர்மன்.

"எதைச் சொல்கிறீர்கள்?"

"உன்னை எனக்கு ஞாபகப்படுத்தியதைத்தான்'

"அதிலென்ன ஆபத்திருக்கிறது?"

"தலை கழுத்தை விட்டுப் போவது ஆபத்தான விஷயமில்லையா?"

"நீங்கள் சொல்வது?"

"விஜயஸ்கந்தவர்மா, நீ ஏதாவது பேச முற்பட்டால் பல்லவர்கள் தேடும் உன் தலையை நானே வெட்டியனுப்புவேன். பேசாமல் போய் விடு. தானாக வந்து சேரும் துரோகிகளை நான் வெட்டுவது தான் வழக்கம்"

மிரண்டு போனான் விஜயஸ்கந்தவர்மன். அந்த சமயத்தில் குறுக்கிட்ட காடக முத்தரையர், "கீர்த்திவர்மா, இவன் தலையை வெட்டுவதொன்றும் பெரிய விஷயமல்ல. எப்போது வேண்டுமானாலும் நிறைவேற்றிக் கொள்ளலாம். இவன் நந்திவர்மனின் விரோதி என்பதால் விட்டு வைப்பதே இப்போது நல்லது. இவனை என்ன செய்யலாம் என்பதை அந்தத் துறவிகளிடமே கேட்கலாம். இவனிருக்கும் விஷயம் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிந்தால் ஒருவேளை இவனைப் பற்றித் தீர்மானிக்கக்கூடும்" என்றார்.

"அதுவரை இவனை இங்கேயே சிறைவைக்கலாம் அல்லவா?"

"வேண்டாம். இவனும் ஒரு அரசகுமாரன். அனாவசியமாக இவனை நாம் அவமதிக்க வேண்டியதில்லை. அதோடு இவன் எங்கேயும் போய் விட முடியாது"

தன்னை இருவருமே மிகவும் அற்பமாக எண்ணி பேசிக் கொண்டிருப்பதாகவே பட்டது விஜயஸ்கந்தவர்மனுக்கு. எனவே தன் வீரபிரதாபத்தை உணர்த்த விரும்பி "கீர்த்திவர்மா, நீங்கள் இருவரும் என்னை அற்பமாக எடை போடுகிறீர்கள். நான் மிகவும் ஆபத்தானவன்" -என்றான் மிரட்டும் குரலில்.

"எனக்குத் தெரிகிறது. முத்தரையருக்குத் தெரியவில்லையே?" -என்றான் கீர்த்திவர்மன்.

"உனக்குத் தெரிகிறதல்லவா? அந்த வரையில் நீ மரியாதையுடன் நடந்து கொள்"

"நடந்து கொள்ளத்தான் விரும்புகிறேன். இவர் தானே தடுக்கிறார்!"

"அவரென்ன தடுப்பது?"

"அப்படியானால் சரி. நீயே விரும்பிவிட்டபின் நான் தயங்குவது சரியல்ல. என் வாளுக்கு இரையாகும் முதல் பல்லவன் நீயாக இரு. அதுவும் என் ஜன்மப்பகைவன் ராஜசிம்மனின் பேரனான நீ இந்த வாளுக்கு ஏற்றவன் தான்"

விஜயஸ்கந்தவர்மன் ஏதோ கேட்க முற்பட்ட போது கீர்த்திவர்மன் அது வரை காட்டி வந்த குறைந்தபட்ச மரியாதைகளையும் அறவே விட்டு விட்டு, "டேய் முட்டாள், தேவையில்லாமல் பேசும் உன் பேச்சை நாய்கள் கூட கேட்க விரும்பாது. உனக்கு உயிர் மேல் ஆசையிருந்தால் வாயை மூடிக்கொண்டு திரும்பிப்பார்க்காமல் போய் விடு. தேவைப்படும் போது அழைக்கும் இடத்திற்கு மரியாதையாக வந்து சேர். இல்லையென்றால் தோலை உரித்து உப்பைத்தடவிச் சாகும் வரை சித்திரவதை செய்வேன்" - என்றான்.

விஜயஸ்கந்தவர்மனுக்கு ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பேய்கள் வந்து அறைந்தாற் போலிருந்தது. இருவரையும் ஒரு முறை பார்த்து விட்டு விடுவிடுவென வெளியேறிச் சென்றான்.

"சரி கீர்த்திவர்மா. நீ போய் துறவிகளைச் சந்தித்துப் பேசு. நான் பிறகு சந்திக்கிறேன்" -என்றார் காடக முத்தரையர்.

அவரை ஒருமுறை ஊன்றி நோக்கிய கீர்த்திவர்மன்



"காடக முத்தரையரே, உங்களை நம்பிச் செல்கிறேன். அதில் ஏதாவது பொய் இருப்பதாக மட்டும் எனக்குத் தெரிந்தால் நீர் இதுவரை கேள்விப்பட்டிராத சித்திரவதைகளை உமக்குச் செய்வேன். ஞாபகமிருக்கட்டும்" -என்று மிரட்டினான்.

"நான் கோழையுமல்ல. முட்டாளுமல்ல. வருகிறேன்" -என்று மிடுக்குடன் கூறிவிட்டு அகன்றார் முத்தரையர்.

அவர் சென்றதும் தும்பைவனத்து மோகினியிடம் பேச முற்பட்டான் கீர்த்திவர்மன். அவள் அங்கில்லை. எப்போதோ அகன்று விட்டிருந்தாள்.

⌘

தனித்து விடப்பட்ட கீர்த்திவர்மன் மீதி இரவை திருப்தியோடு கழிக்க முற்பட்டு பஞ்சணையில் படுத்தான். உறக்கம் அவனை உடனடியாக ஆட் கொண்டது. பொழுது விடிந்து இரண்டு நாழிகைகள் கடந்தும் கூட அவன் எழுந்து கொள்ளவில்லை. சேடிப் பெண்கள் ஓரிரு முறை வந்து பார்த்துவிட்டு எழுப்ப மனமில்லாமல் அகன்றார்கள். நண்பகலுக்குச் சற்று நேரம் கழித்தே கண் விழித்த அவன் நீராடி உணவருந்தினான். தன் தந்தையை சந்தித்தபோது மௌனமாகவே இருந்து கொண்டு அவர்களை அனுப்பிவைத்தான். அவனது நினைவெல்லாம் துறவிகளைப் பற்றியும் பிற்காலத்தைப் பற்றியதாகவும் இருந்ததால் இரவு நேரம் எப்போது வரும் என்பதிலேயே கவனமாக இருந்தான்.

பொழுது சாய்ந்தபின் வேகவதியாற்றங்கரைக்கு அப்பாலிருந்த திருப்பருத்திக் குன்றத்திற்கு செல்லமுற்பட்ட

போது அவனுக்கு ஒரு யோசனை எழுந்தது. உடனே தன் உடுப்புகளை கழற்றி வீசிவிட்டுத் துறவிக்குரிய உடைகளை அணிந்து கொண்டு புறப்பட்டான்.

காஞ்சியின் தென் மேற்குப் பகுதியில் இருந்த திருப்பருத்திக்குன்றம் சமணர்களின் பிரதான இருப்பிடமாக இருந்தபடியால் சமணக்காஞ்சி என்றே அக்காலத்தில் அழைக்கப்பட்டது. இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. காஞ்சியைச் சார்ந்த சமணர்கள் அனைவருமே அங்கு வாழ்ந்து வந்தது மட்டுமின்றி பெரும்பாலோர் ஆடை தரிக்காத திகம்பரர்களாக இருந்தபடியால் அவ்வூர் ஒரு தனி உலகமாகவே இருந்தது. அவர்களது செல்வாக்கு மட்டும் மிகவும் உயர்ந்திருந்த காரணத்தால் மக்கள் அக்காஞ்சிக்குத் தனி அந்தஸ்து கொடுத்து வைத்திருந்தார்கள்.

ஆனால் பல்லவர் ஆட்சி மேன்மையுறத் தொடங்கிய போது சைவ வைணவ மதங்கள் தோன்றி மிக வேகமாக வளர்ந்ததாலும் அவற்றின் சமயக் கொள்கைகள் வாழ்வியலுக்கு மிகவும் இசைந்ததாக அமைந்திருந்தாலும் மக்கள் அம்மதங்களின் பால் பெருவாரியாக ஈர்க்கப்பட்டார்கள். சமணர்களது கடுமையான சமயக் கொள்கைகளின் மீது மட்டுமின்றி ஆடையின்றித் திரிந்த அவர்களது கோலத்தின் மீதும் மக்களுக்கு வெறுப்பு உண்டாயிற்று. அதோடு சமணனாக இருந்த மகேந்திரவர்மன் திருநாவுக்கரசர்பால் ஈர்க்கப்பட்டு சைவ மதத்தைத் தழுவியபின் சமணமதம் செல்வாக்கை இழந்து எப்போதும் அடையாத சோக நிலையை அடைந்தது.

திகம்பரர்களில் பலர் கங்கநாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்குமாய் சென்றார்கள். பலர் ஆடைகளைத் தரிக்கத் தொடங்கி இகம்பரத் துறவிகளானார்கள். ஆடை தரிக்காதோர் தொகை குறைந்தது. சமணக்காஞ்சியின்

சிறப்பும், செல்வாக்கும் குறைந்தது. மகேந்திரவர்மனுக்குப் பின் வந்த பல்லவர்கள் அனைவருமே சைவராகவோ வைணவராகவோ மட்டுமே அமைந்த காரணத்தினாலும் சைவ அடியார்கள் மற்றும் வைஷ்ணவ ஆழ்வார்களின் தாக்கம் கடுமையாய் இருந்தாலும் சூல் கொண்ட கார்மேகம் வெளுத்து உலர்ந்தாற் போன்ற நிலையை எய்தியது திருப்பருத்திக்குன்றம். அங்கே செல்பவர்களின் தொகை குறைந்தது. அவசியமும் குறைந்தது.

அவ்வூர் பற்றிய இவ்வரலாற்று விஷயங்கள் கீர்த்திவர்மனுக்கு அவ்வளவாகத் தெரியாது. எனவே ஏதேதோ சந்தேகங்களைக் கற்பித்துக் கொண்டு துறவியாய் அங்கே சென்றபோது அங்கிருந்த துறவிகள் எளிதில் அடையாளம் தெரிந்து கொண்டது மட்டுமின்றி வாய்நிறைய வார்த்தைகளால் வரவேற்று உபசரித்தபோது பெரும் சந்துஷ்டியை அடைந்த அவன் "எப்படி என்னை அடையாளம் தெரிந்து கொண்டீர்கள்" என்று கேட்டான்.

அவனது ஆச்சரியம் இந்த அடையாள விஷயத்தில் மட்டுமல்ல. துறவிகளின் அனைத்த பேச்சு, செயல் ஆகிய அனைத்திலுமே உண்டாயிற்று. கோலம் துறவிக் கோலம் என்றாலும் தங்களுக்கிருந்த செல்வாக்கு, தைரியம், அதிகாரம், வசதி ஆகியவற்றால் அத்துறவிகள் ஐவரும் என்றுமே துறவிகளாய் வாழ்ந்ததில்லை. இதையெல்லாம் பற்று என்று கூறி விட்டு விட வேண்டும் என்ற நியதி அச்சமயத்திற்கு இருந்ததோ அதனை அவர்களுக்கு இருந்த செல்வாக்கு முதலியவை வழக்கத்தை விட அதிகமாக ஒட்ட வைத்திருந்தது. தங்களுக்கிருந்த சக்தி சாளுக்கிய நாட்டை கட்டுப்பாட்டில் வைத்திருந்த காரணத்தாலேயே இந்த உலகைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பஞ்ச பூதங்களின் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆதாயம் ஆகியவைகளாகவே தங்களைக் கருதி பஞ்ச பூதங்கள் என்ற

பட்டத்தைச் சூட்டிக் கொண்டது மட்டுமின்றி தங்கள் பெயரையும் அந்த இயற்கை சக்திகளுக்குரிய பெயருடனே சேர்த்துக் கொண்டார்கள். நீரடிகள், நிலவடிகள், தீயடிகள், காற்றடிகள் மற்றும் ஆகாய அடிகள் என நாமகரணம் சூட்டிக் கொண்டு அனைவரையும் குட்டிக்கரணம் போட வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட சக்தி படைத்தவர்கள், விக்கிரமாதித்தனைத் தவிர யாரையுமே மதிக்க முற்படாதவர்கள் இரு சேர நின்று தன்னை வரவேற்றது கனவல்ல என்பதை உணர கீர்த்திவர்மனுக்கு சற்று நேரமாயிற்று.

சமணர் காஞ்சியில் இருந்த தீத்தங்காரர் ஆலயத்திற்குள் இருந்த தர்மகுரா மரத்தையடுத்த நிலவறை மண்டபத்திற்கு அழைத்துப் போய் அங்கிருந்த வசதி குறைந்த அறையில் அமரவைத்து "இளவரசரது வரவு இனி அனைவருக்கும் நல்வரவாகும்" என்று அத்துறவிகளில் தலைவராக இருந்த தீயடிகள் கூறியபோது தான், தன்னை அடையாளம் தெரிந்து கொண்டது எப்படி என்று வினவினான் கீர்த்திவர்மன்.

"தங்களைக் காடக முத்தரையர் சந்திக்கப் புறப்பட்டதிலிருந்து பஞ்ச பூதங்களில் ஒருவரான காற்றடிகள் நிழல் போலவே தொடர்ந்தார். காற்று நுழையாத இடமோ காணாத விஷயமோ இருக்காது. காற்றடிகளும் அப்படித் தான். நீங்கள் வேடம் தரித்தது முதற் கொண்டு கண்டு தொடர்ந்தவராதலால் எங்களுக்குக் கஷ்டமில்லை. உங்களது இங்கிதம் மிகவும் சிலாகிக்கத் தகுந்தது. இளவரசர் கோலத்தில் வந்தால் சங்கடங்கள் தோன்றியிருக்கலாம். அந்த நிலையை சாமர்த்தியமாகத் தவிர்த்துவிட்டீர்கள்" -என்றார் தீயடிகள்.

"அடிகளே, நான் எப்படிப்பட்டவன் என்பது உங்கள் ஐவருக்கும் தெரியும். உங்களைப் பற்றி நான்

அறியாதவனுமல்ல. நாம் இதுவரை மன்னரின் முன்னிலையில் தான் சந்திக்க முற்பட்டதில்லை. நீங்களோ விரும்பியதில்லை. தற்போதோ பல்லவர் தரப்பைச் சேர்ந்த நந்திவர்மனுக்கு மிகவும் வேண்டியவனை அனுப்பி என்னை என் தந்தை இல்லாத நிலையில் சந்திக்கிறீர்கள். இந்த திடீர் திருப்பத்தை அதிர்ச்சியாகவே நினைக்கிறேன் நான். இதை எப்படி நான் சந்தேகிக்காமல் எதிர்கொள்ள முடியும்?" என்று மிகவும் தெளிவாக வினவினான் கீர்த்திவர்மன்.

"இளவரசே, தங்கள் கேள்வி மிகவும் நியாயமானது. உங்களுக்கு உண்டாகியுள்ள அதிர்ச்சியும் சரிதான். எங்கள் நிலை கூட ஒருவகையில் பெரியது என்பதை உணர்வீர்கள். அதற்குப்பிறகு எங்களை நம்ப முற்படுவீர்கள்." என்றார் தீயை விட சக்தி வாய்ந்த தீயடிகள்.

"உங்களுக்கு அதிர்ச்சியா? அதென்ன?"

சொன்னார் அடிகள்.

பேரதிர்ச்சி அடைந்தான் கீர்த்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘

14. தீயடிகள் திட்டம்

பஞ்சவர் தூதனாய் பாரதம் கைசெய்து நஞ்சுமிழ் நாகம் கிடந்த நற்பொய்கை புக்கு அஞ்ச பணத்தின் மேல் பாய்ந்திட்டருள் செய்த அஞ்சன வண்ணனான * திருமாலின் அருளலைகள் திருவொலிகளாய் ஊரெல்லாம் வீசி பாகவதர்களின் செவிகளிலெல்லாம் தேனாக விழச் செய்யும் காஞ்சிமாநகரில் சைவரும் வைணவரும் கோடு கிழித்து பிரித்து விட்டது போல் வேகவதி ஆற்றினால் பிரிக்கப்பட்ட திருப்பருத்திக் குன்றத்தில் தன் அதிர்ச்சியை வெளியிட்டக் கீர்த்திவர்மனிடம் பஞ்ச பூதத் துறவிகளின் தலைவர் தங்கள் பக்கம் உண்டான அதிர்ச்சியை வெளியிட அதைக் கேட்டு அவன் பேரதிர்ச்சி அடைந்தான் என்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது.

அது பற்றி கீர்த்திவர்மன் பேச முற்பட்டபோது தீயடிகள் குறுக்கிட்டு "கீர்த்திவர்மரே, தங்கள் தந்தையார் முடிசூடிய போது வாதாபின் நிலை என்ன என்பது தெரியுமல்லவா?" என்று கேட்டார்.

"கேள்விப் பட்டிருக்கிறேன். முடிசூடும் விழா கூட அண்டை நாடுகளில் கடன் வாங்கி நடத்தப்பட்டதாமே?" -

"ஆம், பல்லவர்கள் நமது நாட்டைச் சூறையாடியதின் விளைவும், பெருவளநல்லூரில் பாண்டியனின் துரோகத்தால் சாளுக்கிய சக்கிரவர்த்தி தோற்றதின் விளைவும் உன் தந்தை முடிசூடியபோது வாதாபியை தரித்திரக் காடாக்கியிருந்தது. அந்த வாதாபி இப்போது எப்படி இருக்கிறது? இங்கே காஞ்சியில் கைப்பற்றுவதற்கு செல்வங்கள் இருந்தும் அவைகள் வேண்டாம் என ஒதுக்கும் அளவிற்கு, இங்குள்ளவர்களுக்கு தானம்

---

*பெரியாழ்வார் திருமொழி 1-8-3

செய்யும் அளவிற்கு உயர்ந்திருக்கிறது சாளுக்கியர் தலைநகர். இந்த வளர்ச்சிக்கு உதவியவர்கள் யார் என்று தங்களுக்குத் தெரியுமா?" என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார் துறவி.

"பஞ்ச பூதங்களான நீங்கள் தான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்".

"இளவரசரே, கீழே விழுந்து கிடப்பவனை தூக்கி நிற்கவைக்கும் சாதாரண முயற்சி போன்றதல்ல இக்காரியம். சப்த நாடியும் ஒடுங்கிக் கொண்டிருந்த உடலைத் தேற்றி சிகிச்சை அளித்து நடமாட விட்டு நடனமாட வைத்து பின் நாட்டியத்திற்கே ராணியாக்குவதைப் போன்ற கடுமையான முயற்சி இது. இதைச் சமணர்கள் செய்தார்கள். எங்கள் தலைமையில் செய்தார்கள். இதற்கு அவர்கள் செய்த தியாகங்களையும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கவேண்டும்" -

"கண்டுமிருக்கிறேன்" -

"அதை உணர்ந்தார் உங்கள் தந்தை. எந்த தரித்திரக் காட்டைத் தரணி போற்றும் தலைநகராக மாற்றினோமோ - அதற்கு நன்றிக் கடன் போல் எங்கள் ஐவருக்கும் மிகப்பெரிய இடத்தை சாளுக்கிய அரசியலில் அளித்தார். ஆலோசனை அளிக்கும் அதிகாரத்தை வழங்கினார். எங்கள் சொற்படி அவரும், நாடும் நடந்தன. காஞ்சியைக் கைப்பற்றியது வரை எந்த முறையாவது - நஷ்டத்தையாவது காணமுடிந்ததா எங்கள் தந்தையால்? இல்லை என்று அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார்."

"நானும் கூடத்தான். அதில் உங்களுக்குச் சந்தேகம் வேண்டியதில்லை" -

"உலகை பஞ்சபூதங்கள் எப்படி காத்து வருகின்றனவோ அவ்வாறே சாளுக்கிய நாட்டை நாங்கள் ஐவர் தாங்குவதால் எங்களையும் பஞ்சபூதங்கள் என்றே அழைத்தார் உங்கள் தந்தை. சாளுக்கிய நாட்டை அப்படிக் கண்ணும் கருத்துமாய்

தாங்கி வந்த நாங்கள் இன்றுவரை தோள்களை விலக்கிக் கொள்ளவில்லை. இதில் உங்களுக்குச் சந்தேகம் உண்டா?”

“இல்லை”

“தந்தையாருக்கு இருப்பதாகத் தெரிகிறது”

“அதனால் தான்----------”

“அதனால்தான் அந்த காரியத்தைச் செய்திருக்கிறார்” என்று உணர்ச்சிகளைக் கைவிட வேண்டிய துறவியான தீயடிகள் உணர்ச்சி வசப்பட்டு கூறி நிறுத்திவிட்டு மேலும் தொடர்ந்தார்.

“காஞ்சியை விட்டுவிட்டு வாதாபிக்குத் திரும்பி விடுவது என்று விக்கிரமாதித்தர் தன்னிச்சையாக முடிவு செய்து உங்களிடம் அறிவித்தது மட்டுமின்றி மாற்றப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.எங்களிடம் இதுபற்றி ஆலோசிக்கப்படவில்லை. குறைந்த பட்சம் பிறரிடம் வெளியிடுவதற்கு முன்பாவது எங்களிடம் தெரிவித்திருக்கலாம் கீர்த்திவர்மரே, இப்படியொரு அவமானத்தைச் சுமக்க நாங்கள் செய்த தவறு என்ன?”

“பேரதிர்ச்சியாக இருக்கிறது அடிகளே” -

“விக்கிரமாதித்தர் இப்படிச் செய்தது எதனால் என்று உங்களால் கூற இயலுமா?”

இதற்கு கீர்த்திவர்மன் பதில் கூறும்முன் குறுக்கிட்டு கேட்டார் நீரடிகள்.

“சுவாமி, மாமன்னருக்கு தன்னிஷ்டம் என்று ஒன்று இருக்கக் கூடாதா? அப்படியொன்று இருந்து அதை அவர் நிறைவேற்ற முன்வரக் கூடாதா?” -

“நீரடிகளே, தன் விருப்பம் என்று சொன்னீரே, இது மன்னருக்கு மட்டுமல்ல நமக்கும் வரக்கூடியது தான். இல்லையா?” - என்று கேட்டார் தலைமைத் துறவி.

“ஆமாம். ஆமாம். நாம் துறவிகளானாலும் துறவறம் மேற்கொள்ளவில்லை” -என்று ஒப்புக்கொண்டார் நீரடிகள்.

“ஆனால் எந்த சமயத்திலாவது நாம் நம் சுயவிருப்பத்தை நிறைவேற்ற முற்பட்டதுண்டா? விக்கிரமாதித்தரின் நலன், சாளுக்கியரின் நலன் ஆகியவற்றுக்காகத் தான் நினைத்து செயல்பட்டிருக்கிறோம். இதை ஏன் மன்னர் புரிந்து கொள்ளவில்லை?”

“அவர் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கமாட்டார்” என்றார் நிலவடிகள்.

“அப்படியானால் புரிந்து கொண்டும் நன்மை ஒதுக்கியிருக்கிறார் என்று சொல்லலாமா? இக்காரியத்தில் மட்டும் நம்மை ஒதுக்க வேண்டிய அவசியமென்ன?”

துறவிகள் இருவரும் இப்படி வாதித்துக் கொண்டதை நிறுத்த முற்பட்ட கீர்த்திவர்மன் இடையே குறுக்கிட்டு “அடிகளே, என் தந்தை உங்களிடம் கேட்காமல் எடுத்த முடிவுக்குக் காரணம் தெரியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அவரிடம் இது பற்றிக் கேட்டீர்களா?”- என்று கேட்டான்.

“இளவரசே, உரிமைகளைக் கேட்டுப் பெறும் அவசியத்தை நாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை” - என்றார் தீயடிகள்.

"குறையை என் தந்தைக்குச் சுட்டிக் காட்டலாம் அல்லவா?"

"விக்கிரமாதித்தர் இதை ஏதோ அவசரப்பட்டோ எங்களை மறந்துவிட்டோ செய்யவில்லை. ஆகவே இதில் சுட்டிக் காட்ட எதுவுமில்லை"

"அப்படியானால் நீங்கள் செய்திருக்கும் முடிவு?" -

"விக்கிரமாதித்தரின் முடிவுக்கு மாறுபட்ட ஒன்றேயன்றி சாளுக்கிய நாட்டுக்கோ மக்களுக்கோ தீங்கிழைக்கக் கூடிய முடிவல்ல" -

"தந்தையார் உங்களைக் கலந்தாலோசிக்கவில்லை என்ற காரணத்திற்காகத் தான் இந்த நிலைக்கு வந்தீர்களா?"

"இல்லை. அப்படிப்பட்ட காரணம் மட்டுமே இருந்தால் உங்களிடம் வர மாட்டோம். நாங்கள் இந்த நிலைக்கு வந்திருப்பதற்குக் காரணம் சாளுக்கிய நாட்டின் லாபத்தைக் கருதினான்".-

"அதாவது-"

"மன்னரின் முடிவு சாளுக்கிய நாட்டிற்கு எந்தப் பயனையும் தராது. அவர் கூறும் சரித்திரச் சிறப்பு, சிறப்பான சரித்திரம் எல்லாம் உத்திரவாதமில்லாத விஷயங்கள். அவர் நினைப்பது போலவே நடக்க நந்திவர்மன் இடமளிக்கமாட்டான். விக்கிரமாதித்தர் ஏமாறத் தான் நேரிடும். அதைத் தவிர்க்கவே நாங்கள் மாறுபட்ட நிலைக்கு வந்திருக்கிறோம்".-

"உங்கள் திட்டம் என்ன?"

"முதலில் நமது திட்டம் விக்கிரமாதித்தருக்கு தெரியக் கூடாது. தெரிந்தால் நிறைவேறாது".

"இது தெரிந்தது தான்"

"மன்னர் அவர் விருப்பப்படி வாதாபிக்குத் திரும்பட்டும். தாங்கள் செல்ல வேண்டாம். நாங்களும் இருக்கிறோம். இங்கிருந்து கொண்டு மிகவும் சாமர்த்தியமாக செயல்பட்டு காஞ்சி நம் கையை விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வோம்".

"அதெப்படி?"

"நந்திவர்மன் எப்படியும் காஞ்சியை மீட்க வருவான். வராவிட்டால் இழுக்க வேண்டும்"

"ஏன்?"

"மீளமுடியாத இடத்திற்கு அவனை அனுப்பிவைக்க"

"திட்டமிருக்கிறதா அதற்கு?"

"இங்கு உதவத்தான் காடகமுத்தரையர் வருகிறார்"

"யார் அந்தப் பல்லவ விசுவாசியா?"

"ஆம்"

"அவரை நீங்கள் நம்புகிறீர்களா?"

"நம்பவில்லை. அதேசமயம் அவர் நாம் சொல்லும் வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்'

"புரியவில்லை" -

"கீர்த்திவர்மரே, பாசத்திற்கு இவ்வுலகில் விலை கிடையாது. இது எங்களை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்களை விட வயதான காடக முத்தரையருக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது"

“அதனால்?”

“நாங்கள் சொல்வதை அவர் செய்யாமல் இருக்க முடியாது”

“என்ன செய்தீர்கள் அவரை?”

“அவரை ஒன்றும் செய்யவில்லை. அவரது மகள் எங்கள்வசம் இருக்கிறாள்”

“உங்களிடமா?”

“நம் வசம் என்றுவைத்துக் கொள்ளுங்களேன். அவளை வைத்து காடகமுத்தரையரை வழிக்குக் கொண்டு வந்திருக்கிறோம். மகளுக்காக எதுவும் செய்யத் தயராய் இருக்கிறார் அவர்”

“அப்படியானால், காடக முத்தரையர் நம் பக்கம் வந்து விட்டாரா?”

“இல்லை. நம்பக்கம் வருவதால் லாபமில்லை”

“பின்?”

“நடுவில் இருக்கிறார்”

“அதாவது”

“அவர் பல்லவருக்கும் சாளுக்கியருக்கும் நடுவில் இருக்கிறார். இங்கே அவரது செயல் இருக்கும். தங்களிடம் இருப்பதாய் பல்லவர்கள் நினைப்பார்கள். நம்மிடம் பணிபுரிவதை நாம் கண்கூடாகப் பார்ப்போம்.”

“அவர் சாதிக்கக் கூடியது என்ன?”

“கீர்த்திவர்மரே, விக்கிரமாதித்தர் அகன்று விட்டபின் நாம் சந்திக்கப் போகிற எதிர்ப்புகளில் மிக முக்கியமானது நந்திவர்மனுடையது தான். அவனை முறியடிக்கும் முக்கிய சக்தி தான் காடக முத்தரையர்”

“அவர் இல்லாமல் நந்திவர்மனை முறியடிக்க முடியாதா நம்மால்?”

“விக்கிரமாதித்தர் இருந்தால் முடியும். அவர் அகன்று விட்டால் நமக்குப் பல விதங்களில் பலம் குறைகிறது. தார்மீக பலம், படைபலம், மற்றும் போராடும் சக்தி ஆகியவை குறைகின்றன, இப்படியொரு நிலையை நாம் வாதாபியை விட்டுப் புறப்படும் போது எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராச் சூழ்நிலை நிலவும் போது நமக்கு புதிய பலம் கணிசமாகத் தேவை. இந்த பலம் காடக முத்தரையரைப் போன்றதாக அமைவதே நல்லது”

“அதாவது-’

“பலவிதங்களில் பலமிழந்து நிற்கும் நமக்கு இவரைப் போன்றவர்களால் செய்யப்படும் துரோகம் தான் இப்போது பிரதான பலமாக இருக்கும். காட்டிக் கொடுக்க வேண்டிய நேரத்தில் காட்டிக் கொடுப்பது. குழிதோண்ட வேண்டிய நேரத்தில் குழிதோண்டுவது போன்றவற்றை அவர் செய்யும் போது தான் நமது வெற்றிக்கான பாதை தெளிவாக்கப்படும். வேறொரு பலமும் நமக்கு வரவிருக்கிறது”

“அது என்ன?”

“இளவரசரே, வாதாபியில் தழைத்து வளர்ந்து போலவே காஞ்சியிலும் தழைத்திருந்து சமணமதம் இன்றிருக்கும் நிலையைப் பார்த்தீர்களா? நமது அரசையும் அரசியலையும் தாங்கி நிற்கும் சமணம் காயம்பட்டு வீங்கிக்

கிடக்கிறதே காஞ்சியில்-கவனித்தீர்களா? சமணர்களுக்கு அநீதியும் அவமானமும் இழைக்கப்பட்டு வருவதை அறிவீர்களா? என்றைக்கு அந்த மகேந்திரவர்மன் சமணத்தைத் துறந்து சைவத்தைத் தழுவினானோ அன்று ஷீணிக்கத் தொடங்கிய சமண மதம் இன்று ஜீவனற்று கிடக்கிறது. இப்போது கவனிக்காமல் விட்டால் இது எப்போதும் எழப்போவதில்லை. வளரப் போவதில்லை. காஞ்சிப் படையெடுப்பிற்குத் திட்டமிட்டபோது இதையும் நாங்கள் ஆலோசித்தோம். காஞ்சியைக் கைப்பற்றிய கையோடு சைவ வைணவ மதங்களை வந்த வழியிலேயே அனுப்பிவிட்டு இந்த எழில் நகரத்தையும் பல்லவர் ராஜ்யத்தையும் சமணர்கள் தழைக்கும் சிறப்பிடமாய் மாற்றவும் திட்டமிட்ட தங்கள் தந்தையாரிடமும் தெரிவித்தோம். ஆனால் காஞ்சியில் நுழைந்தபின் தங்கள் தந்தையார் செய்தது என்ன?நமது திட்டத்தை மறந்தது மட்டுமின்றி சைவ வைணவ ஆலயங்களிலெல்லாம் விஜயம் செய்து பூஜிப்பதும் விழாக்களை நடத்துவதுமாக இருக்கிறார். சமணக் காஞ்சிக்கு ஒருமுறை கூட விஜயம் செய்யவில்லை. அவரது இந்த நிலை சமணர்களுக்கு எந்தவகையில் உதவும்?"-

"உதவாது தான்"

"அப்படி ஆகாமல் பார்த்துக் கொள்வதும் எங்கள் நோக்கம். ஆகவே தான் இந்தத் திருப்பருத்திக் குன்றத்திற்கு வந்து அனைத்துச் சமணர்களையும் திரட்டிப் பேசியிருக்கிறேன். அனைவரும் நமது நோக்கத்திற்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். இந்த ஆதரவு நமக்கு நல்லதொரு பலமாக அமையும்"

"இவர்களால் என்ன செய்யமுடியும்?"

"அதை நிர்ணயித்துக் கொள்ளும் பொறுப்பை எங்களிடம் விட்டு விடுங்கள்"-

"நந்திவர்மனை முறியடிப்பதற்கு காடகமுத்தரையர் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாரா?"

“அதுபற்றி நாம் விவாதிப்பதனால் விக்கிரமாதித்தர் காஞ்சியை விட்டுச் சென்றபின் தான் முடியும்”-

“அடிகளே, காடக முத்தரையர் வருவதற்கு முன்னால் என்னிடம் விஜயஸ்கந்தவர்மன் என்பவன் வந்தான்”-

“அவனைப் பற்றி முத்தரையரும் சொன்னார். அவன் உயிரோடு இருப்பதே நல்லது. அவன் இறப்பதால் இப்போது நமக்கு எந்தவிதமான பயனும் இல்லை. நந்திவர்மனின் எதிரிகளை முடிந்தவரைநாம் நமது தோட்டத்தின் வேலிகளைப் போல் பயன்படுத்திக் கொண்டு அறுவடை முடிந்தபின் வேலிகளை அகற்றி விடுவது போல்அழித்து விட வேண்டும்”-

கீர்த்திவர்மன் எழுந்து சிறிதுநேரம் வரை உலவினான் சிந்தனையுடன். பிறகு பேசமுற்பட்டு “அடிகளே, தந்தை விஷயத்தில் நீங்கள் மாறுபட்ட மாதிரித்தான் நானும் மாறுபடுகிறேன். ஆனால் தந்தை தன் திட்டத்தை அன்று தெரிவித்த போது எதையும் பேசாமல் இருந்துவிட்ட நான் இப்போது எவ்வாறு பேசி முரண்பட முடியும்? அவரை மட்டும் போகும் படி கூறிவிட்டு நான் இங்கேயே இருப்பதாக எப்படி கேட்டுக் கொள்ளமுடியும்? அவர் அதற்குச் சம்மதிக்க வேண்டாம்? அதைப் பொறுத்துத் தானே அனைத்து திட்டங்களும் நடக்க முடியும்?” என்று கேட்டான்.

“அதற்கு வழி வகுக்காமலா இவ்வளவு திட்டங்களைத் தீட்டுவோம்?”என்று கேட்ட தீயடிகள் கீர்த்திவர்மன் சங்கடத்தைத் தீர்க்கும் வழியைச் சொன்னார்.

பெரும் மகிழ்ச்சியை அடைந்தான் கீர்த்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘

15.லோகமாதேவி

பூநிலாய வைத்துமாய் புலன்கண் நின்ற நான்குமாய் தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த கால் இரண்டுமாய் நீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மைகளைக் கொண்ட திருமாலின் திருவருளுக்கு ஆட்பட்ட காஞ்சிமாநகரத்தின் பல்லவ அரண்மனையில் பூஜையை முடித்து வைத்த கையோடு வந்தமர்ந்தான் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன், அவனுக்கு முன்னால் கொண்டு வந்த கோயில் பிரசாதத்தில் கொஞ்சத்தை மட்டும் பயபக்தியுடன் எடுத்துக்கொண்ட அவன் தன் ராணியை அழைத்து அவளிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னான்.

“பிரசாதத்தை என்னிடம் தருகிறீர்களே நிங்கள் அருந்தவில்லையா?” என்று கேட்டாள் லோகமாதேவி.

“சாளுக்கிய சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளப்போகிறவர்களைத் தாங்கும் பாக்கியம் பெற்றவள் நீதான். ஆண்டவனின் பிரசாதத்தை நீ அருந்துவதே உகந்தது” என்று கூறிய விக்கிரமாதித்தன், “தேவி, உன்னிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். பதில் சொல்கிறாயா?” என்று கேட்டான்.

“என் பதில் தேவைப்படும் கேள்விகளை கூட தங்களிடம் இருக்கின்றனவா?” என்று கேட்டுச் சிரித்தாள் லோகமாதேவி.

“இது வரையில் நானப்படி நினைக்கவில்லைதான். ஆனால் இப்போது நினைக்கிறேன்” என்றான் விக்கிரமாதித்தன். அவனது குரலில் கவலை தெரிந்தது.

"ஏன் அப்படி?" -என்று கேட்டாள் ராணி.

"நீண்ட நாள் வழக்கத்திலிருந்து மாறுபடும் போது என் மீதே எனக்குச் சந்தேகம் வந்துவிடுகிறது. அப்போது உன் யோசனை தேவையாகிறது".

"தங்களுக்கு என்னால் யோசனை கூற முடியுமானால் அது என் பாக்கியம் தான்"-

"யோசனை சொல்லும் தகுதியோ திறமையோ உனக்கில்லை என்பது என்கருத்தல்ல தேவி. கூடுமானவரை என் அரசியலில் குடும்பத்தாரின் குறுக்கீடுகள் இருக்கக் கூடாதென்பது என் விருப்பம். ஏனென்றால் அவர்களது குறுக்கீடு குறுகிய நோக்கங்களுக்கு வழி வகுத்து விடும். இங்கு நானாகவே உன் ஆலோசனையைக் கேட்கிறேன் என்றால் நான் ஏதோ தனித்து விடப்பட்டது போல் உணர்கிறேன்"

"இதென்ன பிரபு இப்படிச் சொல்கிறீர்கள்? நானிருப்பது எனக்காக என்றா நினைக்கிறீர்கள்?"-

"உன்னை எனக்குத் தெரியும் தேவி. வீணாகக் கவலைப்படாதே" என்று சொன்ன விக்கிரமாதித்தன் பீடிகைகளுக்கு முடிவுகட்டிவிட்டு கேட்டான்.

"நான் இக்காஞ்சியைவிட்டு விட்டு வாதாபிக்குத் திரும்பி விட முடிவு செய்திருப்பது பற்றி உன் கருத்தென்ன?"-

"பிரபு, தங்கள் முடிவில் குறை என்று என்றுமே கண்டதில்லை. ஆனால்-"

"ஆனாலென்ன தேவி?"-

"இது விஷயமாகத் தாங்கள் துறவிகளிடம் கூட யோசனை கேட்கவில்லை என்று கேள்விப்பட்டேன். அது

ஏன்? இதுவரை அவர்களை விட்டு விட்டுத் தாங்கள் முடிவெடுத்ததில்லையே?"-

"அந்த வழக்கத்தை விட்டுவிட்டதால் தான் இன்று உன்னிடம் கேட்கிறேன்"-

"அவர்களை ஏன் ஒதுக்கிவிட்டீர்கள்? இக்காஞ்சியைப் பிடிக்கக் கூட அவர்களே தானே உதவியதாகவும்திட்டம் தீட்டியதாகவும் சொன்னீர்கள்?" -

"உன்னிடம் மனம் விட்டுச் சொல்கிறேன் தேவி. இந்த விஷயத்தில் நான் ஏமாந்து விட்டேன்"

"தாங்களா? ஏமாந்து விட்டீர்களா?"

"தேவி. நான் வாதாபியில் இருந்தபோது பல்லவரைத் தோற்கடித்து கைப்பற்றி ஆள விரும்பினேன். ஒரு வெறியாகக் கூட அந்த எண்ணம் எனக்கிருந்தது. காஞ்சியின் மீது படையெடுக்க திட்டம் தீட்டி நாள் குறித்தார்கள் துறவிகள். படைகளை ரகசியமாகத் திரட்டி காஞ்சிக் கோட்டையை பிடிப்பது தான் அவர்கள் எனக்குத் தந்த திட்டம். அந்த வகையில் அது ராஜதந்திரமாக எண்ணக் கூடிய திட்டம் தான். ஆனால் இக்கோட்டைக்குள் நந்திவர்மன் இல்லை என்பதும் பல்லவர் படை மிகவும் சொற்பமாக இருந்தது என்பதும் அப்படியொரு சூழ்நிலையிலே நான் இங்கே பிரவேசிக்க வேண்டும் என்ற அவர்களது இறுதியான திட்டம் எனக்கு மிகவும் தாமதமாகத் தான் தெரிந்தது. அதாவது காஞ்சியில் பிரவேசிப்பதற்கு ஒருமாதத்திற்கு முன்புதான் தெரிந்தது. அப்போது நான் காஞ்சியிலிருந்து சில கால தூரத்தில் இருந்தேன். இப்படியொரு பிரவேசத்தை நான் சிறிதும் விரும்பவே இல்லை. மன்னன் இல்லாத கோட்டையைப் பிடிப்பதென்பது மணாளன் இல்லாத சமயத்தில் மங்கையைக் கைப்பற்றுவது போன்று கோழைத்தனம் என்பதை அறிந்தேன்.

அதேசமயம் வாதாபியைவிட்டு திட்டமான நோக்கத்துடன் வெகுதூரம் தாண்டி வந்துவிட்ட நிலையில் திரும்பிச் சென்று விடுவதும் சரியாகப்படவில்லை. காஞ்சியில் படைபலம் குறைந்திருந்தால் கூட பரவாயில்லை. குறைந்த பட்சம் மன்னன் இருக்கவேண்டும் என்பதும் அவனோடு போரிட்டு தோற்கடித்த பின்பே கோட்டைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்பதே என் நோக்கம். வீரர்கள் விரும்பும் விதத்திலேயே விரும்பினேன். துறவிகளோ கோழைகளின் திட்டத்தைத் தீட்டி குள்ளநரிகளாகி என்னை ஆடவொட்டாமல் செய்து விட்டார்கள். அப்போதே அவர்கள் மீதிருந்த மதிப்பும் நம்பிக்கையும் எனக்குக் குறைந்துவிட்டது.

“காஞ்சியைக் கைப்பற்றியது தங்கள் வெற்றி என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். என்னைப் பொறுத்தவரை இது ஒரு தோல்வியே அன்றி வெற்றியல்ல தேவி. தகாத காரியத்தைச் செய்து விட்ட மாதிரியும் சாளுக்கியரது கௌரவத்திற்கு ஊறு செய்து விட்டமாதிரியும் எண்ணிப் புழுங்கினேன் நான். மன்னனில்லாத கோட்டையை வரவேற்பது போல் திறந்த கோட்டையை ஏற்கவோ ஆளவோ எனக்கு மனமில்லை. துறவிகளின் திட்டத்தை ஏற்றுச் செய்துவிட்ட அசட்டுத் தனத்திற்குப் பரிகாரம் செய்து கொள்ள தீர்மானித்தேன். நான் எடுத்த முடிவு இப்பரிகார முயற்சியின் விளைவுதான்”-

லோகமாதேவி பேச்சற்று பரவசப்பட்ட “பிரபு” என்று மட்டுமே உச்சரித்து விட்டு அவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள். அவனோ கனவுலகில் சஞ்சரிப்பவனைப் போல் எங்கோ பார்த்தபடி தொடர்ந்தான்.

“பகைவனின் நாட்டைப் பிடித்து செய்யப்படும் கொடுமைகளைச் செய்யாமல் நல்லவற்றையே செய்து மக்களிடம் நற்பெயரைப் பெற்று வாதாபிக்கு

திரும்பிவிட்டால் சரித்திரத்தில் நாம் போற்றப்படுவோம் என்றும், ஒருவகையில் அது நந்திவர்மனுக்கு வெட்கத்தை உண்டாக்கும் என்றும், என் அசட்டுத் தனத்திற்குப் பரிகாரமாய் அமையும் என்றும் இப்படியொரு தீர்மானத்திற்கு வந்தேன். இதற்குத் துறவிகளின் அங்கீகாரம் நிச்சயம் கிடைக்காது. எனவே அவர்களால் எனக்கு ஏற்பட்ட அவமானத்தை அவர்களைப் புறக்கணித்து முடிவெடுப்பதின் மூலம் துடைக்கலாம் என்று கருதி முடிவெடுத்தேன். இது தவறா தேவி?"-

அவள் பதில் சொல்லமுடியாமல் கலங்கினாள்.

"விழுந்து கிடந்த வாதாபியை உயிர்ப்பித்தவர்கள் இத்துறவிகள் தான். நான் மறுக்கவில்லை. அதற்காகத் தான் அமைச்சர்களைக் கூடப் புறக்கணித்து விட்டு அரசியலில் அவர்களுக்கு மிக உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்தது அவர்களது சொற்கள் -திட்டங்கள் சாளுக்கிய வம்சத்திற்கும் நாட்டிற்கும் இழிவைத் தரக் கூடியதாக அமைந்து விட்டபின் அவர்களைப் புறக்கணிக்க முடியாமல் என்ன செய்ய முடியும் சொல்?" என்றாள் விக்கிரமாதித்தன்.

சிறிது நேரம் கழித்தபின் "தேவி, இக் காஞ்சிப் படையெடுப்பு பற்றி பேச்சு எழுந்ததிலிருந்து துறவிகளிடம் எனக்கு ஒரு மாற்றம் இருப்பதுபோல் ஏதோ தோன்றுகிறது. இது உண்மையா அல்லது பொய்யா என்பதை உறுதியாக என்னால் சொல்ல முடியவில்லை. சாளுக்கிய நாட்டை விட தங்கள் மதத்தின் பேரிலான ஆசையும் அக்கறையும் அவர்களிடம் புத்துயிர் பெற்றிருப்பதாக நினைக்கிறேன். காஞ்சியைப் பிடித்த பின் இங்கே ஹீணித்துக் கிடக்கும் சமணமதத்தை உயிர்ப்பித்து ஓங்கச் செய்யவேண்டும் என்று அவர்கள் வாதாபிலேயே தங்கள் விருப்பத்தை

வெளியிட்டார்கள். மத உணர்வு ஓங்குவது அரசியலுக்கு நல்லதல்ல” என்றான்.

“தங்கள் நிலையென்ன பிரபு?” -என்று வினவினாள் லோகமாதேவி.

“இத்துறவிகளிடம் காலம் காலமாக விசுவாசத்தையோ நிலையான ஆதரவையோ நாம் எதிர்ப்பார்த்துப் கொண்டிருக்க முடியாது. ஆனால் கீர்த்திவர்மன் விஷயம் அப்படியா? என் பெயரை நிலைநிறுத்த வேண்டியவன். எனக்குப் பின்னால் சாளுக்கியர் நாட்டையும் கௌரவத்தையும் ஆளவேண்டியவன் அவனல்லவா? தன் நிலையை உணராமல் பொறுப்பில்லாமல் அவனிருப்பது தான் எனக்குக் கவலையளிக்கிறது. சாளுக்கிய நாட்டை நான் துறவிகளிடமா ஒப்படைக்க முடியும்?”

“பிரபு, அந்தத் துறவிகள் தன்னைப் பொருட்படுத்துவதில்லை என்ற குறை கீர்த்திவர்மனுக்கு உண்டு. அந்தக் குறையே கூட அவனை முக்கிய பொறுப்புகளிலிருந்து விலக்கி வைத்திருக்கலாம்”

“தவறு தேவி. தரப்பட வேண்டிய முக்கியத்துவம் தனக்குத் தரப்படாமல் போகிறதென்றால் அதைப் பெற தன்னைத் தகுதியுடையவனாக மாற்றிக் கொள்வது தான் சரியான காரியமே தவிர இவனைப் போன்ற அரசகுமாரர்களுக்கு ஒதுங்கி விடுவதோ வெறுத்து விடுவதோ பொறுத்தமானதல்ல”-

“வாதாபிக்கு நாம் போனபின் துறவிகளுக்கு இதுவரை அளித்து வந்த முக்கியத்துவத்தை மகனுக்கு அளியுங்கள். நிச்சயமாக அவன் மாறுவான்.”

“தேவி, எனது திட்டம் பற்றி நான் சொன்னபோது கீர்த்திவர்மன் எதுவுமே சொல்லாதது எனக்குச் சந்தேகத்தை அளிக்கிறது”-

“ஏன்?”

“காஞ்சிக்கு வந்தபின் பலவிஷயங்களில் அவனது அபிப்பிராயங்களைக் கேட்டேன். கொஞ்சம் கூட சிந்திக்காமல் பட்டென்று யோசனைகள் சொன்னான். அவை விரும்பத்தக்கதல்ல என்றாலும் நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் அவனது எண்ணம் வெளிப்பட்டுவிட்டது இல்லையா? அதனால் தான். ஆனால் இந்த விஷயத்தில் அவன் மௌனம் சாதிக்கிறான். தயங்காமல் தன் அபிப்பிராயங்களை வெளியிடுபவன் மௌனம் சாதிப்பது சந்தேகத்திற்குரியது”-

இவ்வாறு விக்கிரமாதித்தன் கூறிமுடித்தபோது “ஹரஹர மகாதேவ்’ -என்று உச்சரித்தபடி அறைவாசலில் வந்து நின்றார் ஒருதுறவி.

அவரைக் கண்டதும் எழுந்து கொண்ட தேவி “வரவேண்டும். வரவேண்டும். வந்ததை கவனிக்கவில்லை.” என்றதும் “உங்களாலேயே அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையா அம்மா? அப்படியானால் என் மனோரதம் நிறைவேறிவிட்ட மாதிரி தான்” என்றார் துறவி.

லோகமாதேவியால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. “கீர்த்திவர்மா நீயா? இதென்ன சன்னியாசி கோலம்?” -என்று வினவும் செய்தாள்.

“இது கோலம் இல்லையம்மா, உண்மை நிலை, மற்றவர்கள் முன்வந்து எனக்களிக்கும் முன் நானே உணர்ந்து

ஏற்பது சிறந்ததல்லவா?" -என்று கேட்டான் 'துறவி' கீர்த்திவர்மன்.

"உனக்கு யார் துறவறத்தை அளிக்கமுன் வந்தார்கள்? இதென்ன பைத்தியக் காரத்தனமான பேச்சு? உள்ளே வா. உட்கார்" என்றார் ராணி.

"நான் உள்ளே வந்து உட்கார வரவில்லை தாயே. மன்னித்துவிடுங்கள். அரசகுமாரனுக்கு உரிய மரியாதையும் உரிமையும் மறுக்கப்படும்போது - உதவாக்கரை என்று உதாசினப்படுத்தும் போது அவன் துறவறத்திற்குத் தூண்டப்படுவதாகத் தானே அர்த்தம்?" -

"உன்னை யாரும் உதாசீனப்படுத்தவில்லை. கீர்த்திவர்மா, வீண் கற்பனைகளுக்கு இடம்கொடுக்காதே. உனக்குள்ள உரிமையை யாரும் மறுக்கப்போவதில்லை"-

"உரிமையைப் பற்றிய பிரச்சனை இல்லை தாயே. இப்போது கூட நான் இளவரசன் என்று பட்டம் கட்டப்பட்டுத்தான் இருக்கிறேன். ஆனால் அப்படிப் பட்டம் கட்டியவர்களே என்னை ஒதுக்கும்போது நான் துறவறத்தில் தான் அமைதியைக் காண முடியும்".

"குழந்தாய், நாங்கள் உயிருடன் இருக்கும் வரை உன் அமைதி இல்லறத்திலேயே கிட்டும். அதற்குத் துறவு வேண்டியதில்லை. உரிமைகள் உனக்குக் கிட்டியது போல் அதிகாரங்களும் கௌரவங்களும் சமயத்தில் உன்னை வந்து சேரும் . கவலைப்படாதே"

"இப்போது சமயம் சரியில்லையா?"-

"கீர்த்திவர்மா, உரிமையுடையவர்கள் தகுதியுடையவர்களாக இருப்பது அரசியலில் முக்கியமானது. அந்தத் தகுதி

கடமைகளையும் பொறுப்புகளையும் செய்யும் போது நிச்சயமாய் கிடைக்கும்"

"நல்லது தாயே. கடமைகளையும் பொறுப்புகளையும் செய்வதற்கு எனக்கு வாய்ப்பளிக்க வேண்டுமல்லவா?"-

"ஒத்திகை பார்ப்பது போல் வாய்ப்பளித்துப் பார்ப்பதென்பது அரசியலில் ஆபத்தானது மகனே. வாய்ப்பை அளிக்கத் தகுந்த விதத்தில் நாம் நம்பிக்கையை உண்டாக்க வேண்டும். அது தான் சிறந்தது"

"யோசனை கேட்கக் கூட எனக்கு இப்படியெல்லாம் தராதரம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?"-

"எந்த விஷயத்தில் உன்னிடம் யோசனை கேட்கப்படவில்லை?"

"நிரம்ப இருக்கின்றன தாயே. ஆனால் நான் ஒன்றை மட்டுமே சொல்ல விரும்புகிறேன்"

"சொல்"

"காஞ்சியை இருந்த நிலையிலேயே விட்டு விட்டு வாதாபிக்குச் சென்று விட சாளுக்கிய மன்னர் விரும்புகிறார். முடிவும் கட்டிவிட்டார்."

"இதென்ன கீர்த்திவர்மா, உன் அருமைத் தந்தை நேரிலேயே இருக்கும்போது மன்னர் என்று சொல்கிறாய்? தந்தை என்று தான் சொல்லேன்".

"நான் பாசத்தைப் பற்றிப் பேச வரவில்லை தாயே. அரசியல் விவகாரம் பற்றிப் பேச வந்திருக்கிறேன்"

"பிறகு ஏன் துறவி வேடம்? என்னை மட்டும் எதற்குத் தாய் என்று அழைக்கவேண்டும்?" என்று கேட்கச் சிரித்த

லோகமாதேவி "உன் தந்தை எடுத்த முடிவில் உனக்குச் சம்மதமில்லையா?" என்று கேட்டாள்.

"அம்மா, சில அரசியல் முடிவுகள் மன்னரை மட்டும் பாதிப்பதில்லை. இளவரசனையும் பாதிக்கும்"

"உன் தந்தை எடுத்த முடிவு உன்னைப் பாதிக்கிறதா கீர்த்திவர்மா?" - கேட்டாள் ராணி.

"பாதிக்கிறதா என்று மன்னர் என்னைக் கேட்கவேண்டாம்?"

அதுவரை சிலைபோல் நின்று எதுவும் பேசாதிருந்த விக்கிரமாதித்தன் கேட்டான்:

"கீர்த்திவர்மா, நீ பஞ்சபூதங்களைச் சந்தித்தாயா?" -

துறவிக்கு வியர்த்தது.

⌘⌘⌘⌘⌘



16.நந்திவர்மன்

எண்ணில் நினைவெய்தி இனிஇல்லை இறை என்று முனியார் திருவார் பண்ணில் மலி கீதமொடு பாடி அவர் ஆடலொடு கூட எழிலார் மண்ணில் இதுபோல் ஓர் நகரில்லை என வானவர்கள் தாம் மலர்கள் தூய் நன்னி உறைகின்ற நகரமான நந்திபுரத்தின் நடுநாயகமாய் அமைந்திருந்த விண்ணகரத்திலிருந்து எழுந்த மணியோசையானது அங்கே வாசம் புரியும் எம்பெருமானின் அருள் அலைகளைக் கிளப்பி மன உறக்கத்தில் கிடந்தவர்களைத் தட்டி எழுப்புவது போல் காற்றிலே கலந்து ஊடுறுவியதைக் கண்ட நானாவிதமான பட்சிகள் பக்கவாத்திய இசையெழுப்புவது போல் அலகுகளை விரித்து இரைந்ததுடன் அந்த அரசலாற்றாங்கரை மரக்கிளைகளை அமர்க்களப்படுத்தி ஆனந்தித்தன. அழகைப் புலப்படுத்தப் பொழுது விடிந்ததா அல்லது பொழுது விடிந்தால் அழகு புலப்பட்டதா என்று இனம் பிரித்துக் கூறமுடியாதப் பேரழகினைச் சுமந்து கொண்டிருந்த அப்பல்லவர் தென்புறக் கடிநகரான நந்திபுரம் * சிலிர்த்தெழுந்தது அந்த மணியோசையில். இயற்கை அழகினைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்

---

* நந்திபுரம் என்பது தற்போது கும்பகோணத்திற்குத் தென்மேற்கேமுழையூருக்குஅப்பால்அமைந்துள்ள‘பழையார்’ என்று அழைக்கப்படும்பழையாறே ஆகும். இங்கேவிண்ணரம்ஒன்றையும் கோட்டையொன்றையும்அமைத்தநந்திவர்மன்அவ்வூரினைநந்திபுரம் என்றே அழைத்தான். இது பின்னாளில் சோழரது ஆட்சியில் முடிகொண்டசோழபுரம்,ஆகவமல்லகுலகாலபுரம்,இராசராசபுரம் என்றெல்லாம் அழைக்கப்பட்டன. வரலாற்றுக் காலத்தில் பெரும் சிறப்புடன் திகழ்ந்த பழையாறை இன்று சிறுசிறு கிராமங்களாய் ஒன்றோடொன்றுதொடர்பின்றிஉள்ளன.

என்று எண்ணி நாற்புறமும் கட்டப்பட்டிருந்த பெரும் மதிள் சுவர்கள் சமீபத்தில் நடந்து முடிந்த பாண்டியர் தாக்குதலால் அங்காங்கே காயம் பட்டிருந்தால் 'வீரர்கள் புண்களைப் பட்டாலும் எளிதில் வீழ்ந்து விட மாட்டார்கள்' என்பதை உணர்த்துவது போல் பயங்கர அழகுடனேயே விளங்கின. நந்திபுரம் கோட்டையின் வெளிக்காயங்கள் ஆறவில்லையென்றும் அவையொன்றும் உணர்ந்திருந்த காரணத்தால் தங்களது வழக்கமான உற்சாகங்களையும் உற்சாகமான வழக்கங்களையும் ஆறமுடியாத காயங்களல்ல என்பதை மக்கள் நன்றாகவே விட்டுவிடாமல் வெளிப்படுத்தவே செய்தார்கள்.அத்தகையதோர் வெளிப்பாடு அரசிலாற்றில் காணப்பட்டது. வானம் பொய்ப்பினும் தான் பொய்க்காத சான்றோர்கள் வாழ்ந்தபடியால் தஞ்சைப் பகுதிகளில் வானம் பொய்க்காமல் பொழிந்த காரணத்தையொட்டி காவிரி அன்னையின் கைவிரல்களைப் போன்ற கிளைநதிகள் அனைத்தும் ஜீவ நதிகளாய் வழியும் அளவிற்கு நீரைத் தாங்கி ஓடின. அத்தகைய ஜீவ நதிகளில் ஒன்றான அரசிலாறு சமீபத்திய போரில் நந்திவர்மன் பெற்ற வெற்றியால் குதூகல மடைந்ததாலோ என்னவோ மீன்களே தடுமாறும் வேகத்துடனும் சுழற்சியுடனும் காட்சியளித்தது. அந்த மீன்களின் தடுமாற்றத்தை விட அதிக தடுமாற்றத்தை அடைந்த பெண்கள் அதற்குக் காரணமான ஆடவரின் கழுகுக் கண்களைச் சபித்தபடி ஆற்றில் நீராடினார்கள் என்றாலும் அந்தச் சாபங்களெல்லாம் வெறும் பொய்கள் என்பதை அவர்களது இதயங்கள் உள்ளூர உணர்ந்தே தான் இருந்தன. இப்படி உள்ளொன்றும் புறமொன்றுமாய் எண்ணி நீராடிய மகளிரை வெறுத்த கரையோர மரங்கள் அவர்கள் பால் மலர்களை உதிர்க்க மறுத்தி விட்டதாலோ என்னவோ ஆற்று நீர் நிர்மலமாயும் ஆற்றங்கரை மரங்கள் வண்ண மலர்களைத் தாங்கியும் பளிச்சென்று காட்சியளித்தன. இந்த இயற்கை அழகைவிட அணங்குகளின் மெய்யழகே அழகு என முடிவு

கட்டி விட்டவர்களைப் போல் அங்கே வந்திருந்த ஆடவர் பலர் நீராடுவதை மறந்து விட்டு நீராடும் நங்கையரை நின்றும் இருந்தும் கிடந்துமாய் பார்த்தபடி இருந்தார்கள்.

நின்றும் இருந்தும் கிடந்துமாய் உலகெல்லாம் விரவியுள்ள இறைவனின் தத்துவத்தை இப்படியொரு அசந்தர்ப்பத்தில் போய் ஆடவர்கள் உணர்த்துகிறார்களே என்று மனம் வெதும்பிய மைனாக்கள் சில அரசலாற்றங்கரையை அலட்சியப்படுத்திவிட்டு இறக்கை விரித்துப் பறந்து அப்பாலிருந்த நந்திபுர விண்ணகரத்து விதானத்தில் போய் அமர்ந்தன.

நித்ய சூரியாய் ஸ்ரீநிவாசன் உறைகின்ற அந்த நந்திபுரத்து விண்ணகரம் அக்கால வேளையில் அபிஷேக ஆராதனைகளையொட்டி அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தாலும் அந்த அமர்க்களமும் மங்கள வைபவங்களும் வழக்கமான விஷயங்களாதலால் அவைகளைப் பொருட்படுத்தாமலும், அந்த ஆலயத்தில் அந்த ஆராதனை சமயத்தில் அலைமோதிய மக்கள் வெள்ளம் பெருவெள்ளமாய் இருந்தபடியால் அவர்களை விலக்கியபடியும், தனது அதிகாரத் தோரணையையும் காட்டுவதில் விடுபடாமலும், வேறெந்த விஷயத்திலும் கவனம் செலுத்த முடியாத நிலையிலும் பெரும் கவலைக்கு ஆளாகியிருந்த பல்லவப் பேரமைச்சர் அக்காலை நேரத்தில் தன் வயதும் பயணமும் தந்த களைப்பைப் பொருட்படுத்தாமல் நாதன் கோயிலுக்குச் சமீபத்தில் இருந்த அரண்மனையை நோக்கி நடந்தார். அவரை அடையாளம் தெரிந்து கொண்டவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். அவரோ அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. உரிய பரிவாரங்களோ அறிவிப்போ எதுவுமின்றி அவரப்படி அனாதைபோல் வந்ததை விட தங்களது வணக்கங்களைக் கண்டு கொள்ளாமல் சென்று கொண்டிருந்ததை எண்ணி வியப்படைந்த பலர் "ம், கலிகாலம்.

இப்போதெல்லாம் வணக்கங்களை யார் கவனிக்கிறார்கள்? வாட்களைத்தான் கவனிக்கிறார்கள். பொருட்படுத்துகிறார்கள்" என்று தங்களுக்குள் முணுமுணுத்துக்கொண்டார்கள். சமீபத்தில் நடந்து முடிந்திருந்த பல்லவ-பாண்டியர் போர் அவர்களது நெஞ்சில் பசுமையாக படிந்து கிடந்தது. பல்லவ மன்னன் அப்படியொரு போரை எதிர்பார்க்காமல் இருந்ததும்-பாண்டியர்களுக்கு தாக்குதலைத் தொடங்கிய பின்பே அது குறித்து அறிந்து போரில் இறங்கி ஆரம்பத்தில் சில இடங்களில் தோல்வி கண்டதும், அப்போரின் ஒரு பகுதியாக நடந்த தாக்குதலில் தங்களது நந்திபுரக்கோட்டை பெரும் சேதத்திற்கு ஆளாகியதும், அதைப் புதுப்பிக்கும் படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதும் அவர்களுக்கு நேற்றைய சம்பவங்களைப் போல் நினைவில் நிழலாடியதால் பேரமைச்சரின் கவனமின்மையை அலட்சியமாகக் கருதி "இப்பல்லவர்களே இப்படித்தான். அலட்சியமாக இருந்து ஏமாந்து பிறகு தான் லட்சியம் செய்யத் தொடங்குவார்கள்" என்று எண்ணிக் கொண்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை பல்லவ சாம்ராஜ்யத்தின் தென்புறக் கடிநகரான நந்திபுரம் பாண்டியனால் தாக்கப்பட்டதற்கு பல்லவர்களின் அலட்சியமும் எச்சரிக்கையின்மையும் தான் காரணம் என்பது அபிப்ராயமாக இருந்தது. பல்லவ நாட்டின் தென் எல்லையை சரிவர பல்லவர்கள் பாதுகாத்து வைத்திருக்கவில்லை என்று கருதினார்கள். அதேசமயம் அவர்களுக்கு காஞ்சி மாநகர் சாளுக்கியரின் கைகளில் விழுந்து விட்ட விஷயம் இன்னும் எட்டவில்லை.

மக்களின் உள்ளப்போராட்டங்களை அறியாத நிலையிலும் அறிந்து கொள்ள நேரம் இல்லாத நிலையிலும் அரண்மனையை அடைந்து பல்லவ மன்னனைக் காண பிரததான அறைக்குள் நுழைய முற்பட்ட போது அங்கிருந்த வீரன் தடுத்து உள்ளே அனுமதிக்க மறுத்தபோது சொல்லினால் கோபத்திற்கு ஆளான பேரமைச்சர் "ருத்திரனைப்" போலக்

காட்சியளித்தார்.

தன்னை அனுமதிக்க மறுக்கும் மனிதனும் இருக்கிறானா என்று வியந்த அவர் வீரனிடம் "யார் நீ?"-என்று கோபாவேசமாகவே கேட்டார்.

"காவலன்" -என்றான் வீரன்.

"பெயர்?"-

"உதயணன்"-

தன் கோபத்தைக் கண்டும் சேராமல் அமைதியாக பதில் கூறும் இளைஞனைக் கூர்ந்து நோக்கிய அவர் "நான் யார் தெரியுமா?"- என்று கேட்டார்.

"தெரியாது"-

"அதனால் தான் என்னைத் தடுத்திருக்கிறாய். பரவாயில்லை. வழியை விடு"-

"ஐயா, தாங்கள் யார்?"-என்று கேட்டான் உதயணன்.

"வீரனே, ஆளைத் தெரியாதவர்கள் ஆரம்பத்திலேயே அக்கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும் அதுதான் முறை, அதுதான் நாகரீகம்".

"தெரியும் பெரியவரே. இருப்பினும் அதை விசாரிக்கும் அவசியம் இல்லாததால் தான் கேட்கவில்லை"

"என்ன? அவசியம் இல்லையா?"

"யாராக இருந்தாலும் உள்ளே அனுமதிக்கவேண்டாம் என்பது கட்டளை. அப்படியிருக்கும்போது எதற்காக விசாரிக்க வேண்டும்?"

"இப்போது மட்டும் எதற்காகக் கேட்டாய் என்னை யாரென்று?"

"வயதில் பெரியராக இருக்கிறீர்கள். மிகவும் களைத்திருக்கிறீர்கள். மன்னரிடம் பிறகு சொல்ல வேண்டியிருந்தால் வசதியாக இருக்கும் என்றுதான் கேட்டேன். அதோடு பெரியோர்களை நான் மதிப்பவன். அவர்களை என் தந்தைக்குச் சமமாகவே நினைக்கிறேன்"-

"உன் வார்த்தை ஜாலத்தை என்னிடமா காட்டுகிறாய்?" என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்ட அமைச்சர் "உனக்கு அவசியம் இல்லையென்றாலும் எனக்கு அவசியமாகிறது. ஆகவே சொல்கிறேன். தெரிந்துகொள். நான் தான் உன் மன்னனின் துரதிருஷ்டம் பிடித்த அமைச்சன். பிரம்ம ஸ்ரீராஜன். போதுமா? வழியை விடு"-என்றார்.

"அமைச்சர் பெருமானே, பதிலை ஏற்கனவே சொல்லி விட்டேன். யாராக இருந்தாலும் உள்ளே விடக் கூடாதென்று கட்டளை"-என்று பணிவோடு தெரிவித்தான் உதயணன்.

அமைச்சரின் கோபம் எரிமலையின் நிலையை அடைந்தது.

"என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் உன் மன்னன்? அமைச்சர் கூட அனுமதிக்கப்படாத அளவிற்கு என்ன பணியைச் செய்து கொண்டிருக்கிறான்?" -என்று கேட்டார் அவரால் அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவரது கேள்விக்கு உதயணன் அளித்த பதில் அமைச்சரை மிருகமாகவே ஆக்கிவிட்டது எனலாம்.

உதயணன் சொன்னான்: "ஐயா, மன்னர்பிரான் உறங்கிக் கொண்டிருக்கிறார்"-

"உறங்குகிறானா? அதைக் கலைத்து விடக் கூடாதென்று தான் உனக்குக் கட்டளையா? நீயும் உன் மன்னனும்! இதுவரை

உறங்கியது போதாதா? போய் எழுப்படா முட்டாள். குடிமுழுகி விட்டது. இவனோ உறங்கிக் கொண்டிருக்கிறான்?"-என்று சீறிய அமைச்சர் உதயணனை மூர்க்கமாக இழுத்துத் தள்ளிவிட்டு உள்ளே பிரவேசித்தார்.

பிரதான அறையை அடுத்த அறைக்குள் நுழைந்த போது மன்னன் இருந்த நிலையைக் கண்டார். புயலென முன்னேறிய கால்கள் இடியால் தடைப்பட்டது போல் படாரென நின்றன. குமுறிய மேகங்கள் மழையில் கரைந்தது போல் அவரது மனமும் கோபமும் கூட இருக்குமிடம் தெரியாமல் மறைந்தன. மன்னனை விட வயதில் மூத்தவராய் இருந்தாலும் வயது வித்தியாசத்தைக் காட்ட முடியாதவராகி அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு கூப்பிய கைகளுடன் உள்ளே சிரத்தையுடன் நோக்கினார். அறைக்குள் மன்னன் வைகுந்தநாதனின் திருவிக்கிரத்திற்கு திருவாராதனைகளைச் செய்து கொண்டிருந்தான்.

பரமேச்சுவர்மனுக்குப் பின் சிதறுண்டு போக விருந்த பல்லவ சாம்ராஜ்யத்தை ரட்சிக்க வந்தவன் போல் தோன்றி பல்லவ அரியணையில் ஏறியவனும், பிராயம் பன்னிரண்டு இருக்கும் போதே அரியணை பாரத்தைச் சுமக்க முன்வந்து தன் பெயருக்கு ஏற்றார்போல் பல்லவர்களிலேயே சிறந்த மல்லனாக விளங்கியவனும், உயர்வற உயர்நலம் உடையவனான திருமாலின் திருவடிகளைப் போற்றுவதைப் பிறவிப் பயனானக் கருதியவனும், அண்டை நாட்டவர்கள் அச்சத்துடன் பிரஸ்தாபிக்கப் கூடிய விதத்தில் ஆட்சியைத் துவங்கியவனும், வீரமும் ராஜதந்திரமும் நிறைந்தவனும், பல்லவ நாட்டைச் சீண்டிப்பார்த்த பாண்டியர்களை நேரில் வந்திருந்து வெற்றிகண்டு தன் வீரத்தையும் நெஞ்சுறுதியையும் நிரூபித்தவனும், தந்தையும் தானும் பரமபாகவதர்களாய் இருந்தபோதும் பட்டம் பெற அமர்ந்த அரியணையில் கடைசியாய் அலங்கரித்த பல்லவன் சைவப்பற்று கொண்டவன்

என்பதால் அவனை நினைவுபடுத்தும் வகையிலும் மரியாதை செய்யும் வகையிலும் நந்திவர்மன் என்று அபிஷேகப் பெயரைச் சூட்டிப் கொண்டவனும், காசக்குடிசெப்பேடுகளில் கணக்கில்லாமல் புகழ்ப்பட்டவனுமான பல்லவ மன்னன் (இரண்டாம்) நந்திவர்மனை அந்த அறையில் கண்ட அமைச்சர் பெரிதும் பூரித்தார். “நந்திவர்மனாவது உறங்குவதாவது? காவலன் சரியான மடையன். உளறி விட்டான்” என்று மனத்துக்குள்ளேயே சிலாகித்துக் கொண்டார் அவர்.

வெட்டி வீழ்த்த வந்தவர் வணங்கி வாயடைத்து நிற்கும் நிலைக்குக் காரணமான நந்திவர்மன் முப்பது வயதுக்கு உரியவனாக இருந்தான், மல்லன் என்ற சிறப்பு, அவன் வீரத்திற்குச் சான்றாக அமைந்திருந்ததே தவிர அவனது உடற்கட்டென்னவோ அளவான உயரத்தையும் பருமனையும் கொண்டிருந்தது. பூசையில் இருந்ததானாதலார் பட்டாடைகளைத் தவிர வேறெந்த விதமான கழல்களையும் அவன் அணிந்திருக்கவில்லை. எனவே மார்பும் தோளும் திறந்து கிடந்தன. அவற்றில் நந்திபுரத்துப் போர் நினைவுச் சின்னங்களை எழுப்பியது போல் பச்சைக் காயங்கள் பந்த ஒளியில் சிவந்து மாணிக்கங்களைப் பதித்தாற்போல் காட்சியளித்தன. வாளையும் வேலையும் வீரமாய் வீசிய அவனது கரங்கள் துளசி தளங்களை அர்ச்சித்தபடி இருந்ததால் பெரிதும் நிதானத்துடன் இயங்கின. அந்த நிதானமும் முகத்திலே வீசிய தேஜஜும், கண்களில் தெரிந்த தீட்சண்யமும் வீரமும் விவேகமும் கலந்த ஒரு முழு மனிதனுக்கு உதாரணங்களாக உயர்த்திக் காட்டின.

பெரும் யோகியைப் போல் சுற்றுப்புரத்தை மறந்து ஆழ்ந்த பக்தி நிலையில் அர்ச்சனைகளை-செய்தபடியால் நீண்ட நேரம் அவனது ஆராதனை நீடித்தது. முடிவில் தீப ஆராதனையைச் செய்து விட்டு பெருமாள் தீர்த்தத்தை

எடுத்தபோதுதான் அறைக்கு வெளியே யாரோ இருப்பதை உணரமுடிந்தது அவனால்:-

நிற்பது யார் என்பதை உணர்ந்ததும் "வரவேண்டும். வரவேண்டும். சரியான நேரத்தில் என் அரசியல் குருநாதர் வந்திருப்பது என் பாக்கியம்தான். தங்கள் கைகளால் பெருமாள் தீர்த்தத்தை நான் பெற வேண்டும்" என்று வட்டிலை அவரிடம் அளித்தான் நந்திவர்மன். அவர் உத்திரிணியால் மூன்று முறை அளித்த பெருமாள் தீர்த்தத்தை பய பக்தியுடன் பெற்றுக் கொண்டான்.

பூஜையறை சம்பிரதாயங்கள் முடிந்தபின் அமைச்சரை அழைத்துப் போய் ஆசனத்தில் அமர வைத்து நந்திவர்மன் கேட்ட முதல் கேள்வியே அவரை அசர வைத்தது.

⌘⌘⌘⌘⌘

17. மக்கள் மன்றம்

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து செற்றார் செறலழிய சென்று செருச்செய்யும் இளங்காலைப் பொழுதில் பெருமாள் ஆராதனைக்குப் பின் தன்னை அமர வைத்த நந்திவர்மன் “எப்போது காஞ்சிக் கோட்டையைச் சாளுக்கியன் கைப்பற்றினான் பேரமைச்சரே?” என்று கேட்டதும் அசந்து போன அமைச்சர் “காஞ்சி பறிபோனது ஏற்கனவே உனக்குத் தெரியுமா?” என்று வினவினார் வியப்புடன்.

“இப்போது தான் தெரிந்து கொண்டேன். அது வரையில் தெரியாது” என்று சொன்னான் மன்னன்.

“நான் இன்னும் சொல்லவில்லையே! எப்படித் தெரிந்து கொண்டாய்?”

“தாங்கள் வந்திருக்கிறீர்களே- அதில்தான்”

“நான் வந்தால் என்ன? காஞ்சி வீழ்வதற்கும் நான் வருவதற்கும் என்ன சம்மந்தம் ?”-

“ஆச்சார்யரே, காஞ்சி வீழ்ந்தாலன்றி நீங்கள் ஏன் வரப்போகிறீர்கள்? ஒற்றர்களும் மற்றவர்களும் இல்லாமலா போய் விட்டார்கள்? காஞ்சியை விட்டு வெளியே வராத ஒரே மனிதர் தாங்கள் தான். எதற்காகவும் வெளியேறாத தாங்கள் வெளியேறியிருக்கிறீர்கள் என்றால் ஒன்று -நீங்கள் வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும். அல்லது அங்கே நீங்கள் இருப்பதற்கான உரிமை போயிருக்கவேண்டும். இரண்டில் எதுவானாலும் சரி- அதன் அர்த்தம் காஞ்சி கைமாறி விட்டது என்பது தானே?”

"நந்திவர்மா, உனக்கு மந்திரி என்று ஒருவரும் தேவையில்லை" என்று சிலாகித்தார் அமைச்சர். பிறகு 'காஞ்சி கைமாறினால் கூட நான் அங்கேயே தான் இருக்க விரும்பினேன். ஆனால் அதை விக்கிரமாதித்தன் விரும்பவில்லை. காஞ்சியைப் பிடித்து விட்டவன் என்னை வெளியேறச் சொல்லும் போது நானெப்படி மறுக்க முடியும்? மன்னனின் அருகில் இருக்கவேண்டியது தான் அமைச்சரின் வேலை என்று என்னை அனுப்பியிருக்கிறான் சாளுக்கியன்"- என்றார்.

"நான் அப்போது எதற்கு மன்னன்? மன்னனாக இல்லாதவனுக்கு அமைச்சர் எதற்கு?"-கேட்டான் நந்திவர்மன்.

"பறிபோனது காஞ்சி மட்டும்தான். பல்லவ நாடு இல்லை. அது உன்வசம் இருக்கும் வரை நீ மன்னன் தான்"-

"தலை போன பின் வெற்றுடலுக்கு மதிப்புண்டா ஆசார்யரே?" -

"தலை போகவில்லை நந்திவர்மா. உன் தலைக்கு இன்னொருவன் சொந்தம் கொண்டாடிக்கொண்டிருக்கிறான்"

இதைக் கேட்டுச் சிரித்தான் நந்திவர்மன். "நந்திப்புரக் கோட்டையைக் காத்து தோல்வியை வெற்றியாய் மாற்றினேன். காஞ்சிபுரக் கோட்டையைப் பிடித்து இந்த வெற்றியைத் தோல்வியாய் ஆக்கியிருக்கிறான் சாளுக்கியன். இல்லையா?" - என்றான்.

அமைச்சரது கவலை தற்போது அதிகரித்தது. அவரது எண்ணங்கள் விக்கிரமாதித்தனின் பேச்சு போக்கு ஆகியவற்றின் பால் சென்றன. காஞ்சிபுரக் கோட்டை துரதிஷ்டவசமாக சாளுக்கியனால் எளிதில் பிடிக்கப்பட்டிருந்தாலும் அவனிடமிருந்து அதை மீட்பதென்பது

அத்தனை எளிதான விஷயமல்ல என்பது அவருக்கும் தெரிந்தே இருந்தது. அதே சமயம் காஞ்சியை மீட்கும் வரை பல்லவ மன்னனுக்கோ பல்லவ நாட்டிற்கோ எந்த விதச் சிறப்பும் இல்லை என்பதும் அவருக்குத் தெரிந்தது.

அக்காலத்தில் -அதாவது சங்ககாலத்திற்குப் பிறகு பல்லவ மன்னர்கள் தலையெடுத்து தங்களுக்கென சாம்ராஜ்யம் ஒன்றை உருவாக்கிக் கொண்ட போது தென்பாரதத்தில் அந்த சாம்ராஜ்யமே பிரதானசாம்ராஜ்யமாக விளங்கியது. தென் பாரதம் என்றாலே பல்லவர்கள் தான் நினைவுக்கு வந்தார்கள். தமிழர் அரசுகள் சிறப்பின்றி வலுவிழந்து ஆங்காங்கே தத்தளித்துக் கொண்டிருந்தன. கங்கர்கள் சிறுபாலர்களாய் ஆட்சிபுரிந்து கொண்டு வந்தார்கள். பல்லவர்களிடம் நேரடியாக மோதக் கூடிய நெஞ்சுறுதி அவர்களிடம் இல்லாதிருந்தது. எனவே பெரும்பாலும் மணவினைத் தொடர்புகளை வைத்துக் கொண்டு அதிக பிணக்கில்லாமலேயே இருந்தார்களாதலால் பல்லவர்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. எனவே தான் பல்லவரை வீழ்த்தினால் தென் பாரதத்தைக் கைப்பற்றியதாகி விடும் என்று கருதினார்கள் வட பாரத மன்னர்கள். அப்பல்லவரை வீழ்த்த வேண்டுமானால் அவர்களது தலைநகரான காஞ்சியைக் கைப்பற்ற வேண்டுமாதலால் வடபாரத பேரரசர்கள் காஞ்சியின் மீது எப்போதுமே கண் வைத்த படித்தான் இருந்தார்கள். அந்த அடிப்படையில்தான் எங்கோ இருந்த மரகத நாட்டு மன்னன் சமுத்திர குப்தன் தெற்கே படையெடுத்து காஞ்சியைக் கைப்பற்றவும் செய்தான். அவனது படையெடுப்பே பின்னால் சாளுக்கியர்களுக்கும் பிறகு ராஷ்டிர கூடர்களுக்கும் வழியாக அமைந்து உதவியது.

இப்படித் தென் பாரதத்தின் திறவு கோலாய் அமைந்திருந்த காஞ்சி சர்வ சகஜமான விதத்தில் சாளுக்கியரின் கைகளுக்கு போய்விட்டதால் தென் பாரதத்தையே இழந்து

விட்டதாகத் தான் எண்ணினார் அமைச்சர். இருப்பினும் பல்லவ மன்னனை அற்பமாக எடைபோட முடியாத தாலும் அவன் எப்படியும் காஞ்சியை மீட்பான் என்று நம்பிக்கை இருந்ததாலும் அவனை மன்னனாக மதிப்பதில் எள்ளளவும் தவறால் அவர் முற்படவில்லை.

காஞ்சியைப் பற்றி அமைச்சர் வைத்திருந்த அபிப்ராயம் தான் நந்திவர்மனிடமும் இருந்தது. காஞ்சியின் முக்கியத்துவமும் அவனுக்குத் தெரியுமல்லவா? இருப்பினும் தற்போது அது கைமாறி விட்டதாக அறிந்தபின் துவண்டு விடவோ உணர்ச்சி வசப்பட்டு விடவோ இல்லை. காஞ்சியை மதிப்பது வேறு. அதை மீட்பது வேறு என்பதை அவன் புரிந்து வைத்திருந்ததானதால் அமைச்சரின் கவலையை உணர்ந்து சகஜமாகவே பேசினான்.

"எதிர்பார்த்த நிலைதானே பேரமைச்சரே? இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? சாளுக்கியப் படைகள் காஞ்சியை நெருங்குவதாக நமக்குச் செய்தி கிடைத்தபோது நான் இருந்த நிலை உங்களுக்குத் தெரியும். சாளுக்கியர் நமது ஜென்மப் பகைவர். அவர்கள் நம்மிடம் பழிதீர்த்துக் கொள்ள முயல்வார்கள் என்பதும் அதைச் சமாளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதும் எதிர்பார்க்க கூடியவைகள் தான். ஆனால் பாண்டியர் விஷயம் அப்படியல்ல. சாளுக்கியர்களைப் போல அவர்கள் அத்தனை பலம் பொருந்தியவர்கள் அல்ல. நம்மீது போர் தொடுக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் போய் படையெடுக்கிறார்கள் என்றால் வெறும் போர்த்திறவு தானே காரணமாக இருக்க முடியும்? அதிக பலமில்லாத அவர்களை அலட்சியப்படுத்தி ஆக்கிரமிப்புக்கும் வாய்ப்பளித்து விட்டால் அதுவே அவர்களது பலமாகிவிடும். பேரரசாக உருவாகும் சூழ்நிலைகளை அமைத்துக் கொள்வார்கள். வடக்கே சாளுக்கியர்கள் என்னும் பெரிய எதிரியை வைத்துக் கொண்டு தெற்கிலும் ஒரு புதிய

எதிரியைப் பலசாலியாக அனுமதித்தால் நம்நிலை என்னாவது? ஆகவே தான் புதிய எதிரியை ஆரம்பத்திலேயே அழிக்க எண்ணிப் பாண்டியர் போரில் முழுக்கவனம் செலுத்தினேன். பழைய எதிரி இதே நேரத்தில் முன்னேறி தலைநகரைப் பிடித்திருக்கிறான். இதில் வியப்படையவோ கவலைப்படவோ எதுவும் இல்லை."

அமைச்சர் சிறிது நேரம் பொறுத்திருந்து விட்டு "நந்திவர்மா, நீ வியப்படையவும் கவலைப்படவும் அவசியம் இருக்கிறது. நாளை வரை பொறு. விளக்கிச் சொல்ல இரண்டு பேர் உன்னிடம் வருவார்கள்" என்றார்கள்.

"வரட்டும்" -என்றார் பல்லவமன்னன்.

⌘

இந்த உரையாடலுக்குப் பிறகு நந்திவர்மனும் அமைச்சரும் வாளாயிருந்து விடாமல் தேரில் ஏறி நந்திபுரக் கோட்டைக்குள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றார்கள். பாண்டியரது போரின் காரணமாகச் சிதிலமடைந்து போயிருந்த கோட்டைச் சுவர்களையும் மதிள்தளங்களையும் பழுதுபார்த்துக் கொண்டிருந்த தச்சர்களை அணுகிக் கறைகளை நிவர்த்தி செய்வதில் இருக்க வேண்டிய எச்சரிக்கையை நினைவு படுத்தி "நீங்கள் இக்கோட்டைக்கு அளிக்கும் புத்துயிரானது இனி பகைவரால் மட்டுமல்ல காலத்தால் கூட பறிக்க முடியதாக அமையவேண்டும்" -என்று ஊக்கப் படுத்தினான் நந்திவர்மன்.

அதையடுத்து அவர்கள் நந்திவுர வீதிகளுக்குச் சென்றார்கள். போர் முடிந்து சில நாட்களே ஆகியிருந்தன. அந்த சில நாட்களில் போர் வீரர்களைக் கவனிப்பதிலும் சிகிச்சை செய்வதிலும் மன்னன் தன் முழு கவனத்தைச் செலுத்தியிருந்தானாதலால் மக்களிடம் செல்லவோ

அவர்களது கருத்துகளை அறியவோ முற்படவில்லை. தற்போது அந்த கடமையைச் செய்ய விரும்பிய அவன் அரசிலாற்றங்கறையருகே மக்களைக் கூட்டி அவர்களது குறைகளைக் கேட்ட போது தான் தன் குறைகளை அவன் உணரமுடிந்தது.

ஆரம்பத்தில் வாயைத் திறக்கத் தயங்கினார்கள் குடிமக்கள். அவர்களை ஊக்குவித்து பேசவைத்தான் மன்னன். அதற்குப் பின்னால் மக்கள் பேச முற்பட்ட போது அவை பேச்சுக்களாக இல்லாமல் புயல் வீச்சுக்களாக இருந்தன. தன்னைச் சுற்றி அமைச்சர் என்றும் அதிகாரிகள் என்றும் ஆயிரம் பேர் இருந்து அறிவுரைகளைச் சொன்னாலும் தன்னைப் பற்றிய உண்மையான விமர்சனத்தைத் தன்னால் ஆளப்படும் மக்களின் மூலம் தான் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதை உணர்ந்தான் நந்திவர்மன். அனுபவப் பட்ட ஓர் அமைச்சரும் சேனாதிபதியும் உணர்த்தாத விஷயங்கள் மக்கள் அவனுக்கு அப்போது உணர்த்தியதைக் கண்ட போது அரசன் என்ற ஒருவன் இருந்தாலும் நாட்டை மக்கள் தான் ஆள்கிறார்கள் என்பதையும் அரசனைவிட நாட்டு நடப்புகளை மக்கள் தான் அதிகம் கவனிக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு நாட்டு நடப்புகளின் பால் இருக்கும் அக்கறை தான் உண்மையான அக்கறையாக இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்ட நந்திவர்மன் வருங்காலத்தில் தன்னைப் போன்ற மன்னர்கள் புறக்கணிக்கப்பட்டு நாட்டை மக்கள்தான் ஆளப்போகிறார்கள் என்று கருதத் தலைப்பட்டான்.

மக்கள், தான் பாண்டியனிடம் அடைந்த வெற்றியை எண்ணி மகிழ்வார்கள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக பெரும்பாலானவர்கள் மகிழ்ச்சியை நீக்கி பாண்டியனிடம் தொடக்கத்தில் பெற்ற தோல்வியைக் குறித்தும் அதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் கவலையே தெரிவித்தார்கள்.

"மன்னவா, காஞ்சியின் மகிமை உலகமே வியக்கக் கூடியது. அதன் மன்னரான தாங்கள் பெரும் பாக்கியசாலிதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புவதில் என்ன தவறிருக்கிறது?" -என்று கேட்டார்கள் மக்கள்.

"நிச்சயமாக இல்லை" என்றான் நந்திவர்மன்.

"ஆனால் அப்படி விரும்பி மட்டும் என்ன பயன் மன்னவா? நாங்கள் துர்பாக்கியசாலிகளாக அல்லவா இருக்கிறோம்?" -என்றார்கள் மக்கள்.

"ஏன்? என்ன குறை உங்களுக்கு? எதுவானாலும் நிவர்த்தி செய்கிறேன்"-

"தாங்களாகவே நிவர்த்தி செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். ஆனால் இந்த நிலை தேவைதானா என்பது தான் எங்கள் கேள்வி"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"-

"மன்னவா, குறை என்று நாங்கள் சொல்லக் கூடியது உண்ணும் உணவிற்கும், உடுக்கும் உடைகளுக்கும் இல்லை. அமைதிக்கும், கௌரவத்திற்கும் ஏற்பட்ட குறையைத் தான் சொல்கிறோம்"

"உங்கள் அமைதிக்கும் கௌரவத்திற்கும் எப்போது குறை வந்தது?"

"நாங்கள் வாழும் நந்திபுரம் பகைவரால் தாக்கப்பட்டு சேதமடைந்துள்ளதே இதற்கென்ன பெயர் மன்னவா? இந்த நந்திபுரம் தங்களது பல்லவ நாட்டை சார்ந்தது தானே? தாங்கள் இங்கே பலமுறை வந்திருக்கிறீர்கள். நாதன் கோயிலைச் சமைத்து நானிலம் புகழும் விண்ணகரமாகப் போற்றும் படிச் செயல்பட அடிக்கடி விஜயம் செய்திருக்கிறீர்கள். உங்கள்

திருவுளப் படியே விண்ணகரம் உருவெடுத்துள்ளதில் எங்களுக்கு மகிழ்ச்சி. நீங்கள் இங்கே வரும் போதெல்லாம் இவ்வூருக்குத் திருநாள் தான். அப்படி எங்களையெல்லாம் எண்ணவைக்கும் படி, விஜயம் செய்யும் தாங்கள் -தங்கள் பெயராலேயே கோயிலையும் இக்கோட்டையையும் - ஊரையும் அமைத்த தாங்கள் -இத்தென்புற கடிநகருக்குப் பாதுகாப்பு பற்றி மட்டும் ஏன் யோசிக்க வில்லை? காஞ்சியிலிருந்து வெகுதூரத்தில் இருக்கும் இத்தென்புற அரணைப் பகைவர்கள் தாக்கக் கூடிய அபாயம் உண்டென்பது தங்களுக்குத் தெரியாதா? பகைவன் வந்து தாக்கிய பின் முறியடிப்பதை விட பகைவரால் தாக்க முடியாத விதத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பது சிறப்பானதல்லவா?"-

நந்திபுரத்தின் நிதர்சனை நிலையை மட்டுமின்றி தன் ஆட்சியின் நிலையைத் தெளிவாக மக்கள் உணர்த்தி விட்டதாகவே நினைத்தான் நந்திவர்மன். உண்மை நிலையைச் சுட்டிக் காட்டி விட்டதால் அவர்கள் மீது சீறி விழவில்லை. இப்படிச் சொல்லிவிட்டார்களே என்று சோர்ந்து அமர்ந்து விடவில்லை. அமைச்சர் கூட சுட்டிக் காட்டத் தவறிய விஷயத்தைத் தயங்காமல் தெரிவித்ததைக் கண்டு பூரிப்பும் பெருமிதமுமே அடைந்தான். மக்கள் இப்படி மனம் திறந்து பேசியது தங்கள் ஊரின் மீதான உண்மையான அக்கறையால் அன்றி வேறெந்த காரணத்தினாலும் அல்ல என்பதை அறிந்த அவன் அனைவரையும் தீட்சண்யமாக நோக்கி விட்டுப் கூறலானான்.

"பல்லவ நாட்டின் அருமை குடிமக்களே, நீங்களெல்லாம் நந்திவர்மனால் ஆளப்படுபவர்களல்ல. அவனைத் தாங்கும் கற்தூண்கள். சற்று முன்பு காஞ்சியின் மகிமை பற்றி சொல்லி அதை ஆளும் என்னைப் பாக்கியசாலி என்றீர்கள். நேற்று வரை வேண்டுமானால் அது உண்மையாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு அப்படி என்னால் கருத

முடியவில்லை. நானும் சரி இந்த காஞ்சியும் சரி பெருமைப்பட்டுக் கொள்ள முடியும் என்றால் அது உங்களால் தான். உங்களை என் குடிமக்களாகப் பெற்றதால் தான் நான் பாக்கியசாலியாகியிருக்கிறேன். உங்களைப் போன்றவர்களால் தான் காஞ்சி பிரகாசிக்கிறது. மன்னனின் மன்றத்தை விட மக்கள் மன்றம் இன்று என் கண்களைத் திறந்திருக்கிறது. பாண்டியரது போரால் நான் பாடம் கற்றேன் என்பதை விட உங்களிடம் இன்று பாடம் பெற்றேன் என்பது தான் பொறுத்தமானது. இனி நந்திபுரம் மட்டுமல்ல அனைத்து பல்லவ ஊர்களும் காக்கப்படும். இப்படிச் சொல்லும் இதே நேரத்தில் ஓர் உண்மையை உங்களிடம் மறைக்க நான் விரும்பவில்லை. அந்த உண்மையை இதோ என் குருநாதர் தான் சற்றுமுன் கொண்டு வந்தார். தென்புறக் கடிநகரான நந்திபுரத்தைப் பாதுகாக்கத் தவறியதால் பகைவரின் தாக்குதலுக்கு இலக்கானதாகச் சொன்னீர்கள். இந்தத் தாக்குதலை எதிர்கொண்டிருந்த இந்த நேரத்தில் தான் பாதுகாப்புடன் இருந்த பல்லவர் கோநகர் காஞ்சி சாளுக்கியர் வசம் வீழ்ந்து விட்டது. புதிய பகைவனான பாண்டியனை ஆரம்பத்திலேயே முளையைக் கிள்ளி எறிய முற்பட்ட நேரத்தில் பழைய பகைவன் நம்மை வீழ்த்தியிருக்கிறான். காலைச் சுற்றிய பாம்பை விலக்க முற்படுகையில் தலையில் பேய் வந்து அமர்ந்தாற்போல் தலைநகரில் அமர்ந்திருக்கிறான் சாளுக்கியன். அவனை அகற்ற வேண்டிய பெரும்பணி எங்கள் முன்னே நிற்கிறது. அப்பணியில் வெற்றி பெற விண்ணகரத்து எம்பெருமானின் அருள் இருந்தால் மட்டும் போதும் என்று நான் எண்ணவில்லை. ஆணிவேராகிய மக்களது நம்பிக்கை சிதறாமல் இருக்கவேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். மக்களின் நம்பிக்கையும் எம்பெருமானின் அருளும் காஞ்சியை நிச்சயமாக சாளுக்கியரது பிடியிலிருநது மீட்கும். இதை நினைவில் வைத்துக் கொண்டு அனைவரும் அமைதியடையுங்கள். கலைந்து செல்லுங்கள்.” -

மன்னனின் விவேகமான பேச்சு மக்களைப் பெரிதும் ஆட்படுத்தியது. காஞ்சியைப் பற்றி அவன் தெரிவித்த விவரங்கள் அவனது இக்கெட்டான நிலையைப் பரிபூரணமாக உணர்த்தின. இப்படிப் பெரும்இக்கெட்டில் உள்ளவனிடம் போய் சில்லரை விஷயங்களைப் பேசி விட்டோமே என்று பலரும் எண்ணிக் கொண்டாலும் மன்னனின் நெஞ்சிற்கு உரமூட்டும் விதத்தில் அவனையும் எம்பெருமானையும் போற்றும் கோஷங்களை எழுப்பிய வண்ணம் கலைந்தார்கள்.

மக்களின் போக்கில் என்றுமில்லா சந்துஷ்டியை அடைந்தான். இது போன்ற மக்களால் நாடு பெருமையடைகிறது என்றும் அந்த பெருமை தான் நிலைத்தது என்றும் கருதினான். பிறகு அவர்கள் நாதன் கோயிலை அடைந்தார்கள்.

அங்கே அமைச்சர் கூறியிருந்த நபர்கள் இருவர் மன்னனைக் காணத் தயாராக இருந்தார்கள். அவர்கள் முகங்களில் கவலை மித மிஞ்சிக் குடியிருந்தது.

⌘⌘⌘⌘⌘

18. திருமங்கை மன்னன்

விண் கடந்த சோதியாய் விளங்குஞான மூர்த்தியாய் திகழும் எம்பெருமான் ஸ்ரீநிவாசனாய் திருநாமம் கொண்டு திருபாலித்த நந்திபுர விண்ணகரக் கோயிலில் தரிசனத்தை முடித்து விட்டு மகாமண்டபத்திற்கு வந்த போது அங்கே காத்திருந்தார்கள் கோட்டைத் தளபதி பல்லவடி அரையரும் காஞ்சிநகர காரியஸ்தர் சோமயாஜியும், அமைச்சர் முன்னதாகவே குறிப்பிட்ட நபர்கள் அவர்கள் தான் என்பதை உணர்ந்து கொள்ள நந்திவர்மனுக்கு எந்த விதமானச் சிரமமும் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் தன்னை வணங்க முற்பட்ட போது "ஆண்டவனிருக்கும் ஆலயத்தில் நமக்குள் வித்தியாசம் வேண்டாம். பரஸ்பர மரியாதைகள் வேண்டாம்" என்ற கூறிய மன்னன் "அமைச்சரே, ஆலயக் கருவறையில் எம்பெருமான் ஸ்ரீநிவாசனை வணங்குவது போல் நான்முகன் சிற்பத்தையும் நந்தியின் சிற்பத்தையும் நான் அமைக்கச் சொன்னபோது அவர் எதிர்ப்பு தெரிவித்தது தங்களுக்குத் தெரியுமல்லவா?" -என்று கேட்டான்.

"அந்த எதிர்ப்புகளை நீ சிறிதும் பொருட்படுத்தவில்லை என்பதும் எனக்குத் தெரியும்" - என்றார் அமைச்சர்.

"திருமாலடியவனான நான் எனது பெயரை நந்திவர்மன் என்று வைத்துக் கொண்டபோது பெரிதும் பாராட்டிய சைவப் பெரியார்கள் கூட இது விஷயத்தில் மனம் கசந்து நின்றார்கள் அல்லவா?"

"ஆம் நந்திவர்மா, சிவபெருமானின் பிரதான கணமான நந்திதேவர் திருமாலை தொழுவது போல் அமைத்ததை

அவர்கள் ஆட்சேபித்தார்கள். சிவ பெருமானை வணங்குவது போல் கருடபகவான் சிலையை அமைத்தால் உனக்குச் சம்மதமா இருக்குமா என்று கூடக் கேட்டார்கள். நீ எதற்கும் அசையவில்லை"

"நந்திதேவர் சிலையை அப்படி அமைத்ததின் காரணத்தை நான் இதுவரை சொல்லவில்லை. ஒருவரும் அதை இன்று வரை ஊகிக்கவும் இல்லை?"

"மதக் கண்ணோட்டத்திலேயே சிந்திக்கும் போது உண்மை நிலை புரிவதில்லை"-

"தங்களுக்குப் புரிந்திருக்கும்"-

"புரிந்திருக்காது என்பது தான் உன் எண்ணமா?"

இதைக் கேட்டு சிரித்துக் கொண்ட அவன் காரியஸ்தரை நோக்கி "உங்களுக்குத் தெரியுமா காரியஸ்தரே?"-என்றுகேட்டான்.

"இங்கே வந்ததிலிருந்து நாங்கள் இருவருமே இதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்" என்றார் காரியஸ்தர்.

"குருநாதரைத் தவிர ஏறக்குறைய எவராலுமே ஊகிக்க முடியாமலிருப்பது வருத்தப்படக் கூடிய விஷயம்தான். ஆனால் தவறு என்மீது தானே தவிர மற்றவர்கள் மீதல்ல. முரண்பாடான விஷயங்களின் உண்மை அர்த்ததை ஆரம்பத்திலேயே சொல்லாமல் ஊகத்திற்கு விட்டு விட்டால் அனர்த்தம்தான் விளையும்" என்று சொல்லிவிட்டு மேலும் தொடந்த நந்திவர்மன், "காரியஸ்தரே, கருவறையில் காணப்படும் நந்திசிற்பம் வேறு யாருமல்ல. நந்திவர்மன் தான்" - என்றான்.

காரியஸ்தர் ஏதோ கேட்கப்போனார். அமைச்சர் அப்போது குறுக்கிட்டு "காரியஸ்தரே, நந்திவர்மன் பரம பாகவதன். இங்கே இந்த விண்ணகரத்தை தன் ஆட்சித் துவக்கத்தில் கட்ட முற்பட்டதிலிருந்தே விண்ணகர ஸ்ரீநிவாசன் பால் கொண்ட மிகுந்த ஈடுபாட்டை உணர்த்தும் வகையில் கருவறையில் தன்னுடைய சிற்பத்தை அமைத்து பெருமானை எப்போதும் வணங்கிக் கொண்டிருப்பது போல் ஒரு கருத்தை உருவாக்க ஆசைப்பட்டான். அதே சமயம் தன்னை அங்கே சிற்பமாக வடிப்பது ஆணவத்தின் அடையாளமாய் போய்விடும் என்று தீர்மானித்து தன்னையும் ஓர் கணமாய் பாவித்து தன் உருவத்திற்குப் பதிலாக நந்திதேவன் உருவத்தைச் சிற்பமாக்கச் சொன்னான். பரமபாகவதனான தன் பெயரில் நந்திதேவர் இருக்கும் போது தனது கருத்தோவியத்திலும் அவர் இருந்தாலென்ன என்று கருதினான். ஆகவே கருவறையில் திருமாலை எந்நாளும் வணங்கி நிற்பது நந்திவர்மனேயன்றி நந்திதேவரல்ல. உண்மைக் கருத்தை அறியாத சைவப் பெரியார்கள் சிலர் மனம் கசந்தார்கள்" என்று கூறி முடித்தார்.

காரியஸ்தரும் காஞ்சிக் கோட்டைத் தளபதியும் வாயைப் பிளந்தார்கள் அமைச்சரின் விவரணத்தைக் கேட்டு. அதே சமயம் இத்தனை பக்குவம் வாய்ந்த மன்னன் காஞ்சியைக் காப்பாற்றுவதில் ஏன் பக்குவம் காட்டவில்லை என்று இருவருக்குமே சந்தேகமாய் இருந்தது.

இந்நிலையில் நந்திவர்மன் பேசமுற்பட்டு, "இந்த விஷயத்தை இப்போது நான் ஏன் பேசினேன் தெரியுமா அமைச்சர் பெருமானே? இந்த நந்திபுர மக்கள் என் கண்களைத் திறந்ததால்தான். நான் நந்திபுரத்தைச் சரிவர பாதுகாத்து வைக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். பல்லவ நாட்டின் தென்புற வாயிலை அலட்சியப்படுத்தி

விட்டதாகச் சொன்னார்கள். எத்தனைப் பெரிய உண்மை அது? இதை வெளிப்படையாகக் சொல்லாமல் ஊகத்திலேயே வைத்திருந்தால்நானும் இவ்வுண்மையைச் சரியாக உணர்ந்து கொண்டிருக்க மாட்டேன். கருவறைச் சிற்ப விஷயத்தில் மனம் கசந்த பெரியோர்களைப் போல தவறாக ஊகித்து விட்டிருப்பேன். இல்லையா?” என்றான்.

பிறகு காஞ்சியைக் காக்காமல் விட நேர்ந்ததின் காரணத்தைப் பற்றி தளபதி பிரஸ்தாபித்த போது பாண்டியன் என்னும் புது எதிரியை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய அவசியத்தால் காஞ்சியை விட்டுக் கொடுத்ததாக அமைச்சரிடம் கூறியதை தளபதியிடமும் விளக்கினான் மன்னன்.

அதையடுத்து நால்வருமே நீண்ட நேரம் காஞ்சி நிலைமை குறித்து விவாதித்தார்கள்.

காஞ்சியில் விக்கிரமாதித்தன் தன்னிடம் பேசியவற்றையும் பேசியபடி பெருந்தன்மையாக நடந்து கொண்டது பற்றியும் விவரமாகப் பேசிய காரியஸ்தர் “மன்னர் பெருமானே, விக்கிரமாதித்தன் வெறிபிடித்த வேந்தனாக வரவில்லை. விவேகமாக வந்திருக்கிறான். வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன. ஆனால் புத்தியில் நிரம்ப நிதானம் காட்டுகிறான். நான் காஞ்சியை விட்டு புறப்பட்ட போதே அவன் பால் மக்களுக்கு மரியாதை உண்டாகிக் கொண்டு வருவதை உணர்ந்தேன். அது நமக்கு எவ்வளவு பாதகமானது என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. காஞ்சியின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் பலம் தற்போது விக்கிரமாதித்தனின் கைகளில் இருப்பதாகவே நினைக்கிறேன்” என்றார்.

மிகவும் துணிச்சலோடு இப்படி தன் கருத்தை வெளியிட்ட காரியஸ்தரை மனத்திற்குள் பாராட்டிக்

கொண்ட பல்லவ மல்லன் "காரியஸ்தரே, உபசாரம் வேறு, சொந்தம் வேறு, என்னதான் கொள்ளைக்காரன் திருட வந்த வீட்டில் திருடுவதை விட்டு விட்டு பரிசளிக்க முற்பட்டாலும் வீட்டுக்காரன் தன் வீட்டின் மீதான சொந்தத்தை அத்திருடன் மீதா விட்டுக் கொடுத்து விடுவான்?" என்று கேட்டான்.

காரியஸ்தர் அசரவில்லை.

"மன்னர் பெருமானே, கொள்ளைக்காரனாக வந்த சாளுக்கிய மன்னன் கொள்ளையிட வந்தது பல்லவ சிம்மாசனத்தை தானே தவிர மன்னனை அல்ல. அந்த சிம்மாசனத்திற்கு சொந்தம் கொண்டாடக் கூடியவர் தாங்களேயன்றி மக்கள் அல்ல. எனவே தங்கள் வசத்தில் இல்லாத அரியணையை பெருந்தன்மையைக் காட்டும் விக்கிரமாதித்தனுக்கு விட்டுக் கொடுக்க மக்கள் விரும்பலாம் ஆதரவு என்னும் ஆயுதத்தின் மூலம். அப்போது அரியணையின் சொந்தக்காரரான தாங்கள் என்ன செய்ய முடியும்?" என்றார்.

மிகத் தெளிவாக விளக்கிய காரியஸ்தரிடம் கேட்டான் நந்திவர்மன்.

"விக்கிரமாதித்தனைப் போலவே கீர்த்திவர்மனும் எண்ணிச் செயல்படுகிறனா?"

"இல்லை என்றுதான் தெரிகிறது"

"எதிரியின் கவசத்தில் ஓர் ஓட்டை இருக்கிறது. இது நமக்குச் சாதகமல்லவா?"

"நான் சொல்வது பொய்யாகி விட்டால் நமக்குச் சாதகமில்லை"

“உண்மையாகவே இருந்தாலும் கூட சாதகம் என்பது அவ்வளவு எளிதாக இருக்காது. விக்கிரமாதித்தன் அங்கே இருக்கும் வரை” என்றான் நந்திவர்மன்.

விக்கிரமாதித்தன் காஞ்சியை விட்டு புறப்படப்போவதாகப் பேசியது குறித்து அங்கிருந்த நால்வருக்கும் தெரியாதாகையால் அதுபற்றிப் பேசிக் கொள்ளவில்லை.

அடுத்து கோட்டைத் தளபதி தனது விவரங்களைக் கூறியபோது ‘இதெல்லாம் இயற்கைதான்’ என்று கேட்டுக் கொண்டு வந்த நந்திவர்மன் திடீரென கோட்டைத் தளபதியின் ஒரு செய்தியைக் கேட்டதும் தீயை மிதித்தவன் போலானான். அதுவரை அவனது முகத்தில் நிலவிய சாந்தம் மறைந்து போய் ஒருவித இறுக்கம் தோன்றியது. ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதைக் கேட்டவன் போல் அசதியடைந்தான். ‘தான் நினைத்த மாதிரி காஞ்சியை நாம் மீட்க முடியாதா?’ என்று சந்தேகத்துடன் கேட்டுக் கொண்ட அவன் பல்லவடி அரையரை நோக்கி “ தளபதி, நீங்கள் கூறியது உண்மைதானா?” என்று வினவினான்.

“ஆம் மன்னவா, இதைக் கூட காக்க இயலாத நீயேன் கோட்டைத் தளபதி என்று நேரடியாக கேட்கவில்லையே?, தவிர விக்கிரமாதித்தனின் பார்வை பேசியது அதைத்தான்”- என்றார் தளபதி.

“இக்கேள்வி உமக்கல்ல தளபதி, எனக்கு. ஏற்பட்டுள்ள அவமானம் நமக்கல்ல. பல்லவ நாட்டிற்கு. இதை நாம் போக்கியாக வேண்டும். இல்லையெனில் எந்த வெற்றியும் நமக்கு பயன்படாது. மிகப்பெரும் பொறுப்பு நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. முள்ளில் சிக்கிவிட்ட சீலையைக் கிழியாமல் பக்குவமாக மீட்க வேண்டிய நிலைநமக்கு” என்றான் நந்திவர்மன்.

அவனது முகத்தில் சிந்தனை படர்ந்தது. “சரி வாருங்கள், சில அவசர காரியங்கள் நம்மை நெருங்கிவிட்டன”- என்று கூறித் தேரில் ஏறி நந்திபுர அரண்மனைக்குப் புறப்பட்டான் பல்லவ மன்னன்.

நந்திபுரக் கோட்டை அரண்மனைக்கு வந்த பின்பு ஒருவித தீர்மானத்திற்கு வந்துவிட்டது போல் காணப்பட்டான் நந்திவர்மன். அதையடுத்து அவனிட்ட கட்டளைகள் அவனது தீர்மானத்தினை உணர்த்துவது போலவும் அமைந்தன.

காரியஸ்தரைக் காஞ்சிக்குச் சென்று கடிகைத்தலைவரைச் சந்திக்கும்படி கூறி அவரிடம் கொடுக்கும்படி ஓலை ஒன்றையளித்தான்.

கோட்டைத் தளபதி பல்லவடி அரையரை நந்திபுரத்திலேயே இருந்து கொண்டு கோட்டையின்புனரமைப்பு வேலைகளை நேரில் கவனிக்கவும் கண்காணிக்கவும் கட்டளையிட்டான்.

அவர் சற்றே தயங்கியது போல் தோன்றவே “தயங்காதீர்கள். விரைவிலேயே காஞ்சிக்கு வரவழைக்கும் ஆணை உங்களுக்கு வரும். அதுவரை நந்திபுரத்தைக் காஞ்சி போல் மாற்ற வேண்டியது உமது பொறுப்பு” -என்றான் நந்திவர்மன்.

பிறகு மற்றொரு ஓலை தயாராகியது. அதை ஒற்றர் தலைவனிடம் கொடுத்த மன்னன்” இதை உடனடியாக சேர்த்து விடு. விரைவில் சந்திப்பதாகச் சொல்”-என்றான். ஓலை யாருக்கு என்பதை மற்ற யாரிடமும் சொல்லவில்லை.

மேலுமொரு ஒற்றர் படை வீரனை அழைத்தான். “நீ போய் பாண்டியர் படைகளைத் துரத்திக் கொண்டு சென்றிருக்கும் நமது படைத்தலைவன் உதயசந்திரனைப் போய் பார். போரின் உக்கிரம் இந்நேரம் குறைந்திருக்கும். எனவே

ஸ்ரீ திருமங்கையாழ்வார்

அவனை வந்து என்னைச் சந்திக்கச் சொல். அனேகமாக நான் அல்லிக் கேணி மார்க்கத்தில் இருப்பேன்"-என்றான்.

இப்படி பல்வேறு கட்டளைகளை அனுப்பியபின் பேரமைச்சர் மட்டுமே இருந்தார்.

"குருநாதரே, நான் சில அவசர முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. அதற்குப் பூர்வாங்கமாக நான் ஒரு பக்த சீலரை சந்திக்க விரும்புகிறேன். அவர் இப்போது சீர்காழியில் இருப்பதாகத் தெரிகிறது. தாங்களும் என்னுடன் வரவேண்டும் என்பது என் பிரார்த்தனை" என்றான் நந்திவர்மன்.

மன்னனின் உள்ளத்தை ஓரளவிற்கு உணர்ந்திருந்தார் அமைச்சர்.

அதையடுத்து புறப்பாட்டிற்கான ஏற்பாடுகள் நடந்தன. மெய்க்காப்பாளனான உதயணனை அழைத்த மன்னன் "உதயணா? நீ இங்கே இரண்டு நாட்கள் இருந்து கோட்டைத் தளபதிக்கு உதவியாக இருந்து விட்டு சீர்காழியில் என்னிடம் வந்து சேர்ந்து கொள்"-என்றபோது "மன்னவா, நான் தங்களின் மெய்க்காப்பாளன்"-என்றான் உதயணன்.

"அதற்கென்ன இப்போது?"

"மெய்க்காப்பாளனின் கடமை தங்களின் மெய்காப்பது. அக்கடமையை நீங்களே மறுத்தாலும் நான் செய்தாக வேண்டும்".

"உதயணா, உன் கடமையுணர்வைப் பாராட்டுகிறேன். நான் இப்போது செல்லப் போவது என் குரு நாதருடன். என்னைத் தவிர யாரையும் லட்சியம் செய்யாத உன்னை நான் அழைத்துப் போவது என் குருநாதரை அவமதிப்பதாகும். அதோடு தற்சமயம் எனக்கு

ஆபத்தில்லை. போய் தளபதியை அழைத்து வா. அறிமுகப்படுத்தி விடுகிறேன்" -என்று கூறிய நந்திவர்மன் அவ்வாறே செய்து விட்டு புறப்படும் போது தளபதியிடம் ரகசிய கட்டளையொன்றையிட்டான். அதைக் கேட்டதும் வாயைப் பிளந்தார் தளபதி.

⌘

செவ்வாயின் திரள் காட்டும் வயல்சூழ்காழிச் சீராமமான சீர்காழி, நந்திவர்மனும் அவனது அமைச்சரும் சென்றபோது பெரும் விழாக் கோலம் பூண்டிருந்தது.

என்றைக்கும் இல்லாத திருநாளாக அத்திருப்பதியில் இருபெரும் ஞானச் சுடர்கள் விஜயம் செய்திருந்ததால் மக்கள் பெருமளவில் குழுமி அந்த ஞான சிரேஷ்டர்களைப் பற்றியே பேசிக் கொண்டு சென்றார்கள். இருவேறு மதங்களின் குருத்தொண்டர்களான படியால் அந்த வித்தியாசங்கள் காட்டும் மதக் கொடிகளும் வேத கோஷங்களும் ஊர் முழுதும் தூள் கிளப்பிக் கொண்டிருந்தன. அவ்விருவரில் ஒருவர் பாலகப் பருவத்திற்குரியவர். ஆயினும் பால யோகியாக அனைவரும் போற்றக்கூடிய வகையில் ஞானப்பால்உண்டு ஞாலத்தில் ஊர் தவப்பயனாய் அவதரித்த ஞான சம்மந்தர். இன்றைக்கு திருக்கோயில்களில் மட்டுமின்றி திருத்தொண்டர்களின் இதயக் கோயில்களில் வீற்றிருந்து என்றைக்கும் உச்சரிக்கப்படத் தகுந்தவரான சைவத்திருச் சுடரான திருஞான சம்மந்தர் அன்றைக்கும் அதே திருத்தக்க தீபமாய் விஜயம் செய்திருந்தார். அங்கு வந்து நாட்கள் இரண்டு ஆகி விட்ட நிலையில் ஒரே வானத்தில் இரண்டாவது நிலவு புறப்பட்டு வந்தாற்போல் வைணவ மாமதத்தின் வித்தகரும் பெருமாளின் பக்தி நெறியில் ஆழ்ந்து அலர்ந்த

ஆழ்வார்களில் நம்மாழ்வாருக்குப் பின் வைத்து போற்றத்தகுந்த சிரேஷ்டரும், இளமைக் காலங்களில் ஆலிநாட்டு மன்னராய் கோலோச்சியிருந்து கோமேதகப் பிரான் திருவரங்கனுக்கு திருக்கோயில்கட்டும் திருப்பணிக்காக அரசு துறந்து ஆறலைக் கள்வராகித் திருப்பணி லட்சியத்தில் தளராதிருந்து தன்னை ஆழ்த்திக் கொண்டபோது நீ ஆழ்ந்திருக்க வேண்டியது எங்கு என்பதை விளக்கி அத்திருவரங்கனாலேயே ஆழ்வாராக்கப்பட்ட திருமங்கையாழ்வாரும் விஜயம் செய்திருந்தாராதலால் சீர்காழி மாநகர் சீர்மல்கித் திணறியது.

சீர்காழிக்கு விஜயம் செய்த திருமங்கை மன்னர் ஏறக்குறைய நந்திவர்மனின் பிராயத்தவர். இளந்துறவிக்குரிய கோலமும் முதிர்ந்த துறவிக்குரிய ஞானமும் கொண்டு நடமாடும் தெய்வீகமாய் காட்சியளித்தவர். அரசவாழ்வும் அல்லற்பட்ட கள்ளர் வாழ்வும் கள்ளழகனான புள்ளேறு புண்டரிகாட்சனின் அருளால் பொய்யாய் பழங்கதையாய் பொன்றிப் போன பின் அந்த பரந்தாமன் உறையும் ஆலயங்கள் ஒவ்வொன்றாய் விஜயம் செய்து அவனை மங்களாசாசனம் செய்யத் துவங்கியிருந்தார் அவர். அவரது தெய்வீகக்களையும் தெய்வத்தைக் காட்டும் கலையும் மக்களை அவர்பால் ஈர்த்தன. வைணவச் சமுதாயமே அவர் பின் சென்றது. தத்தம் ஊர்களில் வாசம் செய்த எம்பெருமானை வந்து தரிசனம் செய்யவும் பாடிப் பரவவும் மக்கள் அவரை அழைத்துச் சென்றார்கள். அதுவும் அவனது திருவுள்ளமே என்று கருதிய அவர் பிறவிப் பயனே போல் எண்ணி மங்களாசாசனம் செய்யலானார். அப்படியொரு அழைப்பின் பேரில் சீர்காழிக்கு வந்த அவர் அங்கே கோயில் கொண்ட எம்பெருமானைக் கண்ணாறக் கண்டு மனம் பூரித்த போது அவனது ஊனத் திருக்கண்கள் மூடி ஞானப்பெருக் கண்கள் திறந்தன. திருவாய் மலர்ந்தது திருப்பாசுரம் பிறந்தது.

ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகவென மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும்
தெருவில் மணிவிழா வளமும் சிறக்கும்
காழிச்சீராம விண்ணகரைச் சேர்மினீரே *

இப்படித் தொடங்கி பத்துப் பாசுரங்களைப் பாடி முடித்தபின்பே கண்களைத் திறந்தார் பரகாலர். அவரது திருவாயினால் அவ்வாலயம் காழிச் சீராம விண்ணகரம் என்று உச்சரிக்கப் பட்டதுமே பூரிப்படைந்த பக்த கோடிகள் வாழி திருநாமங்களை வானுயிர ஒலித்தார்கள்.

சீர்காழி பேரழகனின் பால் மங்களாசாசனம் செய்து முடித்து வீதிக்குத் தன் பக்த கோடிகளுடன் வந்தார் திருமங்கையாழ்வார்.

ஊர்வலமாய் வந்தபோது எதிரே மற்றுமோர் ஊர்வலம் எதிர்ப்பட்டது.

“எதிரே யார் வருவது? என்ன விசேஷம்?”-என்று வினவினார் திருமங்கை மன்னன்.

“சம்பந்தர் வருகிறார்” என்று தெரிவித்தார் ஒரு சிஷ்யர்.

*பெரியதிருமொழிமூன்றாம்பத்துநான்காம்திருமொழி

“யார்? ஞான சம்பந்தரா?”-என்று வினவிய துறவி, “சரி, நந்திவர்மனைக் கூப்பிடு”-என்றதும் வாயைப் பிளந்தார் சிஷ்யர்.

“யார், பல்லவமல்லரா? மன்னரா? அவர் வந்திருக்கிறாரா?” என்று தன் ஆச்சரியத்தை முழுமையாக காட்டிக் கொண்ட சிஷ்யர் மூச்சிறைக்க ஓடினார் பின்னால்.

அங்கே கூட்டத்தோடு கூட்டமாக வந்து கொண்டிருந்த நந்திவர்மனையும் அமைச்சரையும் பார்த்து பெரியதாக ஒரு கும்பிடு போட்டு அபச்சாரம் தெரிவித்துக் கொண்டு இருவரையும் முன்னால் அழைத்து வந்தார் சிஷ்யர்.

தன்னை அழைத்த துறவிக்கு முன்னால் வந்த மன்னன் வேறெதையும் பேசாமல் நெடுஞ்சாண்கிடையாக மண்ணில் விழுந்து வணங்கி எழுந்தான். அமைச்சர்தலையைத் தாழ்த்தி வணங்கினார். இதற்கிடையில் நந்திவர்மனின் வரவு பற்றி அனைவருக்கும் தெரிந்து விடவே அனைவரும் முன்னே கூடினார்கள். நாடாளும் மன்னன் இப்படியொரு துறவிக்கு முன் நடுவீதியில் செய்த சாஷ்டாங்க நமஸ்காரத்தைக் கண்டு பலர் மலைத்தனர். மன்னனின் பணிவு கண்டு பனித்தனர்.

ஆனால் திருமங்கை மன்னன் அவ்வாறு நினைக்கவில்லை போலும். தரையில் விழுந்து வணங்கிய மன்னன் எழுந்து கொண்டபின் “மண்ணாசை உன்னை இன்னும் விடவில்லை”-என்றார் லேசான புன்முறுவலுடன்.

“எப்படி விடமுடியும் ஆசார்யரே? இந்த மண்ணில் தாங்கள் அல்லவா நிற்கிறீர்கள்?” -என்று நயமாகவே கேட்டான் நந்திவர்மன்.

“நான் வேண்டுமானால் மண்ணை விட்டுப்போய் விடுகிறேன். மண்ணாசையை நீ விட்டு விடுகிறாயா?”-மடக்கினார் ஆழ்வார்.

“இம்மாநிலம் ஜீவிக்க கல்பகோடி காலமாக நித்யவாசம் செய்யவேண்டியவர் தாங்கள். நான் போனால் மண்ணை ஆள வேறொருவன் உடனடியாக வருவான். தங்களைப் போன்ற சான்றோர் யுகபுருஷர்களாய் எப்போதோ, தான் அவதரிக்க முடியும்” என்றான் மன்னன் சாதுர்யமாக.

“உன் ஆசைக்கு ஏன் எங்களையெல்லாம் இழுக்கிறாய்?”-என்று கேட்டு புன்முறுவல் பூத்த திருமங்கை மன்னன், “நந்திவர்மா, சீர்காழி இன்று பலவகைகளில் பாக்கியம் பெற்ற பேரூராகி விட்டது. அதோ பார், எதிரே திருஞானசம்பந்தர் வந்து கொண்டிருக்கிறாராம். உன் ஆசார்யனுக்கு செய்யும் மரியாதையை அவருக்கும் செய்”-என்றார்.

“குரு சிரேஷ்டரே, தங்களிடம் திருமாலை என்னால் காணமுடிகிறதென்றால் அவனை சம்பந்தரிடம் காண முடியாதா?”-என்று வினவினான் நந்திவர்மன்.

இதற்கிடையில் திருஞானசம்பந்தரும் ஆழ்வாரது வருகையைப் பற்றி அறிந்தாராதலால் அவரும் மனமகிழ்ந்தார்.

அடுத்த சில நிமிடங்களிலேயே திருஞான சம்பந்தர் திருமங்கை ஆழ்வார் சந்திப்பு நடந்தது.

பல்லக்கில் வந்த சம்பந்தர் கணிசமான தூரம் இருக்கும் போதே பல்லக்கை விட்டிறங்கி நடந்து வந்து ஆழ்வாரை எதிர்கொண்டார். இருவருமே சம்பிரதாய மரியாதைகளைச் செலுத்திக் கொண்டார்கள்.

அதையடுத்து நந்திவர்மன் சம்பந்தரின் கால்களில் நமஸ்கரிக்க முற்பட்ட போது, “பல்லவ மன்னா,

இச்சிறுவனின் கால்களில் நீ வீழ்ந்து வணங்க வேண்டியதில்லை. உன் பக்தி நாடறிந்த ஒன்று. ஒரு சிறுவனின் காலடியில் பல்லவ சாம்ராஜ்யம் வீழ்ந்து விட்டது என்று யாரும் சொல்லிவிடக்கூடாது"-என்றார் ஞானசம்பந்தர்.

"உலகளந்த திருமால் தான் வாமனனாகவும் வந்தான். அவனது பாதங்களில் உலகமே சரணடையும் போது தங்கள் பாதங்களையும் அந்த வாமனனின் பாதங்களாக நான் எண்ணலாகாதா?"-என்று வினவினான் நந்திவர்மன்.

"பரம பக்தர்களின் எண்ணம் போலெல்லாம் உறைபவன் ஆண்டவன். உன் பக்தி அத்தகையதோர் பக்தி. அதைச் சம்பிரதாயங்களில் காட்ட வேண்டிதில்லைமன்னவா. உன்னை நானறிவேன். உன்னை அவனறிவான்"

"சுவாமி, என் குருநாதனின் கட்டளையை நான் மீறலாமா?"

"குருநாதரின் கட்டளை என்பது ஆண்டவனின் கட்டளைக்கும் மேம்பட்டது. அதை மீறுவதை விட பாவகாரியம் வேறு இருக்க முடியாது. ஆனால் நீ இங்கு குருநாதரின் கட்டளையை மீறவில்லையே. நானல்லவா தடுத்தேன்? இதில் ஏது அபச்சாரம்?"

மன்னன் இதற்கு மறுமொழி கூறவில்லை. இருவரும் இப்படி நயமாகப் பேசிக் கொண்டதை சிஷ்யர்களும் பக்த கோடிகளும் பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். திருமங்கை மன்னன் புன்முறுவல் பூத்தவராய் இருந்தார்.

அவர்கள் இருவரும் ஒன்றாய் இருப்பதைக் கேள்விப்பட்டு கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் பெருகி சாலையை மொய்க்கத் தொடங்கியது. பெருகும் கூட்டம் பலவகைகளில் இடையூறுகளை விளைவிக்கும் என்பதை இருவருமே உணர்ந்து

சற்றே அளவளாவினார்கள். சிதம்பரத்திற்குச் சென்று அம்பலவாணனைத் தரிசிக்கவிருப்பதாகக் கூறி விடைபெற்றார் சம்பந்தர். அதன் பின் சீர்காழியின் இவ்வந்திகைப் பள்ளியை அடுத்த வைணவ மடத்திற்கு திருமங்கை மன்னனும் நந்திவர்மனும் பரிவாரத்துடன் சென்றார்கள். அதற்குப் பிறகு நடந்த தொடர்ச்சியான சம்பவங்கள் நந்திவர்மனுக்கு பெரும் திருப்பங்களாய் அமைந்தன.

⌘⌘⌘⌘

19. குரு கீதை

அம்புவாவு மீனுமாகி ஆமையாகி ஆழியார் தன் பிரானுமாகி இந்த உலகைக் காக்க வந்த திருமாலை காழிச் சீராம விண்ணகரத்தில் மங்களாசாசனம் செய்து விட்டு சீர்காழியின் வைணவ மடத்தில் திருமங்கையாழ்வார் ஓய்வெடுத்தபோது அவருடன் அவரது சிஷ்யர்கள் இருந்தார்கள். அமைச்சர் பிரம்மஸ்ரீராஜர் இருந்தார். நந்திவர்மன் பக்த கோடிகளுக்கு பிரசாதம் அளிப்பதிலும் அன்பு வார்த்தைகள் சொல்லி அனுப்பி வைப்பதிலும் ஈடுபட்டிருந்த வைணவப் பெரியார்களோடு இருந்து கொண்டு அப்பணிகளைச் செய்து கொண்டிருந்தான்.

விண்ணகரத்தில் பாடப்பட்ட பாசுரங்களை சிஷ்யர் ஒருவர் ஓலைச்சுருள் ஒன்றில் பதித்திருந்தார். அதையெடுத்து படித்த போது அதிலிருந்த எழுத்துப் பிழையொன்றைச் சுட்டிக் காட்டிய ஆழ்வார் கூறலானார்.

“நீங்களெல்லாம் என் சிஷ்யர்களாகப் பல ஆண்டுகளாக இருந்து வருகிறீர்கள். என் தேவைகளை அறிந்து பிசகில்லாமல் செய்து வருகிறீர்கள். இருந்தாலும் நீங்கள் பூரணத்துவம் அடைந்ததாக எனக்குத் தோன்றவில்லை”

சிஷ்யர்கள் பதறிப் போனார்கள்.

“பதறாதீர்கள், தவறுகளைச் சுட்டிக் காட்டும் போது தான் எந்த உறவுமே சுத்தமாகிறது. இந்த விஷயம் குரு சிஷ்ய பிரபாவத்தில் மிகவும் முக்கியமானது. நான் பாடிய பாசுரங்களைப் படியெடுத்தீர்களே அதில் எப்படி உங்களுக்குப் பிழைவந்தது?”

சிஷ்யர் பதிலளிக்க முற்பட்டார். அவரைத் தடுத்த ஆழ்வார், “குருவுடன் சிஷ்யன் ஐக்கியமாகும்போது அவன் குருவாகவே ஆகிறான். குருவின் எண்ணங்களை அறிய முடிகிறது. செயல்பட முடிகிறது. அந்த ஐக்கியம் உண்டாகாதவரை குருவும் சிஷ்யனும் வேறுபடுகிறார்கள். குருவின் எண்ணங்களை அவனால் முழுமையாக அறிந்து கொள்ள முடிவதில்லை. அதனால் பிழைகள் நேர்கின்றன. அப்படி நேர்ந்த பிழைதான் இது”

“ஆசார்யரே, அபச்சாரப் பட்டுவிட்டோம். மன்னிக்க வேண்டும்”-என்றார்கள் சிஷ்யர்கள்.

ஆழ்வார் அதற்குப் பதில் சொல்லவில்லை. மாறாக, “இந்த நந்திவர்மனை எனக்குக் கொஞ்ச காலமாகத் தான் தெரியும். அவனை என் சிஷ்யனாக வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் என்னைக் குருவாக ஆக்கி வைத்துக் கொண்டிருக்கிறான். உங்களையெல்லாம்விட அவன் என்னோடு ஐக்கியமாகி இருக்கிறான். உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?” என்று கேட்டார்.

சிஷ்யர்கள் பேசமாலிருக்கவே ஆழ்வார் தொடர்ந்தார்.

“இந்த நாடு அவனுடையது. இந்நாட்டு மன்னன் அவன். அவன் அனுமதி மறுத்தால் நாட்டைவிட்டு நீங்க வேண்டியவர்கள் நாம். அப்படிப்பட்ட அவன் சீர்காழிக்கு வந்தபோது அரசன் என்ற ஆணவத்தைக் காட்டி என்னைச் சந்திக்க வரவில்லை. மக்களோடு மக்களாய் நின்றான். நான் தான் உங்களை அனுப்பி அவனை வரவழைத்தேன். அரசன் என்ற உரிமையையும் பயன்படுத்தவில்லை. சீடன் என்ற தகுதியையும் பயன்படுத்தவில்லை. பணிவு என்ற பண்பை மட்டுமே காட்டினான். எல்லாம் இருந்தும் எதையும் சீண்டாதவன் எப்பேர் பட்டவன்?”

சிஷ்யர்கள் மீண்டும் மௌனம் அனுஷ்டித்தார்கள். ஆழ்வார் தொடர்ந்தார்.

“அவனோ பரம பாகவதன். திருமாலின் திருநாமங்களை உச்சரிப்பதை வாழ்வாய்க் கொண்டவன். ஞான சம்பந்தர் வந்தபோது அவரது பாதங்களில் விழுந்து வணங்கும் படி கட்டளையிட்டேன். ஸ்ரீவைஷ்ணவ பக்தன் என்ற முறையில் அதை மறுக்க அவனுக்கு உரிமையுண்டு. மன்னன் என்ற அதிகாரத்தில் கூட மறுக்க முடியும். அவனோ குருவின் கட்டளையை மறுப்பின்றி ஏற்றான். சம்பந்தர் தடுத்தபோதும் குருவின் கட்டளை என்று வாதிட்டான். ஒரு குருவின் கட்டளையின் முன் அனைத்தையும் விட்டுக் கொடுக்க முற்பட்டவன் மாமனிதன் அல்லவா? அவனைப் போன்ற மன்னர்கள் எப்போதோ தான் தோன்ற முடியும்! அவனைப் போன்ற சிஷ்யர்களும் மிகச் சிலர்தான் இருக்கிறார்கள். இன்னொரு விஷயத்தையும் சொல்கிறேன். வேண்டுமானால் உங்களுக்குக் கண் முன்னாலேயே காட்டுகிறேன். நான் இந்த மடத்திற்கு வந்த கொஞ்ச நேரத்திலேயே சிஷ்யர்கள் சிலரையும் நந்திவர்மனையும் அழைத்தேன். காழிச் சீராம விண்ணகரப் பெருமானின் விக்ரகத்தின் அபயகரத்தில் ஏதாவது சிற்பம் செதுக்கியிருக்கிறார்களா என்பதைக் கவனிக்க தவறிவிட்டதாகச் சொல்லி ‘போய் கவனித்து விட்டு வாருங்கள்’ என்று சொன்னேன். சிஷ்யர்கள் போயிருக்கிறார்கள். இவன் போகவில்லை”

சிஷ்யர்கள் விழித்தார்கள்.

“குருவின் கட்டளையை சம்பந்தருக்கு முன்னால் மறுப்பின்றி நிறைவேற்றத் துணிந்த நந்திவர்மன் இப்போது ஏன் அசட்டை செய்து விட்டான்?” -என்று கேட்டார் ஆழ்வார்.

சிஷ்யர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அமைச்சர் மட்டும் புரிந்து கொண்டவர் போல் நிர்மலமாய் இருந்தார்.

“அவனையே கேட்போம். கூப்பிடுங்கள்”-என்றார் ஆழ்வார்.

அதேசமயம் “வந்து விட்டேன்” -என்று வந்து நமஸ்கரித்து விட்டு சிஷ்யர்களோடு அமர்ந்தான் பல்லவ மன்னன்.

“எங்கே போய் விட்டாய் நீ? சிறிது நேரமாகக் காணவில்லையே?” என்று வினவினார் ஆழ்வார்.

“பெரியோரது தொண்டில் சற்று யாசித்து விட்டு வந்தேன்” என்றான் நந்திவர்மன்.

“என்ன தொண்டு அது?”

“ஆண்டவனைத் தரிசித்து விட்டு தங்களைப் பின் தொடர்ந்த மக்களுக்குப் பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்தார்கள் பெரியோர்கள். அதில் பங்கேற்பது அவர்களது புண்ணியத்தில் பங்கு கேட்பது போல் ஆகிவிடும். ஆகவே தான் யாசித்தேன். யோசிக்காமல் இடமளித்தார்கள்”

உன்னையும் சில சிஷ்யர்களையும் விண்ணகரத்திற்குப் போகும்படி சொன்னேனே?”

“ஆம்”

“எதற்குத் தெரியுமா?”

“ஏதோ பெருமாளின் விக்கிரகத்தில் எதையோ பார்த்து வரச் சொன்னீர்கள்”

“அது கூட நினைவில்லையா? என்பெருமாளின் அபயம் தரும் கரத்தில் என்ன சிற்பம் இருக்கிறது என்பதை பார்த்து வரச் சொன்னேன்”

“ஆம்”

“ஏன் போகவில்லை?”

“ஆசார்யரே, அந்த விக்கிரத்தில் என்ன சிற்பம் இருந்தாலென்ன? அனைவரையும் காக்கும் அபயஹஸ்தம் தங்களிடம் இருக்கும் போது அதைத் தரிசிப்பதை விட்டு விட்டு அங்கே ஏன் போக வேண்டும்? இக்கரம் இருக்கும் போது அக்கரம் எதற்கு?”

பார்த்தீர்களா என்பது போல் சிஷ்யர்களை நோக்கி விட்டு மேலும் வினவினார் ஆழ்வார்.

“ஞான சம்பந்தரை வணங்கும் படி நானிட்ட கட்டளையை நீ ஏன் மறுக்கவில்லை?”

“என்னால் மறுக்கமுடியாது ஆசார்யரே”

“நந்திவர்மா, நீ மன்னன் என்பதை மறந்தாலும் பரம பாகவதன் என்பதை மறுக்க முடியாது. அந்த அடிப்படையில் மறுக்கலாம் அல்லவா?”

“முடியாது சுவாமி”

“சைவரின் கால்களில் விழ நேர்வது உனக்கு வேதனையாகப் படவில்லையா?”

“ஆசார்யரே, பிறருக்குத் துன்பத்தை அளிக்காமல் இருத்தலும் துன்பத்தின் மூலம் எதையும் பெறாமலிருத்தலும் சைவம். ஆனால், தான் துன்பப் பட்டாவது பிறருக்கு நன்மை செய்வதே வைணவம். அந்த வைணவத்தைப் போற்றும் எனக்கு தங்கள் கட்டளையில் யோசிக்க என்ன இருக்கிறது?” -என்றான் நந்திவர்மன்.

எந்த சிஷ்யனையும் குரு நேருக்கு நேர் புகழக்கூடாது என்பது குரு சாஸ்திர விதியாதலால் “பதில் ஒன்றும்

திருப்திகரமாக இல்லை" என்று சொல்லி பேச்சை முடித்துக் கொண்டார் ஆழ்வார். அன்று சிஷ்யர்கள் அனைவருமே சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்றவர்களாய் மகிழ்ந்தார்கள்.

அன்று மாலை ஆழ்வாருடன் தனிமையில் உரையாடும் வாய்ப்பு கிடைத்தபோது காஞ்சிக் கோட்டை கைமாறிய விதம் பற்றியும் விக்கிரமாதித்தனின் மனம்மாறிய விதம் பற்றியும் நகர மக்களின் நிலைமாறிய விதம் பற்றியும் விளக்கிய நந்திவர்மன், "தாங்கள் உதவியை யாசிக்கவே நானிங்கு வந்தேன்" -என்றான்.

"துறவியை ஏன் அரசியலுக்கு இழுக்கிறாய்? உலக அமைதிக்கு வழிதேட புறப்பட்டவனைப் போய் அமைதியைக் கெடுத்துக் கொள்ளும் விஷயத்திற்கு அழைக்கலாமா?" -என்று கேட்டார் ஆழ்வார்.

"அரசியலில் இறங்க உங்களை வற்புறுத்தவில்லை. சில யோசனைகளைக் கேட்க வேண்டும்"

"துறவிக்கென்ன இருக்கிறது அரசியலில் யோசனை கூற?"

"தங்களை விட வேறுயார் யோசனை கூறுவதில் வல்லவராக இருக்க முடியும் இதில்? அரசியலில் அனைத்தையும் கண்டுவிட்டு பின் விண்டுவிட்டு வந்தவரல்லவா தாங்கள்?"

"துறவிகளுக்கு பூர்வாசிரம வாசனை இருக்கக் கூடாது நந்திவர்மா. அதோடு துறவிகள் அரசியலில் யோசனை சொல்வது நல்லதல்ல. அவர்களது யோசனைகள் அரசியலை மேலும் ஆபத்தாக்கிவிடும். அரசியல் இயல்பிற்கு முற்றிலும் மாறுபட்ட நாங்கள் அதை விட்டு விலகியிருப்பதே சரி"

"தங்கள் தளபதிகளில் ஒருவரையாவது தரக்கூடாதா?"

“தளபதிகள் யாருமில்லை. சிஷ்யர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களும் இங்கே இல்லை”

“அவர்களில் தான் ஒருவரைத் தாருங்களேன்”

“சரி தருகிறேன். அவரிடமிருந்து நீ அறிவைப் பெறலாம். அரசியலைப் பெறமுடியாது”

“நல்லது ஆசார்யரே” -என்று சொன்ன நந்திவர்மன் வேறொரு வேண்டுகோளுக்கும் ஒப்புதலைப் பெற்று புறப்படுவதற்கு உத்தரவைக் கேட்டான்.

“போய் வா நந்திவர்மா. குருவின் உதவியை விட ஆசிகள் சிறந்தவை. அலை உனக்குண்டு. விரைவில் காஞ்சியில் பார்க்கலாம். வரதன் என்னை அழைக்கிறான்”-என்று கூறி தன் பேச்சை முடித்துக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்தார் திருமங்கை மன்னனான அந்தத் திருவருள் துறவி.

⌘

நந்திவர்மன் தனது முதற்கட்ட ஏற்பாட்டிற்கு வித்திட்டு விட்ட நிலையில் திருவல்லிக்கேணிக்குப் புறப்படத் தயாரானான். பேரமைச்சர் பிரம்மஸ்ரீராஜர் திருவரங்கம் சென்று விட்டு வர விருப்பம் தெரிவித்திருந்ததால் மன்னன் மட்டுமே பயணப்பட வேண்டியிருந்தது.

அந்நிலையில் “உன் மெய்க்காப்பாளன் உதயணனை வரச் சொல்லியிருந்தாயே, எங்கே காணோம்?” என்று கேட்டார் அமைச்சர்.

“வரமாட்டான்” -திட்டவட்டமாகச் சொன்னான் நந்திவர்மன்.

“ஏன்?”

“இந்நேரம் அவன் நந்திபுரச் சிறையில் இருப்பான்”

“இதென்ன விபரீதம்?”

“விபரீதம் தான். இடுப்பில் நெருப்பைக் கட்டிக் கொண்டு யாரால் பயணம் செய்யமுடியும்?”

“நீ என்ன சொல்கிறாய்?”

“பேரமைச்சரே, இந்த உதயணனை உங்களுக்குத் தெரியவில்லையா?”

“எங்கோ பார்த்திருக்கிறேன்”

“அவன் வேறு யாருமல்ல. சபரநாட்டு மன்னன்.”

“யார் அந்த வட நாட்டானா? பல்லவரின் ஜென்ம விரோதியாயிற்றே? அவனையா மெய்க்காப்பாளனாக வைத்திருந்தாய்? எப்படி?”

“கள்ளர் தலைவன் அல்லவா? கள்ள நோக்கத்துடன் என்னிடம் வந்தான் ஒன்றுமறியாதவன் போல். நானும் ஒன்றுமறியாதவன் போல் நடித்து அவனை மெய்க்காப்பாளனாக்கிக் கொண்டேன்”

“அது ஆபத்தல்லவா?”

“பாம்பென்று தெரிந்து விட்டது. அதை பக்கத்தில் வைத்துக் கொண்டால் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளலாம். விட்டு விட்டால் அது எப்போது எங்கே இருந்து கடிக்கும் என்பதை அறிய முடியாதல்லவா? படைகளைத் திரட்டி போரிடக் கூடியவனை என் பக்கத்திலேயே கைதி போல் வைத்திருப்பது நல்லதல்லவா? அவனை விட்டிருந்தால்

பாண்டியர் போர் நடக்கும் சமயத்தில் வேண்டாத தொல்லைகளைத் தந்தால் சிரமமல்லவா? ஆகவே தான் வைத்திருந்தேன் பாண்டியர் போர் முடியும் வரை. சாளுக்கியர் பிரச்சனை வராதிருந்தால் அவனை விட்டிருப்பேன். தற்போது அதற்கு வழியில்லை. எனவே தான் கைது செய்து சிறைவைக்கும் படி கோட்டைத் தளபதிக்கு ரகசிய உத்தரவிட்டேன். அதனால் தான் அவரை நந்திபுரத்தில் தங்கும்படிச் சொன்னேன்"

அமைச்சர் வியந்து போனார் அவனது விவரங்களைக் கேட்டு. அவனைப் பற்றி அரசியல் குருநாதர் என்ற முறையில் நன்றாகவே அறிந்திருந்தாலும் தற்போது திருமங்கை மன்னனால் உண்மைச் சீடனென்று விவரமாகப் புகழப்பட்ட போது அவர் மிகவும் பெருமிதமடைந்தார். தற்போது உதயணனை மடக்கிய விதத்தை அறிந்த பின் நந்திவர்மனின் ஆற்றல் பற்றி எந்த விதமான சந்தேகமும் எழமுடியாமல் போயிற்று.

"போய் வா நந்திவர்மா. நீ இப்போது காஞ்சிக்கு மன்னனல்ல. இச்செய்தி காஞ்சியை நீ நெருங்க நெருங்க பலருக்கும் தெரியவரும்போது ஆபத்துக்கள் உண்டாகலாம். ஜாக்கிரதையாகச் செல். உனக்கிருக்கும் ஒரே துணை அறிவுதான் தற்போது. நான் திருவரங்கம் செல்கிறேன். என் பிரார்த்தனையை அரங்கனிடம் சமர்ப்பிக்கிறேன். அவன் அருள் உன்னை நிழலாகத் தொடரட்டும்" என்று அன்பு மிகுதியால் கூறிவிட்டு அவனை வழியனுப்பினார்.

சீர்காழியிலிருந்து புரவி மூலமாகவே பயணம் சென்ற அவன் முடிந்தவரை காட்டுப்பகுதிகள் வழியாகவே சென்றான் இரவு நேரங்களில் மட்டும் ஊர் எல்லைப்பகுதிகளுக்குச் சென்று உணவருந்தினான். புரவிக்கும் அவ்வப்போது இளைப்பாற நேரம் ஒதுக்கியதால் அவனது பயணம் நீண்ட பயணமாகவே அமைந்தது. அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக காஞ்சிக்கு வெகுதொலைவிலேயே அவனது காஞ்சிக் கோட்டை இழப்பு செய்தியாக பரவி

விட்டிருந்தது. வெற்றிச் செய்தியை விட தோல்விச் செய்தி இத்தனை வேகமாக பரவியிருந்த விதம் அவனை வியக்க வைத்தது. உண்மையில் நந்திபுரத்துச் சமீபங்களிலும் பாண்டிய நாட்டு எல்லைகளிலும் அவனும் படைத்தலைவன் உதயசந்திரனுமாக பெற்றிருந்த வெற்றிச் செய்திகள் அவன் பயணம் செய்த பகுதிகளில் எட்டியிருக்கவில்லை. காஞ்சி வீழ்ச்சி மட்டும் எட்டியிருந்தது மட்டுமில்லாமல் காஞ்சிக்குள் விக்கிரமாதித்தன் நடந்து கொண்ட விதம் பற்றியும் ஓரிரு செய்திகள் வந்திருந்தன. நல்ல வேளையாக சாளுக்கிய மன்னனின் விதம் குறித்து வந்த செய்திகளை மக்கள் அவ்வளவாக நம்பியதாகத் தெரியவில்லை. காஞ்சிக் கோட்டை வீழ்ந்ததை ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டார்கள் . அந்த வீழ்ச்சியை நந்திவர்மன் விரைவிலேயே சரிகட்டி விடுவான் என்று நம்பினார்கள். அந்த அளவில் நந்திவர்மன் மகிழ்ச்சியடைந்தாலும் சாளுக்கியனின் படையெடுப்பால் பல்லவ நாட்டில் வரிகள் உயரவும் பஞ்சம் உண்டாகவும் வழியுண்டு என்ற அச்சம் மக்களிடையே உண்டாகியிருந்தது குறித்தும் போரை மக்கள் வெறுத்தது குறித்து கவலை பட வேண்டியதாயிற்று.

பயணம் தொடரத் தொடர ஓரளவிற்குத் தன் தோற்றத்தையும் மாற்றிக் கொண்டு திருநீர்மலையை அடைந்த போது அவன் கண்ட காட்சியொன்று திகைப்பையும் ஆச்சர்யத்தையும் உண்டாக்கியது.

நெருங்கிய மலைகள் அடங்கிய பகுதியொன்றில் இளம்பெண்ணொருத்தி நின்றிருந்தாள். அவளைச் சுற்றி கொலைகாரப் பார்வையுடன் ஆறேழு பேர் நின்றிருந்தார்கள். பெண்ணின் கையில் சிறிய கத்தியும் கண்களில் கத்தியைவிட கூரிய பார்வையும் ஆவேசமும் குடிகொண்டிருந்தன.

"யாரும் நெருங்க வேண்டாம். நெருங்கினால் தொலைந்தீர்கள்" - என்ற படி தன்னை நெருங்கிய ஆபத்தை உணராமல் பின்னடைந்த படி சென்றாள் அவள்.

அதையடுத்து மின்னல் வேகத்தில் காரியங்கள் நடந்தன.

⌘

மின்னல் கொடிபோல் ஆடி வீழ்ந்த அவளை தெளிய வைத்த நந்திவர்மன் அவளைக் கேட்டான்.

"பெண்ணே நீ யார்? உனக்கென்ன வேண்டும்"

"ஒரு அயோக்கியனின் உயிர் வேண்டும்"

"யாரவன் சொல். நான் உதவி செய்கிறேன்"

"சத்தியமாகச் செய்வீர்களா?"

"நிச்சயமாகச் செய்கிறேன். நீ கேட்கும் உயிருக்கு உரியவன் யார்? சொல்"

இடியை வீசினாள் அவள்.

"நந்திவர்மன்!"

⌘⌘⌘⌘⌘

20. ரேவாதேவி

நெடுமாலவன் மேவிய நீர்மலை என்று பின்னால் திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற திருநீர்மலையை நந்திவர்மன் அடைந்தபோது மாலைநேரமாகி விட்டதால் மாலை நேரக் கதிரவன் மேலைத்திசை வீழ்ந்து சந்தியாவானத்தை உண்டாக்கி விடவே அச்செந்நிற ஒளியில் திருநீர் மலைக் கோயில் மாணிக்கம் போல் பிரகாசித்தது. அகழிபோல் நீர்வளையமொன்று சூழ்ந்த மலையானதால் நீர்மலை என்றும் அம்மலை மீது திருவருள் தரும் திருமால் உறைந்த காரணத்தால் திருநீர்மலை என்றும் பிரசித்த பெற்ற அந்த தெய்வமலைக்கு துணை நிற்பது போல் அமைந்திருந்த கற்குன்றுகளுக்கிடையே நந்திவர்மன் அப்படியொரு காட்சியை எதிர்பார்க்கவில்லை.

சிறியதோர் கத்தியை ஓங்கியபடி மிரட்டிய பெண்ணின் தைரியம் அசட்டுத் தனமானதுதான் என்றாலும் அவளைப்பிடிக்கவோ அல்லது வீழ்த்தவோ ஏழெட்டு ஆடவர்கள் சுற்றி நிற்பதைப் பார்த்தபோது அவள் அப்படியொன்றும் சோடை போகக் கூடியவள் அல்ல என்பதை மன்னனுக்கு உணர்த்தியது. தன்னை நெருங்கவேண்டாம் என்று பயங்கர ஒலி ஊடுறுவும் குரலில் கூவி அவள் பின்னடைந்து சென்றதையும் அப்படியே சிறிது நகர்ந்தால் இரண்டு பெரும் புதர்கள் இருந்ததையும். அவற்றருகே போய் கீழே படுத்து உருண்டு விட்டால் மலைச் சரிவில் சரிந்து அவள் தப்பி விடலாம் என்பது தான் அவள் அபிப்ராயமாக இருக்க வேண்டும் என்பதையும் நந்திவர்மன் கண நேரத்தில் உணர்ந்து கொண்டாலும் அதே சமயம் அவளுக்குப் பின்னாலிருந்த புதர் மறைவில் மனிதன் ஒருவன் ஓங்கிய வாளுடன் நிற்பதை அவன் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அதை அப்பெண்

கவனிக்கவில்லையாதலால் அவள் பெரும் ஆபத்திலிருப்பதை அறிந்தான் நந்திவர்மன். சிறிது தாமதித்தாலும் புதர் மனிதனின் வாளுக்கு அவள் இரையாவது நிச்சயம் என்பதைப் புரிந்து கொண்டு உடனே தன்னிடமிருந்த வேலை மிக வேகமாக எடுத்து வீசினான் புதரருகே நின்ற பலரை நோக்கி.

புரவியின் மீது ஆரோகணித்தபடி சற்றே உயரமான இடத்திலிருந்து அவன் எய்த வேல் தன் வேலையை இம்மியும் பிசகாமல் முடிந்ததால் பெரும் மரண கோலத்துடன் அவன் கீழே விழுந்தான். நொடிப் பொழுதில் நடந்து விட்ட விபரீதத்தை அப்பெண் கண்டு வியந்ததை விட அவளை மடக்க நினைத்தவர்களே அதிகம் மலைத்தார்கள்.

அதே சமயம் தன் கைகளைத் தட்டியபடி அங்கே வந்து சேர்ந்தான் நந்திவர்மன். அதோடு அந்த மனிதர்களைப் பார்த்து "மகிழ்ச்சி" - என்றான் இகழ்ச்சியான குரலில்.

அவனது இகழ்ச்சி ஒருபுறம் - அவன் புரவியின் மீது அமர்ந்திருந்த தோரணை ஒருபுறம் - திடுதிப்பென்று ஒருவனை ஒரே வீச்சில் வீழ்த்தியது ஒரு புறம் - அதுவரை அவனைக் கவனிக்காமல் விட்டு விட்ட ஏமாற்றம் ஒருபுறம் - இப்படிப் பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்புகளால் சற்றே தடுமாறிய அவர்கள் சற்றே தெளிவடைந்து "யார் நீ?" - என்றார்கள் கடுங்கோபத்துடன்.

"நான் நீங்களல்ல" - என்றான் நந்திவர்மன் சிரித்தபடி.

"அப்படியென்றால்?" - கரடு முரடான குரலில் கேட்டான் ஒருவன்.

"இது தான் இல்லையென்று நினைத்தேன். அதுவும் இல்லை போலிருக்கிறது" என்றான் மன்னன்.

"என்ன உளறுகிறாய்?" - சீறினான் மற்றொருவன்.

“பாவம்” -

“எதற்கு?” -

“வேறென்ன சொல்லமுடியும்? பெண்ணைப் பிடிக்கத்தான் முடியவில்லையென்றால் நான் பேசுவதைப் புரிந்து கொள்ளவுமா முடியவில்லை?” -

“அதிருக்கட்டும். நீ யார்?” -

“உங்களைப் போன்ற, ஒரு பெண்ணைப் பத்து பேராக இருந்தும் பிடிக்க முடியாத முட்டாள் அல்ல. உங்களுக்கு வீரமும் இல்லை. அறிவும் இல்லை”-

“எங்களில் ஒருவனை நீ கொன்று விட்டாய்”-

“அது ஒரு ஆரம்பம் தான்”-

“அப்படியென்றால்?”-

“இன்னும் நீங்கள் பாக்கியிருக்கிறீர்கள் என்று அர்த்தம்”-

“நாங்கள் எட்டு பேர்”

“இருந்தும் ஒரு பெண்ணைப் பிடிக்கவில்லை”-

“அது கெட்டது உன்னால்”

“முன்னால் எட்டு பேர் போதாதென்று மறைவாக பின்னால் ஒருவனை நிறுத்தியும் வெற்றி பெறவில்லை நீங்கள்? பெண்ணை என்ன ஒரு பன்றியைக் கூட உங்களால் இந்த ஜென்மத்தில் பிடிக்க முடியாது. சரி, எதற்காக இந்த கோழைத் தனத்தில் இறங்கினீர்கள்?”

“அதை உனக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை”-

“அதுவும் சரிதான். கோழைத் தனத்தின் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதோடு விட்டது என்று எண்ணிப் போய் விடுங்கள். இல்லையென்றால் உங்கள் எல்லோரையும் அவன் போன இடத்திற்கு அனுப்பி விடுவேன்”-

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது உடைவாளை வீச ஒருவன் முற்பட்ட போது விளைந்தது பிரளயம்.

பேசிக் கொண்டிருக்கும் நேரமாக இருந்தாலும் சரி ஆபத்தை எதிர்நோக்கும் போதெல்லாம் கவனத்தைச் சிதற வைக்காதவருள நந்திவர்மன் இதைக் கவனிக்கத் தவறவில்லை. கவனித்து விட்டபின் ஒரு விநாடியைக் கூட வீணடிக்க வில்லை. தன் இடுப்புக் கச்சையின் இருபுறத்திலிருந்தும் இரு கத்திகளை எடுத்து சர்சர் என்று வீசிவிடவே இரண்டு மனிதர்கள் அலறவும் நேரமில்லாதவர்கள் போல் மரண காயப்பட்டு மண்ணிலே விழுந்தார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என்பதைக் கூட கவனிக்காமல் கத்தியை எறிந்த கையோடு கத்தியை விட வேகமாகப் புரவியை விட்டு மலைபெயர்ந்தாற்போல் பாய்ந்தறிங்கி தன் கைகளாலேயே ஒரு மனிதனை தூக்கி மலைச்சரிவில் வீசிவிடவே இரண்டொரு நொடிகளில் மூன்று பேர் மாண்டு போனார்கள். அதற்குப் பிறகு தான் அவனைப் பற்றி அந்த மனிதர்கள் உணர்ந்து கொண்டார்கள். “இவன் மனிதனே அல்ல. ராக்ஷஷன்” என்று முடிவு கட்டி அவனைத்தாக்க ஒரு சேர முற்பட்டார்கள்.

நந்திவர்மனோ அவர்களுக்கு யோசிப்பதற்கும் திட்டமிடுவதற்கும் இடமளிக்கவில்லை. எதிரி எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் போது துரிதச் செயல்பாடுகளே ஏற்றவையாதலால் தனது உடைவாளை உருவி மின்னல் போல் வீசி எதிரிகளைக் கண்டபடி காயப்படுத்தினான்.

தற்போது எதிரிகள் நால்வரே இருந்தனர். அவர்கள் அனைவரும் வரிசையாய் நின்று போரிட்டனர். ஆரம்பத்தில்

பயம் - குழப்பம் - தடுமாற்றம் ஆகியவை அவர்களைப் பாதித்து விட்டதால் நிதானம் தவறி போரிட்டு காயங்களைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் சில நிமிடங்களுக்குப் பிறகு சுதாரித்துக் கொள்ள முடிந்தது அவர்களால்.

அவர்களின் போக்கினைக் கவனிக்கத் தவறாத நந்திவர்மன் அனுதாபமே கொண்டான். அவர்கள் முசுடுகளாகவும் முரடுகளாகவும் இருந்தார்களே தவிர வீரர்களாக இல்லை. வெறும் எ ண்ணிக்கை பலத்தையும் கோழைத்தனமான சூழ்ச்சியையும் தவிர வேறெதையும் முதலீடு செய்தவர்களாய் தோன்றவில்லை. மொத்தத்தில் யாரோ ஒருவனால் அவர்கள் அடியாட்களாக அனுப்பப் பட்டிருக்க வேண்டும் என்று கருதினான் நந்திவர்மன். ஒரு பெண்ணைப் பிடிக்க துப்பில்லாத இவர்களை அனுப்பி வைத்த முட்டாள் தலைவனை எண்ணி உள்ளுக்குள் நகைத்துக் கொண்ட நந்திவர்மன் அவர்களோடு தொடர்ந்து போரிட விரும்பவில்லை.

போரை நிறுத்தி சற்றே விலகி நின்று "கோழைகளே, பேசாமல் போய் விடுங்கள். இல்லாத வீரத்தைக் காட்டி இருக்கிற உயிரை இழக்க வேண்டாம். கோழைகளுடன் போரிட எனக்கு அலுப்பாயிருக்கிறது. போய் உங்களை வழியனுப்பி வைத்த மேதையிடம் வீரர்களை அனுப்பி வைக்கச் சொல்லுங்கள்" - என்று கூறிவிட்டு வாளை உறையில் போட்டுக் கொண்டான்.

இதை நால்வர் அணி சிறிதும் எதிர்பார்க்கவில்லை. உருவிய வாளோடு நிற்கும் நால்வரைச் சட்டை செய்யாமல் உருவப்பட்ட தன் வாளை உறைக்குள் போட்டுக் கொண்டரைக் கண்டபோது நந்திவர்மனின் நெஞ்சுரத்தை நன்றாகவே உணர்ந்தார்கள். அவனிடம் போரிட முடியவில்லை அவர்களால். அதே சமயம் விலகவும் தெரியவில்லை. இந்த

நிலையில் அவனாகவே வழி செய்யவே பட்டயம் போன்ற தங்கள் முதுகுகளை காட்டியபடி காற்றினும் கடுகி ஓடினார்கள்.

அதே சமயம் 'ஹா' என அலறியபடி வீழ்ந்து மயக்கமானாள் அந்தப் பெண்.

⌘

நள்ளிரவு நேரம். நிறை பௌர்ணமி நாளாக இருந்ததால் வானத்தையும் பூமியையும் ஒருசேர மகிழ்விப்பது போல் அளவான ஒளியையும் குளிர்ச்சியையும் அளித்திருந்தான் சந்திரன். அந்த அளவான பொன்னொளியில் கரடுமுரடான குன்றுகள் கூட அழகான மகுடங்கள் போல் காட்சியளித்தன. கதிரவன் ஒளியில் சுட்டெரிக்கும் குன்றுகள் தற்போது கண்களுக்கு ஆறுதலாய் காட்சியளித்ததைக் கண்ட போது எதுவுமே அளவோடு இருந்தால் அழகாயும் ஆறுதலாயும் இருக்கும் என்ற உண்மையை நந்திவர்மனுக்கு உணர்த்தியது. அவன் உணர்ந்தது சரிதான் என்று ஒப்புதல் அளிப்பது போல் திருநீர்மலை உச்சியிலிருந்து அரங்கநாதனின் ஆலயதீபம் பெரிதாக எரிந்து தன் சுவாலையை அழகாக வெளிப்படுத்தியது.

அந்த நேரத்தில் தான் கண் விழித்தாள் அந்தப் பெண்.

கண் விழித்ததுமே கண்களைச் சுழலவிட்டாள். அவளுக்குத் தெளிவு பிறந்தது. இருப்பிடம் தெரிந்தது.

அதே மலைப்பகுதி. அதே நந்திவர்மன். ஆனால்?

"நீங்கள் இன்னும் இறக்க வில்லையா?"-என்று குழப்பத்தில் அசந்தர்ப்பமாய் கேட்டாள் அவள்.

“நான் உயிரோடு இருப்பதில் உனக்கென்ன கஷ்டம்?” என்று குறுநகையுடன் கேட்டான் மன்னன்.

“அப்படியானால் அவன்?”-என்றான் அவள்.

“அதோ கிடக்கிறான் பார்”-என்று தலை நசுங்கிக் கிடந்த ஒருவனைக் காட்டினான் மன்னன்.

நால்வர் அணியினர் தொட்டோம் விட்டோமென ஓடிய போது நந்திவர்மனின் பின்னால் ராட்சதனைப் போன்ற ஒருவன் பாறை ஒன்றை வீசுவதற்கு முற்பட்டதையும் அதையடுத்து தான் மயக்கமடைந்துவிட்டதையும் நினைவூட்டிக் கொண்ட அவளுக்கு நந்திவர்மனுக்குப் பதில் ராட்சஷன் செத்துக் கிடப்பதை அவளால் நம்ப முடியவில்லை. அதை அவள் முகத்தில் காட்டி விளக்கம் கேட்க முற்பட்ட போது நந்திவர்மன் பேச முற்பட்டு “பெண்ணே, ஆபத்தைச் சந்திக்கிறவனுக்கு கண் முகத்தில் இருந்தால் மட்டும் போதாது. முதுகிலும் இருக்க வேண்டும். அந்த அறிவுக் கண் அவனுக்கு மிக அவசியம். பாறையைத் தூக்கிக் கொண்டு எனக்குப் பின்னால் நின்றிருந்தவனை நான் பார்க்கவில்லைதான். ஆனால் மாலை வேளையில் அவனது நிழல் எனக்கு முன்னால் விழுந்ததைப் பார்த்தேன். எனவே நிழலில் பேரசைவு தெரிந்ததும் சடாரென விலகினேன். குன்றின் சரிவில் பாறையோடு ஓடி வந்து வீச முயன்றவன் நிலைதடுமாறி விழந்தான். பாறை அவன் தலைமீதே விழுந்து விட்டது. மொத்தத்தில் எனக்காக வந்தவர்கள் அனைவரும் வெறும் உலக்கைகள். உதவாக்கரைகள். பிராணிகளுக்குள்ள அறிவு கூட அவர்களிடம் இல்லை”-என்றான்

“உங்களுக்கு மிக்க நன்றி”- என்றான் அவள்.

“நன்றியை நீ தெரிவிக்க வேண்டியது இந்த உதவாக்கரைகளுக்குத்தான்’

“என்னைப் பிடிக்க வந்தவர்களையா சொல்கிறீர்கள்?”

“ஆம், அவர்கள் மட்டும் முட்டாள்களாக இல்லாமல் வீரர்களாய் இருந்திருந்தால் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கும்”

அவள் மனம் அவன் கூற்றை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. தன்னைப் பிடிக்க வந்தவர்கள் வீரர்களாய் இருந்திருந்தாலும் நந்திவர்மனே வென்றிருப்பான் என்றும் அதற்கேற்ப அவன் போர் முறைகள் மாறியிருக்கும் என்றும் அவள் நம்பினாள். பிறகு சொன்னாள்.

“அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும் என் ஒருத்தியை பிடித்திருக்க முடியும் நீங்கள் மட்டும் வராதிருந்தால்” என்றாள்.

“அது போகட்டும். போயும் போயும் ஒரு பெண்ணைப் பிடிக்க இத்தனை பேரா வரவேண்டும்?”

“கோழை அரசாளும் நாட்டில் ஒரு பெண்ணைப் பிடிக்க இத்தனைக் கோழைகள் தேவைதான்”

“நீ யாரைச் சொல்கிறாய்?”

“நாம் இருப்பது பல்லவநாடு. இங்கென்ன பத்துப் பதினைந்து மன்னர்களோ இருக்கிறார்கள்? ஒரே ஒரு கோழைதானே?”

“கோழை என்று நீ சொல்வது......”

“மல்லன் என்று மார்தட்டிக் கொள்ளும் மன்னனைத்தான்”

“அதாவது”

“பல்லவ குலத்திற்கே புல்லுருவியாய் வந்த பாவியைத்தான். நந்திவர்மனைத்தான்”

“அவன் எப்படி கோழையாவான்?”

“கோட்டையைக் கோட்டை விட்டு நிற்பவன் வீரனா?”

‘கோட்டை பறிபோன போது அவன் கோட்டைக்குள் இல்லை என்கிறார்களே?”

“இருந்தால் மட்டும் என்ன ஆகிவிட்டிருக்கும்? இதே தான்”

“அதெப்படி இத்தனை உறுதியாகச் சொல்கிறாய்?”

“சொல்கிறேன். எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்”

நந்திவர்மன் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறீர்கள்?’

“உன்னிடம் பதில் பெற வேண்டுமென்றால் உனக்கு உதவி செய்தால் தானா?”

“பல்லவ நாட்டில் எல்லாமே வினோதமாக இருக்கிறது”

“ஏனப்படி”

“பின்னென்ன? இங்கிருப்பவர்களைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது. கேட்காத பெண்களுக்கு உதவுகிறார்கள். பெண்களாகக் கேட்கும் போது உதவ யோசிக்கிறார்கள்”

“அப்படியெல்லாம் நீயாக எண்ணிக்கொள்ளாதே பெண்ணே. சொல். என்ன உதவி வேண்டும் உனக்கு?”

“சத்தியமாகச் சொல்கிறீர்களா?”

“நிச்சயமாகச் செய்கிறேன்”

“ஓர் அயோக்கியனின் உயிர் வேண்டும் எனக்கு”

“யாரந்த அயோக்கியன்?”

“நந்திவர்மன்.”

அப்பெண் அழுத்தம் திருத்தமாக இடிபோல் உச்சரித்தாள் வார்த்தையை

தன் உயிரை வாங்க முற்படும் அந்தப் பெண்ணைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் எழுந்தது நந்திவர்மனுக்கு.

“எனக்கு நிச்சயமாக உதவி செய்கிறேன். நீ யாரென்பதைச் சொல்’ -என்று கேட்டான்.”

“யாராய் இருப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?”

“பெண்கள் விஷயத்தில் நான் ஊகங்களில் இறங்குவதில்லை. சொல், நீ யார்?”

“ரேவா”

“அதாவது”

“தந்திதுர்க்கரின் மகள். ராஷ்டிரகூட இளவரசி”

இதைக் கேட்டதும் தன் விதியை எண்ணி நொந்து கொண்டான் நந்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘

21. பல்லவபுரம்

கல்லார் மதில்சூழ் கச்சி நகருள் நச்சிப் பாடகத்துள் அமர்ந்த கோலத்தில் காட்சி தரும் எம்பெருமான், அரங்கநாதன் என்னும் திருநாமம் கொண்டு அனந்த சயனத்தில் அருள் பாலிக்கும் திருநீர்மலையில் தான் சந்தித்த பெண் ராஷ்டிர கூட இளவரசி ரேவா தேவி என்பதையும் நந்திவர்மனின் உயிரை வேட்டையாடுகிறாள் என்பதையும் அறிந்து தன் விதியை நொந்து கொண்ட நந்திவர்மன் என்ன காரணத்திற்காக தன் உயிருக்காக கொலைவெறி கொண்டு அலைகிறாள் என்பதை அறிந்து கொள்ள விரும்பினான்.

இதற்கிடையில் அவன் தன்னை இன்னார் என அறிந்து கொண்டு திணறுவதாக கருதிய ராஷ்டிர கூட இளவரசி உள்ளூரச் சந்தோஷப்பட்டாள். அவன் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் ஒரு செய்தியைக் கொடுத்துவிட்டதில் பெருமைப்பட்டுப் கொண்டவளாய் "வீரரே!" -என்றழைத்தாள்.

அவளிடம் ஏற்பட்ட முகமாற்றத்தைக் கவனித்தாலும் போல் " இளவரசி, அழைத்தீர்களா?" என்று வினவினான் பணிவுடன்.

"என்ன பேச்சையே காணோம்? பெரிய வீரரான தாங்கள் போய் இப்படி ஆகிவிடலாமா? வாள் வீச்சை வான் வீச்சாக நிகழ்த்திய உங்களுக்குமா தடுமாற்றம்!" என்று கேட்டாள் அதே பெருமையுடன்.

"இளவரசியிடம் அபச்சாரப்பட்டு விட்டபின் வீரத்தைப் பற்றியோ வாள் வீச்சைப் பற்றியோ பெருமை

பட்டுக் கொள்ள என்ன இருக்க முடியும்?" -என்றான் நந்திவர்மன் துக்கமான குரலில்.

"உண்மைதான். அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் காட்டிய வீரத்திற்கு தகுந்த பரிசு கிடைக்க நான் சிபாரிசு செய்கிறேன். போதுமா?"-என்றாள் கர்வம் தொனிக்கும் குரலில்.

தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான் நந்திவர்மன். பிறகு "தேவி, தங்கள் கோரிய உதவியையும் நிறைவேற்றி விட்டால் நான் பாக்கியசாலியாவேன். தங்களுக்கும் பெரிய பரிசாக சிபாரிசு செய்ய வசதியாக இருக்கும்" என்றான்

"பரிசைப் பற்றிய கவலைவேண்டாம். அதை நான் கவனித்துக் கொள்கிறேன். ராஷ்டிர கூடத்தை விட்டு நான் புறப்பட்ட போது எனக்குத் துணையாகப் பலர் வந்தார்கள், இருந்தாலும் என் நோக்கத்திற்கு ஏற்றவர்களாக யாரும் அமையாதது எனக்கு வருத்தம் தான். உங்களையும் உங்கள் வீரத்தையும் சாமர்த்தியத்தையும் பார்த்தபின் அக்கவலை போய் விட்டது"

"நான் பெரும் பாக்கியசாலி என்பதை உணர்கிறேன். அதேசமயம் நந்திவர்மனின் உயிரை வாங்கும் அபாயப் பணியில் இறங்கும் நிலையில் அவனைக் கொலைசெய்ய வேண்டியதன் காரணத்தையும் அறிந்து கொண்டால் அடியவனுக்குத் திருப்தியாக இருக்கும்."

"உண்மைதான்"-என்று கூறி இளவரசிக்கான தோரணையை உண்மையாகவே உண்டாக்கிக் கொண்டு "வீரரே, பெண்ணின் மனத்தை ஆணவத்தால் காயப்படுத்தும் மனிதனை மன்னிக்க முடியுமா?"-என்று கேட்டாள்.

“நிச்சயமாக மன்னிக்க முடியாது. அதில் ஒன்றும் உங்களுக்குச் சந்தேகம் வேண்டியதில்லை”-ஆணித்தரமாகச் சொன்னான் நந்திவர்மன்.

“காயப்படுத்தியதோடு நிற்காமல் இகழவும் செய்தால் அவன் தண்டனைக்குரியவன் அல்லவா?”

“சந்தேகமில்லாமல்”

“அவனைப் பொருட்படுத்த வேண்டாம் என்று பெண்ணின் தந்தை சொன்னால் அதை அவள் பொருட்படுத்த வேண்டுமா?”

“வேண்டியதில்லைதான்”

“பெண் என்று சொன்னது என்னை. அவன் என்று சொன்னது நந்திவர்மனை. இப்போது புரிகிறதா காரணம்?”

“தேவி, தங்களை எந்த விதத்தில் காயப்படுத்தினான் நந்திவர்மன்?”

“என் திருமணம் குறித்து சம்மதம் கேட்டு நந்திவர்மனுக்கு ஓலை அனுப்பினார் தந்தை. அந்த கர்வம் கொண்ட மன்னன் பதிலும் அனுப்பவில்லை. தூதவனை மதிக்கவும் இல்லை. உங்கள் இளவரசியை மணக்கத் தயாராக இல்லை என்று நிராகரித்தது மட்டுமில்லை. பல்லவ மல்லனை மணக்கும் தகுதி எனக்கில்லை என்று இகழ்ந்து சொல்லியிருக்கிறான்’

“தேவி, உண்மையைச் சொல்கிறேன். நந்திவர்மன் ஆணவக்காரன் மட்டுமல்ல. முட்டாள். பரமமுட்டாள். தங்களையா நிராகரித்தான் அந்த நிர்மூடன்? உண்மையில் தங்களை மணக்கும் தகுதி அவனுக்குத்தான் இல்லை”

"அப்பேர்பட்டவனைப் பொருட்படுத்த வேண்டாம் என்றார் தந்தை. நந்திவர்மனை மன்னிப்பதாம். மறப்பதாம். நான் மறுத்தேன் . என்னைக் காயப்படுத்தியவனை மரண காயப்படுத்தாமல் திரும்பமாட்டேன் என்று சொல்லி புறப்பட்டு விட்டேன்"

"இளவரசி, பல்லவ மன்னனைச் சந்தித்த தூதுவன் யார்?"

"வாருங்கள் காட்டுகிறேன்"

"எங்கே இருக்கிறார்?"

"பல்லவ புரத்தில்"

பல்லாவரம் என்று தற்போது அழைக்கப்படும் பல்லவ புரத்தில் மகேந்திர வர்மன் காலத்தில் கட்டப்பட்ட சத்திரம் ஒன்றிருந்தது. ராஷ்டிர கூட இளவரசியைத் தன் புரவியில் உட்காரவைத்து அழைத்துச் சென்ற நந்திவர்மன் சத்திரத்தை அடைந்ததும் "தாங்கள் உள்ளே செல்லுங்கள் இளவரசி, நான் போய் புரவியைக் கொட்டடியில் கட்டிவிட்டு காலையில் வந்து சந்திக்கிறேன் நீங்கள் ஓய்வெடுங்கள்" என்று கூறி புரவிகளை சத்திரத்திற்குப் பின்னால் எடுத்துச் சென்றான்.

கொட்டடியில் போய் புரவியைக் கட்டிவிட்டு தன்னுடன் கொண்டு வந்திருந்த துணி மூட்டையைத் தலையணையாக்கி படுத்த நந்திவர்மனுக்கு களைப்பு இருந்தாலும் உறக்கம் வரவில்லை. உறக்கத்தை அவன் விரும்பவும் இல்லை. பல்வேறு சிந்தனைகளுக்கு இடம் கொடுத்துவிட்டு படுத்திருந்தான் அவன்.

ராஷ்டிர கூட இளவரசியின் விவகாரமே தற்போது அவனை முழுவதுமாய் ஆட்கொண்டிருந்தது. அவளது

கோபம் நியாயமானதுதான் என்றாலும் அவள் கூறியபடி தூதுவன் எவனும் தன்னைச் சந்திக்கவில்லையாதலால் அந்த விஷயத்தில் ஏதோ சூது நடந்திருக்கிறது என்பது மட்டும் புரிந்தது அவனுக்கு. அதே சமயம் தூதுவனாக வந்தவன் பல்லவபுரத்தில் இருப்பதாக இளவரசி கூறியிருந்ததால் அவளைப் பிடிக்க நடந்த நிகழ்ச்சியைப் பற்றி ஊகிக்கலானான்.

இதற்கிடையில் சத்திரத்திலிருந்து யாரோ சிலர் கொட்டடி பக்கம் வரும் அரவம் கேட்கவே கண்களை மூடிக் கொண்டு தூங்குவது போல் பாவனை செய்யத் தொடங்கினான் நந்திவர்மன். விரைவிலேயே தன் முகத்தருகே தீச்சுவாலையின் வெப்பம் நெருங்கியதால் பந்த வெளியில் தன்னை யாரோ ஆராய்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட மன்னன் தூங்குவதாக பாவனை செய்து கொண்டிருந்ததை மேலும் தீவிரமாக்கி தூக்கத்தில் எழுப்பும் மூச்சிறைப்புகளையும் எழுப்பினான். அவனது ஊகம் உறுதியாயிற்று.

“இவன் தானா அவன்?”-என்று முரட்டுக்குரல் ஒன்று எழுந்தது.

பிறகு இந்த குரல் தொடர்ந்தது.

“நம்மவரில் இத்தனைப் போரைக் கொன்ற இவனை இங்கேயே இந்தப் பந்தத்தால் கொன்று விட்டால் என்ன?”

“வேண்டாம் பிரபு. அது நமக்கு நல்லதல்ல”என்றது வேறொரு குரல்.

“ஏன்?”

“நம்மவரைக் கொன்றிருந்தாலும் இவன் இளவரசியின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறான். இவனை இப்போது கொல்வது இளவரசிக்கு கோபத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கும். அது உங்கள் நோக்கத்திற்கு இடைஞ்சலாக இருக்கும்”

"உண்மை உண்மை, இவனை இளவரசியைக் கொண்டே கொல்ல என்னால் முடியும். பாருங்கள். முக்கிய வேலை இருக்கிறது நமக்கு"

பேச்சுக்கள் நின்று சில நிமிடங்கள் சென்ற பின் புரண்டு படுத்த நந்திவர்மன் லேசாகக் கண்ணைத் திறந்து அருகில் யாருமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின் மெதுவாக எழுந்து பதுங்கிய வண்ணம் சத்திரத்தின் பின்புறவாயிலை அடைந்தான். அங்கே இருந்த பலாமரத்தின் மீது விரைவாக ஏறி சத்திரத்தின் சாளரத்தில் குதித்தான். அங்கிருந்து பக்கச் சுவற்றைப் பிடித்து உள்ளே விசாலமான கூடமும் அதைச் சுற்றி பல அறைகளும் இருந்தன. அவற்றில் ஒரு அறையில் மட்டும் பந்தம் எரிந்து கொண்டிருக்கவே அங்கு சென்று உட்பக்கம் தாழிடப்பட்டிருந்த கதவின் இடுக்கு வழியாக நோக்கினான். உள்ளே பந்தங்களின் மங்கலான ஒளியில் பஞ்சணையில் இளவரசி படுத்திருப்பது தெரிந்தது.

பிறகு அந்த அறையை விட்டு சத்திரத்தின் முன்புறக்கட்டிற்கு வந்தபோது பேச்சுக்குரல்கள் கேட்டன. குரல் வந்த திசை நோக்கிச் சென்ற போது முன்கட்டில் இருந்த பெரிய அறையொன்றில் அந்தப் பேச்சுக்குச் சொந்தக்காரர்கள் இருப்பது தெரிந்தது. எனவே அவர்களை அறியும் பொருட்டு அறையின் சாளரத்தைக் கண்டுபிடித்து எட்டிப்பார்த்தான். உள்ளே துளைமாடங்கள் இரண்டில் பந்தங்கள் ஏற்றப்பட்டு பிரகாசமாய் இருந்ததால் அங்கே அமர்ந்திருந்தவர்களைத் தெளிவாகவே பார்க்க முடிந்தது. அதில் பூதம் போல் அமர்ந்திருந்த ஒருவனைக் கண்டபோது பல்லவமன்னனின் கண்கள் வியப்பால் விரிந்தன. அவனை அங்கே கண்டதில் அவனுக்கு ஒருவிதத்தில் திகைப்பாயும் இருந்ததால் "இவன் எப்படி இளவரசி விஷயத்தில் சம்பந்தப்பட்டான்?" என்று கேட்டுக்

கொண்டான். அவன் மட்டும் சம்பந்தப்பட்டிருப்பது உண்மையானால் பலருக்கும் பலவிதத்தில் ஆபத்து உண்டாகியிருப்பது உண்மை என்று கருதவும் செய்தான். இளவரசி கூறிய தூதுவன் இவனாக இருக்குமானால் அவள் விஷயத்தில் நிச்சயமாக ஏதோ சதி நடந்திருக்கிறது என்ற சந்தேகம் பலமாக விழுந்தது அவனுக்கு.

அங்கே தொடர்ந்த பேச்சுக்கள் மேற்கொண்டு சிந்திக்க விடவில்லை. எனவே தலையை உள்ளேஇழுத்துக் கொண்டு பேச்சைக் கவனிக்கலானான்.

“இத்தனை பேர் இருந்தும் அந்த தடியனை எப்படி கவனிக்காமல் விட்டீர்கள்?” என்று கரகரத்து ஒரு குரல்.

“நாங்கள் அப்படியொரு குறுக்கீட்டை எதிர்பார்க்கவில்லை. எங்கள் கவனமெல்லாம் இளவரசியின் பேரிலேயே இருந்துவிட்டது.”

“இதனால் உண்டான நஷ்டம் எவ்வளவு என்பது உங்களுக்கு தெரியுமா?”

“எங்களை மன்னிக்க வேண்டும் பிரபு”

“உங்களை மன்னித்தாலும் சரி தண்டித்தாலும் சரி எனக்கொரு விதமான பயனும் இல்லை. கள்ளர்களான உங்களை ஏன் நியமித்தேன்? என்னிடம் வீரர்கள் இல்லையா? மூடர்களா? இங்கே உள்ள வீரர்கள் அனைவரும் இளவரசியைச் சேர்ந்தவர்கள். அவர்களை விட்டா இளவரசியை அபகரிக்க முடியும்? அதனால் தான் உங்களை அனுப்பினேன். உங்களை வைத்து அவளை அபகரித்து பழியை நந்திவர்மனின் மீது போடத் திட்டமிட்டேன். ஒன்றுக்கு ஒன்பது பேராக அனுப்பி வைத்தேன். காரியத்தைக் கெடுத்ததோடு மட்டுமின்றி

ஐவரை பலி கொடுத்து விட்டு வந்திருக்கிறீர்கள். சரி,சரி, போனது போகட்டும். இதோ இந்த ஓலையையாவது ஒழுங்காய் கொண்டு போய் சேருங்கள். நாளைக்குள் நான் நிலைமைகளை சரிசெய்ய வேண்டும்."

"அந்தத் தடியனை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அதைப் பற்றிக் கவலை வேண்டாம். அவனுக்கு இன்று தான் கடைசி இரவு"

மேலும் ஏதோ பேச்சு தொடர்ந்தது. ஆனால் நந்திவர்மன் அங்கே இருக்கவில்லை. தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றான்.

மறுநாள் காலை பொழுது விடிந்து நீண்ட நேரம் ஆகிவிட்டிருந்தது. வீரர்கள் வந்து நீரை வாரி இறைத்து நந்திவர்மனை எழுப்பினார்கள். பெரும் தூக்கத்திலிருந்து அதிர்ந்து கண்விழித்த நந்திவர்மன் தனக்கு முன்னே விரிந்த காட்சியைக் கண்டு திகைத்தான்.

இரவிலே தான் கண்ட பூதமனிதனும் அவனுடன் வீரர் பட்டாளமும் நிற்க அவர்களுடன் தீவிழிகளுடன் காணப்பட்டாள் இளவரசி ரேவா. அவனைச் சுற்றிலும் வீரர்கள் நின்றிருந்தார்கள். இதென்ன நிலை?- என்று அவன் விழித்தபோது "டேய், எழுந்திரு"-என்று தாட்சண்ய மற்ற அதிகாரக்குரலில் சொன்னான் பூதமனிதன்.

நந்திவர்மன் எழுந்து கொண்டதும் "போய் நீராடிவிட்டு வா. இளவரசியின் சபை உள்ளே கூட்டப்படுகிறது. வந்து சேர்" -என்று மேலும் கட்டளையிட்ட பூதமனிதன் "வாருங்கள் இளவரசி. நாம் உள்ளே செல்லுவோம்" என்றான்.

நந்திவர்மன் நீராடி விட்டுவர சற்று நேரமாயிற்று. அவன் எந்த விதமான வேகத்தையும் காட்டவில்லை. காவலர்கள் துரிதப்படுத்த வேண்டியதாயிற்று. பச்சிலை சாறுகளால் தயாரிக்கப்பட்ட கலவையை அவன் உடலில் பூசியிருந்தானாதலால் அக்கலவை அவனது உடல் நிறத்தை வெகுவாக மாற்றியிருந்தது. அதோடு அக்கலவை உண்டாக்கிய நிறமானது குறைந்தது பத்து நாட்களுக்கு நீடிக்குமாதலால் அவன் நீண்ட நேரம் நீராடியும் அந்த நிறம் நீடித்தது. அந்த வகையில் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்க ஒரு சரியான பாதுகாப்பு கிடைத்தது குறித்து சந்தோஷம் கொண்டு நீராடிய அவன் காவலர்கள் கொடுத்த ஆடைகளையே அணிந்தான்.

இதற்கிடையில் பூதமனிதன் கள்ளர்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் உடையாடிக் கொண்டிருந்தான். தனது திட்டம் ஏறக்குறைய நிறைவேறி விட்ட திருப்தி நிலவியது அவனிடம். அதைக் கள்ளனும் அறிந்திருந்ததால் அவனை மேலும் உற்சாகப்படுத்தும் விதத்துடன் “இவ்வளவு கச்சிதமாக திட்டம் தீட்டுவீர்கள் என்று நான் எதிர்ப்பார்க்கவில்லை. அசந்து போகிறமாதிரி திட்டம் தீட்டியிருக்கிறீர்கள்” -என்றான்.

“உன்னைப் போன்றவர்களை நம்பி ஏமாந்தது போதாதா? அதோடு இந்தத் திட்டம் மூளை சம்பந்தப்பட்டது. உனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை”-என்றான் பூதமனிதன்.

‘இளவரசி உங்களை நம்பிவிட்டார்களா?”

“ஆதாரத்தை சிருஷ்டித்தவன் நான். அதைக் கண்டபின் நம்பாமல் எப்படி இருக்கமுடியும்?”

“அப்படியானால் அந்த தடியாளின் வாழ்வு இன்றோடு முடிந்து விடும் அல்லவா?”

“அதிலென்ன சந்தேகம்? சபை கூடியபின் பார் என் சாமர்த்தியத்தை”

“ஐயா, ஒரே ஒரு வேண்டுகோள்”

“என்ன?”

“மரணதண்டனை அளித்த பின் தடியனை என்னிடம் ஒப்படையுங்கள். மரணத்தை நான் அளிக்கிறேன்”

இதைக்கேட்டு இடியென சிரித்த பூதமனிதன் “சித்திரவதை செய்வதென்பது ஒருகலை. அது உனக்குத் தெரியாது . அதையும் நீ என் மூலம் பார்க்கப் போகிறாய். எமன் கூட எனக்கு நிகராக முடியாது என்பதை உனக்குக் காட்டுகிறேன். சரி, சரி, சபைக்குப் போகலாம் வா. நேரமாகி விட்டது” என்றான்.

சத்திரத்தின் நடுக்கூடம் சபையாக மாற்றப்பட்டு உயர்ந்த ஆசனம் இன்று நடுவே போடப்பட்டிருந்தது. அதில் இளவரசி ராஜதோரணையில் அமர்ந்திருந்தாள். பக்கத்தில் பூதமனிதன் அமர்ந்திருந்தான். இருபுறமும் வீரர்கள் நின்றிருந்தார்கள், “இழுத்து வாருங்கள் கைதியை” என்று பூதமனிதன் ஆணையிட்ட பின் அங்கே கொண்டு வரப்பட்டான் நந்திவர்மன்.

“டேய், இளவரசிக்கு மன்னால் மண்டியிடு” -என்று உத்திரவிட்டான் பூதமனிதன்.

“இங்கே என்ன நடக்கிறது?” -என்று கேட்டான் நந்திவர்மன் சாதாரணமாக.

பூதமனிதனின் முகத்தில் சினம் துளிர்த்தது. “உனக்குக் கட்டளையிட்டது மண்டியிடத்தான். கேள்விக் கேட்க அல்ல’ என்றான் மிரட்டும் குரலில்.

“மீண்டும் அதே கேள்வியைத்தான் கேட்கிறேன்” - என்றான் நந்திவர்மன்.

“டேய், வீண் பேச்சுக்களை விட்டுவிட்டு மண்டியிடு. இல்லையென்றால் மரணதண்டனையில் சித்திரவதை அதிகமாகிவிடும்”

இதைக் கேட்டு சிரித்த மன்னன், “உங்கள் போக்கு மீண்டும் மீண்டும் என் கேள்வியைத்தான் தூண்டுகிறது. திடீரென ஒருவனை அழைத்து மண்டியிடச் சொல்கிறீர். ஏனென்றால் கேள்வி கேட்க உரிமையில்லை என்கிறீர். மீண்டும் கேட்டால் சித்திரவதை செய்வேன் என்கிறீர். இது சபையா அல்லது அடிமை வியாபாரக்கூடமா?” என்று கேட்டான்.

பூதமனிதன் சற்றே தன்னை அடக்கிக் கொண்டு “உன்னைப் பணிய வைக்க எனக்குத் தெரியும். அதை விசாரணை முடிந்ததும் நீ தெரிந்துகொள்வாய். நேரத்தை வீணடிக்க இளவரசி விரும்பவில்லை. இப்போது கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல். நீ யார்?” என்று கேட்டான். அவனது எண்ணமெல்லாம் நந்திவர்மனை விரைவில் தண்டித்து விடுவதாகவே இருந்ததால் அவசரப்பட்டான்.

“நான் யார் என்பதை இளவரசியார் அறிவார்” - என்றான் நந்திவர்மன்.

“நான் கேட்ட கேள்விக்கு பதில் இதுவல்ல” -என்றான் பூதமனிதன் சீற்றமுடன்.

“நீங்கள் எதிர்பார்க்கிறமாதிரியெல்லாம் பதில் சொல்ல என்னால் எப்படி முடியும்?” - கேட்டான் நந்திவர்மன்.

“இது சபை. இங்கே விசாரணை நடக்கிறது. இங்கே நீ யார் என்பது சபைக்குத் தெரிவிக்க வேண்டும்’

"எதற்காக இங்கே விசாரணை நடக்கிறது?"

"நீ என்ன விசாரணைக்கு அப்பாற்பட்டவனா?"

"அவசியம் என்ன வந்தது என்று தான் கேட்கிறேன்."

"ஏன்? உன்னை விசாரிக்க வேண்டிய அவசியமே வராதா?"

"நான் இங்கு வந்ததே நேற்று நள்ளிரவில்தான். அதுவும் இளவரசியாரைக் காப்பாற்றி அவர் விருப்பப்படி இங்கே அழைத்து வந்தேன். ஓர் இரவுப் பொழுது கூடச் சரியாக ஆகவில்லை". பலாத்காரமாக எழுப்பி விசாரணைக்கு அழைத்து வருகிறீர்கள். அநாகரீகமாக நடந்து கொள்கிறீர்கள். இதெல்லாம் ஏன்? என்ன நடந்து விட்டதென்று இந்த விசாரணை? இளவரசியைக் காப்பாற்றியதை இளவரசியாரே பாராட்டி பரிசுக்கும் சிபாரிசு செய்வதாக என்னிடமே கூறியிருக்கும் நிலையில் எதற்காக விசாரணை நடத்துகிறீர்கள்"

"இளவரசியாரை நீ காப்பாற்றியது ஏன் நாடகமாக இருக்கக் கூடாது?"

"நாடகமல்ல என்று இளவரசியாருக்கே தெரியும்"

"அது உன் கற்பனை. நாடகம் தான் என்பது அவருக்குப் புரிந்து விட்டது?"

"எப்போது புரிந்தது? தூக்கத்திலா?"

"நாவடக்கத்துடன் பேசு உன் மீது சந்தேகப்படுவதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன."

"என்ன சந்தேகம்?"

“நீ ஒற்றன்”

“யாருக்கு? எந்த நாட்டிற்கு?”

“பல்லவ நாட்டின் ஒற்றன் நீ. ராஷ்டிரகூட இளவரசியாருக்கு எதிராக சூழ்ச்சி செய்திருக்கிறாய். அது கூடப் பரவாயில்லை. அவரிடம் முறைதவறி நடந்திருக்கிறாய்.”

“எப்படி?”

“இரவில் நீ எங்கே படுத்திருந்தாய்?”

“கொட்டடியில்”

“விடியற்காலையில் எங்கிருந்தாய்?”

“நீங்கள் தானே என்னை எழுப்பினீர்கள்?”

“உன் பக்கத்தில் இளவரசியார் இருந்தார். அது எப்படி?”

“இது இளவரசியார் உன்னைத் தேடி வந்தார் என்று எண்ணுகிறாயா? அத்தகைய எண்ணத்திற்காகவே உன்னை தண்டிக்கலாம். அதோடு இது விஷயமாக இளவரசியாரைக் கேட்டாயிற்று. உன்னைத் தேடி அவர் வரவில்லை என்று உறுதியாகச் சொல்கிறார்”.

“அதனால்?”

“நடந்து என்ன என்பது புரிந்து விட்டது. கொட்டடியில் கிடந்த நீ சத்திரத்தில் இரவில் திருட்டுத் தனமாக நுழைந்திருக்கிறாய். இளவரசியின் அறைக் கதவை உடைத்து அவரைத் தூக்கிச் சென்றிருக்கிறாய். அவர் விழித்துக் கொள்ளாமல் இருக்க மயக்கத் துளிகள்

சிலவற்றை மூக்கில் செலுத்தியிருக்கிறாய். கொட்டடியில் உனக்குப் பக்கத்தில் கிடத்திக் கொண்டிருக்கிறாய் அவரது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் விதத்தில். மயக்கத்துளி சரியாக வேலைசெய்யவில்லை. இளவரசி சீக்கிரமே விழித்து விட்டார். நீயோ களைப்பு மிகுதியால் கும்பகர்ண தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாய். உன் துணி மூட்டையில் இருந்து மயக்கத்துளி குப்பி கண்டெடுக்கப்பட்டது. இளவரசி எழுந்ததும் விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவர் மிகவும் மனமுடைந்தார். உண்மையை உணர்த்தி உன்னைத் தண்டிக்க சபை கூட்டப்பட்டது''.

நந்திவர்மன் பேசவில்லை. பூதமனிதனே பேசினான்.

“அது மட்டுமல்ல. நீ ஒற்றன் என்பதற்கான ஆதாரம் ஓலைவடிவில் உன் துணி மூட்டையில் கிடைத்தது. பல்லவ மன்னனின் காலடியில் கிடந்ததாக ஓலையில் குறிப்பிட்டிருக்கிறாய். அதில் உன் கையெழுத்துப் போடாமல் நந்தி உருவத்தை ரகசிய அடையாளமாக பொறித்திருக்கிறாய். அது இளவரசியிடம் இருக்கிறது''

“இவ்வளவுதானா?''-கேட்டான் நந்திவர்மன்.

“நீ செய்தவை மிக அதிகம். ஒவ்வொன்றுக்கும் மரணதண்டனை அளிக்கலாம். ஆனால் ஒருவனை பலமுறை சாகடிக்க முடியாது.''

“ஐயா, இளவரசியாருக்கே களங்கம் பிறப்பிக்க வேண்டுமென்றால் திருநீர்மலையில் அவரை ஏன் நான் காப்பாற்ற வேண்டும்?''

“காப்பாற்றிய சம்பவம் நாடகம் என்று முதலிலேயே கூறியாகி விட்டது''

நந்திவர்மன் இளவரசியை நோக்கி "தேவி, இதை நீங்கள் நம்புகிறீர்களா?"-என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அப்போது யாருமே எதிர்பார்க்காத ஒரு காரியத்தைச் செய்தான் நந்திவர்மன்.

"போதும் இளவரசி போதும். இனி நான் உயிர் வாழ விரும்பவில்லை. மரண தண்டனைக்கான ஆவணத்தை எழுதச் சொல்லுங்கள் தங்கள் தளபதியை. உங்கள் முன்பாகவே என்னைச் சிரச்சேதம் செய்து விடுங்கள்"-என்று தன் கரங்களைக் குவித்து இறைஞ்சினான் பல்லவ மன்னன்.

பூதமனிதனின் கைகள் மரண சாசனத்தை தயாரித்து இளவரசியிடம் தந்தன. இளவரசி அதைப் படித்துவிட்டு நந்திவர்மனிடம் நீட்டினாள். அதைப் பெற்றுக் கொண்ட நந்திவர்மனின் முகத்தைச் சோகம் கவ்வியது.

⌘⌘⌘⌘⌘

22. நிஷாதர் தலைவன்

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி என்று பாடப்பட்டாலும் என்றைக்குமே உலகை அளந்து கொண்டிருப்பவனான திருமால் உறையும் திருநீர்மலையில் சோலைமயிலென ஒயில் காட்டிய இளவரசி ரேவாதேவி பூதமனிதன் அளித்த மரண தண்டனைக்கான ஓலை சாசனத்தை பல்லவபுர சத்திரத்தில் நந்திவர்மனிடம் அளித்ததும் மரணத்தைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் அவ்வோலையைப் படித்த நந்திவர்மன் சோகத்தைக் காட்டிய போது அங்கிருந்தவர் அனைவருமே உணர்ச்சி வெள்ளத்தில் முழ்கினார்கள். அவர்களில் அந்த பூதமனிதன் என்றுமில்லா குதூகலத்தில் இருந்தான். எதிர்பாராமல் வந்து தன் விஷயத்தில் தலையிட்டு தொல்லையை உண்டாக்கியவனின் தலை ஒரே நாளைக்குள் நீங்கும் வண்ணம் தான் தீட்டிய திட்டம் நிறைவேறவிருந்ததால் தன்னைப் போன்ற அதிஷ்டக்காரன் உலகில் வேறு எவனும் இருக்க முடியாது என்று நினைத்து பூரித்தான். அவனது மனம் கனவுலகில் சஞ்சரித்தது சில நிமிடங்களுக்கு.

ஆனால் அரசகுமாரி மட்டும் சற்றே சஞ்சலப்பட்டாள் அவன் தன்னைக் காப்பாற்றிய போது காட்டிய சாமர்த்தியத்தை எண்ணி. ஆனால் பூதமனிதன் காட்டிய ஓலை, கூறிய செய்தி ஆகியவை அவளது மூளையை நன்றாக சலவை செய்திருந்ததால் அவைகளைத்தான் நம்ப முற்பட்டாளேயன்றி நந்திவர்மனை நம்ப முற்படவில்லை. அதோடு ராஷ்டிரகூட தலைநகரிலிருந்து தனக்குத் துணையாக வந்து கொண்டிருந்த பூதமனிதன் பேசிய சமத்காரமான பேச்சுகள் அரைநாளே பழகியிருந்த நந்திவர்மனை நம்பவிடாமல் செய்தன.

இதற்கிடையில் பூதமனிதன் பேசமுற்பட்டு "மரணத்தைத் தழுவப் போகும் ஒற்றனே! நீயாக இளவரசியின் முன் மண்டியிடுகிறாயா அல்லது நாங்களாகச் செய்ய வேண்டுமா?" என்று பேட்ட போது திடீரென இடியை எடுத்து வீசினான் நந்திவர்மன்.

"நிஷாதர் தலைவன் மிகவும் அவசரப்படுகிறார். அவரிடம் கொலைவெறி மிதமிஞ்சி இருக்கிறது"

இதைக்கேட்டு இளவரசி உட்பட அனைவருமே ஸ்தம்பித்தார்கள். பூதமனிதன் வெகுவாக ஆடிப்போய் விட்டான். எனவே "என்ன உளறுகிறாய்?" என்று கேட்டான் தடுமாற்றமான குரலில்.

"பிருதிவி வியாக்கிரரே, நீங்கள் தான் உளறும் பணியை மேற்கொண்டிருக்கிறீர்கள். என்ன செய்வது? ஆத்திரக்காரனுக்கு புத்தி வேலை செய்வதில்லை" என்றான் நந்திவர்மன்.

அப்போது சற்றே தெம்படைந்த இளவரசி "வீரரே, அவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினாள்.

"தேவி, இவரது பெயர் மட்டுமல்ல பூர்வீகமும் தெரியும். இவரது நடவடிக்கைகள் எனக்கு வியப்பை அளிக்கவில்லை. ஆனால் இவரை நம்பி நீங்கள் எப்படி வந்தீர்கள் என்பது தான் விந்தையாக இருக்கிறது. நீங்கள் முதலையின் மீது பயணம் செய்திருக்கிறீர்கள்" என்றான் நிதானமாக.

பூதமனிதனான நிஷாதர் தலைவன் பிருதிவியால் இப்பேச்சை தாங்க முடியவில்லை.

"டேய், பேச்சை நிறுத்து. தொடர்ந்தால் இந்த கணத்தில் இங்கேயே மரணதண்டனை நிறைவேற்றப்படும்" என்று இரைந்தான்.

நந்திவர்மன் அசரவில்லை. “தண்டனையை நிறைவேற்றுவதில் குறியாக இருக்கிறீர்களே தவிர நியாயத்தை அறிவதில் நாட்டமில்லையே உங்களிடம்? ஏன்? தாமதித்தால் உண்மை வெளிப்பட்டு விடுமே என்று பயமா?” என்று வினவிய பின் இளவரசியிடம் பேசலானான்.

“தேவி இவர் கூறியதில் ஒன்று மட்டும் உண்மை. என்னை ஒற்றன் என்றார். அது உண்மை தான். ஆனால் பல்லவ ஒற்றனல்ல. பல்லவநாட்டில் இருக்கும் ஒற்றன். தர்ம ஒற்றன். தர்மமிருக்கும் இடங்களை ஒற்றறிபவன். என்ன காரணத்தாலோ என்னைக் கொன்று விட விரும்பி விட்டார் நிஷாதர் தலைவர். அந்த விஷயத்தில் அவர் செய்த தவறு அவசரம். அவசரத்தில் அவர் அள்ளித் தெளித்த கோலமான சூழ்ச்சித் திட்டத்தில் தான் எத்தனை ஓட்டைகள்? உங்களுக்கு நான் களங்கம் தேட முயன்றோம். அதற்கு இவ்வளவு சிரமப்பட வேண்டுமா நான்? அதுவும் பைத்தியக்காரத் தனமாக! திருநீர் மலையில் நீங்கள் மயக்கமடைந்து விழுந்தீர்களே அந்த சந்தர்ப்பத்தை விடவா வேறுசந்தர்ப்பம் வேண்டும் எனக்கு! வாழ்நாள் முழுதும் எண்ணிக் கலங்கக் கூடிய களங்கத்தை அப்போது என்னால் உண்டாக்கியிருக்க முடியாதா? உங்களுக்கு மயக்கத் துளிகளைக் கொடுத்து அறையின் கதவை உடைத்து தூக்கி வந்து என் பக்கத்தில் படுக்க வைத்துக் கொள்ள வேண்டுமா என்ன? இது போன்ற பிரமாதமான யோசனைகளும் செயல்பாடுகளும் நிஷாதர் தலைவருக்கு வேண்டுமானால் புத்திசாலித்தனமானதாய் இருக்கலாம். எனக்கல்ல. அதே போல் உங்களைக் காப்பாற்றியது வெறும் நாடகம் என்றார். அது வெறும் பிதற்றல் என்பது உங்களுக்கே புரிந்திருக்கும். முன்பின் தெரியாத உங்களை நான் கண்டது தற்செயலாகத்தான். அதுவும் ஆபத்தான நிலையில் அங்கே உங்களைக் காப்பாற்றுவது போல் நாடகமாட வேண்டுமென்றால் நான்கைந்து பேரைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை.”

நந்திவர்மன் சற்றே நிறுத்தி நிஷாதர் தலைவனை நோக்கினான். அவனது முகம் பேயறைந்தமாதிரி இருந்தது. அதைக் கவனித்துவிட்டு மேலும் சொன்னான்.

“நான் ஏதோ ஓலை எழுதிவைத்திருந்தேனாம் நந்திவர்மனுக்கு. உங்களைக் கொண்டு போய் அவனது காலடியில் கிடத்துவதாக எழுதியிருந்தேனாம். தேவி, அதைச் செய்ய பல்லவபுரத்திற்கு நான் ஏன் வரவேண்டும்? திருநீர்மலையிலேயே செய்திருக்கலாமே? அதோடு இப்படியொரு ஆபத்தான ஓலையை எழுதிவைத்துக் கொண்டு யாராவது உங்களைக் களவாடி பக்கத்தில் படுக்க வைத்துக் கொள்வார்களா? நந்திவர்மனின் கால்களில் கிடத்துவதாக ஓலை எழுதும் ஒற்றன் இப்படியொரு அபத்தமான காரியத்தைச் செய்வானா? இளவரசி, இங்கே நடந்தது வேறு நடந்ததாகச் சொன்னது வேறு. எத்தனை ஆபத்தான சூழ்நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதையும் உங்களைச் சுற்றி எத்தனை பெரிய சதி நடக்கிறது என்பதையும் நான் உங்களுக்க உணர்த்துகிறேன். இவரைப் போன்ற ஓட்டை ஆதாரங்களுடனல்ல. உறுதியான ஆதாரத்துடன். “வாருங்கள்”-என்று கூறி அனைவரையும் கொட்டடிக்கு அழைத்துச் சென்றான்.

சற்றேதயங்கிய நிஷாதர் தலைவனை இரும்பு பிடியாய் பிடித்தபடி சென்றான் நந்திவர்மன் கொட்டடியில் தான் படுத்திருந்த இடத்திற்குச் சற்ற தள்ளியிருந்த நாவல் மரமொன்றில் இருந்த பொந்தில் கையை விட்டு ஓலையொன்றை எடுத்து இளவரசியிடம் கொடுத்து படிக்கச் சொன்னான். நிஷாதர் தலைவனின் கைகால்கள் உதறத் துவங்கின. ஓலையைப் படித்த இளவரசியின் கண்கள் சிவக்க பெண்புலியானாள். தன்னோடிருந்த வீரர்களை நோக்கி “கைது செய்யுங்கள் இந்த துரோகியை” என்றார் நிஷாதர்தலைவனை நோக்கி.

"தேவி, நிஷாதர் தலைவன் தன் கைப்பட எழுதிய மரணசாசன ஓலையையும் இப்போது நான் கொடுத்த ஓலையையும் பாருங்கள். இரண்டும் ஒரே கையெழுத்து என்பது புரியும்." என்றான் நந்திவர்மன்.

அன்று நந்திவர்மனுக்கு பல்லவபுரச் சத்திரத்தில் பெரும் விருந்தளித்தாள் இளவரசி. ஒரே நாளில் தனது சாமர்த்தியத்தைக் காட்டி தன் உயிரைக் காத்ததோடு மட்டுமில்லாமல் மிகப் பெரும் சதிவலையிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிய அவன் மீது பெரும் ஈடுபாடு ஏற்பட்டிருந்தது அவளுக்கு. அந்த ஈடுபாடு வெறும் நன்றியுணர்ச்சியாய் இல்லாமல் அன்புணர்ச்சியாய் மாறவும் தலைப்பட்டது.

அன்றிரவு சத்திரத்திலேயே கழிக்க முற்பட்ட அவள் சத்திரத்தை அடுத்த மலைப் பகுதியில் அவனை அழைத்துச் சென்றாள். அங்கே அவன் சத்திரத்திற்கு வந்ததிலிருந்து தான் பார்த்த மற்றும் கேட்ட விஷயங்களைச் சொல்லி "ஓலை கொண்டு சென்ற கள்ளனை பல்லவபுரத்திலேயே மடக்கிக் கொன்று கிணற்றில் வீசினேன். ஓலையைப் படித்துவிட்டு மரப்பொந்தில் பத்திரப்படுத்திவிட்டு என்னதான் நடக்கிறது பார்க்கலாம் என்றிருந்தேன். அந்த நிலையில் தான் நிஷாதர் தலைவன் தன் திட்டத்தைத் தீட்டியிருக்கிறான்"-என்றான்.

"அப்படியானால் உங்களுக்குப் பக்கத்தில் என்னைக் கொண்டு வந்தது போட்டதும் அவன் தானா?"-என்று கேட்டான் அவள்.

"அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால்"

"இல்லையென்றால்?"

"உங்களுக்குத் தூக்கத்தில் நடக்கிற வியாதி இருக்க வேண்டும்"

"அப்படியே இருந்தாலும் உங்கள் பக்கத்தில்தான் வந்துதான் படுக்க வேண்டுமா என்ன?"

"அப்படியொரு வியாதி புதிதாக வந்துவிட்டதோ என்னவோ?"

"பெரிய ஆள் நீங்கள்"-என்ற அவள் "அப்பப்பா-எத்தனை பெரிய சதியில் சிக்கவிருந்தேன் நான்? நீங்கள் சொன்னது போல் முதலை மீது தான் பயணம் செய்திருக்கிறேன் நான்"-என்றான்.

"இளவரசி, ஓலையில் நிஷாதர் தலைவன் எழுதியிருந்த செய்தியில் உங்களுக்குச் சம்மதம் உண்டா?"

"போயும், போயும் அந்தப் பெண் பித்தன் கீர்த்திவர்மன்! அவனுக்கா நான் மாலையிடுவேன்? யார் சதி செய்தாலும் அது நடக்காது"

"கீர்த்திவர்மனும் வேண்டாம். நந்திவர்மனும் வேண்டாம் என்றால் பிறகு யார் தான் வேண்டும்? இருவருமே மாமன்னர்கள் ஆயிற்றே!"

"நாட்டிற்குத் தானே! என் இதயத்திற்கில்லையே"

"தங்கள் இதயத்தை ஆளக்கூடிய மாமன்னன் எந்த நாட்டில் இருக்கிறானோ?"

"இந்த நாட்டில் தான் இருக்கிறான்'

"அப்படியா, இதுவரை சொல்லவில்லையே!

"இப்போது தானே பார்த்தேன்?"

"இப்போதா?"

“ஆம், காலையில்தான்”

“காலையிலா? எங்கே அவன்? எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்?”

“உங்களுக்கு எதுவும் புரியவில்லை போலிருக்கிறது”

“எந்த விஷயத்தைச் சொல்கிறீர்கள்?”

“அது கூடத் தெரியவில்லையா?”

“எது?”

“தெரிந்தாலும் தெரியாத மாதிரி காட்டிக் கொள்வது. தெரியாததைத் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாதது.”

“புதிரெல்லாம் போடுகிறீர்கள். எனக்கெங்கே புரியப்போகிறது?”

“உங்களுக்கா புரியாது? நல்ல கதை”

“கதைகள் ஒரு காலக்கட்டத்தில் பழையதாகி விடும். கனவாகி விடும்”

“இது அப்படியல்ல. என்றைக்குமே புதியதாக இருக்கும் கனவாக மாறவே மாறாது”

“அரச குமாரி, நான் சாதாரணமானவன்”

“அதனால்?”

“என்னை விரும்புவதில் தங்களுக்கு அதிக நஷ்டங்களே உண்டாகும்”

“நஷ்டங்களை நான் விரும்பினால்?”

“எனக்கு கஷ்டமாக இருக்கும்”

“ரொம்ப நல்லது. அப்படியே இருக்கட்டும்”-என்று பூமலர்ந்து சிரிப்பது போல் சிரித்தாள் அவள்.

“இளவரசி, நந்திவர்மரைக் கொல்லப் போவதாகச் சொன்னீர்களே, அந்த எண்ணத்தை விட்டு விட்டீர்களா?”

“அதை ஏன் விட வேண்டும்? மரணத்தால் அவனுக்குப் பாடம் கற்பிக்காமல் விடமாட்டேன்”

நந்திவர்மனுக்கு தூதவனாகப்போனது யார்?நிஷாதர் தலைவனா?”

“இல்லை, அவனது தம்பி. கங்க சர்மன்”

“அவனெங்கே?”

“நாம் சத்திரத்திற்கு வருவதற்கு முன்பாகவே அவன் சென்று விட்டானாம் காஞ்சிக்கு”

“நிஷாதர் தலைவனது சதி பற்றித்தான் தெரிந்து கொண்டீர்களே, நந்திவர்மன் விஷயத்தில் கங்கசர்மனை நம்புகிறீர்களா?”

“நம்புகிறேனோ இல்லையோ-நம்பவில்லை என்ற நிச்சயமாக சொல்ல முடியவில்லை”

“சரி போகட்டும். இப்பேர் பட்ட நிஷாதர் தலைவனை எப்படி துணையாக வைத்துக் கொண்டீர்கள்?”

“நான் யாரையும் துணையாகக் கேட்கவில்லை. என் விசுவாசிகளான வீரர்கள் சிலருடன் புறப்பட்டேன். தந்தை அனுப்பியதாகச் சொல்லி இடையில் இவன் வந்து சேர்ந்தான். நீங்கள் சதியை அம்பலப்படுத்தும் வரை அவனைச் சந்தேகிக்க முடியவில்லை என்னால்”

“இப்போது அவனை என்ன செய்யப்போகிறீர்கள்?”

“நீங்கள் தான் சொல்ல வேண்டும்”

“இளவரசி, நீங்கள் என்னை நம்புகிறீர்களா?”

“நீங்கள் கேட்கும் மோசமான கேள்வி இதுதான்”

“அதற்கில்லை தேவி. உணர்ச்சிப் பூர்வமான நம்பிக்கை உறுதியற்றது. ஆகவே தான் சொன்னேன். இந்த நிஷாதர் தலைவனை இங்கே நம்முடன் வைத்திருக்க வேண்டாம். அது ஆபத்து. அவனை உங்கள் வீரர்களின் பாதுகாப்பில் வந்த இடத்திற்கே அனுப்பி விடுங்கள். நீங்கள் மேற்கொள்ளப் போகும் அபாயப் பணியை ரகசியமாகச் செய்ய வேண்டும். வீரர்கள் பட்டாளம் வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“ஒரு நிபந்தனையின் பேரில் வேண்டுமானால் ஒப்புக்கொள்கிறேன்”

“நிபந்தனையா? என்ன அது?”

“என்னை இளவரசி என்றோ தேவி என்றோ நீங்கள் என்றோ அழைக்கக் கூடாது”

“அரசகுமாரியின் கட்டளையை அடிமை மீறமுடியாது” என்றான் நந்திவர்மன்.

அவள் அழகாகச் சிரித்தாள்.

“ரேவா, நீ ரொம்பவும் அழகாக இருக்கிறாய்” என்றான் மன்னன்.

“ஆரம்பத்தில் பேச வேண்டியதைப் போய் இவ்வளவு தாமதமாகச் சொல்கிறீர்களே?”

"வேறுவழி? உன்னைப் பார்த்ததிலிருந்து நெருக்கடிக்கு மேல் நெருக்கடியாக அல்லவா இருந்தது? ரசனையோடு எங்கே முடிந்தது?"

"இப்போது ரசிக்கிறீர்களாக்கும்"

"யாரையும் ரசிகனாக்கும் ரம்மியமான சூழ்நிலையில்லையா இது?"

மறுநாள் காரியங்கள் எல்லாம் கச்சிதமாக முடிந்தபின் ரேவா தேவியை அழைத்துக் கொண்டு திருவல்லிக்கேணிக்குச் சென்றான் நந்திவர்மன்.

அங்கே அவனுக்குப் புதிய நெருக்கடி காத்திருந்தது பயங்கரமாக!

⌘⌘⌘⌘⌘

23. பேயாழ்வார் மாளிகை

ஏழுமாமரம் துளைபடச் சிலை வளைத்து இலங்கையை மலங்குவித்து ஆழியானின் வாழி திருநாமங்களை உச்சரிப்பதை வாழ்வின் பேறாகக் கொண்ட நந்திவர்மன் அந்த வாழ்வின் வசந்தமாக காதல் தலைகாட்டியபோது இயல்பாகவே ஏற்றுக் கொண்டான் பல்லவபுரத்தில். அவனுக்கு அதில் வியப்பில்லை. ஆனால் ரேவா தேவிக்கு அப்படியில்லை. ஏனெனில் அவள் ராஷ்டிர கூடத்தை விட்டு புறப்பட்டது வெறும் கொலை நோக்கத்துடன் தான். காதலெனும் அலை அவள் மனதில் எழுந்திருக்கவில்லை. அதிலும் இக்காதல் ஒரு சாதாரண ஒற்றனிடம் உண்டான விதம் அவள் கனவிலும் கருதாத ஒன்று. அதேசமயம் தற்போது காதல் அரும்பி விட்டபின் காதலைத் தந்தவன் ஒற்றன்தானே என்ற குறை எழவில்லை. இப்பேர்பட்ட மாவீரன் தன்னைக் கவர்ந்தானே என்ற பூரிப்பே எழுந்தது.

அதனால் தான் பல்லவபுரத்தில் நிலவிய ரம்மியமான இரவுப் பொழுதில் தனது இயல்பை மீறியே காதலை வெளிப்படுத்தினாள் அவள். நந்திவர்மன் அவளது நிலையைத் தெளிவாக உணர்ந்து கொண்டிருந்த காரணத்தால் அவளது உணர்ச்சி வெளிப்பாடுகளை அங்கீகரிக்கவே செய்தான்.

சத்திரத்திற்கு அவர்கள் திரும்பியபோது நள்ளிரவு நேரமாகி விட்டதால் உணவருந்தி ஓய்வெடுத்தார்கள். மறுநாள் நிஷாதர் தலைவனை ராஷ்டிரகூடத்திற்குக் கைதியாக கொண்டு செல்லும் ஏற்பாடுகள் நடந்தன. ரேவாதேவியின் துணைக்கு வந்திருந்த நாற்பது வீரர்களின் காவலில் கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் அழைத்துச் செல்லப்பட்டான். போகும் போது கண்கள் நந்திவர்மனை எரித்து விடுவது போல் பார்த்தன.

"நிஷாதர் தலைவரே! நீங்கள் ஒரு மன்னர் குலத் தோன்றல். நிஷாத நாட்டு மன்னன். உங்களுக்கு இந்த இழிவு வேலைகள் வேண்டாம். இவற்றால் உங்களுக்கோ உங்கள் நாட்டுக்கோ பயனில்லை, பெருமையும் இல்லை, வீரராய் வந்து போரில் யாரை வேண்டுமானாலும் சந்தியுங்கள். அதில் தோற்றாலும் சரித்திரம் தூற்றாது. போய் வாருங்கள்" என்றான் நந்திவர்மன்.

அவன் அகன்றபின், "இந்தச் சதிகாரன் ராஷ்டிர கூடம் வரை கைதியாகச் செல்வானா? தப்ப முயலமாட்டானா?" * என்று நந்திவர்மனைக் கேட்டாள் ரேவா.

"நிச்சயமாக தப்புவான். மன்னர் குல ரத்தம் அவனை நிச்சயம் தப்புவிக்கும். அவன் தப்பினால் தடுக்க வேண்டியதில்லை என்று உன் வீரர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். உங்கள் வீரர்கள் ராஷ்டிரகூடம் சென்று இங்கே நடந்தவைகளை உன் தந்தையிடம் சொன்னால் போதும்"-என்றான் நந்திவர்மன்."

பிறகு இருவரும் திருவல்லிக்கேணிக்குப் புறப்பட்டார்கள்.

தானிருப்பது காஞ்சி மண்டலம் என்பதால் ஆபத்துகள் எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்கலாம் என்று கருதியதால் தன்னை வயோதிகனாக மாற்றிக் கொண்ட நந்திவர்மன் இளவரசியை மலைச்சாதிப் பெண்ணாக மாற்றினான். இருவரும் மாட்டு வண்டியொன்றில் பயணம் செய்து திருவல்லிக்கேணிப் பகுதியை அடைந்து அங்கேயிருந்த பேயாழ்வார் மாளிகையை அடைந்தார்கள்

---

* பிருதிவி வியாக்கிரன் தப்பிச்செல்லவேசெய்தான். இவன் வேங்கிமன்னனுக்கு அடங்கி வாழ்ந்தான். பின்னாளில் நந்திவர்மன் அஸ்வமேதயாகம்செய்தபோது அவனதுயாகப்புரவியைத்தன்நாட்டிற்கு வந்தபோதுபிடித்துவைத்துக்கொண்டான்நிஷாதர்தலைவன்.அதைமீட்க பல்லவமன்னன்போரிடவேண்டியதாயிற்று.

முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வாரின் அவதார ஸ்தலமான மயிலையிலும் அதையடுத்த திருவல்லிக்கேணியிலும் ஏராளமான வைணவர்களும் செல்வந்தர்களும் இருந்தார்கள். அவ்வாழ்வார் மீதிருந்த அபிமானம் காரணமாக இவ்விரு பகுதிகளிலும் பலர் தத்தம் மாளிகைகளுக்கு பேயாழ்வார் மாளிகை என்றே பெயரிட்டிருந்தார்கள். அத்தகைய மாளிகையொன்றின் முன்னால் தான் வண்டியை நிறுத்தினான் நந்திவர்மன்.

“குரவமே கமழும் குளிர் பொழிலூடு குயிலோடும் நின்றால் இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத திருவல்லிக்கேணி” * என்று பின்னாளில் பாடப் பெற்ற அத்திருநகர் நந்திவர்மன் சென்றபோது மாலைநேரமாகி விட்டபடியால் மதியை மயக்கும் மயனின் நகரம் போல் பொலிவோடு நிகழ்ந்தது. திருமாலின் திருக்கோயிலால் புனிதத்துவம் பெற்ற அந்நகரை சிறப்பு வாய்ந்த பொன்னகராக மாற்றிட நந்திவர்மன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தான். ** திருவல்லிக்கேணியை மன்னனும் தன் பொழிலும் காவியும் மதிலும் மாடமாளிகையும் மண்டபமும் நிறைந்த மாநகராய் சமைத்திட அவன் துவக்கிய முயற்சி ஏறக்குறைய முடியும் தருவாயில் இருந்ததால் அக்கடற்கரை நகர் தேவநகராய் தோன்றி கண்களுக்கு விருந்து படைத்தது.

இந்த நகர அழகெல்லாம் அவன் எதிர்பார்த்தது தான் என்றாலும் அவன் எதிர்பாராத பரபரப்பான சூழ்நிலை அங்கே நிலவியது அவனைச் சற்றே சிந்திக்க வைத்தது. மக்களும்

---

*பெரியதிருமொழி-இரண்டாம்பத்து-மூன்றாம்திருமொழி

** “தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மையிலைத் திருவல்லிக்கேணி”

-பெரியதிருமொழி

இயல்புக்கு மாறாக பரபரப்புடன் காணப்பட்டார்கள். அவ்வப்போது புரவி வீரர்களின் நடமாட்டமும் அதிகமாய் இருந்தது. இந்த நிலையில் வீதியில் நிற்பது சரியல்ல என்று இளவரசியை அழைத்துக் கொண்டு மாளிகைக்குச் சென்று கதவைத் தட்டியதும் பெண்ணொருத்தி கதவைத் திறந்தாள். அவளிடம் தன்கையில் இருந்த கணையாழியைக் காட்டியதும் தலைவணங்கிய அவள் “சீக்கிரம் உள்ளே வந்து விடுங்கள். அவர் வந்து விடுவார்” -என்று துரிதப்படுத்தினாள்.

உள்ளே நுழைந்த நந்திவர்மன், “பெண்ணே, இவர் நமது மன்னருக்கு மிகவும் வேண்டியவர். குறைவின்றி உபசரிக்க வேண்டியது உன் பொறுப்பு. இல்லையெனில் என்தலை போய் விடும்” என்றான்.

“ஐயா, இங்கே பெண்கள் தங்கும் அறை ஒன்றுதான் இருக்கிறது. அதை ஒழித்துத் தருகிறேன். சிரமத்திற்கு மன்னிக்க வேண்டும்”-என்றாள்.

பிறகு ராஷ்டிர கூட இளவரசி தங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. சுத்தம் செய்யப்பட்ட அறைக்கு பின் புறத்திலிருந்து வந்தான் ஒரு மனிதன். அவனைக் கண்டதும் நந்திவர்மன் நயன பாஷைகளால் சிலவற்றைத் தெரிவித்தான்.

அந்த மனிதனின் முகத்தில் பரபரப்பு தெரிந்தது. “இந்த நேரத்திலா தாங்கள் இங்கே வர வேண்டும்?” -என்றான் கவலை தோய்ந்த குரலில்.

“என்ன ஆயிற்று ஜெயந்திவர்மா? நகரத்தில் கூட ஒரே பரபரப்பாக இருக்கிறதே?” என்று வினவினான் மன்னன்.”

“ஆம் பிரபு. எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை”

“என்ன விஷயம்?”

"பிரபு, திருவல்லிக்கேணி தற்போது சாளுக்கியர் கட்டுப்பாட்டில் இருக்கிறது"

"ம்"

"தங்களைக் கைது செய்ய சாளுக்கியர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள்"

"ம்"

"தங்களுக்குத் தரப்படும் ஆதரவு ராஜதுரோகம் என்றும் ஆதரவு தருபவர்கள் கழுவேற்றப்படுவார்கள் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. தங்களை சிறை பிடித்தாலொழிய தங்களால் நிம்மதியாக இருக்க முடியாது என்பதை சாளுக்கியர்கள் உணர்ந்து விட்டார்கள். எப்படியாவது தங்களை சிறைபிடித்தாக வேண்டும் என்று இறங்கியிருக்கிறார்கள். கோட்டத்தலைவர்களுக்கும் கட்டளைகள் போயிருக்கின்றன. தங்களுக்கு வீசப்படும் வலை எப்படி இருக்கும் எப்போதும் வீசப்படும் என்பதை அறிய முடியவில்லை"

நந்திவர்மன் சற்றே யோசனையில் ஆழ்ந்தான். நிலைமையானது தான் எதிர்பார்த்ததை விட வேகமாக மாறிக் கொண்டிருப்பதை உணர்ந்த அவன் "ஜெயந்தி வர்மா, நீ பாண நாட்டிலிருந்து எப்போது வந்தாய்?"-என்று கேட்டான்.

"தாங்கள் நந்திபுரப்போருக்குப் புறப்பட்ட போதே வந்து விட்டேன்"

"காஞ்சியில் இப்போது விக்கிரமாதித்தன் இருக்கிறானா?"

"இல்லை என்று கேள்விப்பட்டேன்"

“அப்படியானால் இனி எதுவும் நடக்கும்.” என்று சொல்லிக் கொண்ட பல்லவ மன்னன் “ஜெயந்தி வர்மா, என்னோடு ராஷ்டிர கூட இளவரசி வந்திருக்கிறாள். என்னை யார் என அவளுக்குத் தெரியாது. என்னைக் கொல்வதாகச் சபதம் செய்து விட்டுப் புறப்பட்டிருக்கிறாள். அவளை வேறு பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு வந்திருக்கிறது” என்றான்.

“தங்களைக் கொல்ல சபதமிட்டவளை நீங்கள் ஏன் பாதுகாக்க வேண்டும் பிரபு?”

“என்னை நந்திவர்மன் என்று அவள் இன்னும் அறியவில்லையே! இந்த நிலையில் அவள் விரும்பும் பாதுகாப்பை அளிக்க வேண்டியது என் கடமை”

“மன்னவா, எதுவானாலும் இன்று எதையும் செய்யமுடியாது. நாளைதான் செய்ய முடியும். இளவரசியைக் காப்பாற்றும் பொருட்டு பூர்வாங்கமாக சிலவற்றை நான் செய்து விட்டு வந்து விடுகிறேன். அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள். எந்த காரணத்தை முன்னிட்டும் வெளியே போகவேண்டாம். நான் மாளிகையின் கதவை வெளியே பூட்டிவிட்டுச் செல்கிறேன். ஆபத்தைத் தவிர்க்கலாம்” என்று கூறிப் புறப்பட்டான் பாண நாட்டு சிற்றரசனும் பல்லவ மன்னனுக்கு கட்டுப்பட்டவனுமான ஜெயந்தி வர்மன்.

ஆனால் நடந்ததோ வேறு. ஜெயந்தி வர்மன் எதிர்பார்த்ததுபோல் ஆபத்தை தவிர்க்கப்படவில்லை. ஆபத்து வரவே செய்தது.

ஜெயந்திவர்மன் சென்ற பின் சிறிது நேரம் வரை ரேவா தேவியுடன் பேசிக் கொண்டிருந்தான் நந்திவர்மன். இரவு முகிழ்த்து அரை நாழிகை ஆகியிருக்கலாம். மாளிகையின் கதவு தட்டப்பட்டது. வெளியே பூட்டியிருக்கும் கதவைத் தட்டும்

முட்டாள் யாராக இருக்க முடியும் என்று யோசித்தவனாய் கதவருகே சென்றான் நந்திவர்மன். வெளியே ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருப்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதோடு அவர்கள் பேசியதும் காதில் விழலாயிற்று.

"கதவு பூட்டப்பட்டிருக்கிறது. இதைப்போய் தட்டுகிறீர்களே, இதுதான் பல்லவ நாட்டின் புத்திசாலித்தனமா?"

"தொடக்கத்திலேயே முடிவுக்கு வந்து விடுவது தான் சாளுக்கியரின் வழக்கம் போலிருக்கிறது"

"இதில் முடிவு எங்கே இருக்கிறது? வெளியே பூட்டிக்கொண்டு உள்ளே மனிதர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது எங்கள் வழக்கமல்ல"-

"தளபதியாரே, பல்லவ நாட்டில் இருப்பவர்கள் எமகாதகர்கள். ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர்கள்."

"அதனால்"

"இப்படி நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் என்றே சூழ்ச்சியைச் செய்வார்கள். அதுவும் நந்திவர்மன் சூழ்ச்சிக்கென்றே அவதரித்தவன். யாரையும் ஏமாற்ற அவனால் முடியும். அவன் சாதாரணமாக வந்து போகும் இடங்கள் எனக்குத் தெரியும். ஆகவே தான் இங்கே உங்களை அழைத்து வந்தேன். நீங்களோ முயற்சியே செய்யாமல் அவநம்பிக்கையில் பேசுகிறீர்கள்"

"வினோதமான ஆட்கள் ஐயா நீங்கள். சரி சரி. உன் ஆசையைக் கெடுப்பானேன்? வந்தது தான் வந்து விட்டோம். கதவை உடைத்தாவது பார்க்கலாம்"

இதையடுத்து கதவை உடைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வேகமாக செயல்பட்ட நந்திவர்மன் இளவரசியை அவளது அறைக்குள் அனுப்பிவிட்டு "என்ன நடந்தாலும் பதட்டப்படாதே" என்று கூறி கதவைச் சாத்தி பூட்டினான். பிறகு ஒரு மூலையில் போய் படுத்துக் கொண்டான்.

விரைவிலேயே கதவு உடைக்கப்பட்டது. உள்ளே ராணுவ உடையில் மூன்று பேர் நுழைந்தார்கள். அவர்கள் கையில் பந்தமிருந்தது. அதை இப்படியும்ப்படியுமாய் காட்டி மாளிகையை அலசிவிட்டு நந்திவர்மன் இருந்த இடத்திற்கு வந்தார்கள். பூட்டிக் கிடந்த வீட்டில் யாரும் இருக்க முடியாது என்ற எண்ணத்தில் இருந்த 'தளபதி'க்கு வியப்பாக இருந்தது நந்திவர்மனைக் கண்ட போது. ஆனால் எதிர்பார்த்த நபருக்குப் பதில் வயோதிகன் இருக்கவே ஏமாற்றமடைந்த அவன் "டேய் கிழவா எழுந்திரு" என்று அதட்டினான்.

வயோதிகன் சாமானியமாக எழுந்துவிடவில்லை. எனவே வந்தவர்கள் அவனைப் புரட்டி எடுத்து எழுப்பிய போது பேந்த பேந்த முழித்தான் அவன். "யார் நீங்கள் யார்? எப்படி வந்தீர்கள்?" என்று அலறிய படி கேட்டான் அவன்.

அவர்கள் யாரும் அதை சட்டை செய்யவில்லை.

"கிழவா, யார் நீ?" என்று கேட்டான் ஒருவன்.

"பணியாள். இந்த மாளிகையின் பணியாள்" தடுமாறியபடி சொன்னான் வயோதிகன்.

"வெளியிலே பூட்டிக் கொண்டு இங்கே என்ன செய்கிறாய்?"

"ஐயா, தங்களையெல்லாம் பார்த்தால் பெரிய தேசத்து ராஜாங்க அதிகாரிகள் போல் இருக்கிறீர்கள். நீங்கள் போய் இப்படி கேட்கலாமா?"

"என்ன கேட்டு விட்டோம்?"

"வெளியில் பூட்டிக்கொண்டு நானெப்படி உள்ளே வரமுடியும்?"

"அப்படியானால் வெளியே பூட்டியது யார்?"

"எஜமானர்"

"யார் அவர்?"

"இந்த மாளிகைக்குச் சொந்தக்காரர்"

"அது தெரிகிறது. பெயரென்ன?"

"தர்மர். இந்தப் பகுதியிலேயே பெரிய வணிகர்"

"எங்கே அவர்?"

"வெளியில் போயிருக்கிறார்"

"உன்னை ஏன் உள்ளே வைத்து வெளியே பூட்டினார்? பணியாள் இருக்க வேண்டிய இடம் வெளியிலா உள்ளேயா? எஜமானர் இல்லாதபோது உனக்கென்ன வேலை இங்கு? உண்மையைச் சொல்"

"ஐயா, பணியாள் என்ற பெயர் தானே தவிர எஜமானர் என்னிடம் வேலைவாங்கியதில்லை. நான் அவரது தந்தையின் காலத்திலிருந்து இருக்கிறேன். அந்த விசுவாசம் ஒரு காரணம். என் வயோதிகம் ஒரு காரணம். அதனால்தான் அனாதையான என்னை உள்ளேயே பத்திரமாக இருக்கும்படி கூறிவிட்டு வெளியில் பூட்டிக்கொண்டு போய்விடுவார்"

"இங்கே உன்னைத் தவிர வேறுயாராவது இருக்கிறார்களா?"

“இல்லை ஐயா”

அவர்கள் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. மாளிகையை ஒரு இடம் விடாமல் அலசலானார்கள்.

அவர்கள் இன்னார் என்பதை அறிந்தபோது பெருவியப்பாக இருந்தது நந்திவர்மனுக்கு.

ஒருவன் சாளுக்கிய தளபதியான ராவணன். மற்றொருவனோ தன்னோடு அரியணைக்கு போட்டி போட்டு தோற்றுப்போய் துரோகியாகி விட்ட விஜயஸ்கந்த வர்மன். தன்னுடைய பழக்க வழக்கங்கள் அவனுக்கு நன்றாகத் தெரியுமாதலால் அவனை அருகில் வைத்துக் கொண்டு தன்னைக் கைது செய்ய சாளுக்கியர்கள் முயற்சிப்பது தெரிந்தது அவனுக்கு. மூன்றாவது மனிதனை அடையாளம் தெரியவில்லை. ஆனால் பார்ப்பதற்கு சாளுக்கியனைப் போல இருந்தது.

இதற்கிடையில் மாளிகையை அலசிய அவர்கள் ரேவா இருந்த அறைக்கருகே வந்து “இதென்ன அறை? உள்ளே என்ன இருக்கிறது?” -என்று கேட்டான் சாளுக்கியர் தளபதி ராவணன்.

“உள்ளே யாரும் இல்லை. அது எஜமானர் பள்ளியறை”- என்றான் நந்திவர்மன்.

“பார்க்கலாம். கதவைத்திற”-என்றான் ராவணன்.

“மன்னிக்க வேண்டும். அறைச் சாவி என்னிடம் இல்லை. எஜமானரிடம் தான் இருக்கிறது.”

இதைக் கேட்டு இடியென நகைத்தான் ராவணன்.

“டேய் கிழவா, யாரிடம் விளையாடுகிறாய்? பூட்டிய வீட்டிற்குள் நீ இருந்த மாதிரி இந்த அறைக்குள்ளும் யாராவது இருந்தால் ?” என்று கேட்டான்.

"யாரும் இல்லை" என்றான் நந்திவர்மன்.

"நான் நம்பத்தயாராக இல்லை. கதவை உடைத்துப் பார்த்து விடுகிறேன்" -என்று கூறி கதவை இடிக்கத் தொடங்கினான்.

நந்திவர்மனின் அறிவு ஈட்டி முனையில் நின்றது.

⌘⌘⌘⌘⌘



24. கிழவனின் சாகசம்

பரதனும் தம்பி சத்துருக்கனும் இலக்குவனோடு மைதிலியும் இரவும் நண்பகலும் துதிசெய்ய நின்ற இராவணாந்தகனான திருமால் பார்த்தசாரதியாய் அருள் பாலித்த தேனமர் சோலை மாடமாமயிலைத் திருவல்லிக்கேணியில் பேயாழ்வார் மாளிகையில் பூட்டியிருந்த அறைக் கதவைத் திறக்க முற்பட்டு சாளுக்கிய தளபதி ராவணனும் விஜயஸ்கந்தவர்மனும் உடைக்க எத்தனித்ததைக் கண்ட நந்திவர்மன் அதில் இருந்த ஆபத்தை உணர்ந்தான். தனக்கு எது நேர்ந்தாலும் சரி - ரேவா தேவிக்கு எதுவும் நேரக் கூடாது என்பது அவனது தீர்மானமாகியிருந்தது. காரணம் காதலல்ல. அரசியல். ராஷ்டிரக்கூட இளவரசி தற்போது பல்லவ நாட்டில் இருப்பதை சாளுக்கியர்கள் அறிந்தால் அதனால் உண்டாக்கக்கூடியது விபரீதங்கள் தான் என்று கருதினான் அவன்.

உடனடியாக செயல்பட வேண்டிய அவசரத்தில் “ஐயா” என்று குரல் கொடுத்தான் நந்திவர்மன் கதவை இடித்தவர்களை நோக்கி.

அவனது குரலைப் பொருட்படுத்தாமல் ராவணன் கதவை தொடர்ந்து இடிக்கவே, “ஐயா சற்று நிறுத்துங்கள்” - என்று சற்று முன்னால் போய் நின்று சொன்னான் மன்னன்.

“என்ன” என்பது போல் ராவணன் திரும்பியதையும் “வந்தவேலையை விட்டு விட்டு இந்த வேலையை ஏன் வீணாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கு வேண்டியது எனக்குத் தெரியும்” என்றான் நந்திவர்மன்.

தூங்குமூஞ்சிக் கிழவனின் பேச்சு ஆர்வத்தை தூண்டுவதாக அமையவே இடிப்பதை நிறுத்திய சாளுக்கிய தளபதி "டேய், நீ என்ன சொல்கிறாய்?" -என்று கேட்டான் மிரட்டும் குரலில்.

"சாளுக்கியர் தளபதி கோபப் படக்கூடாது. சற்று நிதானமாக இருந்தால் நான் உங்களுக்கு உதவ முடியும்"

"கிழவா, யார் நீ? என்னை எப்படி உனக்குத் தெரியும்?" என்று ராவணன் வினவினான் சந்தேகக் குரலில்.

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது பிரபு? சில நாட்களாகத் தான் ஊர் அமளி துமளி பட்டுக் கொண்டிருக்கிறதே! யார் வருகிறார்கள் போகிறார்கள் என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம். அதோடு நானும் இங்கு தானே இருக்கிறேன் எனக்கு மட்டும் தெரியாதா? தங்களையும் தெரியும். இவரையும் தெரியும்"

"யார் இவர்?"

"பல்லவ இளவரசர். விஜயஸ்கந்த வர்மர்"

"இவரைத் தெரியுமா?"

"தெரியவில்லை. எங்கேயும் பார்த்தமாதிரியும் இல்லை"

நந்திவர்மன் பேசிய பேச்சுக்கள் இயல்பாகவும் சரியாகவும் இருந்ததால் சற்றே நிதானப்பட்ட ராவணன், "கிழவா? என்னிடம் விளையாடும் எண்ணம் உனக்கிருந்தால் இப்போதே விட்டுவிடு. இல்லையானால் உயிரோடு உன் தோலை உரித்து பெருமாள் கோயில் கோபுரத்தில் தொங்க விடுவேன்"

நந்திவர்மன் வேண்டுமென்றே தடுமாறி விழுந்தது போல் கீழே விழுந்து பெருமூச்சிறைக்க எழுந்து கொண்டு "பிரபு, இந்தக் கிழவன் இனிமேல் அனுபவிக்கவோ எதிர்பார்க்கவோ என்ன இருக்கிறது? எதற்காக உங்களிடம் விளையாட வேண்டும் நான்?" என்று தடுமாறிய குரலில் சொன்னான்.

"அப்படியானால் உன்னை எழுப்பியதுமே உண்மையைச் சொல்லவேண்டியதுதானே? இவ்வளவு தாமதம் எதற்கு?" மடக்கினான் சாளுக்கிய தளபதி.

"வந்ததிலிருந்தே நீங்கள் ஒரு நிதானத்தில் இல்லை. காரியத்தை சாதிக்க வந்தவராகத் தெரியவில்லை. மிரட்டலும் இகழ்ச்சியும் தவிர வேறு எதுவும் தங்களிடம் காணப்படவில்லை. இந்த நிலையில் உங்களிடம் என்னைப்போன்ற கிழவர்கள் எப்படி நடந்து கொள்ள முடியும்? உங்கள் அவசரமே உங்களுக்கு பெரிதாகப் போய் விட்டது"

"என் முன்னாலேயே என்னைக் குறை சொல்ல உனக்கு ரொம்பவும் துணிவு வேண்டும். கிழவனாய் இருப்பதால் உன்னைச் சும்மா விடுகிறேன். விஷயத்தைச் சொல் இப்போது"

"தளபதி, தாங்கள் எல்லோரும் தேடி வந்திருப்பது நந்திவர்மனைத் தானே?"

"என்னது?"

"வியப்படைய இதில் ஒன்றுமில்லை ஐயா. நந்திவர்மரைத் தேடும் விஷயம் ரகசியமாகவா இருக்கிறது? ஊரில் பேசப்பட்டு வரும் விஷயம் தானே?"

“அதனால்?”

“சாளுக்கிய தளபதியாரும் பல்லவ இளவரசருமாக இரவு நேரத்தில் வந்து பூட்டப்பட்டுள்ள வீட்டுக் கதவைத் தட்டுவது விளையாட்டிற்காகவா இருக்கும் ? காரணத்தைப் புரிந்து கொள்வதா கஷ்டம்?”

“சரி, சரி, இங்கிருக்கிறானா நந்திவர்மன்?”

“இங்கில்லை. ஆனால் அவன் இருக்குமிடம் தெரியும், ரகசிய வழியில் போனால் பிடித்துவிடலாம். நான் அழைத்துப் போகிறேன். நாம் போகும் இடத்தில் இவன் இல்லாது போனால் அங்கேயே என் தலையைச் சீவி விடுங்கள்.” என்று கூறிய நந்திவர்மன் “இதோ வந்து விடுகிறேன்’ என்று சொல்லி அருகே மண் பானையில் இருந்த நீரை எடுத்து தாமிரவாளி ஒன்றில் ஊற்றி கையில் எடுத்துக் கொண்டு “ஐயா, அதோ தூணில் இருக்கும் பந்தம் ஒன்றை எடுத்துக் கொண்டு என்னோடு வாருங்கள்” என்றான்.

அவனது செய்கைகளில் அவநம்பிக்கை அடைய எதுவும் இல்லாததால் அவர்கள் அவனோடு பந்தத்துடன் புறப்பட்டார்கள்.

“கிழவா, தண்ணீர் எதற்கு? நாம் எங்கே போகிறோம்?’ என்று கேட்டான் விஜயஸ்கந்த வர்மன்.

“பொறுங்கள் ஐயா. நேரிலேயே பார்த்து தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்”-என்று கூறி நீண்ட அந்த மாளிகையின் கோடியில் இருந்த ஒரு அறைக்கு வந்தான் பல்லவ மன்னன்.

வாளியைக் கீழே வைத்து விட்டு கதவுகளைத் திறக்க முற்பட்டான். அவனால் முடியாமல் போகவே, “நில், நான்

திறக்கிறேன்' என்று கூறிய ராவணன் முன்னால் வந்து பலத்துடன் கதவுகளைத் தள்ளியதும் அவை திறந்து கொண்டன.

"ஐயா, பந்தத்தை முன்னே பிடியுங்கள். இருட்டில் நுழைய வேண்டாம். உள்ளே பாம்புகள் இருக்கலாம்"என்று அச்சத்தைத் தெரிவித்தான் நந்திவர்மன்.

பந்தத்தை ராவணன் பிடித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான். அவனுக்குப் பின்னால் வாளியுடன் நுழைந்தான் நந்திவர்மன். அவனுக்குப் பின்னால் மற்ற இருவர் நுழைந்தார்கள். அறையும்சற்று நீளமாக இருந்தது. அதன் கோடியில் நிலவறை ஒன்று தெரிந்தது. அங்கே வாளியை ஓரமாக வைத்த நந்திவர்மன் "ஐயா, பந்தத்தை என்னிடம் கொடுங்கள். நான் முன்னால் இறங்குகிறேன்" என்று கூறி பந்தத்தை வாங்கிக் கொண்டு வேண்டுமென்றே கீழே விழுந்தான்.

அதைக் கண்டதும், "கிழவா, நீ இப்படியே விழுந்து எழுந்து கொண்டிருந்தால் பொழுது விடிந்து விடும். நீ பந்தத்தைப் பிடித்து ஒளிகாட்டு. நான் இறங்குகிறேன்."- என்றதும் நிலவறை முகப்பில் குனிந்து கொடு பந்தத்தை உள்ளே காட்டினான் நந்திவர்மன். அதில் உண்டான வெளிச்சத்தில் நிலவறையின் படிகள் தெரியவே ராவணனும் விஜயஸ்கந்த வர்மனும் உள்ளே கவனமாக இறங்கினார்கள்.

அவர்கள் அப்படி இறங்கும் போதே மூன்றாவது மனிதனிடம் "ஐயா, நான் இவர்களுடன் இறங்கிப் போகிறேன். நீங்கள் போய் இன்னொரு பந்தத்தைக் கொண்டு வாருங்கள். உள்ளே இருட்டு அதிகமாக இருக்கும். இரண்டு பந்தங்களாய் இருப்பது நல்லது" என்று சொன்னான் நந்திவர்மன். அது நியாயமாகப் படவே அவன்

பந்தம் கொண்டு வர அறையைவிட்டு வெளியே சென்றான். நிலவறைக்குள் புகுந்தவர்கள் பத்து படிகள் வரை கீழே இறங்கியிருந்தார்கள்.

சரியான தருணம் வந்து விட்டதை அறிந்த நந்திவர்மன் திடீரென பந்தத்தை வாளியில் இருந்த தண்ணீரில் முக்கி எடுத்ததால் அறை இருளில் மூழ்கியதோடு புகையும் எழுந்தது. அது போதாதென்று வாளியில் இருந்த நீரை நிலவறைக்குள் வெகு வேகமாகக் கொட்டிவிட்டு அணைந்த பந்தத்துடன் மின்னல் வேகத்தில் அறையை விட்டு வெளியேறி கதவுகளை இழுத்து சாத்திதாழிட்டான். இவையனைத்தும் இரண்டொரு நொடிகளில் நடந்தன. அதேசமயம் திடீரென உண்டான அரவத்தினால் பந்தம் கொண்டு வரச் சென்ற மூன்றாவது வீரன் என்னாயிற்று என்று அறிய திரும்பி ஓடி வந்த போது நந்திவர்மன் கையிலிருந்த பந்தக் கோல் பதம் பார்த்தது பலமாக. மயங்கி விழுந்தான் அந்த வீரன்.

உள்ளே சிக்கிய ராவணனும் விஜயஸ்கந்த வர்மனும் இந்நேரம் மூச்சித்திணறி இருளில் தத்தளிப்பார்களாதலால் அறையை விட்டு வர சற்று நேரமாகும் என்பதை உணர்ந்த நந்திவர்மன் அதற்குள் ரேவாதேவியை அந்த அறையிலிருந்து அகற்றி மாளிகையை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று தீர்மானித்து அவளிருந்த அறையை அடைந்து பூட்டைத் திறந்த போது திகைக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அறைக்குள் ரேவாதேவி இல்லை. உடுப்புகளும் சீலைகளும் தாறுமாறாகக் கிடந்தன.

பூட்டிய அறைக்குள் இருந்தவர் எப்படி மாயமாக மறைய முடியும் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் சற்றே யோசித்துவிட்டு கீழே கிடந்த சீலைகளையெல்லாம் அகற்றி தரையைக் காலால் சற்றே உதைத்தான். அவன் நம்பியது வீண் போகவில்லை. தரையானது ஓரிடத்தில் உண்டாக்கிய சத்தமானது

அவனுக்கு உண்மையை உணர்த்தியது. தரையைத் தடவி பாறையினை அகற்ற வழியிருக்கிறதா என்று பார்த்தான் ஒரு தடயமும் கிடைக்க வில்லை. அதே சமயம் தற்செயலாக அங்கியிருந்த மஞ்சத்தை அசைத்த போது மெல்லிய ஒலியுடன் அறையின் தரை பிளந்து கீழே நிலைவறையைக் காட்டியது.

நந்திவர்மன் அறைக் கதவைச் சாத்தி அப்படியே விட்டுவிட்டு அங்கிருந்த பந்தத்தை கையில் எடுத்துக் கொண்டு நிலவறையில் இறங்கினான். ஏழாவது படியில் இறங்கியபோது மீண்டும் ஒரு ஒலி உண்டாகி பிளவுபட்ட தரை தானாக மூடிக்கொண்டது. மிகவும் நுட்பமான நிலவறைப் பொறியியலைக் கண்டு வியந்த அவன் விடுவிடுவென இறங்கிச் சென்று நிலவறை நடைப்பாதையை அடைந்தான். கையில் பந்தம் இருந்ததாலும் நிலவறைப்பாதை சுத்தமாக இருந்ததாலும் சிரமமின்றிப் போக முடிந்தது அவனால்.

அந்த நிலவறை தனக்கெப்படி தெரியாமல் போயிற்று என்று வியந்தான் பல்லவ மன்னன். தான் அடிக்கடி வரும் அந்த மாளிகையில் தான் அறிந்த வரை பழங்கால நிலவறை ஒன்று இருப்பது மட்டுமே இருந்தது. அது நினைவுக்கு வந்ததால் தான் ராவணனை போக்கு காட்டி ஏமாற்ற முடிந்தது அவனால். ஆனால் அவன் ஏமாறும்படி வேறொரு நிலவறை இருந்ததும், அது ரேவாதேவி இருந்த அறையில் அமைந்து விட்டதும் அவனுக்கு கவலையைத் தந்தது. யாரைப் பாதுகாக்க தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் முனைந்தாளோ அந்த இளவரசி காணாமல் போய் விட்டது அவனுக்கு வேதனையைத் தந்தது.

இளவரசி தானாகவே நிலவறையைக் கண்டுபிடித்து போயிருப்பாளா அல்லது நிலவறையிலிருந்து யாராவது வந்து அவளைத் தூக்கிச் சென்றிருப்பார்களா என்பதை அவனால் தீர்மானிக்க முடியவில்லை. எப்படியிருந்தாலும் அவள் அதிக தூரத்திற்கு சென்று விட முடியாது என்ற எண்ணமே

அவனுக்குச் சற்று நம்பிக்கையை அளித்தது. எனவே துரிதமாக நடந்தான்.

கால் நாழிகை பயணத்திற்குப் பின் நிலவறை முடிவடைந்து படிகள் மேல் நோக்கிச் சென்றன. வாயில் திறந்தது. பெரும் ஒளி வெள்ளம். பந்தத்தைப் போட்டு விட்டு மீதிப்படிகளில் ஏறி நிலவறைக்கு மேலே வந்தான் நந்திவர்மன்.

நிலவறையானது பெரியதோர் மாளிகைக் கூடத்தில் முடிந்திருந்தது. சுகந்தமும் பிரகாசமும் வீசிய அந்த அறையில் அமர்ந்திருந்தாள் ரேவா தேவி. அவளுடன் பேசிக் கொண்டிருந்தார் ஒருவர்.

அவரைக் கண்டதும் ஸ்தம்பித்துப் போனான் பல்லவ மன்னன்.

⌘⌘⌘⌘⌘

25. நீர் மேல் நடப்பான்

கூத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டிலின் மேல் ராஷ்டிர கூட இளவரசி சிஷ்யபாவத்தில் அமர்ந்திருக்க அவருக்கு நேரெதிரில் உயர் ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்தார் ஒரு துறவி. காவியுடை உடுத்தி திருமண்காப்பினை நெற்றியில் இட்டு ஒற்றை நாடி சரீரத்துடன் இருந்த அவரது பார்வை கூர்மையாயும் விஷமம் கலந்ததாயும் இருந்தது. அவரை ஏமாற்றுவது முடியாத காரியம் என்பது நந்திவர்மனுக்குத் தெரிந்திருந்தது. அதே சமயம் ரேவா தேவிக்கு முன்னால் தன்னைக் காட்டிக் கொள்ளவும் தயாராக இல்லை. எனவே அவருக்கு முன்னால் எப்படி காட்டிக் கொள்வது என்று தெரியாமல் குழம்பினான். அக்குழப்பத்தை முடிவில் துறவியே தீர்த்தார்.

ரேவா தேவியுடன் பேசிக் கொண்டிருந்த அவர் அவனைப் பார்த்ததும் “அதோ வந்து விட்டான் பார் உன் காதலன். காதல் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். காதல் வந்தால் இப்படித்தான் தொடர வேண்டும்” --என்றார் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல்.

அவரது பேச்சு இளவரசிக்கு ஏற்புடையதாக இல்லை.

“சுவாமி, உமது பேச்சு துறவிக்கேற்ற பேச்சாக இல்லை” என்றாள் மறுக்கும் குரலில்.

“அப்படியென்ன பொருந்தாத பேச்சை பேசி விட்டேன் இளவரசி?” இயல்பாக கேட்டார் துறவி.

“காதலைப் பற்றி துறவிகள் பேசுவது சரியா?”

"பேசினால் என்ன?"

"முற்றும் துறந்தவர்கள் துறவிகள். துறவிகளையும் மயக்குவது காதல். அதைப் போய் நீங்கள் பேசலாமா?"

"எங்களுக்கெல்லாம் காதலென்பது பேச்சோடு சரி" என்று கூறி விஷமமாகப் பார்த்தார் துறவி.

அவள் ஏதோ பேசமுற்பட்ட போது தடுத்த அவர், "மகளே, மனக்கட்டுப்பாட்டில் இருப்பவன் பேச்சுக்களால் பாதிக்கப்படமாட்டான். மனத்தை அடக்கிய துறவியின் முன்னால் மன்மதனின் கணைகள் பயனற்றுப் போகும். ஆகவே கவலைப்படாதே. அதோடு துறவி காதலைப் பற்றி அறியாதவனல்ல. தெரிந்தவற்றை அவன் பேசாமல் இருக்கவும் கூடாது" என்றார். பின் "நீ போய் உள்ளே இரு. நான் இவனைச் சற்று விசாரிக்கிறேன்" என்றார்.

அதுவரை வாயைத் திறக்காதிருந்த நந்திவர்மன் துறவியை வணங்கி விட்டு "சுவாமி, நான் யாரென்று தெரியுமா?" என்று கேட்டான்.

"நான் தான் உலகம். உலகம் தான் நான். எம்பெருமான் இப்படித்தான் சொல்லியிருக்கிறார்"- என்று தத்துவம் பேசினார் துறவி.

"என்னைத் தெரியுமா என்று தான் கேட்டேன்"- என்றான் பல்லவ மன்னன்.

"என்னை என்ன, ராஷ்டிரகூட இளவரசி என்று நினைத்து விட்டாயா ஏமாறுவதற்கு?"

"உண்மை உண்மை. உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. ஆனால்....."

"ஆனாலென்ன?"

“நான் கிழவன் அல்ல என்பதை இளவரசி சொல்லியிருப்பாள்......”

“நந்திவர்மன் என்பதை உன் நடவடிக்கைகள் கூறின”

“நடவடிக்கைகளா?”

“நடந்ததையெல்லாம் ரேவாதேவி கூறினாள். நான் கூட்டிக் கழித்துப் பார்த்துக் கொண்டேன். முடிவு தெரிந்து விட்டது” என்று கூறிய துறவி “அவர்களை என்ன செய்தாய்?” -என்று கேட்டார்.

நடந்ததை நந்திவர்மன் கூறியதும் விசையொன்றைச் சுட்டிக் காட்டி “போய் அதை திருகி விட்டு வா. நிலவறை மூடிக் கொள்ளட்டும்” என்றார்.

அவ்வாறே செய்து விட்டு வந்த அவன் “ஒருவேளை சாளுக்கிய தளபதி நிலவறையில் தொடர்ந்து வந்தால்-ஏழாவது படியில் நின்றால் நிலவறை வழி திறந்து விடும் அல்லவா? இங்கே பிரவேசித்து விடலாமல்லவா?” என்று கேட்டான்.

“பொறியியல் துறையில் வசதிகள் பல உண்டு நந்திவர்மா. நீ வந்த போது நிலவறை செயல்பட்டது ஒரு முறை. வேறு முறையும் உண்டு. விசையைத் திருகி விட்டு வந்தாயே அதுதான் அம்முறை. நாமாக அதைத் திருகினாலன்றி இனி அது திறவாது. ஆகவே நாம் இஷ்டப்பட்டாலன்றி யாரும் அதன் வழியாக இங்கே வரமுடியாது. பேயாழ்வார் மாளிகையில் இந்த நிலவறையை நான் சமீபத்தில் அமைத்தேன். உனக்குக் கூட தெரிந்திருக்காது” - என்றார் துறவி.

“தங்களைத் தான் குருநாதரிடம் யாசித்தேன். அவர் சொல்லித் தான் தங்களைத் தேடி திருவல்லிக்கேணிக்கு வந்தேன். ஆனால் இப்படி சந்திக்கும்படி இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை” -என்றான் நந்திவர்மன்.

திருமங்கையாழ்வாரின் பிரசித்தமான நான்கு சீடர்களில் ஒருவரும், ஆழ்வாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதில் சொல்லை போகாமலிருந்து அவரையே தெய்வமாய் கொண்டவரும் ஞானமும் யோகமும் ஒருங்கே பெற்றதால் நீருக்கு மேலும் நடக்கும் யோகத்திறன் பெற்றவரும் அதன் காரணத்தாலேயே இயற்பெயர் மறைந்து போய் "நீர்மேல் நடப்பான்" என்ற பெயர் உண்டாகி நிலைத்து விட காரணமானவரான அத்துறவி புன் முறுவல் கொண்டார்.

"மன்னா, துறவியால் உனக்கு ஆகக் கூடியதென்ன?" என்று கேட்கவும் செய்தார்.

"துறவிகளால் ஆக முடியாதது என்ன என்பது தான் அடியவனின் அபிப்ராயம்" -என்றான் நந்திவர்மன்.

"உனக்கு என்ன செய்ய வேண்டும் நான்?"

"நிரம்ப அறிவுரைகளும் ஆலோசனைகளும் தேவை. காலநேரம் கணித்து தங்களிடம் உபதேசமாகப் பெற வேண்டும் என்பதே என் பிரார்த்தனை"

"நந்திவர்மா, தற்போது நிலவும் காலநேரத்தைக் கவனித்தாயா?"

"கவனித்தேன் சுவாமி. பாதகமான நிலைமைதான் நிலவுகிறது தற்போது"

"நீ இப்போது எங்கே செல்ல தீர்மானித்திருக்கிறாய்?"

"காஞ்சிக்கு நான் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது"

"எனக்கென்னவோ இங்கிருந்து அவ்வளவு சுலபமாகப் போகமுடியும் என்று தோன்றவில்லை. பார்க்கலாம்

எதற்கும் நீ இப்போது சற்று ஓய்வெடு." என்று கூறிவிட்டு போகச் சொன்னார் துறவி.

அவரிடமிருந்து விடைபெற்ற நந்திவர்மன் வயோதிக வேடங்களைக் களைத்துவிட்டு ரேவாதேவியின் இடத்திற்குச் சென்றான். அவள் அதே மலைச்சாதிப் பெண்ணின் கோலத்திலேயே இருந்தாள். தற்போது தான் நல்ல வெளிச்சத்தில் அவளை அவனால் அருகில் பார்க்கமுடிந்தது. அப்படி பார்த்த போதுதான் அவளது அளப்பரிய அழகு பூரணமாகத் தெரிந்தது. "இப்படிப்பட்ட பேரழகியைப் போய் நான் மணக்க மறுத்து விட்டதாகத் தூதுவன் இவளிடம் பொய் சொல்லியிருக்கிறானே அவன் தலையில் இடிவிழக் கூடாதா?' என்று அத்தூதுவனைச் சபித்தான் நந்திவர்மன்.

மாளிகையின் உப்பரிகையில் நின்றிருந்த அவள் தேவதை போலிருந்தாள். அவள் போட்டிருந்த வேடம் அவளுக்கு கச்சிதமாகப் பொருந்தியிருந்தது. அதுமட்டுமல்ல. எந்த வேடத்திலும் அவள் பொறுத்தமாயும் அழகாயும் இருப்பாள் என்றே தோன்றியது நந்திவர்மனுக்கு. அதற்குக் காரணம் அவள் அழகு தான். அழகு அவளது இயற்கையான அம்சமாய் இருந்துவிட்டதால் செயற்கை .+அலங்காரங்களும் வேஷங்களும் அவளது வனப்பை உயர்த்தச் செய்தனவேயன்றி குறைக்க முடியவில்லை. இப்படி அவளது அழகு வியக்கத் தக்கதாய் இருந்தாலும் அதை மேன்மேலும் ரசிப்பது அசர்ந்தப்பமானது என்று நினைத்த நந்திவர்மன் "கிணற்று நீர் எங்கே போய் விடப்போகிறது? அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்றத் தீர்மானத்துடன் அவளை நெருங்கி 'ரேவா' -என்றழைத்த போது "பேச வேண்டாம்' -என்றாள் அவள் முகத்தை திருப்பாமலேயே.

"ஏன்?" -வினயமாய் வினவினான் அவன்.

"பேச வேண்டிய அவசியமில்லை"-என்றாள் அவள் அதே நிலையில் அதே குரலில்.

சட்டென்று திரும்பிய அவள் சுட்டெரித்து விடுவது போல் பார்த்தாள் அவனை.

“இளவரசியார் மிகவும் கோபத்தில் இருக்கிறார் போல் தெரிகிறது. காரணம் தான் தெரியவில்லை” -பணிவுள்ளவன் போல் சொன்னான் பல்லவமன்னன்.

“தெரிந்தால் என்ன செய்து விடுவீர்கள்?”

“போக்குவதற்கு முயற்சி செய்யலாம்”

‘உங்களை எனக்குப் பிடிக்கவில்லை. அதுதான் காரணம்”

“பயமாக இருக்கிறது இளவரசி”

“ஏன்?”

“உங்களுக்குப் பிடிக்காமல் போனவர்களின் கதி என்னவாகும் என்பதை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் நந்திவர்மன் விஷயத்தில். அதுதான் எனக்கும் முடிவா? அதுவும் சரி. அப்படியே செய்து விடுங்கள். உங்கள் கோபம் தீரும்”

அவளுக்குக் கோபம் அதிகரிக்கவே செய்தது. மேற்கொண்டு பேசமுடியாமல் திணறிய அவள் பின் “முக்கியமான ஒரு விஷயத்தை என்னிடம் சொல்லவில்லை நீங்கள்” -என்றாள்.

எதைச் சொல்கிறாள் என்று தெரியாமல் சற்றே திகைத்தான் நந்திவர்மன். துறவி ஒரு வேளை சொல்லியிருப்பாரோ என்று நினைத்தான். எனவே உடனடியாகப் பதில் சொல்லிவிடாமல் “முக்கியமான விஷயம் எது? முக்கியமல்லாத விஷயம் எது? தெரியவில்லையே தேவி” என்றான் பேச்சை வளர்க்க விரும்பியவனாய்.

“நீங்கள் பொய்யர் என்பது இதிலிருந்தே உறுதியாகி விட்டது”

“நானா? பொய்யனா?”

“முக்கியம் எது முக்கியமில்லாதது எது என்பது தெரியாமல் தான் என்னைக் காப்பாற்றினீர்களா? அது தெரியாமல்தான் நிஷாதர் தலைவன் அனுப்பிய ஓலையை வழிப்பறி செய்தீர்களா? பேயாழ்வார் மாளிகையில் என் அறைக்கு முன்னால் நீங்கள் எதிரிகளிடம் பேசியதெல்லாம் கூட உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்பதற்குத்தான் அத்தாட்சிகளா? ஏன் பொய் சொல்கிறீர்கள்?”

“வாதத்தில் உங்களை வெல்லும் வல்லமை இந்த ஏழை ஒற்றனுக்கு இல்லை. நீங்கள் கேட்க நினைப்பதை நேராகவே கேட்டு விடுங்கள்”

“ஒற்றரே, உங்களை நீங்கள் ஒற்றர் என்றீர்கள். அதுவும் தர்மத்தின் ஒற்றர் என்றீர்கள். நந்திவர்மனைப் பிடிக்க உதவுவதாகவெல்லாம் சொன்னீர்கள். முக்கியமான ஒன்றை மட்டும் சொல்லவில்லை”

“என்ன அது?”

“உங்களைப் பற்றி யாரிடமாவது பேசவேண்டுமென்றால் -செய்தி அனுப்ப வேண்டுமென்றால் எந்த பெயருக்கு அனுப்புவது? தர்ம ஒற்றன் பெயருக்கா? உங்கள் பெயரென்ன? இதைக்கூட தெரிவிக்காமல் இரண்டு நாட்களாய் பழகுகிறீர்கள்”

பெருமூச்செறிந்தான் நந்திவர்மன். பிறகு “உண்மைதான் தேவி. முக்கியமான இந்த விஷயத்தை நான் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும் தான். என்ன செய்வது? எனக்கு எல்லாமே தாமதமாகத்தான் தெரிகிறது உங்கள் அழகு உட்பட.

நீங்களே கூட சொன்னீர்கள் இதை பல்லவபுரத்தில். என் பெயர் ஹரி சரணபரன்" என்றான்.

"அப்படியென்றால்?"

"திருமாலை சரண் என்று கிடக்கும் பக்தன் என்று பொருள்"

"நல்லது ஹரிசரண் பரர் அவர்களே. நான் புறப்படுகிறேன்"

"எங்கு தேவி?"

"எங்கே போனால் உங்களுக்கென்ன?"

"நான் சொல்வது போல் நடந்து கொள்வதாகச் சொன்னீர்களே பல்லவபுரத்தில்?"

"வாக்கை நீங்கள் மட்டும் தான் மீறலாம். நான் மீறக்கூடாதா?"

"நான் எங்கே மீறினேன்?"

"என்னை தேவி என்றும் இளவரசி என்றும் அழைக்கக் கூடாது என்று சொன்ன போது ஒப்புக் கொண்டீர்களா இல்லையா?

"அடிமை புத்தி எனக்கு. அடிக்கடி தலைகாட்டி விடுகிறது"

"உங்களுக்கு கொஞ்சமும் புத்தியில்லை" - என்றாள் அவள்.

உரிமையோடு அவள் அப்படி கடிந்து பேசியது இன்பமாய் இருந்தது நந்திவர்மனுக்கு.

“ரேவா” - என்றழைத்தான் அவன்

“ம்”

“உன் கோபம் போய் விட்டதா?”

“ஏன் போக வேண்டும்?”

“பிறகேன் பேயாழ்வார் மாளிகை அறையிலிருந்து மறைந்தாய்? நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்ற நம்பிக்கை இல்லையா உனக்கு?”

“அதில்லை காரணம். அறைக்கு வெளியே நீங்கள் பேசிய பேச்சு கேட்டது எனக்கு. அதோடு அந்த அறையில் இருந்த நிலவறையை சற்று முன்பு தான் நான் கவனித்திருந்தேன். நீங்கள் எப்படியும் எதிரிகளை மடக்கி அழைத்துச் சென்று விடுவீர்கள் என்று தெரியும். எனவேதான் நீங்கள் வரும் வரை நிலவறைக்குள் சென்று பார்க்கலாம் என்று சென்றேன். துறவியைக் கண்டேன்”

“உன்னைப் பார்த்ததும் அவர் வியக்க வில்லையா?”

“அவர் சரியான விஷமி”

“விஷமியா?”

“பின்னென்ன? உணர்ச்சியைக் காட்ட வேண்டிய நேரத்தில் சகஜமாய் இருக்கிறார். தேவையில்லாத போது உணர்ச்சியைக் காட்டுகிறார்.”

“அது சாமான்யமான காரியம் என்று நினைக்கிறாயா நீ? துறவிகளுக்கு மட்டுமே அது சாத்தியம். நிலவறையிலிருந்து வெளிப்பட்ட உன்னைப் பார்த்ததும் என்ன செய்தார்?”

“துளி கூட வியப்படைவில்லை. கல்லைப் போலவே அமர்ந்து கொண்டு ‘வா, மகளே, வா, வந்து உட்கார்’ என்று

ஏதோ என்னை எதிர்பார்த்தவரைப் போல் வரவேற்றார். பிறகு என் விவரங்களைக் கேட்டார்".

"அவைகளை அவர் நம்பினாரரா?"

"அவர் எதையுமே கேட்கவில்லை. மாறாக உன்னை அவன் நேசிப்பது உண்மை என்று தான் தெரிகிறது. விரைவிலேயே இங்கு வருவான் என்றார். நான் சொல்வதெல்லாம் ஏன் பொய்யாக இருக்கக்கூடாது என்று கேட்டேன் நான். 'வாழ்வும் பொய். இந்த உடலும் பொய், பேச்சும் பொய்யாக இருந்து விட்டுப் போகட்டுமே' என்றார் சகஜமாக. எனக்குப் பதில் விரோதி யாராவது திடுகென்று வந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள் என்று கேட்டேன். 'அப்போதும் நான் பேசிக் கொண்டு தான் இருப்பேன். ஆனால் விரோதியால் தான் பேச முடியாது' என்றார். அதற்கென்ன அர்த்தம்?"

"ரேவா, அத்துறவி சாதாரணமானவரல்ல என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உனக்குப் பதில் விரோதி யார் வந்திருந்தாலும் அவனை ஒரு சில நரம்பு அழுத்தங்களாலேயே செயலிழக்க வைத்து விடுவார். வைணவப் பெரியார்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். அவரை நம்புவதும் மதிப்பதும் நல்லது" என்று கூறிய நந்திவர்மன், "அநேகமாக இன்று நாம் பிரியும் படி இருக்கும். இங்கேயே நீ இருப்பதானாலும் சரி, துறவி அனுமதிப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனாலும் உனக்கிந்த இடம் உகந்ததல்ல. திருவல்லிக்கேணியிலேயே பெருந்தேவி என்னும் நாட்டிய நங்கை இருக்கிறாள். நாட்டிய சாஸ்திரத்தில் கறை கண்டவள் அவள். அவளோடு நீ தங்கியிரு. அவளிடம் பற்பல நாட்டிய நுட்பங்களை அறிந்து கொள்ளலாம்" என்றான்.

"எனக்குத் தெரியாத நாட்டியமில்லை"

"ரேவா, பல்லவ நாட்டுக் கலைகளைப் பற்றி நீ அறியமாட்டாய். பல்லவ மன்னர்களில் பெரும்பாலானவர்கள் கலைவிற்பன்னர்களாக இருந்திருக்கிறார்கள். அதிலும் மகேந்திரவர்மன் என்னும் மன்னன் இக்கலையில் கை தேர்ந்தவன். புதுப்புது நாட்டியங்களை அவன் சிருஷ்டித்திருக்கிறான். அவையெல்லாம் தெய்வீக நடனங்கள். அவற்றை நீ கற்கும் போது உண்மையான தெய்வீகத்தை உணர்வாய். நான் காஞ்சிக்குச் சென்று நிலைமைகளை அறிகிறேன். உன் நோக்கத்திற்கான சாதகங்களை உருவாக்கி விட்டு வருகிறேன். உன் கைகளில் நந்திவர்மன் சிக்கிப் போவதும் தண்டனையை அடையப் போவதும் உறுதி. அதை நிறைவேற்றாமல் நான் ஓயமாட்டேன். அதுவரை நீ பெருந்தேவியுடன் இருப்பது பாதுகாப்பானது".

இவ்வாறு தன் திட்டத்தைக் கூறிய நந்திவர்மன் மறுநாள் பொழுது விடிந்த பின் தான் கூறியவாறே அத்தெய்வத் திருநகரில் இருந்த பிரபல நாட்டியப் பேரொளியான பெருந்தேவியிடம் அவனே கொண்டு போய் ராஷ்டிர கூட இளவரசியை சேர்த்தான். பெருந்தேவி ஏறக்குறைய ரேவா தேவியின் வயதொத்தவளாக இருந்ததால் ரேவா தேவிக்கு அவளைப் பிடித்துப் போயிற்று.

அங்கிருந்து விடைபெறும் போது பெருந்தேவியைத் தனியே அழைத்த நந்திவர்மன் தன்னை யாரென கூறிக் கொண்டு, "பெண்ணே, நான் யாரென்பது இவளுக்கு தெரியாது. அந்த ரகசியத்தை நீ காக்க வேண்டும். அதோடு இவளைப் பாதுகாக்கும் பொறுப்பு உன்னுடையது. நான் இங்கு வந்து போனது பற்றி யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று எச்சரித்து விட்டுச் சென்றான்.

பெருந்தேவிக்கு எல்லாம் கனவுபோல் இருந்தது. நடனம் கற்க வந்தவளோ ராஜகுமாரி. அவளைப் பாதுகாக்கும் படி

பணித்தவனோ மாமன்னன். இதை நம்பமுடியாமல் நின்றாள் அவள்.

அன்று மாலை தான் புறப்படுவதாகச் சொல்லி துறவியிடம் அனுமதி கேட்டான் நந்திவர்மன்.

“ஜெயந்திவர்மன் வரட்டும்” என்றார் துறவி.

ஜெயந்திவர்மனும் விரைவிலேயே வந்தான். அவன் கொண்டுவந்த செய்தியோ விபரீதச் செய்தியாய் இருந்தது.

⌘⌘⌘⌘⌘

26. ராவண லீலை

மாரிமலை . முழுஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து வேரிமயிர் பொங்க பாய்ந்தது போல் இரணியனின் உடலைக் கிழித்தழித்த திருமால் அங்கே பிரகலாதனுக்கு தன்னை உணர்த்தியது போர் தனஞ்செயனுக்குப் பின்னாளில் தன்னையும் உலகையும் உலகியலையும் உணர்த்திக் காட்ட சாரதியாய் அமர்ந்ததால் பார்த்தசாரதி என்ற திருநாமத்தைப் பெற்று அதே திருநாமத்துடன் கோயில் கொண்ட திருவல்லிக்கேணியை விட்டு புறப்பட நந்திவர்மன் அனுமதி கேட்ட போது "ஜெயந்திவர்மன் வரட்டும்" எனத் துறவி கூறியதும் அவர் வார்த்தைக்குப் பணிந்தான். ஆனால் ஜெயந்திவர்மனின் வரவு இத்தகைய விபரீதச் செய்தியோடு சேர்ந்திருக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை.

"மன்னவா, நிலைமை விபரீதமாகி விட்டது. பேயாழ்வார் மாளிகைச் சம்பவங்களால் சாளுக்கியர்கள் பெருத்த ஆவேசத்தையும், எச்சரிக்கையையும் அடைந்து விட்டனர். திருவல்லிக்கேணியைவிட்டு வெளியேறும் பாதைகள் அனைத்தும் அடைக்கப்பட்டு இரட்டிப்பு காவலும் கண்காணிப்பும் செய்யப்பட்டுள்ளன. இப்போதைக்குத் தாங்கள் தப்புவது இயலாது" என்றான் ஜெயந்திவர்மன்.

துறவியை நோக்கினான் மன்னன். அவரோ அவனை ஊடுறுவுவது போல் பார்த்தார். "இதை எதிர்பார்த்து தான் உன்னைத் தடுத்தேன்" என்று சொல்வது போலிருந்தது அவர் பார்வை.

இதற்கிடையில் "ஜெயந்திவர்மா, பேயாழ்வார் மாளிகைக்கு நீ போனாயா?" என்று கேட்டான் மன்னன்.

"சென்றேன் மன்னவா, மாளிகையில் ஈ காக்கை இல்லை. நடந்ததை ஊகித்து கொண்டேன். இங்கு வந்து விசாரித்துப் பார்க்கலாம் என்று வந்தேன். நீங்கள் இருந்து விட்டீர்கள்" என்றான் ஜெயந்திவர்மன்.

தற்போது துறவி குறுக்கிட்டார். "நந்திவர்மா, ரேவா தேவி இருந்த அறையின் நிலவறை வழியாக நீ வந்தபோது அறைக் கதவை என்ன செய்தாய்?"

"முதலில் கதவை சாத்தி உள்ளே தாழிட்டு விடலாம் என்று நினைத்தேன். பிறகு நிலவறை இருப்பது எதிரிக்குத் தெரிய வேண்டாம் என்று திறந்தே வைத்தேன்"

"நல்லதே செய்தாய். திறந்து கிடக்கும் அறையில் யாரும் நிலவறையை எதிர்பார்க்க மாட்டார்கள். அந்த அறையில் இருந்தது யார் என்பது ராவணனுக்குத் தெரியாது என்றாலும் யாராவது இருந்திருக்க வேண்டும் என்றும் அந்த நபரை அழைத்துக் கொண்டு நீ ஓடிவிட்டாய் என்றும் தீர்மானித்து மாளிகையை விட்டுப் போயிருக்க வேண்டும். அநேகமாய் அந்த அறையில் நந்திவர்மன் ஒளிந்து கொண்டிருந்ததாகவே அவர்கள் சந்தேகப்பட்டிருப்பார்கள்" என்றார் துறவி.

தப்புவது எப்படி என்பதை யோசிக்க முற்பட்ட நந்திவர்மன் "சுவாமி, தங்கள் கட்டளை என்ன?" -என்று வினவினான்.

"நாராயணனின் நாமங்களைப் பாடுவோம் வா" என்றார் துறவி.

பேயாழ்வார் மாளிகைச் சம்பவங்களைப் பொறுத்தவரை ராவணனும் விஜஸ்கந்தவர்மனும் துறவி விளக்கியது

போலத்தான் நினைத்தார்கள். செயல்பட்டார்கள். மாளிகை நிலவறையில் நந்திவர்மன் பந்தத்தை திடீரென அணைத்து விட்டு படிக்கட்டுகளில் பெருவேகத்துடன் தண்ணீரை கொட்டிய போது ராவணனும் விஜயஸ்கந்தவர்மனும் கால்வழுக்கி கீழே உருண்டார்கள். கும்மிருட்டில் ஒரு கணம் எதுவுமே புரியவில்லை அவர்களுக்கு. அதோடு அவிக்கப்பட்ட பந்தத்தால் புகை உண்டாகி, அப்புகையும் அறையின் கதவுகள் சாத்தப்பட்டுவிட்டதால் வெளியேற முடியாமல் நிலவறைக்குள்ளேயே இறங்கியதால் மூச்சுத் திணறல் உண்டாயிற்று. தட்டுத் தடுமாறி தடவி மேலேறி வந்தார்கள். விஜயஸ்கந்தவர்மன் கதவுகளைத் திறக்க முற்பட்டு முடியாமல் போகவே மிகவும் வெறுப்பில் இருந்த ராவணன் "உன்னால் முடியாத விஷயங்களில் ஏன் தலையிடுகிறாய் விஜயஸ்கந்த வர்மா. ஒதுங்கி நில்" -என்று எரிந்து விழுந்ததும் பல்லவ வாலிபனுக்கு கோபமேற்பட்டது.

"தளபதி நானும் உங்களைப் போல் ஒரு தளபதி. கீர்த்திவர்மரால் நியமிக்கப்பட்டவன். ஆகவே மரியாதையோடு பேசுவது நல்லது" என்று தெரிவித்துக் கொண்டான்.

ராவணனுக்கோ வெறுப்பு அதிகமாகத்தான் செய்தது. "நாம் இங்கு பேசிக் கொண்டே இருந்தால் நம் இருவருக்குமாக சேர்த்து வீரர்கள் மரியாதை செய்வார்கள்" என்றான்.

"நீர் கூறுவது எனக்குப் புரியவில்லை"

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்களுக்கு உபாத்தியாயராக நான் நியமனம் செய்யப்படவில்லையே"

"வீரர்கள் எல்லோருமாக ஏன் மரியாதை செய்ய வேண்டும்?"

"தளபதிகளின் சடலங்களுக்கு வீரர்கள் எல்லோருமாக மரியாதை செய்வது மரபு"

“நாம் ஏன் சாகவேண்டும்?”

“விஜயஸ்கந்த வர்மா, ஏன் இப்படி முட்டாளைப்போல் பேசி உயிரை வாங்குகிறாய்? புகை மண்டலத்தில் மூச்சுத் திணறுவது உனக்குத் தெரியவில்லை? மூக்கே இல்லாதவனைப் போல் பேசுகிறாயே! இப்படியே நின்றிருந்தால் சாகாமல் என்ன செய்வது?”

ராவணன் வேதனையிலும் வெறுப்பிலும் பேசுகிறானே தவிர அவமரியாதை செய்யவில்லை என்பதைப் புரிந்து கொண்ட விஜயஸ்கந்தவர்மன் மேற்கொண்டு பேசவில்லை.

ராவணன் அடுத்த சில நிமிடங்களில் ராமாயண ராவணனாகவே மாறினான். தனது பலம் முழுவதையும் திரட்டி கதவைப் பிடித்து இழுத்தான். உடலில் இருந்த வெறுப்பும் கூடச் சேர்ந்து கொண்டதால் கதவுகள் முறிந்து விழுந்தன. அறையை விட்டு வெளியேறி ரேவாதேவி இருந்த அறையை நோக்கிச் சென்றான். அறை திறந்து கிடப்பதையும் உள்ளே அனைத்தும் தாறுமாறாக கிடப்பதையும் கண்டதும் கிழவன் தப்பி விட்டது நிதர்சனமாகத் தெரிந்தது. சில நிமிட நேரத்தில் சாளுக்கியர் தளபதியை கிழவன் ஏமாற்றி விட்டதை உணர்ந்த விஜயஸ்கந்தவர்மனுக்கு ஓருண்மை புலப்பட்டது. அதை உடனே சொல்லவும் செய்தான்.

“தளபதி, நம்மை ஏமாற்றியவன் கிழவனாக இருக்க முடியாது. வாலிபனாகத் தான் இருக்க வேண்டும் அதுமட்டுமல்ல, சிறந்த நடிகனும் கூட”

ராவணனுக்கும் அதுதான் அபிப்ராயமாக இருந்தது. அதேசமயம் அறையில் இருந்தது யாராக இருக்கும் என்ற யோசனை ஓடியது. இருவரில் ஒருவர் நந்திவர்மனாகத் தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. எனவே “தப்பவிட்டு விட்டோமே?” என்று தன்னை நொந்து கொண்டான்.

அப்போது அவனது சிந்தனையைக் கலைத்த விஜயஸ்கந்தவர்மன், "தளபதி, ஓடிவிட்டவனை இப்போது நாம் எங்கே என்று தேட முடியும்! ஆகவே பந்தங்களை எடுத்துக் கொண்டு பழையபடி நிலவறைக்கே போவோம். அது எங்கே போய் முடிகிறது என்று பார்ப்போம்" - என்றான்.

"நிலவறைகளை ஆராய நாம் வரவில்லை" என்று அலட்சியமாகச் சொன்னான் ராவணன்.

"அப்படியில்லை தளபதி. இங்கே ஏகப்பட்ட நிலவறைகள் உண்டு. சதிகாரர்களும் சாமியார்களும் அவற்றைப் பயன்படுத்துவதாக நான் கேள்விப் பட்டதுண்டு. அப்படியொரு சதிக் கூடத்திற்கு இந்த நிலவறை வழியைக் காட்டலாம். அதன் மூலம் நந்திவர்மனைப் பிடிக்க உபாயங்கள் கிடைக்கலாம். தயங்காமல் வாருங்கள். இது நிச்சயமாக உபயோகமாய் இருக்கும்".

ராவணன் அறைகுறையாக சம்மதித்தான். பிறகு இருவரும் இரண்டு பந்தங்களோடு நிலவறைப் பயணத்தை மேற்கொண்டார்கள். நிலவறை வளைந்து வளைந்து சென்றது. அரை நாழிகைப் பயணத்திற்குப் பின் நிலவறையின் முடிவு கிடைத்தது. திறப்பு மூடியை திறந்து வெளியே வந்து பார்த்த போது ராவணனுக்கு மிதமிஞ்சிய கோபம் உண்டாயிற்று. ஏனெனில் அந்த நிலவறை பேயாழ்வார் மாளிகையின் முன்புறமே முடிந்திருந்தது. இரண்டே எட்டில் அடையக்கூடிய மாளிகை வாயிலை தலையே சுற்றும் அரை நாழிகைப் பயணத்தில் அடைந்த முட்டாள் தனத்தை உணர்ந்தபோது அதற்கு வழிவகுத்த விஜயஸ்கந்த வர்மனை அங்கேயே வெட்டிப் போட்டு விட வேண்டும் போலிருந்தது ராவணனுக்கு. வீணாக நேரத்தைக் கெடுத்து விட்டோமே என்று மகா கோபத்தில் அவன்

எரிச்சலடைந்த போது, "தளபதி, இந்த நிலவறை மாளிகைக் காரர்கள் ஆபத்துக் காலங்களில் தப்புவதற்காக அமைக்கப்பட்டதாக இருக்கும்" என்றான் விஜயஸ்கந்தவர்மன்.

"இருக்காது விஜயஸ்கந்தவர்மா. வேலையில்லாதவர்கள் காலாற நடந்து பழகுவதற்காக கட்டியிருப்பார்கள்" என்றான் ராவணன் இகழ்ச்சியைப் பரிபூரணமாகக் காட்டி.

⌘

நாராயணனின் நாமங்களை உச்சரிப்பது தான் தற்போது நாம் செய்ய வேண்டிய பணி என்று துறவி கூறிய போது நந்திவர்மனைத் தவிர வேறுயாராவது இருந்திருந்தால் 'தலைபோகிற நேரத்தில் பாட்டாவது பஜனையாவது' என்று கூறி தன்னிச்சையாக செயல்பட்டிருப்பார்கள். ஆனால் திருமங்கை ஆழ்வாரின் சீடனும் குருமனம் அறிந்த மாணவனுமான நந்திவர்மன் துறவி சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு உள்ளே போய் நீராடிவிட்டு தூய அந்தணனைப் போன்ற கோலத்துடன் கூடத்திற்கு வந்தபோது அங்கே முப்பதிற்கும் மேற்பட்ட அந்தணர்கள் வேதகோஷங்களை எழுப்பியபடி இருந்தார்கள். அவர்களோடு ஒருவனாய் கடைசியில் போய் அமர்ந்து கொண்டான் நந்திவர்மன். தன் பேச்சின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட, பிறகு அதற்கேற்ப அந்தணன் கோலம் கொண்டது, ஆர்ப்பாட்டமின்றி கூட்டத்தோடு கூட்டமாய் சகஜமாக அமர்ந்து கொண்டது ஆகியவற்றைக் கவனித்த துறவி உள்ளுக்குள் மெச்சிக் கொண்டதோடு "இவனை இச் சாளுக்கியனென்ன எந்த மன்னனும் வெல்ல முடியாது" என்று சொல்லிக் கொண்டார்.

சிறிது நேரத்திற்கு வேதபாராயணம் நடந்தது. பிறகு பகவத் கீதை பற்றிய சில கருத்துக்களைச் சொன்னார் துறவி. "இறைவனை யாரும் வெளியே தேடாதீர்கள். உங்களுக்குள்ளேயே தேடுங்கள். அவனது இருப்பிடம் அதுதான். கல்லைச் செடிகொடிகள் மூடியிருப்பது போல், நிலவை முகில் கூட்டங்கள் மறைந்திருப்பது போல் நமக்குள் இருக்கும் இறைவனை நமது அறியாமை, ஆணவம் ஆகியவை மறைத்துக் கொள்கின்றன. அவற்றை விலக்கும் போது தான் அவனை நாம் காண முடியும். அதற்கு உதவுபவை தான் தியானமும் தவமும். அப்படி நமக்குள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து விட்டால் நாம் வேறு தெய்வம் வேறு என்ற நிலை வராது. இதை உணராதவர்கள் தான் அவனை வெளியில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்"

அப்போது ஒரு சீடன் கேட்டான்.

"சுவாமி, தாங்கள் சொல்வது உண்மையானால் ஆலயங்களும் வழிபாடுகளும் எதற்கு?"

"நல்ல கேள்வி. ஒரு குழந்தை பிறந்ததுமே எழுந்து நடப்பதில்லை. சாப்பிடத் தொடங்கிவிடுவதில்லை. படிக்க முற்படுவதில்லை. ஆனால் அவைகளை அதற்கு அதன் தாய் பழக்குகிறாள். அந்த உதவியை அக்குழந்தைக்கு அப்பருவத்தில் செய்யாது போனால் அக்குழந்தை இறந்தே கூட போகலாம். இறைவனை அறிவதும் அப்படித்தான். நமக்குள் இருக்கும் தெய்வத்தை நாம் உணருவதற்கு உதவியாகவே இந்த ஆலயங்களும் வழிபாடுகளும் உள்ளன. இவை மனிதனின் சிந்தனையை ஒருமுகப் படுத்துவதற்கும் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கும் உதவுகின்றன. அதன் மூலம் பயிற்சி பெறும் மனிதன் ஞானியாகிறான். பின் இறைவனை அறிகிறான். இறைவனாகிறான்" என்றார் துறவி.

இப்படியாக ஆன்மீக விவாதம் நடந்து கொண்டிருந்த போது திறந்து கிடந்த மாளிகைக்குள் நுழைந்தார்கள் ராவணனும் விஜயஸ்கந்தவர்மனும். அவர்களுக்குப் பின் பத்து வீரர்கள் இருந்தார்கள்.

உள்ளே நுழைந்த ராவணன் மாளிகையை அளவெடுப்பது போல் பார்த்துவிட்டு துறவியிடம் "நீ யார்?" என்று கேட்டான் அதிகாரத் தோரணையில்.

அவனது கேள்வியைக் கேட்டு லேசாகச் சிரித்தார் துறவி.

"ஏன் சிரிக்கிறீர்?" - கேட்டான் ராவணன்.

"ஒன்று நீ குருடனாக இருக்க வேண்டும். அல்லது முட்டாளாக இருக்க வேண்டும்" - சகஜமாகவே சொன்னார் துறவி.

"என்ன சொன்னீர்?"

"சரி, சரி, நீ குருடன் இல்லை. என்னை நன்றாகவே பார்க்கிறாய்"

"அப்படியானால் என்னை முட்டாள் என்கிறீர்களா?"

"பிறருக்கு சிரமம் தராதவன் நீ. சரியாகப் புரியவைக்கிறாய்"

"யாருக்கு என்ன புரிகிறதென்று கடைசியில் தெரியும். கேட்டதற்குப் பதில் சொல். நீ யார்?"

"துறவி"

"அதுதான் தெரிகிறதே"

"தெரிந்தும் கேட்டதினால் தான் உன்னை அப்படிச் சொன்னேன்"

“உமது பெயர்?”

“தற்போது எனக்குப் பெயரில்லை. அதற்கும் அவசியமுமில்லை”

“பெயரே இல்லாமல் எப்படி இருக்க முடியும்!”

“முதலில் என் பெயர் பூர்வாசிரமத்தில் இருந்தது. இப்போது அப்பெயரில் யாரும் என்னை அழைப்பதில்லை. எனக்கேகூட மறந்து விட்டது”.

“அப்படியானால் உம்மை எப்படி அழைப்பது?”

“துறவி என்று தான் எல்லோரும் அழைக்கிறார்கள்”

“நான் யார் தெரியுமா?”

“யார்?”

“சாளுக்கிய சேனாதிபதி மேலைராவணன்”

“அவன் கூடவா?”

“ஆம். அவரும் ஒரு தளபதி”

“ஆகவே தான் இப்படிப் பேசுகிறாய்”

“புரியவில்லை”

“அந்தந்த துறையில் பரிச்சயம் உள்ளவர்கள் தான் அதில் திறமையைக் காட்ட முடியும்”

“அதாவது”

“சேனாதிபதியின் பரிச்சயம் சேனைகளை நடத்துவதில் தான். வாதம் புரிவதில் இல்லை. அதனால் தான் உன் பேச்சு வெறும் வெட்டிப் பேச்சாகிவிட்டது”

“வெட்டிப் பேச்சா?”

“அப்பனே! பேச்சு உனக்குப் பரிச்சயம் இல்லாத துறை. அதில் ஏன் இறங்கினாய்?”

“அதற்கென்ன இப்போது?”

“அதனால் தான் ஒன்றுமில்லாத சிறிய விஷயத்தை அறிய இவ்வளவு பேசிக் கொண்டிருக்கிறாய்”

“துறவி!”

“சொல்”

“திருவல்லிக்கேணி, சாளுக்கியர் கட்டுப்பாட்டில் இருக்கிறது”

“இருக்கட்டும்”

“நீர் வாலை ஆட்டினால் கூண்டோடு கைது செய்யும் அதிகாரம் எனக்கிருக்கிறது”

“பிறகு?”

“இங்கேயே இப்போதே கூட உம்மைத் தண்டிக்க என்னால் முடியும்”

“அப்பனே, நான் விரும்பினால் அன்றி என்னை உன்னால் அசைக்கவும் முடியாது”

“துறவி! போதாத காலம் நெருங்கிவிட்டது”

“உண்மை”

“என்ன உண்மை?”

“உனக்குப் போதாத காலம் வந்துவிட்டது”

துறவியின் இந்தத் துணிச்சலான பேச்சைக் கேட்டு வெகுண்ட ராவணன் காலைமடக்கி அமர்ந்து துறவியின் கையைப் பிடித்தான் முறிப்பது போல்.

ஆனால் அங்கு நடந்ததோ வேறு.

அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

⌘⌘⌘⌘⌘

27. உண்மையின் வெற்றி

தெரிதல் நினைதல் எண்ணலாகத் திருமாலை எண்ணி எண்ணி பூரித்த அலைகளை ஆடையாகக் கொண்ட நீண்ட கடற்கரையின் அளப் பறிய அழகைப் பெற்ற திருவல்லிக்கேணி யில் ஆலயத்தை அடுத்த மாடவீதியில் அமைந்திருந்த துறவியின் மாளிகையில் அத்து மீறி நுழைந்தது மட்டுமின்றி அதிகப்பிரசங்கித்தனமான கேள்விகளைக் கேட்டு அதற்கு முத்தாய்ப்பாக துறவியின் கையையும் பிடித்து முறிக்க சாளுக்கிய சேனாதிபதி ராவணன் முனைந்த போது அவனது கை நரம்புகள் இரண்டை சற்று அழுத்தி எடுத்து வீணை நரம்புகளைத்தட்டுவது போல் தட்டினார் துறவி. அடுத்த நிமிடம் சாளுக்கியர் தளபதி வேர் அறுந்த மரம் போல் சாய்ந்தான்.

அங்கியிருந்த அனைவருமே ஸ்தம்பித்தார்கள் அக்காட்சியைக் கண்டு, “கொலை கொலை”-= என்று கத்தினான் விஜயஸ்கந்தவர்மன்.

“அப்பனே, இங்கு நீ கத்துவது சரியல்ல” -என்றார் துறவி.

“கண்முன்னால் எங்கள் தளபதியைக் கொன்றிருக்கிறீர்கள். கத்தாமல் என்ன செய்வது?” என்று கேட்டான் விஜயஸ்கந்தவர்மன்.

“அப்படியானால் உனக்கும் சிகிச்சை செய்ய வேண்டியது தான்”

“சிகிச்சையா? எனக்கா? எதற்கு?”

“கத்தாமல் இருப்பதற்கு”

“என்னையும் கொலை செய்யப்போகிறீர்களா?” - கேட்டான் விஜயஸ்கந்தவர்மன். பயமும் சந்தேகமும் அவன் குரலில் ஊடுறுவின.

“நான் யாரையும் கொலை செய்வதில்லை”

“இதோ சாளுக்கியர் தளபதியைக் கொன்றிருக்கிறீர்களே?”

“சரி, இவனைக் கொண்டு போய் அடக்கம் செய்து விடு”

பெரிதும் குழம்பினான் விஜயஸ்கந்தவர்மன் எதுவும் புரியாததால்.

துறவியே பேசமுற்பட்டு “வீரனே, நான் யார் என்பதும் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதும் இத்திருநகரில் இருக்கும் குழந்தையைக் கேட்டாலும் சொல்லும். என் உறைவிடமும் இயக்கமும் வெளிப்படையானவை. ரகசியத்திற்கோ மறைவிற்கோ இடமில்லை. இங்கே வந்து அநாவசியமான கேள்விகளை ஏன் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் தேவை என்ன? அதைக் கேட்பதை விட்டுவிட்டு இந்த அர்த்தமற்ற கேள்விகளும் முரட்டுச் செய்கைகளும் எதற்கு? இப்போது சொல். இந்த துறவியின் வீட்டிற்கு நீங்கள் வந்ததின் நோக்கம் என்ன?” - என்று கேட்டார்.

விஜயஸ்கந்த வர்மனுக்கும் துறவியின் பேச்சு நியாயமானதாக இருக்கவே “சுவாமி, நாங்கள் பல்லவ மன்னனைத் தேடிக் கொண்டுதான் இங்கே வந்தோம்” என்றான்.

“யார் நந்திவர்மனையா?”

“ஆம் சுவாமி”

“அவனை இங்கே ஏன் தேடுகிறீர்கள்?”

“அவன் தங்கள் சிஷ்யன். ஆகவே குருவைத் தேடி இங்கே வந்திருக்கலாம்”

“அவன் எப்போது இந்த நகருக்கு வந்தான்?”

“நேற்று”

“நீங்கள் பார்த்தீர்களா?”

“இல்லை ஊகம்தான்”.

“கண்ணால் பார்க்காதவனை ஊகத்தில் தேடும் அழகா இது? நானாக இருந்தால் என்ன செய்வேன் தெரியுமா? அவனைப் பொருட்படுத்துவதாகக் காட்டிக் கொள்ள மாட்டேன். சுதந்திரமாக விடுவேன். காவல் ஏற்பாடுகளை ரகசியமாக வைத்திருப்பேனே தவிர பகிரங்கமாக அறிவிப்பு செய்து கெடுபிடியை உண்டாக்க மாட்டேன். ரகசிய கண்காணிப்பை மட்டும் முடுக்கி விடுவேன். அவனது இயல்புகளை அறிந்து இயற்கை வலைவிரிப்பேன். அவன் சிக்காமல் போகமாட்டான்”

“சுவாமி, இது என் திட்டமில்லை. சாளுக்கியர் பூபதி - சேனாதிபதி ராவணனின் திட்டம்”

“போகட்டும் விடு” என்று சொன்ன துறவி தனது சிஷ்யர்கள் பக்கம் திரும்பினார்.

“நீங்கள் அனைவரும் என் சிஷ்யர்கள் என்பது திருமால் அடியார்கள் என்பதும் உண்மையானால் உண்மையைச் சொல்லுங்கள். உங்களில் நந்திவர்மன் யாராவது இருக்கிறீர்களா?” - என்று கேட்டார்.

"இதோ இருக்கிறேன் சுவாமி" - என்று எழுந்து நின்றான் நந்திவர்மன்.

"அழைத்துச் செல் வீரனே" - என்றார் துறவி.

விஜயஸ்கந்தவர்மன் இதற்கு உடன்படவில்லை. "சுவாமி, இன்று தான் உங்களது சிஷ்யர்களின் அருமையை உணர்ந்தேன். எங்கே உங்களுக்கு நாங்கள் மீண்டும் மீண்டும் தொல்லை தருவோமோ என்ற கவலையில் இப்படி தன்னை நந்திவர்மனாகக் கூறிக் கொண்டு முன் வந்திருக்கிறார் சிஷ்யர். தன் நிலை பற்றிக் கவலைப்படாமல் முன்வந்திருக்கும் இவர் ஒரு தியாகி. தங்களையும் தங்கள் சிஷ்யகோடிகளையும் எண்ணிப் பெருமைப் படுகிறேன். சிரமத்திற்கு மன்னிக்க வேண்டும். வருகிறேன்" என்று கூறி புறப்பட எத்தனித்த விஜயஸ்கந்தவர்மன் ராவணனின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான். அதைக் கண்ட துறவி, "இவன் சாகவில்லை. ஆனாலும் கண்விழிக்க இரண்டு நாழிகை ஆகும். எந்தச் சிகிச்சையும் தேவையில்லை. எடுத்துச் செல்லுங்கள்" என்றார்.

வீரர்கள் ராவணனின் உடலைச் சுமந்தபடி வெளியேறினார்கள்.

நந்திவர்மனைத் தவிர இதர சிஷ்யர்களை ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார் துறவி.

அவரை வணங்கி எழுந்த நந்திவர்மன் சொன்னான்.

"தங்கள் திறமை இணையற்றது சுவாமி"

"இல்லை நந்திவர்மா. நான் இங்கே எந்தத் திறமையையும் காட்டவில்லை. என் மனமறிந்து நடந்து கொண்டாய் நீ. நாராயணனின் நாமங்களைப் பாடலாம் வா என்றேன். அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டு நீ பக்தனின் கோலத்தில் வந்து கடைசியில் சகஜமாய் அமர்ந்தாய். தற்போது உங்கள்

அனைவரையும் பார்த்து நந்திவர்மன் யாராவது இருந்தால் எழுந்து கொள்ளும் படிச் சொன்னேன். அதன் உள்ளர்த்தத்தை உணர்ந்து கொண்டு எழுந்து நின்றாய். நந்திவர்மா, பேயாழ்வார் மாளிகையில் உன்னை எதிர்பார்த்தவர்கள் இங்கேயும் நிச்சயம் எதிர்பார்ப்பார்கள் என்று எண்ணித்தான் உன்னை வேடம் போட்டுக் கொள் என்பதை மறைமுகமாகச் சொன்னேன். புரிந்து கொண்டு செய்தாய். அதே போல் இந்தத் தளபதியிடம் வீண் பேச்சுக்களைத் தவிர்த்து வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல் பேசி அஞ்சாத நிலையையும் வெளிப்படையான நிலையையும் சிருஷ்டித்து விட்டு உங்களைப் பார்த்து நந்திவர்மன் இருக்கிறானா என்று கேட்டேன். நீ மட்டும் எழுந்திராவிட்டால் அவன் அவ்வளவாக என்னை நம்பியிருக்கமாட்டான். நீ உடனடியாக எழுந்து கொண்டு விட்டதால் அவனது மனப்பக்குவமே மாறிவிட்டது. உண்மையை நம்பாமல் போய் விட்டான். உண்மை என்றைக்கும் காப்பாற்றும் என்பதைப் புரிந்து கொண்டாயா?"

தலையாட்டினான் மன்னன்.

"உலகியல் இவ்வளவு தான் நந்திவர்மா. நீ பொய் சொல்லவில்லை. 'நான் தான் நந்திவர்மன்' என்று உண்மையைச் சொன்னாய். ஆனால் அவன் அதை நம்பத்தயாராக இல்லை. அதற்குக் காரணம் இங்கே சிருஷ்டிக்கப்பட்ட சூழ்நிலை தான். ஆரம்பத்திலேயே நீ உண்மையைச் சொல்லியிருந்தால் அதை நம்பி உன்னைக் கைது செய்து கொண்டிருப்பார்கள். மொத்தத்தில் மனிதர்கள் பொய்யைத் தேடிச் செல்கிறார்கள். உண்மை தானே வந்தாலும் நம்ப மறுக்கிறார்கள்"

"உண்மை சுவாமி"

"குருவிடம் சரணாகதி அடைந்து அவர் மனமறிந்து அவரது கட்டளைகளைக் கேள்வியின்றி ஏற்கும் சிஷ்யனுக்கு தோல்வியில்லை" என்று சொன்ன துறவி ஒரு பொருளைக்

காட்டி "இது வேண்டுமா உனக்கு? உனக்கு இது உதவும்" என்றார்.

"சுவாமி, இந்த மோதிரம் ..."

"ராவணனுடையது. முத்திரை மோதிரமாக இருக்க வேண்டும். அத்து மீறி என் கையைப் பிடித்தான். அதற்குத் தண்டனையாக இதைக் கழற்றிவிட்டேன். இதை நீ காட்டி திருவல்லிக்கேணியை விட்டு தப்பலாம்"

"சதியை சதியால் முறியடிக்கலாம் தான். கிருஷ்ணபகவானே கைக்கொண்டது தான். இருப்பினும் இதன் மூலம் தப்புவது கோழைத்தனமாகப் படுகிறது சுவாமி. இது தங்களிடமே இருக்கட்டும். நான் வேறு திட்டம் வைத்திருக்கிறேன்"

"நல்லது நந்திவர்மா. வருகிற பௌர்ணமியன்றி என்னை வந்து சந்தி. உனக்கு குரு உபதேசமாக சில விஷயங்களைச் சொல்கிறேன்"

"சுவாமி, நான் கேட்கப் போகும் விஷயங்கள்.."

"எனக்குத்தெரியும்" - என்றார் துறவி.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஜெயந்திவர்மனும் நந்திவர்மனும் வியாபாரிகளைப் போல வேடமணிந்து நகரத்தின் கடற்கரை முகப்பில் இருந்த வணிகஸ்தலத்திற்குச் சென்றார்கள். அங்கே நந்திவர்மனை சந்திக்க வருவதாக ஜெயந்திவர்மன் கூறியிருந்த மனிதன் காத்திருந்தான். பல்லவ கடற்படையின் தளபதியும் பாரசீக நாட்டைச் சேர்ந்தவனும், துணிச்சலுக்குப் பேர்போனவனுமான டெமிட்ரியஸைக் கண்ட நந்திவர்மன் வியப்படைய வில்லை. "நீ ஒருவன் தான் பாக்கியிருந்தது. வந்து விட்டாய்" என்றான்.

“தங்கள் கட்டளைகள் தேவையாயிருக்கிறது மன்னவா. தாமதிப்பதற்கில்லை” என்றான் டெமிட்ரியஸ்.

“என்ன விஷயம்?”

“பிரபு, காஞ்சியைப் பிடித்து விட்ட சாளுக்கியர்கள் தங்கள் ஆதிக்கத்தை ஒவ்வொரு பகுதிக்குமாய் விஸ்தரித்து வருகிறார்கள். இரண்டு நாட்களாய் திருவல்லிக் கேணியில் அவர்களது கெடுபிடிகள் அதிகமாய் இருக்கிறது. இந்நகரைத் தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டு வந்து விட்டார்கள். அதுபோல் அவர்களது கட்டுப்பாட்டிற்கு நமது கடற்கரைப் பட்டிணமான கடல்மல்லையைக் கொண்டுவர தாமதிக்கமாட்டார்கள். அங்கே தான் நமது கடற்படை தற்போதிருக்கிறது”

“எத்தனை மரக்கலங்கள் தற்போது அங்கே இருக்கின்றன டெமிட்ரியஸ்?”

“ஐம்பத்திரண்டு மரக்கலங்கள் மன்னவா”

“உபதளபதிகள்?”

“நூறு பேர் இருக்கலாம்”

“வீரர்கள்?”

“ஒவ்வொரு கலத்திலும் ஐந்நூறு பேர் இருக்கிறார்கள். அவர்களைத் தவிர மாலுமிகள் வேறு”

“சாளுக்கியர்களின் ஆதிக்கம் கடல்மல்லைக்கு வந்தால் கடற்படை அவர்கள் வசமாகும். அதன் விளைவு மோசமானது அல்லவா?”

“மன்னவா, சாளுக்கியர்களுக்கு எந்த காலத்திலும் கடற்படை இருந்ததில்லை. எனவே அவர்களுக்கு அதில்

பரிச்சயம் இல்லை. கடல்மல்லையில் அவர்கள் ஆதிக்கத்திற்கு வந்ததும் தங்களுக்குப் பரிச்சயம் இல்லாத கடற்படையை அழிக்கவே முயலுவார்கள்"

"ஏன்?"

"அவர்களிடம் கடற்படை வீரர்களும் இல்லை. கடற்போர் பயிற்சியும் இல்லை. அதனால் கடல்மல்லை கடற்படையை நிர்வாகிக்க வேண்டுமென்றால் நமது வீரர்களைத்தான் சார்ந்திருக்க வேண்டும். கடற்படையிடம் உள்ள நமது வீரர்கள் அத்தனை பேரையும் நம்பி அதை அவர்கள் ஆதிக்கத்தில் வைத்திருக்க முடியாது. அப்படியொரு ஆபத்தான நிலையை மேற்கொள்வதை விட கடற்படையை அழித்து விடுவார்கள். அப்படையால் அவர்களுக்கு லாபமெதுவுமில்லை"

"அழிப்பதென்றால் எப்படி?"

"போரிட்டு அழிக்க முடியாது." என்னையும் உபதளபதிகளையும் வீரர்களையும் கைது செய்து சிறையில் வைத்து அழிக்கப் பார்ப்பார்கள். நாங்கள் கைதாக மறுத்ததால் கடல்மல்லை மக்களைத் துன்புறுத்தி எங்களை இழுக்கப் பார்ப்பார்கள். அதோடு கலைப் பொக்கிஷம் நிறைந்த கடல்மல்லையைச் சுடுகாடாக்கவும் துணிவார்கள்"

"டெமிட்ரியஸ், இப்போது புரிகிறதா உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று?"

"தாங்கள் சொல்வது?"

"கடல்மல்லையால் மக்களுக்குத் துன்பம் வரக்கூடாது. அங்கே உள்ள கலைச் சிற்பங்களுக்கு பங்கம் வரக்கூடாது. உங்களில் ஒரு வீரனும் உயிரிழக்கக்கூடாது. கடற்படை அழியக்கூடாது. இதற்கெல்லாம் ஒரே வழி நீ துரோகியாகி விடுவதுதான். புரிகிறதா நான் சொல்வது?"

"புரிகிறது பிரபு, நாடகத்தை நாளையே துவக்கி விடுகிறேன். நான் கட்சி மாறியதை சாளுக்கியர்கள் நம்ப பல்லவ விசுவாசிகள் என்று சொல்லி சில உபதளபதிகளை சிறை செய்து விடுகிறேன். மரக்கலங்கள் அனைத்திலும் வராகக் கொடியை பறக்கவிட்டு விடுகிறேன். சாளுக்கிய பிரதிநிதி யார் வருகிறார்களோ அவரை அங்கே அசத்துவது போல் வரவேற்பு விழா என்று அமர்க்களப்படுத்துகிறேன். முடிந்தவரை அந்தப் பிரதிநிதியை என் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்கிறேன்"

"மிக்க மகிழ்ச்சி தளபதி. நிலைமையை மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டாய்" என்று சிலாகித்த மன்னன் "டெமிட்ரியஸ், நான் பாரசீகத்துடன் வைத்திருந்த தொடர்பு வீண்போகவில்லை. * அதனால் நீ எனக்குக் கிடைத்தாய். இக்கெட்டான இந்நேரத்தில் தலைசிறந்த தளபதியாக நடந்து கொள்கிறாய். காஞ்சியின் நிலைமை சரியாகட்டும். பாரசீகம் வந்து மன்னரை சந்திக்கலாம் என்றிருக்கிறேன். உன்போன்ற வீரர்கள் பல்லவ சாம்ராஜ்யத்தில் எப்படியெல்லாம் திறமையோடு கடமையாற்றுகிறார்கள் என்பதை உங்கள் மன்னருக்குச்

---

* பாரசீகத்துடன் நந்திவர்மனுக்கு தொடர்பு இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள்கருதுகிறார்கள்.

Depending on sculpture representing the offer of the crown to Hiranyavarman shaped like the elephant scalp recalling that of the bactirian ruler Demitrious represented in his coins, he concluded that there was some link between the pallava rules of kanchi and the bactirian kings.

Page 40 - " Social life & Administration under pallavas" - by Dr. C. Meenakshi.

சொல்ல வேண்டும். சரி, நீ போய்வா. எப்போதும் வெற்றி உன் பக்கம் இருக்கட்டும்''

இதையடுத்து டெமிட்ரியஸ் கடல்மலைக்குப் புறப்பட்டான்.

அப்போது இரவு நேரம் நன்றாக முற்றியிருந்தது. வீதிகளில் நடமாட்டம் முன்புபோல் இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது. அதற்குக் காரணம் சாளுக்கியர்களின் கெடுபிடிகளும் ஒன்று என்பதை உணர்ந்து கொண்ட நந்திவர்மன் திருவல்லிக்கேணியை விட்டுத் தப்புவது பற்றி சிந்தித்துக் கொண்டே நடந்து சென்றான் ஜெயந்திவர்மனுடன்.

அப்படி நடந்தபடி பார்த்தசாரதி பெருமாள் ஆலயத்திற்கு வந்தபோது ஆலயத் திருவிழாக்களைப் பற்றிய அறிவிப்புப் பலகை அவனது கண்களில் பட்டது. அது அறிவிப்பு மட்டுமல்ல. விடிவிற்கான அறிவிப்பும் தான் என்பதை உணர்ந்த நந்திவர்மன் தப்பும் திட்டம் பற்றி ஜெயந்திவர்மனிடம் கூறவும் முற்பட்டான்.

⌘⌘⌘⌘⌘



28. அபகீர்த்திவர்மன்

கல்லுயர்ந்த நெடுமதில் சூழ் கச்சியான காஞ்சி மாநகர் சாளுக்கியரின் ஆதிக்கத்திற்கு வந்து மாதங்கள் இரண்டைக் கடந்த நிலையில் நிரம்ப மாறுதல்களைக் கண்டிருந்தது. விக்கிரமாதித்தன் காஞ்சியில் இருந்தவரை தான் சொன்னமாதிரியே நடந்து கொண்டானாதலால் ஆரம்பத்தில் மக்கள் அவனை வாழ்த்தவே செய்தனர். நந்திவர்மனைத் தூற்றுவதற்கு மக்கள் முற்படவில்லையென்றாலும் அவன் இல்லாத போது வந்து கோட்டையைக் கைப்பற்றிய சாளுக்கிய மன்னன் தங்களுக்குக் கஷ்டங்கள் எதையும் தராதது மட்டுமின்றி பல்வேறு வழிகளில் உதவவும் செய்தானாதலால் மக்கள் உற்சாகமே அடைந்தார்கள். நந்திவர்மனையும் இவன் மிஞ்சிவிடுவான் என்று சிலர் வெளிப்படையாகவே பேசிக் கொண்டார்கள். அவனது பெருந்தன்மை மக்களின் மனத்தைத் தொடக்கூடியதாக அமைந்தது. அவனுக்கு எல்லா வழிகளிலும் உதவுவதற்கு மக்கள் முன்வந்தார்கள்.

ஆனால் நல்ல வேளையாக அந்த நிலை தொடராமல் பார்த்துக் கொண்டான் கீர்த்திவர்மன். பஞ்ச பூதங்களான சமணத்துறவிகளின் கருத்துக்களில் உடன்பட்டுவிட்ட தன்மகனை அறிவுரைகளால் திருத்தவோ மாற்றவோ விக்கிரமாதித்தன் முயலவில்லை. சமணர்களின் மனநிலை அவனுக்குத் தெளிவாகப் புரிந்திருந்ததால் கீர்த்திவர்மனின் மூளை வெகுவாகச் சலவை செய்யப்பட்டிருக்கும் என்றும் அதை அறிவுரைகளால் மாற்ற முடியாதென்றும் தீர்மானித்த அவன் கீர்த்திவர்மனும் சரி சமணத்துறவிகளும் சரி அனுபவப்பட்டால்தான் சரியாக உணர்ந்து கொள்வார்கள்

என்று கருதி அவர்களது எண்ணங்களுக்கு குறுக்கே நிற்கவில்லை.

தனக்கு உரியமரியாதை தரப்படவில்லை என்றும் அதனால் துறவியாகிவிடுவதாகவும் கூறிக் கொண்டு வந்த கீர்த்திவர்மனிடம் "அரச குமாரர்கள் இப்படிப்பட்ட சஞ்சலங்களுக்கெல்லாம் துறவிகளாகிக் கொண்டு போனால் நாட்டை ஆள்வதற்கு ஆளே இருக்க மாட்டார்கள் கீர்த்திவர்மா. காஞ்சியை ஆளும் உரிமையை உனக்கே தந்து விட்டு நான் புறப்படுகிறேன். முடிந்தால் உன் சஞ்சலங்களையும் சபலங்களையும் போக்கிக் கொள். தகுதியையும் மரியாதையையும் கிடைத்ததாகச் சந்தோஷப் படு. உண்மைகளை உபதேசங்களால் புரிந்து கொள்வதைவிட அனுபவங்களால் புரிந்து கொள்வது தான் எனக்குச் சரியானதாகத் தோன்றுகிறது. அதுதான் நிலைத்து நிற்கும்" என்று கூறி விட்டு லோகமாதேவியுடன் வாதாபிக்குப் புறப்பட்டான் விக்கிரமாதித்தன். அவனுடன் செல்ல சிறிய படைப்பிரிவு ஒன்றை மட்டுமே அனுமதித்தான் கீர்த்திவர்மன்.

எப்போது இடம் காலியாகும் என்று காத்திருந்தவனைப் போல் விக்கிரமாதித்தன் அகன்ற உடனேயே தன்னை யார் என்று காட்டிக் கொண்டான் கீர்த்திவர்மன். அதிலும் அவனது மூளையாகப் பஞ்சபூதங்கள் இருந்துவிட்டார்களாதலால் காஞ்சியின் முகமே மாறிப்போயிற்று.

விக்கிரமாதித்தன் இல்லாத காஞ்சியில் முதல் வேலையாக அவன் ஏற்பாடு செய்து வைத்திருந்த தானதர்ம காரியங்களை அடியோடு நிறுத்திய கீர்த்திவர்மன் செல்வந்தர்களும் ஆலயநிர்வாகங்களும் அரசுக்கு வருவாயை உயர்த்த நன்கொடைகளை வழங்க வேண்டும்

என்று நேர்மாறான ஆணைகளைப் பிறப்பித்ததால் அரண்மனைக் களஞ்சியம் மிகவேகமாக நிரம்பியது. இது விஷயமாக எதிர்ப்பு தெரிவித்தவர்கள் விசாரணையின்றி உடனுக்குடன் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிரச் சேதம் செய்யப்படும் என்று அச்சுறுத்தப்பட்டார்கள். எனவே மானமே பெரிதென கருதிப்பலரும் அவனது ஆணைக்கு கட்டுப்பட்டார்கள். ஆலயவருமானங்கள் எல்லாம் அரசுக்கும் அரசனுக்கும் சொந்தம் என்ற அவனது இரண்டாவது ஆணை ஆலய நிர்வாகிகளை அசர வைத்தன. ஆணைக்கு உடன்படாது போனால் ஆலயங்கள் மூடப்படும் என்ற அடாவடித்தனமான எச்சரிக்கை உச்சரிக்கப்பட்டதால் எந்த நிலைமையிலும் ஆலயங்கள் மூடுவதையோ ஆறுகால பூசைகள் நிறுத்தப்படுவதையோ விரும்பாத மக்கள் முன்னிலும் அதிகமாக ஆலயங்களுக்குச் செல்லலானார்கள். முன்பை விட அதிகமாக காணிக்கைகளைச் செலுத்தினார்கள். ஆண்டவன் பெயரில் காணிக்கை அளித்து விட்டபின் அது தவறாகப் பயன்படுத்தப்படுமானால் அதற்குக் காரணமானவர்களை அந்த ஆண்டவனே பார்த்துக் கொள்வான் என்று திருப்தி பட்டுக் கொண்டார்கள் மக்கள்.

கீர்த்திவர்மனோ அவர்களது திருப்தியை நீடிக்க விடவில்லை. ஏற்கனவே நடைமுறையில் இருந்த வரிகளை விக்கிரமாதித்தன் நீக்கியிருந்தான். அந்த வரிகளை மீண்டும் கொண்டு வந்தது மட்டுமின்றி புத்தம் புதிய வரிகளையும் அதுவரை மக்கள் கேட்டிராத விந்தை வரிகளையும் விதித்து மக்களைச் சுரண்டினான் கீர்த்திவர்மன். வீதிகளில் நடந்தால் கூட வரி விதிப்பாயா என்று யாரோ ஒரு அப்பாவி கேட்கப் போய் அக்கேள்வி அவனிடம் புது சிந்தனையை உண்டாக்கியது. அதையடுத்து ராஜவீதிகளைப் பயன்படுத்துவோருக்கும் வரிவிதித்தான் நிர்தாட்சண்யமாக.

அந்த அபாண்டத்தைக் கண்டு குமுறிய மக்கள் ராஜவீதிகளையே நிராகரித்தார்களாதலால் அவை வெறிச்சோடி போயின.

கீர்த்திவர்மன் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. தொடர்ந்து மக்கள் ராஜவிதிகளை நிராகரித்தால் புதுசிந்தனைகளை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று கருதி தன் அடுத்த கட்ட நடவடிக்கையாக தனது போர் வீரர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பை மக்களிடம் விட்டான். ஒவ்வொரு வீதியும் ஒவ்வொரு நாள் படைவீரர்களின் பராமரிப்புச் செலவுகளை ஏற்க வேண்டும் என்று பயங்கர உத்தரவினைப் போட்டான். விரைவிலேயே தங்களைப் பிச்சைக்காரர்களாக்கிவிடக் கூடிய இந்த விபரீத ஆணையிடப்பட்ட நிலையில்தான் மக்கள் நந்திவர்மனைப் பற்றி எண்ணிப் பார்க்கலானார்கள். எப்படிப்பட்ட மன்னன் அவன் என்று அவனது அருமையை எண்ணிப் புழுங்கினார்கள். 'காஞ்சிக்கு எந்த மன்னனும் செய்ய முற்படாத கொடுமைகளைத் தங்கு தடையில்லாமல் செய்து வந்த இந்த சாளுக்கிய இளவரசனுக்குப் போய் கீர்த்திவர்மன் என்று பெயர் வைத்தார்களே! நல்லதையே நாடாத இவனுக்கு அபகீர்த்திவர்மன் என்றல்லவா பெயரிட்டிருக்க வேண்டும்?' என்று மனம் நொந்து சபித்தார்கள் மக்கள்.

எந்த சாபத்தைப் பற்றியும் கீர்த்திவர்மன் கவலைப்படுவதாக இல்லை. அதே சமயம் கொடுமைகளை வெளிப்படையாகக் காட்டி தன் கீர்த்தியை அபகீர்த்தியாக்கிக் கொண்ட சாளுக்கிய இளவரசனைப் போல் அல்லாமல் அவனையும் மிஞ்சும் கொடுமைகளையும் எதிர்காலத்தையே பாழாக்கும் திட்டங்களையும் மிகவும் சாதுர்யமாக அவனது பெயரில் செய்து வந்தார்கள் பஞ்ச பூதங்கள்.

விக்கிரமாதித்தன் அகன்றபின் கீர்த்திவர்மனுக்கு ஆலோசனை கூறி உதவுவதற்கென்று அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டு அதில் பஞ்சபூதங்களே அமைச்சர்களானார்கள். தீயடிகள் முதலமைச்சரானார். அவர்களுக்கு வேண்டிய சமணத்துறவிகளே அரசின் இதர முக்கியப் பதவிகளில் நியமிக்கப்பட்டார்கள். ஏற்கனவே பல பதவிகளில் இருந்த பல்லவர்கள் அகற்றப்பட்டு சிறையில் சேர்க்கப்பட்டார்கள். திருப்பருத்திக்குன்றம் மிகப்பெரிய அளவில் செல்வாக்கு பெற்றது. மக்களிடம் பலவிதங்களில் சுரண்டப்பட்ட செல்வம் இங்கு வாரி இறைக்கப்பட்டு அச்சமணக் காஞ்சியானது செல்வக் காஞ்சியானது. செல்லக் காஞ்சியுமானது. பல செல்வந்தர்கள் அக்காஞ்சிக்கும் இங்கிருந்த விஹாரத்திற்கும் நிபந்தங்களை அளிக்க நிர்பந்திக்கப்பட்டார்கள்.

காஞ்சியின் கலைப்பீடமாகவும் கலையின் உறைவிடமாகவும் அடித்தளமாகவும் இருந்த கடிகையின் தலைவர் சிறையில் தள்ளப்பட்டார். கடிகை முழுவதும் சமணர்கள் நிரம்பி வழிந்தார்கள். அக்கல்லூரியில் பல்லாண்டுகளாய் கற்பிக்கப்பட்டு வந்த உன்னதக் கலைகளும் கல்விகளும் நிறுத்தப்பட்டு சமணர் கலைகளும் கொள்கைகளும் கற்பிக்கப்பட்டன. காஞ்சியில் எங்கு பார்த்தாலும் சமணர்கள் தலையே தெரிந்தன. சமணக் சமயப் பிரச்சாரமே கேட்டன. சமணர்களுக்குக் கண்டபடி சலுகைகள் வழங்கப்பட்டதால் அவற்றை அனுபவிப்பதற்காகவே சமணர் போர்வையில் பலர் சமயக் கொள்கைகளைச் சாகடித்துக் கொண்டிருந்தார்கள்.

தும்பை வனத்து மோகினி அந்தப் புரத்திற்குக் கட்டாயமாகக்கொண்டு வரப்பட்டு கீர்த்திவர்மனின்

அந்தப்புரக் சொந்தங்களில் ஒருத்தியாக்கப்பட்டாள். கீர்த்திவர்மனுக்கு ஒவ்வொரு நாளும் பாதி நாள் அந்தப் புரத்தில் அணங்குகளிடையே கழிந்தது. மீதி நாள் அரண்மனையில் கழிந்தாலும் அறிவுக்கு வேலை வரவில்லை. அதைப் பஞ்சபூதங்கள் பார்த்துக் கொண்டார்கள்.

இப்படி தன் நிலையை ஒரளவிற்குச் சரி செய்து கொண்ட நிலையில் நந்திவர்மனின் மீது கவனத்தைச் செலுத்தினான் கீர்த்திவர்மன். ஒரு மாதத்திற்கு மேலாகியும் நந்திவர்மன் காஞ்சியை மீட்க முயலாமலிருந்ததைப் புரிந்து கொள்ள முடியவில்லை அவனால். ‘சோடை போன மன்னனாக இருந்தால் கூட பெயருக்காவது தனது தலைநகரை மீட்க முயலுவது சம்பிரதாயமாக இருக்கையில் பல்லவ மல்லன் என்று சிறப்பு பெயர் கொண்ட நந்திவர்மன் பெயருக்குக் கூட முயலவில்லையே, இவன் என்ன மன்னன்? இவனுக்குப் போய் பல்லவ மல்லன் என்று பட்டமளித்தானே அவன் எத்தகைய முட்டாள்?’ என்று தனக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

ஆனால் அமைச்சரவைத் துறவிகள் அவ்வாறு நினைக்கவில்லை. எது எப்படியானாலும் நந்திவர்மன் கீர்த்திவர்மனைப்போல் ஏமாளியுமல்ல முட்டாளுமல்ல என்று திடமாக நம்பினார்கள். புலி பாய்வதற்காக பதுங்கியிருக்கிறது என்று கருதினார்கள். அந்த நிலையை அவர்கள் விரும்பவில்லை. விக்கிரமாதித்தனுக்குக் கூட அஞ்சாத அத்துறவிகள் ஒருவனுக்கு அஞ்சினார்கள் என்றால் அது நந்திவர்மனாகவே இருந்தது. நந்திவர்மனைப் பொறுத்தவரை அவன் பதுங்கியிருந்தாலும் சரி படைதிரட்டி வந்து வெளிப்படையாக மோதினாலும் சரி இரண்டுமே ஆபத்தானது என்று கருதினார்கள். ஏனெனில் தங்கள்

தரப்பில் உண்மையான வீரமோ உருப்படியான தர்மமோ இல்லை என்பது சந்தேகமறத் தெரிந்திருந்தது அவர்களுக்கு. தங்களின் ஒரே ஆயுதமும் பலமுமாக இருப்பது இரக்கமற்ற தன்மையும் சூழ்ச்சித் திறனும் தான் என்பதால் அவற்றின் மூலம் நந்திவர்மனை வெல்லமுடியுமா என்று யோசித்தார்கள்.

இதற்கிடையில் நந்திவர்மன் நந்திபுரத்தைவிட்டு நகர்ந்துவிட்டான் என்ற செய்தி கிடைக்கவே சாளுக்கியர் தளபதி ராவணனை அழைத்தார் தீயடிகள். அவனுக்குத் துணையாக விஜயஸ்கந்தவர்மனை சேர்த்து அவனையும் ஒரு தளபதியாக நியமனம் செய்தார். அவர்களோடு கணிசமான வீரர் படைகளை அனுப்பினார். நந்திவர்மனைத் தேடும் படியும் அதற்காக எந்த முறையை வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம் என்றும் முழு அதிகாரத்தை அளித்து ஏவிவிட்டார்.

ஆனால் ராவணனும் விஜயஸ்கந்தவர்மனும் திருவல்லிக்கேணியில் மயிரிழையில் நந்திவர்மனை கோட்டைவிட்டு விட்டதையும் அந்நகரில் நடந்த பெருமாள் கோயில் திருவிழாவில் நந்திவர்மன் தப்பி விட்டதையும் அறிந்து பெருங்கோபம் கொண்ட தீயடிகள் பெருமாளையும் பெருமாள் உற்சவத்தையும் கண்டபடி சபித்ததோடு காஞ்சி மாநகரில் ஆலயத் திருவிழாக்கள் அனைத்திற்கும் தடை விதித்தார். உள்ளுக்குள் நந்திவர்மனைப் பற்றிய பயம் உறுத்தலாய் இருந்து வந்தது.

அந்த அற்பனுக்கு வாழ்வு வந்ததால் அவனுக்கு அர்த்த ராத்திரியில் குடைப் பிடித்துச் செல்லும் ஆசை உண்டாயிற்று. மனிதாபிமானமற்ற மட்டகரமான கட்டளைகள் மானாவாரியாக இட்டு மக்களை மாக்களைப் போல் நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்த

அவனுக்கு வீதி உலா செல்ல ஆசையாக இருந்தது. நாட்டைச் சுடுகாட்டாக்கி விட்டு அதில் வீடு கட்டி பிரவேசம் செய்ய விழா நடத்த ஆரம்ப நாட்களை நினைவில் கொண்டு உலா புறப்பட்டான்.

பட்டத்தரசி என்று யாரும் இல்லாததால் தனித்திருந்த அவன் ரதத்தில் ஏறி முன்னால் வர பின்னால் ஐந்து ரதங்களில் வரிவிதிப்பு அதிகாரிகள் வர அவர்களுக்கு முன்னும் பின்னும் ஏராளமான வீரர்கள் புடை சூழ உலா புறப்பட்டது. தன் தந்தையைப் போல் வாழ்த்தவோ வரவேற்கவோ பட்டரை காணோமே என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

காஞ்சியில் இருந்த சாளுக்கியர்களில் குந்தஸ்வாமின் பட்டர் மட்டுமே விக்கிரமாதித்தனின் விசுவாசியாய் இருந்தார். காஞ்சியை விட்டு புறப்பட்ட விக்கிரமாதித்தன் தன் மகனின் பாதுகாப்புக்கென்று அவரை விட்டு விட்டுப் போயிருந்தான். அவரிடம் “பட்டரே, உம்மை இங்கே விட்டு விட்டுப் போவதற்குக் காரணம் என் மகனுக்கு அறிவுரைகூறுவதற்கல்ல. அது அவனுக்குத் தற்போது தேவையில்லாத ஒன்று. அவனுடன் நீங்கள் இருங்கள். அவன் என்ன வேண்டுமானாலும் செய்து கொண்டு போகட்டும். குறுக்கிட வேண்டாம். ஆனால் யாராவது குறுக்கிட்டு தன்னைக் காப்பாற்ற மாட்டார்களா என்று எதிர்பார்க்கும் சூழ்நிலை நிச்சயமாய் அவனுக்கு வரும். அப்போது நீங்கள் அவனைக் காப்பாற்ற வேண்டும். சாளுக்கியர் வாரிசு அழியாமல் பாதுகாக்க வேண்டும்” என்று மட்டும் சொல்லியிருந்தான்.

அவரும் அவ்வாறே நடந்து கொண்டார். அவன் எது பேசினாலும் எதைச் செய்தாலும் அபிப்ராயமாகக் கூட

எதையும் சொல்லிக் கொள்ளவில்லை. அதனால் தான் கீர்த்திவர்மனுடன் அவர் இருப்பதை பஞ்சபூதங்களும் தடுக்கவில்லை. தற்போது உலா புறப்பட்ட போது உடன் வரும்படி கீர்த்திவர்மன் கேட்டுக் கொண்டதால் கூடவே வந்தார் அவர். அவரிடம் தன்னை வரவேற்க ஈ காக்கை கூட வரவேற்காதது குறித்து வினவிய போது, “மக்கள் உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள் இளவரசே” என்றார் பட்டர்.

“என் ஆணையா? என்னை யாரும் வரவேற்கக்கூடாது என்று நான் ஆணையிடவில்லையே?” -என்று வினவினான் கீர்த்திவர்மன்.

“ராஜவீதியில் யாரும் நடமாடக் கூடாது என்று தாங்கள் ஆணை போட்டிருக்கிறிர்களே, எப்படி வரமுடியும் வரவேற்க?” என்றார் பட்டர்.

“மடையர்கள், முட்டாள்கள். உலா வரும்போது கூட வெளியில் தலைகாட்டக் கூடாது என்றா அதற்கு அர்த்தம்? சரி, சரி, ராஜவீதியை விட்டுவிட்டு அந்தப் பக்கமாகச் சென்று பார்க்கலாம்” - என்று வெறுப்புடன் கூறிய கீர்த்திவர்மன் உலா ஊர்வலத்தை ராஜவீதியிலிருந்து மாற்றி ஏகம்பவாணனின் ஆலய மாட வீதிக்குத் திருப்பினான்.

இங்கேயும் அவனுக்கு மரியாதையோ வரவேற்போ கிடைக்கவில்லை.

காரியஸ்தரிடம் வீதியிலிருந்து யாரையாவது ஒருவரை அழைக்கும்படி சொன்னான் கீர்த்திவர்மன். அதையடுத்து வியாபாரி ஒருவர் வரவழைக்கப்பட்டார்.

“நீ யார்?”- என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

"பல்லவ நாட்டு பிரஜை"-என்றான் அந்த வியாபாரி.

"பல்லவ நாடா? அது எங்கே இருக்கிறது? பல்லவ நாட்டைத் தான் நாங்கள் வெற்றி கொண்டு விட்டோமே! நீ இப்போது சாளுக்கியர் பிரஜை அல்லவா?" -கேட்டான் கீர்த்திவர்மன்.

"இல்லை. நான் பல்லவநாட்டு பிரஜைதான்" - என்றான் வியாபாரி ஆணித்தரமாக.

"அதெப்படி?" -சீறினான் சாளுக்கிய இளவரசன்."ஐயா, மேகங்கள் வரும் போகும். வானம் போவதில்லை. அது போலத்தான் பல்லவநாடு. அங்கே சாளுக்கியர்கள் வரலாம். ராஷ்டிர கூடர்கள்வரலாம். சாதவாகனர்கள் வரலாம். ஏன்-குப்தர்கள் கூடவரலாம். போகலாம். அவர்களது வரவு மேகங்களைப்போல. ஆனால் இப்பல்லவ நாடு வானத்தைப் போன்றது. மேகங்களுக்கேற்ப வானம் மாறுவதில்லை. இங்குள்ள மக்கள் எப்போதும் பல்லவப் பிரஜைகள் தான்"

"நான் யார் தெரியுமா?"

"தெரியாது"

"திமிர் பிடித்தவனே, நான் தான் தற்போத காஞ்சியின் மன்னன்"

"அதற்கென்ன ஐயா?"

"திருவுடை மன்னர்கள் திருமாலின் அவதாரம் என்று சான்றோர் கூறியிருக்கிறார்கள் அல்லவா?"

"ஆம்"

"பிறகேன் என்னிடம் உனக்கு இத்தனை அலட்சியம்?"

“ஐயா, ஆன்றோர்கள் திருமாலின் அவதாரம் என்று குறிப்பிட்டது திருவுடைய மன்னர்களைத்தானேயன்றி குறைவுடைய மன்னர்களை அல்ல. குறைவுடைய மன்னர்கள் அரக்கர்களின் மறுபிறவி என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். மக்களுக்காக வாழ்பவனே திருவுடை மன்னன். மக்களால் வாழ்பவன் மனிதனாகக் கூட கருத தகுதியற்றவன்”

“டேய் முட்டாள், உன்னை இங்கேயே சிரச்சேதம் செய்து விட என்னால் உத்திரவிட முடியும்”

“ஆனால் ஒருவனை இரண்டு முறை கொல்ல முடியாது”

“என்ன உளறுகிறாய்?”

“காஞ்சியை ஆளும் தற்போதைய மன்னனின் கொடுமையால் மக்கள் ஏற்கனவே ஜீவனற்றுப் போய்விட்டார்கள். ஜீவனற்றவர்களைத் தண்டிக்க என்ன இருக்கிறது”

மிதமிஞ்சிய கோபத்தை அடைந்தான் கீர்த்திவர்மன். அதே சமயம் அங்கே எதையும் செய்ய விரும்பாமல் வியாபாரியைக் காலால் உதைத்துத் தள்ளி விட்டு காரியஸ்தரிடம், “நாளை முதல் காஞ்சியில் ஆடு மாடு உட்பட ஒருவரும் நடமாடக்கூடாது. ஆணையிட்டு விட வேண்டியது தான்” என்றான்.

குந்தஸ்வாமின் பட்டர் வாயைத் திறக்கவில்லை. அவரிடம் பிறகு கேட்டான் கீர்த்திவர்மன்.

“காரியஸ்தரே, முன்பு என் தந்தை உலா வந்தபோது பகைவர்கள் யாரும் காஞ்சியில் உலா வருவதில்லை என்று

மக்கள் சொன்னார்கள். அது பொய்யாகிவிட்டது. அவர்கள் சொன்னது உண்மையென்றால் நானும் பகைவன் அல்ல என்று தானே அர்த்தம்? நான் பகைவன் இல்லையென்றால் வானுயர வாழ்த்த வேண்டாமா? ஏன் அதைச் செய்யவில்லை? காஞ்சி மக்கள் பொய்யர்கள்."

"அவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரி பார்ப்பதில்லை. வித்தியாசம் பார்க்கிறார்கள்" -என்றார் காரியஸ்தர்.

"நீர் என்ன சொல்கிறீர்?"

"உங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை"

காரியஸ்தர் எந்த அர்த்தத்தில் சொல்கிறார் என்பது கீர்த்திவர்மனுக்கு விளங்கவில்லை. "இருக்கட்டும். இருக்கட்டும். விரைவில் தெரியவைக்கிறேன்" என்று கறுவிக் கொண்டவன் "அடுத்ததாக எங்கே போகலாம்?" -என்று கேட்டான்.

"கடிகைக்குப் போகலாமா?' -என்று கேட்டார் காரியஸ்தர்.

"அங்கே என்ன இருக்கிறது? என்னை அவமானப்படுத்திய கடிகைக் தலைவனைத் தான் சிறையில் போட்டு விட்டேனே! அங்கு வேண்டியதில்லை. அந்தப் பெருமாள் கோயிலுக்குப் போகலாம்"

"பரமேச்சுர விண்ணகரத்திற்கா?"

"ஆம்"

அதையடுத்து அரச உலா பரமேச்சுர விண்ணகரத்தை அடைந்தது.

முன்பொருமுறை பரமேச்சுர விண்ணகரத்திற்குச் சென்று தும்பை வனத்து மோகினியைப் பற்றி விசாரித்ததும் அதற்கு அங்கிருந்த அர்ச்சகர்கள் தராதரம் பார்க்காமல் பதில் அளித்ததும் அவனது நினைவிற்கு வந்தது. தற்போது ஆலயத்திற்குள் நுழைந்ததும் முதல்வேலையாக அர்ச்சகர்களின் நாக்கைத் துண்டித்துத் தூர வீச வேண்டும் என்று கருதியவனாய் தேரை விட்டு இறங்கி ஆலய வாசலில் காலெடுத்து வைத்தான் கீர்த்திவர்மன்.

அப்போது ஏதோ சொல்லிவைத்தாற்போல் அவனது காலடியில் வந்து விழுந்தது ஓர் அம்பு. அதில் ஓர் ஓலை கட்டப்பட்டிருந்தது. அதை எடுத்து அதில் எழுதப்பட்டிருந்ததைப் படித்த கீர்த்திவர்மனுக்கு எதுவும் புரியவில்லை. காரியஸ்தரிடம் காட்டி இது என்ன என்று வினவினான்.

“பயங்கரம்” - என்று ஒற்றை வார்த்தையைப் பதட்டத்துடன் உச்சரித்தார் பட்டர்.

⌘⌘⌘⌘⌘

29. முத்தரையரின் விவரணம்

பார்மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகர வாசலில் வந்து விழுந்த அம்போடு சேர்ந்திருந்த ஓலையில் இருந்த வாசகத்தைப் படித்துவிட்டு 'பயங்கரம்' என்ற சொல்லை சாளுக்கியரது காரியஸ்தரான குந்தஸ்வாமிகள் பட்டர் பதட்டமுடன் உச்சரித்ததைக் கண்ட போது வியப்பாகவும் குழப்பமாகவும் இருந்தது கீர்த்தி வர்மனுக்கு.

"என்ன பயங்கரத்தைக் கண்டு விட்டீர் இதில்?" என்று பரபரப்புடன் வினவினான் அவன்.

அவர் அதற்கு நேராக பதிலைக் கூறாமல் "அது மட்டும் நிகழுமானால் விளைவு மிகவும் மோசமானதாக இருக்கும்" - என்றார்.

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? ஓலையில் அப்படி என்ன எழுதப்பட்டிருக்கிறது?" என்று குழப்பமுடன் கேட்டான் கீர்த்திவர்மன்.

"நாளிகாசுரம் என்றெழுதி கீழே நந்திவர்மன் என்று போட்டிருக்கிறது"

"நந்திவர்மனிடமிருந்து வந்துள்ள ஓலையா இது?"

"இருக்கலாம். எப்படி வந்தது, யாரால் வந்தது என்பதெல்லாம் தெரியாது ஆனாலும் இந்த ஓலை நந்திவர்மன் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது மட்டும் உண்மை"

"அதனால் என்ன? இதில் பயங்கரம் என்ன இருக்கிறது?"

"நாளிகாசுரத்தில் இருக்கிறது"

“நாளிகாசுரமா?”

“ஆம் இளவரசே. மிகவும் மோசமான விளைவுகளுக்கு வழிகாட்டும் சொல் இது. நாளிகாசுரப் போர் உண்டாகுமானால் நமக்கு அழிவு நிச்சயம்”

“அதென்ன போர்?”

“ஐயா, இது குறித்து எனக்குத் தெளிவாக தெரியாது. எதற்கும் இது விஷயமாக இங்கே பேசவேண்டாம். வாருங்கள் அரண்மனைக்குப் போவோம். அமைச்சரவையில் வைத்து பேசவேண்டிய விஷயமிது”-

காரியஸ்தரின் பேச்சில் உண்மையாகவே கவலை தெரிந்ததைக் கண்டதும் அலட்சிய புத்தி படைத்த கீர்த்தி வர்மனுக்கும் சற்றே அச்சம் தோன்றியது. உண்மையிலேயே விபரீத விஷயம் தான் போலிருக்கிறது என்று கருதிய அவன் பதில் பேசாமல் அரண்மனைக்குத் திரும்பினான் அவருடன்.

அவர்கள் சென்றபோது அமைச்சரவை தீவிரமான ஆலோசனையில் இறங்கியிருந்தது. அந்த ஆலோசனையில் காடக முத்தரையரும் காணப்பட்டார். அங்கிருந்தோர் கீர்த்திவர்மன் வந்ததும் அவனைப் பார்த்த விதமானது அதிருப்தியைப் பிரதிபலிப்பதாய் இருந்தது. அதிலும் தீயடிகள் வெறுப்படைந்து போனவராய் காணப்பட்டார். கீர்த்திவர்மனின் வீதி உலாவில் அவருக்குச் சிறிதும் உடன்பாடில்லை. கீர்த்திவர்மனுக்குத் தன்னைப் பற்றியும் தீயடிகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்ததால் வீதி உலா என்று புறப்பட்டால் விக்கிரமாதித்தனுக்கு கிடைத்த மரியாதைக்கு நேர் எதிரான மரியாதை தான் கீர்த்திவர்மனுக்கும் கிடைக்கும் என்பது அவருக்குத் திட்டமாகத் தெரிந்திருந்தது. மக்களின் வெறுப்பை பரிபூரணமாகச் சம்பாதித்துக் கொள்ளும் அரசாட்சியை உண்டாக்கி விட்டு அந்த மக்களுக்கு முன்னால்

வீதி உலா வருவதை விட முட்டாள் தனமான காரியம் வேறு இருக்க முடியாது என்பது அவரது தீர்மானமாய் இருந்தது. ஆகவே தான் பஞ்ச பூதங்களையும் வீதி உலாவிற்கு அவன் அழைத்த போது மறுத்து விட்டார். அவனைத் தடுக்கவில்லை. தடுக்க முற்பட்டால் நிச்சயமாக செய்தே தீருவான் என்பது அவருக்குத் தெரியும்.

கொஞ்ச நாட்களாகவே அவர் மனம் நிம்மதியில் இல்லை. நந்திவர்மன் பிடிபடாமல் தப்பி விட்டதைக் கேட்டதிலிருந்து தான் அவரது மனம் நிம்மதியை இழந்திருந்தது. ஒற்றர்கள் பலரை அனுப்பி நந்திவர்மனின் நடமாட்டங்களை அறிய முயன்று ஒரு பலனும் கிட்டாது போகவே சஞ்சலப்பட்டார் அவர். பல்லவ மன்னனின் இருப்பிடம் தெரியாமல் போனதை விட அவன் என்ன மாதிரி திட்டத்தில் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள முடியாமல் இருந்தது தான் அவரைத் திண்டாட வைத்தது. எனவே தான் காடக முத்தரையரை அழைத்து நந்திவர்மனைப் பற்றி அறிந்து வரும்படி அனுப்பினார். பல நாட்கள் கழித்து காடக முத்தரையர் வந்து தற்போது கூறிய செய்திகள் அவரது கவலையை அதிகரித்தன. இந்த நிலையில் கீர்த்திவர்மன் வந்து நின்றதால் அவனை வெறுப்புடன் நோக்கினார்.

“முதலமைச்சர் கோபமாக இருக்கிறார் போலிருக்கிறது” என்றான் கீர்த்திவர்மன் சகஜமாக.

“இல்லை” - என்றார் தீயடிகள்.

“அமைச்சரவை ஏதோ தீவிர ஆலோசனையில் இறங்கியிருக்கிறது போல் தெரிகிறது” என்றான் அடுத்து.

அதற்கும் “இல்லை” - என்றார் தீயடிகள்.

“பிறகு?” - கேட்டான் கீர்த்திவர்மன்.

“ஆடு புலியாட்டம் ஆடிக் கொண்டிருக்கிறது” -

தற்போது தான் புரிந்தது கீர்த்திவர்மனுக்கு தீயடிகள் கேலி செய்கிறார் என்பது. எனவே சினம் துளிர்க்கும் குரலில் கேட்டான் “தீயடிகளே, நீங்கள் யாருடன் பேசுகிறீர்கள் என்பது நினைவிருக்கிறதா?”-

“இல்லை” - என்றார் தீயடிகள்.

“அடிகளே, விளையாடுவதற்கு இது நேரமல்ல” - கோபம் ஊடுறுவச் சொன்னான் இளவரசன்.

“என் கருத்தும் அதுதான்” - என்றார் அடிகள்.

“விளையாடும் நேரமல்ல என்றால் வாதம் செய்து கொண்டிருக்க வேண்டுமா? வாதம் செய்யும் நேரம் இது என்கிறீரா?”

“கீர்த்திவர்மா” - என்று இது வரை காட்டி வந்த மரியாதையை கைவிட்ட தீயடிகள், “உன்னிடம் விளையாடவோ, வாதம் செய்யவோ எங்களுக்கு நேரமும் இல்லை. அவசியமும் இல்லை. அதே போல் தேவையற்ற நேரத்தில் அர்த்தமற்ற வீதி உலா செல்லும் அனாவசியமும் எங்களுக்கில்லை” - என்றார்.

“மன்னர்கள் உலா வருவது மரபு” - என்றான் கீர்த்திவர்மன்.

“நாம் இங்கே ஏற்கனவே பல மரபுகளை மீறி விட்டோம்” என்று சுட்டிக் காட்டினார் அடிகள்.

“எல்லாவற்றையும் மீறிவிட வேண்டும் என்றோ, விட்டுவிட வேண்டும் என்றோ கட்டாயமில்லை”- தொடர்ந்தான் இளவல்.

“உண்மைதான். எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டியதில்லை. விரும்பியவைகளை அப்படியே வைத்துக் கொண்டிருக்கலாம்”.

“அந்த அடிப்படையில்தான் உலா மேற்கொண்டேன்”.

“எதற்கும் வேளை இருக்கிறது. அதோடு அவசியம் என்று ஒன்றிருக்கிறது. அவற்றைக் கவனிக்க வேண்டும்”-

“இப்போது வேளைக்கு என்ன?”

“மக்கள் நம்மீது வெறுப்படைந்திருக்கும் வேளை. பகைவன் நம்மீது பாயக் காத்திருக்கும் வேளை. இப்பொல்லாத வேளையில் தேவையா உலா?”

“நான் வேறு மாதிரி நினைக்கிறேன். மக்கள் வெறுப்பில் இருக்கும் போது உலா வந்தால் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடியும். நம் நிலையை மக்கள் புரிந்து கொள்ளவும் முடியும். நாம் வெறுப்படைந்தாலும் மன்னன் அதைப் பற்றிக் கவலையடையவில்லை என்ற எண்ணம் மக்களுக்கு வரும். மேலும் அஞ்சுவார்கள். நம்மை எதிர்க்கத் துணியமாட்டார்கள். அதே போல் நந்திவர்மனால் ஆபத்து உண்டாகவிருக்கும் வேளையில் நான் உலா வந்தால் அது என் நெஞ்சுரத்தை மக்களுக்கு உணர்த்தும். நமது படை வீரர்களுக்கும் தெம்பை அளிக்கும்”-

ஏதோ அசட்டுப் பிள்ளையைப் போலிருந்த கீர்த்திவர்மன் தன் கேள்விக்குச் சரியான பதிலடி கொடுத்து வாயடைக்க வைத்துவிட்டதைக் கண்டு வியந்தார் தீயடிகள். ‘என்ன இருந்தாலும் இவன் உடலில் ஓடுவது அரச ரத்தம் அல்லவா? அதன் வீரியம் எப்போதாவது வெளிப்படாமலா போகும்?’ என்று எண்ணிப் பார்த்துக் கொண்ட அவர் தன் ஆதிக்கத்தைக் காட்ட அது சமயமல்ல என்பதை உணர்ந்தவராய் “நீங்கள் நினைப்பது போல் நடந்தால் எனக்கும் சந்தோஷம் தான்.

உங்களுக்கு நான் அறிவுறுத்த முற்படுவதற்குக் காரணம் என் அறிவைக் காட்டிக் கொள்வதற்கல்ல. உங்கள் அரியணையைக் காத்துக் கொள்வதற்குத்தான். உங்கள் தந்தையை வாதாபியில் காத்தது போல் உங்களை இக்காஞ்சியில் காக்க வேண்டியது என் பிரதிக்ஞை. கடைசி மூச்சுள்ள வரை இதைச் செய்வேன்" - என்று வஞ்சகமாகப் பதுங்கிப் போலிப் பணிவைக் காட்டினார்.

அவரது வஞ்சகத்தையோ போலிப்பணிவையோ அறிந்து கொள்ள முடியாத கீர்த்திவர்மன் அவரது பேச்சுக்களால் சற்றே நெகிழ்ந்தான். வாதாபியில் விக்கிரமாதித்தனுக்காக அவர்கள் பட்ட கஷ்டங்கள் அவனது மனதை தொட்டன. உண்மையிலேயே காஞ்சி அரியணையில் தற்போது தான் அமர்ந்திருப்பதற்கும் நகர உலா வந்ததற்கும் இத்துறவிகளே காரணம் என்பது அவனுக்கு உறுத்தியதால் அவர்களிடம் கடுமையைக் காட்டுவது தவறு என்று கருதியவனாய் "நான் நகர் உலா சென்றது தவறாகவே இருக்கட்டும். நாம் பேச வேண்டிய விஷயம் வேறு இருக்கிறது" என்றான்.

"உண்மைதான் இளவரசே. அது விஷயமாகப் பேசத்தான் காடக முத்தரையாரும் வந்திருக்கிறார். வந்து அமருங்கள். விசாரிப்போம்" என்றார் தீயடிகள்.

பிறகு அனைவரும் உணவருந்தி விட்டு உட்கார்ந்தார்கள்.

"முத்தரையரே, நந்திவர்மன் தற்போது என்ன திட்டத்தில் இருக்கிறான் என்பதை அறிய உங்களை அனுப்பி வைத்தேன். நீங்கள் அறிந்து வந்ததைக் கூறுங்கள்" என்றார் தீயடிகள்.

காடக முத்தரையர் பேச முற்பட்டு, "இளவரசே, நந்திவர்மர் காஞ்சிக் கோட்டையை மீட்கத் தயாராகி விட்டார். அதற்கான ஏற்பாடுகள் மிக வேகமாக நடந்து வருகின்றன" என்று கூறியதும் "எங்கிருக்கிறான் அவன்?" என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

"கீர்த்திவர்மரே, அவன் ஓரிடமாக இல்லை. அப்படிப் பட்டவனை ஊர் ஊராகக் போய்த் தேடிக் கொண்டிருக்கவும் முடியாது. அதனால் நேரம் வீணாவதை விட வேறொன்றும் ஆகப் போவதில்லை. அவன் வெளியே வரும்போது வரட்டும். நமக்குத் தெரியவேண்டியதெல்லாம் அவனது நடவடிக்கைகளும் அதனால் நமக்கு நேரக் கூடிய பாதிப்புகளும் தான்" என்று தெரிவித்த முத்தரையர், "நந்திவர்மன் நந்திபுரப் போரை முடித்துக் கொண்டு விட்டான். அவனது படைத் தலைவனான உதயசந்திரனும் மன்னனோடு வந்து சேர்ந்து விட்டான். ஆனால் படைகள் அவர்களோடு இல்லை. பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ரகசியமாக காஞ்சியைப் பல இடங்களில் பல விதங்களில் நெருங்குகிறது" என்றதும் குறுக்கிட்ட கீர்த்திவர்மன் "பல விதங்களிலா?" என்று கேட்டான்.

"ஆம். வீரர்கள் படைவீரர்களாய் மட்டும் முன்னேறி வரவில்லை. வணிகர்களாகவும் கலைஞர்களாகவும் விவசாயிகளாகயும் சாளுக்கியர்களாகவும் வருகிறார்கள்."

"சாளுக்கியர்களாகவா?" -

ஆம். சாளுக்கியர்கள் பல்லவ மண்டலத்தில் பல இடங்களில் பரவி இருப்பதால் அவர்கள் வேடத்தில் உலவுவது பல்லவர் படைகளுக்கு வசதியாக இருக்கிறது."

"அப்படியானால், நீங்கள் கூறும் வணிகர்கள், கலைஞர்கள், விவசாயிகள் ஆகியோரையெல்லாம் கைது செய்து விட்டால் போதுமல்லவா?"

"கீர்த்திவர்மரே, பல்லவ நாட்டு மக்கள் தொகையில் நூற்றுக்கு எழுபது பேர் இப்பிரிவுளைச் சேர்ந்தவர்கள் தான். அவர்கள் அனைவரையும் கைது செய்து அவர்களில்

பல்லவ வீரர்களை இனம் கண்டுபிடிப்பது கனவில் மட்டுமே நடக்கக்கூடிய காரியம். அப்படியே நடந்தாலும் அவர்களைச் சிறையில் வைக்க நமக்குப் போதியச் சிறைச்சாலைகள் இல்லை.”

“கோட்டை வாசலை மூடி யாரும் உட்புகாதவாறு செய்யலாமே? தப்பித் தவறி நுழைபவர்களைக் கண்காணிக்கலாமே?”

“பல்லவ வீரர்கள் போரிட்டு வென்று தான் கோட்டைக்குள் நுழையப் போகிறார்களே தவிர ஒற்றர்களைப் போல் உள்ளே நுழைந்து புரட்சி செய்யப் போவதில்லை. அந்த முறை சிரமமானது. ஏன் அர்த்தமற்றதும் கூட, அதோடு நந்திவர்மன் அந்த முறையை விரும்பமாட்டான்.”

“ஏன்?”-

“அவன் ஈடுபடும் முயற்சியானது தாழ்ந்துவிட்ட கௌரவத்தை மீண்டும் தூக்கி நிலைநிறுத்தத்தான். அதற்கு வெளிப்படையான போர் தான் பொறுத்தமானது. அதைத் தான் அவன் செய்யப் போகிறான்.”-

“போர் நிச்சயம் என்கிறீர்கள்”-

“ஆம்”

“ஆப்படியானால் நாம் செய்யவேண்டியது?”-

“போர்தான். போரில் தான் நம் திறமையைக் காட்ட வேண்டும். வேறு வழிகளுக்கு அவகாசமில்லை. ஆனால் ஒன்று”

“என்ன?”-

"நந்திவர்மன் தற்போது ஈடுபடக் கூடிய போர் மிகவும் கடுமையானதாக இருக்கும். இப்போரில் ஏதோ புதுமுறைகளைக் கையாளப் போவதாக அறிகிறேன்"-

இந்த சமயத்தில் குறுக்கிட்ட சாளுக்கிய காரியஸ்தர் "உண்மை" என்றார்.

அவரை அனைவரும் நோக்கினார்கள்.

"என்ன உண்மை?" -என்று வினவினார் தீயடிகள்.

"முத்தரையர் சொன்னது முற்றிலும் உண்மை என்பதற்கு அத்தாட்சி கிடைத்திருக்கிறது. இதோ பாருங்கள்" என்று பரமேச்சுர விண்ணகர வாயிலில் கிடைத்த ஓலையைக் காட்டினார் பட்டர்.

அதை வாங்கிப் படித்ததும் முத்தரையரின் முகம் அச்சத்தைக் காட்டியது. "இது மட்டும் உண்மையானால் விளைவு பயங்கரமாய் இருக்கும். அதோடு நமக்குத் தோல்வி நிச்சயம்" -என்றார்.

"காரியஸ்தரும் இப்படித்தான் சொன்னார்" -என்றான் கீர்த்திவர்மன்.

ஓலையை வாங்கிப் பார்த்தார்கள் துறவிகள். நந்திவர்மனின் பெயர் மட்டும் தான் அவர்களுக்குப் புரிந்ததேயன்றி நாளிகாசுரம் என்பதற்கான அர்த்தம் புரியவில்லை. அர்த்தத்தை காடக முத்தரையர் புரிய வைத்தபோது உண்மையிலேயே அவர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். காஞ்சிக்கு உண்டாகவிருந்த பேராபத்தினை தடுப்பது எப்படி என்று திகைப்பு உண்டாயிற்று அவர்களிடம்.

"இதை அழிக்க என்ன வழி?" -என்று கேட்டார் தீயடிகள்.

"ஐயா, அதை அழிப்பது எப்படி என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால் நாம் வெற்றி பெறவேண்டுமானால் அவனது உதவியை நாடுவதை விட வேறு வழியில்லை."-

"யாரவன்?"-என்று கேட்டார் தீயடிகள்.

"காஞ்சிபுரன்"-என்று அழுத்தம் திருத்தமாக உச்சரித்தார் காடக முத்தரையர்.

⌘⌘⌘⌘⌘

30. நாளிகாசுரம்

நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் திருமால் பலபடி காட்சியளித்து அருள் பாலிக்கும் காஞ்சிக்கு பேராபத்து ஆழ்ந்து விட்டதாக ஓலையை படித்துவிட்டு காடக முத்தரையர் கூறியதும் அவர் எதைச் சொல்கிறார் என்பது புரியாததால் 'நாளிகாசுரம் என்ற வார்த்தையில் அப்படி என்ன பயங்கரமும் பேராபத்தும் உள்ளன? என்று வினவினார் தீயடிகள்.

"அடிகளே, நீங்கள் இதிகாசங்களையும் புராணங்களையும் படித்திருக்கிறீர்களா?" -என்று கேட்டார் முத்தரையர்.

"அதென்ன சம்மந்தமில்லாத கேள்வி" என்று உள்ளுக்குள் எரிச்சலடைந்த தீயடிகள், "துறவிகளுக்குத் தெரியாத இதிகாசங்களும் புராணங்களும் ஏது?" என்று கேட்டார்.

"அப்படியானால் அவற்றில் சொல்லப்பட்டுள்ள அசுரர்களின் போர் முறை தங்களுக்குத் தெரிந்திருக்கும்"

"அதற்கென்ன?"

"அப்படிப்பட்ட ஒரு போர்தான் அசுரப்போர்"

"ஓலையில் சொல்லியிருப்பது அதைத்தான் என்கிறீரா?"

"ஆம். ஆனால் இது வெறும் ஆசுரப் போரல்ல. நாளிகக் கருவிகளைப் பெருமளவில் கொண்டு செய்யப் போகும் நாளிகாசுரப்போர்."

"நாளிகக் கருவிகள் எப்படிப் பட்டவை?"

“மிகவும் பயங்கரமான ஆயுதங்கள் அடிகளே. அவற்றில் சிறு நாளிகம் பெரு நாளிகம் என்று இருவகை உண்டு. சிறு நாளிகக் கருவிகளைக் கையிலேந்தி வரலாம். இவற்றின் மூலம் நெருப்புக் கோலங்களை கணிசமான தூரம் வரை வீசலாம். பெரு நாளிகம் என்பது சக்கர வண்டிகளில் பொருத்தி நகர்த்தி வருவார்கள். அவற்றில் பெரிய பெரிய கனமான இரும்பு உருண்டைகளைப் போட்டு வெடிமருந்தைத் திணித்துப் பற்ற வைத்தால், அந்த உருண்டைகள் மிக வேகமாக வந்து விழுந்து வெடிக்கும். விளைவு பயங்கரம்”*

முத்தரையர் கூறியது சரிவர விளங்காததால் அவரைக் குழப்பத்துடன் நோக்கினார்கள் துறவிகள். அதைக் கண்ட அவர் கைகளைத் தட்டி வேலையாள் ஒருவனை அழைத்து கரித்துண்டு சிலவற்றைக் கொண்டு வரச்செய்து தரையில் இரு சித்திரங்களை வரைந்து விளக்கினார்.

“இதோ பாருங்கள். இதுதான் சிறு நாளிகம். இந்த இரும்பு உருளை மெல்லியது. நீளம் குறைந்தது. ஐந்து சாணிலிருந்து பத்து சாண் வரை நீளமுடையது. இதில் நெருப்புப் பொடியைத் திணித்து பற்ற வைத்தால் தீக்கோலங்கள் புறப்பட்டு எதிரே போய் விழுந்து தீயை உண்டாக்கும். சில நேரங்களில் வெடிக்கும். அவைகளை காலாட் படைகளும் புரவிப் படைகளும் சுமந்து செல்லலாம்”

---

* நாளிகக் கருவிகள் என்பவை தற்காலிகப் பீரங்கிகளைப் போன்றவை. இக்கருவிகள் பண்டைக்காலங்களிலேயே இருந்தன. இவற்றை உடைய படை நாளிகப் படை என்று அழைக்கப்பட்டு வந்தன. இவை பற்றிய விவரங்களை சுக்கிர நிதி என்னும் நூலில் காணலாம்.

"ம்"

"பெருநாளிகங்கள் நீண்டவை. அவை பத்தடி நீளம் வரை கூட இருக்கும். அவைகள் இதோ இந்த சக்கர வண்டியில் சக்கரங்களுக்கு மேலே அமைக்கப்பட்ட மேடையில் பொருத்தி விடுவார்கள். இந்த நீண்ட இரும்பு உருளையை மேலும் கீழுமாக நகர்த்த முடியும். இவற்றிலும் வெடிமருந்துகளைப் போட்டு திணித்து விட்டு அவற்றுக் கிடையே பெரிய பெரிய இரும்பு குண்டுகளை அழுத்தி விடுவார்கள். எந்த இலக்கைத் தாக்க வேண்டுமோ அதற்கு முன்னால் சக்கர வண்டியை நிறுத்தி உருளையின் கீழ்ப்புறம் வெடிமருந்தை பற்ற வைத்தால். அதன் விளைவு பயங்கரமாக இருக்கும்"-

"முத்தரையரே, இக்கருவிகளை நந்திவர்மன் காஞ்சிக் கோட்டையைப் பிடிக்க பயன்படுத்துவதாகவே வைத்துக் கொள்வோம். அப்படிச் செய்தால் காஞ்சிக் கோட்டைக்கு பலமான சேதங்கள் உண்டாகுமல்லவா?" என்று குறுக்கிட்டு கேட்டார் காற்றடிகள்.

"எதிரிக் கோட்டையாக இருந்தால் சேதங்களை விளைவிக்க நந்திவர்மன் தயங்கப் போவதில்லை. கோட்டையைக் கண்டபடி நாளிகங்களால் தாக்கி அழிக்கலாம். ஆனால் இது சொந்தக் கோட்டை. இதை அவ்வாறு அழிப்பது நஷ்டத்தையே தரும். ஆகவே இக்கோட்டையை மீட்கும் முயற்சியில் நந்திவர்மன் நாளிகங்களைக் கொண்டு கோட்டைக் கதவுகளை உடைக்கவே முயலுவான். அந்த முயற்சி நிச்சயம் வெற்றி பெறும்"

"அதெப்படிச் சொல்கிறீர்கள்? மதில் மேல் இருக்கும் நமது வீரர்கள் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பார்களா? அம்பெய்தபடி இருந்தால் போதுமே? அன்பு மழையை மீறி அவர்கள் எப்படி முன்னேறித் தாக்க முடியும்?" என்று வினவினார் நிலவடிகள்.

“முடியும். ஏனென்றால் நமது அம்புகள் போய் விழும் தூரத்திற்கு அப்பால் இருந்து கொண்டே நாளிகங்களை இயக்க அவர்களால் முடியும். எப்படிச் செல்வார்கள் என்பதைச் சொல்கிறேன் கேளுங்கள். முதலில் காலாட்படையினரும் புரவிப் படையினரும் பிரதான வாயிலுக்கு முன்பு அம்புகளால் தாக்கப்பட முடியாத தூரத்தில் இருந்தபடி சிறு நாளிகங்களைப் பற்ற வைப்பார்கள். கோட்டை மதில் நுனிகளை இலக்காக வைத்து. அப்படி சிறு நாளிகங்களிலிருந்து வந்து விழும் நெருப்புக் கோளங்கள் மதில் மேலும் தளங்களிலும் விழுந்து எரிந்தும் வெடித்துச் சிதறவும் செய்தால் மதில் மேல் ஈ காக்கை கூட நிற்க முடியாது. அதுமட்டுமல்ல. சிறு நாளிகக் கோலங்கள் மதிலுக்கு உட்புறத் தெருக்களிலும் விழுந்து வெடிக்கும். காஞ்சிக்கோட்டையின் உட்புற முகப்பு வீதிகள் பெரும்பாலும் காவலர் தெருவும் ஆனைகட்டும் தெருவும்தான். அங்கே எல்லாம் இருப்பது சாளுக்கிய வீரர்கள்தான். அங்கு வந்து நெருப்புக் கோளங்கள் விழுந்தால் வீரர்கள் இறந்து சாவார்கள். சாகக் கூடாதென்றால் வீரர்கள் அங்கே இருக்கக்கூடாது. சிறு நாளிகங்களைப் பொறுத்த வரை கோட்டைக்குச் சேதம் உண்டாகாது. அதைக் காத்து நிற்கும். வீரர்களுக்குத்தான் அழிவு உண்டாகும்.

இப்படிச் சிறுநாளிகங்களால் மதில் மீதுள்ள வீரர்களை எளிதில் அழித்தும் சிதற வைத்தும் குழப்புகிற நேரத்தில் சக்கர வண்டிகளில் வரும் பெரு நாளிகங்கள் பற்ற வைக்கப்படும். அவற்றிலிருந்து பெரு வேகத்துடன் புறப்படும் இரும்புக்குண்டுகள் கோட்டைக் கதவுகளில் வந்து விழுந்து துளை போடும். வெடித்துச் சிதற வைக்கும். கோட்டைக் கதவுகள் விழுந்து விட்டால் பின்னால் வரும் புரவிப் படைகள் உள்ளே நுழையவும் போரிடவும் வெற்றி பெறவும் கோட்டையைக் கைப்பற்றவும் சிரமம் இருக்காது”-

காடக முத்தரையரின் விளக்கங்களைக் கேட்டு அங்கிருந்தவர்கள் சற்றே ஸ்தம்பித்துப் போனார்கள். அவர் கூறியது போல் நாளிகாசுரப் போர் நடைபெற்றால் காஞ்சிக் கோட்டையை அதிக சேதமில்லாமல் நிச்சயமாக நந்திவர்மனால் கைப்பற்றி விடமுடியும் என்பதும் தெரிந்தது அவர்களுக்கு. அவர்களது அத்தீர்மானத்தை உறுதி செய்வது போல் மேலும் விளக்கமுற்பட்ட முத்தரையர், " அடிகளே, இந்த நாளிகக் கருவிகளில் பயன்படுத்தப்படும் மருந்துகளின் அளவைப் பொருத்தும், அவற்றில் சேர்க்கப்படும் கலவைகளின் அளவு மற்றும் எண்ணிக்கையைப் பொருத்தும் மாறுப்பட்ட விளைவுகளை உண்டாக்கும். தீயை உண்டாக்கி வெடிக்க வைக்கும் கருவிகளும், தீயை மட்டுமே உண்டாக்கி வெகுவேகமாக பரவ வைக்கும் கருவிகளும், தீயை உண்டாக்காமல் வெடிக்க மட்டுமே செய்யும் கருவிகளும், தீயுமின்றி வெடியுமின்றி காதைப் பிளக்கும் வெறும் சத்தத்தை மட்டும் விளைவிக்கும் கருவிகளும், இவைகள் எதுவுமின்றி கரும்புகையை மட்டும் வெளியிட்டுக் கண்களைக் குருடாக்கம் கருவிகளும், சிறுநாளிக ஆயுதங்களில் அடங்கும். தற்போது வாடைக் காலம். வடக்கிலிருந்து பெருங்காற்று இராக்காலங்களில் வீசுகிறது. எனவே வடக்குவாசலுக்கு முன்னால் நந்திவர்மன் படைகள் இரண்டு நாளிகங்களை இயக்கினால் காற்றின் போக்கில் வேகமாக வந்து விழுவதோடு தீயை வேகமாகப் பரவ வைக்கவும் முடியும். இந்த சாதகத்தை நன்றாகக் கணக்கிட்டே நந்திவர்மன் இப்போரை திட்டமிட்டிருக்க வேண்டும். அதில் வெற்றி உறுதி என்பதை நன்கு அறிந்திருந்த காரணத்தாலேயே நமக்கு ஓலை மூலம் இப்போரைப் பற்றி பகிரங்க அறிவிப்பும் செய்திருக்கிறான்'- என்றார்.

நாளிகாசுரப்போரைப் பற்றியும் அதனால் உண்டாகக் கூடிய பேராபத்துகளைப் பற்றியும் அறிந்த போது நந்திவர்மனின் மீது துறவிகளுக்குச் சற்று பொறாமையாகக் கூட

இருந்தது. ஒரு வேளை அவனைக் குறைவாக மதிப்பிட்டு காரியத்தில் இறங்கி விட்டோமா என்று கூட எண்ணத் தலைப்பட்டார்கள். அனாலும் அந்த பயங்கரப்போர் முறையைப் பற்றி தெளிவாக அறிந்த முத்தரையரைத் தன் கட்சியில் இழுத்துக் கொண்ட தன் சாமர்த்தியத்தை உள்ளுக்குள் மெச்சிக் கொண்ட தீயடிகள் அவர் மூலமாகவே அதற்குப் பரிகாரம் தேட முற்பட்டு “முத்தரையரே, நாமும் அதுபோன்ற நாளிகங்களைத் தயாரித்தால் என்ன?” என்று வினவினார்.

“அடிகளே, நாளிகங்களைத் தயாரிக்கும் கலைஞர்கள் தற்சமயம் காஞ்சியில் அதிகம் பேர் இல்லை. அப்படியே வெளியிலிருந்து தேடி பிடித்து அழைத்து வந்து தயாரிக்கச் சொல்லலாம். ஆனால் இங்கே மக்களுக்கு நாம் உண்டாக்கியிருக்கும் கெடுபிடிகளால் மக்கள் கொந்தளிப்பில் இருக்கிறார்கள். நம்மை வெறுக்கிறார்கள். ஆகவே நமக்கு ஒத்துழைப்பு தரமாட்டார்கள். அப்படியே நாம் அவர்களை மிரட்டி தயாரிக்க நிர்பந்தப் படுத்தலாம். அவ்வாறு செய்து உருவாகும் தயாரிப்புகள் மோசமானவைகளாய் இருக்கும். எதிரியின் மீது விழுவதற்கு பதில் குண்டுகள் நம்மீதே வெடித்துச் சிதறும். இரும்பு உருளைகளில் சரிவர மருந்துகள் திணிக்கப்படாமல் போனால் தீ வைக்கும் போது உருளைகள் வெடித்து பொசுங்கிப் போகும். அப்படியே மக்களாக மனமுவந்து சிறப்பான நாளிகங்களைத் தயாரிப்பதாகவே வைத்துக்கொண்டாலும் அதற்கு பல மாதங்களாகும். அப்படியொரு அவகாசத்தை நந்திவர்மன் நமக்குத் தரப் போவதில்லை. அவன் அவகாசம் தந்து நாமும் நாளிகங்களைத் தயாரிப்பதாகவே இருக்கட்டும். அதனால் பலனில்லை. கோட்டைக்கு வெளியே இருந்து போரிடுபவர்களுக்கு நாளிகப் படைகளால் அதிகமான சேதம் உண்டாகாது. நாளிகப்படை தாக்குதல் ஓயும் வரை காத்திருந்து அவர்கள் போரிட முடியும். ஆனால் அப்படைகளால் கோட்டைக்குள் தான் அதிக சேதம் உண்டாகும். தீப்பிடிக்க மாளிகைகளும் தெருக்களும்

கோட்டைக்குள் தான் உண்டு. வெளியே இல்லை. உள்ளே ஏற்படும் நெருக்கடி வெளியே ஏற்படாது. அதோடு காஞ்சியை வசப்படுத்தியபின் தாங்கள் கோட்டையைச் சுற்றியிருந்த காட்டை அழித்து விட்டால் படையெடுத்து வரும் எதிரியை அழிப்பது எளிது என்று கூறி நீங்கள் செயல்பட்டீர்கள். நீங்கள் எதை எதிரிக்குப் பலவீனமாக இருக்கும் என்று நினைத்தீர்களோ அதையே தன் பலமாக்கிக் கொண்டான் நாளிகப் படைத் திட்டத்தால்" -என்றார் முத்தரையர்.

நந்திவர்மனின் சமயோசிதமான திட்டம் எத்தனை சிறப்பானது என்பது தெளிவாகப் புரிந்தது துறவிகளுக்கு.

அந்நிலையில் குறுக்கிட்ட கீர்த்திவர்மன், "முத்தரையரே, நமக்கு நாளிகப் படை வேண்டாம். அது நந்திவர்மனிடமே இருக்கட்டும். போரிடட்டும். அவன் போரிடும் சமயத்தில் கடல் மல்லையில் நம் வசம் இருக்கும் பல்லவர் கடற்படை வீரர்களைத் திரட்டி நந்திவர்மனைப் பின்புறம் தாக்க வைத்தால் அழிந்து போவான் அல்லவா?" என்று கேட்டான்.

"உங்களுக்கு விஷயம் தெரியாதா?" என்று வினவிய முத்தரையர் தீயடிகளைப் பார்த்தார். தீயடிகள் காற்றடிகளைப் பார்த்தார். காற்றடிகள் நீரடிகளைப் பார்த்தார். நீரடிகள் நிலவடிகளைப் பார்த்தார். நிலவடிகள் ஆகாயவடிகளைப் பார்த்தபோது அவர் சொன்னார் "கடல் மல்லையில் கடற்படை இல்லை"-என்று.

"இல்லையா? ஏன்? எங்கு போயின?" -பதட்டத்துடன் கேட்டான் கீர்த்திவர்மன்.

"எங்கோ போய்விட்டன" -என்றார் காற்றடிகள்.

"எங்கோ என்றால்?"

"தெரியவில்லை என்றுதான் அர்த்தம்"-

"தீயடிகளே, இதென்ன விபரீதம்? கடல் மல்லையை நமது ஆதிக்கத்தில் கொண்டு வந்தது உண்மைதானே? அப்போது கடற்படைத் தளபதி டெமிட்ரியஸ் நம்மிடம் சரணடைந்தது உண்மைதானே? சரணடைய மறுத்த உப தளபதிகள் பலர் கைது செய்யப்பட்டது உண்மைதானே? மரக் கலங்களில் நமது கொடிகள் பறக்கவிடப்பட்டது உண்மைதானே?" விடுவிடுவென கேள்விகளை அடுக்கினான் கீர்த்திவர்மன்.

"இளவரசே, கடல் மல்லையில் இருந்த கடற்படை காணாமல் போனதும் உண்மை. சிறையிலிருந்த உப தளபதிகள் தப்பியதும் உண்மை. டெமிட்ரியஸ் நம்மை ஏமாற்றி விட்டதும் உண்மை" என்றார் தீயடிகள்.

"இது எப்படி நடந்தது?" -கேட்டான் கீர்த்திவர்மன்.

"எல்லாம் அந்த நந்திவர்மனின் கைங்கர்யம்தான். அவனது திட்டப்படியே அனைத்தும் நடந்திருக்கின்றன."

"அனைத்தும் என்றால்?"-

"கடல் மல்லையை நமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்த போது டெமிட்ரியஸ் தானாக வந்து நம்மிடம் சரணடைந்து கடற்படையை ஒப்புவித்த நாடகத்தை அரங்கேற்ற கட்டளையிட்டவன் நந்திவர்மன். கடல் மல்லைப் பிரதிநிதியாக நாம் அனுப்பிய தளபதி வராகனைத் தன்னுடனேயே டெமிட்ரியஸ் வைத்திருந்து தன்னுடனேயை கடத்திச் சென்று விட ஆலோசனை தந்தவன் நந்திவர்மன் தான். உப தளபதிகள் தப்பியதற்கும் அவன்தான் யோசனை சொல்லியிருக்க வேண்டும்"-

தனது நிர்க்கதியான நிலை கீர்த்திவர்மனுக்குப் பட்டவர்த்தனமாகப் புரிந்தது. தான் ஒரு கணக்கு போட்டால் இறைவன் வேறொரு கணக்கு போடுவான் என்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லை.

இந்நிலையில் குறுக்கிட்ட தீயடிகள் "முத்தரையரே, நமது நிலை கடுமையானது தான். அதை முறியடிக்க நீர் சொல்லும் யோசனை என்ன?" என்று கேட்டார்.

"தங்களிடம் கைவசம் உள்ள யோசனைகள் என்ன?" என்று திருப்பிக் கேட்டார் முத்தரையர்.

நிர்வாகம், நிர்வாகத்தில் சூழ்ச்சி, சமயம், சமயத்தில், மித்ரபேதம், சுயநலம், கொடுமை, துரோகம் ஆகிய திரைமறைவு வேலைகளிலும் குள்ளநரித் தந்திரங்களிலும் தான் துறவிகள் கரை கண்டவர்களாக இருந்தார்களேயன்றி போர் அறிவைப் பொறுத்தவரை வெறும் சூன்யமாகவே இருந்தார்கள். ஆனாலும் முத்தரையரின் முன் அதைக் காட்டிக் கொள்ள விரும்பாத தீயடிகள், "எங்கள் திட்டம்பற்றி அமைச்சரவை தனியாக விவாதிக்கும். நான் இப்போது கேட்க விரும்புவது தங்கள் தனிப்பட்ட யோசனையை"- என்றார்.

அவரது நிலை முத்தரையருக்கப் புரியாமலில்லை. இருப்பினும் உண்மையாகவே யோசனை கூற முற்பட்டு "அடிகளே, நீங்கள் எந்த திட்டத்தை வைத்திருந்தாலும் சரி. நந்திவர்மனை முறியடிக்க எனக்குத் தெரிந்த ஒரு திட்டம் தான் இருக்கிறது. நந்திவர்மனை நம் கைவசம் இருக்கும் படைகளால் வெற்றிக் கொள்ள முடியாது. தலையாய போர் முறையை மேற்கொண்டால் தான் நாம் தப்பலாம்" என்றார்.

"தலையாயப் போர் முறையா? அது என்ன?" கேட்டார் அடிகள்.

"போர்கள் மூன்று வகைப்படும். தலையாயப் போர் ஒன்று. இடையாயப் போர் ஒன்று. கடையாயப் போர் ஒன்று. * நந்திவர்மன் உத்தேசித்திருக்கும் நாளிகாசுரம் இடையாகப் போர் வகையைச் சார்ந்தது. அதில் வெற்றி பெற வேண்டுமானால்

* பக்கம் 346- "சுக்கிர நீதி"

அதை விட உயர்ந்ததான தலையாயப் போர் முறையை கைக்கொள்ள வேண்டும். ராமாயண மகாபாரதப் போர்களைப் போன்ற சிறந்த போர் முறை அது. அதற்கு அடிப்படையான விஷயத்தை நாம் கற்க வேண்டும். அதை நமக்குக் கற்றுத் தரக் கூடியவன் ஒருவன்தான். அவன் உதவியின்றி நாம் சாதிக்கக் கூடியது எதுவுமில்லை”-

“யாராவன்”-

“காஞ்சீபுரன்”-

“எங்கிருக்கிறான்?”

“காஞ்சியில் இல்லை. கூரத்தில் இருக்கிறான்”

“நல்லது. அவனை அழைத்து வாருங்கள்”-என்றான் தீயடிகள்.

“அழைத்து வருவதா? அவனையா? விருப்பமில்லாவிட்டால் வாயைக் கூட அவன் திறப்பதில்லை. நமக்கு பாக்கியம் இருந்தாலொழிய அவனது உதவி கிடைக்காது’ என்று தெரிவித்த முத்தரையர் காஞ்சீபுரனைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்.

அந்த விவரங்கள் தீயடிகளைக் கூட வியக்க வைத்தன.

⌘⌘⌘⌘⌘



31. மந்திரப்படை

எட்டுமெட்டும் எட்டுமாய் ஒரேழும் ஏழும் ஏழுமாய் எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற ஆதிதேவனான எம்பெருமானின் தலங்கள் காணுமிடமெல்லாம் அமைந்திருந்ததாலேயே கோயில் மாநகர் என்று அழைக்கப்பட்ட காஞ்சியின் அரண்மனையில் காஞ்சிபுரனைப் பற்றி காடக முத்தரையர் கூறிய போது மிகைப் படுத்திக் கூறுவதாகவே தோன்றியது துறவிகளுக்கு.

“என்ன சொன்னீர்? விரும்பாவிட்டால் அவன் வாயைக் கூட திறக்க மாட்டான் என்றா? காடக முத்தரையரே, என்னைப் பற்றி நீங்கள் சொன்ன காஞ்சீபுரனுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். உங்களுக்குத் தெரியுமல்லவா?”- என்று கேட்டார் தீயடிகள்.

“அதனாலென்ன?”

“மறுப்பவனின் வாயைத் திறக்க எங்களால் முடியாதா?’-

“அடிகளே, உங்களுக்கு வேண்டுமானால் காஞ்சீபுரனைத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு நன்றாகத் தெரியும். உங்களால் பல காரியங்கள் முடியலாம். அவற்றைச் செய்து முடிக்க உங்களுக்கு ஆறு விநாடிகள் ஆகிறதென்றால் காஞ்சீபுரனுக்கு ஒரு விநாடி போதும்”-

“உங்கள் அபிமானம் வரவேற்கக் கூடியதுதான். ஆனாலும் நம்பக் கூடியதாய் இருக்க வேண்டுமல்லவா?”

“அடிகளே, காஞ்சீபுரனிடம் அபரிமிதமான மந்திர சக்திகள் உள்ளன.”

“எங்களுக்கும் மாந்தரீகம் தெரியும்”

"அதன் மூலம் என்ன செய்ய முடியும் உங்களால்?"

"பேய்களை ஓட்டியிருக்கிறோம். பேய்களுடன் பேசியிருக்கிறோம். புத்திக் கூர்மையுள்ளவனை பைத்தியக் காரனாக்கியிருக்கிறோம். நல்ல திடசாலியை நோஞ்சனாக்கியிருக்கிறோம்,"

"அதையெல்லாம் இங்குள்ளச் சாதாரண மாந்தரீகர்கள் செய்து விடுவார்கள். போர்க் காலங்களில் உங்கள் மாந்தரீகத்தால் என்ன செய்வீர்கள்?"

"போர்க்காலங்களிலா?"

"ஆம். உதாரணத்திற்கு நாகாஸ்திரத்தை உங்களால் விடமுடியுமா?"

"நாகாஸ்திரமா?"

"பாரத யுத்தத்தில் அர்ஜுனனின் மீது கர்ணன் எய்தானே அதுதான் நாகாஸ்திரம். அதை உங்கள் மந்திர சக்தியால் செய்ய முடியுமா?"-

"காஞ்சீபுரனால் முடியுமா?"

"முடியும்"

"என்னால் நம்ப முடியாது"

"நல்லது"

"முத்தரையரே, இதென்ன நல்லது என்கிறீர்?"

"பின்? நான் உண்மையைச் சொல்கிறேன். நீங்கள் நம்பவில்லை என்றால் எனக்கென்ன வந்தது. காஞ்சிக் கோட்டையைப் பற்றி நானா கவலைப் படப் போகிறேன்?"

தீயடிகளுக்கு உடனடியாக என்ன சொல்வது என்று விளங்கவில்லை. எனவே நீராடிகள் குறுக்கிட்டு "முத்தரையரே, காஞ்சீபுரன் நாகாஸ்திரம் விடக் கூடியவனாகவே இருக்கட்டும். நமக்கு அவன் எந்த வகையில் உதவப் போகிறான்?" -என்று கேட்டார்.

"இந்த வகையில் தான்"-என்று கூறிய முத்தரையர், "அடிகளே, நான் ஏற்கனவே தலையாயப் போர் முறை பற்றிச் சொன்னேன் அல்லவா, அப்போருக்கு இன்றியமையாதது மந்திரப்படை. அதாவது மந்திரங்களைப் பயன்படுத்தி ஆயுதங்களை இயக்குவது. அதாவது நாகாஸ்திரம் போல. அந்த மந்திரப் படை நுட்பங்களை அறிந்தவன் காஞ்சீபுரன். அவனை மட்டும் நம்பக்கம் இழுத்து விட்டால் வெற்றிக்கு வழி கிடைத்த மாதிரிதான்."-

துறவிகள் சிறிது நேரத்திற்கு எதுவும் பேசவில்லை.

முத்தரையரே தொடர்ந்தார். "எப்படி பாரதப் போரில் அளவில் குறைந்த பாண்டவர் படைகளுக்கு வாசுதேவன் ஒருவன் மட்டும் சேர்ந்து பெரும்பலமாக இருந்தானோ அத்தகைய பலம் காஞ்சீபுரனால் நமக்குக் கிட்டும். அவன் ஒருவன் போதும். மந்திரப் படைகளை எய்யும் ஆற்றல் கொண்ட அவன் ஒருவனால் நாளிகப் படைகளை முறியடிக்க இயலும். நம்மிடையே குழப்பத்தையும் சேதத்தையும் உருவாக்க நினைக்கும் நந்திவர்மனையும் அவனது படைகளையும் காஞ்சீபுரனின் மந்திரப்படை திணறடிக்கும். நான்கு நாகாஸ்திரங்களை விட்டாலே போதும். நந்திவர்மனின் படைகள் கதி கலங்கிப் போய் நாளிகங்களை போட்டு விட்டு ஓடுவார்கள். அவற்றையும் நாம் கைப்பற்றலாம். அதோடு மந்திர அஸ்திரங்கள் நெடுந்தூரம் வரை செல்லக் கூடியவை. நந்திவர்மன் கோட்டைக்கு தூரத்தில் இருக்கும் போதே அவனது தலையைத் துண்டிக்க காஞ்சீபுரனின் அஸ்திரத்தால் முடியும். ஆகவே, இப்போதைக்கு நந்திவர்மனுக்கு ஈடு காஞ்சீபுரன்தான்"-

பேச்சை சற்று நிறுத்திவிட்டு துறவிகளின் மனத்தில் தான் சொன்ன விஷயங்கள் பதினெட்டும் என்று சில நிமிடங்கள் பொறுத்திருந்த பின் மீண்டும் சில விஷயங்களை தெரிவித்தார் முத்தரையர்.

“அடிகளே, கீர்த்திவர்மரே, இதுவரை நான் கூறியதெல்லாம் காஞ்சீபுரனின் தகுதிகள். கீர்த்திகள். ஆனால் அவனை நமக்கு உதவ சம்மதிக்கச் செய்வது தான் மிகவும் சிரமமான காரியம். அவனை மட்டும் சம்மதிக்க வைத்து விட்டால் நாம் வெற்றி பெற்று விட்ட மாதிரிதான் . ஏனெனில், அவன் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். ஏன்-உலகினுக்கே அப்பாற்பட்டவன். உலக ஷேமத்திற்காக சதா யாகங்களைச் செய்து கொண்டிருப்பவன். அவனாக மனம் ஒப்பி வந்தாலொழிய அவன் நமக்கு உதவமாட்டான். எனவே, நாம் அனைவருமாகச் சென்று அவனிடம் வேண்டிக் கொள்வோம். அதுதான் வழி. அவனை விட்டால் நந்திவர்மனிடம் நாம் தோற்க வேண்டியது தான்.”-

தீயடிகள் ஒரு தீர்மானத்திற்கு வந்தவர் போல் காணப்பட்டார். கீர்த்தி வர்மனைப் பார்த்து,“இளவரசே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” -என்று கேட்டார்.

“வேறு வழி எனக்குத் தெரியவில்லை” -என்றான் கீர்த்திவர்மன்.

“காரியஸ்தரே, நாளை நாம் அனைவரும் கூரத்திற்குப் புறப்படுகிறோம். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். முத்தரையரே, நீங்கள் சென்று ஓய்வெடுங்கள். நாளை உமது இல்லத்திற்குத் தேரை அனுப்புகிறேன். வாருங்கள்” என்று கட்டளைகளைப் போட்டார் தீயடிகள்.

அன்றிரவு அந்தப் புரத்தில் கீர்த்திவர்மன் தன் கைவரிசையை சரிவரக் காட்டவில்லை. அதனால் பெண்களில்

பலர் திருப்தியில்லாமல் தவித்தார்கள். எதில் சோடை போனாலும் சரி பெண்களைத் திருப்தி செய்வதில் குறையே வைக்காதவனும் யாரை ஏமாற்றினாலும் பெண்களை மட்டும் அந்தப்புர விவகாரங்களில் ஏமாற்றதவனுமான சாளுக்கிய இளவரசன் தற்போது பெரும் குறையை வைத்து விட்டதை ஜீரணிக்க முடியாமலும் அதற்கான காரணம் தெரியாமலும் குழம்பிய அரண்மனைக்கணிகையர் சிலர், “இருக்கட்டும், இருக்கட்டும். நாளைக்கு வட்டியும் முதலுமாக கவனித்துவிட வேண்டியது தான்” -என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்டார்கள். இப்படிக் கணிகையரே ஏங்கும் அளவிற்கு கீர்த்திவர்மன் அன்று நடந்து கொண்டான் என்றால் அதற்கு காரணம் இருக்கவே செய்தது.

சாளுக்கியர்களின் கெடுபிடிகள் எப்படி காஞ்சிநகர மக்களுக்கு உள்ளுக்குள் ஒருவித அசதியை உண்டாக்கியிருந்ததோ அதேபோல் நந்திவர்மன் பிடிபடாமல் போனதிலிருந்து அவனைப் பற்றிய சந்தேகம் கீர்த்திவர்மனிடமும் துறவிகளிடமும் சிறிது காலமாக அசதியை உண்டாக்கியிருந்தது. விக்கிரமாதித்தன் உண்டாக்கியிருந்த மாறுபட்ட மனிதாபிமானத்தை அழித்து விட்டதும், விக்கிரமாதித்தனுக்கு இருந்த அனுபவ அறிவு மற்றும் மனப்பக்குவம் தனக்கு இல்லாமல் போனது தான் தற்போதைய நிலைமைக்குக் காரணம் என்பதை நூற்றுக்கு நூறு அறிந்து கொள்ளவில்லை என்றாலும் விக்கிரமாதித்தன் போனபின் தன் நிலை திருப்திகரமாயில்லை என்பதை மட்டும் அறிய முடிந்தது கீர்த்திவர்மனால். ஆனாலும் அவன் அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. காடக முத்தரையர் வந்து நாளிகாசுரப் போர் பற்றியும் காஞ்சிபுரனைப் பற்றியும் சொல்லி உண்மை நிலையை விளக்கிய பின்னரே அவன் கவலைப்பட வேண்டியதாயிற்று. அந்த இக்கெட்டிற்கு யார் காரணம் என்று யோசித்த போது பஞ்சபூதங்கள் தான் அவனது நினைவிற்கு வந்தார்கள்.

தான் மாறிப் போனதற்கு அவர்கள் தான் காரணம் என்பதை முதல் முறையாக உணர்ந்து அசதியடைந்தான் கீர்த்திவர்மன். விக்கிரமாதித்தனுக்கு எதிராக ஆரம்பத்தில் அவர்கள் தெரிவித்த கருத்துக்களும் தீட்டிய திட்டங்களும் சரியானவை தானா என்றும் யோசிக்க ஆரம்பித்தான். அவர்களது ஆலோசனைகளில் உள்நோக்கம் ஏதாவது இருக்குமா என்ற சந்தேகமும் உண்டாயிற்று.

கடந்த இரண்டு மாதங்களாக நடந்த மாற்றங்களை நினைவில் நிறுத்திப் பார்த்தான். எந்த ஒரு விஷயத்திலும் தானாக எந்த ஆணையையும் பிறப்பிக்க வில்லை என்பதும் அனைத்தும் பஞ்சபூதங்கள் சொல்லியே பிறப்பிக்கப்பட்டன என்பதும் தெளிவாகப் புரிந்தது. அது தன் பலவீனமா அல்லது துறவிகளின் பலமா என்று ஒப்பிட்டுப் பார்த்த போது துறவிகளுக்கு, தான் அளவுக்கு அதிகமாக இடமளித்து விட்டதாகவும் அந்த வாய்ப்பைத் துறவிகள் அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டதாகவும் தோன்றியது. ஆலோசனை அளிக்க வேண்டிய பொறுப்பை மட்டுமே ஏற்க வேண்டிய துறவிகள் அந்த நிலையை மீறி அரசாட்சியே செய்து வருவது போலவும் தோன்றியது கீர்த்திவர்மனுக்கு. விக்கிரமாதித்தனிடம் இத்துறவிகள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பதும் தன் விஷயத்தில் தான் அதிகப் பிரசங்கித் தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பதும் புரிந்த போது “நான் ஏமாந்து விட்டேனா?” என்று எண்ணிப் பார்த்தான்.

துறவிகளின் போக்கைப் பெருமளவில் சந்தேகப் பட முனைந்தான். இந்த அளவிற்கு தன்னைப் பின்னுக்குத் தள்ளி பல விஷயங்களிலும் முன்னால் நின்று தங்கள் இஷ்டப்படி வெற்றிகளைக் குவித்த துறவிகளால் முத்தரையர் கூறிய போர் விஷத்தில் மட்டும் எதுவும் தெரியாமல் திண்டாடியதை அறிந்த போது “நாளைக்கு இவர்கள் போரில் கோட்டை விட்டு

விட்டால் உருளப் போகும் முதல் தலை என்னுடையதாக அல்லவா இருக்கும்? அதோடு இவர்கள் போர்க்களத்திற்கு வந்து போரிடவா போகிறார்கள்? நிச்சயமாக இல்லை. திரை மறைவில் இருக்கப் போகிறார்கள். நந்திவர்மனின் கைஓங்கும் போது தப்பிச் செல்லவும் தயங்கமாட்டார்கள். போரில் வீரம் காட்டத் தெரியாத துறவிகளை போர்க் காலங்களில் எப்படி நம்புவது?" என்று நினைத்தான்.

அது மட்டுமல்ல. "துறவிகளின் திரை மறைவு வேலை சரித்திரத்தில் வராது. அரச குமாரர்களின் போக்கு தான் வெளியே வரும். போர் என்று வந்து தோல்வியை சந்தித்தால் சாளுக்கிய கீர்த்திவர்மன் தோற்றான் என்றுதான் சொல்வார்களேயன்றி துறவிகள் சரிவர ஆலோசனை அளிக்காததால் கீர்த்திவர்மன் தோற்றான் என்று யாரும் சொல்லமாட்டார்கள். அப்படியே சொன்னாலும் அது தனக்கு அவப்பெயரேயன்றி சிறப்பாகாது" என்றும் அலசிப் பார்த்த அவனுக்கு தன் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அதையடுத்து சில திட்டங்களையும் மனதில் தீட்டினான்.

தற்போதைக்கு தன் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டக் கூடாதென்றும், துறவிகளோடு இருந்து காஞ்சீபுரனின் உதவியோடு நந்திவர்மனை வீழ்த்தி விட்டு வீழ்த்திய கையோடு துறவிகளுக்கு வீடுபேற்றை அளித்து விடுவது என்றும் முடிவு செய்தபின் தனது திட்டத்தின் மறு பகுதியை நிறைவேற்றும் முயற்சியாக அந்த அகால இரவு நேரத்தில் காடக முத்தரையரை அவரது இல்லம் தேடிச் சென்று சந்தித்தான். அகால வேளைகளில் சந்திப்பதும் விசாரிப்பதும் கீர்த்திவர்மனுக்கு சகஜமானவை என்பதை அறிந்திருந்த முத்தரையர் அவனை வரவேற்றார். அவரிடம் சில ரகசிய உத்தரவுகளை பிறப்பித்து விட்டு பூனை போல் வெளியேறினான் கீர்த்திவர்மன்.

⌘

இதே நேரத்தில் பஞ்ச பூதத் துறவிகளும் ரகசிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார்கள். காஞ்சிக்கு வந்தபின் அனைத்துமே அவர்கள் விரும்பியபடியும் திட்டமிட்ட படியுமே நடந்திருந்தாலும் இனியும் அப்படியே நடக்குமா என்ற சந்தேகம் உண்டாகியிருந்தது அவர்களுக்கு. அதுவும் நந்திவர்மனின் படையெடுப்பு பற்றியும் அதிலும் அவன் உத்தேசித்துள்ள நாளிகாசுரப் போரைப் பற்றியும் கேள்விப்பட்ட பின் அவர்களது சந்தேகம் அதிகமாயிற்று. அதற்கும் மேலாக சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாய் இருந்து வந்த கீர்த்திவர்மன் நகர் உலா பற்றிய சம்பாஷணையில் தன் வாயடைக்கிற மாதிரி பேச முற்பட்டது அவர்களுக்கு நல்ல சகுனமாய் தெரியவில்லை. கீர்த்திவர்மனைத் தங்கள் கைப்பாவையாய் மட்டுமே வைத்திருக்க விரும்பியிருந்தார்கள் அவர்கள். அதன் அடிப்படையில் தான் விக்கிரமாதித்தனையும் கீர்த்திவர்மனையும் பிரித்து அதையடுத்து தொடர்ச்சியான திட்டங்களையும் தீட்டினார்கள். ஒரு கட்டம் வரை பெயருக்கு அவனை மன்னனாக வைத்திருப்பது என்றும் அதற்கு பின் ஏதாவது ஒரு நாள் அவனது உயிரை வாங்கி விபத்து என்று கதை கட்டி விடலாம் என்றும் அதன்பின் தீயடிகளின் குமாரன் பாசுவத நாதனை காஞ்சியின் அரியணையில் அமர்த்தி காஞ்சியை சமணர்களின் தனிக்கோட்டையாய் அமைப்பது என்றும் பரந்த திட்டம் ஒன்றை வைத்திருந்தார்கள். ஆனால் நந்திவர்மனை அந்த திட்டத்தில் கல்லைப் போடுவான் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை பல்லவ மன்னன் எப்படியும் காஞ்சிக் கோட்டையை மீட்க முயல்வான் என்றும் அப்படி அவன் செயல்பட்டால் போரிட்டு மக்களைத் துன்புறுத்தி அவனை விரட்டி விடலாம் என்ற அளவில் மட்டுமே எதிர்பார்த்தார்கள். ஆனால் நந்திவர்மனின் போர்த்திட்டம்

மிகவும் பயங்கரமாக இருந்ததால் அவனிடம் மிக எளிதில் தோற்றுவிட வேண்டியது தான் என்பது நிதர்சனமாகத் தெரிந்ததால் அவர்கள் கவலைப்பட வேண்டிதாயிற்று. தங்களுக்கு அப்படியொரு தோல்வி உண்டானால் அது சமணர்களுக்குப் பேராபத்து என்பதையும், சமணர் சமுதாயமே தங்களை ஒட்டுமொத்தமாய் தூற்றும் என்பதையும் உணர்ந்தார்கள்.

அவர்களுக்கு சிறிதும் தெரியாதிருந்தது போர்க் கலை ஒன்றுதான். அதுவும் நாளிகாசுரம்போன்று பயங்கரப் போருக்கு மாற்று எதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை. நல்ல வேளையாக சமய சஞ்சீவி போல் காடக முத்தரையர் வந்து காஞ்சீபுரனின் திட்டங்களைக் கூறியது வரப் பிரசாதம் போல் இருந்தது.

அத்திட்டத்தை அப்படியே ஏற்று காஞ்சீபுரனை எப்படியாவது வரவழைத்து நந்திவர்மனை தோற்கடித்தோ, முடிந்தால் போரில் கொன்றோ வெற்றியை ஈட்டுவது என்றும் வெற்றியை ஈட்டிய பின்னர் முதல் வேலையாக கீர்த்திவர்மனின் உயிரை எடுத்த பின் காடக முத்தரையரையும் கைலாயத்திற்கு அனுப்பிவிடுவதென்றும் முடிவு கட்டிய தீய தீயடிகள் தன் திட்டத்தை மற்ற துறவிகளுக்குத் தெரிவித்து “என்ன சொல்கிறீர்கள்?” - என்று கேட்டார்.

“போரில் வெற்றி பெற்றபின் கீர்த்திவர்மனையும் காடக முத்தரையரையும் மட்டும் கொன்றால் போதாது. காஞ்சீபுரனையும் தீர்த்துக் கட்டிவிட வேண்டும்” என்றார் உயிர்வதையை தடுக்க வேண்டிய சமணத் துறவியான நீரடிகள்.

“அது நிச்சயம் நிறைவேறும். இன்னும் சொல்லப் போனால் முதலில் சாக வேண்டியது காஞ்சீபுரன் தான்.

இதற்கு கீர்த்திவர்மன் கூட உடன்படுவான்" என்றார் முதலமைச்சரான தீயடிகள்.

"போர் இங்கு தீவிரமாகும் போது நமது கெடுபிடிகளால் வெறுப்படைந்திருக்கும் மக்கள் புரட்சி செய்யக் கூடிய அபாயம் இருக்கிறது"-என்றார் காற்றடிகள்.

"உண்மைதான். வெளியேயும் போர். உள்ளேயும் போர் என்றால் நிலைமை மோசமாகி விடும். ஆகவே கெடுபிடிகளை போர் முடியும் வரை நீக்கிவிடப் போகிறேன். மக்களுக்கு எல்லா சுதந்திரத்தையும் வழங்கி விடப் போகிறேன். ஏறக்குறைய விக்கிரமாதித்தரின் முறை போர் முடியும் வரை கையாளப்படும். போர் முடிந்த பின் நமது கோபம் தீரும் வரை மக்களை கொன்று குவிக்கலாம்" என்றார் தீயடிகள்.

"தாங்கள் நினைப்பது போலவே வெற்றி கிட்டி தங்கள் திருமகன் அரியணை ஏறுவதாகவே வைத்துக் கொள்வோம். விக்கிரமாதித்தன் சும்மா இருப்பானா? படை திரட்டி வந்தால்?" வினவினார் நிலவடிகள்.

"காஞ்சியில் யார் ஆண்டால் அவருக்கென்ன? அதுவும் கீர்த்திவர்மன் இறந்தபின் யாருக்காக அவர் இங்கே போரிட வரவேண்டும்? அப்படியே வந்தாலும் அவரை வெல்வது எளிது. மகாவீரனான அவர் மிகவும் சாது. கருணைமான். அவரை ஏமாற்றுவதும் தோற்கடிப்பதும் எளிது. அவனைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள். அவரைச் சமாளிக்கும் பொறுப்பு என்னுடையது" என்றார் தீயடிகள்.

துறவிகளுக்குத் தற்போது ஓரளவிற்கு திருப்தி ஏற்பட்டது. தீயடிகள் இருக்கும் வரை பயமில்லை என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. பொழுது விடிய சிறிது நேரமே

இருந்தது. சற்று உறங்கச் செல்லலாம் என்ற முடிவுடன் எத்தனித்த போது அங்கே திடுமென்று பிரவேசித்தார் காடக முத்தரையர்.

"நானென்ன உங்களுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டுமா அல்லது ஊரைவிட்டு ஓடிவிட வேண்டுமா?" என்று கடுகடுத்தார்.

துறவிகளுக்கு எதுவும் புரியவில்லை. காடக முத்தரையர் தன் கோபத்திற்கான காரணத்தை விளக்கினார். பஞ்சபூதங்கள் விழித்தார்கள்.

⌘⌘⌘⌘⌘

32. கூரம்

கீச்கீசென்றெங்கும் ஆனைசாத்தங்கலந்து பேசுகிற பேச்சுரவம் கேட்பதற்கு சற்று நேரமே இருக்கையில் எதிர்பாராத விதமாய் வந்து சேர்ந்த காடக முத்தரையர் கோபத்துடன் உதிர்த்த வார்த்தைகளும் எதிர்பாராதவைகளாய் இருந்ததால் சற்றே திணறிப்போன தீயடிகள் "என்ன ஆகிவிட்டது முத்தரையரே, ஏன் இந்தக் கோபம்? யார் என்ன செய்தார்கள்?" என்று உண்மையான கவலையுடன் விசாரித்தார்.

முத்தரையரின் கோபம் குறைவதாய் இல்லை. "அடிகளே, ஏற்கனவே என் வாழ்வில் அளவுக்கு மீறி நீங்களெல்லாம் விளையாடிவிட்டீர்கள். அதற்காக என்னை முட்டாள் என்று எண்ணிவிடவேண்டாம். என் மகள் போனாலும் பரவாயில்லை என்று நான் முடிவெடுத்து விட்டால் நீங்கள் இங்கே நடமாடவும் முடியாது" என்றார் கடுங்கோபத்துடன்.

அவரது ஆவேசத்தைப் பார்த்து எல்லா துறவிகளும் ஆடிப்போய் விட்டார்கள். முத்தரையரின் கைகளைப் பிடித்து உட்காரவைத்த ஆகாய அடிகள். "என்ன நடந்தது முத்தரையரே? நீங்கள் இதுவரை இப்படி நிதானத்தை இழந்ததில்லையே?" என்று வினயமாக விசாரித்தார்.

"அடிகளே, உங்கள் தளபதியைக் கொண்டு என் மகளைக் கடத்தினீர்கள். அவளைப் பிணைக்கைதியாக வைத்து என்னை மிரட்டினீர்கள். சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையில் இருந்து கொண்டு பல்லவர்களுக்குப் பச்சைத் துரோகம் செய்து உங்களுக்கு உதவ வேண்டும் என்றீர்கள். இது உண்மைதானே?"

"அதிலென்ன சந்தேகம்?"

"இதுவரை அந்தப் பணியிலிருந்து நான் தவறியிருக்கிறேனா?"

"தவறியதாக யார் சொன்னார்கள்?"

"என் மீது உங்களுக்கெல்லாம் நம்பிக்கை போய் விட்டதா?"

"இதென்ன அசந்தர்ப்பமான கேள்வி?"

"இல்லை. சரியான கேள்விதான். தற்போது கேட்க வேண்டிய கேள்விதான்"

"ஏன் அப்படி?"

"அடிகளே, ஒரு விஷயம் எனக்குத் தெரிந்தாக வேண்டும். நீங்களும் கீர்த்திவர்மனும் ஒரே அணியில் இருக்கிறீர்களா? இல்லை வேறு வேறு அணியில் இருக்கிறீர்களா?"

"அதெப்படி இருக்கமுடியும்?"

"ஒரே அணியில் இருந்து தானே என்னை ஈடுபடுத்தி வந்தீர்கள்?"

"சற்று முன்பு கூட பார்த்திருப்பீர்களே முத்தரையரே! நாங்கள் ஒன்றாகத் தானே இருந்தோம்? நாங்கள் எப்படிப் பிரிய முடியும்? பிரிந்திருந்து எதைச் சாதிக்க முடியும்? நாங்கள் இங்கே செயல்படுவது கீர்த்திவர்மருக்காகத்தானே?"

"அது உண்மை இல்லை"

“ முத்தரையரே, இதென்ன வார்த்தை?”

“இரவில் நாம் எல்லோரும் கூடி ஒரு முடிவெடுத்தோம். விடிந்த பின் காஞ்சீபுரனைப் போய் பார்ப்பதென்றும் அவன் மூலம் நந்திவர்மனை முறியடிப்போம் என்றும் தீர்மானித்தோம். அப்படியிருக்க கீர்த்திவர்மர் என் இல்லத்திற்கு வருகிறார். எனக்கு ரகசிய உத்தரவுகளை இடுகிறார். நீங்கள் ஒரே அணியில் இருப்பதற்கு இதுதான் அத்தாட்சியா?”

இச்செய்தியைத் துறவிகள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கீர்த்திவர்மன் இவ்வளவு விரைவில் தன் நச்சுத்தன்மையைக் காட்டிவிடுவான் என்பதையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே தீயடிகள் சற்றே பரபரப்படைந்து “இது உண்மையா? எப்போது வந்தார் கீர்த்திவர்மர்? என்ன கட்டளைகளை இட்டார்?” என்று கேட்டார்.

“அடிகளே, அவர் நிறைவேற்றச் சொன்ன உத்தரவுகள் ரகசியமானவை. உங்களுக்குக் கூட தெரியவேண்டாம் என்று கூறியிருக்கிறார். என் நிலையில் இருந்து சற்று யோசித்துப் பாருங்கள். நான் தற்போது யாரை நம்புவது? உங்களையா? இளவரசரையா? அவர் கட்டளையை நிறைவேற்றுவதானால் உங்களுக்கு நான் வேண்டாதவனாகிறேன். நிறைவேற்றாமல் விட்டால் அவருக்கு வேண்டாதவனாவேன். எனக்கு எதற்காக இந்த நிலை? உங்களுக்குள் அபிப்ராய பேதங்கள் இருந்தால் அது முதலில் தீர்க்கப்படவேண்டும். அதற்குப் பிறகு உதவுவது தான் அர்த்தமுள்ளதாகவும் பயன்படக்கூடியதாகவும் இருக்கும்’

தீயடிகள் சாதுரியமாகப் பேசலானார்.

“முத்தரையரே, நீங்கள் கூறும் நிலை நாங்கள் முற்றிலும் எதிர்பாராதது. கீர்த்திவர்மரின் இந்த செயலுக்கு உண்மையில் எங்களுக்குக் காரணம் புரியவில்லை. அவரது நல்வாழ்விற்காகத்தான் அவரிடமிருந்து அவரது தந்தையைப் பிரித்து பல்வேறு திட்டங்களை இன்று வரை போட்டு நிறைவேற்றி வருகிறோம். எங்களது முயற்சிகளால் காஞ்சி அரியணையில் ஸ்திரமாக அமரப் போவது கீர்த்திவர்மரும் அவரது சந்ததியினரும் தானேயன்றி நாங்களல்ல. அதற்கு மிகவும் பயன்படக் கூடியவர் என்ற முறையில் தான் உங்கள் மகளைப் பிணைக்கைதியாக்கி உங்களை எங்களுடன் வைத்திருக்கிறோம். இன்று வரை எங்கள் நம்பிக்கையை நீங்கள் சிறிதும் குறைக்கவில்லை. அதுவும் இரவில் நீங்கள் நந்திவர்மனின் போர்முறை குறித்தும் காஞ்சீபுரனின் தகுதிகள் குறித்தும் பட்டவர்த்தனமாகக் கூறியபோது உங்கள் மீது எங்களுக்கு மரியாதையே ஏற்பட்டிருக்கிறது. நாங்களும் கீர்த்திவர்மரும் உண்மையில் உங்களுக்கு கடன்பட்டவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நிலையில் எங்களுக்குத் தெரியாமல் ரகசிய உத்தரவுகளை கீர்த்திவர்மர் இடுவது அசந்தர்ப்பமானது உங்களுக்கு ஏதாவது ஆபத்து நேருமானால் நாங்கள் கீர்த்திவர்மரைப் பலிகொடுக்கவும் தயங்கமாட்டோம். என் சொற்களை நம்ப உங்களுக்கு தயக்கமாக இருக்கலாம். உங்கள் மகளை நாளை காலையிலே உங்கள் இல்லரத்திற்கு அனுப்பிவைக்கிறோம். அப்போது புரிந்து கொள்வீர்கள் எங்களை”

முத்தரையரும் உறுதியான குரலில் சொன்னார்.

“என் மகள் இறந்தால் அது அவள் விதி. நாட்டுக்காக இறந்தாள் என்று நான் சொல்லிக் கொள்வேன். அவளைப்

பற்றிய கவலை எனக்கில்லை. என் கவலையெல்லாம் என் மனசாட்சியை விட்டு விட்டு என் மண்ணிற்குத் துரோகமான காரியத்தை உறுதியோடு செய்து வரும்போது அதெல்லாம் எங்கே வீணாகி விடுமோ என்பதுதான். என் உயிர்காக்க கீர்த்திவர்மரைக் கூட பலியிடத் தயார் என்கிறீர்களே அப்படியானால் உங்கள் நோக்கம் தான் என்ன?"

"முத்தரையரே, அன்றும் சரி இன்றும் சரி எங்கள் நோக்கம் என்னவோ கீர்த்திவர்மரைக் காஞ்சி மன்னராக வைப்பது தான். அதேசமயம் ஏறுவதற்கு உதவும் ஏணியைத் தட்டிப் பறிக்கும் முயற்சியில் அவர் இறங்குவாரானால் மன்னராகும் தகுதியை அவர் இழந்தவராகிறார். அப்படிப்பட்டவரால் எல்லோருக்கும் தீமைதான் விளையும். எனவே அவரை அழிப்பது நியாயமாகவே இருக்கும்"

"அந்தநிலை வரவேண்டாம் என்பது தான் என் பிரார்த்தனை அடிகளே, கீர்த்திவர்மர் எனக்கிட்ட ரகசிய கட்டளைகளை இப்போது சொல்கிறேன் கேளுங்கள். காஞ்சிக் கோட்டைக்குள் இருக்கும் அனைத்து நிலவறைகளையும் மூடிவிட வேண்டுமாம். இங்கிருந்து தப்பவோ வெளியேயிருந்து பிரவேசிக்கவோ கூடாதாம். பலத்த காவலைப் போட வேண்டுமாம்"

"சரி"

"விஜயஸ்கந்தவர்மனை நந்திவர்மனைப் பிடிக்கும் தூண்டிலாக அமையவே அவனுக்குத் தளபதி பதவியொன்றை அளித்து ராவணனுடன்அனுப்பினீர்கள். விஜயஸ்கந்தவர்மன் தனக்கென தனி கௌரவத்தை எதிர்பார்க்கிறவனாதலால் ராவணனுடன் அவனால் உருப்படியாக எதுவும் செய்ய முடியதாம். எனவே அவனை

ராவணனிடமிருந்து பிரித்து தனியாக இயங்க வைக்க வேண்டுமாம். அப்படிச் செய்தால் அவனால் நந்திவர்மனை சிறப்பாகக் கண்காணிக்க முடியுமாம்"

"சரி"

"சாளுக்கியர் படைகளிடம் தங்கள் ஐவரைப் பற்றிப் பாதகமாகவும் இளவரசரைப் பற்றிச் சாதகமாகவும் பேச வேண்டுமாம். உங்கள் பேச்சை அவர்கள் அசட்டை செய்ய வைக்க வேண்டுமாம்"

"சரி"

"தங்களை விடாமல் கண்காணித்து உங்கள் பேச்சு மற்றும் நடவடிக்கைகளைப்பற்றி அவருக்குச் சொல்லவேண்டுமாம். அவ்வளவுதான்"

"முத்தரையரே, இளவரசர் இட்டுள்ள இந்த நான்கு ரகசியக் கட்டளைகளில் மூன்று சரியானவை தான். அதனால் பாதகம் ஒன்றில்லை. ஆனால் மூன்றாவதாக இட்ட கட்டளையைப் பற்றி மட்டும் சற்று யோசியுங்கள். சாளுக்கியர் படைகளிடம் எங்களைப் பற்றி பாதகமாகவும் அவரைப் பற்றிச் சாதகமாகவும் சொல்லச் சொல்லியிருக்கிறார். தற்போதைய நிலையில் இது நல்லதா? போர் நெருங்கிவிட்ட சமயத்தில் இத்தகைய மித்ரபேதம் படைகளிடையே குழப்பத்தை உண்டாக்காதா?"

"விபரீத விளைவுகள் ஏற்படும்"

"அவரது அரியணைக்குத்தானே அது ஆபத்து?"

"ஆமாம். அப்படியானால் நான்காவது கட்டளை உங்களுக்குப் பாதகமானதாய் இல்லையா?"

"எங்களைக் கண்காணிப்பது பற்றிய கட்டளைதானே? அதில் எங்களுக்குக் கவலையில்லை முத்தரையரே. யார் வேண்டுமானாலும் எங்களைக் கண்காணிக்கட்டும். கண்காணிப்புகளுக்கு பயப்படவேண்டியவர்கள் துரோகிகள் தானேயன்றி விசுவாசிகள் அல்ல. எனவே இந்த மூன்று கட்டளைகளை நிறைவேற்றுங்கள். மூன்றாவது கட்டளை மட்டும் வேண்டாம். அது ஆபத்தானது. அவருக்குப் பாதகமானது"

"நல்லது அடிகளே, உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் ஏதாவது கட்டளையிடுகிறீர்களா?"

"அவசியமில்லை. அவசியம் வந்தாலும் வெளிப்படையாகவே இடுவோம். ரகசியம் தேவையில்லை." என்று தீயடிகள் முத்தரையருக்கு நன்றி கூறி வழியனுப்பி வைத்தார்.

மறுநாள் காலை நன்றாக பொழுது விடிந்த பிறகு பிரமுகர்கள் கூரத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள். காஞ்சியின் வடமேற்கே சமீபத்தில் இருந்த கூரமானது அப்போது பிரபலமாயிருக்கவில்லை. விசிஷ்டாத்வைதத்தின் பிதாமகராயும் வைஷ்ணவர்களின் நந்தாவிளக்காகவும் பின்னாளில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தோன்றிய ஸ்ரீராமானுஜரின் உத்தமச்சீடர்களின் ஒருவரான ஆழ்வான் அவதரித்து சிஷ்ய லட்சணத்திற்கே ஓர் இலக்கணமாகி கூரத்தாழ்வார் என்று சிறப்படைந்து உயர்ந்த போது கூரம் எல்லோராலும் பேசத் தகுந்த ஊரையும் ஸ்தலமாயும் ஆயிற்று. தற்போதோ அடர்ந்த மரங்களால் நிறைந்த வனாந்திரமாய் இருந்ததாலும் பகலிலேயே பந்தம் பிடித்துச் செல்ல வேண்டிய இருள் நிலவியதாலும் தேரேறிப் புறப்பட்டிருந்த பிரமுகர்கள் பெருத்த சிரமத்துடனேயே

சென்றார்கள். காவல் அரணைப்போல் ஊரைச் சுற்றி வேலங்காடு அமைந்திருக்க, ஊர் முழுதும் கோட்டையைப் போல் அடர்ந்த ஆலங்காடுகள் நிறைந்திருந்தன. அந்த ஆலங்காட்டின் சிறப்பம்சமாக ஆலமர விழுதுகள் நிரம்ப உண்டாகி பூமியில் இறங்கி வேர்பிடித்து விட்டிருந்ததால் உள்ளே செல்லச் செல்ல தேர் கூட நுழைய முடியாமல் போயிற்று. அந்தச் சிரமத்தைத் தாங்க முடியாத தீயடிகள், “போர் முதலில் முடியட்டும். இக்காஞ்சீபுரனின் உடலை இங்கேயே புதைத்து ஆலங்காட்டை அழித்து விண்முட்டும் சமண விஹாரத்தை எழுப்புகிறேன்” என்று உள்ளுக்குள் சபதமிட்டபடி நடந்தார்.

ஆனால் காட்டின் நடுவே காஞ்சீபுரனின் இருப்பிடம் இருந்த ரம்மியத்தைக் கண்டபோது அனைத்தையும் மறந்தார்கள் அவர்கள். இத்தனைக்கும் அது ஒரு ஆசிரமம் தான். ஆனாலும் கூட அப்படிப்பட்ட அழகானதும் திவ்யமானதுமான ஆசிரமத்தை வடபாரதத்தில் கூட தான் கண்டதில்லையாதலால் பெரும் பிரமிப்பை அடைந்தார் தீயடிகள்.

கதிரவனை மறைக்கும் அந்த ஆலங்காட்டில் ஆசிரமம் இருந்த பகுதியில் மட்டும் மிதமான ஒளி நிலவியது. புள்ளினங்கள் கண்டபடி சுற்றித் திரிந்தன. தெள்ளிய நீரோடையில் நீர் சலசலத்தது. பல்வேறு பறவையினங்கள் சங்கீத குரலிட்டு மரங்களைச் சல சலக்க வைத்தன. வெளியே எழுந்த காற்று அந்த ஆசிரம இடைவெளியில் வேகமாக நுழைந்து கிறங்க வைக்கும் குளிர்தென்றலாய் வீசியது. அங்கே அமைந்திருந்த செழுமையான மூங்கில் பர்ணசாலையின் முன்னால் யாகசாலை ஒன்றின் முன்னால் அமர்ந்திருந்தான் ஒரு மனிதன் அவன் தான் காஞ்சீபுரனாய் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் அனைவரும் அவனை எடைபோடலானார்கள்.

கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்த அவனுக்கு நீண்ட தாடியும் ஜடாமகுடமும் கம்பீரமாய் காட்சியளித்தன. சாதாரண காவியுடைகளையும் சந்தன மாலைகளையும் அணிந்திருந்தாலும் கூட அவை மிக அழகாகவும் ஒப்புயர்வற்றும் அவனுக்குப் பொருந்தியிருந்தன. நடுத்தர வயதுள்ளவனைப் போலிருந்த அவனது முகத்தில் உலகில் எங்கும் காணமுடியாத சாந்தி நிலவியதென்றால் அவன் உடலிலோ பரவசப்படக்கூடிய தேஜஸ் நிலவியது. அவனது உதடுகள் இடைவிடாது ஒலித்த மந்திரங்கள் அந்த நிர்மலமானக் காட்டில் தெய்வீகமாய் ஒலித்தது. அதுவரை தங்கள் வாழ்நாளில் சந்தித்திராத சூழ்நிலையைக் கண்டது போல் பரவசப்பட்டார்கள் அந்தப் பிரமுகர்கள்.

அந்த நிலையில் அக்காட்டையே உலுக்குவது போன்ற உறுமல் சத்தம் ஒன்று எழுந்தது. அதையடுத்து பெரும் புலியொன்று சீறிப் பாய்ந்தது. அங்கே பிரமுகர்கள் அலறினார்கள். ஆனால் தியானத்தில் இருந்த மனிதனோ அசையக் கூட இல்லை. அதேசமயம் பாய்ந்து வந்த புலி ஓய்ந்து வந்து படுப்பது போல் அந்த மனிதனின் அருகே படுத்தது அமைதியாக. சிறிது நேரம் சென்றிருக்கலாம். மூன்று பேர் அங்கே வந்தார்கள். வேடர்கள் போல் இருந்த அவர்கள் புலியைத் தட்டி எழுப்பி அழைத்துச் சென்ற போது நம்பமுடியாமல் இருந்தார்கள் பிரமுகர்கள். வியப்புகளுக்கு அங்கே குறைவு இருக்காது என்பது போல் மேலும் சில நிமிடங்கள் கழிந்த பின் வேதியர் ஒருவர் அங்கே வந்தார். தியானத்தில் இருந்த மனிதனை வணங்கி விட்டு பிரமுகர்களை நோக்கினார். அவர்கள் தங்களுக்கு முன்னால் சீர்வரிசை போல் கொண்டு வந்திருந்த பொருட்களையும் பார்த்து “இதெல்லாம் என்ன?” என்பது போல் பார்த்தார்.

"மகானுக்கு மன்னவரின் எளிய தட்சிணை" என்றார் காடக முத்தரையர்.

"யாரது மன்னர்?" கேட்டார் வேதியர்

"இவர்தான்"-என்று கீர்த்திவர்மனைச் சுட்டிக்காட்டிய முத்தரையர் "காஞ்சியை ஆளும் சாளுக்கிய இளவரசர் கீர்த்திவர்மர்" என்றார். பிறகு பஞ்ச பூதங்களையும் அறிமுகப் படுத்தி விட்டு "தட்சிணையை ஏற்க வேண்டும்" - என்றார்.

"இங்கே எதையும் ஏற்கக் கூடியவர் அருணபகவான் தான். அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்றார் வேதியர். யாகத்தீயைக் காட்டவும் செய்தார்.

கீர்த்திவர்மனும் துறவிகளும் தட்சணையாகக் கொண்டு வந்திருந்த பழவகைகள், பட்டு பீதாம்பரங்கள், பொன்னாபரணங்கள் ஆகியவற்றை அரைமனதுடன் யாகத்தில் இறைத்தார்கள்.

"இவர் எப்போது விழிப்பார்?" என்று கேட்டார் நிலவடிகள்.

"யாராலும் விடை தரமுடியாத கேள்வி இது" என்றார் வேதியர்.

"ஏன்?" என்று கேட்டார் நிலவடிகள்.

"உணர்ச்சிகளை உடலில் தூண்டுவதற்கு உயிர் வேண்டாமா?" கேட்டார் வேதியர்

"அப்படியானால் இங்கிருப்பது வெறும் பிணம் தானா?" கேட்டான் கீர்த்திவர்மன்.

“உயிரை சஞ்சாரத்தில் விட்டு வைப்பவர்களை பிணம் என்று சொல்வதில்லை” -சுட்டிக் காட்டினார் வேதியர்.

“இவரது நிலைக்கு என்ன பெயர்?” -மேலும் கேட்டான் கீர்த்திவர்மன்.

“ஆன்ம விசாரணை என்று சொல்லலாம். கீர்த்திவர்மரே, இது ஒருவிதமான உன்னத யோகநிலை. இந்த நிலையில் யோகிகள் தங்கள் ஆன்மாவிற்கு கட்டளையிடவும் முடியும். ஆத்மாவை உடலிலிருந்து வெளியேற்றி பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கச் செய்ய அவர்களாலே முடியும். அந்த நிலையில் அவர்களது உடலில் உணர்ச்சிகள் இருப்பதில்லை. மனித உடலுக்குரிய தன்மைகளும் வாடைகளும் வெளிப்படுவதில்லை. ஆகவே தான் புலிகள் கூட அருகில் வந்தால் எதையும் செய்வதில்லை. நீங்கள் கூட பார்த்திருப்பீர்களே?”

“ஆமாம். பார்த்தோம். வேடர்கள் வந்து புலியை அழைத்துப் போனார்கள்”

“இங்கே உள்ள வனவிலங்குகள் அனைத்தும் வேடர்களுடன் அன்னியோன்யமாய் இருக்கின்றன. அவர்களது கட்டளைக்குக் கட்டுப்படுகின்றன. அவர்களும் வேட்டையாடுவதில்லை. தங்கள் குழந்தைகளாகவே பாவிக்கிறார்கள்”

இங்கே குறுக்கிட்ட அடிகள், “உயிரைக் கட்டுப்படுத்தி தவம் செய்யும் வழக்கம் சமணர்களுக்கும் உண்டு. அதே சமயம் சஞ்சாரம் செல்லும் உயிர் சில நேரங்களில் திரும்பாமல் போய் விடுவதுண்டு” என்றார்.

“யோகத்திறனில் குறைபாடு உண்டானால் அது போல நடப்பதுண்டு. சில நேரங்களில் சஞ்சாரத்தில்

ஈடுபட்டிருக்கும் நேரத்தில் ஆயுள் முடிந்து விட்டால் உயிர் திரும்புவதில்லை" என்றார் வேதியர்.

காஞ்சீபுரனின் யோகவலிமை குறித்து கீர்த்திவர்மனுக்கு மலைப்பாகவும் மற்றவர்களுக்கு சற்றே பொறாமையாகவும் இருந்தது.

அதனை மேலும் உயர்த்துவது போல் ஒரு காரியத்தைச் செய்து காட்டினார் வேதியர்.

அதைக் கண்டு பெரிதும் பரவசப்பட்ட துறவிகள் காடக முத்தரையரைக் கட்டிக் கொள்ளவும் செய்தார்கள்.

⌘⌘⌘⌘⌘



33. காஞ்சீபுரன்

பரந்த தன் பரவையுள் நீர்தொடும் பரந்துள்ளவனான திருமாலின் திவ்யதேசங்களால் பெருநகராய்ப் பொலிந்த காஞ்சிமாநகரின் பிரமுகர்கள் காஞ்சீபுரனின் யோகவலிமையைக் கோட்டு மலைத்து கொண்டிருக்கையில் அவனைப் பற்றி முழுவதுமாய் அறிந்து கொள்ளும் நோக்கத்தில் வேதியரைப் பார்த்து, "இவரது பெயரே இது தானா?" என்று கேட்டார்கள்.

"இயற்பெயர் என்ன என்பது யாருக்கும் தெரியாது. இதுவரை அதுபற்றி யாருக்கும் தெரியாது. காஞ்சியின் மீது அவருக்குள்ள அளவற்ற அன்பு காரணமாகவும் காஞ்சிக்கு அவர் பலவிதங்களில் காவல் தெய்வமாய் இருந்ததன் காரணமாகவும் நாங்களாக அவருக்கு சூட்டிய சிறப்புப் பெயர் அது. அதுவே நிலைத்து விட்டது" என்றார் வேதியர்.

"அப்படியானால் காஞ்சியைக் காக்க அவர் தயங்க மாட்டார் அல்லவா?" என்று சாமர்த்தியமாக கேட்டது போல் எண்ணி கேட்டான் கீர்த்திவர்மன்.

"அவர் இருக்கும் வரை காஞ்சிக்கு ஆபத்தில்லை" என்றார் வேதியர்.

அவரது சாதுர்யம் தீயடிகளைச் கூடக் கவர்ந்தது.

"வேதியரே, இவரது மந்திரப் படை வல்லமை பற்றி நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம்" என்று விண்ணப்பித்தார்.

வேதியர் மசியவில்லை.

"மற்றவர் அறிந்து கொள்வதற்காக அவர் அந்த

வல்லமையைப் பெறவில்லை. பேராபத்தான காலங்களில் காக்க வேண்டிய கட்டாயம் வந்தால் அந்த வல்லமையை அவர் காட்டலாம். அது கூட அவர் விரும்பினால் தான்" -என்றார்.

அப்போது காடக முத்தரையர் குறுக்கிட்டு "சுவாமி, ஒரு சந்தேகம்" என்றார்.

"என்ன?"

"மந்திரப் படை வலிமையைப் பற்றி கேட்டிருக்கிறோம். கண்டதில்லை. மந்திரத்தின் சக்தியைப் பற்றிக் கூட நாங்கள் கண்டறிந்ததில்லை. நகரில் கூட மந்திர வலிமையைக் கண்டிராத சிலர் 'மந்திரத்தில் மாங்காய் விழுமா?' என்று கேட்கிறார்கள். அதற்கு எங்களால் பதில் கூற முடிவதில்லை"

"முத்தரையரே, உலகத்தில் அதிகமாக உள்ள வஸ்து கேள்விகள்தான். பதில்கள் கிடைக்கிறதோ இல்லையோ- கேள்விகள் எளிதில் எழுகின்றன. அவசியம் இல்லையென்றாலும் கூட எழக் கூடியவை இக்கேள்விகள்தான். ஆகவே கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை"

"அதெப்படி?" -கேட்டான் கீர்த்திவர்மன்.

"ஐயா, மனித மனத்தைப் போன்ற உயர்ந்த ஒன்று எப்படி இல்லையோ அதே போல மனித மனத்தைப் போன்ற கொடியது வேறொன்று இல்லை. எப்போது எப்படி இயங்கும் என்று அனுமானிக்க முடியாத விந்தைப் பொருள்தான் மனித மனம். இதற்கு என்று இலக்கிட்டு கற்பிக்கப் படும் ஒரு விஷயத்தை எதற்கோ பயன்படுத்தி எதிர்பாராததும் மாறுபட்டதுமான விளைவை உண்டாக்கக் கூடியது மனிதமனம். அறிவை பயன்படுத்திக் கொள்ள மறுப்பதும் மனம்தான். மறப்பதும் மனம்தான். எனவே தான் மனிதன் சொல்லொனா கஷ்டங்களை அனுபவிக்கிறான். இதை உணர்ந்து தான்

பலமகான்கள் மனிதர்களின் பல கேள்விகளுக்கு பதிலளிப்பதில்லை. மந்திரவலிமையும் இத்தகைய ஒன்றுதான். இருப்பினும் உங்களுக்கு இச்சந்தேகத்தை போக்கிக் காட்டுகிறேன்" என்று விளக்கிய வேதியர் அருகே இருந்த பூஞ்செடி ஒன்றைச் சுட்டிக் காட்டி அதன் முன்போய் அமர்ந்தார். பிறகு முத்தரையரை நோக்கி "முத்தரையரே, மந்திரத்தால் மாங்காயை மட்டுமல்ல தேங்காயையும் விழ வைக்க முடியும். இங்கே இரண்டுமில்லை. இந்த பூஞ்செடியை கவனியுங்கள். இச்செடியில் பெரியதாக ஒரு பூ பூத்திருக்கிறது. இதை மந்திரத்தால் விழ வைக்கலாம்" -என்று கூறி கண்களை சிறிது மூடினார். அவரது உடல் கொஞ்சம் கொஞ்சமாய் முறுக்கேறியது. திடீரென கண்களை விழித்த அவரது தீவிழிகள் அப்பூவைக் கொடூரமாக நோக்கின. உதடுகள் சட்டெனப் பிரிந்து மந்திரச் சொற்களை மிகவேகமாகவும் சீராகவும் உச்சரித்தன. அடுத்த கணம் அந்த மலர் அடி பெயர்ந்தது விழுந்தது.

"இதெப்படி சாத்தியம்?" -

வேதியர் அதை விளக்கிக் கூறியபோது அது எவ்வளவு உண்மை என்பது அவர்களுக்கு அழகாகப் புரிந்தது. நம்ப முடியாத விஷயத்தை நம்பும் படி வேதியர் செய்து காட்டிய பின் மந்திரப் படையைப் பற்றிய சந்தேகம் அகன்றது அவர்களுக்கு. காஞ்சீபுரனைப் பற்றிய நம்பிக்கையும் மரியாதையும் உயர்ந்தது. காஞ்சீபுரனின் சீடனே இத்தகைய திறனுடையவனாக இருந்தால் காஞ்சீபுரன் எப்படிப்பட்டவனாய் இருப்பான் என்ற பிரமிப்பு உண்டாயிற்று அவர்களுக்கு. நந்திவர்மன் ஒழிந்தான் என்றே முடிவுசெய்த அவர்கள் காஞ்சீபுரனை அடையாளம் காட்டிய காடக முத்தரையரைப் பாராட்டி அவரைக் கட்டித் தழுவவும் செய்தார்கள்.

பிரமுகர்களின் அதிஷ்டமோ என்னவோ அன்று சீக்கிரமாகவே யோக நிஷ்டையிலிருந்து மீண்டு கண்களை

விழித்தான் காஞ்சீபுரன். வேதியர் வெண்சங்கு ஒன்றை எடுத்து வாயில் வைத்து பலமாக ஊதினார். அதையடுத்து இளம் வேதியர்கள் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் அங்கே வந்து அவனது காலில் விழுந்து வணங்கினார்கள். யாக குண்டலத்தை ஒரு முறை வலம் வந்த பின் பர்ணசாலைக்குள் சென்று அமர்ந்தான் காஞ்சீபுரன். அவனுக்குப் பின்னால் பிரமுகர்களும் முத்தரையரும் வேதியரும் சென்றனர். உள்ளே போய் அனைவரும் அமர்ந்த பின் அனைவரையும் வேதியரே அறிமுகம் செய்து வைத்தார். பிறகு காடக முத்தரையர் பேச முற்பட்டு "காஞ்சியைக் காக்க தங்களிடம் யாசிக்கிறோம்" என்றார். "அதற்கென்ன அவசியம்?" என்று கேட்டான் காஞ்சீபுரன். வார்த்தைகள் உணர்ச்சியின்றி சகஜமாக இருந்தன.

"காப்பதற்கு வேறு வழி இல்லை. ஆகவே, தான் தங்களை நாடினோம்" என்றார் முத்தரையர்.

"இதர வழிகளில் முயன்று தோற்றுவிட்டீர்களா?" - கேட்டான் காஞ்சீபுரன்.

"இதர வழிகளில் முயன்றால் தோற்றுவிடுவோம் என்பதை உணர்ந்ததால் தங்களிடம் முயற்சிக்கிறோம்"

"அப்பேர் பட்ட இக்கெட்டு என்ன?"

"நந்திவர்மனும் நாளிகப் படைகளும் காஞ்சியைத் தாக்கப் போகின்றன. அவற்றைச் சந்திக்கும் பலம் எங்களிடம் இல்லை"

"எப்படிப்பட்ட தாக்குதலையும் சந்திக்கும் பலம் ஒன்று எங்கும் உண்டு"

"அதென்ன?"

"பிறகு சொல்கிறேன். நான் எந்தவகையில் உதவமுடியும் என்று எண்ணியிருக்கிறீர்கள்?"

“தங்களது மந்திரப் படையால் மட்டுமே காஞ்சியைக் காக்க முடியும் என்பது தான் எங்கள் நம்பிக்கை”

“மந்திரப்படையை பிரயோகிப்பதா? அதுவும் நானா?”

“மந்திரப்படை ரகசியங்களை கற்கவும் நாங்கள் தயாராய் இருக்கிறோம். ஆனால் அப்பாக்கியத்தைப் பெற எங்களுக்கு நேரமில்லை. போர் நெருங்கிவிட்டது”

“காஞ்சிக்கும் இந்தத் துறவிகளுக்கும் என்ன சம்மந்தம்?”

“நாங்கள் அமைச்சரவையை நிர்வகிக்கிறோம். விக்கிரமாதித்தரின் கட்டளை அப்படி”- என்று குறுக்கிட்டுச் சொன்னார் தீயடிகள்.

காஞ்சீபுரன் கண்களை மூடி சிறிது நேரம் வரை சிந்தனையில் ஆழ்ந்தான் . பிறகு பேசமுற்பட்டு “காஞ்சி என்னால் காப்பாற்றப்படும். ஆனால் நான்கு நிபந்தனைகள் இருக்கின்றன”-என்றான்.

“கூறுங்கள்” என்றார் தீயடிகள்.

காஞ்சீபுரன் கூறவும் செய்தான். ஆனால் அவனது நிபந்தனைகள் கசந்தது மட்டுமின்றி தங்கள் அடி மடியிலேயே கையை வைப்பதாக அமைந்தது துறவிகளுக்கு. செய்வதறியாது திகைத்தனர்.

காஞ்சீபுரனின் யோகத்திறன் பற்றியோ மந்திரப் படை திறமையைக் குறித்தோ துறவிகளுக்கு சிறிதளவு சந்தேகமும் இல்லை. அவன் தனக்கு அறிமுகமானது தங்களது பாக்கியம் தான் என்று கருதினார்கள் அவர்கள். எனவே நந்திவர்மனை வீழ்த்தி விட்ட மாதிரியும் கீர்த்திவர்மனை சிரச்சேதம் செய்து காஞ்சியை ஏகபோகமாக தன் மகனுக்கு சாசனமாக்கிவிட்ட மாதிரியும் கனவுலகில் துறவிகள் மிதக்க, அதே சமயம்

கீர்த்திவர்மனோ நந்திவர்மன் மாண்டு போய் துறவிகளைப் பரலோகமனுப்பி விட்டு காஞ்சியின் அரியணையில் ஆபத்தில்லாத மன்னனாய் ஆரணங்குகள் சூழ அமர்ந்து விட்ட மாதிரியான கனவில் ஆழ்ந்தான். ஆனால் அவ்வளவு எளிதாகக் கனவு காண்பதற்கில்லை என்பதை உணர்த்துவது போல் நான்கு நிபந்தனைகளை விதித்தான் காஞ்சீபுரன்.

முதலாவது நிபந்தனையாக கூறமுற்பட்ட காஞ்சீபுரன் “மந்திரப்படை பிரயோகத்தை சுயநலத்திற்காகச் செய்வதற்கில்லை. தர்மத்தை நிலைநாட்ட மட்டுமே அரிதாகச் செய்ய வேண்டும். ஆகவே உங்கள் பக்கம் தர்மம் இருந்தாலன்றி நான் உதவ முடியாது” என்றான்.

இதைக் கேட்டு துறவிகளும் கீர்த்திவர்மனும் ‘இதென்னடா வம்பு?’ என்பது போல் சங்கடத்திற்கு ஆளானார்கள். தர்மமாவது! நியாயமாவது. நந்திவர்மனைக் கொன்று நாடாள ஆசைப்படும் நோக்கத்தில் தர்மத்தை எங்கே தேடுவது என்று கேட்டுக் கொண்டார்கள் அவர்கள்.

அவர்களது சங்கடங்களைக் கவனிக்காத காஞ்சீபுரன், “போர் நான் சொல்வது போலத்தான் நடக்க வேண்டும். படைகள் எனது கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். போரில் எனக்கு முழு சுதந்திரம் வேண்டும்” என்று தன் இரண்டாவது நிபந்தனையைச் சொன்னான்.

அவன் சொல்வது போல் விட்டுவிட்டால் அவன் மோசம் செய்து விட்டால் என்னாவது என்ற கவலை துறவிகளுக்கும் கீர்த்திவர்மனுக்கும் ஏற்பட்டது.

காஞ்சீபுரன் தன் மூன்றாவது நிபந்தனையைச் சொன்னான்.

“போரில் வெற்றி பெற்றபின் பஞ்சபூதங்கள் காஞ்சியை விட்டு வெளியேறி விட வேண்டும்”

இந்த நிபந்தனை கீர்த்திவர்மனுக்கு மட்டும் தேனாய் இனித்தது. துறவிகளுக்கோ கடுக்காயாகக் கசந்தது.

"கடைசியாக ஒன்று. போர் முடியும் வரை கோட்டைக்குள் தேவையான மாற்றங்களைச் செய்ய எனக்கு அதிகாரம் வேண்டும்" -என்று தன் கடைசி நிபந்தனையை சொல்லி முடித்தான் காஞ்சீபுரன்.

"நல்லவேளை. அரியணையை எனக்கு விட்டுவிட வேண்டும் என்று கேட்காமலிருந்தானே?" என்றுதான் நினைக்கத் தோன்றியது அனைவருக்கும். மொத்தத்தில் போர் முடியும் வரை காஞ்சியை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது போலிருந்தது நிபந்தனைகள்.

கீர்த்திவர்மனைப் பொறுத்தவரை பின் விளைவுகளைப் பற்றிய நெடிய சிந்தனை எதுவுமில்லை. நந்திவர்மன் சாகவேண்டும் என்ற அளவு மட்டுமே சிந்தித்தான்; விரும்பினான். அந்த சிந்தனைக்கும் விருப்பத்திற்கும் பொறுத்தமானவனாக காஞ்சீபுரன் இருக்கவே அவனது நிபந்தனைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதோடு அவனது நிபந்தனைகளில் துறவிகளை விரட்டியடிக்கும் விஷயமும் இருத்ததால், தான் விரும்பிய ஒன்றைக் காஞ்சீபுரனே செய்து முடிக்கவிருப்பது தன் அதிஷ்டம் தான் என்றெண்ணி மகிழ்ச்சியே அடைந்தான். எல்லாவற்றுக்கும் மேலாக காரியம் முடிந்த பின் காஞ்சீபுரனை கைலாயத்திற்கு அனுப்பிவிடும் எண்ணமும் அவனிடம் இருந்ததால் நிபந்தனைகளை மறுக்கும் நிலையில் இல்லை.

பஞ்ச பூதங்களின் நிலையோ வேறு. நந்திவர்மனை ஒழிப்பதில் அவர்களுக்குக் கருத்து வேறுபாடு எதுவுமில்லை. ஆனால் அவனை ஒழித்தபின் என்ன நடக்க வேண்டும் என்பதில் அவர்களுக்குப் பெரும் கனவே உண்டாகியிருந்தது. கீர்த்திவர்மன் காஞ்சியின் மன்னனாகி கீர்த்தியுடன்

வாழ்வதற்காக நிறைவேறவேண்டுமானால் அதற்கு நந்திவர்மன் சாகவேண்டியது இன்றியமையாதது என்ற அளவிலேயே அவனை வீழ்த்த விரும்பினார்கள். ஆனால் சரிவர புரிந்து கொள்ள முடியாத காஞ்சீபுரனின் நிபந்தனை தங்களது கனவுகளை ஆரம்பத்திலேயே சிதைத்துவிடும் போல் இருந்ததால் அவனை எந்த அளவிற்கு நம்புவது என்றும் தெரியவில்லை. தங்களுக்கு ஒன்றும் தெரியாத மந்திரப்படையைப் பற்றிச் சகலமும் தெரிந்த காஞ்சீபுரனிடம் காஞ்சியையும் படைகளையும் ஒப்படைத்து சுதந்திரம் அளிக்கும் பட்சத்தில் அவன் அதையெல்லாம் சாதகமாக்கிக் கொண்டு தங்களையும் காஞ்சீபுரத்தையும் களீபரம் செய்துவிட்டால் என்னாவது என்று யோசித்தார் தீயடிகள். “சரி இதை விட்டால் வேறுவழியும் இல்லை. நிபந்தனைகள் ஏற்று என்ன நடக்கிறது என்று தான் பார்ப்போம். இக்காஞ்சீபுரன் ஏதாவது வாலை ஆட்ட முற்பட்டால் வாதாபியில் கற்ற சித்திரவதைகள் அனைத்தையும் இவனுக்குச் செய்து பாடம் கற்பிப்போம். தற்போதைக்கு அடங்குவது போல் நடிப்போம்” என்று தீர்மானித்தவராய் நிபந்தனைகளை ஏற்றனர்.

காஞ்சீபுரன் மறுநாள் வருவதாகச் சொல்லவே முன்பாகப் புறப்பட்ட துறவிகளும் கீர்த்திவர்மனும் அவனை வரவேற்க சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர்கள் அனுப்பிய தேரில் ஏறாமல் காடக முத்தரையரையும் காரியஸ்தரையும் ஏறச் சொல்லிவிட்டு புரவியில் ஏறி கம்பீரமாக கோட்டையில் நுழைந்தான் காஞ்சீபுரன். அங்கிருந்த சமணர்கள் அனைவரையும் திரட்டி பிரம்மாண்டமாக வரவேற்றார் தீயடிகள்.

காஞ்சீபுரன் அரண்மனையை அடுத்த விருந்தினர் மாளிகையிலேயே தங்கினான். ஒரு வார காலம் வரை ஒருவரோடும் பேசவில்லை. யாகங்கள் செய்வதிலேயே இருந்தான்.

இந்த இரு வாரத்தில் கீர்த்திவர்மன் தன்னிடம் கூறியிருந்த ரகசியக் கட்டளைகள் நான்கில் ஒன்றைத் தவிர மூன்றை நிறைவேற்றினார் தீயடிகள். எனவே காஞ்சியின் சுரங்கப் பாதைகள் அடைக்கப்பட்டு காவலுக்கு உட்படுத்தப்பட்டன. விஜயஸ்கந்தவர்மன் தனி அந்தஸ்து பெற்ற தளபதியாக்கப்பட்டு நந்திவர்மனைப்பற்றி உளவறிய அனுப்பி வைக்கப்பட்டான்.

அதேபோல் பஞ்சபூதங்கள் தாங்கள் திட்டமிட்டபடி காஞ்சி நகருக்குள் உண்டாக்கியிருந்த கெடுபிடிகளை அறவே நீக்கினார்கள். புதிய வரிகள் மட்டுமின்றி பழைய வரிகளும் விலக்கப்பட்டன. கோயில்களும் கலை நிகழ்ச்சிகளும் பழையபடி சுதந்திரமாக இயங்கின. மக்களுக்கு எதிலும் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. இவற்றைச் செய்வதற்கு முன் கீர்த்திவர்மனிடம் பெயருக்கு ஒப்புதல் வாங்கிக் கொண்டார்கள்.

மக்களுக்கு எதுவும் புரியவில்லை. சாதரணமாக போர் நேரக்கூடிய சந்தர்ப்பங்களில் கோட்டைக்குள் கெடுபிடிகள் அதிகமாவது வழக்கமாக இருக்க, தற்போதோ நேரெதிராக நடைபெறுவது அவர்களுக்கு வியப்பை அளித்தன. அதே சமயம் விலங்குகள் உடைபட்ட நிலையில் ஆனந்தமே அடைந்தார்கள். ஆலயங்களில் எல்லாம் வேத கோஷமும் நாத கோஷமும் எழுந்து தெய்வத்திருநகருக்கு புதுக்களையை உண்டாக்கியது.

⌘

ஒருவார காலம் கழிந்த பின் கோட்டையைச் சுற்றிப் பார்க்க விரும்பினான் காஞ்சீபுரன். பஞ்சபூதங்களே முன்வந்து காஞ்சி நகரின் அனைத்துப் பகுதிகளையும் ஆலயங்களையும் காட்டினார்கள். ஊரில் கெடுபிடிகள் நீக்கப்பட்ட

விஷயத்தையும் சுட்டிக் காட்டினார் தீயடிகள். காஞ்சீபுரன் ஒன்றும் சொல்லவில்லை.

பிறகு படைத்தளங்களைக் காட்டி சேனாதிபதி ராவணனை அறிமுகம் செய்து வைத்தார் அடிகள். படைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை வினவினான் காஞ்சீபுரன். ராவணன் அதற்குப் பதில் கூறியதும் “இப்படை நீங்கள் சாளுக்கிய நாட்டிலிருந்து வந்த போது கொண்டு வந்ததா?” என்று கேட்டான் காஞ்சீபுரன்.

“ஆம்” -என்றான் ராவணன்.

“இங்கு வந்தபின் ஏன் படை திரட்டவில்லை”- வினவினான் காஞ்சீபுரன்.

என்னவென்று பதில் சொல்வான் ராவணன்? பணம் திரட்டிக் கொண்டிருந்தோமே தவிர வேறெதையும் உருப்படியாகச் செய்யவில்லை என்றா சொல்லமுடியும்?

“இல்லை”-என்றான்.

“காரணம்?”

“காஞ்சியில் இன்னும் நிலைமை ஸ்திரப்படவில்லை”

“இங்கே நிலைமை ஸ்திரப்படும் வரை எதிரி காத்துக் கொண்டிருப்பானா? படையெடுத்து வந்து கோட்டையையோ ஊரையோ கைப்பற்றிய பின் சேனாதிபதி செய்ய வேண்டிய முதல் வேலை ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசங்களிலிருந்து படை திரட்டுவது தான். நாம் படைதிரட்டும் வேகத்தைப் பார்த்து எதிரி திகைக்க வேண்டும். தளர்ச்சியடைய வேண்டும். இதைச் செய்யாமல் இந்த சொற்பப்படையை எந்த நம்பிக்கையில் நந்திவர்மனை முறியடிக்க நிறுத்தியிருக்கிறாய்?”-என்று கேட்டான் காஞ்சீபுரன்.

ராவணன் மட்டுமல்ல துறவிகள் கூட அவன் கூறியதிலிருந்த உண்மையை நன்றாகவே உணர்ந்தார்கள்.

பிறகு காஞ்சீபுரன் போர் ஆயுதங்கள் முதலியவைகளையும் பார்த்தான். அப்போது கோட்டைக் கதவுகளைக் கவனித்த அவன் “கோட்டைக் கதவுகள் ஏன் திறந்திருக்கின்றன?” என்று கேட்டான்.

“காஞ்சியில் மக்களுக்கிருந்த கட்டுப்பாடுகளைக் கீர்த்திவர்மர் நீக்கச் சொன்னார். ஆகவே தான் கோட்டைக் கதவுகளையும் திறந்து விட்டிருக்கிறோம்”-என்றார் தீயடிகள்.

“நீக்கப்பட வேண்டிய கெடுபிடிகள் ஊரில் தானேயன்றி கோட்டைக் காவலில் அல்ல. கதவுகள் அனைத்தையும் மூடுங்கள். கடும் காவலையும் கண்காணிப்பையும் ஏற்படுத்துங்கள். யாரையும் சோதிக்காமல் உள்ளே விடவேண்டாம். ஒற்றர்கள் சிக்கினால் என்னிடம்கொண்டு வாருங்கள்”

காஞ்சீபுரனின் எச்சரிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்ததைக் கண்ட ராவணனும் துறவிகளும் அவனது கட்டளைகளை உடனடியாக நிறைவேற்றினார்கள்.

காஞ்சீபுரன் தினந்தோறும் கோட்டையின் நிலவரத்தை அறிவதும் தேவையான கட்டளைகளை இடுவதுமாய் இருந்தான்.

ஒரு கட்டத்தில் நாளிகப்படைகளையும் தயாராகிக்கும் படி ஆலோசனை கூறி அவைகளைத் தயாராகியிருக்கும் முறைகளையும் விளக்கி உதவினான். அதையடுத்து கணிசமான நாளிகக் கருவிகள் உருவாகவும் செய்தன. அவற்றைக் கோட்டையில் எங்கெங்கே பொருத்த வேண்டும் என்பதிலும் காஞ்சீபுரன் திட்டமான உத்தரவுகளைப் பிறப்பித்தான். உறங்கிக் கிடந்த படை உயிர்த்தெழுந்தது.

கோட்டைக்குள் நடந்த போர் முழுமை பெற்றன. எதிரியைச் சந்திக்க காஞ்சி தயாராய் நின்றது.

ஆனால் எதிரியைத்தான் காணவில்லை. மாதங்கள் மூன்று கடந்தும் தலைகாட்டவில்லை. அவன் எங்கிருக்கிறான் என்பதற்கான தடயமும் கிடைக்கவில்லை. என்னானான் அவன் என்று அனைவரும் வியந்தார்கள். நிலைமை தங்களுக்குச் சாதகமாக அமைவதாகக் கருதிய தீயடிகள் காஞ்சீபுரனை ஒழித்துவிடும் திட்டம் ஒன்றைத் தீட்டினார்.

அப்போது காவலர்கள் அவருக்கு முன்னால் ஒரு பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"பெண்ணே, உனக்கென்ன வேண்டும்?"-என்று கேட்டார் அடிகள்.

"உயிரொன்று வேண்டும்"-என்றாள் அவள்

"யாரது உயிர்?"-கேட்டார் அடிகள்.

"நந்திவர்மனின் உயிர்"

"நீ யார்?"

சொன்னாள் அவள்.

"ராஷ்டிர கூட இளவரசி ரேவாதேவி"

⌘⌘⌘⌘

34. தீயடிகளின் கனவு

சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச் சுவையூறொலி நாற்றமும் தோற்றமுமாய் விளங்கும் பெருமானின் அருள் நிழலில் பொலித்த காஞ்சியைப் பாதுகாக்க காஞ்சீபுரன் செய்த சகலவிதமான ஏற்பாடுகளால் பெரும் சாந்தியடைந்த தீயடிகள் இனி அக்காஞ்சீபுரனின் துணை தேவையில்லை என்று கருதியவராய் அவனை ஒழிக்க திட்டமிட்ட வேளையில் நந்திவர்மனின் உயிரைக் கேட்டபடி வந்து நின்ற ரேவாதேவியைக் கண்டபோது தனது அதிஷ்டத்தை எண்ணி பெருவுவகை கொண்டார். சுக்கிர திசை தனக்கு உச்சத்தில் இருப்பதாய்க் கருதி பேரானந்தம் கொண்டார்.

சாளுக்கிய நாட்டின் பக்கத்து நாடான ராஷ்டிர கூடத்துடன் விக்கிரமாதித்தனுக்கு அவ்வளவாக பிணைப்போ பாசமோ இல்லாதிருந்த நிலையில் ராஷ்டிர கூட இளவரசியின் வரவு பலவிதங்களில் உதவக்கூடும் என்று கணக்கிட்டார் தீயடிகள். அதுவும் அந்த இளவரசி தனக்கு வேண்டாத நந்திவர்மனின் உயிரைக் கேட்டு வந்தது பழம் நழுவி பாலில் விழுந்தமாதிரி இருந்தது அவருக்கு. தற்போதைய இக்கெட்டான நிலையில் விக்கிரமாதித்தனின் ஒத்துழைப்பு கிடைக்காத நிலையில் ரேவாதேவியின் மூலம் ராஷ்டிர கூடத்தின் ஒத்துழைப்பு கிடைத்து விட்டால் தன் எதிர்காலத்தை அசைக்க நந்திவர்மனென்ன நந்திதேவரே வந்தாலும் முடியாது என்று கருதினார். எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தவராய் இளவரசியை மரியாதையோடு வரவேற்று உபசரித்தார். இளவரசி சிரமபரிகாரங்களை முடித்து வரும் வரை காத்திருந்தார்.

இளவரசி வந்து அமர்ந்ததும் "இளவரசி, நீங்கள் காஞ்சிக்கு வந்ததில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி, நீங்கள்

வருவதாகச் செய்தி அனுப்பியிருந்தால் பிரமாதமான பட்டிணப் பிரவேசத்திற்கு ஏற்பாடு செய்திருப்பேன். திடீரென்று வந்து விட்டீர்கள். அடையாளம் தெரியாத நிலை. கோட்டை கெடுபிடிவேறு. ஆகவேதான் காவலர்கள் உங்களை சரிவர வரவேற்கவில்லை. மன்னிக்க வேண்டும்" என்றார் தீயடிகள் பவ்யமாக.

"தவறு என் மீதுதான். அதேசமயம் சொல்லிவிட்டு வரும் நிலையில் நானில்லை. நான் புறப்பட்டதே அசந்தர்ப்பம்தான்" என்றாள் ரேவாதேவி.

"அப்படி சொல்லாதீர்கள் தேவி. உங்கள் வரவு எங்கள் பாக்கியம். அதோடு நீங்கள் வந்த நேரமும் நல்ல நேரம் தான்"

"அடிகளே, தாங்கள் யார் என்பது தெரியவில்லை. உங்களிடம் என்னை ஏன் அழைத்து வந்தார்கள் என்பதும் தெரியவில்லை"

"தேவி, இக்கோட்டையைக் கைப்பற்றிய சாளுக்கிய இளவரசர் கீர்த்திவர்மருக்கு காவலாக எங்களை நியமித்தார் விக்கிரமாதித்த பூபதி. நான் அமைச்சராய் இருந்து இளவரசரைக் காத்து வருகிறேன். தாங்கள் வந்திருப்பது தெரிந்தால் இளவரசர் மகிழ்ச்சியடைவார். சென்று பார்க்கலாமா?"

"அடிகளே, ராஷ்டிரகூடத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து நான் பார்க்க விரும்புவது நந்திவர்மனைத்தான். பெற விரும்புவது அவன் உயிரைத்தான்" - அசதியுடன் சொன்னாள் இளவரசி.

"மிகவும் வேதனையில் இருக்கிறீர்கள் போலிருக்கிறது. தேவி, நந்திவர்மனின் மரணத்தை விரும்பும் அளவிற்குத் தங்களுக்கு நேர்ந்த துன்பம் என்ன?"

"அடிகளே, நான் இளவரசியானாலும் ஒரு பெண். பெண்ணொருத்தியால் தன் இன்னல்களைப் பற்றி ஓரளவிற்குத் தான் வெளிப்படுத்த முடியும். என் துன்பத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதே பெரிய துன்பமாக இருப்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்?"

"புரிகிறது தேவி. புரிகிறது. நீங்கள் எதுவும் பேசவேண்டாம். பெண்களுக்கு அதிகமான துன்பமாக அமையக் கூடியது மானபங்கம் தான். அநேகமாக நந்திவர்மன் உங்களுக்கு அந்த வகையில்தான் துன்பமிழைத்திருக்க வேண்டும். எந்த வகையில் துன்பம் கொடுத்திருந்தாலும் சரி அவன் தண்டிக்கப்பட வேண்டியவன் தான். ஆனாலும் தேவி, அவனின்று ஆண்டவனால் தண்டிக்கப்பட்டு விட்டான். நாடிழந்து நல்லோரின் துணையிழந்து பராரியாக அலைகிறான்"

"ஐயா, எனக்கிழைக்கப்பட்ட துன்பத்திற்கு நான் அளிக்கும் தண்டனை தான் எனக்கு நிம்மதியை அளிக்கும்"

"உண்மையான வார்த்தை. உங்கள் விருப்பப்படி நடக்கத்தான் போகிறது. ஏனென்றால் நாங்களும் அவனுக்கு வலைவிரித்து விட்டு அவனது வரவுக்குத்தான் காத்திருக்கிறோம். பிடிக்கும் வேலை எங்களுக்கு. உயிரைப் பிரிக்கும் வாய்ப்பு உங்களுக்கு. கவலை வேண்டாம்."

"எனக்கு நம்பிக்கையில்லை அடிகளே"

"ஏன்?"

"பல்லவ நாட்டில் எல்லோருமே துரோகிகளாக இருக்கிறார்கள். உங்களைப் போலத்தான் வேறொருவர் உறுதியளித்தார். நாட்கள் பற்பல ஓடியது தான் மிச்சம். ஆளையே காணோம்"

“தேவி, நாங்கள் பல்லவர்கள் அல்லர். சாளுக்கியர்கள். அதுவும் தங்களது அண்டை நாட்டினர். அதோடு நான் துறவி. துரோகம் இழைக்கும் பண்போ, அவசியமோ எனக்கில்லை. அதோடு ஊர் பேர் தெரியாத யாரோ ஒருவன் ஏமாற்றியதை வைத்துக் கொண்டு எங்களை எடை போடாதீர்கள். ராஜீய ரீதியில் நாங்கள் முயல்கிறோம். இதில் ஏமாறுவதற்கு வழியில்லை. நீங்கள் நம்பலாம்”

“நம்புகிறேன் அடிகளே. நம்பி ஏமாந்தாலும் நம்பிக்கையை விட்டுவிட முடியவில்லை. ஆயுள் முழுவதும் நான் கன்னியாகவே கழித்தாலும் சரி என் நம்பிக்கையையோ முயற்சியையோ விட்டுவிட நான் தயாராக இல்லை”

“அதற்கு அவசியம் வராது தேவி. உங்கள் காரியம் விரைவில் நிறைவேறும். நீங்கள் கன்னியாகவே இருந்து இன்னல் படவேண்டியதில்லை. பெரும் ராஜாங்கத்தின் அரசகுமாரியான உங்களைக் கரம்பிடிக்க பாரத மன்னர்கள் பலர் போட்டியிட்டு வருவார்கள். அப்போட்டியில் சாளுக்கிய சாம்ராஜ்யமும் போட்டியிடும். எங்கள் இளவரசர் கீர்த்திவர்மரும் போட்டியிடுவார். அவர் மறுத்தாலும் நான் கட்டாயப்படுத்துவேன். பெரும்பாக்கியம் எங்கள் நாட்டிற்கு வந்து சேர தளராமல் முயல்வேன்”....

துறவியின் பேச்சைக் கேட்டு லேசாக நகைத்தாள் அரசகுமாரி.

“துறவியின் பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. துறவி முயலக் கூடியா காரியமா இது?” என்று கேட்டாள் அவள்.

“எங்கள் நாட்டு அரியணைக்கு தாங்கள் கிடைப்பதானால் துறவறத்திற்கு நான் முழுக்கு போடவும் தயார்”.

இதைக் கேட்டு கலகலவென்று சிரித்தாள் ரேவாதேவி.

“அரசகுமாரிகள் இப்படித்தான் சிரிக்க வேண்டும். அதுதான் அழகு. நீங்கள் சிரிக்கவும் ரசிக்கவும் ஏராளமான கலையம்சம்சங்கள் காஞ்சியில் உள்ளன. இன்று முதல் நீங்கள் அவற்றைக் கண்டு களிக்கலாம்” என்றார் தீயடிகள்.

பேச்சோடு விட்டு விடவில்லை. காரியஸ்தரை கூட அனுப்பி ரேவாதேவி காஞ்சி நகரையும் காஞ்சிக் கலைகளையும் காணவும் ரசிக்கவும் மயங்கவும் ஏற்பாடு செய்தார்.

இதற்கிடையில் அவரது வஞ்சகங்களும் நடைபெறலாயின.

காஞ்சி நகரில் கெடுபிடிகளைத் தளர்த்தியதைக் கண்டு வெகுண்டிருந்த திருப்பருத்திக் குன்ற சமணர்களிடம் “நான் என்ன செய்வது? எல்லாம் அந்த காஞ்சீபுரனின் வேலை. காஞ்சியைக் காப்பதற்கென்று இப்படியெல்லாம் செய்திருக்கிறார். நான் தடை சொன்னால் காஞ்சியை பறிகொடுக்கவே ஈடுபடுகிறேன் என்று பழிதான் வரும். காஞ்சீபுரனை யாரும் கேள்வி கேட்க முடியாது என்று கூறி அவர்களுக்கு கொம்பு சீவி விட்டார். நாளை அவனுக்கு ஏதாவது ஏடாகூடமாகி விட்டால் பழியைக் காஞ்சீபுரன் மீது மொத்தமாகப் போட்டு விடலாம் என்றும் அப்படிப் போட்டுவிட்டால் தனிப்பட்ட யாரையும் தண்டிக்க முடியாது என்றும் கணக்கு போட்டார்.

அதேபோல் கோட்டையைக் காக்கும் வீரர்களிடமும் மித்ர பேத வித்தினை விதித்தார். “என்னிடமோ, இளவரசரிடமோ, ராவணனிடமோ அவருக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே தான் உங்களை எல்லாம் தன் கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொண்டு கண்டபடியெல்லாம் கெடுபிடிகள் செய்கிறார். அவரது உதவி வேண்டாம் என்று வேண்டிக் கொண்டாலும் அவர் கேட்பதாக இல்லை. மந்திரம் மாயம் என்று ஏதேதோ சக்தியிருப்பதால் அவரைக் கண்டிப்பது முடியாமலிருக்கிறது. நான் எதிர்க்கத்

தயார். ஆனால் அதற்கான கோபத்தை உங்கள் மீது காட்டி விட்டால் ஏதுமறியாத நீங்கள் தான் கஷ்டப் படுவீர்கள்" என்று நல்ல பிள்ளையைப் போல் பேசினார். சமயத்தில் காஞ்சீபுரன் ஏதாவது ரகளை செய்ய முற்பட்டால் அவருக்கு எதிராகப் படைகளைத் திருப்பி விட இந்த மித்ர பேதம் உதவும் என்பது அவரது கருத்தாய் இருந்தது.

மக்களையும் அவ்வப்போது சந்தித்து காஞ்சீபுரனுக்கு அளிக்கப்பட்டுள்ள அபரிமிதமான அதிகாரங்களைப் பற்றிப் பேசவும் செய்தார் தீயடிகள். அந்த அதிகாரங்கள் காஞ்சீபுரன் கேட்டுப் பெறப்பட்டவை என்றும் காஞ்சியைக் காக்கும் பணிக்காவே அளிக்கப்பட்டவை என்றும் காஞ்சியைக் காக்கும் பொறுப்பு அவனையே சாரும் என்றும் பிரச்சாரம் செய்து வைத்தார். நாளை காஞ்சிக்கு ஏதாவது நேர்ந்தாலும் சரி-அல்லது காஞ்சிக்குத் தாமாக ஏதாவது நாசத்தை விளைவித்தாலும் சரி-அதற்கானப் பழி காஞ்சீபுரனின் தலையில் விழ இப்பிரச்சாரங்கள் தோதாக இருக்கும் என்று கருதினார்.

மேலும் ரேவாதேவியின் அன்னியோன்யத்திற்கும் ஆளாகி தந்திரமாக அவளிடமிருந்து ராஷ்டிரகூடமன்னன். தந்திதுர்க்கனுக்கு ஓலையொன்றை எழுதி வாங்கிக் கொண்டார் அடிகள். அந்த ஓலையில் ரேவாதேவி காஞ்சியில் நந்திவர்மனிடம் சிக்கிக் கொண்டதாகவும் தன்னை விடுவிக்க பெரும் படை திரட்டி உடனடியாக வரவேண்டும் என்றும் தந்திதுர்க்கனுக்கு இளவரசி எழுதியிருந்தாள். ஒரு வேலை கோட்டையை நந்திவர்மன் மீண்டும் பிடித்து விட்டால் ராஷ்டிரகூட படைகள் உதவியோடு மீண்டும் ஒரு கை பார்க்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டார்.

இப்படி சகல வழிகளிலும் தனக்கு சாதகமான சூழ்நிலையையும் காஞ்சீபுரனுக்குப் பாதகமான சூழ்நிலையையும் உண்டாக்கி விட்டதற்காக தனக்குத் தானே மெச்சிக் கொண்டார் தீயடிகள். காஞ்சீபுரன் உண்டாக்கிய பாதுகாப்பு

முறை, தாக்குதல் முறை மற்றும் நாளிகப் படையின் அமைப்பு ஆகியவற்றை எண்ணிப் பார்த்தபோது தன்னாலேயே நந்திவர்மனைத் தோற்கடிக்க முடியுமென்றும் காஞ்சீபுரனோ அவனது மந்திரப் படையோ தேவையில்லை என்று தோன்றியது அவருக்கு. எனவே தான் காஞ்சீபுரனை அழிக்க நாள் குறிக்கும் வேலையில் இறங்கினார் தீயடிகள்.

இதற்கிடையில் அவரது பிரச்சாரங்களும் மித்ரபேத முயற்சிகளும் ஆங்காங்கே புகைந்து கொண்டிருந்ததைக் கண்ட காடக முத்தரையர் தீயடிகளிடம் வந்து விசாரித்தார்.

எல்லாம் தன் தந்திரம் தான் என்பதை வெளிப்படையாகவே ஒப்புக் கொண்ட அவர் “நந்திவர்மனையும் காஞ்சீபுரனையும் ஒரே சமயத்தில் ஒழிக்கக் கூடிய வேளை வந்து விட்டது” என்றார்.

“காஞ்சீபுரனை ஏன் அழிக்க வேண்டும்? அவன் நமக்கு உதவுவதற்காகத் தானே வந்திருக்கிறான்? இதுவரை அவன் செய்துள்ள ஏறபாடுகள் நமக்கு எவ்வளவு சாதகமானவை? அப்படி இருக்கையில் அவனை அழிக்க முனைவது எப்படி தர்மமாகும்?” என்று கேட்டார் முத்தரையர்.

“முத்தரையரே, நீர் மகாபாரதம் படித்தவர். அதில் துரோணர் ஆயுதங்களையெல்லாம் எறிந்து விட்டு நிராயுதபாணியாய் நின்ற போது அவரை வெட்டிக் கொன்றான் பாண்டவர் தளபதி திருஷ்டத்துமனன். அது எந்த தர்மத்தில் சேர்ந்தது?” என்று கேட்டார் அடிகள்.

தீயடிகள் மகாபாரத தர்மம் பற்றி பேசியது விந்தையாக இருந்தது முத்தரையருக்கு.

அடிகள் மேலும் தொடர்ந்து “துரோணரை அந்தச் சமயத்தில் தவற விட்டால் பிறகு கொல்வதென்பது இயலாத காரியம். அதை உணர்ந்து தான் வாசுதேவனே அந்த அதர்மப்

போரை தடுக்கவில்லை. அரசியல் மற்றும் போர் ஆகியவற்றில் சந்தர்ப்பம் தான் சிறந்த ஆயுதம். அதைப் பயன்படுத்திக் கொள்ளாதவன் அறிவிலி"-என்றார்.

தீயடிகளையும் காஞ்சீபுரனையும் ஒப்பிட்டுப் பார்த்தார் முத்தரையர். தர்மம் இருக்கும் பக்கமே உதவ முடியும் என்று சொன்ன காஞ்சீபுரன் எங்கே? சந்தர்ப்பம் சாதகமாக வந்தால் எந்த அதர்மத்துக்கும் தயாராகும் சமண அடிகள் எங்கே என்று கேட்டுக் கொண்ட அவருக்கு தீயடிகள் மீது வெறுப்பே உண்டாயிற்று. அவருடன் மேன்மேலும் ஒட்டி உறவாட அவர் விரும்பவில்லை. தான் விரும்பினால் கூட சமயம் வரும் போது காஞ்சீபுரனை ஒழிக்க நினைத்தது போல் தன்னையும் ஒழிக்க அவனுக்கு அதிக நேரம் பிடிக்காது என்பதை உணர்ந்த அவர் ஒதுங்கிக் கொள்ளத் தீர்மானித்தார். தீயடிகள் முன்பு அவரது நம்பிக்கையைப் பெற பிணைக் கைதியாகப் பிடித்து வைத்திருந்த அவரது மகளை அவரிடமே ஒப்படைத்து விட்டிருந்ததால் இனியும் அடிகளாரின் தயவு அவருக்குத் தேவையில்லாதிருந்தது. எனவே, தீவிர யோசனையில் ஆழ்ந்தார்.

இப்படி சகல விதங்களிலும் ஆனந்தப்பட்டு காஞ்சீபுரனை ஒழிக்க தீயடிகள் நாள் பார்த்த சமயத்தில் தான் அவரை ஒழிக்க காஞ்சீபுரனிடம் விவாதித்துக் கொண்டிருந்தான் விஜயஸ்கந்தவர்மன்.

⌘⌘⌘⌘⌘

35. விவேக எண்ணங்கள்

அன்பாவாய் ஆரமுதமாவாய் அடியேனுக்கு இன்பாவாய் எல்லாமும் நீயாவாய் என அடியார்கள் என்றும் தொழும் எம்பெருமானின் ஆலயங்கள் காணுமிடமெல்லாம் காட்சியளித்து நான் எங்குமிருக்கிறேன் என்ற இறை தத்துவத்தை உணர்த்தும் காஞ்சி மாநகரில் தும்பை வனத்தில் கிடந்த விஜயஸ்கந்தவர்மனின் மனம் மிகவும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தது.

பருவம் வந்த நாளிலிருந்து பல்லவர் பட்டத்திற்குத் தான் தான் சொந்தக்காரன் என்று உரிமை கொண்டாடி அந்த உரிமைக்கு அவன் மட்டுமே குரல் கொடுக்கும் அவல நிலையில் சிறிதும் சளைக்காமல் கிடைத்த வழிகளில் எல்லாம் போராடியதையும் அந்தப் போராட்டத்திற்கு ஆண்டுகள் பலவாகியும் பலன் ஏதும் கிடைக்காமல் போனதையும் எண்ணிச் சேர்ந்து போயிருந்தான் விஜயஸ்கந்தவர்மன்.

அரியணை ஏறும் விஷயத்தில் அரைகுறையான உரிமை இருப்பதை விட மக்களின் ஆதரவும் மற்றவர்களின் விருப்பமும் தான் முக்கியமானது என்பதையும் அதுதான் சாதகமானது என்பதையும் தற்போது அவனால் அறியமுடிந்தது. அது மட்டுமல்ல. லட்சியத்தை அடைய விரும்பும் நோக்கத்தை விட அதை அடைவதற்கான வழிகளை சரியாகத் தெரிந்திருந்து கடைபிடிக்க வேண்டும் என்பதையும் கிடைத்த வழியை எல்லாம் கண்டபடி ஏற்று செயற்பட்டால் லட்சியத்தை விட்டு வெகுதூரம் விலகத்தான் முடியும் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

காஞ்சி அரியணையில் அமர்வதென்பது இனி நடக்காத காரியம் என்பது திட்டவட்டமாக அவனுக்குப் புரிந்து விட்டது. பலவாறு முயன்று தோற்ற அவன் கீர்த்திவர்மனின் உளவாளியாகப் போய் நட்பைப் பெற முயன்று அதிலும் தோற்று, முடிவில் பஞ்ச பூதங்களால் அழைக்கப்பட்டு அவர்களால் தளபதி பட்டத்தைப் பெற்றபோது கூட அவனிடம் அரியணை நம்பிக்கை ஓரளவிற்கு இருந்தது. ஆனால் ராவணனுடன் பணியாற்றிய போது தான் பெயரளவுக்கு மட்டுமே தளபதி என்பதையும் தனக்கென்று அதிகாரம் எதுவும் கிடையாது என்பதையும் அறிந்த போது கஷ்டமாக இருந்தது. பின்னர் ராவணனின் பிடியிலிருந்து விலக்கி கீர்த்திவர்மன் தன்னை தனி அந்தஸ்த்தில் வைத்தபோது மகிழ்ந்தாலும் தனக்கு நந்திவர்மனைப் பற்றி ஒற்றறியும் வேலையை மட்டுமே கொடுத்தபோது அவனுக்கு அலுத்துப்போயிற்று. இந்தச் சாளுக்கியர்களுக்கும் சரி, சமணத் துறவிகளுக்கும் சரி தன்னை வெறும் கறிவேப்பிலையாகத் தான் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு வெற்றி கிடைத்தபின் தன்னை அக்கறிவேப்பிலை போல் வீசியெறிந்து விடுவார்கள் என்பதையும் உணர்ந்த அவனுக்கு இனி இச்சாளுக்கியர்களை நம்பிப் பயனில்லை என்பது புரிந்தது. சாளுக்கியர்கள் என்ன - யாரையும் நம்பிப் பயனில்லை என்பதும் புரிந்தது. தான் நினைத்து ஈடுபட்ட துரோகங்களுக்கு இனி ஆண்டவன் கூட இரக்கப் பட போவதில்லை என்று கருதினான்.

அரியணை ஏமாற்றத்தை விட அதிக ஏமாற்றத்தையும் வேதனையையும் ஆரணங்கு விஷயத்தில் அடைந்திருந்தான் அவன். தனது ஆருயிர் காதலியான தும்பை வனத்து மோகினியை கீர்த்திவர்மன் அபகரித்துப் போய் தன்

அந்தப்புரத்தில் சேர்த்து விட்டது அவனுக்கு அதிர்ச்சியாகவும் அவமானமாகவும் இருந்தது. தும்பை வனத்து மோகினியை கீர்த்திவர்மன் விஷயத்தில் ஒரு தூண்டிலைப் போல் மட்டுமே பயன்படுத்தும் நோக்கத்தில் இருந்தான் விஜயஸ்கந்தவர்மன். கீர்த்திவர்மன் காஞ்சிக்கு வருவதற்கு முன்னால் அவளைப் பேயாக நடிக்க வைத்து அரசியல் பிரமுகர்களையும் மற்றவர்களையும் தும்பை வனத்தில் கடத்தி அங்கிருந்து நிலவறைச் சிறையில் வைத்து அரசியல் ஆதாயங்களைத் தேடி தோற்றுப் போனது மட்டுமின்றி தும்பை வனத்து மோகினியை அபகரித்த போதே அவள் மூலம் நிலவறைச் சிறையில் இருந்த பிரமுகர்களை கீர்த்திவர்மன் விடுவித்து காஞ்சி சிறையில் தள்ளி விட்டது பெரும் ஏமாற்றமாய் அமைந்தது பல்லவ அரச குமாரனுக்கு. அதோடு பேய் பயமும் ஒழிந்தது.

ஆனால் அது கூட அவனை அவ்வளவாக பாதிக்கவில்லை. அந்த கீர்த்திவர்மன் தனக்குரியவளை ஆரம்பத்திலேயே மடக்கி விட்டது தான் அவனை வெகுவாகப் பாதித்தது. அவளுக்கு முன்பாகவே தன்னை அவமானப்படுத்தியதும் அவளை அடிக்கடி அரண்மனைக்கே வரவழைத்து சரசமாட முயன்றதும் அவனிடம் கொதிப்பை உண்டாக்கியிருந்தன. எப்படியாவது அவளை மீட்கலாம் என்றிருந்த போதுதான் கீர்த்திவர்மன் தன்னை அடியோடு ஏமாற்றி தும்பை வனத்து மோகினியை ராமாயணத்து ராவணனைப் போல் கவர்ந்து சென்று அந்தப்புரத்தில் சேர்த்திருந்தான். அது தெரிந்து அவனிடமே சென்று முறையிட்ட போது அவன் சொன்ன வார்த்தைகள் விஜயஸ்கந்தவர்மனை நெஞ்சம் பிளக்கும் நிலைக்குத் தள்ளியிருந்தது.

“கவலைப் படாதே விஜயஸ்கந்தவர்மா. ஒரே ஒரு ஆண்டு வரை அவள் இந்த அந்தப் புரத்தை அலங்கரிக்கட்டும். பிறகு அவளை மட்டுமல்ல ஒரு நான்கு பேரையும் சேர்த்தே அனுப்பி வைக்கிறேன். மணம் செய்து கொண்டு சந்தோஷப்படு” - என்று கீர்த்திவர்மன் மிகக் கேவலமாகப் பேசியிருந்தான்.

இப்படி அரசியல் ரீதியாகவும் தோற்று காதல் விவகாரத்திலும் ஏமாந்து போன விஜயஸ்கந்தவர்மன் தன்னைக் கறிவேப்பிலையாக சமணத்துறவிகள் பயன்படுத்துவதை உணர்ந்து கொண்ட பின் இனியும் அப்படி நடந்து கொள்வதில்லை என்று தீர்மானித்தான். அதோடு சில மாதங்களாக அத்துறவிகள் செய்து வந்த பல்வேறு காரியங்களும் அவனுக்குத் தெரியவே செய்தன. மந்த புத்தி படைத்த அவனுக்கே கூட உடலில் அரச குல ரத்தம் ஓடியதாலோ என்னவோ “இத்துறவிகள் ஏதோ மோசம் செய்வதற்கு முயல்கிறார்கள்” என்று சந்தேகத்தை உண்டாக்கியது.

தன் குலத்தையும் தாயாதியர்களையும் நினைத்துப் பார்த்தான். தன் குலத்திற்குரிய ராஜகுமாரர்களுக்கு, குறிப்பாக நந்திவர்மனுக்குத் தான் தானும் பலருமாக இருந்து கெடுதல்களைச் செய்திருக்கிறோமே தவிர தங்களில் யாருக்கும் கெடுதல் செய்ய நந்திவர்மன் முயலவில்லை என்பது தெளிவாகப் புரிந்தது அவனுக்கு. தத்தம் முயற்சிகளில் இருந்த குறைபாடுகள் மற்றும் அதர்மங்கள் ஆகியவற்றால் தான், தன் தம்பி மற்றும் சித்திரமாயன் போன்றோர் மாண்டார்களேயன்றி அவர்களுக்கோ தனக்கோ பல்லவராஜ வம்சம் தீங்கிழைக்க வில்லை என்பதை உணர்ந்த போது ஏதோ ஒரு குற்ற உணர்வு

அவனை வாட்டியது. இப்படி தீங்கிழைக்காத வம்சத்திற்கு துரோகமும் தன்னை ஒரு கருவியாக்கிக் கொண்டு, தீங்கிழைக்கக் கூடிய சாளுக்கிய வம்சத்திற்கு துணையும் செய்த தன்னை வெறுத்துக் கொண்ட அவன் அதற்கு ஒரு முடிவு கட்டவும் தனது பாதையை மாற்றியமைத்துக் கொள்ளவும் தீர்மானித்தான். இனி எந்த நிலையிலும் சாளுக்கியருக்கோ சமணர்களுக்கோ உதவுவதில்லை என்று பாண்டவ தூதப் பெருமாள் முன் உறுதி எடுத்துக் கொண்டான். தன்னால் ஏதாவது உதவ முடியுமானால் அது பல்லவர்களுக்காக-நந்திவர்மனுக்காக இருக்க வேண்டும் என்று கருதி ஒரு விதத் தீர்மானத்துடன் காஞ்சீபுரனைச் சந்திக்க அரண்மனைக்குச் சென்றான்.

புத்தி தெளிந்து ஞானம் பிறந்ததாலோ என்னவோ அவனிடம் தயக்கங்களோ பயமோ இல்லை. தன் வரவை காஞ்சீபுரனிடம் தெரிவிக்கும் படி சீடனிடம் கூறினான். உடனடியாகவே அழைப்பு வந்தது. உள்ளே காஞ்சீபுரன் தன் சீடர்கள் சிலருக்கு ஆயுதப் பிரயோகம் பற்றி விளக்கிக் கொண்டிருந்தான். “ஆயுதங்களை வைத்திருப்பதால் வீரனுக்கு வெற்றி வந்து விடுவதில்லை. அவற்றை ஏந்துவதிலும் பிரயோகிப்பதிலும் தேர்ச்சி வேண்டும். கோழையிடம் வில் இருந்தும் பயனில்லை. ஆனால் தேர்ச்சி பெற்ற வீரனிடம் புல் இருந்தாலும் போதும். ஆகவேதான் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்றார்கள். வீரனுக்கு இரண்டு கைகள் தான். ஆனால் அக்கைகளில் அவன் ஏந்தும் ஆயுதங்கள் கணக்கற்றவை. ஒவ்வொன்றையும் அவன் ஏந்துவதில் அவனது நேர்த்தி புலப்படுகிறது. பிரயோகிப்பதில் கீர்த்திவெளிப்படுகிறது. ஆயுதங்களின் வகை தெரிந்து அவற்றிலிருந்து சிலவற்றுக்கு மட்டுமே தங்களை பயிற்சி பெற்றவர்களாக இருக்கும் வீரர்கள்

உண்டு. இருப்பினும் கூன்வாள், சிறுவாள், கொடுவாள், அரிவாள், பிண்டி, பாலம், எழு, மழு, தோமரம், கதை, தண்டம், நாராசம், இரும்பு முள், கழுமுள், சுழல்படை, ஈர்வாள், உடைவாள், கைவாள், கணையம், கோடாலி, தோட்டி, வேல், வச்சிரம், குறுந்தடி, ஈட்டி, கவண், சிறுசவளம், பெருசவளம், சக்கரம், கன்னம், உளி, பாசம், தாமளி, சாலம், ஊசி, முசுண்டி, முசலம், இடங்கனி, நாளிகம் ஆகிய சகல ஆயுதங்களையும் கையாளக் கூடியவனே வீரர்களில் சிறந்தவன். அவனுக்கு மந்திரப் படை வல்லமையும் இருந்து விட்டால் அவனால் தேவர்களையும் வெல்ல முடியும்" - என்று தன் விளக்க உரையைக் கூறி சீடர்களை அனுப்பி விட்டு விஜயஸ்கந்தவர்மனை அழைத்து அமர வைத்தான்.

"சுவாமி, எனது பிரவேசத்தில் தவறு இருக்குமானால் அது ஆணவத்தால் நேர்ந்ததல்ல. ஆர்வத்தால் நேர்ந்தது. அந்த ஆர்வமும் சுயநலத்திற்காக அல்ல"-என்றான் விஜயஸ்கந்தவர்மன்.

"நீ பிரவேசிக்க வேண்டியது விதியாக இருக்கும் போது அது நடந்தே தீரும். அதோடு உன்னைத் தடுக்க நேர்ந்திருந்தால் அது ஆணவத்தால் நேர்ந்திருக்காது. அவசியத்திற்காகத் தான் நேர்ந்திருக்கும். அந்த அவசியமும் சுயநலத்திற்காக இருக்காது. விஷயத்தைச் சொல்"- என்றான் காஞ்சீபுரன்.

அதையடுத்து விஜயஸ்கந்த வர்மன் தன்னை யாரென்றும் தனக்கு என்னவெல்லாம் நேர்ந்தன என்றும் கூறியதோடு தன் தற்போதைய நோக்கத்தையும் வெளியிட்டான்.

"அரியணை ஆசை உனக்குப் போய் விட்டதா?" என்று கேட்டான் காஞ்சீபுரன்.

“எனக்கு வாழும் ஆசை கூட அவ்வளவு இல்லை சுவாமி. ஏனென்றால் எத்தனையோ பிறவி பெற்று இழைத்திடும் தீமையெல்லாம் இப்பிறவி ஒன்று பெற்று அத்தனையும் முடித்து விட்டேன்.” என்றான் விஜயஸ்கந்தவர்மன்.

“இத்தகைய உணர்வு இதயத்திலிருந்து எழும் போது எப்பேர் பட்ட பாவியும் இறைவனால் மன்னிக்கப்படுகிறான். அந்த நிலை அவனது நல்வாழ்விற்கு ஆரம்பமேயன்றி சாவிற்கு அல்ல”.

“சுவாமி, தங்கள் வார்த்தைகள் என்னைப் பக்குவப்படுத்துகின்றன. ஆகவே சொல்கிறேன். இது என் நல் வாழ்வின் ஆரம்பமென்றால் இனியாவது நான் பயனுள்ள காரியங்களைச் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் துரோகமிழைத்த இடத்திற்கு நன்மை செய்ய வேண்டும்”

“அப்பனே, விரும்புவது தவறு. விரும்பியபடி செய்கிற முயற்சி வேறு. நீ நந்திவர்மனுக்கு உதவ விரும்புகிறாய். ஆனாலும் அந்த உதவியைச் செய்யும் சமயம் இப்போது வந்திருக்கிறதா என்று பார். தற்போது உன்னால் எப்படி உதவமுடியும் என்பதை எண்ணிப் பார்.”

“உதவ முடியாது என்கிறீர்களா? சுவாமி, நந்திவர்மன் தற்போது பேராபத்தில் இருக்கிறான்”-

“எப்படி சொல்கிறாய்?”

“தாங்கள் வந்திருப்பதே அதற்கு அத்தாட்சி தானே?”

“அதற்கு நீ என்ன செய்ய முடியும்?”

"வேண்டிக் கொள்ள முடியும். சுவாமி, நந்திவர்மனை அழிக்கும் முயற்சியில் நீங்கள் இறங்கக் கூடாது. கீர்த்தி வர்மனுக்கும் சமணத் துறவிகளுக்கும் உதவக் கூடாது."

"உதவுவதாக வாக்களித்திருக்கிறேன். அதை மீறுவதற்கில்லை."

"கயவர்களுக்கும் அயோக்கியர்களுக்கும் உதவுவது தானா உங்கள் வேலை?"

"இல்லை. தர்மத்துக்கும் நியாயத்திற்கும் தான் நான் உதவுகிறேன்."

"உங்களை அழைத்தவர்கள் தர்மத்தையும் நியாயத்தையும் தான் கடைபிடிக்கிறார்களா?" -

"இரண்டும் இருந்தால் தான் உதவுவேன் என்று நிபந்தனை போட்டிருக்கிறேன்"

"நிபந்தனை சரியாகச் செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டாமா? உடன்படிக்கை செய்து கொண்டாலே எல்லாம் சரியாகிவிடுமா? அதில் முரண்பாடுகள் வராதா? சுவாமி, இங்கே உள்ள சமணத் துறவிகள் உங்கள் முன் நடிக்கிறார்களே தவிர உண்மையாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் குழி தோண்டுவது நந்திவர்மனுக்கு மட்டுமல்ல. உங்களுக்கு தான். அதோடு இது நந்திவர்மனின் கோட்டை. நந்திவர்மன் இல்லாதபோது பிடிக்கப்பட்ட கோட்டை. அதர்ம வழியில் பிடிக்கப்பட்ட இக்கோட்டையை நந்திவர்மன் மீட்பதில் தான் நியாயமிருக்கிறதே தவிர, சாளுக்கியர் சொந்தம் கொண்டாடுவதில் சிறிதும் நியாயமில்லை. எப்படிப் பார்த்தாலும் உங்களையே வீழ்த்தவும் முற்பட்டுள்ள

அவர்கள் தர்மத்திற்கான பலனை அனுபவிக்கவும் அருகதையற்றவர்கள். ஆகவே, நிபந்தனைகளின் படி நடந்து கொள்ளவில்லை என்று கூறி அவர்களை வீழ்த்துங்கள். நந்திவர்மனுக்கு உதவுங்கள். அவனிடம்தான் தர்மமிருக்கிறது. அதர்மத்திற்கு ஓர் உத்தமத் துறவி துணை போனார் என்று அவர்பெயர் உங்ளுக்கு வேண்டாம்"-என்று தன் உணர்ச்சிகளையெல்லாம் வார்த்தைகளாகக் கொட்டித் தீர்த்தான் விஜயஸ்கந்தவர்மன்.

அவனை அனுதாபத்துடன் பார்த்த காஞ்சீபுரன் "விஜயஸ்கந்தா, நீ சொன்ன விஷயங்கள் எல்லாவற்றையும் நான் அறிவேன். இருப்பினும் என் செயல் முறை உன்னைப் போல் உணர்ச்சிகரமானதாய் இருக்காது. அறிவுப் பூர்வமானதாய் இருக்கும். காஞ்சிபுரன் ஒரு போதும் அதர்மத்திற்குத் துணை போகமாட்டான். உனக்குள் நந்திவர்மனுக்கு உதவும் எண்ணம் இருக்குமானால் நான் சொல்லும் வரை நீ நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமல் இரு. போர் ஒரு முடிவுக்கு வரும் வரை நீ ஏதாவது ஆலயத்தில் இருந்து கொண்டு நேரத்தைச் செலவிடு" என்று கூறினான்.

"சுவாமி, என் சாயம் வெளுத்து விட்டது என்பது கீர்த்திவர்மனுக்கோ சமணத் துறவிகளுக்கோ தெரிந்து விட்டால் என்னைக் கொல்லாமல் விடமாட்டார்கள். என்னுடன் போரிட முயன்றால் நானும் சந்திக்கத் தயார். ஆனால் அக்கயவர்களுக்கு நேர்வழி தெரியாது. குறுக்கு வழியிலேயே தீர்த்துக் கட்ட பார்ப்பார்கள். விஷம் வைக்கவும் தயங்கமாட்டார்கள். நந்திவர்மன் காஞ்சி அரியணையில் உட்காருவதைப் பார்க்கும் வரையாவது நான் உயிருடன் இருக்க விரும்புகிறேன். ஆகவே, அது வரை

தங்களுடன் தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும்” என்று வேண்டிக் கொண்டான் விஜயஸ்கந்தவர்மன்.

“சரி. என் சீடர்களின் ஒருவனாய் இரு” -என்றான் காஞ்சீபுரன்.

இதே நேரத்தில் எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் சொர்க்கத்தின் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான் கீர்த்திவர்மன்.

⌘⌘⌘⌘⌘



36. சோதனை இரவுகள்

கருப்புவில் மலர்க்கணைக் காமவேளை கீர்த்திவர்மன் தன் அந்தப்புரத்திற்குக் கையோடு அழைத்து வந்து விட்டானோ என்று எண்ணத் தகுந்த விதத்தில் அந்தப்புரம் முழுவதும் சொர்க்கச் சுகந்தத்தை ஏந்திழைகள் பரப்பிய வண்ணம் இருந்தார்கள். அங்கே நீந்துவதற்கு இன்பக் கடலைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதை உணர்த்துவது போல் அவர்கள் சிரிப்பையும் சங்கீதத்தையும், வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த அமர்க்கள சூழலின் நாயகனாக கீர்த்திவர்மன் ஆறு அழகிகளிடம் சிக்கியிருந்தான். அவர்களிடம் அவனுக்கு இன்ப இம்சையைத் தந்து ஆனந்தங்களை எதிரொலிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். அதோடு சில நாட்களாக அந்தப்புரத்திற்கு வந்த இளவரசன் தன் கைவரிசையை சரிவர காட்டாமல் சென்று கொண்டிருந்த படியால் மிகவும் காட்டமாகிப் போன அப்பெண்கள் அதை எப்படியெல்லாம் தீர்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து செயல்பட்டவர்களைப் போல் அவனது அங்கத்தினை ராட்சஷத் தனமாகப் பகிர்ந்து கொண்டார்கள். வேறு எதற்கு இல்லையென்றாலும் காமத்திற்கு ஈடுகொடுப்பதில் காமனையும் தோற்கடிக்கக் கூடியவனான கீர்த்திவர்மன் அந்த ஆறு அழகிகளை அநாவசியமாக சமாளித்தான்.

ஒரு கட்டத்தில் அவன் இருந்தாற் போலிருந்து திடீரென சிலிர்த்து உடலை உதறிய போது ஆறு அழகிகளும் தாறுமாறாக மஞ்சத்திலிருந்து நிலை பெயர்த்து கீழே போய் விழுந்தார்கள். அப்படி விழுந்தவர்களில் ஒருத்தி மட்டும்

வேகவேகமாக எழுந்து வந்து அவனது மார்பில் புரண்டாள். அவளைத் தூக்கி அமர்த்திய கீர்த்திவர்மன், "உனது வேகம் மெச்சத் தகுந்தது. நீதான் இனி என் ராணி. என் அரியாசனத்திற்குச் சரியாசனத்தில் நீதான் அமரப் போகிறாய். திருப்தி தானே?" என்று வினவினான்.

"எனக்கு அரியாசனம் வேண்டாம்"-என்றாள் அந்த அழகி.

"பைத்தியக்காரி! காஞ்சி அரியாசனம் அத்தனை அற்பமானது என்று நினைக்கிறாயா?" -கேட்டான் கீர்த்திவர்மன்.

"இல்லை. இக்காஞ்சியில் அதைவிட பெரிய இடம் வேறில்லை."

"பிறகென்ன?"

"அது நிலையில்லாதது. நீங்கள் போன் பின் அந்த பதவி போய் விடும். ஆனால்..."

"ஆனாலென்ன?"

"இந்த நிலை, இந்த அணைப்பு, இந்த இன்பம்... இதற்கு என்றும் யாராலும் தடையில்லை. அரியாசனத்தில் யார் அமர்ந்தாலும் இங்கே இதற்கு இடையூறு இருக்காது"-

வெட்கப்படாமல் அவள் இப்படி வெளிப்டையாகப் பேசியதை மிகவும் ரசித்தான் கீர்த்திவர்மன்.

"மெச்சுகிறேன் பெண்ணே உன்னை. இக் காஞ்சியில் எனக்கு எது பிடிக்கிறதோ இல்லையோ- இங்கே எல்லோரும் புத்திசாலிகளாக இருப்பது எனக்கு மிகவும் பிடிக்கிறது. அதுவும் எப்படிப் பட்டவனாய் இருந்தாலும்

சரி-இங்கே வந்தபின் அவன் எண்ண வேண்டியதும் எண்ணிச் செயல்பட வேண்டியதும் இந்த இன்பக்கடலின் பயணத்தைத்தான். அதற்கு மட்டுமே இருப்பவளாய் கூறிக் கொள்ளும் நீ இந்த அந்தப்புரத்தின் முடிசூடா அரசி. உனக்கு முடிசூடி அரசாளும் தகுதியும் இருக்கிறது" என்றான் அவன்.

பொறாமையில் புழுங்கிய அழகியொருத்தி அப்போது குறுக்கிட்டு "இவள் அரியணையை மறுத்ததற்கு அது காரணமில்லை பிரபு. வேறு இருக்கிறது" என்று கூறினாள்.

"இங்கே வா"- என்று அவளை அழைத்த கீர்த்திவர்மன் அவளது ஆதரங்களைத் தட்டி விட்டு "என்ன காரணம்?" என்று கேட்டான்.

"அரியணை காலியாய் இருந்தால் தானே அவளை அமர்த்தலாம்? அங்கே அமரத்தான் ராஷ்டிர கூட இளவரசியை அழைத்து வந்திருக்கிறீர்களே? அவளை ஒதுக்கி விட்டு இவளையா அமர்த்த முடியும்?"

அவ்வளவுதான். ஏதோ வெகுகாலமாக மறந்து விட்ட விஷயத்தை நினைவூட்டிக் கொண்டவனைப் போல் உணர்ச்சி பெற்ற அவன் அப்பெண்ணை ஒதுக்கித் தள்ளி விட்டு எழுந்தான். இளவரசி ரேவாதேவியின் இருப்பிடம் நோக்கி நடக்கவும் முற்பட்டான்.

தற்போது கீழே விழுந்த அந்த ஓர் அழகி மட்டுமல்ல ஆறு பேருமே பொறாமைப்பட்டார்கள் ரேவாதேவியை எண்ணி. சந்தர்ப்பம் தெரியாமல் அவளது பெயரை நினைவுபடுத்தித் தங்கள் இன்பக் கடலை வற்ற வைத்துக்

கொண்டு முட்டாள் தனத்தை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டார்கள். அங்கே வந்த தும்பை வனத்து மோகினியிடம் சொல்லி ஆற்றிக் கொள்ள முற்பட்டார்கள்.

ஆனால் கீர்த்திவர்மனோ நினைவு படுத்தப்பட்ட வாய்ப்பைத் தூற்றிக்கொள்ளும் தீர்மானத்துடன் ஆவலோடு நடைபோட்டான் ரேவாதேவியின் அறை நோக்கி.

சாளுக்கிய நாட்டில் இருந்தபோது அவனால் கவரப்பட்டவள் ரேவாதேவி. தனது உள்ளக் கிடக்கையை ஓரிருமுறை அவளிடம் அவன் காட்ட முற்பட்டதும் உண்டு. அவளோ ஒரு முறை கூட அதில் தன் ஈடுபாட்டைக் காட்டவில்லை. என்னதான் காமுகனாக இருந்தாலும் தான் ஒரு அரசகுமாரன்தானே என்று நினைத்தான் கீர்த்திவாம்ன். என்னதான் அரசனாக இருந்தாலும் வெறும் காமுகன்தானே என்று நினைத்தாள் ரேவாதேவி. எனவே அவனது உள்ளக்கிடக்கை சாளுக்கிய நாட்டில் ஈடேறவில்லை.

அப்படிப்பட்ட நிலையில் எதிர்பாராத விதமாய் காஞ்சிக்கு அவள் தன்னந்தனியாய் வந்ததைக் கேள்விப்பட்ட போது வண்டைத் தேடி தேனே வந்து சொட்டுவது உண்டா என்று வியந்தான். ஆனால் உடனடியாக அவனால் செயல்பட முடியவில்லை. காஞ்சிக்கு வந்த பின் தீயடிகள் அவளை அவனுக்கு அறிமுகப்படுத்தியபோது சம்பிரதாயமாக தலையசைத்தாளேயன்றி அவனுக்கு அறிமுகமானவளைப் போல் ரேவாதேவி காட்டிக் கொள்ளவில்லை. இது அவன் எதிர்பார்த்ததுதான். எனவே இதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆனால் தீயடிகள் அவனிடம் எப்படியாவது ரேவாதேவியை மணம் முடித்து வைப்பதாக உறுதி கூறி அதுவரை விபரீத வழியில் இறங்காமல் பொறுமையுடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தராதலால் இத்தனை நாட்களாகப் பொறுமையோடு இருந்தான்.

ஆனால் அந்தப்புர பெண்கள் நினைவூட்டிய போது அவனது பொறுமை விலகியது. அழகிகளோடு குறைவில்லாமல் பிறவிக் கடலைப் போல் இன்பக் கடலில் அவன் நீந்திக் கொண்டிருந்தாலும் ரேவாதேவியைப் பற்றி நினைவூட்டிய பின் ‘ஆயிரம் அழகிகள் அருகே இருந்தென்ன, அங்கே ஓர் அழகி தன் கைப்படாமல் இருக்கிறாளே?’ என்று எண்ணி விட்டதால் விவேகத்தையும் நிதானத்தையும் ஒரு சேர விட்டுவிட்டான். அடிகள் கூறியபடி திருமணம் நடக்கலாம் தான். ஆனாலும் அவளை மணப்பதை விட அணைப்பதையே அவசியமாகவும் ஆசையாகவும் கொண்டிருந்ததால் அவன் காத்திருக்கத் தயாராக இல்லை. அவன் மனைவியாக ஆகாமல் போனாலும் பரவாயில்லை. தன் உள்ளக் கிடக்கையை பூர்த்தி செய்துவிட்டால் போதும் என்று நினைத்தான். அதற்கான வாய்ப்பு சாளுக்கிய நாட்டை விட காஞ்சியில் எளிதாக இரக்கும் என்று கருதினான். காஞ்சியில் ஏறக்குறைய சிறைப் பறைவையைப் போலிருக்கும் அவளை இப்போது அடையாவிட்டால் பின் எப்போதும் முடியாது என்று முடிவுகட்டி அவள் அறைக் கதவை மூர்க்கமாகத் தட்டினான்.

கதவை ரேவாதேவியே திறந்தாள். அர்த்த ராத்திரியில் கதவைத் தட்டியதை விட கதவைத் தட்டியவன் கீர்த்திவர்மன் என்ற விஷயமே அவளுக்கு எதிர்பாராத அநாகரீகமாகப்பட்டது. அதோடு அவனது கோலம் அலங்கோலமாய் இருந்தது. அதோடு எங்கிருந்து வருகிறான் என்பதற்கு அடையாளமாகவும் இருந்தது. கடைந்தெடுத்த காமுகன் என்பதை அவள் அறிந்திருந்தாலும் அரசு விருந்தினராக கௌரவமாக தங்கியிருக்கும் தன் இருப்பிடத்திற்கு அர்த்த ராத்திரியில் வந்து கதவைத் தட்டும் அளவிற்கு அநாகரீகமாய் இருப்பான் என்று எதிர்பாராததால் கடுங்கோபம் கொண்டாள் அவள்.

இதற்கிடையில் அவள் பேசுவதற்கு சிறிது நேரமாகி விடவே பேச்சைத் துவக்க முன் வந்த கீர்த்திவர்மன், “நான் தான் இளவரசி சாளுக்கிய அரச குமாரன் கீர்த்திவர்மன்” - என்று அறிமுகப் படுத்திக் கொண்டான்.

அந்த அர்த்தமற்ற அறிமுகத்தை அறவே வெறுத்துவிட்டு “சாளுக்கியர்களுக்கு இதுதான் வழக்கமா?” என்று கேட்டாள் சீற்றத்துடன்.

“எதைச் சொல்கிறீர்கள் இளவரசி?” - என்று உண்மையிலேயே புரியாமல் கேட்டான் அவன்.

“பெண் தனிமையில் இருக்கும் போது சந்தர்ப்பம் தெரியாமல் அர்த்த ராத்திரியில் வந்து கதவைத் தட்டுவது”-

இதைக் கேட்டு அலட்சியமாக சிரித்த கீர்த்திவர்மன் “வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் வரும் போது சம்பிரதாயங்களை எல்லாம் பார்க்க முடியாது இளவரசி” என்று தெரிவித்துக் கொண்டான்.

“என்ன உளறுகிறீர்கள்?” - என்று சீறினாள் இளவரசி.

“அமுதம் அருகில் இருந்து அதைப் பருக ஆசையும் வந்துவிட்ட பிறகு வேறு எதையும் யோசிக்க முடியாது தேவி. அமுதம் கிடைக்கிறதென்றால் சட்ட திட்டங்களையும் சம்பிரதாயங்களையும் விட்டு விடுவது தான் புத்திசாலித் தனமேயன்றி சட்ட திட்டங்களுக்காகவும் சம்பிரதாயங்களுக்காவும் அமுதத்தைத் தவற விடுவதல்ல”

அவனது நோக்கம் இன்னதென அறிந்து கொண்ட அவள் அவனுக்கு அறிவை நினைவூட்டும் முயற்சியில் “இளவரசே, அவசரத்தில் தவறி நடக்க முற்படாதீர்கள். நீங்கள் முயற்சிக்கும் காரியம் உங்களை மட்டுமல்ல. உங்கள்

நாட்டின் கௌரவத்தையும் ஏன் எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடியது" - என்றாள்.

அவனோ அவளை வகையாக மடக்கினான்.

"அது ஒன்றுதான் உனக்குத் தடையென்றால் நான் முடி துறந்து நிற்கத் தயார். என்ன சொல்கிறாய் இளவரசி"-

அவளுக்கு மகா வெறுப்பாயிருந்தது அவனது காமுகன் பேச்சைக் கேட்பதற்கு.

"யாரோ ஒருத்திக்காக நாட்டையும் முடியையும் துறப்பது விவேகமானது தானா என்பதை யோசித்துப் பாருங்கள்" - என்று சொல்லிப் பார்த்தாள்.

" பசப்பல் வார்த்தைகள் வேண்டாம் இளவரசி" என்று சற்றே கடுமையாக இடித்துரைத்த கீர்த்திவர்மன் "நான் பெண்கள் விஷயத்தில் தோற்றது கிடையாது. அவர்களை நம்புவது கிடையாது. அவர்களிடம் நான் பேச்சை விரும்புவதும் கிடையாது. இவற்றை நீ உணர்ந்து கொள்வது நல்லது" - என்றான் மிரட்டும் குரலில்.

"ஐயா, நான் இங்கே ஒரு அபலை போல் வந்தவள்"-

"பெண்ணே, தாபத்தில் சிறுகச் சிறுகத் தவித்து வேதனைப்படும் நானும் ஒரு அபலைதான். எனக்குத் தேவை உன் ஆதரவு"-

"கீர்த்திவர்மா" - என்ற ஓர் இளவரசிக்குரிய தோரணையில் அழைத்த அவள், "உன்னால் எனக்குத் தீங்கு செய்ய முடியும் என்று மனப்பால் குடிக்காதே. அப்படியே தீங்கிழைத்தாலும் என் தந்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்" என்றாள்.

“ராஷ்டிர கூடம் ரொம்பவும் தொலைவில் இருக்கிறது” என்று சுட்டிக்காட்டிய கீர்த்திவர்மன் “நாட்டை ஆளும் என் போன்றவர்களுக்கு எப்போதும் ஆபத்திருக்கிறது. அதை எண்ணிக் கொண்டு செயல்படாமலேயே இருந்து விட முடியுமா? பேச்சை நிறுத்து இளவரசி. நாம் பேச்சில் இன்பம் காணமுடியாது. தேனின் சுவை பருகுவதில் தான் இருக்கிறது; பார்ப்பதில் இல்லை. வீண் பேச்சை விடுத்து என் வழிக்கு நீ வருவது தான் நல்லது. நடக்கக் கூடியது. ஏனெனில் நான் எதற்கும் கவலைப் படாதவன்” என்று கூறி அறையை நோக்கி இரண்டடிகள் பயங்கரமாக எடுத்து வைத்தான்.

மனசாட்சிக்குக் கவலைப்படாத மனிதர்களை எளிதில் அடக்கவோ வெல்லவோ முடியாது என்பதை உணர்ந்திருந்த அவள் செய்வதறியாது தவித்த போது இறைவன் அனுப்பிய தூதுவனை போல் “நில்” - என்ற குரலொன்று கேட்டது.

அதையடுத்து கையில் குறுவாள் ஏந்தியபடி அங்கே தோன்றினாள் தும்பை வனத்து மோகினி. அவளை அவன் பெரிதாக எண்ணவில்லை என்றாலும் அவளது குறுக்கீட்டை எதிர்பார்க்கவோ விரும்பவோ இல்லை.

தும்பை வனத்து மோகினியும் இப்படியொரு குறுக்கீட்டை தான் மேற்கொள்ள வேண்டி வரும் என்று எதிர்பார்க்கவில்லைதான். அந்தப்புரத்தில் அழகிகள் தற்செயலாக பேசியபோது தான் இந்த முயற்சியைத் திடீரென மேற்கொண்டாள். மற்றபடி அவளது தீர்மானமே வேறாக இருந்தது.

என்று தன் காதலன் விஜயஸ்கந்தவர்மனைப் பிரிந்து தன்னைக் கட்டாயமாக அந்தப்புரத்திற்குக் கொண்டு போய் சீரழித்தானோ அப்போதே தன் வாழ்வில் இனி வசந்தம்

என்று எதுவும் இல்லையென்றும் அப்படி ஏதாவது வந்தால் அது அக்கீர்த்திவர்மனைக் கொல்வதற்காகத் தான் இருக்கும் என்று தீர்மானித்து அதற்கான வாய்ப்பிற்காகக் காத்திருந்தாள். அந்தப்புரத்தில் அவனது அட்டகாசங்களுக்கெல்லாம் நடைப்பிணமாய் இடம் கொடுத்தாள்.

இந்த நிலையில் ராஷ்டிர கூட இளவரசியை அடையும் நோக்கத்துடன் அவன் புறப்பட்டு விட்டதாக ஆறு அழகிகள் கூறியதும் தன்னைப் போல் இளவரசி சீரழிந்து விடக் கூடாதென்றும் அவளை எப்படியாவது அவனது பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றும் அந்த முயற்சியில் கீர்த்திவர்மனைக் கொல்வதற்கும் தயங்கக் கூடாது என்றும் கருதியே புறப்பட்டாள்.

அவளை ஏதோ ஒரு வேண்டாத நாயைப் பார்ப்பது போல் பார்த்த கீர்த்திவர்மன், "நீ எதற்கு இங்கு வந்தாய்?" என்று எரிச்சலோடு கேட்டான்.

"அது கூட புரியவில்லையா? முதலில் அறையை விட்டு வெளியே வா. இளவரசிக்குத் தீங்கிழைக்கும் முயற்சியில் இறங்கினால் உன்னைக் கொல்லவும் தயங்கமாட்டேன்" என்றாள் தும்பை வனத்து மோகினி நிர்பந்தமாக.

ஆனால் கீர்த்திவர்மன் செயல்பட்டு விட்டான்.

நிகழ்ச்சிகள் துரிதமாக நடந்துவிட்டன.

அலங்கோலமாய் இருந்த அவன் உடையில் இடைப்பகுதியில் குறுவாள் இருக்கும் என்றோ அதை இமைக்கும் நேரத்தில் எடுத்து புயல் வேகத்தில் தும்பை வனத்து மோகினியின் மீது கீர்த்திவர்மன் வீசி விடுவான் என்றோ யாரும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் நடந்துவிட்டது.

தோலில் வாள் தாக்கி விடவே, "ஹா" வென அலறி கீழே விழுந்தாள் மோகினி.

அதே சமயம் திடும் பிரவேசமாய் அங்கு வந்து சேர்ந்த தீயடிகள் பெரிதும் பரபரப்படைந்து காவலர்களை அழைத்து, "இவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று விடுங்கள். சீக்கிரம்" - என்றார்.

காவலர்கள் அவளை எடுத்துச் சென்றபின் பெருமூச்செறிந்த தீயடிகள் திரும்பியபோது அங்கே நின்று கொண்டிருந்தான் காஞ்சிபுரன்.

அவரது மூச்சே நின்று விடும் போலிருந்தது.

"இதற்கென்ன அர்த்தம்?" - கடுகடுப்புடன் கேட்டான் காஞ்சீபுரன்.

சற்றே திணறிய அடிகள், "தங்கள் இருப்பிடத்திற்குப் போய் பேசிக் கொள்ளலாம். இங்கே எதற்கு?" என்று கூறி அனைவரையும் அழைத்துச் சென்றார்.

⌘

அன்று காஞ்சீபுரனை சமாதானப்படுத்த தீயடிகள் பெரிதும் சிரமப்பட்டார். தவறு தங்கள் பக்கம் இருந்ததால். கீர்த்திவர்மனின் செயல் தவறுதான் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டும் காஞ்சீபுரன் மசிவதாக இல்லை.

"நான் கூரத்திலேயே உங்களுக்குத் தெளிவாகச் சொன்னேன் தர்மம் இருக்கும் பக்கம் தான் நான் உதவுவேன்

என்று. இளவரசியிடம் முறை தவறி நடக்க முயல்வதும் அந்தப்புரப் பெண் மீது கத்தியை வீசிக் கொல்லப் பார்ப்பதும் நீங்கள் தர்மத்தை நிலைநாட்டுவதற்கான அடையாளங்களா?" என்று சீறி விழுந்தான் அவன்.

தீயடிகளுக்கு உள்ளூர கீர்த்திவர்மனின் மீது பெரிதும் ஆத்திரமாக இருந்தது. பேசாமல் அவனைக் கொன்று விட்டு அதே கையுடன் காஞ்சீபுரனின் உயிரையும் போக்கி தீக்குளித்து விட்டால் என்ன என்று கூடத் தோன்றியது அவனுக்கு. ரேவாதேவியை வைத்து சாதகமான காரியங்கள் பலவற்றை திட்டமிட்டு வைத்திருக்கும் நேரத்தில் அவளிடமே போய் கீர்த்திவர்மன் முறை தவறி நடந்து கொண்டு விட்டதால் மிகவும் ஆபத்தான நிலை உருவாகி விட்டதை உணர்ந்த அவர் "இவனுக்கெல்லாம் ஆட்சியும் ஆட்சி பீடமும் ஒரு கேடா?" என்று கேட்டுக் கொள்ளவும் செய்தார். அந்தப்புரத்தில் கணக்கற்ற பெண்கள் காமத்தில் காத்திருக்கும் போது இவளிடம் அப்படி என்ன இருக்கிறது என்று இந்த காரியத்தைச் செய்தான் என்று கேட்டு பதில் தெரியாமல் திணறினார் காமத்தை அனுபவித்தறியாத சமணத் துறவி.

"கீர்த்திவர்மனின் இக்காரியம் பற்றி ரேவாதேவியின் தந்தைக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? நந்திவர்மனை எதிர்க்க வேண்டிய நிலையில் ராஷ்டிர கூட மன்னனும் எதிரியாகி விட்டால் உங்களைக் காப்பது யார்? நானும் போய் விடுகிறேன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" - என்று காஞ்சீபுரன் தொடர்ந்து சொன்னபோது அதே ரீதியில் ஏற்கனவே யோசித்திருந்த தீயடிகள் மிகவும் திணறினார்.

"என்னிடம் துரோகிகளுக்கும் உண்மையானவர்களைப் போல் நடிப்பவர்களுக்கும் இடம் கிடையாது. அப்படி ஏதாவது நீங்கள் நடந்து கொள்வது போல் எனக்குத் தோன்றினால்

இக்கோட்டையில் நான் உருவாக்கிய பாதுகாப்புகளை நானே அழிப்பேன். என் மந்திரப்படை நான் அமைத்த நாளிகங்களை அழிக்கும். தேவையானால் உங்கள் அனைவரையும் கூட அழிக்கத் தயங்கமாட்டேன்" - என்று காஞ்சீபுரன் இறுதியாகக் கூறியபோது அவனிடம் பஞ்சபூதங்கள் அனைவரும் ஒரு சேர மன்னிப்பு கேட்டார்கள். இனி தவறியும் அத்தகைய அசம்பாவிதம் நடக்காது என்று உறுதியளித்தார்கள். இத்தனைக்கிடையிலும் தனது தந்திரத்தைக் காட்டும் விதத்தில் "போர் முடியும் வரை ராஷ்டிர கூட இளவரசி வேண்டுமானால் தங்கள் பாதுகாப்பிலேயே இருக்கட்டும். இது போன்ற அசம்பாவிதங்கள் நடக்காது" என்று கூறி ரேவாதேவியை அவனிடம் ஒப்படைத்தார் தீயடிகள்.

காஞ்சீபுரனின் கோபம், சற்றே தணிந்தது. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இளவரசியை மாணவி போல் கருதி பல்வேறு விஷயங்களைக் கற்றுத் தந்தான். அவனது நயமான உபதேசங்களும் பரந்த அறிவும் ரேவாதேவியை பெரிதும் கவர்ந்தான். மிகவும் சரியான இடத்திற்கு வந்து விட்டதாக மகிழ்ந்த அவள் ஒரு சமயம் மந்திரப் படைகளைப் பற்றி அவனிடம் பேச நேர்ந்த போது மந்திரத்தால் மாங்கனியை விழச்செய்தான் காஞ்சீபுரன். அதைக் கண்டு பெரிடுதும் வியந்த ரேவாதேவி "இதெப்படி சாத்தியம்?" என்று வினவினாள்.

"பெண்ணே, மந்திரங்கள் மற்றும் மந்திரப் படையின் சூட்சமங்களை அவ்வளவு எளிதில் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அவற்றின் அடிப்படை உண்மை ஒன்றை நீ அறிந்து கொண்டால் போதும். இங்கே மாங்கனி விழுந்தது மந்திரத்தால் தான் என்றாலும் அடிப்படையில் காரணமாக அமைந்தது ஒலிதான். ஒரு பொருளை அசைக்கவும் பாதிக்கவும் செய்யும் ஆற்றல் ஒலிக்கு உண்டு. எந்த ஒலிக்கு எந்த ஆற்றல் உண்டு என்பதுதான் சூட்சமம். எந்தப் பொருளை அசைக்க நினைக்கிறோமோ அதை அசைக்கும் அளவிற்கு ஒலியை

உண்டாக்கி செலுத்தும் போது அந்தப் பொருள் அசைகிறது" என்று விளக்கம் கூறினான் காஞ்சீபுரன்.

பெரிதும் மலைத்தாள், பரவசப் பட்டாள் ரேவாதேவி. அவனுடன் இருந்த நாட்கள் பயனுள்ள நாட்களாகக் கழிந்தன. கத்திக் குத்து பட்ட தும்பை வனத்து மோகினியும் நலம் பெற்றெழுந்தாள். அவளை அவளே எதிர்பார்க்காத விதத்தில் ஏற்றுக் கொண்டான் விஜயஸ்கந்தவர்மன். இருப்பினும் காஞ்சீபுரனின் அறிவுரையின் பேரில் அவர்கள் மறைந்தே உலவினார்கள்.

இதற்கிடையில் காஞ்சிக் கோட்டையில் போர் மேகம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது. கோட்டைக்குள் ஏற்பாடுகள் மும்முரப் படுத்தப்பட்டன. பதினைந்து நாட்களுக்குள் கோட்டையை நந்திவர்மன் தாக்கலாம் என காஞ்சீபுரன் கூறியதற்கேற்ப பெரும் படையொன்று காஞ்சியை நெருங்குவதாக ஒற்றர்கள் செய்தி கொண்டு வரவே தீயடிகள் பெரிதும் பரபரப்படைந்தார். காஞ்சீபுரனிடம் விஷயத்தை தெரிவித்ததும் அவனும் உடனடியாக கோட்டைக் காவலர்களை நேரில் வந்து சோதித்ததுடன் சாளுக்கியர் சேனாதிபதி ராவணனைப் பல விதங்களில் முடுக்கி விட்டான். கோட்டைச் சுவற்றில் பொறுத்தப் பட்டிருந்த நாளிகங்களை யார் யார் இயக்க வேண்டும் என்பது பற்றியும் எப்போது எப்படி இயக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதித்து முடிவு செய்தான்.

அனைத்திற்கும் முடிவு கட்டுவது போலவோ அல்லது முடிவை உணர்த்துவது போலவோ அமாவாசை இரவும் வந்து சேர்ந்தது. அதே நேரத்தில் காஞ்சிக்கு வடக்கே மிக அருகில் கணக்கற்ற தீபங்கள் தோன்றின. போர் முரசுகளும் கொம்புகளும் விட்டு விட்டு ஒலித்தன. ஏதோ காஞ்சியை விழுங்க பெரும் பிசாசு ஒன்று எக்காளமிட்டு வருவது போன்ற

காட்சியை கோட்டை உப்பரிகை ஒன்றிலிருந்து பார்த்தார் தீயடிகள். போர் அனுபவமோ அறிவோ இல்லாத அவரது இதயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

அந்த நேரத்தில் ஒற்றன் ஒருவன் வந்து அவரது செவிகளில் ஏதோ கிசுகிசுத்தான். அவரது மொட்டை மண்டையில் தீவிர யோசனை எழுந்தது. நீரடிகளையும் நிலவடிகளையும் அழைத்து அவர்களிடம் சில ரகசிய உத்தரவுகளைப் பிறப்பித்து அனுப்பிவிட்டு கீர்த்திவர்மனிடம் சென்றார்.

ரேவாதேவி விவகாரத்திற்குப் பிறகு கீர்த்திவர்மன் தீயடிகளுக்கு சற்று அடங்கி நடந்தான். அதையே சரியாகப் பயன்படுத்திக் கொண்டு தன் கட்டுப் பாட்டில் அவனை வைத்திருந்த தீயடிகள் அவனை அழைத்து செய்ய வேண்டிய பணியைப் பற்றிக் கூறியபோது பேயைப் போல விழித்தான் கீர்த்திவர்மன்.

“தயங்கவோ, அஞ்சவோ இது நேரமில்லை கீர்த்திவர்மா. இன்றிரவு இப்போது நடக்கப்போகும் காரியம் தான் உன் எதிர்காலத்தையும் சாளுக்கியரின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும். என்னை இப்போது வேறெதுவும் கேட்காதே. இரண்டொரு நாட்களில் எல்லாம் நடந்து முடிந்து விடும். பிறகு உன் கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைக்கும். நமக்கு இப்போது நல்லகாலம்தான். இல்லையென்றால் ஏதோ தியானம் என்ற பெயரில் இரண்டு நாட்களாக காஞ்சீபுரன் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பானா? இப்போது விட்டால் பிறகு முடியாது. புறப்படு. உன் கையால் இன்று அவன் மாள வேண்டும். இதுவே அவனது கடைசி இரவாக அமையவேண்டும்” - என்று கூறி காஞ்சீபுரனைக் கொல்ல கீர்த்திவர்மனுடன் புறப்பட்டார் தீயடிகள்.

நள்ளிரவு நேரம் சற்றே கடந்திருந்த நிலை. கோட்டைக்கு வெளியே பல்வேறு அரவங்கள் கேட்டாலும் அரண்மனைப் பகுதி நிசப்தமாக இருந்தது. கீர்த்திவர்மன் ஒரு வேளை பயந்து கொண்டு நின்றுவிட்டால் தானாவது அந்த வேலையைச் செய்து விடவேண்டும் என்று தீர்மானித்து அதற்கு ஆயத்தமாக இடையில் சொருகியிருந்த குறுவாளைத் தொட்டபடி நடந்தார் தீயடிகள்.

இருட்டால் போர்த்தப்பட்டிருந்த காஞ்சீபுரனின் மாளிகையை அடைந்து அதன் உள்ளே நுழையும் வகை தெரிந்து சென்று சேர்ந்த போது மாளிகை காலியாக இருந்தது. காஞ்சீபுரன் அங்கில்லை. தியானத்தில் இருந்தவன் எங்கு போனான் என்று கேட்டுக் கொண்டு குழம்பிய அவர்கள் யாரையும் விசாரிக்க முடியாத நிலையில் பல இடங்களில் அலைந்து விட்டு அரண்மனையை அடைந்த போது அவர்களை வாசலிலேயே பத்து வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"எங்கே செல்கிறீர்கள்?" - என்று கேட்கவும் செய்தார்கள்.

பெரும் ஏமாற்றத்திலும் அலைச்சலிலும் இருந்த கீர்த்திவர்மன் கோபமடைந்து, "டேய், யாரைப் பார்த்து கேட்கிறாய் முட்டாள்? உங்களைச் சிரச் சேதம் செய்ய உத்தரவிடுவேன்" என்று சீறினான்.

அவனை அடக்கிய அடிகள், "உள்ளே போக வேண்டும்" என்றார் சாந்தமாக.

"அப்படியானால் ஆயுதங்களை இங்கேயே வைத்து விட்டுச் செல்லுங்கள்" என்று கூறி அவர்களது

ஆயுதங்களை வீரர்கள் பலவந்தமாகப் பிடுங்கவும் செய்தார்கள்.

அவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. அதே சமயம் கோட்டைக்கு வெளியே எதிரிப் படை வந்து விட்டதற்கான பேரொலிகள் எழுந்தன.

தீயடிகளும் கீர்த்திவர்மனும் குழப்பம் நீங்காத நிலையில் உள்ளே சென்ற போது அங்கே கண்ட காட்சி நிலைகுலைய வைக்கக் கூடியதாய் இருந்தது.

உள்ளே அவை கூடியிருந்தது.

அரியாசனத்தில் அமர்ந்திருந்தான் காஞ்சீபுரன்.

⌘⌘⌘⌘⌘

37. காஞ்சீபுரன் கதை

நீயே உலகெல்லாம், நின்னருளே நிற்பனவும், நீயே தவத்தேவ தேவனும், நீயே எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து இரு சுடரும் என்று அடியவர்கள் எந்நாளும் கருதித் தொழுகின்ற அனைத்திற்கும் ஆதி அந்தமான எம் பெருமானின் திருவிளையாடல்களைப் போல நடக்கவிருந்த சம்பவங்களை அறியாமலும் அதே சமயம் எதையும் தங்களால் சாதித்து விட முடியும் என்ற மதமதப்பில் காஞ்சீபுரனை வீழ்த்தும் கொலை நோக்கத்துடன் சென்ற தீயடிகளுக்கும் கீர்த்திவர்மனுக்கும் அரசவையில் கண் முன்னே விரிந்த காட்சியைக் கண்ட போது பேரிடி எழுந்து பெருவேகத்தில் தாக்கியது போலிருந்தது. எல்லோரையும் ஏமாற்றிவிட்டு புறப்பட்டதாகவும் தன் எதிரிகளின் எதிர்காலத்தை அமாவாசையைப் போலவே இருட்டாக்கி விட்டதாகவும் எண்ணி இருமாந்திருந்த அடிகள் தான் கண்ட கனவு பொய்த்துப் போய் தானே ஏமாந்து தன் எதிர்காலமே இருட்டாகி விட்டதை உணர்ந்து ஸ்தம்பித்துப் போனார்.

அவரை ஸ்தம்பிக்க வைத்த அவையில் பல்லவ அரியாசனத்தில் சிங்கம் போல் வீற்றிருந்தான் காஞ்சீபுரன். அவனுக்கருகே விக்கிரமாதித்தனால் வெளியேற்றப்பட்ட பல்லவ பேரமைச்சர் பிரம்ம ஸ்ரீராஜரும் கோட்டைத் தளபதி பல்லவடி அரையரும் அமர்ந்திருந்தார்கள். அவருக்கருகே கீர்த்திவர்மனால் சிறை செய்யப்பட்ட கடிகைத் தலைவர் தரணிகொண்ட போரும் காஞ்சிநகர் காரியஸ்தர் சோமயாஜியும் அமர்ந்திருந்தார்கள். அதுமட்டுமல்ல. அவர்களோடு விஜயஸ்கந்தவர்மனும் அமர்ந்திருந்தான்.

தன்னால் அகற்றப்பட்ட அனைவரையும் ஒரு சேர பார்த்தபோது தனது தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் விழுங்க வல்ல பெரியதோர் சதி நடந்திருக்கிறது என்பது திட்டமாகப் புரிந்தது மட்டுமின்றி தனது பூனைக் கண்களுக்கும் பாம்புக் காதுகளுக்கும் தெரியாமல் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பது பேராச்சிரியமாகவும் இருந்தது அடிகளுக்கு. நடந்ததும் புரியாமல் நடக்கப் போவதும் தெரியாமல் திண்டாடும் நிலைக்கு வந்திருந்தார் அவர். கீர்த்திவர்மனின் நிலையோ சொல்லும் தரமற்றதாக இருந்தது.

அவர்களின் வியப்பையும் வரவையும் அவையோர் எதிர்பார்த்ததாகவே தோன்றியது. எனவே அங்கே யாரும் பரபரப்படைய வில்லை. காஞ்சீபுரனும் சகஜமாகவே "வாருங்கள் அடிகளே, வா கீர்த்திவர்மா, வந்து இருவரும் உட்காருங்கள்" என்று அழைக்கவும் செய்தான். அந்த அளவில் நிதானப்பட்ட தீயடிகள் தனக்குச் சுட்டிக் காட்டப்பட்ட ஆசனத்தை நோக்கிப் போக, கீர்த்திவர்மனும் ஆட்டுக் குட்டியைப் போல் அவரைத் தொடர்ந்து போய் அமர்ந்து கொண்டான்.

அவர்கள் இருவரும் அமரரும் வரை பொறுத்திருந்த காஞ்சீபுரன் தீயடிகளைப் பார்த்து "அடிகளே, எங்கே இருவருமாகப் புறப்பட்டீர்கள் இந்த நள்ளிரவில்?" என்று கேட்டான். அதற்குத் தீயடிகள் கேட்ட கேள்வி அவையோருக்கு அவரது துணிச்சலை உணர்த்துவதாக அமைந்தது.

ஆசனத்தை விட்டு அடிகள் எழுந்து கொள்ள வில்லை. அமர்ந்த நிலையிலேயே இருந்து கொண்டு, "எல்லாம் தெரிந்து;ம எதற்காக இந்த அர்த்தமற்ற கேள்வி நந்திவர்மா?

என் கணக்கு வேண்டுமானால் எங்கோ தவறியிருக்கலாம். ஆனால் நான் முட்டாளல்ல" - என்றார்.

காஞ்சீபுரனாய் இருந்த நந்திவர்மன் புன்முறுவல் கொண்டான். "உங்களைப் போய் எப்படி முட்டாளாக நினைக்கமுடியும் நான்? உண்மையைச் சொல்வதனால் இக்காஞ்சியை மீட்க விரும்பிய போது விக்கிரமாதித்தனையோ கீர்த்திவர்மனையோ எண்ணி நான் திட்டம் தீட்டவில்லை. பஞ்ச பூதங்களை - அதிலும் குறிப்பாக உங்களைக் கருத்தில் கொண்டுதான் திட்டம் தீட்டினேன். அந்த முயற்சி வெற்றிபெற இவ்வளவு காலம் எனக்கு ஆயிற்று என்றால் அதற்குக் காரணமும் நீங்கள் தான்" என்று சொல்லவும் செய்தான்.

"மிக்க மகிழ்ச்சி. இவ்வளவு தெரிந்தும் அக்கேள்வியை ஏன் கேட்டாய்?" கேட்டார் அடிகள்.

"தெரிந்து கொள்ளவே கேட்டேன்"

"உன்னைக் கொல்ல நாங்கள் முயல்வது தெரியாதா உனக்கு?"

"தெரியும். ஆனால் அதற்கு இன்றைய நாளை தேர்ந்தெடுப்பீர்கள் என்று எனக்குத் தெரியாதல்லவா?"

"தெரியாமலா அரண்மனை வாசலில் வீரர்களை நிறுத்தி எங்கள் ஆயுதங்களைப் பறித்தாய்?"

"வீரர்கள் உங்களை எதிர்பார்த்து நிறுத்தப்படவில்லை. யார் நுழைந்தாலும் ஆயுதங்களை பறிக்கும் படி நான் உத்தரவிட்டுருந்தேன்".-

"ஆயுதங்களைக் கண்டு அஞ்சுபவனா பல்லவ மன்னன்?"

"எப்பேர் பட்ட வீரனும் முதுகில் குத்தும் கோழையைக் கண்டு அஞ்சியே ஆகவேண்டும். அதுவும் இரவில் எதிர்பாராத நிலையில் பெண் மீது குறுவாள் வீசும் சாளுக்கியர்கள் நிரம்பிய இந்த அரண்மனையில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமல்லவா?" என்று பதில் கூறி கீர்த்திவர்மனைப் பார்த்தான் நந்திவர்மன். அவனது தலை தாழ்ந்தது தும்பை வனத்து மோகினி மீது கத்தி வீசிய காரியத்தை எண்ணி.

அதே சமயம் தூரத்தே ராஜபேரிகை ஒலித்தது பலமாக. அதைக் கேட்டதும் ஏதோ சுதாரித்துக் கொண்டவர் போல் ஆசனத்தில் அசைந்த தீயடிகள், "நந்திவர்மா, இன்றும் நான் தோற்றுவிட்டதாக நினைக்கவில்லை" என்றார்.

"எதை வைத்துக் கொண்டு சொல்கிறீர்கள்?" கேட்டான் நந்திவர்மன்.

"பல்லவ மன்னா, சற்று முன்னால் பேரிகை ஒலித்ததே அது ராஷ்டிர கூட மன்னரின் படை வரவைக் குறிக்கிறது"

"அது தெரியும் எனக்கு"

"ஆனால் அப்படைகள் யாரால் எதற்காக வரவழைக்கப்பட்டது என்பது தெரியுமா உனக்கு?"

"நீங்கள் தான் வரவழைத்தீர்களா?"

"ஆம்" -

"தொலைதூரத்தில் உள்ள அவன் உடனே புறப்பட்டு வரும் அளவிற்கு என்ன செய்தீர்கள் நீங்கள்?"

"நந்திவர்மா, சொல்கிறேன் கேள். இனி எதையும் ரகசியமாக வைக்க வேண்டிய அவசியம் இல்லை. சில

மாதங்களுக்கு முன்னால் ராஷ்டிர கூட இளவரசி என்னிடம் சிக்கினாள். அவளை என் வழிக்கு வரவழைத்தேன். அவள் மூலமாகவே தந்தி துர்க்கருக்கு ஓலை எழுதவைத்தேன். ரேவாதேவியை நீ சிறை பிடித்து விட்டதாகவும் படையுடன் வந்து மீட்கும்படி செய்தி அனுப்பினேன். இந்தச் செய்தியை கேட்டுவிட்டு எந்த மன்னனால் சும்மாயிருக்க முடியும்? அதோடு ராஷ்டிர கூட மன்னன் பெரும் மானஸ்தன். படைகளுடன் புறப்பட்டுவிட்டான்"-

இதைக் கேட்டதும் நந்திவர்மன் பேரமைச்சரைப் பார்த்தான். அவர் உடனே ஓலையொன்றை எடுத்து அவனிடம் கொடுத்தார். நந்திவர்மன் அதை தீயடிகளிடம் கொடுக்கச் சொன்னான் பணியாளிடம். வாங்கிப் பிரித்துப் படித்தார் அடிகள். அவரது முகம் சவமென வெளுத்தது. ஏனெனில் அவர் படித்த ஓலை ரேவாதோவி தந்திதுர்க்கருக்கு எழுதிய அதே ஓலைதான்.

"அடிகளே, இப்போது சொல்லுங்கள். உங்கள் ஓலையா தந்திதுர்க்கனை வரவழைத்திருக்கிறது? ராஷ்டிர கூட மன்னன் இனி உங்களுக்கு உபயோகப்படமாட்டான். அவனை வரவேற்கவும் விவரம் கூறவும் போயிருப்பவர் யார் தெரியுமா? உமது நண்பர் காடக முத்தரையர். நீர் ராஷ்டிரகூட மன்னருக்கு அனுப்ப முயன்றது பொய்ச்செய்தி. ஆனால் முத்தரையர் மூலம் தற்போது அவருக்குத் தெரியப் போவது உண்மைச் செய்தி. கீர்த்திவர்மன் ரேவாதேவியிடம் முறைதவற முற்பட்டானே அச்செய்தி. போதுமா இதைக் கேட்டபின் எந்த மன்னனால் - இல்லை இல்லை எந்த தந்தையால் சும்மாயிருக்க முடியும்? அநேகமாக உங்களைத் தேடி அவர் இங்கேயே கூட வரலாம்".

இப்படிக் கூறிவிட்டு அடிகளை நோக்கினான் நந்திவர்மன். அவர் சிலையாகியிருந்தார். அவருக்கு உறைக்கும்படி மேலும் கூற முற்பட்ட அவர், "நீங்கள் ரேவாதேவி மூலம் தந்திதுர்க்கருக்கு ஓலை அனுப்பிய போது நான் காஞ்சீபுரனாக இங்கேதானே இருந்தேன்? உங்களையெல்லாம் கண்க்காணிக்காமலா இருப்பேன்? அதுமட்டுமல்ல. ரேவாதேவியை காஞ்சிக்கு வருமாறும் உங்களிடம் சிக்கி நீங்கள் சொல்வதுபோல் நடந்து கொள்ளுமாறும் செய்ததே நான்தான். ஓலை எழுதிய கையோடு விஷயத்தை என்னிடம் சொல்லியும் விட்டாள். உங்கள் ஒற்றனைப் பிடிப்பதோ ஓலையைப் பறிப்பதோ பிறகென்ன பெரிய வேலையா எனக்கு?" என்றான்.

தீயடிகள் ஏதோ பேச முற்பட்ட போது நந்திவர்மனே குறுக்கிட்டு "அடிகளே, உங்கள் சாளுக்கியர் படையின் கதியும் தற்போது முடிவாகியிருக்கும். கடந்த சில மாதங்களாகவே என் படைகள் வணிகர்களாகவும் விவசாயிகளாகவும் காஞ்சிக்குள் வந்து விட்டார்கள். அவர்கள் மட்டுமல்ல. பல்லவர் படைத் தளபதி உதயசந்திரனும் வந்து விட்டான். இந்நேரம் உங்கள் ராவணன் கைதாகி கோட்டையின் பிரதான கேந்திரங்கள் பல்லவர் வசம் மீண்டிருக்கும். சாளுக்கியர் படையை அழிக்கக் கூடாது என்று திட்டமான கட்டளையிருப்பதால் ஒரு வீரன் கூட ஆபத்தில்லாமல் வளைக்கப்பட்டிருப்பான். எனவே, உங்கள் படையும் உங்களுக்கு உதவும் நிலையில் இல்லை. எது இல்லையென்றாலும் கடைசி நேரத்திலாவது காக்கும் தர்மமும் உங்கள் பக்கம் இல்லை. அடிகளே, ஆரம்பத்திலிருந்து நீங்கள் உங்கள் பலத்தை மட்டும் வைத்துக் கொண்டு கணக்குப் போட்டீர்கள். உங்கள் பலம் பெருகினால் போதும் என்றுதான் காஞ்சீபுரனை அணுகினீர்கள். நானோ எதிரியின் பலத்தைக் கருத்தில்

கொண்டு திட்டம் போட்டேன். அதன் விளைவைத் தான் இப்போது பார்க்கிறீர்கள். எதிரியின் பலத்தை ஆராயாமல் சுய பலத்தை மட்டுமே நம்பி திட்டமிடும் போது தன் பலவீனம் கண்களுக்குத் தெரியாது என்பார் எங்கள் ஆசார்யர்?" என்றான்.

அப்போது சமுத்திரமே திரண்டு வந்து கோட்டையில் மோதினாற் போல் பேரொலி ஒன்று எழுந்தது.

அதைக் கேட்டபின் தங்களது காஞ்சீபுர ஆட்சி ஒரு முடிவுக்கு வந்து விட்டதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான் கீர்த்திவர்மன். விடியற்காலை நேரத்திற்கு அனுமதியளித்த காலதேவனின் கட்டளையைப் போல காஞ்சிக் கோட்டையின் பிரதான வடக்கு வாசலில் பல்லவரது பெரும் பேரிமையான சமுத்திகோஷம் அவ்வாறு ஒலியை எழுப்பியது மிகப் பயங்கரமாக நகரெல்லாம் எதிரொலித்தது.

"கேட்டீர்களா சமுத்திர கோஷத்தை? இது வெறும் பேரிகையல்ல. பல்லவரின் கௌரவச் சின்னம், ஒரு வகையில் பல்லவர்கள் அரியணையை விட உயர்ந்தது. எதிரிகள் பல்லவ அரியணையைக் கைப்பற்றினால் கூட பல்லவர்கள் ஆவேசப்படமாட்டார்கள். அவசரப் படமாட்டார்கள். ஆனால் கௌரவச் சின்னமான சமுத்திர கோஷம் கைப்பற்றப் பட்டால் அதை மீட்க சோடை போன பல்லவன் கூட வைராக்கியமேற்பான். உண்மையிலேயே நான் நந்திபுரத்தில் இருந்த போது காஞ்சி கோட்டை பறிபோனது பற்றி அமைச்சர் பெருமானும் மற்றவர்களும் தெரிவித்தபோது அதைச் சாதாரணமானதாகவே கருதினேன் நான். ஆனால் கோட்டைத் தளபதி சமுத்திர கோஷம் கைப்பற்றப்பட்டதாகக் கூறிய போது என் ரத்தம்

கொதித்தது. உண்மையிலேயே அதைக் கேட்ட பின்புதான் நான் எதிர் நடவடிக்கைக்கு ஆயத்தமானேன். அடுத்தடுத்து திட்டங்களைத் தீட்டவும் நிறைவேற்றவும் என்னைத் தூண்டியது சமுத்திர கோஷம்தான். அதை மீட்கவே நான் ஜாக்கிரதையாகச் செயல்பட்டேன். அவசரப்பட்டு என் நோக்கத்தில் வேகம் காட்டினால், எதிரிகள் சமுத்ர கோஷத்தை அழித்து விடலாம். எனவேதான் நிதானமும் விவேகமும் தேவைப்பட்டன. சமுத்திர கோஷம் பற்றி எப்போதும் யாரும் பிரஸ்தாபிக்காமல் அதை ஒரு பொருட்டாக எதிரிகள் எண்ணாத மாதிரி மற்ற விஷயங்களில் கவனத்தைத் திருப்பினேன். இன்றிரவு இதை மீட்டேன். இப்போது அது ஒலிக்கப்பட்டது ஏன் தெரியுமா? சாளுக்கிய வீரர்கள் வளைக்கப்பட்டு காஞ்சி பல்லவர் வசம் மீண்டு விட்டதை அறிவிக்கத்தான்".

தீயடிகள் மிகுந்த பொறாமையுடன் அவனது பேச்சைக் கவனித்தார்.

நந்திவர்மன் தொடர்ந்தான்.

"அவையோர்களே! நந்திபுரத்தில் காஞ்சீபுர விவகாரங்களை அறிந்த பின் இரண்டு விஷயங்களை நான் தீர்மானித்துக் கொண்டேன். ஒன்று - விவேகத்துடன் செயல்பட்டு சமுத்ர கோஷத்தை மீட்பது. இரண்டு - ஓர் உயிருக்கும் சேதமில்லாமல் காஞ்சியைக் கைப்பற்றுவது. இதனால் தான் இக்கோட்டையை மீட்க ஒரு வருட காலமாகிவிட்டது. எந்த மார்கழி மாதம் முதல் நன்னாளில் இக்கோட்டையை விக்கிரமாதித்தன் பிடித்தானோ - அதே மாதம் அதே நன்னாளில் நான் மீட்டேன் உங்கள் அனைவரது ஒத்துழைப்பால்".

“இந்தத் தீர்மானங்கள் உருவான போது போருக்கு இடமில்லை என்பது உறுதியாகி விட்டதால் தந்திரமாக காஞ்சியில் நுழையவேண்டிய கட்டாயத்தில் நான் காஞ்சீபுரன் ஆனேன். காஞ்சீபுரனாக நான் செயல்பட வேண்டிய விதம், காஞ்சீபுரனிடம் மற்றவர் செயல்பட வேண்டிய விதம் ஆகியவற்றை விவாதித்து முடிவெடுக்க காடக முத்தரையரைத் தேர்ந்தெடுத்தேன். காஞ்சிக் கோட்டை விவரங்களை எனக்கு காரியஸ்தர் தெரிவித்த போது முத்தரையர் சாளுக்கியர் பக்கம் போய் விட்டார் என்று சுட்டிக் காட்டியதுமே முத்தரையரின் நோக்கம் எனக்கு விளங்கிவிட்டதால் அவரையே தேர்ந்தெடுத்து ரகசிய ஓலையனுப்பி கூரத்திற்கு வரவழைத்துத் திட்டங்களைத் தீட்டினேன். பெரும் பழியைத் தன் மீது சுமந்து கொண்டு பெருங்காரியங்களைச் செய்தார் அம்மாவீரர். பஞ்ச பூதங்களிடமும் கீர்த்திவர்மனிடமும் அவர் பேசியது, திட்டமிட்டது, செயல்பட்டது எல்லாவற்றுக்கும் நானே பொறுப்பாளி. அவற்றால் எந்த அவப் பெயராவது உண்டாகியிருந்தால் பழிக்கப் பட வேண்டியவன் நான் தான். அவரல்ல. காஞ்சீபுரனாகி கூரத்திற்கு வந்தேன். பிறகு இச்சாளுக்கியர்களாலேயே காஞ்சிக்குள் நந்திவர்மனாக அல்லாமல் காஞ்சீபுரனாக நுழைந்தேன்”.

“இவைகள் எல்லாமே நான் திட்டமிட்டு நடந்தவை. இதற்கிடையில் நான் திட்டமிடாத விஷயமாகவும் எதிர்பார்க்காத விஷயமாகவும் அமைந்தது தான் ராஷ்டிர கூட இளவரசி ரேவாதேவியின் விவகாரம். அவ்விளவரசியை திருநீர்மலையில் காப்பாற்றியபோது என்னை யாரென அறியாத அவள் என்னைக் கொல்லவே ராஷ்டிர கூடத்திலிருந்து வந்திருப்பதாகவும் சொன்னாள். அவளுக்கு உதவுவதாகச் சொல்லி அவளைப்

பொறுத்தவரை நான் அரிசரணபரன் ஆனேன். என்னைக் கொல்லவே ராஷ்டிர கூடத்திலிருந்து வந்திருப்பதாகவும் சொன்னாள். அவளுக்கு உதவுவதாகச் சொல்லி அவளைப் பொறுத்தவரை நான் அரிசரணபரன் ஆனேன். அவளோடு கூடவே இருந்து சதி செய்த நிஷாதர் தலைவனை பல்லவ புரத்தில் கைது செய்து ராஷ்டிர கூடத்திற்கு அனுப்பினேன். அவனது தம்பியும் தந்திதுர்க்கர் எனக்கனுப்பிய ஓலையை அழித்து விட்டு தவறான தகவல் தந்து இளவரசியை வெறிகொள்ளச் செய்தவனுமான கங்கசர்மன் காடக முத்தரையாரால் கைது செய்யப்பட்டு இங்கே சிறையிருக்கிறான். நிஷாதர் தலைவனின் சதி பற்றியும் ரேவாதேவியின் தவறான அபிப்ராயம் பற்றியும் காஞ்சியின் நிலை பற்றியும் பல்லவபுரத்தில் இருந்த போதே ராஷ்டிர கூட மன்னருக்கு ஓலையனுப்பி படையுதவி கோரியிருந்தேன். அதற்கு செவி சாய்ந்து அவரே வந்திருக்கிறார் படைகளுடன். அவர் காஞ்சி வந்து சேர்வதற்கு ஆகக் கூடிய கால அளவை கணக்கிட்டே திட்டங்கள் தீட்டினேன். என் திட்டத்தில் ஏதாவது தாமதம் அகியிருந்தால் அதற்கு இக்கணக்கீடுதான் காரணம். அவர் காஞ்சியை அடைய பதினைந்து நாளாகலாம் என்ற நிலையில் தான் இறுதி கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இங்கே இருந்தபோது காஞ்சீபுரனாய் இருந்தேன். ரேவாதேவி வந்தபின் சில சமயம் அரிசரணபரனாய் இருந்தேன். அவள் என்னை யாரென அறியாமல் பழகியது எனக்கு மிகவும் உதவியது. அவள் மட்டும் என்னை அறிந்து கொண்டிருந்தால் என் திட்டங்கள் பாழாகியிருக்கும். அப்படிப் பார்த்தால் காஞ்சியை நான் மீட்ட இந்த வெற்றிக்கு ராஷ்டிர கூட இளவரசி மறைமுகமாக உதவியிருக்கிறாள்”.

இவ்வாறு தனது ஒருவருட செய்லபாடுகளை எடுத்து விளக்கினான் நந்திவர்மன். தான் போட்ட திட்டங்களையும் நந்திவர்மன் போட்ட திட்டங்களையும் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டார் தீயடிகள். தன் திட்டத்தில் மிக முக்கியமான பகுதி காடக முத்தரையரைக் கொண்டே தீட்டப்பட்டது என்பதையும் அவர் மட்டும் தனக்கு துரோகமிழைக்காதிருந்தால் தன் திட்டம் இப்படி மண்ணைக் கவ்வியிருக்காது என்பதையும் உணர்ந்த அவருக்கு அப்படிப்பட்ட மனிதனின் துணையுடன் நந்திவர்மன் பெற்றது ஒரு வெற்றியா என்று கேட்கத் தோன்றியது.

"நந்திவர்மா, காடக முத்தரையர் செய்தது பெரும் துரோகம். நம்பிக்கை துரோகத்தில் அடித்தளம் அமைத்து அரியணையைப் பெறுவது தான் பல்லவர் தர்மமா?" என்று எழுந்து கேட்கவும் செய்தார்.

"அடிகளே, காடக முத்தரையரிடம் மகாபாரத தர்மங்களைப் பற்றி விவாதித்தவர் நீங்கள். நீங்களா இதைக் கேட்கிறீர்கள்?" என்று வினவிய நந்திவர்மன், "நீங்கள் அக்காடக முத்தரையருக்கு இழைத்தவற்றுக்கு என்ன பெயர்? உங்களுக்கு அவர் என்ன தீங்கிழைத்தாரென்று அவரது மகளைப் பிணைக் கைதியாக வைத்திருந்தீர்கள்? அந்த நிலையில் அவர் உங்களுக்கு உதவுவாரா, எனக்கு உதவுவாரா? உண்மையிலேயே தன் மகளைப் பற்றிக் கூட அவர் கவலைப் படவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்திற்காக எதையும் உதறிவிட்டு வர அவர் தயாரானார். இன்னும் சொல்லப் போனால் மனிதனை மனிதனாகக் காட்டும் அடையாளமான மனசாட்சியையே விட்டு விட்டுப் பணியாற்றினார். ஆகவே, தியாகத்தின் அடிப்படையில் பெறப்பட்ட அரியணை இது. துரோகத்தில் அல்ல. அதோடு நீங்களெல்லாம் கொண்டிருந்தது தியாகச் சிந்தனைகளா தீரச் சிந்தனைகளா? உங்களிலேயே ஒருவரையொருவர் கொன்று போட்டுக் கொள்ள தயாராக

இருந்த உங்களுக்கு முத்தரையரை துரோகி என்று சொல்ல தகுதி இருக்கிறதா?" என்று கேட்டுவிட்டு அவையைப் பார்த்து சொன்னான்.

"அவையோர்களே, இந்தத் தீயடிகளும் மற்ற நான்கு சமணத் துறவிகளும் பல்வேறு சதிகளை இங்கே செய்திருக்கிறார்கள். இவரால் தந்திதுர்க்கரிடம் அனுப்பப் பட்ட நீரடிகளும் நிலவடிகளும் இன்னேரம் கைதாகி இருப்பார்கள். காற்றடிகளும் ஆகாயவடிகளும் கைதாவார்கள். தீயடிகளும் கைதாவார். இவர்களது குற்றங்களை அறங்கூர் அவையும் விசாரித்து நீதி வழங்கும். இவரோடு வந்த சமணத் துறவிகளும் இங்கேயே இருந்த துறவிகளும் சமண சமயத் தூய்மைக்கு களங்கம் விளைவித்தார்கள். இவர்கள் படிப்படியாக காஞ்சியை விட்டு வெளியேற்றப்படுவார்கள். ஆனால் கீர்த்திவர்மனின் நிலையே வேறு. அவர் ஓர் அரசகுமாரனாகவே நடந்து கொள்ளவில்லை. அரசகுலம் அவனை எண்ணி வெட்கப் படுகிறது. ஆகவே அவன் பெறப் போகும் தண்டனை மிகப் பெரியதாக இருக்கப் போகிறது".

இப்படியொரு நிர்தட்ஷண்யமான நந்திவர்மனை அவை கண்டதில்லை.

எனவே, அவன் அளிக்கப் போகும் தண்டனையை அந்த அதிகாலை நேரத்தில் அனைவருமே சங்கடத்துடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

⌘⌘⌘⌘⌘

38. மீண்டும் மார்கழித் திங்கள்

மார்கழித் திங்கள், மதி நிறைந்த நன்னாளில் புள்ளும் சிலம்ப, புள்ளரையன் கோயிலில் வெள்ளை வெளிச் சங்கின் பேரரவம் ஒலிக்க, கீசுகீசென்று பேச்சரவங்கள் ஆங்காங்கே எழ, வாச நறுங்குழல் ஆச்சியர் மத்தினால் ஓசைப் படுத்த, கீழ்வானம் வெள்ளென்று வெளுக்கத் தொடங்கி வையத்து வாழ்வையெல்லாம் விடிய வைப்பது போல் காஞ்சிமாநகரம் மங்களகரமாக கண் விழித்தது.

ஒரு வருடத்திற்கு முன் இதே நன்னாளில் தன் படை பரிவாரங்களுடன் அமர்க்களமாக பிரவேசித்திருந்தான் சாளுக்கிய கீர்த்திவர்மன். தற்போதோ அந்த நாள் ஒரு கனவு போல் தோன்றக் கூடிய பரிதாபமானதொரு சூழ்நிலையில் கேள்விக்குறியாகி விட்ட எதிர்காலத்தைச் சுமந்தவனாய் அமர்ந்திருந்தான். நந்திவர்மன் அறிவிக்கவிருந்த தண்டனையைப் பற்றி அவனுக்கு சந்தேகம் எதுவும் இல்லாதிருந்தது - அதற்குக் காரணம் அவன் செய்திருந்த குற்றங்கள் அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது தான். எனவே, தண்டனைக்கு உரியவன் என்பதில் அவனுக்கு ஐயமோ கவலையோ இல்லை. ஆனால் தனது சாம்ராஜ்யக் கனவுகள் நனவாகாமல் போவதில் தான் அவனுக்குப் பெரும் வேதனையாக இருந்தது. அரச குமாரர்களின் உயிரென்பது திறந்த புத்தகம் போன்றது என்றாலும் அந்த உயிர் போரில் போகாமல் இப்படி மாற்று நாட்டில் வேற்று மன்னனால் போக்கப்படுவது அரச வம்சத்திற்கே பெரிய அகௌரவம் என்பதைத் தற்போது உணர்ந்தான் கீர்த்திவர்மன். உண்மையில் கௌரவத்தைப் பற்றிய உணர்வே தற்போது தான் எழுந்தது அவனுக்கு. இத்தனை

நாட்களாக தனக்குரிய கடமையை மறந்து தனக்குத் தரப்பட்ட பொறுப்புகளை அலட்சியப்படுத்தி, சிற்றின்பங்களைப் பேரின்பங்களாய் துய்த்து பொய்யை மெய்யென்று எண்ணி மயங்கி தவறான சூழலிலேயே தவழ்ந்து கெட்டுப் போய் விட்டதையும் உணர்ந்த அவனுக்கு அப்படியெல்லாம் இல்லாமலிருந்தால் எப்படி இருக்கும் என்று தோன்றியபோது வாழ்வின் மீது பெரு விருப்பம் உண்டாயிற்று. வாழும் வாய்ப்பிருந்த போது தாழ்ந்திருந்து விட்டு வாய்ப்பில்லாதபோது வாழ விரும்பிய தன்னை எண்ணிச் சிரித்த கீர்த்திவர்மன் வாழும் வாய்ப்பை தனக்கு யாராவது அளிப்பார்களா என்ற ஆதங்கத்துடன் பக்கத்தில் இருந்த அடிகளைப் பார்த்தான். ஆனால் அடிகளோ ஏறக்குறைய இதே ஆதங்கத்துடன்அவனைப் பார்ப்பது போல் தோன்றவே இனி நாம் எதிர்பார்க்க வேண்டியது ஆண்டவனைத் தான் என்பதை உணர்ந்தவனாய் கையிலாய நாதனை எண்ணினான்.

பாவிகளுக்கும் கருணையளிக்கக் கூடியவன் பரந்தாமனே என்பதையும் - தவறை உணர்ந்து நாதியற்ற நிலையில் நாராயணா என்றழைத்தால் நல்லருள் கிடைக்கும் என்பதையும் உணர்த்துவது போல் அந்த அவையின் ஒரு மூலையிலிருந்து எழுந்ததார் சாளுக்கிய காரியஸ்தரும் விக்கிரமாதித்தனின் மனங்கவர்ந்தவருமான குந்தஸ்வாமின் பட்டர். இப்படியொரு நிலை பின்னாளில் உண்டாகுமானால் கீர்த்திவர்மனைக் காப்பாற்ற முயற்சி செய்யும்படி காஞ்சியை விட்டுப் புறப்பட்ட அன்னாளிலேயே கூறிச் சென்ற விக்கிரமாதித்தனின் தீர்க்க தரிசனத்தை மெச்சிக் கொண்டவராய் எழுந்த அவர் நந்திவர்மனை நோக்கித் தன் கைகளைக் கூப்பினார்.

“பல்லவ மன்னா, அடியவனின் விண்ணப்பத்தைத் தயவு செய்து கேட்டருள வேண்டும்” -

“கேளுங்கள்”-

“மன்னவா, உன்னிடம் ஒன்றே ஒன்றை யாசித்துப் பெற விரும்புகிறேன்”-

“பெரியவர்கள் சிறுவனிடம் யாசிக்க வேண்டியதில்லை. கேட்டே பெறலாம்”-

“மன்னா, யார் யாசிக்கிறார்கள் என்பது இங்கே பெரிதாக இல்லை. எது யாசிக்கப்படுகிறது என்பது தான் பெரியது”

“அதனால் என்ன? கேளுங்கள்”-

“நந்திவர்மா, எங்கள் நாட்டுக்காக, எங்கள் மன்னனுக்காக கீர்த்திவர்மனின் - இல்லை இல்லை. சாளுக்கிய இளவரசனின் உயிரை யாசிக்கிறேன். மறுக்காமல் அளிக்க வேண்டும்”-

“பெரியவரே, நீங்கள் யார் என்பதை நான் அறியலாமா?”

“சாளுக்கிய காரியஸ்தன், குந்தஸ்வாமின் பட்டர்”

“அப்படியா? சாளுக்கிய மன்னருடன் உமக்குப் பரிச்சயம் உண்டல்லவா?”

“அந்த தர்மவானிடம் பணியாற்றிய பாக்கியம் எனக்குண்டு”-

“அப்படியானால் நீங்களும் ஒரு தர்மசீலராகத் தான் இருக்கவேண்டும். நான் தீர்ப்பு வழங்குவதற்கு உங்களைப் போன்றோரது ஆலோசனைகள் எனக்கு மிக்க உதவியாக இருக்கும். நான் நீதி வழுவாமல் தீர்ப்பளிக்க நீங்கள்

உதவவேண்டும். இது என் பிரார்த்தனை” என்றான் நந்திவர்மன்.

பட்டரின் நிலை சங்கடத்தில் இருந்தது. எதையோ அரம்பித்து எதிலோ முடிவது போன்ற நிலை உருவாகி விட்டது போல் அவருக்குத் தோன்றியது.

எந்த விதமான சலனத்திற்கும் ஆளாகாத நந்திவர்மனோ திடமாகத் தன் ஆசனத்தில் அமர்ந்தபடி “பட்டரே, சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன் இப்பல்லவ நாட்டில் புரிந்துள்ள குற்றங்கள் என்னவென்று உமக்குத் தெரியுமா?” - என்று கேட்டான்.

“தெரியும்”-

“இது போன்ற குற்றவாளிகளை சாளுக்கிய நாட்டில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இல்லையா?” -

“மன்னவா, நான் சொல்வது ....”

“சற்றுப் பொறுங்கள். மாற்று நாட்டுக்கு வந்து போரிட்டு எதைப் பெற்றாலும், கவலையில்லை. அது பொறுத்தமானது. நியாயமானது. போரின்றி ரத்தச் சேதமின்றி பெறப்படும் ஒரு நாட்டில் மன்னனுக்கு எதிராக செய்யப்படும் காரியங்களுக்குப் பெயர் சதி தானே பட்டரே? அது கூட போகட்டும். இந்த மக்களுக்கு எதிராக செய்த காரியங்கள் - இழைத்த கொடுமைகள் - அநீதிகள் இவைகளுக்கெல்லாம் என்ன பெயர் கொடுப்பது? அதோடு தர்ம வழி செல்ல வேண்டிய ஓர் இளவரசன் இவற்றைச் செய்யும் போது யார் சகிக்க முடியும்? இப்படிப்பட்ட ஒருவனது உயிரை நீங்கள் யாசிக்கிறீர்களே, இது என்ன நியாயம்? உங்கள் நாட்டில் இத்தகைய குற்றவாளிகள் யாசித்து விடுதலை பெறுவது தான்

வழக்கமா? பட்டரே, இது போன்று கடும் குற்றவாளிகளின் உயிர் தங்களைப் போன்ற பெரியவர்களால் யாசித்து காக்கப்படுமானால் கீர்த்திவர்மனைப் போன்றவர்கள் குற்றங்களைத் தவிர வேறெதையும் செய்யமாட்டார்கள் என்பதை நான் சொல்லியா தெரிய வேண்டும்? நீதிமான்களுக்கு பதில் குற்றவாளிகள் மேன்மேலும் உருவானதுதான் பெரியோர்களின் விருப்பமா?"-

பதில் கூறமுடியாத கட்டத்தில் தன் பேச்சை நிறுத்தி பட்டரை கூர்ந்து நோக்கினான் நந்திவர்மன். பட்டர் சற்றே சுதாரித்துக் கொண்டு, "மன்னவா, உன் விவாதங்களை மறுக்க என்னால் இயலவில்லை. ஆயினும் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கீர்த்திவர்மன் குற்றவாளிதான். எனினும் இளம் பிராயத்தவர். தன் பொறுப்பை உணரவும் தன்னைத் திருத்திக் கொள்ளவும் அவரால் முடியும். அதற்குப் பிராயமும் நிரம்ப இருக்கிறது. அவர் மட்டும் சாதாரண நபராக இருந்தால் நான் இங்கே யாசித்து நிற்கமாட்டேன். ஆனால் அவர் அரசகுமாரர். அவருக்குப் பின்னால் மாபெரும் சாளுக்கிய நாடு இருக்கிறது. அதன் மன்னர் விக்கிரமாதித்தர் இன்னும் அதிக நாட்களுக்கு ராஜ்யபாரத்தை வகிக்க முடியாது. அப்பாரத்தைச் சுமக்க கீர்த்திவர்மன் தேவை. ராஷ்டிர கூட மன்னர் எங்களுக்குப் பகைவராகக் கூடிய இக்கால கட்டத்தில் சாளுக்கிய நாட்டுக்கு மன்னனில்லாமல் போவதைப் பல்லவ மல்லனான நீ உணராமல் போகமாட்டாய். கீர்த்திவர்மன் பல்லவருக்கு குற்றவாளி. சாளுக்கிய நாட்டிற்கல்ல. எனவே, இக்குற்றவாளியை சாளுக்கிய நாட்டுக்காக என்னிடம் தா. இனி அவன் மாவீரனாயும் மாமன்னனாயும் திகழ்வான். அவனுக்காக வேண்டாம். எனக்காக வேண்டாம். சாளுக்கிய மன்னனுக்காகத்

தா. இல்லையென்றால் விக்கிரமாதித்தருக்காகத் தா. அவரைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. இக்காஞ்சியில் அவர் காட்டிய பெருந்தன்மைக்குக் கைம்மாறு உண்டென்றால் என் வேண்டுகோளை நிறைவேற்று" - என்று கூறி நிறுத்தினார்.

"நீ என்ன சொல்ல விரும்புகிறாய் கீர்த்திவர்மா?" - என்று கேட்டான் நந்திவர்மன்.

"என் உயிரை யாரும் பிச்சையாக அளிக்க நான் விரும்பவில்லை. அதை விட போரிட்டு இழக்கவும் தயார்" - என்றான் கீர்த்திவர்மன்.

"மகிழ்ச்சி கீர்த்திவர்மா, ராஜ வம்சத்திற்குரிய பேச்சை நீ பேசினாய். ஆனாலும் போரை நான் விரும்பவில்லை. தேவையற்ற போரில் என்றும் நான் ஈடுபட்டதில்லை. அதனால் தான் காஞ்சியை மீட்க போரில் இறங்கவில்லை. பட்டரே, உமது கோரிக்கையின் பின்னால் நீர் காட்டிய பாசத்தையும் நியாயத்தையும் நான் உளமாற பாராட்டுகிறேன். விக்கிரமாதித்தரின் பெருந்தன்மையை என்னால் மறக்க முடியாது. இருப்பினும் ஒருவரது பெருந்தன்மைக்காக ஒரு குற்றவாளிக்கு தண்டனை வழங்காமல் இருக்க முடியாது. இப்படி அறிவிப்பதற்காக அவையோர் என்னை மன்னிக்க வேண்டும். பல்லவ மன்னர் அநீதி வழங்கினான் என்றோ பாரபட்சம் காட்டினான் என்றோ சரித்திரம் என்னை கூறிவிடக் கூடாது. கீர்த்திவர்மனுக்கு நானளிக்கும் தண்டனை சாளுக்கிய நாடு உள்ள வரை மறக்கப்படாமல் இருக்க வேண்டும். அனைவரது நினைவிலும் நிற்கும் தண்டனையாக அது இருக்க வேண்டும்" என்று கூறி அமைச்சரை அழைத்துத்

தீர்ப்பைக் கூறி அவையில் அறிவிக்கும் படி சொன்னான்.

அவையில் பெரும் அமைதி நிலவியது.

அமைச்சர் பல்லவ மன்னனின் தீர்ப்பைக் கூறினார்.

யாரும் எதிர்பார்க்காத தீர்ப்பாக இருந்தது அவனது தீர்ப்பு.

சுயநல வாழ்க்கையில் சதி செய்தே காலத்தை ஓட்டியவரும், நந்திவர்மனை ஒழித்துக் கட்டி சந்தோஷப்படவிருந்தவருமான தீயடிகளே கூட நந்திவர்மனின் தீர்ப்படைக் கேட்டு அவனை மனதாரப் பாராட்டினார்.

சாளுக்கிய காரியஸ்தரின் மனம் விம்மியது. "நந்திவர்மா, உன்னைப் போன்றவர்களால் சரித்தரம் சிறப்படைகிறது". - என்று பரவசத்துடன் சொல்லிக் கொண்டார்.

அவையோர் கண்களும் வியப்பால் விரிந்தன.

⌘

அகால வேளையில் அவை கூடினாலும் ஆபத்து தவிர்க்கப்பட்டு அனைத்துமே நல்லதாய் முடிந்தபடியால் நந்திவர்மன் திருப்தியே அடைந்தான். அடுத்து மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணியாக ராஷ்டிர கூட மன்னரை சிறப்பான முறையில் வரவேற்று உபசரித்தான். விருந்தினர் மாளிகையில் தங்கிய ராஷ்டர கூட மன்னருடன் அனைத்து விஷயங்களையும் விவரமாகப் பேசினான் பல்லவ மன்னன். அந்த விஷயங்களில் ஒன்றை மட்டும் தான் விரும்பவில்லை

என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துக் கொண்டார் ராஷ்டிர மன்னர்.

“நந்திவர்மரே, உங்கள் எண்ணம், முயற்சி, செயல்பாடுகள் அனைத்துமே என்னைக் கவர்ந்தாலும் ஒரு விஷயத்தை மட்டும் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பது தெரிகிறதல்லவா?”

இப்படி தந்திதுர்க்கர் கேட்டதும் “கீர்த்திவர்மன் விஷயம் தானே?” என்று வினவினான் நந்திவர்மன்.

“ஆம், கொடுமை செய்பவன் எப்படி இருப்பான் என்பதற்கும் சுயநலக்காரனின் அயோக்கியத்தனம் எப்படி இருக்கும் என்பதற்கும் கீர்த்திவர்மன் ஓர் உதாரணம் போல் செயல்பட்டிருக்கிறான். அப்படிப்பட்ட கொடியவன் சிரச்சேதம் செய்யப்படுவதே உகந்தது. இரக்கம் காட்ட வேண்டுமானால் உயிருள்ள வரை பாதாளச் சிறையில் அடைந்திருக்கலாம். இப்படி எதையும் செய்யாமல் தண்டனை என்ற பெயரில் விடுதலை அளித்திருப்பது என்ன நியாயம்?” என்று சுடச்சுட கேட்டார் தந்திதுர்க்கர்.

“ஐயா, பெரும் தண்டனைக்கு உரியவனை அவனே எதிர்பாராத விதத்தில் விடுதலை செய்யும்போது அது அவனை வாழ்நாள் முழுக்க உறுத்தும். அதை விடவா வேறு வேதனை வேண்டும் கீர்த்திவர்மனுக்கு?”-

“இது போன்ற எதிர்பார்ப்புகளைக் கடும் குற்றவாளிகள் கொண்டால் நாடு குட்டிச் சுவராகி விடும்”-

“தந்திதுர்க்கரே, கீர்த்திவர்மன் வாலிபன். ராஜகுமாரன் அவன் திருந்தி நடக்க வாய்ப்பும் காலமும் இருக்கிறது. இங்கே சமணர்களின் தூண்டுதல்கள் அவனைக் கெடுத்திருக்கின்றனவே தவிர நல்ல சூழல்

அவனை நல்லவனாக்கும். விக்கிரமாதித்தனுக்குப் பிறகு அரசுரிமை வரும்போது அவன் சிறந்தவனாக இருப்பான் என்று நான் நம்புகிறேன். குற்றங்களைச் சுமத்தி அவனிடம் பதிலைக் கேட்ட போது போர்க்களத்தில் சந்திக்கத் தயாரென்று சொன்னான் அவன். அவன் ரத்தம் விக்கிரமாதித்தனின் ரத்தம். அதுதான் அப்படிப் பேச வைத்திருக்கிறது அவனை. அது ஒரு நல்ல அறிகுறி. அதை உணர்ந்தே அப்படிச் செய்தேன் நான். அது மட்டுமல்ல. விக்கிரமாதித்தனைப் பற்றி சற்று யோசித்துப் பாருங்கள். அவன் எண்ணியிருந்தால் இக்காஞ்சியைப் களீபரம் செய்திருக்கலாம். அதற்கான வாய்ப்பும் சக்தியும் இருந்தும் கூட துன்பமிழைக்காமல் அவனால் முடிந்த தர்ம காரியங்களைச் செய்திருக்கிறான். கீர்த்திவர்மனின் சொல்லும் செயலும் அவனுக்கு உடன்பாடானவையல்ல. அதே சமயம் தன் உபதேசம் அவனைத் திருத்தாது என்பதையும் அனுபவம் தான் திருத்தும் என்பதையும் உணர்ந்து கீர்த்திவர்மனை விட்டு விட்டுப் போன அவன் தன் காரியஸ்தரிடம் கீர்த்திவர்மனின் உயிரைக் காக்கும் படி சொல்லி விட்டுப் போயிருக்கிறான். அப்பெரியவரும் அவையில் அவனது உயிரை யாசிக்கிறார். இதற்குப் பிறகும் கீர்த்திவர்மனை விடுதலை செய்யவில்லையென்றால் நான் என்னை மனிதன் என்று சொல்லிக் கொள்ள முடியுமா?"-

"உன் நியாயத்தை நீ பேசிவிட்டாய். என் நியாகத்தை நான் பேசலாமல்லவா?"

தந்திதுர்க்கரின் குரலில் சந்தேகம் ஊடுருவியது.

"சொல்லுங்கள்" - என்றான் நந்திவர்மன்.

"என் மகளை ராஷ்டிர கூட இளவரசியை அவமானப் படுத்த முயன்றவன் கீர்த்திவர்மன். அவனை இராஷ்டிரகூட மன்னன் என்ற முறையில் - ரேவாதேவியின் தந்தை என்ற முறையில் தண்டிக்கலாம் அல்லவா?" - கேட்டான் தந்திதுர்க்கன்.

“தந்திதுர்க்கரே, கீர்த்திவர்மனை விடுதலை செய்தது உங்கள் கையால் கொல்லப்படுவதற்கல்ல. என் தீர்ப்பில் அவன் விடுதலை மட்டுமல்ல, அவனது பாதுகாப்பும் அடங்கியிருக்கிறது”-

“இதற்கென்ன அர்த்தம்?”-

“அவன் மீது தாங்கள் கைவைக்க நான் அனுமதிக்க முடியாது”

“மிக்க மகிழ்ச்சி. நந்திவர்மா, இன்னொரு கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிடு, இக்கீர்த்திவர்மனை எது வரையில் நீ பாதுகாப்பதாக உத்தேசம்? அதிக பட்சம் பல்லவ நாட்டின் எல்லை வரை நீ அவனைப் பாதுகாக்கலாம். பிறகு?”-

நந்தவர்மன் சற்று யோசித்தான். “நந்திவர்மா, கீர்த்திவர்மன் என் விரோதி. அவனைப் பாதுகாக்க முயல்வதின் மூலம் நீயும் என் விரோதியாகிறாய். உங்கள் இருவரையும் சந்திக்கும் சக்தி எனக்கிருக்கிறது இப்போது ” என்றான் நந்திதுர்க்கன்

இந்த நிலையில் நந்திவர்மனுக்கருகில் இருந்த படைத்தலைவன் உதயசந்திரனின் இரத்தம் கொதித்தது. தன் நிலையை ஒருகணம் மறந்த அவன் எழுந்து நின்று “ராஷ்டிர மன்னரே, எங்கள் பல்லவ மல்லரிடம் இப்படியொரு சவாலை இதுவரை ஒருவரும் இட்டதில்லை. இரு மன்னர்களைச் சந்திக்கும் சக்தி உங்களுக்கு இப்போது இருப்பதாக நீங்கள் சொன்னீர்கள். இரண்டாயிரம் மன்னர்களைச் சந்திக்கும் சக்தி எங்கள் பல்லவ மன்னருக்கு எப்போதுமே உண்டு. இதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது?” என்று படபடத்தான். தந்திதுர்க்கன் உதயசந்திரனைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்து விட்டு நந்திவர்மனின் பக்கமாகத் திரும்பி “நந்தவர்மா, நான் ராஷ்டிர கூடத்திலிருந்து இவ்வளவு தூரம் இத்தனைப்

பெரியபடைகளோடு ஏன் வந்தேன் என்று யோசித்துப் பார். காஞ்சியைச் சுற்றிப்பார்க்கவா வந்தேன்? நீ எனக்கொரு ஓலையை அனுப்பினாய் உன் மகளை வந்து அழைத்துச் செல்லும் படி. அவளை அழைத்துச் செல்ல நான் வந்தால் போதாதா? படைகள் எதற்கு? பல்லவ மன்னா, உன் சம்மதம் கேட்டு என் மகளை மணம் செய்துவைப்பதற்கு ஓலை அனுப்பினேன். நீ என் செய்தியை உதாசீனப்படுத்திவிட்டு தூதுவனைச் சிறைபிடித்து விட்டதாக எனக்குச் செய்தி வந்தது. அந்த நிலையில் என்னைவிட அதிகமான கோபத்திற்கும் வெறிக்கும் ஆளான என்மகள் உன்னைப் பழி வாங்க வேண்டும் என்று புறப்பட்டாள். இதற்குப் பிறகு ஓலை வருகிறது உன்னிடமிருந்து. மகளை வந்து அழைத்துச் செல் என்று. இந்த நிலையில் நான் என்ன கற்பனையில் இறங்க முடியும் என்பதை யோசித்துப்பார். காஞ்சியில் நீ ஏதோ நாடகம் நடத்துகிறாய் என்று தான் நினைத்தேன் நான். என்மகளுக்கு ஆபத்து என்று கருதினேன். உன்னோடு போரிடுவது என்று தீர்மானித்து படைதிரட்டி புறப்பட்டேன். ஆனால் காஞ்சியை நெருங்க நெருங்க என் எண்ணத்திற்கு மாறுபட்ட செய்திகள் வந்தன எனக்கு, கீர்த்திவர்மனைப் பற்றியும் அவன் காஞ்சியில் ஆள்வது பற்றியும் செய்திகள் வந்தன. எனக்கு ஒரே குழப்பமாய் இருந்தது. காஞ்சியில் இருப்பது யார் என்பது தெரியாமல் சங்கடப்பட்ட நான் எப்படியானாலும் போர் நிச்சயம் என்று கருதினேன். காஞ்சியை நெருங்கிய பின் காடக முத்தரையர் என்னைச் சந்தித்து அனைத்தையும் விளக்கிய பின் எனக்குக் குழப்பம் தீர்ந்தது. மொத்தத்தில் குற்றவாளி கீர்த்திவர்மன் தான் என்று புரிந்தாலும் சாமார்த்தியமாக காஞ்சியை மீட்டு விட்ட நீ அக்குற்றவாளியைத் தண்டித்து விடுவாய் என்று நம்பியதாலும் மனப்பாரம் நீங்கியவனாய் திருப்தியுடன் இக்கோட்டைக்குள் நுழைந்தேன். ஆனால் நீயோ குற்றவாளியான கீர்த்திவர்மனை விடுதலை செய்து விட்டு நியாயம் பேசுகிறாய். இந்த நிலையில் நான் போர் பற்றிப் பேசுவதில் தவறென்ன

நந்திவர்மா? என் மகளின் மீது விழவிருந்த களங்கம் துடைக்கப்பட வேண்டும். அதற்கு கீர்த்திவர்மன் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு நீ தடை விதித்தால் தண்டிக்கப்பட வேண்டியவர் பட்டியலில் நீயும் சேருகிறாய்" என்று விளக்கமாகத்தன் நிலையைச் சொன்னான்.

"பல்லவரது நீதியைப் போரினால் தான் உணரமுடியும் என்பது உங்கள் தீர்மானமானால் உங்களுடன் மட்டுமல்ல இந்த உலகத்தோடு கூடப் போரிட நான் தயார்" - என்றான் நந்திவர்மன் தீட்சண்யமாக.

அந்த நேரத்தில் "அதற்கு அவசியமில்லை" - என்று ஒரு குரல் குறுக்கிட்டது.

அதையடுத்து அங்கே தெய்வமே போல் பிரவேசித்தார் திருமங்கையாழ்வார்.

தந்திதுர்கனை நோக்கிய அவர் "வையிர மேகா, வீணான சர்ச்சைகள் வேண்டியதில்லை. உன் மகள் மீது விழவிருந்த களங்கம் நந்திவர்மனால் துடைக்கப்படும். உனது கண்ணோட்டத்தின்படி குற்றவாளியான அவனுக்கு ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டுவிட்டது. அதையும் அவனே வழங்கிக் கொண்டான். அதை நிறைவேற்ற வேண்டிய நபர் அதோ வருகிறாள். தண்டனையை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பது தான் இனிப் பேச வேண்டிய ஒன்று" - என்றார்.

அதையடுத்து உள்ளே மயில்போல் பிரவேசித்தாள் ராஷ்டிர கூட இளவரசி ரேவாதேவி.

⌘

நிமிட நேரத்தில் சூழ்நிலையே மாறிவிட்டதை அனைவருமே உணர்ந்தார்கள்.

தெய்வக் கலை பொருந்தியவராய் திருமங்கையாழ்வார் தெய்வப்பிரகாசமாய் தோன்றினாரென்றால் இளவரசி ரேவாதேவியோ தேவக் களையச் சுமந்தவளாய் மின்னல் போல் காட்சியளித்தாள்.

ஆழ்வாரை இருமன்னர்களுமே வணங்கினார்கள்.

அவரிடம் பேசுவதில் முந்திக் கொண்ட தந்திதுர்க்கன் "சுவாமி தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்கள் தான் திருமங்கை மன்னராக இருக்க வேண்டும்" - என்றான்.

"நான் வெறும் சன்யாசி. எதற்கும் மன்னனில்லை" - என்றார் ஆழ்வார்.

"தங்கள் பூர்வாசிரம பராக்கிரமங்கள் என்னைப் போன்றவர்கள் நெஞ்சில் என்றுமே அகலுவதில்லை" என்று சொல்லிக்கொண்ட தந்திதுர்க்கன் "எனது சிறப்புப் பெயர் வயிரமேகன் என்பது தங்களுக்குத் தெரிந்திருப்பது எனக்கு வியப்பளிக்கிறது" - என்றான்.

"சன்யாசிகள் ஊர்சுற்றுபவர்கள். விரும்பவில்லை யென்றாலும் பல விஷயங்கள் அவர்கள் காதில் வந்து விழுந்து விடுகின்றன. அப்படி அறிந்து கொண்டதுதான் இதுவும்" - என்றார் ஆழ்வார்.

"தாங்கள் ஏதோ தண்டனை என்று கூறினீர்கள்" - என்று ஆரம்பித்தான் தந்திதுர்க்கன்.

"ஆமாம் தந்திதுர்க்கா. உன் மகள் ரேவாதேவியிடம் தனக்குத் தானே தண்டனை விதித்துக்கொண்டவன் இவன். என்ன நந்திவர்மா பேசாமல் இருக்கிறாய்?- வினவினார் ஆழ்வார்.

"தங்கள் வாக்கில் பொய் வரமுடியாது" என்றார் நந்திவர்மன்.

ஆழ்வார் தந்திதுர்க்கனைப் பார்த்தார். “ராஷ்டிரமன்னா, ரேவாதேவி நந்திவர்மனின் உயிரை அவனிடமே கேட்டவள். அப்படித்தன் உயிரைத் தருவதாக அவளிடம் வாக்களித்தவன் நந்திவர்மன். என் சீடன் வாக்குத் தவறமாட்டான்” - என்று கூறிவிட்டு ரேவாதேவியின் பக்கம் திரும்பிய அவர், “மகளே, உயிரை ஒப்படைக்க வேண்டியவன் இதோ இருக்கிறான். அவனுக்கு எப்போது தண்டனை அளிப்பதாக உத்தேசம்?” என்று வினவினான்.

ரேவாதேவியின் முகம் சிவந்தது. தலைதாழ்ந்தது.

ராஷ்டிர கூட மன்னனின் முகத்தில் சந்தோஷம் நிலவியது.

நந்திவர்மன் நிர்மலமாய் நின்றான்.

அனைத்தையும் கவனித்த ஆழ்வார், “சரி, யாரையும் கேட்டுப் பயனில்லை. நானே கூறிவிடுகிறேன். மார்கழி மாதம் போகட்டும். தை மாதம் ஆறாம் நாள் உகந்த நாள். அன்று தண்டனை நிறைவேற்றப்படும்” என்றார்.

அனைவருமே அந்த அளவில் மகிழ்ச்சியுற்றார்கள்.

ஆழ்வார் கூறியபடி ரேவாதேவியும் நந்திவர்மனும் திருமணம் செய்து கொண்டால் களங்கமாவது ! பகையாவது! போராவது!

காஞ்சியில் கீர்த்திவர்மனால் ரேவாதேவிக்கு வரவிருந்த களங்கம் காஞ்சியின் மன்னன் அவளை மணப்பதின் மூலம் அழிகிறது. அதற்குப் பின் கீர்த்திவர்மனைப் பற்றி யாருக்கென்ன கவலை?

இப்படித்தான் நினைத்தான் தந்திதுர்க்கன்.

⌘

இதையடுத்து காரியங்கள் வெகுவேகமாக நடைபெற்றன.

கீர்த்திவர்மனும் அவனது படைகளும் பாதுகாப்பாகவும் கௌரமாகவும் காஞ்சியை விட்டு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

பஞ்சபூதங்கள் சிறையில் அடைக்கப்பட்டு அறங்கூர் அவையின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

திருப்பருத்திக்குன்ற சமணர்கள் வாரந்தோறும் ஒவ்வொரு தொகுதியாக காஞ்சியை விட்டும் பல்லவ நாட்டை விட்டும் அகல அரசாணை வெளியிடப்பட்டது.

அரியணைக்காகப் போட்டியிட்டுப் பலமுறை தோற்று விரக்தியடைந்து திருந்திய விஜயஸ்கந்தவர்மனுக்குப் புழல் கோட்டம் வழங்கப்பட்டு அவனும் கோட்டத் தலைவனான்.

திருமண நாள் வரும் வரை திருமங்கையாழ்வார் காஞ்சியிலேயே தங்கி திருப்பாடகம், திருவூரகம், திருக்காரகம், திருவெஃகா, திருஅத்தியூர், திருவேளுக்கை, திருகள்வனூர் ஆகிய க்ஷேத்திரங்களில் எழுந்தருளியிருந்த எம்பெருமானின் பேரில் திவ்ய மங்களாசாசனங்கள் பாடியருளினார். நந்திவர்மன் சமைத்த பரமேச்சுர விண்ணகருக்கும் விஜயம் செய்து வைகுந்த நாதன்பால் திருப்பாசுரங்களை இயற்றியருளினார். காஞ்சியில் ஒரு சில ஸ்தலங்களை அவர் விஜயம் செய்ய வேண்டியிருந்தன. காஞ்சி நகர மக்கள் அவரது விஜயத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டு அவரது உபதேசங்களில் திளைத்தார்கள்.

இதற்கிடையில் பல்லவ சாம்ராஜ்யம் முழுதும் குதூகலிக்கும் வண்ணம் பல்லவ மன்னனின் திருமண

வைபவம் பரமேச்சுர விண்ணகரத்தில் ஆழ்வாரின் முன்னிலையிலேயே நடைபெற்றது.

நந்திவர்மனை உளமாற ஆசீர்வதித்த ஆழ்வார் "நந்திவர்மா, இதுவரை நீ குருவை வணங்கினாய். எம்பெருமானை வணங்கினாய். இப்போது நீ வணங்க மேலும் ஒருவர் வந்துவிட்டார். வயிரமேகன் ராஷ்டிர கூட மன்னன் மட்டுமல்ல. உன் மாமனாரும் கூட. அவரையும் வணங்கு" - என்றார்.

அப்போது அவர்கள் அட்டபுயக்கரப் பெருமாள் ஆலயத்தில் இருந்தார்கள். நீளமாக முடிக்கப் பட்ட பெரிய மாலையை அணிந்திருந்த ராஷ்டிர மன்னன் வயிரமேகனை தொண்டைமான் குலத்தில் வந்த பல்லவ மன்னனான நந்திவர்மன் வணங்கினான். அக்காட்சியை ஒரு முறை பார்த்து விட்டு பெருமாளைப் பார்த்தார் பரகாலர்.

பாசுரங்கள் பொன்மொட்டுகளாய் வந்து விழுந்து ஆலயச் சுவர்களில் எதிரொலித்தன.

அட்டபுயக்கரப் பெருமானுக்கு அன்று ஆழ்வரால் மங்களாசாசனம் செய்து கொள்ள வேண்டும் என்பது திருவுள்ளம் போலும்.

பரகாலரான திருமங்கையாழ்வார் பெருமாள் பாசுரங்களை ஜீவநதியாய் தொடங்கி கீழ்கண்டவாறு முடித்த போது அத்தெய்வப் பாசுரத்தில் தங்களையும் அச்சிரேஷ்டர் இணைத்துக் கொண்டதைக் கண்டு மன்னர்கள் இருவரும் பரவசப் பட்டனர்.

மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்

நீண்முடிமாலை வயிரமேகன்

தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி

அட்டபுயக்கரத்தாதி தன்னை

கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்

காமருசீர்க்கலிகன்றி குன்றா

வின்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை

ஏத்தவல்லார்க்கிடம் வைகுந்தமே.

⌘

இதமான பனிசூழ்ந்த இரவு வேளை. நந்திவர்மனின் காஞ்சிமாநகர் அமைதியாய் இருந்தது பனிப் போர்வைக்குள். அத்தெய்வீக நகரில் மன்னனின் அந்தப்புரம் அலாதி அழகுடன் மிளிர்ந்து கொண்டிருந்தது அந்த நேரத்தில். மேல் விதானத்து உப்பரிகையில் ஒய்யாரிகள் அமர்ந்து இசைத்த யாழிசை நெஞ்சைத் தாலாட்டும் பின்னணியாக அமைய, அந்தப்புர மைய அறையில் பாண்டில் விளக்குகள் பற்பல பிரகாசிக்க, திவ்யமான மணங்களின் இனங்கள் எல்லாம் தேவலோகச் சுகந்தத்தை உமிழ, அவற்றுக்கிடையில் நந்தா விளக்கொன்று நங்கையாய் வந்து நின்றாற் போல் உவமையற்ற தேவமகளாய் நின்றிருந்தாள் முன்னாள் இளவரசியும் இன்னாள் அரசியும் என்னாளும் இனிக்கக் கூடியவளுமான ரேவாதேவி.

அந்த அறையில் அவள் நுழைந்து நீண்ட நேரமாகியிருந்தது. அந்த அறையை விட்டு வெளியேறுவதற்கு முன் அவள் நிறைவேற்றவேண்டிய வேட்கைகளும் நீண்டிருந்தன. அவளோ அவகைளை மட்டுமின்றி தன்னையே மறந்த நிலையில் இருந்தாள். அவளது நினைவுகள் திருநீர்மலைக்குச்

சென்றன. பல்லவபுரத்தைத் தீண்டின. மயிலையையும் அல்லிக் கேணியையும் சுற்றின. பின் காஞ்சியில் வந்து அலைபாய்ந்தன.

நந்திவர்மனை அறியாமல் அவனைக் கொல்ல விரும்பி அதை அவனிடமே கூறியபோது அவன் அணுவும் சலனப்படாமல் அவளது விருப்பத்திற்கு உதவுவதாகக் கூறியதை நினைவு கூர்ந்தாள். வெட்கம் என்னும் குளிர் அவளை உறைய வைத்தது. எத்தனை முட்டாள் நான் என்று நினைத்தாள்.

திருநீர்மலையிலும் பின்னர் பல்லவ புரத்திலும் அதையடுத்து மயிலைப் பெரியாழ்வார் மாளிகையிலும் கடைசியில் காஞ்சியிலும் தனக்கு வரவிருந்த பேரபாயங்களை அனாயாசமாகவும் கச்சிதமாகவும் தவிர்த்து நந்திவர்மன் தன்னைக் காப்பாற்றியதை எண்ணினாள். மெய்ச்சிலிர்ப்பு உண்டாகி குளிர்ந்த தேகத்தை சூடாக்கியது. எத்தனை பெரிய வீரர் அவர் என்று நினைத்தார்.

தன்னையும் தன் கொலை விருப்பத்தையும் நன்றாய் அறிந்தும் கூட சிறிதும் சலனமின்றி நடந்து கொண்டு ஆபத்துக்களை வென்று அவள் விருப்படியே கரம் பிடித்த நந்திவர்மனின் விவேகம் அவளை அசத்தியது. நாடுகள் பலவும் அவனை எண்ணிப் பெருமைப்படுவதில் வியப்பெதுவும் இல்லை என்பதை உணர்ந்து அவள் அத்தகைய மாவீரனும் விவேகியுமானவன் தன் நாயகனானது தன் பாக்கியமே என்றெண்ணிப் பூரித்தாள்.

அரிசரணபரனாயும், காஞ்சீபுரனாயும், நந்திவர்மனாயும் ஒரே மனிதன் அற்புதமாய் தனித்தனி

விசேஷங்களைக் காட்டி அனைவரையும் வியக்க வைத்த விந்தையை காலமெல்லாம் எண்ணி எண்ணி ரசிக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

ஆனால் அந்த அவகாசம் அவளுக்குக் கிடைப்பதாக இல்லை. அவளுக்குப் பின்னால் அவளது தோள்களை உரசுவது போல் ஒலித்தது ஒரு குரல்.

"மகாராணி, தண்டனையை ஏற்றுக் கொள்ள குற்றவாளி வந்திருக்கிறேன்"-

திரும்பினாள் ரேவாதேவி.

அவனை நிமிர்ந்து நோக்கினாள் நிர்மலமாய். பின் "வாருங்கள் பிரபு" - என்றாள் வினயமான குரலில்.

"மகாராணி, குற்றவாளிக்குப் போய் இத்தனை மரியாதையா?" - என்று சீண்டிப்பார்த்தான் குரலுக்குரியவனான நந்திவர்மன்.

"குற்றவாளிக்கு மரியாதை அளித்ததைத்தான் அனைவரும் பார்த்தார்களே சாளுக்கிய இளவரசர் விஷயத்தில்? அதோடு தண்டனையை நிறைவேற்றுபவர்களைத் தண்டிக்க முடிந்த குற்றவாளிகயையும் இங்கேதான் பார்க்க முடிகிறது?" என்று தைரியமாகப் பேசினாள் ரேவா.

அதை மெச்சிக் கொண்ட நந்திவர்மன் அவள் வெகுவாக மாறிவிட்டதையும் கவனித்தான். துடுக்குத்தனம் நிறைந்த முரட்டுப் பெண்ணாய் திருநீர் மலையில் காட்சியளித்த அவள் படிப்படியான சம்பவங்களால் நிலை மாறிப் போய் தற்போது உருமாறி திருவாகி தீட்சண்யம் பெற்றவள் போல் பக்குவமடைந்த பாவையாய் நின்றதை உணர்ந்து திருப்தியும் சந்துஷ்டியும் அடைந்தான்.

"வியப்புகளுக்கு இக்காஞ்சி மாநகரில் குறைவில்லை தேவி. புலிகேசி முதற்கொண்டு இந்நகர் பற்பல வியப்புகளைக் காட்டி மாற்றாரை மருள வைத்திருக்கிறது. ஆனால் அக்காஞ்சி மாநகர் இன்று மருண்டு போய் நிற்கிறது. ஏன் தெரியுமா?" - என்று வினவினான்.

மேய்ந்து கொண்டிருந்த புள்ளிமான் திடீரென தலையை உயர்த்தி மருட்சியுடன் பார்ப்பது போல் அவனை நோக்கித் திரும்பி கண்களால் வினவினாள் ரேவாதேவி.

"இக்காஞ்சி மன்னர்களுக்குப் பல்வேறு நாட்டு இளவரசிகள் பரிசாகத்தான் கிடைத்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட காஞ்சியில் பல்லவ மன்னர்களில் நான் ஒருவன் மட்டுமே வேற்று நாட்டு இளவரசிக்குத் தண்டனையாகக் கிடைத்திருக்கிறேன். இதைக் கண்டு இக்காஞ்சியே வியக்கும் இல்லையா?"-

"பிரபு, விவரமறியாத போது நான் பேசிய வார்த்தைகளையும் நடந்து கொண்டவற்றையும் மன்னித்து விடுங்கள். எனக்கு தாங்கள் நாயகராய் அமைந்தது நான் மட்டுமல்ல. என் முன்னோர்களும் சேர்ந்து செய்த பாக்கியம். அதனால் தான் தங்களைத் தேடி நான் வந்திருக்கிறேன். இந்த பாக்கியத்தை துய்க்கும் பேற்றைத் தாங்கள் தான் தரவேண்டும்"-

இதைக்கேட்டு நெகிழ்ந்து போனான் நந்திவர்மன். "உண்மைதான் ரேவா. உன்போன்ற உத்தமப் பெண்ணின் சமீபமே என்னை மேம்படுத்தக் கூடியது. அப்படியிருக்க நீ என் கரம் பற்றியது என்னை மட்டுமல்ல இந்நாட்டையும் கூட சிறக்கச் செய்யும். அரியணையில் ஏறியதிலிருந்து ஓயாத போர்களால் காலங்கள் முடிந்துவிட்டன. அரசியல் அமர்க்களம் என்னை அந்தப்புரத்திற்குள் நுழைய முடியாமல் செய்து விட்டன. என் கரங்களுக்கும் மனதிற்கும் சிறிது ஓய்வு தேவை. ஏன் - நமது படைகளுக்கும் பல்லவ மகாஜனங்களுக்கும் சிறிது

காலத்திற்கு அமைதியும் ஓய்வும் தேவை. புயலால் அலைக்கழிக்கப்பட்ட மாலுமிக்கு கிடைத்த ஓடம் போல் நீ இன்று வந்திருக்கிறாய். நாளை உன்னோடு மாமல்லபுரம் செல்லலாம் என்று நினைக்கிறேன். நான் எதிர்பார்க்கும் இடைக்கால அமைதியை நீயும் நீள்கடல் மல்லையும் அளிக்குமல்லவா?" என்றான்.

அதிலென்ன சந்தேகம் என்று கேட்பது போல் அவனது மார்பில் சாய்ந்தாள் ரேவாதேவி.

அமைதியைக் கேட்டவனின் மார்பில் போய் அமைதியைக் கேட்டவள் போல் அவள் சாய்ந்தாள். ஆனாலும் அந்த நிலை அவனுக்கு பேரமைதியையும் பேரானந்தத்தையும் அளித்தது.

அதை ஆமோதிப்பது போல் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திலிருந்து அர்த்த காலப் பூஜை மணி நிர்மலமாயும் இனிமையாயும் ஒலித்தது.

⌘⌘⌘⌘⌘

நிறைந்தது.

ஆசிரியரின் பிற நூல்கள்

1. மலராத மொட்டுகள் (சமூக நாவல்)
2. வாழ்க்கை விலங்குகள் (சமூக நாவல்)
3. மணவிலங்கு (சமூக நாவல்)
4. மயில்நிற மங்கை (சரித்திர நாவல்)
5. சோழகுலாந்தகன் (சரித்திர நாவல்)
6. வேள்வித்தூண் (சரித்திர நாவல்)
7. சிங்களப் புயல் (சரித்திர நாவல்)
8. பாண்டிய முரசு (சரித்திர நாவல்)
9. வேதத்துளி (வேத அறிமுக நூல்)
10. உபதேசங்களல்ல உண்மைகள் (பொது நூல்)
11. வெண்தாமரை (சமூக நாவல்)
12. மனிதராய் வந்த தெய்வங்கள் (மகான்கள் வரலாறு)
13. எண்ண அலையும் உண்மை நிலையும் (தத்துவ நூல்)
14. பூமிக்கு வந்த புதிய கிரகங்கள் (சிறுகதை தொகுப்பு)



உதயணன்





ஸ்ரீ திருமங்கையாழ்வார்

உதயணன்
சமுத்ர கோஷம்